கந்த வேள் கருணை



திருமுருக கிருபானந்தவாரியார்

வானதி பதிப்பகம்

கந்தவேள் கருணை

(கந்த புராணம்)

திருமுருக
கிருபானந்த வாரியார்

வானதி பதிப்பகம்
தி. நகர் - சென்னை-17

முதற் பதிப்பு : ஜனவரி, 1975

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 8-00

அச்சிட்டோர் : ஜீவன் பிரஸ், சென்னை-600005. (1974)

உ

பதிப்புரை

கந்த புராணம் முருகன் பெருமையைக் கூறுவது. மகா புராணங்களில் ஒன்று. இது கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகளால் கன்னல் தமிழ்ப் பாக்களினால் பாடி அருளப் பெற்ற ஞானக் களஞ்சியம்.

கருணையே வடிவான கந்தவேளின் பெருமையை மக்கள் எல்லோரும் புரிந்துகொண்டு எளிதில் படிக்கும் வண்ணம் கருணை உள்ளத்தோடு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் உரை நடை வடிவில் **கந்தவேள் கருணை** எனும் தலைப்பில் தருகிறார்கள்.

மூல நூலில் பொதிந்துள்ள இறைத் தத்துவத்தை வேத ஆகம புராண இதிகாச சாரங்களை எல்லாம்—இலக்கிய நயத்தோடு சாதாரண மக்களும் புரிந்து கொண்டு அநுபவித்துச் சுவைத்துப் படிக்கும் வண்ணம் வாரியார் சுவாமிகள் தமக்கே உரிய இனிய எளிய தமிழ் உரைநடை வடிவில் “கந்தவேள் கருணை” என அளித்துள்ளார்கள். இது அரும்பெரும் இலக்கியச் செல்வம். அஞ்ஞான இருளை மாய்க்கும் மெய்ஞான ஒளி நிறைந்த மாபெரும் நூல்.

கந்தவேள் கருணை ஆகிய ஒளி நிரம்பிய இந்நூலை வானதி பதிப்பகத்தில் வெளியிடும் பாக்கியத்தை அளித்த கருணை உள்ளம் நிரம்பிய திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களைப் போற்றி வணங்குகிறேன். வாரியார் சுவாமிகளுக்கு வணக்கத்தோடு கூடிய நன்றி உரித்தாகுக.

இந்நூல் சிறப்பாக வெளிவர மிகுந்த அக்கறையோடு மூலச் சுவடிகளை ஒப்பு நோக்கி சிரமம் பாராது பிழை திருத்தம் செய்து உதவிய பண்பே உருவான 'திருப்புகழமிர்தம்' மானேஜர் திரு. ஜெயராமய்யர் அவர்களுக்கு வணக்கத்தோடு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஞானத்தை விரும்புவோர்,

ஒளியை விரும்புவோர்,

ஆனந்தத்தை விரும்புவோர்,

இந்நூலை அவசியம் படிக்கவேண்டும். கந்தவேள் கருணை கிடைக்கும்.

அன்பன்,

திருநாவுக்கரசு

வானதி பதிப்பகம்.

உ

முருகா

முன்னுரை

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரூந் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

கந்தன் என்ற சொல்லுக்கு மூன்று பொருள்கள் உள.

1. "சத்ரூன் சோஷயதீதி ஸ்கந்த:" என்று அமர கோசம் என்ற வடமொழி நிகண்டு கூறுகின்றது. பகைவருடைய ஆற்றலை வற்றச் செய்பவன் கந்தன். இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய நூல்களில் பகைவர்களைக் கொன்றதாகத்தான் வரலாறுகள் கூறுகின்றன. கந்த புராணத்தில் முருகவேள் பகைவனாகிய சூரபன்மனை வதைத்து விட்டதாக வரலாறு இல்லை. அவன் மயிலும், சேவலுமாகி வாழ்வு பெற்றான்.

தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ? அடுசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனு மன்றோ? வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்.

சிங்கமுகன் அம்பிகைக்குச் சிம்மவாகனமாகப் போந்தான்.

தாரகன் ஐயனாருக்கு யானை வாகனமாகப் போந்தான்.

2. ஆறுதிருமேனிகளும் ஒன்ருகப் பொருந்தினவன் என்பது மற்ளுெரு பொருள்.

3. கந்து—யானை கட்டுந்தறி.

கந்து என்ற பகுதியோடு ஆன் என்ற ஆண்பால் விகுதி புணர கந்தன் என்ற ஆயிற்று. ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடாக இருப்பவன் கந்தன்.

புராணம் என்ற சொல் பழமை என்று பொருள்படும். புராதனம் என்ற சொல் புராணம் என மருவியது.

புராணம் ஏன் ?

வைரத்தைச் சோதிப்பானுக்குப் பூதக் கண்ணுடி இன்றியமையாது வேண்டப் பெறுவதுபோல், வேதத்தில் உள்ள நுண்ணிய பொருள்களை விரித்துக் காட்டுவது புராணம் எனவுணர்க.

'சத்யம் வத' என்ற வேதவாக்கியத்தை விரித்துக் கூறுவது அரிச்சந்திர புராணமாகும்.

'நன்றி கொன்றவன் விரைந்து அழிவான்' என்ற ஒரு பெரிய தருமத்தை விரித்து உணர்த்துவது கந்தபுராணம் என வுணர்க.

சூரபன்மனுக்கு ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்கள் அரசுபுரியும் ஆற்றலையும் வச்சிரயாக்கையையும் வேறு பல வரங்களையும் அள்ளி அள்ளி வழங்கிய வள்ளலாகிய சிவமூர்த்தியின் திருக்குமாரரான முருகப் பெருமானை எதிர்த்து அமராடினன்; அவன் கொன்ற நன்றியே அவனைக் கொன்று விட்டது.

ஒன்ளுெரு பயன்தனை உதவி ஞேர்மனம்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்ளுெழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ ?

—கந்தபுராணம்.

நன்றி மறத்தல், நன்றி கோறல் என்ற இந்த இரு பாவங்களும் உய்வு இல்லாத துயரத்தை நல்கும். நன்றி கொன்றவனுக்கு உய்வு இல்லை என்பதனை விரித்துக் கூறுவதே கந்தபுராணம் என வுணர்க.

புராணங்கள் 18

1. பிரம புராணம்	10. பிரம்மகைவர்த்த புராணம்
2. பதும புராணம்	11. இலிங்க புராணம்
3. வைணவ புராணம்	12. வராக புராணம்
4. சைவ புராணம்	13. காந்த புராணம்
5. பாகவத புராணம்	14. வாமன புராணம்
6. பவுடிய புராணம்	15. மச்ச புராணம்
7. நாரதீய புராணம்	16. கூர்ம புராணம்
8. மார்க்கண்டேய புராணம்	17. காருட புராணம்
9. ஆஞ்சநேய புராணம்	18. பிரமாண்ட புராணம்

இவற்றுள் சைவ புராணங்கள் 10

சைவ புராணம்	வராக புராணம்
பவுடிய புராணம்	வாமன புராணம்
மார்க்கண்டேய புராணம்	மச்ச புராணம்
இலிங்க புராணம்	கூர்ம புராணம்
காந்த புராணம்	பிரமாண்ட புராணம்

என்ற பத்தும் சிவ புராணங்களாகும்.

விஷ்ணு புராணம் 4

காருட புராணம்	நாரதீய புராணம்
வைணவ புராணம்	பாகவத புராணம்

என்ற இந்த நான்கும் விஷ்ணு புராணங்களாகும்.

இனி பிரம புராணம் பதும புராணம் என்ற இரண்டும் பிரம புராணங்கள்.

ஆக்கிநேயம்—அக்கினி புராணம்

பிரமகைவர்த்தம்—சூரிய புராணம்

சிவ புராணங்கள் பத்தும் சாத்துவிகங்களாம். சத்துவ குணம் வெண்ணிறமுடையதாய் சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடமாகும்.

விட்டுணு புராணங்கள் நான்கும் தாமசங்களாகும்.

பிரம புராணம் இரண்டும் இராசசங்களாம்.

அக்கினி புராணமும் சூரிய புராணமும் முக்குணச் சேர்க்கை யுடையவாம். ஆதலால் சிவ புராணங்கள் மிகவும் மேன்மை யுடையனவாம்.

இந்தப் பதினெண் புராணங்களைப் பாடியவர் வியாச முனிவராகும். பதினெண் புராணங்களின் கிரந்த எண் நான்கு லட்சம் ஆகும். இதில் கந்த புராணம் மட்டும் ஒரு லட்சம் கிரந்தங்கள். ஏனைய பதினேழு புராணங்களின் கிரந்த எண் மூன்று லட்சங்களாகும். எனவே மகிமையால் மட்டுமின்றி அளவாலும் சிறந்தது கந்த புராணம்.

கந்த புராணம்—சனற் குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங்கிதை. சங்கர சங்கிதை சூர சங்கிதை என ஆறு சங்கிதைகளை (பிரிவுகளை) யுடையதாகும்.

1.	சனற்குமார சங்கிதை கிரந்தங்கள்		55000
2.	சூர சங்கிதை	,,	6000
3.	பிரம சங்கிதை	,,	3000
4.	விட்டுணு சங்கிதை	,,	5000
5;	சங்கர சங்கிதை	,,	30000
6.	சூர சங்கிதை	,,	1000
		மொத்தம்	1,00,000

இவற்றுள் சங்கர சங்கிதை பன்னிரு கண்டங்களை யுடையது. இவற்றுள் முற்பட்டது சிவ ரகசிய கண்டம். இது 13 ஆயிரம் கிரந்தங்களை யுடையது

1. சம்பவ காண்டம்
2. அசுர காண்டம்
3. மகேந்திர காண்டம்

4. யுத்த காண்டம்
5. தேவ காண்டம்
6. தட்ச காண்டம்
7. உபதேச காண்டம்

என்ற ஏழு காண்டங்களை யுடையது.

இவற்றுள் முதல் ஆறு காண்டங்களையும் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் தமிழில் 10345 செய்யுட்களாகச் செய்தருளினர்.

உபதேச காண்டம் என்ற ஏழாவது காண்டத்தை குகனேரியப்ப முதலியார் தமிழில் அருளிச் செய்தார். ஞான வரோதயரும் இதனை அருளிச் செய்தார்.

கந்த புராணம் புராண நாயகமாகும்.

கடிய கொடிய இருளை ஞாயிறு எளிதில் அகற்றுவது போல், கந்தப் பெருமானுடைய கீர்த்தி ஒன்றே கலியில்வரும் பாவங்களைப் போக்கவல்லது என்று உணர்க.

"ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுலாம் கலிகல்மஷ நாசிநீம்" என்ற திருவாக்காலும் அறிக.

பன்னிரு கரங்களாலும் அள்ளி அள்ளி வழங்கும் வள்ள லாகிய கந்தப் பெருமானுடைய புராணத்தைப் படித்தோர் கள் கேட்டோர்கள் அனைவரும் இந்த வுலகில் இந்திரனைப் போல் இனிது இன்பமுடன் வாழ்வார்கள்.

எண்ணிய எண்ணங்கள் யாவும் நிறைவேறப் பெற்று இறுதியில் அழியாத சிவகதி சேருவார்கள்.

இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனில் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேல்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோதுவோரே.

கந்த புராணத்தில் உலகில் உள்ள சமய உண்மைகள்—மதக் கொள்கைகள், யாவும் அடங்கியுள்ளன. அதனல் "கந்த புராணத்தில் உள்ள பொருள் வேறு எந்தப் புராணத் திலும் இல்லை" என்ற பழமொழி வழங்கலாயிற்று. இதனை

மாற்றி கந்த புராணத்தில் உள்ள புளுகு எந்தப் புராணத்திலும் இல்லை எனச் சிலர் கூறி திவாய் நரகிடைச் சேருவர்.

இது முதல்வன் புராணம் எனப் பெறும். இதனை அன்புடன் நாள்தோறும் பாராயணம் புரிவோர் இகபர நலன்களை எளிதில் பெறுவர்.

இப் புராணத்தில் ஞான வாசனை வீசுகின்றது.

ஆணவ மலம் — சூரபன்மன்
கன்ம மலம் — சிங்கமுகன்
மாயா மலம் — தாரகன்
ஞானம் — வேல்

ஞான பண்டிதன் மும்மலங்களைக் கொன்று ஆன்மாக்களாகிய தேவர்களைப் பந்தத்தினின்றும் விடுவித்தார் என்பதே கந்த புராணத்தின் உட்கிடை.

இலங்கைவாழ் சைவர்கள் கந்த புராணத்தை விதிப்படி பாராயணஞ் செய்து பிணியினின்றும் தணியப் பெறும் வழக்கத்தை இன்றும் மேற்கொள்கின்றார்கள்.

முருகப் பெருமானுடைய அவதாரத்தைப் பற்றிப் பல நூல்களில் பலவாறு கூறப்பட்டிருக்கின்றன. அவைகள் பலப்பல யுகபேதங்களால் ஏற்பட்டவை. கந்த புராணத்தில் வரும் வரலாறே சிறப்புடையதாகும்.

ஞாலமெல்லாம் போற்றும் கந்த புராணம் காலத்தாலும் சிலத்தாலும் முற்பட்டதாகும். இதனை அன்புடன் ஓதுவோர் தீது தீர்வர். கந்தவேள் கருணையைப் பெற்று நோயின்றி நீண்ட நாள் வாழ்வர்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

கிருபானந்தவாரி.

உள்ளுறை

3. மகேந்திர காண்டம்

6. தட்ச காண்டம்



உ

முருகா

கச்சியப்ப சிவாச்சாரியர் வரலாறு

"தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்றபடி ஆன்றோர்கள் பலர் அவதரித்து அலங்கரித்த நாடு, அண்டர் கள் புகழும் தொண்டை நன்னாடு. இத்தொண்டை நன்னாட் டிற்குத் திருமுகம் போன்றது காஞ்சிமாநகரம். "நகரேஷு காஞ்சி" என்று புகழ்கின்றார் காளிதாஸர். இத்தலம் முத்தித்தலங்கள் ஏழினுள் ஒன்று. பல மன்னர்கள் இருந்து அரசுபுரிந்த தொன்னகரமாகிய நன்னகரம்.

இத்தகைய கச்சியந்தலத்தில் ஆதிசைவர் திருமரபில் வந்த காளத்தியப்ப சிவாச்சாரியர் என்பவர், குமரகோட்டத் தில் அர்ச்சகராவார். இவர் நெடுங்காலம் மகப்பேறின்றி குமரகோட்டத்து அருட்பெருங் கடலாகிய குமரக்கடவுளை விதிப்படி வழிபட்டு வந்தார். திருவேலிறைவன் திருவருளால் அவருடைய மனைவியாரது மணிவயிறு வாய்த்தது. கோளும் நாளும் நன்னிலையுற்றபோது சிவஞானபாநுவாக ஒரு புதல்வர் தோன்றினர். அவருக்குக் கச்சியப்பர் எனப் பேர் சூட்டினர்.

"விளையும் பயிர்முளையிலே" என்ற பழமொழிப்படி அவர் இளமை தொட்டு முருகப் பெருமானுடைய திருவடியில் இடையறாது அன்புசெய்து வளர்ந்தார்.

அவர் ஐந்தாம் வயதில் கல்வி பயிலத் தொடங்கி வடமொழி, தென்மொழி என்ற இரண்டு மொழிகளிலும் வல்லுனர் ஆனார். அன்பு, அருள், வாய்மை, தூய்மை, பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்களனைத்தும் அவருக்கு அணிகலன்களாக விளங்கி அணி செய்தன.

ஏழாம் வயதில் உபநயனம் செய்யப்பெற்று வேதங்களை ஓதினார். வடமொழியில் வேத வேதாங்கங்களையும், தமிழில் இலக்கண இலக்கியங்களையும் முற்றும் கற்று விற்பன்னராக விளங்கினார்.

பின்னர் சமய தீட்சை பெற்று தமிழ் மறையாகிய தேவார திருவாசகங்களை ஓதுவாராயினார். அதன் பின் விசேஷ தீட்சை பெற்று, சைவாகமங்களில் கிரியா காண்டங்களைக் கற்றறிந்தார்.

அதன் பின் நிர்வாண தீட்சையும், ஆசார்ய அபிஷேகமும் பெற்று, சைவாகமத்தின் ஞானகாண்டங்களை ஓதினார்.

கல்வியின் பயன் கருணைக்கடலாகிய இறைவனை இறைஞ்சுவதே எனத்தெளிந்தார். குமரகோட்டத்துள் எழுந்தருளியுள்ள கந்தக் கடவுளைச் சந்ததமும் அஞ்சுவித சுத்திகள் செய்து, ஆறு காலங்களிலும், எழுவகைப் பிறப்பு நீங்கும் பொருட்டு எண் வகை மலர்கள் சாத்தி வழிபட்டுக் கொண்டு வந்தார்.

கனவில் அருள் பெறுதல்:

மூவருக்குந் தேவருக்கும் எட்டாத முழுமுதற் கடவுளாகிய முருகப்பெருமான் கச்சியப்ப சிவாசாரியருடைய கனவில் காட்சியளித்தார். "அன்பனே! கந்தபுராணத்து ஆறு சங்கிதைகளுள் சங்கர சங்கிதையின் முதற் கண்டமாகிய சிவரகசிய கண்டத்திலுள்ள நமது சரித்திரத்தைக் கந்த புராணம் எனப்பெயரிட்டுத் தமிழிலே பெருங்காப்பியமாகப் பாடக்கடவாய்" என்று கட்டளையிட்டு "திகடசக்கர" என்று அடியெடுத்துக் கொடுத்து அருள் புரிந்தார்.

கச்சியப்பர் கனவு தெளிந்து எழுந்து அழலிடைப்பட்ட மெழுகுபோல் உள்ளம் உருக, உரோமம் சிலர்ப்ப, உரை குழற கரையற்ற இன்பக் கடலில் மூழ்கினார். "ஐயனே! பன்னிருகையனே! ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங் கடையனாகிய தமியேனையும் ஒரு பொருள், படுத்தி அருள் செய்த தேவரீரது திருவருள்தான் என்னே" என்று ஆனந்தக் கூத்தாடினார்.

நீராடி, நீறுடி, நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு குமர கோட்டம் சென்று வடிவேல் முருகனை வழிபட்ட பின் புராணம் பாடத்தொடங்கினர். நாள்தோறும் நூறு செய்யுட்கள் பாடி எழுதிய ஏட்டையும், எழுத்தாணியை யும் அர்த்தயாம பூஜை முற்றிய பின் இறைவன் இணையடியில் வைத்துவிட்டு திருக்கதவைத் திருக்காப்பிட்டுக் கொண்டு தமது இல்லம் போவார். மறுநாள் வழிபடும் பொருட்டுக் கோயிலுக்குள் சென்று ஏட்டை எடுத்துப் பார்ப்பார். அதில் சில இடங்களில் திருத்தப்பட்டிருத்தல் கண்டு அதிசயம் அடைந்து கந்தவேளின் கருணையை நினைந்து கண்ணீர் சொரிவார். கந்தநாயகனே தன் கரமலரால் திருத்தியருளிய அற்புதச் செந்தமிழ்க் காவியமாகும் கந்தபுராணம். இவ்வாறு நூல் பாடி முற்றுப்பெற்றது. அரங்கேற்றும் நன் ஞளைத் தேர்ந்தெடுத்தார். அரங்கேற்றத்துக்கு வருமாறு எல்லோருக்கும் அறிவித்தார்.

அரங்கேற்றம்

அன்பர்கள் காஞ்சி மாநகரத்தை அலங்கரித்தார்கள்; மெழுகிக் கோலமிட்டு நறுமண மலர் மாலைகளைத் தொங்க விட்டார்கள். வரிசையாகப் பல விளக்குகளை ஏற்றினர்கள். நறும்புகை கமழச் செய்தார்கள். சந்நிதியில் கச்சியப்பர் அமர்ந்து பட்டாடை விரித்த பீடத்தின் மீது புராணத்தை வைத்து அர்ச்சனை செய்தார். அஞ்சலி செய்தார். பின்னர், "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்னும் முதற் பாடலை ஒரு முறை படித்து "திகழ் தசக்கரம் செம்முகம் ஐந்து உளான்" என்று பதப்பிரிவினை செய்து விளங்கா நின்ற "பத்துத் திருக்கைகளும், செவ்விய ஐந்து திருமுகங்களும் உள்ள சிவபெருமானுடைய" என்று பொருள் செய்தார்.

அந்த அவையின் கண் இருந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர் "சுவாமிகாள்!" திகழ் தசம் என்பது திகடசம் எனப் புணர்வதற்கு விதி தொல்காப்பியம் முதலிய நூல்களுள் ஒன்றிலேயும் இல்லையே" என்றார்.

கச்சியப்ப சிவாசாரியர் "ஐயா" தாங்கள் கூறியது சரி. ஆனால் இம் முதலடி என் வாக்கன்று; இது இறைவன் திருவாக்கு, முருகன் தந்த முதலடி" என்றார்.

அதுகேட்ட அப்புலவர் புன்முறுவல் செய்து, "முருகன் தந்த முதலடியாயின், அவரே வந்து இதற்கு சமாதானங் கூறட்டும். இல்லையேல் அரங்கேற்றவொட்டேன்" என்றார்.

கச்சியப்ப சிவாசாரியர் "நாளை அரங்கேற்றுவோம்." என்று கூறினர். சபை கலைந்தது. சிவாசாரியர் உண்ணாது, உள்ளம் உலைந்து முருகனை நினைந்து உருகி தரையில் கிடந்து துயின்றார். கந்தவேள் "அன்பனே" நீ வருந்தற்க, சோழ தேசத்தில் வீர சோழியம் என்று ஓர் இலக்கண நூல் இருக்கின்றது. திகழ் தசம் திகடசம் என்று புணர்தற்க விதி அந் நூலில் சந்தி படலத்தில் பதினெட்டாஞ் செய்யுளில் இருக்கின்றது. சோழ தேசத்துப் புலவன் ஒருவன் அந்நூலை நாளைக்கு இங்கு கொணர்ந்து கொடுத்து விளக்குவான்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர்.

மறுநாள் ஆலயத்தில் அவை கூடியது. கல கல என்று புலவர்கள் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அங்கு முருக வேள் புலவர் வடிவில் தோன்றினர். தமது கையிலுள்ள வீரசோழியம் என்ற இலக்கண நூலை நீட்டினர். சந்திப் படலத்தில் பதினெட்டாஞ் செய்யுளைக் காட்டினர். சந்தேகத்தை ஓட்டினர். வாதிட்ட புலவரும் மற்றைப் புலவர்களும் அச்சமும் அதிசயமும் அடைந்தார்கள். சோழ நாட்டுப் புலவர் வீர சோழியத்தைக் கச்சியப்பர் கரத்தில் கொடுத்து மறைந்தருளினர். இது முருகன் செய்த திருவிளையாடல் என்று கருதி உள்ளம் உருகி கண்ணீர் பெருகி அழுது கச்சியப்பருடைய திருவடியில் வீழ்ந்து தொழுது துதிசெய்தார்கள்.

தடைசெய்த புலவர் கச்சியப்பரைப் பலமுறை பணிந்து "முருகன் அருள் பெற்ற முனிவரரே! தங்கள் பெருமை தெரியாது அரங்கேற்றத்தைத் தடுத்து குரங்காட்டமாடினேன். சிறியேன் செய்த பெரும் பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று பலமுறை வேண்டிக் கொண்டார். கச்சியப்பர் அவரை இரு கரங்களாலும் எடுத்து மார்புறத்

தழுவி "ஐயரே! தாங்கள் தடை செய்ததனாலன்றோ முருகன் திருவருளை எல்லோரும் உணர முடிந்தது. எல்லாம் ஈசன் செயல். இறைவனை இங்கு அழைத்து எல்லோரும் இறைவனைக் கண்டு களிக்குமாறு செய்த தங்கள் செய்கைக்கு யாம் செய்யும் கைம்மாறு யாதுளது?" என்று பாராட்டி யருளினார்.

சபையிலிருந்த அனைவரும் கச்சியப்பரை வணங்கி இனி புராணத்தை அரங்கேற்றலாம் என்றார்கள். நாள் தோறும் புராண அரங்கேற்றம் நடைபெற்றது. தொண்டை நாட்டு இருபத்து நான்கு கோட்டத்து வேளாளப் பெருமக்கள் வந்தவர்கள் எல்லோருக்கும் சோறூட்டினார்கள். ஆடைகள் வழங்கினார்கள். ஆயிரக்கணக்கான அன்பர்கள் புராணங் கேட்டுப் புனித மடைந்தார்கள். கச்சியப்ப சிவாச்சாரியர் தினந் தோறும் புராணம் வாசித்து பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரை, பதசாரங்கள், புராணத்தின் நுண் பொருள் இவைகளைக் கூறி கற்கண்டு மலையில் தேன்மாரி பொழிவது போல் விரிவுரை செய்தார். ஓராண்டில் அரங்கேற்றம் முற்றுப் பெற்றது.

கச்சியப்பர் உச்சிடப்பராம் செவ்வேளைப் போற்றி புராணத் திருமுறையை அர்ச்சனை செய்து வணங்கினார். அங்கு குழுமிய அன்பர்கள் கந்தபுராணத்தையும், கச்சியப்பரையும் தந்தச் சிவிகையில் வைத்து வீதிகள் தோறும் திருவுலாவரச் செய்தார்கள். சிலர் வெண் சாமரம் வீசினார்கள்; சிலர் குடைபிடித்தார்கள். சிலர் கொடி எடுத்தார்கள், சிலர் "கச்சியப்பர் வாழ்க" என்று திசைகள் செவிடுபட முழக்கினார்கள். திருவுலா முடிந்ததும் கந்தபுராணத்தை முருகன் திருமுன் வைத்து வணங்கினார்கள். கச்சியப்பருடைய புகழ் திசையெட்டும் பரவியது. புராணத்தின் பெருமையைப் புலவர்கள் பாராட்டிப் புகழ்ந்தார்கள். சிலர் சொல்லழகை நயந்தார்கள். சிலர் பொருளழகை வியந்தார்கள். பல பிரதிகள் செய்து எங்கும் நூலைப் பரப்பினார்கள்.

இந்த முதல்வன் புராணத்தை நித்தியம் ஓதுகின்ற மெய்யன்பர்கள் எல்லா நலங்களையும் பெறுவார்கள் என்பது சத்தியம்! சத்தியம்! சத்தியம்.

உச்சித மாஞ்சிவ வேதியன் காளத்தி ஓங்குமைந்தன்
கச்சியப் பன்செய்த கந்த புராணக் கலைக்கடலின்
மெச்சிய கல்வி மதியும்வெண் தாமரை மேவுமின்னும்
இச்செவி நாவினுக் கின்பாம் அமுதும் எழுந்தனவே.

அந்தப்புரமும் அறுநான்கு கோட்டகத் தாருமொன்றாய்க்
கந்தப் புராணம் பதினாயிரஞ் சொன்ன கச்சியப்பர்
தந்தப் பல்லக்குச் சிவிகையுந் தாங்கியச் சந்நிதிக்கே
அந்தப் புராணம் அரங்கேற்றினார் தொண்டைமண்டலமே.

★

போதமுறு சூதமுனி புகன்ற காந்தப்
    புகழ்க் கடலிற் படிந்ததன்கட் பொருளதான
மேதகுவண் புனலருந்தி வையமுய்ய
    வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மை தீரத்
தாதவிழ்பூம் புனற்காஞ்சிக் குவட்டில் ஏறிச்
    சலதியமு தினைநிகர்செந் தமிழ தான
காதன்மழை பொழிந்தஅருட் கொண்ட லான
    கச்சியப்பன் இருபாதம் உச்சி வைப்பாம்.

—(*சம்பந்த சரணாலயர்*)

உ

முருகா

கந்தவேள் கருணை

பாயிரம்

விநாயகர் காப்பு

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

விகட சக்கர விநாயகர் காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் கோயில் வெளிப் பிராகாரத்தில் கம்பாநதி என்ற தீர்த்தத்துக்கு அருகில் ஆயிரக்கால் மண்டபத்தில் எழுந்தருளியிருக்கிறார்.

விகட சக்கரன் என இவர் ஏன் பெயர் பெற்றார்?

தட்ச யக்ஞத்தை அழிக்கச் சென்ற வீரபத்திரர் மீது திருமால் சக்ராயுதத்தை ஏவினார். அதனை வீரபத்திரர் அணிந்திருந்த வெண்டலை (கபாலம்) ஒன்று கவ்விக்கொண்டது. அதனைத் திரும்பப்பெறும் பொருட்டுத் திருமாலின் சேனைத் தலைவர் விஷ்வக்ஸேனர் வீரபத்திரர் முன் விகடக் கூத்தாடினார். அது கண்டு அனைவரும் சிரித்தார்கள். மாலையில் இருந்த வெண்டலையும் சிரித்தது. அப்போது அதன் வாயிலிருந்த சக்ராயுதம் வெளியே வந்து விழுந்தது. அதை விஷ்வக்ஸேனர் எடுப்பதற்கு முன் விநாயகப் பெருமான் எடுத்து மறைத்து வைத்துக் கொண்டார்.

விஷ்வக்ஸேனர் மீண்டும் ஒருமுறை விநாயகப் பெருமானுடைய திருமுன் விகடக் கூத்தாடி அவரை மகிழ்வித்து, அவரிடமிருந்து சக்கரத்தை வாங்கித் திருமாலிடம் தந்தார்.

விகடக் கூத்தாடக் கண்டு மகிழ்ந்து சக்கரம் அளித்த காரணத்தால் விகடசக்கர விநாயகர் என்று கணநாதர் பேர் பெற்றார்.

திகழ் தச கர செம்முகம் ஐந்துளான் — விளங்கா நின்ற செம்மையான ஐந்து திருமுகங்களும் பத்துத் திருக்கரங்களும் உடைய சிவபெருமான்,

சகட சக்கர தாமரை நாயகன்—சிவபெருமான் திரிபுரம் எரித்தபோது அவருடைய தேருக்குச் சக்கரமாக இருந்த தாமரை நாயகனாகிய சூரிய பகவான்.

அகடு அசக்கு அரவின் மணியா உறை—விநாயகப் பெருமானின் வயிற்றில் சுற்றிய பாம்பின் முடியிலுள்ள இரத்தினமாகச் சூரியன் விளங்குகிறானும்! 'திரிபுர தகனத்தில் ஈசனின் தேர்ச் சக்கரமாக இருந்த சூரியன்' என்கிறார்.

தாரகாக்ஷன். கமலாக்ஷன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்கள் வாள் வலியாலும் தோள் வலியாலும் தலைசிறந்து, ஒப்பாரும் மிக்காருமின்றி இருந்தனர். அவர்கள் பிரமனை நோக்கி அநேக காலம் தவம் புரிந்தனர். பிரம்மா அவர்களுக்குக் காட்சி தந்து, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். "நாங்கள் அழியாமல் இருக்கும் வரம் வேண்டும்" என்று மூவரும் கேட்டனர்.

"குழந்தைகளே! அழியாதவைகளும் அழியாதவர்களும் உலகில் இல்லை. கற்பகோடி காலம் சென்றதும் நானும் இறந்துவிடுவேன். பிறப்பு இறப்பு இல்லாதவர் பரமேசுவரன் ஒருவர்தான். ஆகவே, அந்த வரம் தவிர, வேறு வரம் ஏதும் கேளுங்கள். தருகிறேன்" என்று பிரம்மா கூறினார்.

"சுவாமி! பூமி, அந்தரம், சுவர்க்கம் என்னும் மூவுலகங்களிலும் பொன், வெள்ளி, இரும்பினால் அமைந்த மதில்கள் பொருந்திய முப்புரம் வேண்டும். அந்த முப்புரம் ஆயிரம் வருடத்துக்கொரு முறை விரும்பிய இடத்துக்குப் பெயர வேண்டும். அப்புரங்கள் மீண்டும் ஒன்றுபட்ட பொழுது சிவபெருமானே ஒரு கணையால் அழித்தாலன்றி வேறு யாராலும் மாளாத வரம் வேண்டும்" என்று மூன்று அசுரர்களும் கேட்டனர். அவர்கள் விரும்பியபடியே பிரம்மா வரம் தந்தார்.

அசுரர்கள் மூவரும் மயனை அழைத்துத் தங்கள் விருப்பப் படி மண்ணுலகில் இரும்பு மதிலும், அந்தர உலகில் வெள்ளி மதிலும், விண்ணுலகில் பொன் மதிலுமாகப் பல வளங்களும் பொருந்திய முப்புரங்களை உண்டாக்கி, அளவிலா அவுணர் சேனைகளுடன் வாழ்ந்து வந்தார்கள்.

அவர்களின் கொடுமைக்கு ஆளான தேவர்களுடன் திருமால் மேருமலையின் வடபால் சென்று சிவபெருமானைக் குறித்துப் பல காலம் தவம் செய்தார். இதன் பயனாக, சிவபெருமான் திரிபுர அசுரர்களை அழிப்பதற்குத் திருவுளம் கொண்டார். யுத்தத்துக்குச் செல்லும் வகையில் தாம் ஆரோகணிக்கத் திருத்தேரைச் சித்தம் செய்யப் பணித்தார்.

அப்படிச் சித்தம் செய்த தேரின் பெருமைதான் என்னே! அத்தேருக்கு அச்சு மந்தர—கேசரி மலைகள்; சந்திர சூரியர் சக்கரங்கள்; இருதுக்கள் சக்திகள்; பதினான்கு லோகங்களும் தேரின் பதினான்கு தட்டுக்கள். உதய அஸ்தகிரிகள் கொடிஞ்சிகள்; நதிகளும் நதங்களும் நாட்டுங்கொடிகள்; நட்சத்திரங்கள் நல்ல விதானம்; மோட்சலோகம் மேல் விரிவாகவும், மேகங்கள் சட்டமாகவும், நாள் முதலியன எண்ணெய் ஊற்றும் இடுக்கு மரமாகவும், அட்ட பருவதங்கள் தூண்களாகவும் அமைக்கப்பட்டன. எட்டுத் திக்கு யானைகள் இடையில் தாங்கின. ஏழு சமுத்திரங்கள் திரைச் சீலையாயின. ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் கலன்களாகவும், கலைகள் முளைகளாகவும், புராணம், வேதாங்கம், சாத்திரம், மனுக்கள் ஆதியன மணிகளாகவும், மருத்துக்கள் படிகளாகவும் அமைந்த தேர் ஸ்வாமி ஆரோகணிக்கத் தயாராகி விட்டது. நான்கு வேதங்களும அத்தேரின் குதிரைகளாகப் பூட்டப்பட்டன. பிரணவ மந்திரத்தைச் சாட்டையாக்கிக்கொண்டு சதுர்முகன் சாரதியானான். கங்கை, அதிதி முதலிய தேவமாதர்கள் நாலா பக்கங்களிலும் சாமரம் இரட்டினார்கள். நாரதரின் இசைக்குத் தககபடி அரமபையர் நடனமாடினர். தேவர்கள மேரு மலையைப் பெருமான் தரிப்பதற்கு ஏற்ற தனுசாக்கித் தந்தார்கள். ஆதிசேடன் அந்த வில்லின் நாணானான். பையரவு துயில் பதுமநாபப் பெருமானே பாணமாயினான். வாணி வில்லில் கட்டிய மணியாகவும், அக்கினி

தேவன் அம்பின் கூர் வாயாகவும், வாயுதேவன் அம்பிற் கட்டிய இறகாகவும் ஆயினர்.

இவ்வளவு மகத்துவம் பொருந்திய மகாரதத்தில் மகா தேவன் மலரடி வைத்ததுமே என்ன ஆயிற்று? நொந்த உள்ளங்களில் நளினமாகப் பொருந்தும் சிவபெருமானின் பாதம் அப்பெருந் தேரினுள் பட்டதும் அதன் அச்சு முறிந்தது. ஈசனின் திருவிளையாடலை என்னென்பது? பெருமிதமான சாதனைகளால் தன்னைத் திருப்திப்படுத்த முடியாது; எளிமையாலேயே தன் அருளைப் பெற முடியும் என்று தேவர்களுக்குப் பெருமான் உணர்த்த எண்ணியிருப்பானோ?

அச்சு முறிந்ததைக் கண்ணுற்ற திருமால் உடனே இடபமானார். இடபத்தின்மீது எம்பெருமான் ஏறி ரிஷபாரூடராகத் திருக்கோலம் தந்தருளினர்.

தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினன் திருமால்காண் சாழலோ
—(திருவாசகம்)

தேரினால் பயனில்லாதது போலவே தேவர்கள் தந்த திவ்வியாஸ்திரத்தாலும் பயனில்லை. சிவபெருமான் புரங்கள் மூன்றையும் புன்சிரிப்பாலேயே சாம்பலாக்கினர்.

இத்தகைய பெரிய தேருக்குச் சக்கரம் சூரியன். அந்தச் சூரியன் விநாயகர். இடையில் அணிந்துள்ள உதரபந்தனமாகிய பாம்புக்கு மணியாக விளங்குகின்றான். ''அவ்வாறு விளங்கும் விநாயகனின் அடியிணையை வணங்கி இந் நன்னூலைத் தொடங்குகின்றேன்'' என்று கச்சியப்பர் ஆரம்பம் செய்கிறார்.

உச்சியின் மகுடமின்ன வொளிர்தர நுதலினோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரிவயங்க
மெய்ச் செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண்டுற்ற
கச்சியின் விகடசக்ர கணபதிக் கன்பு செய்வாம்.

கடவுள் வாழ்த்து

சிவபெருமான்

பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையும்
மறப்பது நினைப்பதும் வடிவம் யாவையுந்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம்.

விநாயகர்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

முருகவேள்

இருப்பரங் குறைத்திடு மெஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.

சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்
டீரலை வாயிடு மெஃக மேந்தியே
வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்.

காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்டு மாலுற
ஆவினன் குடிவரு மமலற் போற்றுவாம்.

நீரகத் தேதனை நினையு மன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடுந்
தாரகத் துருவமாந் தலைமை யெய்திய
ஏரகத் தறுமுக னடிக ளேத்துவாம்.

ஒன்றுதொ ருடலை யொருவி யாவிமெய்
துன்றுதொ ருடலைத் தொடங்கி ஐவகை
மன்றுதொ ருடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ ருடிய குமரற் போற்றுவாம்.

எழமுதி ரைப்புனத் திறைவி முனபுதன்
கிழமுதி ரிளநலங் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்.

ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சியிற்
கூறுசீர் புனைதரு குமர கோட்டம் வாழ்
ஆறுமா முகப்பிரா னடிகள் போற்றுவாம்.

சிவசக்தி

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

திருநந்தி தேவர்

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

சரசுவதி

தாவறும் உலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

ஆற்றுப் படலம்

[நூல் பாடுகின்ற ஆசிரியர் முதன் முதலாக ஆற்றுப் படலம் பாடுவது மரபு. கதை நிகழ்கின்ற நாடு எந்த நதியினால் வளம் பெறுகின்றதோ அந்த நதியின் சிறப்பைப் பாடுவர். இராமாயணத்தில் சரயூ நதியும் பாரதத்தில் கங்கை நதியும் திருவிளையாடற் புராணத்தில் வையை நதியும், பெரிய புராணத்தில் காவிரியும் ஆற்றுப் படலத்தில் சிறப்பிக்கப் பெற்றுள்ளன. கந்தபுராண ஆசிரியரான கச்சியப்பர் பாலாற்றைச் சிறப்பித்து ஆற்றுப் படலம் பாடுகிறார்.

கதாநாயகன் வாழ்ந்த ஸ்கந்தகிரியிலுள்ள தீர்த்தத்தைப் பாடாமல் கதையாசிரியர் வாழ்ந்த காஞ்சியின் தீர்த்தத்தை அவர் பாடியது ஏன்? எங்கும் வாழும் கதாநாயகன் தம்முடனேயே நிச்சயமாக வாழ்கிறான் என்ற அநுபவத்தினாலேயே அவ்வாறு பாடியிருப்பாரோ? பாலாறு நீர் வறண்ட ஆறு ஆயிற்றே, அதனை எப்படிச் சிறப்பித்துப் பாடுகிறார் எனப் பார்ப்போம்.]

குழந்தைகளுக்குப் பசி வரும்போது அது வருடத் தாய்க்குப் பால் சுரக்கும். குழந்தை பசி ஆறியவுடன் பால் மறைந்து விடும். வேண்டிய பொழுது சுரக்கவேண்டும். வேண்டாதபோது சுரக்கக்கூடாது. அவ்வாறில்லாமல் எப்போதும் பால் சுரந்தால் அது பிணியாகும். குழந்தைக்குப் பசி வரும்பொழுது தாய்க்குப் பால் சுரப்பதே போல், வேண்டிய பொழுது விவசாயிகள் வருடினால் பாலாறு நீர் சுரக்கின்றது. மற்ற நேரங்களில் கரந்துவிடுகிறது. இது மற்ற நதிகளுக்கு இல்லாமல் பாலாற்றுக்கே உரிய பெருமை.

பாலாற்றுக்கு உற்பத்தி ஸ்தானம் நந்திமலை. அங்கே மேகம் நீரை முகந்து இருண்ட உருவத்துடன் சென்றது. அப்போது வானவில் தோன்றியது. கரிய மேகங்கள் வானவில்லுடன் நின்று நந்திமலை மீது வாய் திறந்து குளிர்ந்த நீரைப் பொழிகின்றன. கரிய முகிலும், பெரிய மலையும், வான வில்லும், பொழிகின்ற மழையும் பரம பக்தரான கச்சியப்பருக்கு ஏவற்றை நினைவூட்டுகின்றன?

கரு நிறமுடைய கண்ணப்ப நாயனார் வில்லுடன் சென்று காளத்தியப்பராம் சிவலிங்கத்தின்மீது, தாம் வாயில் தேக்கிக் கொணர்ந்த நீரைச் சொரிவது போல் இருக்கிறது என்கிறார். இதோ தேனினும் இனிய பாடல்:

பூட்டு கார்முகந் தன்னெடுந் தோன்றிய புயல்வாய்
ஊட்டு தண்புனல் நந்தியங் கிரிமிசை உகுத்தல்
வேட்டு வக்குலத் திண்ணனுர் மஞ்சனம் விமலற்கு
ஆட்டு கின்றதோர் தனிச்செயல் போன்றுள தன்றே.

நந்தி மலையில் மழை பொழிந்தது. பால் நதியில் வெள்ளம் ஓடுகின்றது. வலிமையான சில மீன்கள் நீரில் எதிர்த்து நீந்திச் செல்கின்றன. கச்சியப்பருக்கு அந்தச் சிறு காட்சி மாட்சி தருகின்றது. மதுரைமா நகரில் வையையாற்றில் முத்தமிழ் வித்தகராம் திருஞானசம்பந்த சுவாமிகள், 'வாழ்க அந்தணர்' என்று பாடிவிட்ட செந்தமிழ் ஏடு எதிர் ஏறிச் சென்றதல்லவா? அதுபோல் இருக்கிறதாம் மீன் எதிர் ஏறுவது.

உதிரு கின்றசிற் றுண்டிகொண் டொலிபுனற் சடைமேல்
மதுரை நாயகன் மண்சுமந் திட்டமா நதியின்
முதிரு முத்தமிழ் விரகன தேடென மொய்ம்மீன்
எதிர்பு குந்திடப் போவது பாலியா மியாறு.

திருநாட்டுப் படலம்

நீரில் குவளை மலர்கள் பூத்திருக்கின்றன. அவற்றைக் கண்ட கச்சியப்பருக்குக் குளம் முழுவதும் விளக்குகள் எரிந்து நிறைந்து ஒளி வீசுவதுபோல் தெரிந்தது. நமிநந்தி அடிகள் தண்ணீரையே நெய்யாக வார்த்து ஏற்றிய விளக்குகளைப் போல் குவளைகள் காட்சி தருகின்றன என்று அவர் அழகு படக் கூறுகிறுர்.

பாட்டிய லளிமுரல் பதுமக் கோயிலில்
நாட்டிய நிமலன்முன் *நந்தி நீரிடை
மாட்டிய பல்பெருஞ் சுடரை மானுமால்
கோட்டுயர் தடந்தொறுங் குவளை பூத்தவே.

விளக்கின் தைலம் போல் தீர்த்தமும், அதில் எரிகின்ற சுடர்போல் மலரும் காட்சி தருகின்றன கச்சியப்பருக்கு.

ஆற்றுப் படலம், நாட்டுப் படலம், பாயிரப் படலம் எல்லாம் முடிந்தபின் வரலாற்றைத் தொடங்குகிறுர்.

---

* நந்தியடிகள் நாயனுர்.

உ

முருகா

1. உற்பத்திக் காண்டம்

1. திருக்கயிலாயப் படலம்

சிவபெருமான் தம்மை யடுத்த அடியார்களின் பாசத்தை நீக்கித் திருவருள் புரிவதுபோல் கைலாய மலை நல்லொளி வீசிக் கொண்டிருந்தது. முக்கண்ணும், நாற்புயமும், பொன் மேனியும் உடைய நந்தியெம்பெருமான் பொற் பிரம்பைக் கையிலேந்திக் காவல் புரிந்து கொண்டிருந்தார். ஊழிக் காலத்தும் அழியாத வெள்ளியங்கிரியின் மத்தியில் நவமணி களின் நல்லொளி வீசிக்கொண்டு பொன்னெடுங் கோயில் ஒன்று பொலிவுற்றிருந்தது. அத்திருக் கோயிலின் நடுவில் வனப்புக்களுக்கு உறைவிடமாக விளங்கும் மணி மண்டபத் தில் நவமணிகளாலான அரியணை அமைந்திருந்தது. அதன் மேல் தெய்வமணியாகிய சிவபெருமான் அம்பிகையுடன் வீற்றிருந்தார். தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் முதலி யோர் எம்பிரானைத் தோத்திரம் செய்து கொண்டிருந் தனர். தும்புரு, நாரதர், கந்தருவர் முதலியோர் இனியகானம் இசைத்துக் கொண்டிருந்தனர்.

2. பார்ப்பதிப் படலம்

சிவபெருமானுடன் வீற்றிருந்த அம்பிகை மனத்தில் ஒன்றை நினைத்துத் துணுக்குற்றுப் பரமேசுவரனை வணங்கி எழுந்தார்.

"தாட்சாயணி! நீ காலையிலும் மாலையிலும்தான் என்னை வணங்குவாய். என்றைக்கும் இல்லாதபடி இன்று இந்த நேரத்தில் வணங்குவது ஏன்?" என்று எம்பெருமான் கேட்டார்.

"பெருமானே! தேவரீரை நிந்தித்தவன் *தட்சன். சிவ நிந்தை புரிந்த அவன் அதற்குரிய தண்டனையை அடைந்து விட்டான். ஆயினும் இந்த உடம்பு அவன் வளர்த்த உடம்பு. தாட்சாயணி என்ற பெயர் அவன் பெயரை வைத்துப் பிறந்த பெயர். தேவரீரை நிந்தித்த மாபாதகன் வளர்த்த இந்த உடலையும், அவனுடைய மகள் என்னும் பொருள்படும் இந்தப் பெயரையும் தரிக்க எனக்கு விருப்பமில்லை. இவ்வுடலை விட்டு விட எண்ணுகிறேன். தங்கள் உத்தரவின்றி இதைச் செய்யக் கூடாது. தாங்கள் எனக்குத் திருவருள் புரிய வேண்டும்." என்று அம்பிகை வேண்டினர்.

தேவியின் பதிபக்தியை எண்ணி வியந்த எம்பெருமான் மோனமாயிருந்தார்.

தாட்சாயணி மீண்டும் தம் கருத்தை வலியுறுத்தினர்.

சிவபெருமான் புன்சிரிப்புச் சிரித்தார். "தேவீ! இதை நீ உனக்காகவா சொல்லுகிறாய்? உன் குலம் தழைப்பதற் காகவல்லவா சொல்லுகிறாய்? நீ நினைத்தது நல்லதே. அவ் வண்ணமே செய்க" என்று அருள் புரிந்தார்.

"தேவீ! இமயமலையரசனாகிய இமவான் உன்னைக் குழந் தையாகப் பெற நெடுங்காலமாகத் தவம் செய்கிறான். நீ அவனுக்கு அருள் செய். அவனுக்கு மகளாகப் பிறந்து, ஐந்தாவது ஆண்டில் நம்மை நோக்கித் தவம் செய். உன்னைத் திருமணம் செய்து, திருவருள் புரிகிறோம்" என்றார் சிவபெரு மான்.

எம்பெருமான் அருள் புரிந்தவுடன் தாட்சாயணியின் உடல் காற்றில் சூடம் கரைவதுபோல் கரைந்து விட்டது. நம்மைப்போல் ஸ்தூல சரீரம் எம்பிராட்டிக்கு இல்லை. அவள் ஞானம்பாள். எலும்பு இல்லை, தோல் இல்லை; ரத்தம் இல்லை. மேனி அவ்வளவும் ஞானம். ஞானம், ஞானமேதான்.

எழில் மிக்க இமயமலை விண்ணளாவி நின்றது. அம்மலை யின் மேல் தேவாமிருதம் போன்று நீருடைய தடாகம் ஒன்று

---

* தட்சன் வரலாற்றைப் பின்னர் ஆறாவது காண்டமாக வரும் தட்ச காண்டத்தில் காண்க.

உண்டு. அதற்குப் பத்மை என்று பெயர். அத்தடாகத் தருகில்தான் அம்பிகை தனக்கு மகளாய்த் தோன்ற வேண் டும் என்று பர்வதராஜன் தவம் செய்துகொண்டிருந்தான்.

ஒரு நாள் சந்தியாவந்தனம் செய்யத் தடாகத்தில் இறங் கிய இமவான் வானத்தில் பூத்த சூரியனைப்போல் அத்தடாகத் தில் ஆயிரத்தெட்டு இதழ்த் தாமரை ஒன்று பூத்திருப்பதைக் கண்டான். சந்தி உபாசனையின்போது சூரியனில் உள்ள எந்த பிரம்ம சக்தியை வழிபடுகிறார்களோ அந்தப் பராசக்தி கண் ணைக் கவரும் கட்டழகுடைய குழந்தையாக மரகத மேனி யுடன் கமலத்தில் திரு அவதாரம் செய்திருப்பதையும் கண் டான்.

'பைத்ததோர் குழவியின் படிவத்துற்றனள் எத்திறத் துயிரையும் ஈன்ற தொன்மையாள்' என இதை நெகிழ்ந்து பாடுகிறார் கச்சியப்பர்.

எம்பிராட்டி மரகத மேனியுடன் திருஅவதாரம் செய் தாரே யன்றிப் பெண் வயிற்றில் பிறக்கவில்லை. உலக மக் களைக் கருவில் சுமக்கும் அன்னையை யார் கருவில் சுமக்க முடியும்?

தெய்வக் குழந்தையைக் கண்ட இமவான், 'அடியேனை ஆட்கொள்ளும் பொருட்டு அகிலாண்டகோடி ஈன்ற அன்னை குழந்தையாக வந்தனள்' என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந் தான். "அடியேன் செய்த தவம் பலித்தது" என்று ஆனந்தக் கூத்தாடி அம்பிகையைக் கையில் எடுத்து உச்சி மோந்தான். சென்னி மேல் வைத்துக் களியாட்டம் ஆடினான்.

குழந்தையை எடுத்துக்கொண்டு தன் பொன் மாளிகை சென்றடைந்த இமவான், "இது எம்பெருமான் கொடுத்த பிரசாதம்" என்று தனதுபத்தினியாகிய மேனையின் கரத்திலே குழந்தையைக் கொடுத்தான். மேனை அத் தெய்வக் குழந்தை யைத் தொழுது வாங்கினாள். மார்போடு அணைத்தாள். அன்பு சுரந்தாற்போல் பாலும் சுரந்தது.

பெண் குழந்தையென்றால் தாய்மார்களுக்கு சந்தோஷம். மேனை மிகவும் மகிழ்ச்சி கொண்டாள். பரிபுரம், தண்டை, சங்குவளை, ரத்தினச் சுட்டி, மதாணி, பொற்றோடு, அங்கதம்

முதலான பொன்னுபரணங்களைக் குழந்தைக்கு அணிவித்துப் பொன்னல் செய்யப்பட்ட தொட்டிலில் இட்டுத் தாலாட்டினுள். (தாலு என்ருல் நா என்று பொருள். நாவை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு என்று வந்தது.)

பருவதாராஜனுக்கு மகளாக வந்ததால் குழந்தைக்குப் பார்வதி என்று பெயரிட்டார்கள்.

குழந்தையை இமவானும், மேனையும்அருமையாக வளர்த்தார்கள் என்று சொல்ல வந்த கவி, 'சகல புவனங்களையும் வளர்த்து வாழ்விக்கும் தேவியை வேருெருவர் வளர்ப்பதாவது? அப்படி வளர்ப்பது போன்ற பாவனையைத் தன் அருளால் இமவானுக்கு அவள் அளித்தாள் என்றே கூற வேண்டும்' என்கிருர்:

மன்னுயிர் புவனமேனை மற்றுள பொருளுக்கெல்லாம்
அன்னையா யுதவி நாளும் அவற்றினை வளர்த்து நிற்பாள்
தன்னையும் வளர்ப்பா ருண்டோ வளர்ந்தது சழக்கே அந்தக்
கன்னிதன் அருளின் நீர்மை காட்டினள் போலுமன்றே.

குழந்தை வளர்கிறது; விளையாடுகிறது. உலகையெல்லாம் விளையாட்டாகப் பெற்றெடுக்கும் ஜகன்மாதா எப்படி விளையாடுகிருராம்? மூன்று ரத்தினங்களை அடுப்பாக ஆக்கி முத்துச் சிப்பியைப் பாத்திரமாகச் செய்து, முத்துக்களை அரிசியாகப் பெய்து, நவ ரத்தினங்களையும் வைடூரியங்களையும் காய் கறிகளாக்கி, பொற்பொம்மைகளை உண்ண வைத்து அற்புதம் அற்புதமாக விளையாடுகிருராம்.

பார்வதி தேவிக்கு ஐந்து வயதாகிவிட்டது. ஆலமுண்ட அண்ணலின் ஆணையை நினைந்த குழந்தை, இமவானை நோக்கி, "அப்பா! மணம் புரிந்து கொள்ளுமாறு வேண்டி மணிகண்டப் பெருமானை நோக்கித் தவம் செய்ய வேண்டும். எனக்குத் தவச்சாலை அமைத்துக் கொடுங்கள்" எனக் கேட்டது.

"மகளே! ஐந்து வயதிலா தவம் செய்யப் போகிருய்? தவம் என்ருல் சாமானியமானதல்ல. பட்டினி கிடந்து உடலை வருத்தித் திட ஞானத்துடன் தவம் செய்ய வேண்டும். 'ஐந்து

வயதில் இதனைச் செய்ய யாராலும் முடியாது. ஆகவே தவம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை மறந்துவிடு" என்று இமவான் கூறினன். மேனையும் பார்வதியிடம் "தவம் செய்வதற்கு ஏற்ற வயது இதுவல்ல" என்று கூறினள். 'தனியாகச் சென்று தவமிருக்கும் பருவம் இது அல்ல. பெற்றோரின் காப்பில் வளர வேண்டிய குழந்தையே இவள்' என இருவரும் கருதினர்.

(அவதாரரகசியம் பெற்றோருக்கும் மற்றோருக்கும் மறந்து தெய்வ மதலையைச் சாமானிய மானுடப் பிறவியாகவே பாவிப்பதை எல்லாப் புராணங்களிலும் காண்கிறோம். அவ்வப்போது மட்டிலுமே தன் தெய்வத் தன்மையை வெளிப்படுத்தி, மற்றப் பொழுதில் சாமானியப் பிறவியாகவே வாழ வேண்டும் எனக் கருதிப் பரம்பொருள் இப்படி மாயை செய்யும் போலும்!)

"அப்பா! இந்த உடலையும் உயிரையும் கொடுத்தவர் சிவபெருமான். அந்த ஐயனின் அருள் இன்றிப் பிறர் நம்மைக் காக்க முடியாது. உடலையும் உயிரையும் கொடுத்த எம்பிரானே என்னைக் காப்பாற்றுவார். தடை சொல்லாமல் தவம் செய்வதற்கு விடை தாருங்கள்" எனப் பார்வதியம்மை வேண்டினர்.

இமாசலத்துக்கு அருகே தவச்சாலை அமைத்துக் கொடுத்தான் பர்வதராஜன். பார்வதிக்குக் காவலாகக் கன்னியர் பலர் நியமிக்கப்பட்டனர். 'சிவ சிவ' என்று மனம் மொழி மெய்களால் குழந்தை வழிபாடு செய்துகொண்டிருந்தது.

அம்பாள் செய்த சிவபூஜையைவிடப் புனிதமான பூஜை எது உண்டு? மணியோடு இணைய ஒளி செய்த தவம் அது மலரோடு இணைய மணம் செய்த தவம் அது.

(ஞானிகள் தமக்காக என்று எதுவுமே செய்ய இயலாது. தமக்கே போல் அவர்கள் செய்யும் காரியங்களும் கூட உலக க்ஷேமத்துக்காகத்தான் அமையும். தேவி செய்த தவம் ஐயனை அடைந்து மணம் புரிந்துகொள்ள வேண்டும் என்ற சுயநல நோக்கத்தோடு முடிவதல்ல. அவர் ஐயனை அடைந்தே தீர

வேண்டும்! அதனால் நம் காவிய நாயகராம் ஆறுமுகஸ்வாமி அவதரித்தேயாக வேண்டும்! அசுரரை மாய்த்து அமரர் குறை தீர்த்து அறத்தை நிலைநாட்டக் குமரன் தோன்றியே ஆக வேண்டும் என்ற சூழ்நிலை தேவி தவம் புரியும் அதே தருணத்தில் ஏற்பட்டது.)

3. மேருப் படலம்

பார்வதி தேவி தவம் செய்து கொண்டிருந்தபோது அசுரர் தலைவன் சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் நூற்றெட்டு யுகங்களாக அரசு செலுத்தி ஒப்பாரும் மிக்காருமின்றிச் செருக்குற்றிருந்தான். அசுரன் ஆட்சியில் தவசிரேஷ்டர்களின் உள்ளம் அமைதியின்றித் தவித்தது.

எம்பெருமான் ஞானமே வடிவானவர். இன்பமும் துன்பமும் ஞானிக்கு இல்லை. என்றைக்கும் ஒன்று போல் இருப்பவர் பரமேசுவரர். அவர் கைலாய மலையில் கல்லால விருட்சத்தின் கீழ்த் தென்முகம் நோக்கிப் பரம சாந்தமாக அமர்ந்திருந்தார்.

(சிவாலயங்களில் சிவலிங்கம் பல திசைகளை நோக்கியிருக்கும். ஆனால் திசை காட்டும் கருவி போல் தட்சிணாமூர்த்தி எல்லாக் கோயில்களிலும் தெற்கு நோக்கித்தானிப்பார்.

வடக்கு நோக்கிச் செல்வது சரண யாத்திரை. தெற்கு நோக்கிப் போவது மரண யாத்திரை. "வடக்கு நோக்கிப் போகாதவர்களே! நீங்கள் என்னிடம் வந்தால் நான் உங்களை நோக்கி வருவேன்" என்று தெற்கு நோக்கியிருக்கும் தட்சிணாமூர்த்தி சொல்லாமல் சொல்லுகிறார்.)

பிரம்மனுக்கு சனகர், சனந்தனர், சநாதனர், சனத்குமாரர் என்று நான்கு புத்திரர்கள். சனகாதி முனிவர்கள் என்று இவர்களைச் சிறப்பித்துச் சொல்வதுண்டு. பிரம்மபுத்திரர் நால்வரும் வேதங்களைக் கற்றுக் கரை கண்டவர்கள். எனினும் இவர்கள் விரும்பிய சாந்தியைக் கல்வியினால் அடைய முடியவில்லை. பலவிடங்களுக்கும் சென்றார்கள்; எங்கும் மன அமைதி கிடைக்கவில்லை. கடைசியாகக் கயிலைமலையை அடைந்தார்

கள். முதல் வாயிலை யடைந்ததும், நந்தியெம் பெருமானை வணங்கி, அவர் அநுமதியுடன் சிவசந்நிதியுட் சென்றனர். பிரம்மன் முதலியோர் காணாத ஞான நாயகனை சனகாதியர் நால்வரும் கண்டனர்.

மொழியது தவறல் செல்ல முற்றுடல் பொடிப்புக் கொள்ள
விழிபுனல் பெருகத் தீசேர் மெழுகென உள்ளம் விள்ள
அழகிய மறைக்கும் எட்டா ஆதிநாயகனை நோக்கித்
தொழுதனர் உவகை பூத்துத் துள்ளினர் துளக்கம் உற்றார்.

மிகவும் பெரிய ஒருவரிடம் எதையாவது சொல்லுவதற்கென்று போவோம். ஆனால் அந்தப் பெரியவரைக்கண்டதும், எதைச் சொல்லப் போனோமோ அதைச் சொல்ல முடியாமல் மொழி தடுமாறும். அதுபோலப் பரமேசுவரரைக் கண்டதும் சனகாதி முனிவர்களுக்கு மொழி குழறியதாம். மயிர்க்கூச்சம் ஏற்பட்டதாம். தாரை தாரையாகக் கண்ணீர் விட்டார்களாம். அனலிடைப்பட்ட மெழுகுபோல் அவர்கள் உள்ளம் குழைந்துவிட்டதாம்; சரீரம் துள்ளுகிறதாம். "ஹர ஹர" என்று எம்பெருமானைத் தொழுது, "வானோர்க்கரிய மருந்தே போற்றி, ஏனோர்க்கெளிய இறைவா போற்றி" என்று துதித்தனர்.

சுவாமிக்குக் கருணை பிறந்தது. "குழந்தைகளே! வாருங்கள்! உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று மோகனக் குரலில் கேட்டார்.

"பெருமானே! கார்த்திகை மாதம். பிரயாணிகள் கப்பலில் செல்கிறார்கள். அமாவாசையும் நிகழ்கிறது, நடு நிசி. புயல் வீசத் தொடங்குகிறது. அப்போது கப்பலில் உள்ளவர்கள் எப்படித் தவிப்பரோ, அப்படி அமைதியின்றித் தவிக்கிறது எங்கள் மனம்.

"அருட்பெருங்கடலே! வேதங்கள், ஆகமங்கள், இதிகாசங்கள் எல்லாவற்றையும் நாங்கள் படிக்கப் படிக்க எங்களுக்கு அதிகமாகச் சந்தேகம் எழுகின்றதேயன்றிச் சாந்தி கிடைக்கவில்லை. எங்கள் மயக்கத்தைப் போக்கி மனம்அமைதி யடையும் வழி காட்ட வேண்டும்" என்று பிரம்மபுத்திரர் நால்வரும் தொழுது வேண்டினர்.

பரமேசுவரர் புன்சிரிப்புச் சிரித்தார். நந்தியெம் பெருமானை அழைத்து, யார் வந்தாலும் உள்ளேவிடவேண்டாம்'' என்று கட்டளையிட்டார்.

சனகாதி முனிவர்கட்குச் சிவாகமங்களின் நுட்பங்களாகிய சரியை, கிரியை, யோகம் என்ற முப்பதங்களையும் கூறினார் சுவாமி. "ஐயனே! எங்கள் மனம் ஒடுங்க ஞானபாதம் போதிக்க வேண்டும்'' என்று சனகாதி முனிவர்கள் வேண்டினர். "குழந்தைகளே! அதை வாக்கினால் போதிக்க முடியாது; இப்படிச் சும்மாயிருப்பதே அதுவாகும்'' என்று தம் திருமார்பில் திருவிரலால் அமைத்த சின்முத்திரையைத் தாங்கி யோகத்தில் அமர்ந்து மௌன நிலையைக் காட்டியருளினார் தட்சிணாமூர்த்தி.

(நான்கு விரல்கள் ஒரு பக்கமும் கட்டை விரல் மட்டும் தனித்து ஒரு புறமும் நிற்கின்றது. சில்லறைகளுடன் சேராமல் ஒதுங்கிக் கொள்ளும் அந்த விரல்தான் பதி. ஒன்றாகி, உடனாகி, வேறாகி நிற்பவர் இறைவர். ஆள் காட்டு விரல்—ஆன்மா. நடு விரல், மோதிர விரல், சுண்டு விரல் மூன்றும் முறையே ஆணவம், கன்மம், மாயம் என்ற மும்மலங்களைக் குறிக்கும். இம்மலங்களினின்றும் உயிர் நீங்கி, பசுவாகிய ஆன்மா பதியுடன் ஒன்றுபட வேண்டும். இதைச் சுட்டிக் காட்டுவது சின்முத்திரை. அது சிவனும் சீவனும் ஒன்றுபட்ட இடம்.

சின்முத்திரை தாங்கி நீலகண்டன் ஆலமரத்தடியில் அமர்ந்தார். அங்கு ஆச்சரியங்கள் நிகழ்ந்தன. எப்போதும் குருநாதர் வயதானவராக இருப்பார். இங்கோ குருநாதர் இளமை உள்ளவர்; சீடர்களான சனகாதி முனிவர்கள் வயதானவர்கள். குருவின் வியாக்கியானமெல்லாம் மொழியொழிந்த மோனத்திலேயே நடந்தது இன்னோர் ஆச்சரியம்.)

"சிவஞானமானது நூல் அறிவினால் கிடைப்பதன்று; அநுபவ அறிவால் மட்டுமேகிடைப்பது'' என்று சின்முத்திரை உணர்த்தியது. அதனை உள்ளத்தில் பதித்துக் கொண்ட சனகாதி முனிவர்கள் ஒடுங்கிச் சித்திரப் பதுமைபோல் செயலற்றுச் சிவஞானத்தில் இருந்தனர். ஞான நிலையைக்

காட்ட, சிவபெருமான் மோன நிலையில் இருந்த ஒரு கணப் பொழுதில் பிரம்மன் முதலான தேவர்களுக்கெல்லாம் அநேக யுகங்கள் ஓடின.

சிவமூர்த்தியின் தவ நிலையால் விண்ணில் அமரர்களும், மண்ணில் மனிதர்களும் காம இச்சை அறவே நீங்கி முற்றத் துறந்த முனிவர்போல் இருந்தனர். சிருஷ்டி நடைபெறவில்லை.

இச்சமயத்தில்தான் சூரபன்மன் தேவர்களுக்குக் கொடுமை செய்து கொண்டிருந்தான்.

சூரபன்மன் ஆட்சி நடத்தும் கொடுமையைப் பார்ப் போம், அவனது மந்திரி தர்மகோபன் தேவர்களை ஒவ் வொரு தேவரையும் அழைத்து விசாரிக்கிறான்.

"யார் நீ?"

"நான் அலரி!"

"அப்படியென்றால்......"

"ஓஹோ. நீதான் சூரியனா? இனிமேல் இங்கு பகலில் வெய்யில் சுடக்கூடாது. சுட்டால் தலையைக்கிள்ளிவிடுவேன். எங்கள் மண்டலத்தில் உன் வெப்பமே படக்கூடாது. உன் மண்டலத்துக்குச் செல்லும்போது வெப்பத்துடன் செல்ல வேண்டும்; தெரிகிறதா?"

"உத்தரவு! வருகிறேன்" என்று கூறிச் சூரியன் புறப் படுகிறார்.

அடுத்தவர் வருகிறார்.

"நீ யார்?" என வினவுகிறான் சூரன்.

"நான் சந்திரன்! அத்திரி முனிவருக்கும் அநசூயா தேவிக் கும் புதல்வன்."

"உன் உடல் ஏன் தேய்ந்திருக்கிறது?"

"அது என் மாமனார் கொடுத்த சாபம்."

"சந்திரனே! என் மண்டலத்தில் நீ தேயவும் கூடாது; வளரவும் கூடாது. எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்."

"உத்தரவு; வருகிறேன்!" என்று சொல்லிச் சந்திரன் புறப்பட்டார்.

அடுத்ததாக எமன் நடுங்கிக்கொண்டே வந்து நிற்கிறான்.

"நான்தான் எமன். அந்தகன்; கூற்றுவன்; நடுவன் என்ற பெயர்களும் எனக்கு உண்டு. உயிர்களைப் பிரிப்பது என் வேலை" என்றான்.

"அந்த வேலையை இந்த ஊரில் வைத்துக்கொள்ளக் கூடாது. இங்கே காலம் காட்டுகின்ற வேலையை ஒழுங்காகச் செய்ய வேண்டும்."

அடுத்து இந்திரன் வந்தான்.

"யார் நீ?"

"முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் தலைவனாயிருந்த தேவேந்திரன்."

"உனக்கு ஒரு வேலை தருகிறேன். அதை ஒழுங்காகச் செய்யவேண்டும். கடலில் உள்ள மீன்களையெல்லாம் பிடித்து, இந்த ஊரில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று, எந்த வகையான மீன் எவ்வளவு தேவை என்று கேட்டறிந்து என் மக்களுக்குக் கொடுக்கவேண்டும்."

"உத்தரவு."

வான் சுமந்த தேவர்களை மீன் சுமக்க வைத்தான் சூரபன்மன்!

அக்கினி பகவான் வந்தான்.

"யார் நீ?"

"நான்தான் முளரி."

"அப்படியென்றால்?"

"அக்கினி."

"இந்த மண்டலத்தில் சுடுகிற வேலையை வைத்திருக்கக் கூடாது; ஓடு."

அக்கினி தேவர் ஒரே ஓட்டமாக ஓடுகிறார்.

அடுத்ததாக பிரம்மன்.

"யார் நீ?"

"நான் உன் கொள்ளுப் பாட்டன். உன் அப்பா காசிபர். அவருக்கு அப்பா மரீசி, மரீசிக்கு அப்பா நான்."

"என்ன இருந்தாலும் நீ எனக்குப் பந்து என்று சொல்லி விட்டதால் உன்னைத் துன்புறுத்தவில்லை. பஞ்சாங்கத்தில் நாள், நட்சத்திரம் பார்த்து வீடு வீடாகச் சென்று சொல்ல வேண்டியது உன் வேலை."

பகவானாகிய நாராயணர் வந்தார்.

"யார் நீ?"

"உன் பாட்டனுக்குப் பாட்டன்; நாராயணர்."

"உனக்கும் கடினமான வேலை தரக் கூடாது. இந்த மண்டலத்தில் உள்ள அவ்வளவு வீடுகளுக்கும் சென்று அவர்கள் கேட்கின்ற வரங்களைக் கொடுத்துக் கொண்டிரு."

இவ்வாறெல்லாம் தேவர்களைத் துன்புறுத்திய சூரபன்மன் வானவர்களை எப்படி வேலை வாங்கினான் எனப் பார்ப்போம். காலையில் தென் கடலில் உள்ள தனது தலைநகரான வீரமகேந்திரபுரியில் வேலை செய்யும்படியும், உச்சி வேளையில் தன் தம்பி தாரகனின் நகராகிய மாயமாபுரத்தில் வேலை செய்யும்படியும், மாலையில் மற்றொரு சோதரனாகிய சிங்கமுகனின் ஊராகிய ஆசுர நகரில் வேலை செய்யும்படியும் பணித்தான். அலைந்து அலைந்து நிலைகுலைந்து போனார்கள் தேவர்கள். இதை அருணகிரிநாதர் பாடுகிறார்:

நெறிதவறி அலரிமதி நடுவன்மக பதிமுளரி
நிருதிநிதி பதிகரிய வனமாலி
நிலவுமறை யவனிவர்க ளலையஅர சுரிமைபுரி
நிருதனுர மறஅயிலை விடுவோனே.

தேவேந்திரன் பொன்னுலகை விட்டுத் தேவர்களோடும் இந்திராணியோடும் மேரு மலை சென்றான். சூரபன்மனுடைய மகன் பானுகோபன் வானுலகமாகிய பொன்னாட்டை எரித்துத் தன் மகன் சயந்தனையும் ஏனைய தேவர்களையும் சிறைப் பிடித்த செய்தி கேட்டு மிகவும் வருந்தினான். மேருமலையின் ஒரு புறத்திலிருந்து எம்பெருமானை நோக்கித் தவம் புரிந்

தான். அவனது தவத்திற்கு இரங்கிய பரமேசுவரர் காட்சி தந்தார்.

"கருணாமூர்த்தி! சூரபன்மன் என்னையும் தேவர்களையும் துயரக் கடலில் ஆழ்த்துகிறான். என் மகன் சயந்தனையும் தேவர்களையும் சிறையில் அடைத்து வைத்து, எனது நகரமாகிய அமராவதியைக் கொளுத்தி இடர்கள் பல செய்கிறான். அந்தச் சூராதிகளை அழித்து எங்களைக் காத்தருள வேண்டும்" என்று இந்திரன் வேண்டினான்.

"இந்திரா! என்னை நிந்தித்து தட்சன் யாகம் செய்த போது அதில் நீயும் மற்ற வானவர்களும் கலந்து கொண்டதால் இத் துன்பம் வந்தது. வருந்தாதே; விரைவில் குமரக் கடவுள் தோன்றி சூராதியசுரர்களை அழித்து உங்கள் துயர் தீர்ப்பான்" என்று கூறி மறைந்தார் எம்பெருமான்.

'சிவபெருமானோ கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து யோகம் செய்து கொண்டிருக்கிறார்—உமாதேவியாரோ இமவான் மகளாய்த் தோன்றித் தவம் செய்து கொண்டிருக்கிறார். இவர்கள் இப்படித் தவசியாக இருந்தால் குமரக் கடவுள் எப்படித் தோன்றுவார் ? குமரக் கடவுள் அவதரித்தால் தானே நம் குறை நீங்கும் ?" என்று எண்ணிய இந்திரன் மனோவதி என்ற மாநகரை அடைந்தான். அங்கே வியாழ பகவானின் மனைவியிடம் இந்திராணியை விட்டுவிட்டுத் தேவர்களுடன் பிரம்மலோகம் சென்றான். குமரக் கடவுள் தோன்றுவார் என்று பரமேசுவரர் அருளியதைப் பிரம்மனுக்கு உரைத்தான்.

"இந்திரா! நானும் திருமாலும் தேடிக் காணமுடியாத கண்ணுதற் பெருமான் வெள்ளியங்கிரியில் சனகாதி முனிவர் நால்வருக்கும் யோக முத்திரையைக் காட்டி வீற்றிருப்பது நம் துன்பத்தைப் போக்கவேயாகும். மகனுக்கு ஒரு பெரிய கோடைக் கட்டி வந்த காலத்துத் தாய் தந்தையர் அதனை நசுக்க மனம் கொள்ளாமல் பிறரைக் கொண்டு மகனைத் துன்புறுத்திப் பிணியைப் போக்குவர். மகன் மீதுள்ள கருணையினால் தான் அப்படிச் செய்கிறார்களேயன்றிக் கோபத்தால் அல்ல. நமக்குத் தாயும் தந்தையுமாகிய எம்பெரு

மான், அகந்தை மிகுந்துபோன நம் தீவினைகளை நீக்கவே சூரபன்மாசுரன் முதலியோரால் இக்கொடுமைகளை இழைக்கிறார். அது தெரியாததுபோல் மோன நிலையில் இருக்கிறார்'' என்று பிரம்மன் கூறினார்.

பெற்றிடுங் குரவரானோர் பிள்ளைகள் தம்பால் நோயொன்
றுற்றிடில் பிறரைக்கொண்டும் உறுதுயர் செய்து தீர்ப்பார்
மற்றவர் தம்பால் அன்போ வன்கணோ அதுபோல் நம்பால்
பற்றிய பவங்கள் தீர்ப்பான் பரமனும் இவைகள் செய்தான்.

குமரக் கடவுளின் பிறப்புக்கு வழி காணாமல், தேவர்கள் வைகுந்தம் சென்று திருமாலைக் கண்டனர். ''சிவபெருமானின் யோக நிலை கலைந்து பார்வதி தேவியை அவர் மணந்து கொண்டால்தான் தேவர்கள் துயர் நீங்கத் தனிப் பெருந் தெய்வமாம் சுப்பிரமணியப் பெருமான் அவதாரம் செய்வார். பிரம்மனே! நீ உடனே மன்மதனை அழைத்துச் சிவபெருமானிடம் அனுப்பி அவர் மனத்தில் மலைமகள்பால் மையல் உண்டாகச் செய்'' என்று பிரம்மனைப் பணித்தார் திருமால்.

4. காமதகனப் படலம்

மனோவதி நகருக்கு வந்து பதும பீடத்து மலர்த்தவிசின் மீது விற்றிருந்த பிரம்மன் தனது தம்பி மன்மதனை வரவழைத்தான்.

மன்மதன் என்றால் மனத்தினின்று தோன்றியவன் என்பது பொருள். திருமால் மனத்தினின்று தோன்றியவன் மன்மதன். ஆசை தோன்றுமிடம் மனம்தானே?

''தம்பி! தேவர்கள் துயர்தீர நீ போய்ச் சிவபெருமான் மீது பாணம் போட்டுப் பார்வதி அம்மையாரை அவர் மணந்து கொள்ளும்படி விரக தாபம் உண்டாக்குவாய்'' என்று பிரம்மன் உத்தரவிட்டார்.

மன்மதன் பதறிப்போனான். சிவபெருமானின் மோன நிலையை அகற்றவேண்டும் என்ற சொல்லே மன்மதனின் உள்ளத்தைச் சுட்டுவிட்டது.

"அண்ணலே! எவ்வளவு கொடியோரானாலும் தம்மிடம் வந்துவிட்டால் உய்யும் வழியைச் சொல்லுவது பெரியோர்க்கு அழகு, ஆனால் அறிவிற் சிறந்த தங்களை நாடி வந்த என்னிடம் தங்களுக்குச் சிறிதும் கருணை இல்லையா? பங்காளியாகிய என்னைத் திரும்பி வராதபடி அனுப்பிவிட்டு நீங்களே தேவலோகத்தைச் சுகமாக ஆளலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அண்ணா! நான் உலகத்தையெல்லாம் மயக்குவேன். என்னைப் பெற்ற தந்தை நாராயணரையும் பிருக்தையிடம் மயல்கொள மயக்கியிருக்கிறேன். திலோத்தமையைக் கண்டு விரும்பும்படி உங்களையே மயக்கியிருக்கிறேன். இந்திரனை மயக்கி அகலிகை மீது ஆசை கொள்ளச் செய்தேன். அருணன் பெண் வடிவம் எடுத்த போது சூரியனை அந்தப் பெண் மீது ஆசை கொள்ளச் செய்தேன். சந்திரனைத் தாரையின்பால் காமம் கொள்ளச் செய்து புதன் என்ற புதல்வன் தோன்றச் செய்தேன். பல முனிவர்களின் தவ வலிமையை இமைப் பொழுதில் மயக்கி என் வசப் படுத்தினேன். என் கணைக்குத் தப்பியவர்கள் மூவுலகிலும் யாரும் இல்லைதான். ஆனாலும்... சிவபெருமானை—துறவிகளின் தெய்வமான சிவபெருமானை—எனது கணையால் மயக்க முடியாது. ஏன் முடியாது தெரியுமா?

கையும் நகையும் கதிரார் விழியும்
மெய்யும் தழலாம் விமலன் தனையான்
எய்யும் படிசென் றிடின்இவ் வுயிர்கொண்(டு)
உய்யும் திறமும் உளதோ உரையாய்.

"சிவபெருமானின் கையில் நெருப்பு" சிரித்துப் புரமெரித்த அவரது வாயில் நெருப்பு; கண்ணிலும் அக்கினி; அவரது திருமேனி அக்கினி வடிவம். தழலே உருவான சங்கரனை எதிர்த்து உயிருடன் திரும்ப முடியாது. அண்ணா, இந்தக் கரும்பு வில் சிவன் தந்தது; புஷ்ப பாணம் அவன் தந்தது. இட்டிய மரத்திலா கூர் பார்ப்பது? ஆகவே இந்தக் காரியத்தில் மட்டும் ஏவாதீர்கள்" என்று பலவாறாகக் கூறினான் மன்மதன்.

மன்மதனின் நிலை கண்ட பிரம்மன் சிறிது வருந்தினான். 'தம்பி! நீ சொன்னவை எல்லாம் உண்மைதான். சிவபெரு

மானை வெல்ல யாராலும் முடியாது. எனினும் அவரது நல்லருளால் என் காரியம் இனிது முடியும். நீ இப்போது எம்பெருமானை மயக்கச் செய்வதும் அவன் செயலே.

செம்மாந்து தற்புகழும் தேவர்குழு வும்மருள
எம்மான் பிறன்போல் இருந்தோர் துரும்புநிறீஇ
அம்மா தன்செய்கை அனைத்துமெனக் காட்டினனே
நம்மாலும் முற்றுஞ் சிலவென்கை நாணன்றோ ?

பாடுதிகழ் பாவை பல்லுயிரும் அல்லனவும்
ஆடல்புரிவிப்பான் அருவுருவாய் நின்றபரன்
நாடில் அவனையின்றி நம்மாலொன் றாகவற்றோ
ஏட இதன்நிலைமை இந்நாளும் ஓர்ந்திலையோ.

தருக்குற்றுத் தம்மைத் தாமே புகழ்ந்து கொள்ளுகின்ற தேவருக்கு முன்னே சிவபெருமான் ஒரு யட்சவடிவங் கொண்டு நின்று, ஒரு துரும்பை வைத்தருளினார். அதனை வாயு, வருணன், இந்திரன் முதலிய அனைவராலும் அசைக்க முடியவில்லை. அதனால் அவன் அருள் இன்றி துரும்பும் அசையாது; எல்லாம் அவன் செயலே என்பதைக் காட்டியருளினார். ஆதலால் நம்மால் ஒன்று நிகழும் என்று எண்ணுவது நாணத்துக்கு இடமாகும்,

அருவாகவும் உருவாகவும் நின்ற சிவபெருமான் பாவையை ஆட்டுவதுபோல் எல்லாவுயிர்களையும் உலகங்களையும் ஆட்டுவிக்கின்றான், அப்பரமனுடைய அருளையின்றி நம்மால் ஒன்றும் ஆகாது; மன்மதனே! இதனை இன்னும் நீ ஆராயவில்லையோ ?

எந்தவகையினாலும், ஒருவன் ஒருவர்க்கு ஒரு உதவியைத் தன்னால் முடிந்ததனைத் தானே புரிதல் உத்தமம்.

சொன்ன பிறகு புரிதல் மத்திமம். சொல்லியும் பன்முறை மறுத்துத் தாமதித்துப் புரிதல் அதமம்.

என்னும் ஒருதவி யாதொருவன் யார்க்கெனினும்
தன்னால் முடிவதெனில் தானே முடித்தல் தலை
சொன்னால் முடித்தல் இடையாகும் சொல்லுகினும்
பின்னால் மறுத்துப் புரிதல் கடைப் பான்மையதே.

மன்மதா! தேவர்களின் நன்மைக்காகத்தான் உன்னைப் போகச் சொல்கிறேன். நீ போய்ச் சிவபெருமானுல் உயிரிழந்தால் அது தேவருக்காகச் செய்த பெரிய தியாகம் அல்லவா? துன்பத்திலாழ்ந்து கிடப்பவர்கள் "உதவி செய்" என்று வந்தால் அவர்களின் துயரைப் போக்காமல் தன்னுயிர் பெரிது என்று எண்ணியிருப்பது தருமமாகுமா? விருத்திராசுரனை வதைக்கும் பொருட்டு, ததீசி முனிவர் தம் முதுகெலும்பைத் தந்து உயிரிழந்த செய்தியை நீ கேட்டதில்லையா? பாற்கடலில் வடவாமுகாக்கினி போன்ற விஷம் வந்தபோது நம்மையெல்லாம் காப்பாற்றுவதற்காக நாராயணர் அந்த விஷத்தின் எதிரில் கணப்பொழுது நின்று தமது வெண்மையான திருமேனியைக் கருமையாக்கிக் கொண்டதை நீ அறிந்ததில்லையா? சூரபன்மனுல் தேவர்கள் அனைவரும் வருந்திக் கொண்டிருக்கிறோம், இத்துயரைப் போக்கக் குமரக் கடவுள் தோன்றுவார் என்று சிவபெருமான் கூறியிருக்கிறார். குமரக் கடவுள் அவதாரத்துக்காக நீ பஞ்சபாணங்களுடன் சிவபெருமானிடம் போகத்தான் வேண்டும்" என்று பிரம்மன் மீண்டும் மீண்டும் தூண்டிக் கூறினர்.

மன்மதன் மீண்டும் மீண்டும் மறுத்தான். பிரம்மனுக்கு ஆத்திரம் வந்தது. "மன்மதா! நான் சொன்னபடி செய்தால் உயிர் பிழைப்பாய். செய்கிறாயா, சாபம் தரட்டுமா? உனக்கு எது வேண்டும் சொல்" என்றார்.

மன்மதன் சிந்தித்தான். பிரம்மனுல் அழிவதைவிடச் சிவபெருமானுல் அழிந்தாலே உய்வதற்கு மார்க்கம் உண்டு என்ற முடிவுக்கு வந்தான்.

"நல்லது அண்ணு! போய்வருகிறேன்...இல்லை...போகிறேன். ஆனுல் திரும்பி வரமாட்டேன்" என்று கூறிப் புறப்பட்டான்.

மன்மதன் தன் அரண்மனைக்குச் சென்றான். நன்றாக அலங்காரம் செய்து கொண்டான். கரும்பும், அரும்பும், சுரும்புமே அவனது ஆயுதங்கள். தாழம் பூ அவனுக்கு உடைவாள், (புஷ்பங்களில் தேன் உண்டு. புஷ்பம் கட்டுகிறவர்களின் கைகளில் அந்தத் தேன் பட்டுப் பட்டு விறப்பு

ஏற்படும். அந்த நைப்புத் தன்மையை மாற்றச் சாம்பலைத் தொட்டுக்கொள்வார்கள். தாழம்பூவில் ஒருவிதமான மகரந்தச் சாம்பல் இருக்கிறது. அதனால்தான் புஷ்ப பாணங்களை விடுகிற மன்மதன் அதனை உடைவாளாக வைத்திருக்கிறான்.) இந்த ஆயுதங்கள் அகிலாண்டம் முழுவதையும் அடிமைப்படுத்தக் கூடியவை. அவனுக்குக் குடை சந்திரன்; சமுத்திரம் நல்ல முழவு; தேர் தென்றல். அந்தப் பரிவாரங்களுடன் புறப்பட்டான் மன்மதன்.

அவன் தேவர்களை மயக்கும்போது புஷ்ப வில்லில் புஷ்ப பாணம் விடுப்பான். மனிதர்களை மயக்கும்போது கரும்பு வில்லில் புஷ்ப பாணம் விடுப்பான். அசுரர்களிடம் போகும்போது இரும்பு வில்லில் புஷ்ப பாணம் விடுப்பான்.

மன்மதன் புறப்படுவதை ரதி பார்த்தாள். "சுவாமி! எங்கே போகிறீர்கள் ?" என்று கேட்டாள்.

"சிவ, சிவ! நீயும் அபசகுனத்தை உண்டாக்கினாயா ? என் அண்ணாவின் பிடிவாதமான உத்தரவுப்படி சிவபெருமான் மீது போருக்குப் புறப்படுகிறேன்" என்று மன்மதன் கூறினான்.

ரதி துணுக்குற்றாள். "சுவாமி! சிவபெருமான்மீது போருக்குப் போய்த் திரும்பி வந்தவர் உண்டா" தாங்கள் தனித்துப் போக வேண்டாம். நானும் உங்களுடன் வருகிறேன்" என்று புறப்பட்டாள் ரதி.

ரதியும் மன்மதனும் தங்கள் பரிவாரங்களுடன் கயிலை மலைக்குச் சென்றனர், கயிலையைக் கண்டதும் மன்மதன் தேரை விட்டிறங்கினான்; தன்னுடன் வந்த பரிவாரங்களை அங்கேயே விட்டுவிட்டு ரதிதேவியை அழைத்துக்கொண்டு வில்லும் அம்புமாய் கயிலை மலைமீது ஏறினான்; கரும்பு வில்லை வளைத்து மலர்க்கணை பூட்டி அங்கிருந்த பறவைகள் மீதும் விலங்குகள் மீதும் விடுத்துக் காம இச்சை உண்டாக்க நினைத்தான். கீழக் கோபுர வாயிலில் இருந்த நந்தியெம்பெருமான் மன்மதனின் எண்ணத்தை அறிந்து ஆத்திரங் கொண்டார்; 'உம்ம்ம்' என்று சினந்து ஹுங்காரம் செய்தார். அந்த ஒலி

யைக் கேட்ட மன்மதனுடைய பாணங்கள், பறவைகள் மீதும் விலங்குகள் மீதும் செல்லாமல் ஆகாயத்திலேயே நின்று விட்டன. நந்தி தேவர் முன் சென்று அவரது காலில் மதனன் விழுந்தான்.

காவல்காரரிடமே காதல் தெய்வத்தின் காரியம் இயலவில்லை என்றால் யஜமானனைப் பற்றிக் கேட்க வேண்டுமா? மதனன் நடுங்கியவாறு, "நந்தியெம்பெருமானே! தேவர்களின் துயர் துடைக்கும் பொருட்டு பிரம்மதேவர் உத்தரவுப்படி சிவபெருமானிடம் வந்திருக்கிறேன்" என்றான்.

"அப்படியானால் மேலக் கோபுர வாயில் வழியாகப் போ" என்றார் நந்தி.

மன்மதன் நந்தி தேவரை வணங்கி விடை பெற்றுக் கொண்டு மேலக் கோபுரவாயிலின் உள்ளே, தூங்குகின்ற புலியை எழுப்பும் மானைப்போல் சிவபெருமானிடம் சென்றான். நீறு பூத்த நெருப்புப்போல் இருக்கும் இறைவன் தென்திசை நோக்கி மோனத் திருக்கோலத்தில் அமர்ந்திருந்ததைக் கண்ட மன்மதன் நடுங்கினான். அவன் உடல் எல்லாம் வியர்த்தது. கையில் வைத்திருந்த வில் அம்புகளுடன் களைத்துக் கீழே விழுந்தான். ரதிதேவி மன்மதனைத் தன் கரத்தால் தாங்கி, ஆறுதல் கூறித் தேற்றினாள். மன்மதன் களைப்பு நீங்கி எழுந்தான், "ஈசனைக் கண்டவுடனேயே உயிரை இழந்தவன் போலாகி விட்டேனே! இனி எம்பெருமானை எதிர்த்துப் பாணம் விடுத்தால் உய்ய முடியுமா? இன்னும் சிறிது நேரத்தில் சிவபெருமானின் நெற்றிக் கண் பார்வையால் வெந்து அழியப் போகிறேன். உரலில் தலையைக் கொடுத்து விட்டு உலக்கைக்குப் பயந்தால் முடியுமா? விதியை யாராலும் வெல்ல முடியாது. இறைவன் திருவுள்ளம் எப்படியோ, அப்படியே நடக்கட்டும்" என்று மன்மதன் தனது வில்லை வளைத்து நாணேற்றிக் கண்ணுதற் கடவுளை அணுகினான்.

அங்கே, இந்திரன் மனோவதி நகரத்துக்குச் சென்றான். அங்கிருந்த பிரம்ம தேவரை வணங்கி, "எம்பெருமான் மீது மன்மதனைத் தனித்து ஏவி விட்டீர்களே. அவன் போர்த்

திறத்தைப் பார்க்க நாமும் செல்லுவோம்" என்று வேண்டிக் கொண்டான். பிரம்மன், இந்திரன் முதலிய தேவர்கள். மன்மதன் மலர்க்கணை விடுப்பதைக் காணப் புறப்பட்டுக் கயிலை வந்தடைந்தனர். கயிலை மலையின் ஒரு புறத்தே அவர்கள் சிவபெருமானைத் துதித்துக் கொண்டிருந்தார்கள்.

சிவபெருமான்மீது குறி வைத்து ஐந்து மலர்க் கணைகளை விடுத்தான் மன்மதன். அந்தக் கணைகள் எம்பெருமான் மீது பட்டதும், நெற்றிக் கண்ணைச் சிறிதே திறந்து பார்த்தார்.

அவ்வளவுதான்! வெல்ல வந்தவன் வெந்து போனான். பெருமானின் பார்வையிலிருந்து எழுந்த தீ மன்மதனின் உடலை எரித்தது. அதனால் உண்டாகிய புகை கயிலை மலை முழுவதையும் சூழ்ந்தது. மன்மதன் சாம்பலாகி விட்டான்.

விட்டவெம் பகழி யைந்தும் வியத்தகு விமலன் மீது
பட்டலுஞ் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்த லோடும்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற்
சுட்டது கயிலை முற்றுஞ் சூழ்புகை பரவிற் றன்றே.

மதனன் ஒருவன் எரிந்து தோன்றிய புகை கயிலை முழுவதையும் சூழ முடியுமா என்று வியக்கவேண்டாம். சின்னஞ் சிறு அணுவை ஆயுதத்தால் சிதைக்கும்போது எழும் புகைக் கொண்டல்கள் எவ்வளவு பரிமாணம் வியாபிக்கின்றன? இந்த அணு ஆயுதத்தைக் காட்டிலும் கொடிய ஆசை ஆயுதமல்லவா அனங்கன்?

எல்லாருக்கும் ஆசை உண்டாக்குவது மன்மதனுடைய வேலை. சிவபெருமான். தாம் ஆசையை அறவே களைந்ததோடு மட்டுமின்றி, ஆசையை அனைத்துலகுக்கும் உண்டாக்கும் அதிதேவதையையே அழித்து விட்டார்.

காமன் எரிந்தபோது எழுந்த புகை. அரி அயனாதி தேவர்கள் பாற் கடலைக் கடைந்த சமயம் ஆலகால விஷம் தோன்றியதைப் போலிருந்ததாம். அது கண்ட நந்தி தேவர் 'மன்மதன் எரிந்துவிட்டான்' என்று தம்மைச் சூழ்ந்திருந்த கணங்களிடம் கூறினார். "சிவபெருமானின் நெற்றிக் கண் மன்மதனைச் சுட்டது என்று நினைக்காதீர்கள். கருணை மூர்த்தி

யான அவரை மலர்க்கணையால் மயக்கிவிடலாம் என்றெண்ணிய மறச் செயலே சுட்டுவிட்டது. ரதிதேவி பதியை இழந்த சோகத்தால் வருத்தமுற்று எம்பெருமானிடம் வேண்டிக் கொள்வாள். கண்ணுதற் கடவுள் மன்மதனை மீண்டும் எழுப்பித் தருவார். இந்தக் காட்சியை நீங்கள் பாருங்கள்'' என்று முக்காலமும் உணர்ந்த நந்தி தேவர், சுரகணங்களுக்குக் கூறினர்.

முப்புரத்தை எரித்த முக்கட்பெருமான் தமது அடியார் மூவரையும் எரிக்காதுவிட்டது போலத் தென்றல் தேருடைய மன்மதனை எரித்த எம்பெருமான் ரதி தேவியை எரிக்கவில்லை. சிவபெருமான் மன்மதனை எரித்துவிட்டு முன்போலவே மோன நிலையில் வீற்றிருந்தார். சிவபெருமானின் நெற்றிக் கண் மன்மதனை எரித்தது நிக்ரஹ சக்தியைக் காட்டுகிறது. இதே நெற்றிக்கண் முருகரைத் தோற்றுவித்து, அரக்கரை அழித்து நல்லோரை வாழ்விக்கிறது. இது அநுக்கிரக சக்தியைக் காட்டும். மாரனை அழித்த அதே கண்கள்தாம் குமாரனைத் தந்தருளின.

ரதிதேவி துயரக்கடலில் ஆழ்ந்தாள். அவள் கண்களிலிருந்து வழிந்த நீர் ஆறுபோல் ஓடிற்று. அவள் உடல் வியர்த்தது; ஆவி ஒடுங்கியது. "பிராணபதி! பிராணபதி!'' என்று கதறிக் கீழே விழுந்தாள்.

செம்பதுமை திருக்குமரா! தமியேனுக்(கு)
ஆருயிரே! திருமால் மைந்தா!
சம்பரனுக் கொருபகைவா! கன்னல்வரிச்
சிலைபிடித்த தடக்கை வீரா!
அம்பவளக் குன்றனைய சிவன்விழியால்
வெந்துடலம் அழிவுற்றாயே!
உம்பர்கள்தம் விழியெல்லாம் உறங்கிற்றோ?
அயனாரும் உவப்புற் றாரோ?

"திருமகள் பெற்ற செல்வப் புதல்வரே! என் ஆருயிரே! 'மன்மதனும் ரதியும்போல்' என்று உலகத்தார் ஒற்றுமைக்கு நம்மைச் சொல்வார்களே! அப்படியிருந்தும் சிவபெருமான் மீது போருக்குச் செல்லவேண்டாம் என்று நான் சொன்ன

போது கேட்கவில்லையே! கரும்பை வில்லாகக் கொண்டு இரும்பையும் உருக்கிய தாங்கள் கடைசியில் கருணைமூர்த்தியான கயிலைநாதரின் நெற்றிக்கண் பட்டு இறந்துவிட்டீர்களே!'' என்று கதறினாள் ரதி.

மறைந்தவர்களின் உடலையேனும் பார்த்துத் துக்கத்தை முழுவதும் வெளிப்படுத்தும் பாக்கியம் கூட ரதிக்கு இல்லை; அவன் பஸ்பமாகிவிட்டான். இதை எண்ணி, ''வெந்துடலம் அழிவுற்றாயே!'' என்று கதறினாள்.

''சுவாமி! சிவபெருமான் மீது போருக்குப் போ', போ'' என்று உங்களைப் பிடித்துத் தள்ளினார்களே அந்தத் தேவர்கள் உம்மை ஈசன் எரித்தபோது எப்படிப் பார்த்துக் கொண்டிருந்தார்களோ? 'தொலைந்தான் தம்பி; பங்காளி பங்கு கேட்கமாட்டான்' என்று உங்கள் அண்ணா பிரம்மதேவருக்கு உவப்பாக இருந்திருக்கும்.

''சுவாமி! நீங்கள் அலங்காரம் செய்துகொண்டு நிற்கும் பொழுது உங்களைக் கண்டு விம்மிதம் அடைவேனே! 'மன்மதனைப் போன்ற அழகு' என்று அழகுக்கு உங்களை யல்லவா இந்த உலகம் சொல்லுகிறது? உங்களுடைய மலை போன்ற தோள்களைத் தழுவிக் கொண்டிருந்த நான், அன்பு பொழியும் உங்கள் திருமுகத்தை இனி எந்தக் காலத்தில் பார்ப்பேன்? போன ஜன்மத்தில் ஒற்றுமையாக வாழ்ந்த கணவன் மனைவியரிடையே கலகம் செய்து அவர்களைப் பிரித்துவிட்டேன் போலும்! அவ்வினைதான் இப்போது வந்து வருத்துகிறதோ? எதுவும் தெரியாமல் வருந்துகிறேனே சுவாமி'' என்று பலவாருகப் புலம்பினாள் ரதி.

5. மோன நீங்கு படலம்

மன்மதன் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டான்! சிவபெருமான் முன்போலவே மோனத் திருக்கோலத்தில் எழுந்தருளிவிட்டார். தேவர்களின் உத்தேசமெல்லாம் விபர்த்தமாகிவிட்டது; உள்ளம் கலங்கினார்கள். கலக்கத்துக்குப் பின் தெளிவு பிறந்தது; விவேகமுண்டாயிற்று. 'பெருமானின் மோனநிலையை எதிர்ப்பு உபாயத்தினால் மாற்ற

முடியாது; பிரார்த்தனை ஒன்றுலேயே மாற்றமுடியும்' என்று அவர்கள் தெரிந்துகொண்டார்கள்.

கயிலை மலை கோபுரத்தின் அருகே வானவர்கள் நின்று கரங்களைக் கூப்பிப் பிரார்த்திததனர்.

நஞ்ச ருந்தியும் நதியினைச் சூடியும் நடுநெற்றித்
துஞ்சும் வெங்கனல் பரித்தும்வெவ் வலியரைத்
தொலைத்திட்டும்
அஞ்ச லென்றுமுற் காத்தனை இன்றெமக் கருளாயேல்
தஞ்ச மாருளர் தாதையே யல்லது தனயர்க்கே.

"தேவர்களே! வருந்தாதீர்கள்! உங்கள் பொருட்டு, இமயமால்வரையில் தவம்புரியும் மரகதவல்லியை மணந்து துயரைக் களைகின்றோம்" என்று சிவபெருமான் அருள்மொழி கூறினர்.

தேவர்கள் முறையிட்டுக் கொண்டவுடன், சிவபெருமான் அவர்களுக்கு அருள்புரிந்ததைக் கண்ணுற்ற ரதிதேவி. கண்ணுதற் கடவுள்முன் வந்து வணங்கி, "தேவர்கள் தூண்டுதலால்தான் என் பதி மன்மதன் தங்கள்மீது மலர்க் கணைகளை ஏவி அழிந்தார். அவர் செய்த குற்றத்தை மன்னித்து எனக்கும் அருள்புரிய வேண்டும்" என்று முறையிட்டுக் கொண்டாள்,

"குழந்தாய்! பார்வதியை மணம்புரியும் காலத்து மன்மதனை உயிர்ப்பித்துத் தருவோம்" என்று சிவபெருமான் கருணை பாலித்தார். ரதிதேவி எப்பெருமானைப் போற்றிக் கயிலை மலைச்சாரல் சென்று உண்ணமலும் உறங்காமலும் மாதவம் செய்யலானள். மேகத்தின் வரவுக்காக எதிர் நோக்கி ஏங்கும் மயிலைப்போல் உமாதேவியாரின் திருமணத்தை எதிர்நோக்கினள் ரதி.

உமாதேவியும் மேகத்தை நோக்கி ஏங்கும் மயில் போல் ஐயனுக்காக ஏங்கித் தவமியற்றிக் கொண்டிருந்தார். ஏக்கங்களை நீக்கும் காலம் வந்தது. சனகாதி முனிவர்க்கு,

நன்னல மைந்தர்காள் ஞான போதகம்
சொன்னடை யன்றது துயரம் நீங்கியே

இந்நிலை மோனமோ டிருந்து நந்தமை
உன்னுத லெனன உணர ஓதினன்.

"நன்னலம் உடைய புதல்வர்களே! சிவஞானபோதம் சொற்களால் உணர்த்தப்படுவதன்று, துயரம் நீங்கி, மோன நிலையில் இருந்து நம்மை ஒருமை யுணர்வுடன் உன்னுவதே யாகும்" என்று உணருமாறு ஓதியருளினர்.

மோன அநுபவத்தை உணர்த்தி ஞான போதனையை நிறைவு செய்து தக்ஷிணமூர்த்தித் திருக்கோலத்தினின்றெழுந் தார் ஐயன்.

6. தவங்காண் படலம்

கிழ அந்தணர் ஒருவர் அம்பாளின் தவச்சாலைக்குச் சென்ருர். தவச் சாலையைக் காத்து நின்ற பெண்களிடம் "தவம் செய்யும் பார்வதியைப் பார்ப்பதற்காக வந்தேன்" என்று கூறினர்.

சேடிகள் உமாதேவியாரிடம் அவரை அழைத்துச் சென்றனர். கிழ வேதியரது திருநீறு பூசிய மேனியைக் கண்ட பார்வதி, 'இவர் எம்பிரானுடைய அடியவர்' என்று பக்தி யுடன் வழிபாடு செய்தார். அம்பிகையின் தோழி விசயை ஆசனம் ஒன்றைப் போட்டு அதில் அந்தணரை அமர்த்தினள்.

வேதியர் அம்பிகையை அன்புடன் பார்த்து. "சின்னஞ் சிறுவயதில் உன் அழகைக் கெடுத்துக் கொண்டும் உடலை வாட்டிக் கொண்டும் யாரைக் குறித்து மா தவம் செய்கிருய் பெண்ணே?" என்று கேட்டார்.

பார்வதி விசயையைப் பார்த்து, "இவருக்கு நீ விடை சொல்" என்று குறிப்பால் கண் காட்டினர். பத்தினிப் பெண்ணுக்கு நாயகன் பெயரைச் சொல்வதுமட்டும் நாணமில்லை; அவனைப் பற்றிப் பேசுவதே நாணம். தேவி நமது பெண் மக்களுக்கே காட்டிக் கொடுத்த பண்பு இது.

"சுவாமி! பரமேசுவரரைக் குறித்து இவர்கள் தவம் செய்கிருர்கள்" என்று விசயை கூறினள்.

விசயை கூறியதைக் கேட்டவுடன் ஏதோ பெரிய விசித்திரத்தைக் கேட்டாற்போல் தொண்டு கிழவர் குலுங்கக் குலுங்கச் சிரிக்கலானார்.

"சுவாமி! ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று பார்வதி கேட்டார்.

"பார்வதி! மாலும் அயனும் காண முடியாத அந்தக் கடவுள் உன் தவத்துக்கு இரங்கி வருவாரா? சந்திர மண்டலத்திற்கு ஏணி வைத்தால் எட்டிவிட முடியுமா? நீ வீணாக உடல்நலத்தையும், கட்டழகையும் பாழாக்கிக் கொண்டு தவம் செய்யவேண்டாம். உன்னால் சிவபெருமானைக் காண முடியாது" என்றார் அந்தணர்.

அந்தணரின் பேச்சு எம்பிராட்டிக்குக் கோபத்தை உண்டாக்கியது. 'அயனும், மாலும்போல் அகந்தையாலா ஆண்டவனை அடைய விரும்புகிறேன்? அன்பாலல்லவா அவனைப் பெற முயல்கிறேன்? அடியாரின் உள் அன்பினை ஆண்டவன் எப்படி மதிக்கிறான் என்பதை அறியாதவராக அல்லவா இருக்கிறார் இக்கிழவர்?' என்று தேவி எண்ணிச் சினம் கொண்டார், "பெரியவரே! தங்களுக்கு வயதுதான் ஆகியதே தவிர அறிவு முதிர்ச்சி பெறவில்லை! என்னுடைய இத் தவத்தால் சிவபெருமானை அடையமுடியாது என்றால் அதனால் சிவபெருமானையும் விடுவதற்கில்லை; தவத்தையும் விடுவதற்கில்லை. இப்போது நான் செய்யும் தவத்தின் தீவிரம் போதாது என்று கருதி அதனை மேலும் கடுமையாக்குவதே வழி. அதில் என் உயிரே போனாலும் சரி" என்றார்.

முடிவிலாதுறை பகவன்என் வேட்கையை முடியாது
விடுவன் எனினும் தவத்தினை விடுவனோ மிகவின்னம்
கடிய நோன்பினை அளப்பில செய்துயிர் கழிப்பேன்நான்
நெடிது மூத்தலின் மயங்கினை பித்தனோ நீஎன்றாள்.

"இனித் தண்ணீரும் அருந்தாமல் தவம் செய்வேன்; ஒற்றைக் காலில் நின்று தவம் செய்வேன்; பஞ்சாக்கினி நடுவே தவம் செய்வேன்; ஆயிரமாயிரம் பிறப்புக்கள் எடுத்துத் தவம் செய்வேன்" என்று அம்பிகை கூறினார்.

அம்பாளுக்கு எவ்வளவு உறுதி பாருங்கள்! பிள்ளை வரம் வேண்டி விரதம் இருக்கும் ஒருவன் ஐந்து கிருத்திகைகளில் முருகன் கோயிலுக்குச் சென்று வேண்டுதல் நிறைவேறுவிடில் கோயிலுக்குச் செல்லுவதை நிறுத்திவிடுவான். அதற்கும் மேல் சுவாமியையே பழிக்கத் தொடங்குவான்! ஆனால் அம்பாளோ, தவத்தின் பலன் கிடைக்காவிடின், அது முறைப்படி நோன்பு காக்காத தம் தவறே எனக் கருதினர்!

“பெண்ணே! அது சரி, பரமேசுவரனை நோக்கித் தவம் செய்கிறுயே, என்ன வரம் கேட்கப் போகிறுய்?” என்று அடுத்தபடியாகக் கேட்டார் அந்தணர்.

“திருமணம்......” என்று வெட்கத்துடன் கூறினர் அம்பிகை.

“பைத்தியக்காரப் பெண்!” என்று ஏளனமாகச் சிரித்தார் அந்தணர். “பெண்ணே! திருமணம் புரிந்து கொள்வதற்கு நல்ல மணப் பிள்ளையைத் தேர்ந்தெடுத்தாய்.

ஆடை தோல்விடை ஏறுவ தணிகலம் அரவென்பு
கேடில் வெண்டலை மாலிகை கேழலின் மருப்பின்ன
ஓடுகொள்கலம் ஊண்பலி வெய்யநஞ் சுலப்புற்றோர்
காட தேநடம் புரியிடம் கண்ணுதற் கடவுட்கே.

சிவமூர்த்திக்கு உடை தோல்; வாகனம் மாடு; ஆபரணங்கள் பாம்பு. எலும்பு, தலைமாலை, பன்றிக் கொம்பு, உண்கின்ற ஏனம் மண்டையோடு: உண்பது நஞ்சு. நடமாடுகின்ற இடம் மயானம்.

வேய்ந்து கொள்வது வெள்ளெருக் கறுகுநீர் கொன்றை
பாந்தள் நொச்சியே மத்தமென் றினையன பலவுண்டால்
சாந்தம் வெண்பொடி சூலமான் மழுத்துடி தழலங்கை
ஏந்துகின்றது பாரிடம் சூழ்படை இறையோற்கே.

சிவமூர்த்தி சூடிக்கொள்கின்றவை வெள்ளெருக்கு, அறுகம்புல், நதி, கொன்றைமலர், பாம்பு. நொச்சித்தழை, ஊமத்த மலர் முதலியன; பூசிக்கொள்வது சாம்பல், கரங்களில் தாங்கி யிருப்பவை மழு, உடுக்கை, நெருப்பு. அவருடைய சேனைகள் பூதகணங்கள் ஆகும்.

முறைபடுசுருதி யெல்லாம் மொழியினும் அதுவேசார்வா
உறுகில ராகிப் பொல்லா ஒழுக்கமே கொண்டு முக்கண்
இறைவனை இகழ்ந்து முத்தி எய்திடா துழல முன்னாள்
மறையவர் பெற்ற சாபம் நின்னையும் மயக்குறாதோ.

என்று பலபடியாக அடுக்கிக் கொண்டே பேனார்.

சிவ அபசாரத்தைத் தாங்காமல்தான் தாட்சாயணி உடல் துறந்து பார்வதியாகப் பிறந்தார். இந்த மறுபிறவியிலும் சிவ நிந்தையையே கேட்க நேர்ந்த தேவி துடி துடித்தார்.

முறையுடன் கூடி வேதங்கள் யாவும் சிவமே பரம் பொருள் என்று அறுதியிட்டு உறுதியுடன் உரைத்தும், அதனைச் சார்பாகக் கொள்ளாது பொல்லாத ஒழுக்க முடையராகி சிவபிரானை இகழ்ந்து, முத்தியுறாது உழலு மாறு, கௌதமர் ததீசி பிருகு முதலிய பெரியோர்கள் மறைய வருக்குத் தந்த சாபம் உன்னையும் மயக்காது விடுமோ?

"சுவாமி, ஏதோ விபூதி பூசியிருக்கிறீர்கள், உருத்தி ராட்சம் அணிந்திருக்கிறீர்கள், வயதில் பெரியவராயிருக் கிறீர்கள், என மரியாதை செய்தேன். இனி உம்மிடம் பேசுவதும் பிழை. பொய் வேடம் பூண்டவரே! விரைவில் இங்கிருந்து போய்விடும்" என்று பார்வதி ஆத்திரத்துடன் கூறினாள்.

அந்தக் கிழ அந்தணரா போவார்? முன்னிலும் கொடிய வார்த்தைகளைக் கூறினார் அவர். "பெண் பாவாய்! நான் உன் மீது மையல் கொண்டு மறை விதிப்படி மணக்கவே வந் தேன். என்னை 'இங்கிருந்து போ' என்று சொல்லுவது முறை யாகுமா?" என்றார்.

பார்வதி இரு செவிகளையும் பொத்திக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். அவரைப் போகச் செய்ய முடியாது என்று கண்டபின், "நீர் இங்கிருந்து போகாவிட்டால் நான் போகி றேன்" என்று சொல்லிக் கொண்டே அவ்விடத்தை விட்டு எழுந்தாள்.

பார்வதியை அவர் விடவில்லை! எப்படி விடுவார்? விடுபவராயிருந்தால் தமது மோன நிலையை விடுத்துக்கைலாயத்திலிருந்து இவ்வளவு தொலைவு வந்திருப்பாரா? ஆம், முன்னைப் பழம் பொருட்கு முந்தைய சிவபெருமானேதான் அந்த முதியவர். 'வேதியா, வேதகீதா' என்று போற்றப்படும் சோதியன்தான் அந்த அந்தணர். வேதிய வடிவத்தை நீக்கினர். சிவகணங்கள் சூழ்ந்து துதிக்க ரிஷப வாகனத்தில் காட்சி கொடுத்தார்.

சிவபெருமானைக் கண்ட தேவியின் ஆனந்த அநுபவத்தை நாம் எப்படி வருணிக்க இயலும்? அன்புப் புயலில்அகப்பட்ட கொடியாக அவரது திருமேனி நடுங்கியது. நாணத்துடன் பலமுறை ஆண்டவனை வணங்கினர். "எம்பெருமானே! தாங்கள் தாம் வந்து சோதித்தீர்களா? தேவரீரது மாயையை உணர முடியவில்லையே!" என்று அதிசயித்துக் கூறினர்; உலகையெல்லாம் மாயை வயப்படுத்தும் மகாதேவி. "சிவ அபவாதம் செய்யலாகாது என்று சொல்லிய நானே தங்களை நிந்திததுப் பேசிவிட்டேனே?" என்று உள்ளம் உருகிக் கூறினர்.

"அலகிலா உணர்வால் எட்டா வாதிநின் மாயை தேறேன்
புலனிலாச் சிறியேன் நின்னை யிகழ்ந்தவா பொறுத்தி
யென்ருள்"

"பார்வதி! நீ என்னிடம் சினந்து பேசியவற்றையெல்லாம் துதி என்றே கொண்டேன். உன்னைத் திருமணம் செய்து கொள்ள நாளை வருவேன். நீ இனியும் தவம் செய்ய வேண்டாம்" என்று கூறிச் சிவபெருமான் மறைந்து விட்டார்.

பார்வதிக்குச் சிவபெருமான் காட்சியளித்ததைத் தோழிகள் சிலர் இமவானிடம் தெரிவித்தனர். இமவான் மிக்க மகிழ்ச்சி கொண்டு தன் மனைவி மேனையுடன் தவமகளின் தவச்சாலைக்குச் சென்று பார்வதியை அரண்மனைக்கு அழைத்து வந்தான்.

7. மணம் பேசுபடலம்

[சாமானிய மானுடர்கள் இயற்கை வேகங்களை விலங்கு போல் வெறித்துத் திரிய விடாமல் தரும சாஸ்திர வழிப்படி கட்டுப்பாட்டில் அடக்கி வாழத் திருமண வாழ்வே உபாயம். அவ்வாறு மனிதர் செம்மையான வாழ்வு வாழ வேண்டும் என்று காட்டவே எம்பெருமான் அன்னையைத் திருமணம் செய்து கொள்ளத் திருவுள்ளம் கொண்டார். மாணவனுக்குக் கற்றுத் தருவதற்காக ஆசிரியர் எழுத்துக்களைக் கூட்டிப் படிப்பதால் அவருக்கே படிக்கத் தெரியவில்லை எனலாமா? அதே போல், நம் பொருட்டுத்தான் சிவபெருமான் பார்வதி தேவியை மணந்து காட்டினாரேயன்றி மையலும் பௌதிக உறவும் வேண்டியல்ல. தேவியார் விநாயகனையோ, ஷண்முகனையோ கருத்தரித்துப் பெறுர் என்று இதுவரை வரலாறு இல்லை. சிவபெருமான் என்றைக்கும் பிரம்மசாரி. எம்பிராட்டி என்றைக்கும் கன்னி. ஐயன் ஞானகரன்; தேவி ஞானாம்பாள்.]

இப்படிப்பட்ட இருவரில் இன்று சிவபெருமான் மணமகன்: பார்வதி மணமகள், மணமகனின் உறவினர் போய்த் தானே பெண் பேச வேண்டும்? சிவபெருமான் சப்தரிஷிகளை அந்த ஸ்தானத்தில் எண்ணினார். இதிலிருந்து அவர்களின் பெருமை தெரிகிறது. சப்தரிஷிகள் இமயவெற்படைந்தனர்.

“அகிலாண்ட கோடியீன்றும் கன்னியென மறை பேசும் மரகதவல்லியை மூவர்க்கும் முதல்வராகிய முக்கட் பரமர்க்கு மணம் செய்து கொடுத்து என்னையும் அடிமையாகத் தருவேன்” என்று இமவான் அவர்களிடம் கூறினான்.

ஆனால்...அவன் அருகில் நின்ற மேனையின் தாயுள்ளம் பார்வதியைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று இட்டிமுட்டி வந்தபோது தீயங்கியது. “கல்யாணத்துக்குத் திடீரென்று ஒப்புக் கொள்ளக் கூடாது. அவசரமில்லாமல் நிதானமாகத்தான் இந்த விஷயத்தில் முடிவு செய்ய வேண்டும்” என்று இமவானிடம் கூறினாள்.

இமவான் காரணம் கேட்ட பின் அவளால் கூருது இருக்க முடியவில்லை.

“அவர் முன்பு தட்சன் மகளை மணந்த பின்பு, ஆளை விட்டு மாமனுர் தலையை அறுத்துவிட்டார் என்று பேசிக் கொள்கிருர்களே!” என்று இழுத்தாள். அவளது கற்பு அப்படிப் பேசிற்று.

ஏழு முனிவர்களும் மேனையை நோக்கி, “பரமேசன் கருணமூர்த்தி. தட்சன் சிவநிந்தை செய்ததால் அவன் தலையை அறுத்தார். வழிபடுவோர்க்கு அறக் கருணையும் அல்லாதார்கு மறக் கருணையும் செய்பவர் அவர். பரம பக்தனுன இமவானைப்பற்றி ஏன் கவலை?” என்று ஆறுதல் கூறினுர்கள்.

“தவசிரேஷ்டர்களே? உமாதேவியைத் திருமணம்செய்து கொள்ள விரைவில் வரும் வண்ணம் சிவமூர்த்தியிடம் தெரிவியுங்கள்” என்று இமவான் கூறினுன்.

ஏழு முனிவர்களும் திருமணத்துக்கு இமவான் இசைவு தந்ததைப் பெருமானிடம் தெரிவித்தபின் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

8. வரைபுனை படலம்

இமவான் தேவ தச்சனை வரவழைத்து “நம் ராஜகுமாரி பார்வதியின் திருமணத்துக்காக நமது தலைநகரம் ஔஷதிப்ரஸ்தத்தை இந்திரலோகம்போல் அலங்கரிப்பாயாக என்று கட்டளையிட்டான.

தேவதச்சன் இமயமலையின் மேல் பல கோபுரங்களையும் மன்றங்களையும் நிலைத் தேர்களையும், வீதிகள்தோறும் பூம் பந்தர்களையும் உண்டாக்கினுன். வாழைகளும் கமுகுகளும் தோரணங்களும் நாட்டினுன்.

பூந்தடாகம், பொற்சிகரம் முதலியவற்றை உண்டாக்கினுன். ஒருபுறத்தே பதினுயிரம் யோசனைப் பரப்பில் ஒரு புரிசையை உண்டாக்கி அதன் நான்கு வாயில்களிலும் நான்கு கோபுரங்களை அமைத்தான். மையத்தில் செம்பொன்னுலா

கிய திருமண மண்டபம் அமைத்தான். பார்வதியும் பரமேசுவரனும் எழுந்தருளுவதற்காக இந்திர நீலக் கற்களினுல் ஒரு சிம்மாசனமும், மற்ருேர் வீற்றிருக்க ஆசனங்களும் அமைத்தான்.

நகர் முழுவதும் கவினுற அலங்கரிக்கப்பட்டு நறுமணம் கமழும் மலர்கள் தூவப்பட்டன.

தேவர் கூட்டங்களும் முனிவர் கணங்களும் இமய மலையில் எள் விழ இடமின்றிக் கூடின: மேரு முதலிய மலைகளும், கடல்களும், நாகங்களும், திக்கு யானைகளும் பிறவும் வந்தன. இலக்குமி, சரஸ்வதி, இந்திராணி, முனி பத்தினிகள் துர்க்கை, .காளி, சப்த நதிகள். அரம்பையர் முதலானேர் தேவிக்கு மணக்கோலம் செய்தனர்.

இமவான் தன் சுற்றத்தாருடன் திருக் கயிலாய மலை சென்று, நந்தி தேவர் அனுமதியுடன் உள்ளே சென்ருன். சிவபெருமானை வணங்கி, "எம்பெருமானே! அகிலாண்ட நாயகியைத் திருமணங் கொள்ளத் திருவுளம் கொண்டருளினீர்கள். சோதிட வல்லுநர்கள் மங்கல தினம் எனக் கூறிய பங்குனி உத்திரநாள் இன்றேயாகும். உமையைத் திருமணம் புரிய இன்றே என் நகருக்கு எழுந்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். "வரம்பில்லாத கணங்கள் சூழ நாம் இப்பொழுதே உன்னிடத்துக்கு எழுந்தருளுவோம். நீ முன்னே செல்வாயாக" என்று கூறிச் சிவபெருமான் இமவானை அனுப்பினர்.

9. கணங்கள் செல் படலம்

"நம்முடைய திருமணக் கோலத்தைத் தரிசிக்கும் பொருட்டு உருத்திர கணங்களையும், திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களையும், ஏனையோரையும் இங்கே வரும்படிசெய்வாய்" என்று சிவபெருமான் நந்தி தேவரை நோக்கிப் பணித்தருளினர். நந்திதேவர் நினைத்த மாத்திரத்தில் காலாக்கினி ருத்திரர், கூச்மாண்டேசர், ஆடகேசர், விரபத்திரக் கடவுள், மகா சாத்தனர். ஏகாதச ருத்திரர்கள், உருத்திர கணங்கள், பவர் முதலிய அஷ்ட மூர்த்திகள்

ஆகியோரும், குண்டோதரன், கண்டாகன்னன், பிருகி, பானுகம்பன், சங்குகன்னன் முதலிய சிவபூத கணத் தலைவர்களும், அவர்களுடைய பல்கோடி பூதங்களும், திருமால், பிரமன், திக்குப்பாலகர் முதலிய தேவர்களும், சூரியன், சந்திரன் முதலிய கிரகங்களும், நட்சத்திரங்களும், சப்த மாதர்களும், அஷ்டவசுக்களும், வித்தியாதரரும், முனிவர்களும் பிறரும் ஏழுகடல் திரண்டதென வந்து நின்றனர்.

பிரமதேவர், மணக் கோலத்துக்கேற்ற மணி மகுடம் முதலிய திவ்விய ஆபரணங்களை எம்பெருமான் முன்பூடைத்து வணங்கி நின்று, "எந்தையே! தங்களுக்கு விருப்பும் வெறுப்பும் இல்லை. அடியேங்கள் உய்யும் பொருட்டே திருக் கல்யாணம் செய்து கொள்ள இசைந்தீர்கள். அதேபோல் அடியேங்களின் விருப்பதைப் பூர்த்தி செய்யவே தங்கள் திரு மேனியில் உள்ள பாம்பு, பன்றிக் கொம்பு, சிரமாலை, ஆமை யோடு முதலியவைகளை நீக்கி, இந்த இரத்தினபரணங்களை அணிந்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்தார். பொன்னார் மேனிப் புரிசடைக் கடவுள் புன்முறுவல் கொண்டு திருமேனியில் உள்ள பாம்பு, எலும்பு முதலியன இரத்தின பரணங்களாகும் வண்ணம் திருவுளம் கொண்டார். இறைவன் எண்ணியவுடன் அவைகள் அவ்வாறாயின. அதுகண்ட பிரமன் முதலிய யாவரும் அற்புதமடைந்து அஞ்சலி செலுத் தினர்கள். திரிபுர தகனத்தில் தேவர்கள் சித்தம் செய்த உபகரணங்களை உதறிவிட்டுத் தமது சக்தியாலேயே வென்ற பெருமான் இப்போதும் தேவரின் காணிக்கைக்கும் மேலான அணிகளைத் தாமே படைத்துக்கொண்டார்.

10. திருக்கல்யாணப் படலம்

சிவபெருமான் தமது இருக்கைவிட்டு எழுந்து புறப் பட்டார். நந்திதேவர் துதித்து முன் செல்ல, அருந்தவரும் அமரரும் புகழ, விஞ்சையர் இசைபாட, வேதாகமங்கள் வியந்து துதிக்கச் சிவபெருமான் தமது திருவடிகளைக் கும்போதரன் புயமீது வைத்து, இடபத்தின் மீது ஏறியருளி னார். இக்காட்சியைக் கண்ட அனைவரும் களித்துக் கடல் போல் 'ஹர ஹர' என்று ஆர்த்து அஞ்சலி செய்தனர்.

ஐந்நூற்றெழு கோடி பூதங்கள் சூழ விநாயகர் வந்து வணங்கி முன்னே சென்றருளினார்.

சந்திர சூரியர் தண்ணிழற்குடையையும், வாயு சாமரத்தையும், வருணன் சாந்தாற்றியையும், அமரர்கோன் ஆலவட்டத்தையும் தாங்கி உடன் சென்றனர். பூதங்கள் பற்பல இன்னிசைக் கருவிகளைக் கடல் ஒலிபோல் முழக்கின; இறைவன் ஏவலினாலே அரி அயனாதிஅனைவர்களும் தத்தம் ஊர்திகளின் மேல் புடைசூழச் சென்றனர். சிவபெருமான் திருக்கயிலாய மலையை அகன்று இமவான் நகரை அடைந்தார்.

இமவான் தன் சுற்றத்தாருடன் சுவாமியையும், பரிவாரங்களையும் எதிர்கொண்டு வரவேற்று வணங்கினான். தனது தலைநகரமான ஔஷதிப்பிரஸதத்திற்கு அவர்களை அமைத்தேகினான். இருடிகள் பலர் பூரண கும்பங்களை ஏந்திக்கொண்டு வந்தார்கள்; மகளிர் வட்டமங்கலங்களைக் கொண்டு வந்து காட்டினார்கள், நீராஜனம் சுற்றினார்கள்,

ஐயன் மாப்பிள்ளைக் கோலம் கொண்டு மனம் கவரும் சௌந்தரியத்தோடு வீதி வழியே வந்த விமரிசையைக் கச்சியப்பர் கற்கண்டான கவிதைகளால் வருணிக்கிறார். திவ்விய வஸ்திரமும், திரு ஆபரணங்களும், மணக்கும் சந்தனமும், மாமலர் மாலைகளும் அணிந்து வரும் ஐயனைக் கண்டு இந்த ஆடைகளும், அணிகளும் சாந்துப் பூச்சும், சுகந்தப் பூக்களும் அவரது திருமேனியின் அழகை மறைத்துத் தொலைக்கின்றனவே என்று கண்டோர் வருந்துகிறார்களாம்.

நிறைத்த பூண்களும் நேர்ந்தபொன் னாடை யும்
நறைத்த சாந்தமும் நாண்மலர்க் கண்ணியும்
பிறைத்தி ருச்சடைப் பிஞ்ஞகன் பேரெழில்
மறைத்த தென்று மனம் தளர்வார் சிலர்.

மணக் கோலத்தில் மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்று மாமியார் விரும்புவது இயற்கையல்லவா? மாப்பிள்ளை அழைப்பின்போது மருமகனைக் காணத் துடித்தவாறு உப்பரிகையில் நின்று கொண்டிருந்தாள் மேனை. அங்கே நாரதர் சென்றார்.

"ஊர்வலத்தில் அதோ பூத கணங்களுக்கிடையே சிவப்பாய் வருகிறாரே, அவர்தானே மாப்பிள்ளை?" என்று கேட்டாள் மேனை.

"நன்றாக இருக்கிறது. கள்ளிச் செடியைப் பார்த்துக் கற்பகமா என்று கேட்டாளாம் ஒருத்தி. அவரல்ல மாப்பிள்ளை;' என்றார் நாரதர்.

பூத கணங்களை அடுத்து ஊர்வலத்தில் மற்றொரு திருக் கூட்டம் வந்தது, அந்தக் கூட்டத்தைக் கண்ட மேனை "நாரதரே! அங்கே கூட்டத்தின் மத்தியில் வருகிறாரே, அவர் தானே மாப்பிள்ளை?" என்று கேட்டாள்.

"நன்றாயிருக்கிறது! காடித் தண்ணீரைப் பார்த்து, அது தான் காமதேனுவின் பாலா என்று கேட்டாளாம் ஒருத்தி. அவரல்ல அம்மா! மாப்பிள்ளை. அவர் உருத்திரர்."

அதையடுத்து மற்றொரு திருக்கூட்டம் வந்தது! அந்தக் கூட்டத்தைக் கண்ட மேனை, "நாரதரே! அந்தக் கூட்டத்தில் அதோ வருகிறாரே அவர்தானே மாப்பிள்ளை?" என்று கேட்டாள்.

"மாட்டுக் குளம்பு நீரைப் பார்த்து மகா சமுத்திரம் என்றாளாம் ஒருத்தி. அதுபோல் அல்லவா இருக்கிறது உங்கள் கேள்வி. அவர் மாப்பிள்ளை அல்ல: ஸ்ரீகண்டருத்திரர்"

கடைசியில் சிவபிரானே மாப்பிள்ளைக் கோலத்தில் வந்தார். அவரைப் பார்த்த மேனை, 'இவர்தானே மாப்பிள்ளை?' என்று கேட்கவில்லையாம்; தானாகவே புரிந்து கொண்டாளாம்.

(உண்மையைக் காணுமளவும் எது மெய், எது பொய் என்று சந்தேகம் தோன்றிக்கொண்டே இருக்கும். சத்தியத்தைத் தரிசித்தவுடனே சந்தேகம் மறைந்துவிடுகிறது. உண்மைக்கு அத்தாட்சி வேறெங்கோ இல்லை; அதிலேயே இருக்கிறது.)

திருமணச்சாலை வந்தவுடனே சிவபெருமான் இடபம் விட்டு இறங்கியருளினார். மேனை அரம்பையர்களோடு வந்து எம்பெருமானுடைய இணையடிகளைக் காமதேனுவின்

பாலினல் அபிடேகம் செய்து வணங்கிச் சென்றாள். சிவபெருமான் திருநந்தி தேவர் கொண்டுவந்து வைத்த பாதுகையின் மேல் தமது தங்கத் திருவடிகளை வைத்தார். இரு புறத்தும் திருமாலும் பிரமாவும் மாப்பிள்ளைத் தோழர்களாகக் கை கொடுக்க, அரனார் தம் திருக்கரங்களால் அவற்றைப் பற்றிக் கொண்டார், மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, கணங்கள் ஆரவாரிக்க எம்பெருமான் திருமணக்கோயிலினுட் சென்றார். ஆங்குள்ள அமருகள் அனைத்தையும் திருநந்திதேவர் விளக்கிக் காட்டச் சிவபெருமான் பார்த்து மகிழ்ந்தருளினார்.

பின்னர் எம்பெருமான் திருமண மண்டபத்தினுட் சென்று தமக்கென அமைக்கப்பட்டிருந்த இந்திர நீல மணித் தவிசின் மீது வீற்றிருந்தருளினார். யாவரும் நன்கு காணப் பொது இடத்தில் பெருமான் பொருந்திய அருளை எண்ணிய கச்சியப்பர், மறைகளுக்கு மறைந்து நிற்பவர் எல்லாருக்கும் பொதுவில் எழுந்தருளினார் என்கிறார். அவருடன் அரி, அயன், ஆகண்டலனாதி அமரர்களும், முனிவர்களும் தத்தம் ஆசனத்தில் சூழ்ந்து அமர்ந்திருந்தார்கள்.

பார்வதி—பரமேசுவரன் திருமண வைபவம் காண, எல்லாப் புவனங்களில் உள்ளவர்களும் வந்து கூடினதால் இமய மலை வருந்தி நடுங்கியது. பூமியின் வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தது. தேவர் முனிவர் யாவரும் அதனைக் கண்டு அஞ்சி, சுவாமியிடம் பிரார்த்தித்தனர். எம்பெருமான் புன்னகை புரிந்தார். அகத்திய முனிவரை அழைத்துவருமாறு நந்தி தேவருக்குக் கட்டளை யிட்டார். அகத்தியர் உடனே வந்து வணங்கி நின்றார்.

"அகத்தியனே! எல்லோரும் இங்கு வந்து கூடினதால் வட கோடு தாழ்ந்து தென் கோடு உயர்ந்துவிட்டது. இதனால் சுவர்க்கம் மிகவும் தாழும், மேரு மலையும் நிலை தவறும். இதனைச் சமன் செய்ய நீ உடனே தென்னாட்டில் உள்ள பொதிய மலைக்குச் செல்" எனச் சிவபெருமான் பணித்தார்.

அகத்தியர் உருவில் சிறியவராயினும் உள்ளூற அவ்வளவு பலம் படைத்திருந்தார். ஆயிரம் பொதி பஞ்சின் நிறையை ஒரு சிறு தங்கக் கட்டி ஈடு செய்வதுபோல், ஆன்மாக்கள்

அடங்கலாகப் பிரபஞ்சம் முழுவதற்குமுள்ள நிறையை அகஸ்தியர் ஒருவரே பெற்றிருந்தார். உலகமெங்கும் நிறைந்த உறுபொருளை உள்ளத்தில் வைத்திருந்ததால்தான், இவ்வளவு நிறை பெற்றிருந்தாரோ? அவரது தவத்தின் நிறையோ அது? அல்லது அவர் தந்த தமிழின் நிறையோ?

பெருமான் ஆணையைக் கேட்டு அகஸ்தியர் பெருமை கொள்ளவில்லை. மனம் வருந்தி, "பரம கருணாநிதியே! அடியேன் என்ன குற்றம் செய்தேன்? தங்கள் திருமணக் காட்சியைக் காணவேண்டாமா?" என்று வேண்டினார்.

"நீ சற்றும் தயங்காது பொதியமலை செல். நாம் அங்கு வந்து நமது திருமணக் கோலத்தைக் காட்டுவோம். நீ மகிழ்ந்து தரிசிக்கலாம்" என்று சிவபெருமான் கூற, அகத்தியர் இறைவன் திருவடிகளை வணங்கி, துதித்துத் தென் திசையை நோக்கிச் சென்று பொதியமலையை அடைந்தார். பூமி சமன் ஆகியது. ஆன்மாக்களின் அல்லல் நீங்கியது.

இமவான் உமையை அழைத்து வருமாறு ஏவினான். தேவ மாதர் பணி செய்யப் பார்வதி தேவியார் மண மண்டபம் எய்தினார்.

அங்கது பொழுது தன்னில் அரசன திசைவா லெங்கள்
சங்கரி ஐயை காப்பச் சசியென்பா ளடைப்பை யேந்தக்
கங்கைகள் கவரி வீசக் காளிகள் கவிகை பற்றப்
பங்கய மான்கை பற்றிப் பாரதி பரவ வந்தாள்.

ஐயையாகிய துர்க்கை காக்க, சசியாகிய இந்திராணி தாம்பூலம் தாங்க, வானுலகிலும் மண்ணுலகிலும் பாதாளத்திலும் பாயும் மூன்று கங்கைகள் சாமரம் வீச, காளிகள் குடை பிடிக்க, இலட்சுமி கைகொடுக்க, சரஸ்வதி துதிக்கப் பார்வதி தேவி எழுந்தருளி வந்தார். சிவபெருமானின் திருவடிகளை வணங்கினார்.

"தேவி! நம் பக்கத்தே இருக்கக் கடவாய்!" என்று தேவ தேவன் தேவியைப் பணித்தருள, பார்வதி தேவி எம்பெருமான் பக்கத்தில் எழுந்தருளினார். மேனை கரகத்தினின்று நீர் வார்க்க, இமவான் சிவபெருமான் திருவடிகளை வணங்கி, சந்

தனத்தாலும் நறுமலராலும் பூசித்து. உமா தேவியாரின் கர மலரை இறைவன் திருக்கரத்தில் வைத்து, "அடியேனது புதல்வியைத் தங்கட்குத் தந்தேன்" என்று தாரா தத்தம் செய்தான்.

அரம்பையர் ஆடினர்; சித்தர்களும் கந்தர்வர்களும் தும்புரு நாரதரும் இசை பாடினர்; தேவர்களும் முனிவர் களும் வேதம் ஓதினர். இலட்சுமியும், சரஸ்வதியும் மங்கலப் பாடல் ஓதினர்; பூதர்கள் நானாவித வாத்தியங்களை முழக் கினர்; விண்ணவர் தண்மலர் சொரிந்தனர். இமவான் பசும்பால், நெய், தேன், மா, கதலி, பலா முதலியவற்றை ஒரு பாத்திரத்திலிட்டுத் திருஅமுது செய்யும்படி இறைவனை வேண்டினான். கண்ணுதற் கடவுள் மகிழ்ந்து, 'நாம் இவற்றை அமுது செய்தாற்போல உவந்தோம்; நீ எடுத்துக் கொள்வாய்" என்று தம் திருக்கரத்தினால் தொட்டுத் திரு வருள் புரிந்தார். இமவான் அந்த நிருமாலியத்தைக் கொண்டுபோய், மலர், கந்தம், நீர் இவற்றோடு ஒருபுறத்தில் சேமித்து வைத்தான்.

பிரமதேவர் சிவபெருமானை வணங்கினார். "தேவ தேவ! விண்ணவரும் மண்ணவரும் மண விதியை உணர்தற் பொருட்டு, சர்வலோக நாயகராகிய தேவரீர் அடியேன் சாஸ் திரோக்தமாகத் திருக்கல்யாணம் நடத்திவைக்க அனுமதிதர வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். முக்கண்ணர் முறுவல் செய்து அதற்கு அனுமதி யளித்தார்.

வியாழ பகவான், சுக்கிராச்சாரியர் முதலியோர் அருகே சூழ, மணச் சடங்குகளை நடத்தப் பிரமதேவர் புரோ கிதராக அமர்ந்தார். மணவினைக்கு மஞ்சள் பிள்ளையார் பிடித்துவைக்கவில்லை, சாட்சாத் விநாயகரே வந்து அமர்ந் தார். ஒரு புரட்சிக் கல்யாணம். தாய் தந்தை திருமணத்தில் பிள்ளையே வந்து உட்கார்ந்திருந்தான். என்றுமுள்ளவன் அல்லவா கணநாதன்? அவனைச் சிவகுமாரன் என்றும் உமை மைந்தன் என்றும் சொல்வது அவனது ஞானம், கருணை இவற்றின் பெருமைக்காகவே அன்றோ?

மணவினைச் சடங்குகள் இனிது முடிந்தன. உலகையெல்லாம் கைவிடாது காக்கும் அகிலாண்ட நாயகியை எம்பெருமான் கைப்பற்றினுர்.

தேவர்கள் பூமாரி பொழிந்தனர். இமவான் பொன் மழை பொழிந்தான். பிறகு தேவியை அம்மி மிதிக்கச் செய்து அருந்ததி காட்டி அனுக்கிரகம் புரிந்தார் பகவான். இமவான், சிவ நிருமாலியமாகிய தீர்த்தம், சந்தனம், மலர் முதலியவற்றை அனைவர்க்கும் வழங்கினுன். அனைவரும் அவற்றை உள்ளன்போடு பெற்று உட்கொண்டு அணிந்து பெருமகிழ்வுற்ருர்கள்.

சிவபெருமான் திருமணம் புரிந்த திருக்கோலத்தில் பார்வதி தேவியுடன் வீற்றிருந்தார். கணவனை இழந்த ரதிதேவி, சிவபெருமானிடம் வந்து வணங்கினுள். "சுவாமி! தேவரீர் அம்பிகையோடு கூடி வீற்றிருப்பதால் நான் என் கணவனை அடையுமாறு அருள் புரியவேண்டும்" என்று வேண்டினுள். (அருளைப் பெறுவதற்கு எப்பேர்ப்பட்ட அருமையான சந்தர்ப்பத்தைத் தேடி எடுத்தாள், பாருங்கள்!)

சிவபெருமான், மன்மதன் வந்து தோன்றுமாறு தம் திருவுளத்தில் சிந்தித்து அருள்புரிந்தார். ரதிதேவி எல்லையில்லா மன மகிழ்ச்சி பெற, எரிந்துபோன மன்மதன் மீண்டும் அங்கு தோன்றினுன்.

(நன்மை மட்டுமுள்ள வானுலகைச் சேர்ந்த தேவர்கள் நன்மையிலேயே கவனமாயிருப்பதால் முக்திக்கு முயல்வதில்லை; இறைவனையும் நினைப்பதில்லை. இதற்காகவே அசுரர்களைக் கொண்டு அவர்களைத் துன்புறுத்தி ஆண்டவன் அவர்களைத் தம்பாற் படுத்திக் கொள்வார். மண் உலகிலோ இத்தகைய வெளிப் பகையோடு, உட்பகையாகிய ஆசை முதலிய தீமைகளும் உள்ளன: தீமையை விலக்குவதற்காகத் தெய்வ அருள் நாடப்படுகிறது. அதில் பிறக்கும் ஞானத்தினுல், அதன்பின் தீமை நன்மை இரண்டுக்கும் அப்பாற்பட்ட திரு நிலைக்கு முயற்சி செய்யப்படுகிறது. ஆகவே உலகம் உள்ளளவும் அதிக தீமையும் இருந்து, உலக வாழ்வின் மாயத் தன்மையை நினைவூட்டிக் கொண்டேதான் இருக்கும். இதனுல்

தான் போலும், எரிந்துபோன ஆசைத் தீமையை மீண்டும் எம்பெருமான் உயிர்ப்பித்தார்.)

இறைவனை வணங்கினான் மதனன். "கிருபாநிதியே! அடியேனது குற்றத்தைப் பொறுத்தருள்க" என்று துதித்தான். எம்பிரான் மன்மதனை நோக்கி, "நீ ரதியின் கண்ணுக்குமட்டும் தெரியும் மன்மதனாகவும் மற்றவர்கண்ணுக்குத் தெரியாது அனங்கனாகவும் (அங்கமில்லாதவன்) விளங்குவாய் உண்மையான சிவனடியார்பால் உன் ஆட்சி செல்லாது. மற்றவர்பால் செல்லும்" என்று அவனுக்குரிய அரசையும் ஆற்றலையும் தந்து கருணை பாலித்தார். மன்மதன் சிவபெருமானின் அருளைப்பெற்று வணங்கி, ரதி தேவியுடன் தனது நகரத்துக்குச் சென்றான்.

சிவபெருமான் உமாதேவியோடு மணத்தவிசினின்று எழுந்து, மறை ஒலியும் மங்கல முழவும் முழங்க விடைபெற்று விடையின்மீது எழுந்தருளித் திருக்கயிலாயமலை யடைந்தார். உடன் வந்தோருக்கெல்லாம் விடைகொடுத்து அனுப்பி விட்டு, திருக்கோயிலினுட் சென்று உமாதேவியுடன் அரியணையில் வீற்றிருந்தார். இருவரும் முன்போலத் தவநிலையில் ஒடுங்கிவிட்டார்கள்.

(இப்படிச் சொல்வதால் சக்தி வேறு. சிவம் வேறு என்று கொள்ளக்கூடாது. சக்தியும் சிவமும் ஒன்றேதான். சக்தி புலப்படும்; சிவம் புலப்படாது. மனிதனுடைய உடல் சக்தியும் சிவமும் சேர்ந்ததுதான். உடம்பில் உள்ள சூடு சிவம்; தட்பம் சக்தி. சக்தியும், சிவமும் சேர்ந்தால்தான் எச்செயலும் எவ்வடிவும் தோன்றும். அதனால்தான் அவற்றின் சேர்க்கையைத் திருக்கல்யாணம் எனச் செய்து காட்டுகிறார்கள்.)

11. திருவவதாரம்

பார்வதி தேவியாரது திருமணம் நிகழ்ந்து பற்பல நாட்கள் சென்றும் இறைவன் ஒரு குமரனைத் தந்தருளாது இருத்தலைக் கண்ட திருமால். திசைமுகன், இந்திரன், திக்குப் பாலகர்கள் முதலிய வானோர் மேரு மலையில் ஒன்றுகூடி ஏங்கியிருக்

தனர். நம்மை ஏன் இறைவன் இன்னமும் சோதிக்கிறார் எனக் கலங்கினர்.

(ஒரு தாய் ஆரோக்கியமான பிள்ளைக்கு நிரம்ப உணவு தருவாள்; நோய்வாய்ப்பட்ட மகனுக்கு உப்பில்லாக் கஞ்சி தருவாள்; மந்தம் உள்ள பிள்ளைகளுக்குப் புனர்ப்பாகம் செய்து தருவாள்; நேர்வாளம் உண்ட பிள்ளையைப் பட்டினி போடுவாள். இதற்குக் காரணம் குழந்தைகளின் நோயே யன்றித் தாயின் பட்சபாதம் அன்று.)

இவறலும் இகலும் இன்றி யார்க்கும்ஓர் பெற்றித் தாகி
அவரவர் வினைகள் நாடி அதற்படு பொருளை நல்கும்
சிவனையாம் வெறுத்தல் குற்றம் சிறந்தநோன் பியற்றிடாதே
தவறுசெய் தனம்என் றெம்மை நோவதே தக்க தென்றார்.

விருப்பும் வெறுப்பும் இல்லாமல் யாவர்க்கும் ஒரே தன்மையாக, அவரவர்கள் செய்த நல்வினை தீவினைகட்கு ஏற்ப இன்ப துன்பங்களை வழங்கும் நடுநிலையுடைய சிவபெருமானை நாம் வெறுப்பது குற்றமாகும். உயர்ந்த தவம் புரியாது குற்றம் புரிந்தோம் என்று நம்மை நாமே நொந்து கொள்வதுவே அறிவுடைமை என்று பிரம்மதேவர் மற்ற வானோர்களுக்கு உணர்த்தினார்.

அனைவரும் திருக்கயிலாயம் சென்று தமது துன்பங்களைச் சிவபிரானிடம் விண்ணப்பம் செய்வதென உத்தேசித்தனர். பிரமதேவர், சிவபெருமான் எந்நிலையில் உள்ளார் என்பதை ஒரு தூதுவன் மூலம் அறிந்து, பின்னர் செல்வோம் என்று நினைந்து, வாயு தேவனை அழைத்தனர்.

உற்றுழி உதவிசெய்வோர் உவப்புறு தெவையும் ஈவோர்
அற்றமில் தவத்தா றுற்றோர் அமர்புரி வீரர் ஆவோர்
மற்றொரு பொருளும் வெஃகார் வருத்தமும் ஓரார் ஆவி
இற்றிட வரினும் எண்ணார் இனிதென மகிழ்வர் அன்றே.

"தருணத்தில் உதவி புரிவோர்களும், சலிக்காமல் எதனையும் வழங்கும் தரும நீரரும், குற்றமில்லாத தவசீலர்களும், போர்புரிகின்ற வீரர்களும் வேறு ஒரு பொருளையும் விரும்ப

மாட்டார்கள்; வருத்தத்தையும் ஒரு பொருளாக நினைக்க மாட்டார்கள். உயிர் பிரிய நேரினும் அதனைப் பெரிதாக நினையார், உள்ளம் உவகையுறுவார்கள்'' என்று கூறி வாயுவை அனுப்பிவைத்தார். 'மன்மதனை எரித்த சிவபெருமான் முன் செல்வதா?'' என நடுங்கியவாறே வாயுவும் சென்றான்.

கங்கையில் நீராடிவிட்டு, தாழம்பூவின் மகரந்தங்களை அணிந்து பயபக்தியுடன் தென்றலாய் மெல்லக் கயிலாயம் சென்றான் வாயு; இறைவன் திருக்கோயிலின் முன்வாயிலையடைந்தான். நந்திதேவர் ஒரு ஹுங்காரம் செய்ய இடியொலி கேட்ட நாகம்போல் வாயுதேவன் மயங்கிக் கீழே விழுந்தான். ஒருவாறு மயக்கம் தெளிந்து நந்தியெம்பெருமானிடம் சென்று, தான் வந்த காரியத்தைத் தெரிவித்தான்.

(ஈசுவரனின் நிலையை நோட்டம் பார்ப்பது தகாத காரியம். அவனது நிரந்தர நிலை அனுக்கிரகம்தான். வேண்டி நிற்கும்போதெல்லாம் அருள்புரிவான் என்ற நம்பிக்கையொன்றே வேண்டும். எனவே பரமனின் நிலைகாண வந்த வாயுவை வெருட்டிவிட்டார் நந்தி தேவர்.)

வாயுதேவன் மேரு மலைக்குத் திரும்பிவந்து, பிரம்மதேவரிடம் கயிலாயத்தில் நடந்ததைச் சொன்னான். தேவர்கள் யாவரும் ஆண்டவனைத் துதித்து அருள்கோரிக் கயிலாய மலை சென்றனர். திருநந்தி தேவரை வணங்கி அவர் அனுமதி பெற்று உள்ளே சென்றனர். திருமாலும் மற்றோரும் பரமேசனைப் பலகாலும் பணிந்து தமது குறைகளைக் கூறி முறையிட்டனர்.

நோக்கினும் நுழைகிலை நுவலு கின்றதோர்
வாக்கினும் அமைகிலை மதிப்ப வொண்கிலை
நீக்கரும் நிலைமையில் நிற்றி எந்தைநீ
ஆக்கிய மாயமீ தறிகி லேமரோ.

பெருமானே! நாங்கள் தேவரீரை நோக்கியும் கண்ணின் பார்வை நுழையவில்லை. துதிக்கலாம் என்றால் தேவரீருடைய பெருமை வாக்குக்கு அமையவில்லை. நினைக்கவும் முடியவில்லை;

உம்மை விலக்க முடியவில்லே. நீர் அமைத்த மாயத்தை எம் மால் அறியவும் முடியவில்லே.

இருமையும் ஒருமையும் இரண்டும் ஒன்றிய
ஒருமையும் அன்றென உலகம் யாவையும்
பெருமையின் இயற்றிய பெரும நின்செயல்
அருமறை யானவும் அறிதற் பாலவோ.

பொருள் இரண்டு என்கின்ற துவைதம், ஒன்றே என் கின்ற அத்வைதம், ஒன்ருயும் இரண்டாயும் உளது என்கின்ற விசிஷ்டாத்வைதம், இந்த மூன்றையும் கடந்து, அகில உல சங்களேயும் படைத்த பெருமானே! உமது செயலே அரிய வேதங்களாலும் அறிய முடியுமோ?

உருவொடு தொழில்பெயர் ஒன்றும் இன்றியே
பரவிய நீயவை பரித்து நிற்பது
விரவிய உயிர்க்கெலாம் வீடு தந்திடும்
கருணைய தேயலால் கருமம் யாவதே.

உருவம், கருமம், பெயர் முதலியன ஒன்றுமில்லாது எங்கும் பரவியுள்ள தேவரீர் நாமம் ரூபம் தொழில் இவை களே மேற்கொண்டிருப்பது, உயிர்களுக்கு வீடுபேறு வழங்கும் கருணையாலேயேயாகும்.

முன்னதின் முன்னென மொழிது மேயெனில்
பின்னதின் பின்னுமாப் பேச நிற்றியால்
அன்னவை யேயெனில் ஒழிந்த தல்லேயோ
என்னென நின்னேயாம் ஏத்து கின்றதே.

முன்னேப் பொருளுக்கு முன்னேப் பொருள் என்று கூறு வோம் என்ருல், பின்னேப் பொருளுக்கும் பின்னேப் பொரு ளாக விளங்குகின்ருய். அப்பொருள் என்ருல் உன்னேயன்றி ஒருபொருள் உளதோ? உன்னே நாங்கள் என்னென்று துதி செய்ய வல்லோம்?

புல்லிய புரம்பொடித் ததுவும் காமனே
ஒல்லென எரித்ததும் ஊனக்குச் சீர்த்தியோ
எல்லேயில் விதிமுதல் எனேத்தும் ஈண்டுநின்
நல்லருள் ஆணேயே நடாத்தும் என்கையால்.

அளவில்லாத படைப்பு முதலிய அனைத்தும் உமது அருளாணையே நடாத்துகின்றதால், அற்பமான திரிபுரங்களையும் மன்மதனையும் எரித்ததும் உமக்குப் பெருமையாகுமோ ?

"எம்பெருமானே ! சூரபன்மனுதியர்களால் பெருந்துயருறுகிறோம். எங்களை இத் துயரத்திலிருந்து விடுவிக்க உமக்கு ஒப்பாக ஒரு திருக்குமாரரைத் தந்தருளுக" என்று தேவர்கள் வேண்டிக் கொண்டனர்.

ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதும்வும் வரவும் போக்கும் இன்பமுந் துன்பும் இன்றி
வேதமுங் கடந்து நின்ற விமலஓர் குமரன் றன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க என்றார்.

பிரமன் முதலிய தேவர்களை நோக்கிச் சிவபிரான், "நீங்கள் வருந்தவேண்டாம்; ஒரு புதல்வனைத் தருவோம்" என்று திருவாய்மலர்ந்தார்.

வேண்டத் தக்கது அறிவோனும், வேண்ட முழுதும் தருவோனுமான ஆண்டவன்தான் எதனை எந்தச் சமயத்தில் தரவேண்டும் என்பதையும் அறிவார். அதற்கேற்ப இப்போது முருகனைத் தரவேண்டிய தருணம் வந்துவிட்டது என்று பெருமான் கருதினார்.

(முன்பு திரிபுர தகனத்தின்போது திருத்தேரும், படைக்கலமும், பரிவாரமும் சித்தம் செய்யுமாறு தேவர்களைப் பணித்துப் பின்னர் அவற்றைப் பயன்படுத்தாது தமது பராக்கிரமத்தாலேயே பகைவரை வென்ற பரமேசுவரர் அல்லவா அவர்? இப்போதும் அவ்வாறே முருகன் பிறப்புக்கென ஓர் ஏதுவாகத் தேவியைப் பர்வதப் புத்திரியாக்கி, திருமணம் புரிந்து திருக்கைலாயம் சேர்ந்த ஐயன் இறுதியில் அவளிடமிருந்து புதல்வனைத் தராமல் தாமாகவே குமரனைத் தந்தருள எண்ணினார். அவரது லீலையை நாம் எப்படி அளப்பது ?

ஐயன் வேறு, அன்னை வேறு என்று பிரித்துப் பார்க்கக் கூடாது. என்றுமே அவர் அம்மையப்பன் என்பதை உணர்த்தத்தான் இவ்வாறு அருள் கூர்ந்திருப்பாரோ ?)

(‘பரமேசுவரனுக்கு ஐந்து முகங்கள், தேவிக்கு ஒரு முகம்-ஆக ஆறுமுகத்திலுள்ள ஆறு நெற்றிக் கண்களிலிருந்து அவர் ஆறு பொறிகளைத் தோற்றுவித்து ஆறுமுகனை உண்டாக்கினார்’ எனச் சிலர் கூறுவர். இது தவறு. பரமேசுவரனுக்கே ஸத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், ஈசானம், அகோரம் என்று வெளிப்படத் தெரியும் ஐந்து முகங்களோடு பரம ஞானியரின் உள்நோக்குக்கு மட்டும் புலப்படும் உள்முகமாக ஆறுவது திருவதனம்—அதோமுகமாக—உள்ளது.)

வந்திக்கு மலரோ னாதி வானவர் உரைத்தல் கேளாப்
புந்திக்குள் இடர்செய் யற்க புதல்வனைத் தருதும் என்னா
அந்திக்கு நிகர்மெய் யண்ணல் அருள்புரிந் தறிஞ ராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங் கொண்டான்.

வணங்குகின்ற பிரமாதி தேவர்களின் முறையீட்டைக் கேட்டருளிய, செவ்வானையொத்த செம்மேனி எம்மான், “நீங்கள் துன்புற வேண்டா. நாம் குமாரனைத் தருகின்றோம்.” என்று கூறி அருள்புரிந்து, சிவஞானிகள் தியானத்தினால் நினைக்கின்ற தமது ஆறு திருமுகங்களையும் கொண்டருளினார்.

ஆறு திருமுகங்களுமுள்ள திருக்கோலம் தாங்கிய பெருமான் அவை ஒவ்வொன்றின் நெற்றிக் கண்ணினின்றும் அருட்பெருஞ்சோதிப் பொறி ஒவ்வொன்றினை வழங்கியருளினார். அப்பொறிகள் அளவு கடந்த வெப்பத்துடன் உலகெங்கும் பரவிப் பறந்தன. அச்சோதியின் வெப்பத்தைத் தாங்கமாட்டாது வானவர்கள் மூலைக்கு ஒருவராக ஓடினார்கள். வாயுக்கள் உலைந்து ஓய்ந்தன; கடல்கள் வற்றின; வடவாமுகாக்கினியும் தன் செருக்கு நீங்கிற்று; பூமி பிளந்தது; மலைகள் யாவும் நெக்குவிட்டன; அட்ட நாகங்களும் நெளிந்து நீங்கின; அட்ட திக்கயங்களும் அழுது தியங்கின; உயிர்கள் எல்லாம் நடுங்கின. ஆயினும் அப்பொறிகள் இறைவன் அருளினால் பெருங்கருணை செய்யும் வண்ணம் பிறந்தன ஆதலால் எவ்வுயிரையும் நாசம் செய்யவில்லை. வெறும் அச்சத்தை மட்டுமே ஏற்படுத்தின. (இனிமையே உருவான முருகன் அச்சமூட்டும் வகையில் தோன்றியதையும் நமக்குப் புரிய

வொண்ணாத ஈசுவர லீலை என்றுதான் சொல்லவேண்டும். அன்பனும் நண்பனும் பரமபக்தனுமான அர்ச்சுனனுக்குக் கண்ணபெருமான் விசுவரூப தரிசனம் காட்டும்போது அவனை நடுநடுங்கவே செய்தாரன்றோ?)

இறைவனின் நெற்றிக் கண்களினின்று நெருப்புப் பொறி புறப்பட்டபோது, எம்பிரானின் அருகே வீற்றிருந்த உமா தேவியாரும் அப்பொறிகளின் வெம்மையைத் தாங்காது திரு வுளம் கலங்கித் தம் திருவடியிலுள்ள சிலம்புகள் புலம்பித் தாக்கத் திருக்கோயிலினுள்ளே ஓடினர்.

கடலில் கப்பல் செல்கிறது. கப்பல் நடுக் கடலுக்குப் போய்விட்டது. அக் கப்பலின் கொடி மரத்தில் காகங்கள் கூட்டமாக உட்கார்ந்திருக்கின்றன. மாலுமி அக் காகங்களை அடித்து விரட்டுகிறான். காகங்கள் அங்கிருந்து பறக்கின்றன. நடுக் கடல். காகங்கள் எங்கே சென்று புகலிடம் தேடும்? நாலா பக்கங்களிலும் பறக்கும். எங்கும் புகலிடம் கிடைக் காமல் திரும்பவும் கப்பலின் கொடிமரத்துக்கேதான் வந்து சேரும். அதேபோல் அஞ்சிய தேவர்கள் யாவரும் திரண்டு மீண்டும் கயிலாயத்துக்கே வந்தார்கள். சிவபெருமானைக் கண்டு, "அசுரர்களை மாய்ப்பதற்கு ஒரு மைந்தனை அருள வேண்டும் என்று வேண்டினோம். முடிவில்லாத வெப்பத்தை யுடைய அக்கினியை வழங்கிவிட்டீர்களே! நாங்கள் உய்வது எவ்வாறு? அக்கினிப் பொறிகளின் வெம்மை தணியாவிட் டால் இன்னும் ஒரு கணத்தில் உலகமெல்லாம் அழியும், காப் பாற்றுங்கள்" என்று முறையிட்டார்கள். இறைவன் தேவர் களிடம், "அஞ்சாதீர்கள்" என்று கூறிப் புதிதாகக் கொண்ட ஆறு திருமுகக் கோலத்தை மறைத்து முன்போல ஒரு முகத் தோடு எழுந்தருளி, உலகமெங்கும் பரந்த அக்கினிப் பொறி கள் நமது திருமுன் வரும்வண்ணம் திருவுளம் கொண்டார்.

ஆறு அக்கினிப் பொறிகளும் எம்பிரான் திருமுன் வந் தன. இறைவன் வாயு தேவனையும் அக்கினி தேவனையும் நோக்கி, "நீங்கள் இருவரும் இந்த அக்கினிப் பொறிகளைத் தாங்கிக் கொண்டுபோய்க் கங்கையில் விட்டுவிடுங்கள்! கங்கை அவற்றைச் சரவணப் பொய்கையில் கொண்டு போய்ச் சேர்க்கும்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

வாயு தேவனும், அக்கினி தேவனும் அஞ்சி நடுங்கினர். எம்பெருமானை வணங்கி, "தேவ தேவ! இந்த அக்கினிப் பொறிகளின் வெம்மையைத் தாங்க எங்களால் முடியுமா? ஆலகாலம் போல் படர்ந்த இந்த அக்கினிப் பொறிகளைக் கண்டு ஓடியவர்களல்லவா நாங்கள்? இந்த அக்கினிப் பொறி களை நெருங்கவே அஞ்சுகின்ற நாங்கள் எப்படிச் சுமந்து கொண்டு செல்ல இயலும்?" என்று விண்ணப்பித்துக் கொண்டனர். "இந்தத் தீப்பொறிகளைத் தாங்கும் ஆற்றலை உங்களுக்கு அளித்தோம்" என்று சிவபெருமான் அருள் புரிந்தார். வாயுவும் அக்கினியும், வாயுவாயும் அக்கினியாயு மிருப்பது அவர் தந்த ஆற்றலால்தானே ?

"இத்தழற் பிழம்பு சரவணப் பொய்கையை அடைந்து ஒரு திருக் குமரனாய் வளர்ந்து, சூராதி யவுணர்களை அழித்து உங்களுக்கு அருள் புரியும். நீங்கள் அனைவரும் உங்கள் இருப்பிடத்துக்குச் செல்லலாம்" என்று எம்பெருமான் தேவர்களுக்குக் கூறியருளினர்.

தேவர் யாவரும், "உய்ந்தோம்; உய்ந்தோம்" என்று சிவபெருமானை வணங்கி அங்கிருந்து விடைபெற்றனர்.

வாயுதேவன் எம்பெருமானை வணங்கித் தீப்பொறிகள் ஆறையும் முதலில் சென்னி மேல் தாங்கிச் சென்றான். திருமால், பிரமன் முதலிய தேவர்கள் பெருமகிழ்ச்சியுடன் வாயுதேவனைப் பின் தொடர்ந்தனர், சுவாமியின் திரு அவதாரம் காண்பதற்காக. ஒரு நாழிகை சென்றது. வாயு தேவன் தீப்பொறிகளின் வெம்மை தாங்காது அக்கினி தேவ னிடம் சேர்த்தான்; அக்கினி தேவன் சென்னி மேல் தாங்கினான். இவ்வாறு மாறி மாறித் தாங்கிக்கொண்டு போய்க் கங்கையில் சேர்த்தனர். அப்பொறிகளின் வெம்மை தாங்காது கங்கையும் வற்றத் தொடங்கியது. இறைவன் அருளை உணர்ந்த கங்கை, அவற்றை ஏந்திச் சென்று ஒரு நாழிகைக்குள் இமய மலைச்சாரலில் உள்ள சரவணப் பொய்கையில் சேர்த்தாள். விளைவை நாடும் வறியவர் போல் திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் சரவணப் பொய்கையைச் சூழ்ந்து காவல் புரிந்தனர்.

சிவபெருமான் அருளால் சரவணப் பொய்கை, கங்கையைப்போல் வற்றவில்லை. அப்பொழுது, அருவமாயும் உருவமாயும் அநாதியாயும் ஒன்றாயும் பலவாயும் பரப்பிரம்மமாயும் நின்ற பரசிவ சோதிப் பிழம்பே ஒரு திரு மேனியாக வடிவு கொண்டது. பரம்பொருள் கருணை வெள்ளம் பொழியும் ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக் கரங்களும் கொண்டு உலகமெல்லாம் உய்யும் வண்ணம் முருகக் கடவுளாகத் திரு அவதாரம் செய்தருளியது.

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்(கு] உதித்தனன் உலகம் உய்ய.

முருகப் பெருமான் திரு அவதாரம் செய்தவுடன் ஆகாயத்திலே தேவதுந்துபிகள் முழங்கின; வேதங்களெல்லாம் ஆர்த்தன; திருமாலும், பிரமனும், இந்திரனும், முனிவர்களும் பூமாரி பெய்து, அடியேங்களுக்கு அருள் செய்க என்று துதித்துச் சூழ்ந்தார்கள். உலகத்து உயிர்கள் மகிழ்ச்சி கொண்டன; அவுணர்களுக்குத் தீய அறிகுறிகள் தோன்றின.

ஏவர்தம் பாலும் இன்றி எல்லைதீர் அமலற் குள்ள
மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவ ணத்தண் பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகள் அருளு மாற்றால் அறுமுகம் கொண்டா னன்றே.

வேறு யாவருக்கும் இல்லாமல், முடிவில்லாத சிவமூர்த்திக்கே உரிய ஆறு அருட்குணங்களும், முருகவேளுக்கு ஆறு திருமுகங்களாய் வந்தன என்று கூறுமாறு, அழகிய சரவணப் பொய்கையில் வீற்றிருக்கின்ற எம்பெருமான், உயிர்களுக்கு அருள்புரியவேண்டி ஆறு திருமுகங்களைக் கொண்டு விளங்கினான்.

ஆறு அருட்குணங்கள் :—முற்றறிவு, வரம்பில் இன்பமுடைமை, இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், முடிவில் ஆற்றலுடைமை, பேரருளுடைமை, தம்வயமுடைமை,

வடமொழியில் — சருவஞ்ஞதை, திருப்தி, அநாதி பேதம், அநந்த சக்தி, அலுப்த சக்தி, சுவதந்திரத்வம்.

வேதங்களின் முடிவாலும், மனத்தாலும், வாக்காலும் அறிய ஒண்ணது எங்கும் நிறைந்து நின்ற சிவபெருமானே கருணை யுடன் ஆறு திருமுகங்களை உடையவராய்த் தோன்றியருளி, சரவணப் பொய்கையில் ஆயிரத்தெட்டு இதழ்களோடு கூடிய செந்தாமரை மலரின் மீது இனிது வீற்றிருந்தருளினர்.

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினு லளக்கொ ணமல்
நிறைவுடன் யாண்டு மாகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந் தருளி னனே.

முருகப்பெருமானுடைய அவதாரத் தத்துவத்தை இனிச் சற்று அறிவோம். உலகத்தின் க்ஷேமத்துக்காகக் கடவுள் பஞ்சபூதங்களில் படிப்படியாக வெளி, காற்று, கனல், புனல், மண் இவற்றின் வழியே தோற்றம் பெறுகிறார் என்பது முருகன் திரு அவதாரத்தின் தத்துவம். இறைவனின் நெற்றிக் கண்ணிலிருந்து புறப்பட்ட பேரொளிச் சுடர் வானத்தில் நின்று, பின் காற்றின் கையில் புகுந்து, தீயைச் சென் றடைந்து அங்கிருந்து கங்கையாகிய நீரில் தவழ்ந்து, நிலத் தில் எய்தியது. ஞானக்கினியில் அருவமாகத் தோன்றிக் கருணைப் பொய்கையில் உருவமாகப் பொலிந்தது. அருவ மான ஞானமயப் பரம் பொருள் பக்தர்களிடம் கருணை கொண்டே அன்றோ வடிவு கொள்கிறது?

தமிழ் மொழி என்றும் இளமை மாறாத மொழி. எம்பெருமான் முருகன் என்றும் அகலாத இளமையுடைய வன். தமிழ் மொழியில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு. முருகப்பெருமானின் தோள்கள்பன்னிரண்டே. முருகனுக்குத் திருமுகம் ஒவ்வொன்றிலும் மூன்று கண்களாக மொத்தம் பதினெட்டு நயனங்கள்; தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. (சிவமூர்த்தி, உமாதேவி, விநாயகர், முருகன் யாவருமே முக்கண் பெற்றவர்கள்.) "ஷட்வக்த்ரம் த்வாதச புஜம் அஷ்டாதச விலோசனம் ரூபம் அங்கீக்ருதம் சுபம் லோகாநாம்" என்கிறது வடமொழி ஸ்காந்தம்.

"உருவம் இல்லாத அருட்பெருஞ் ஜோதி ஆண்டவன். ஆறு முகங்கள், பன்னிரண்டு தோள்கள், பதினெட்டுக் கண்கள் கொண்ட இந்த அருள் உருவத்தை உலகம் உய்யும் பொருட்டு எடுத்துக்கொண்டான்" என்பது இதனுடைய பொருள்.

சூரியன் ஆறு கண்களாகவும், சந்திரன் ஆறு கண் களாகவும், அக்னி ஆறு கண்களாகவும் முருகப்பெருமானுக் குப் பதினெட்டுக் கண்களமைந்தாற்போல் தமிழில் மெய் யெழுத்துகள் பதினெட்டாக நின்றன. முருகவேளின் முகங்கள் ஆறு. தமிழில் இன எழுத்து ஆறு, வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடையினம் ஆறு. மு—ரு—க என்ற எழுத் துக்களில் ஒவ்வொன்றும் மெய்யெழுத்தில் ஒவ்வோர் இனத் தைச் சார்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. கந்தவேள் கரத்தில் உள்ள வேல் வேறு எந்தத் தெய்வத்துக்கும் இல்லாத சிறப்புடைய ஆயுதம். வேல் என்றே மக்கட்குப் பெயரிடுவது மரபு. இவ்வாறு வேறு ஆயுதத்தின் திருநாமங் களை மக்கட்கு இடுவதில்லை. வேறு எந்த மொழியிலும் இல்லாத தனி நிலை ஆயுத எழுத்து தமிழில்தான் உண்டு. ஆய்தம் ஃ இச்சை, கிரியை, ஞானம் என்ற மூன்றும் மூன்று புள்ளிகளாகச் சேர்ந்தது. இது வேலின் உருவை யொத்தது.

கண்ணிகர் மெய்யும் சென்னிக் கணங்க ளினத்தின் கூறும்
திண்ணமை தோள்க ளேபோல் திகழ்தரு முயிரும் வேறென்
றெண்ணுதற் கரிய தான எ:ஃகமும் இயலிற் காட்டும்
புண்ணிய முனிக்கோன் செவ்வேள் பொற்பதத்
தடிமையாகும்.

(எனவே, முருகன் வேறு தமிழ் வேறு அல்ல. முருகனே தமிழ். தமிழே முருகன் என்பதை உணரலாம்.

பிறக்கும்போதே பெயருடன் யாரும் பிறப்பதில்லை. குழந்தை பிறந்த பின்னர்தான் பெயர் சூட்டுவர். ஆனால் இங்கோ. "ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன்" என்று கூறுகிறார், ஒருவரைப் பார்த்து, "இவருக்கு ஞானம் உதித்தது" என்று சொன்னால் அப்போதுதான் ஞானம் வந்தது என்று பொருளாகாது. ஞானம் முன்பே இருந்தீது;

அது மறைந்திருந்தது; இப்போது உதித்தது என்றுதான் பொருள்படும். ஆகவே, என்றும் இருக்கும் இறைவனே உலகம் உய்வதற்காகக் கிழக்கில் ஒரு முகமும், மேற்கில் ஒரு முகமும், வடக்கே ஒரு முகமும், தெற்கில் ஒருமுகமும், மேலே ஒருமுகமும், கீழே ஒரு முகமுமாக ஆறுமுகப் பெருமானாக வந்து உதித்தான்.

ஆண்பிள்ளை என்றும் ஆண்மகன் என்றும் முருகப் பெருமான் ஒருவரையே கூறலாம். கோடீசுவரனின் பிள்ளையைக் கோடீசுவரன் மகன் என்றும், ஏழையின் பிள்ளையைத் தரித்திரன் மகன் என்றும், வைசியரின் மகனைச் செட்டி மகன் என்றும் சொல்லும் வழக்குப்படி, பெண்ணுக்குப் பிறந்த நாம் யாவரும் பெண்—பிள்ளைகள்தான். ஆணுக்கே பிறந்த பிள்ளைதான் ஆண் பிள்ளை. அப்படிப் பெண் தொடர்பின்றி ஆணுக்கே பிறந்தவன் ஆறுமுக சுவாமி. பரமான்மாவை ஆணாகவும், அதைத் தேடிச் சென்றடைய வேண்டிய ஜீவான்மாவைப் பெண்ணாகவும் கொள்கிற மரபுப்படி இது கந்தப் பெருமானின் பிரம்ம நிலையைக் குறிக்கும்.

முருகன் அவதாரம் செய்தான் என்பதும் சரியாகாது. அவதாரம் என்றால் இறங்கி வருவது என்று பொருள். நாம் யாவரும் இறங்குமுகமாகக் கீழ் நோக்கி இவ்வுலகுக்கு வருகிறோம். முருகனோ இறைவனின் ஊர்த்துவ முகமாக நெற்றிக் கண்ணினின்று வெளிப் போந்தவன்.")

சரவணப் பொய்கையில் திரு அவதாரம் செய்தருளிய முருகப் பெருமான் செந்தாமரையில் கொலு வீற்றிருந்தார். திருமால், பிரம்மதேவர், காலக் கடவுள், வருண பகவான் முதலிய தேவர்கள் அங்கே சென்றார்கள். கைக்குழந்தை போலத் திருவிளையாடல் புரியும் எம்பெருமானை அவர்கள் கண்டார்கள். வாக்கினாலும், வேத முடிவான உபநிடதங்களாலும் அளக்க முடியாத நிமலமூர்த்தியாக இருந்தாராம் எம்பெருமான்.

அழகிய திருமேனியுடன் வீற்றிருந்த முருகவேளின் ஆறு முகங்களிலும் கருணை பொழிகிறது; நாராயணமூர்த்தி எம்பெருமானைப் பார்த்தார். எத்துணை முறை பார்த்தாலும் அவருக்குத் திருப்தி ஏற்பட வில்லையாம்!

தீர்த்திகைக் கங்கை தன்னில் திகழ்சர வணத்தில் வந்த
மூர்த்திகைக் குழவி யேபோல் முதற்புரி ஆடல் நோக்கி
ஆர்த்திகை யுருத உள்ளத் தரிமுதல் அமரர் யாரும்
கார்த்திகைத் தெரிவை மாரை விளித்திவை கழற லுற்ருர்.

சிறந்த தீர்த்தமாகிய கங்கா நதியின் அருகில் திகழ்கின்ற சரவணப் பொய்கையில் தோன்றிய முழுமுதற் கடவுள் ஒரு கைக்குழந்தைபோல், முதன்முறையாகத் திருவிளையாடல் புரிவதை நோக்கித் திருமாலாதி தேவர்கள், அந்த அழகைக் கண்டு திருப்தியுருதவர்களாகி, கார்த்திகை மாதர் அறுவரையும் அழைத்து,

"எம்பெருமான் சரவணப் பொய்கையில் குழந்தை போல எழுந்தருளியிருக்கிருர். நீங்கள் பாலூட்டுங்கள்" என்று கார்த்திகைப் பெண்கள் அனைவருக்கும் தேவர்கள் உத்தரவு போட்டார்கள். "அவ்வாறே செய்கிருேம்" என்று கார்த்திகைப் பெண்கள் அறுவரும் சரவணப் பொய்கை சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் இளம்பூரணனைத் துதித்து வணங்கினர். கார்த்திகைப் பெண்களுக்குள் போட்டி ஏற்படாதபடி, குமரக் கடவுள் ஒருவரே ஆறு குழந்தைகளாகப் பிரிந்தருளினுர்.

மறுவறும் ஆர லாரும் மாதர்மூ விருவர் தாமும்
நிறைதரு சரவணத்தின் நிமலனை அடைந்து போற்றி
உறுநர்கள் தமக்கு வேண்டிற் றுதவுவோன் ஆதலாலே
அறுமுக வொருவன் வேருய் அறுசிருர் உருவங்
கொண்டான்.

குற்றமில்லாத கார்த்திகைப் பெண்கள் அறுவரும் சரவணபவனை யடைந்து தொழுது நிற்க, அடைந்தவர்கட்கு வேண்டிய வெல்லாம் வழங்கும் விமலன் ஒருவனே ஆறு குழந்தைகளாகப் பிரிந்தருளினுன்.

"உவகையொடு கிர்த்திகையர் அறுவருழ் எடுக்க அவர்
ஒருவரொருவர்க்கவனே ரோர்புத்ர னுனவனும்"
—திருவகுப்பு.

கார்த்திகை மகளிர் அறுவரும் ஆளுக்கொரு குழந்தையை எடுத்துப் பால் ஊட்டினுர்கள். முருகப் பெருமான் முறுவல்

செய்து, நீங்காத பேரருளால் அருந்துவது போல் அருந்தினர். பால் அருந்திய பரஞ்சுடர் முதல்வனை வண்டருந்தாத கஞ்சமலர்ச் சயனத்தில் சேர்த்த கார்த்திகை மாதர்கள் தாலாட்டிக் கண் வளரச் செய்தனர்.

பாம்பா லுததி தனைக்கடைந்து
படருங் கொடுங்கார் சொரிமழைக்குப்
பரிய வரையைக் குடைகவித்துப்
பசுக்கள் வெருவிப் பதருமற்
காம்பா லிசையின் றெனியழைத்துக்
கதறுந் தமரக் காளிந்திக்
கரையி னிரைப்பின் னேநடந்த
கண்ணன் மருகா முகையுடைக்கும்
பூம்பா சடைப்பங் கயத்தடத்திற்
புனிற்றுக் கவரி முலைநெரித்துப்
பொழியு மமுதந் தனைக்கண்டு
புனலைப் பிரித்துப் பேட்டெகினங்
தீம்பால் பருகுந் திருச்செந்தூர்ச்
செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த
சிறுவா தாலோ தாலேலோ.

(பழுத்த வைணவராகிய பகழிக் கூத்தர் இவ்வாறு திருச் செந்தூர்ப் பிள்ளைத் தமிழில் முருகனைத் தாலாட்டுகிறார்.

'அமிருத மதனத்தின் போது பாற்கடலைக் கடைந்த வரும், 'பெரு மழையின் போது கோவர்த்தனகிரியைக் குடை யாகத் தூக்கி மாடுகளைக்காத்தவரும், வேணுகான மிசைத்து யமுனா தீரத்தில் ஆநிரையைப் பின்தொடர்ந்தவருமான பெருமானின் மருமகனே' என்று முதலில் துதிக்கிறார். பிறகு இவ்வாறு தொடர்கிறார்:

• பொய்கையில் தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்றன; அவற்றிலே அன்னங்கள் வாழ்கின்றன. உணவு தேடுவதற் காக ஆண் அன்னங்கள் வெளியே சென்றிருக்கின்றன. கன்றுஈன்று பத்துப்படி பால் கறக்கக் கூடிய எருமை ஒன்று அந்தப் பொய்கையில் இறங்கி ஒரு கலக்குக் கலக்கியது.

1974— 5.

பொய்கையில் இருந்த வரால் மீன் எருமையின் மடியை இடித்து மோதியது. கன்று தான் பாலைக் குடிப்பதாக நினைத்துக் கொண்டது எருமை! அதன் மடியிலிருந்து பால் சுரந்தது. எருமையின் மடியிலிருந்த பத்துப் படி பாலும் நீரில் கலந்து விட்டது. நீர் வேறு, பால் வேறாகப் பிரிக்கும் ஆற்றல் அன்னத்துக்கு உண்டு. 'நம் கணவன்மார்களாகிய ஆண் அன்னங்கள் உணவு தேடி எங்கோ போயிருக்கின்றன. எம்பெருமானே உணவை இங்கேயே கொண்டு வந்து கொடுக்கிறார்' என்று பெண் அன்னங்கள் நீரிலிருந்து பாலைப் பிரித்து எடுத்துப் பாதியைக் குடித்து மறு பாதியைக் கணவருக்கு என்று வைத்து விட்டனவாம். இவ்வாறு அன்னங்கள் வாழும் தீர்த்தமுள்ள திருச்செந்தூரில் வாழும் செல்வனைத் தாலாட்டுகிறார் பகழிக்கூத்தர்.)

கார்த்திகைப் பெண்கள் திருக்குழந்தைகளைத் துயிலச் செய்தனர்.

துயிலவோ ருருவம் துஞ்சித் துண்ணென எழுந்து மென்சொற்
பயிலவோ ருருவம் யாய்தன் பயோதரம் பவள வாய்வைத்
தயிலவோ ருருவம் நக்காங் கமரவோ ருருவம் ஆடல்
இயலவோ ருருவம் வாளா இரங்கவோ ருருவம் செய்தான்.

ஒரு உருவம் துயில்கின்றது. ஒரு உருவம் விரைந் தெழுந்து இனிய சொல் பழகுகின்றது; ஒரு உருவம் தாயின் தனத்தைப் பவள வாயில் வைத்துப் பால் குடிக்கின்றது; ஒரு உருவம் புன்முறுவல் செய்து அமர்ந்துளது; ஒரு உருவம் விளையாடுகின்றது; ஒரு உருவம் சும்மா இருந்து அழுது கொண்டிருக்கின்றது.

ஓருருத் தவழ மெல்ல ஓருருத் தளர்ந்து செல்ல
ஓருரு நிற்றல் செல்லா தொய்யென எழுந்து வீழ
ஓருரு இருக்கப் பொய்கை ஓருரு உழக்கிச் சூழ
ஓருருத் தாய்கண் வைக ஒருவனே புரித லுற்றான்.

ஒரு உருவம் மெல்லத் தவழ்கின்றது; ஒரு உருவம் தளர்நடை யிடுகின்றது. ஒரு உருவம் எழுந்து நிற்க முடியாது விழுகின்றது; ஒரு உருவம் இருக்கின்றது; ஒரு உருவம் தடாகத்தைக் கலக்கி விளையாடுகின்றது. ஒரு உருவம் தாயின்

மடித்தலத்தில் அமர்ந்துளது; சிவகுமாரன் இங்ஙனம் ஆடல் புரிகின்றனன்.

ஆடவோ ருருவம் செங்கை அறையவோ ருருவம் நின்று
பாடவோ ருருவம் நாடிப் பார்க்கவோ ருருவம் ஆங்கண்
ஓடவோ ருருவம் ஓர்பால் ஒளிக்கவோ ருருவம் யாண்டுந்
தேடவோ ருருவ மாகச் சிவன் மகன் புரித லுற்றான்.

ஒரு உருவம் நடனம் புரிகின்றது; ஒரு உருவம் தாளமிடுகிறது: ஒரு உருவம் பாடுகின்றது; மற்றொரு உருவம் இவைகளை அன்புடன் நாடிப் பார்க்கின்றது; அங்கே ஒரு உருவம் ஓடுகின்றது; ஒரு உருவம் ஒரு புறம் ஒளிகின்றது; மற்றொரு உருவம் ஒளிந்த உருவத்தைத் தேடுகின்றது. சிவபாலன் ஒருவனே பலவுருவாகி விளையாடுகின்றனன்.

இப்படியாக, ஒருவனே பல உருவாகி விளையாடிக் கொண்டிருந்தான். சிற்பரனாகி வந்த செவ்வேளது திருவிளையாடலின் திறத்தை நோக்கிய அரி அயனாதி அமரர்கள் ஆனந்த மடைந்து, இக் குமாரமூர்த்தி ஒருவனே பல குழந்தைகளாகி நம் முன் ஒரு கணத்தில் எண்ணிலாத பேதமாகி நின்றான். இக்குமாரனுடைய திருவிளையாடல் நமக்கு அறியவொண்ணாதது; எல்லா மாயமும் புரிய வல்லவன்; எல்லையில்லாத ஞானமுள்ளவன். இவனைப்போல மாயை செய்யவல்லார் எவரும் இல்லை. ஆகவே, இவர் ஒப்புயர்வில்லாச் சிவபெருமானே யாம்'' என்றுகூறி வணங்கி நின்றார்கள்.

சேயிவன் ஒருவ னேபல் சிருருக் கொண்டு நம்முன்
ஏயெனு மளவை தன்னில் எண்ணில்பே தத்த னாகும்
ஆயினிக் குமரன் ஆடல் அறிவரி தெமக்கும் எல்லா
மாயமும் இயற்ற வல்லான் வரம்பிலா அறிவன் மாதோ.

(முருகனுடைய பெயரின் சிறப்புக்களை முன்பு கண்டோம். ஐயனது திருநாமங்கள் மற்றும் சிலவற்றின் பெருமையை இங்கு காண்போம்.

முருகப் பெருமானுக்குக் குமாரன் என்று ஒரு பெயருண்டு. குமாரன் என்ற சொல்லுக்கு மூன்று பொருள் உண்டு. 'மாரன்' என்றால் மன்மதன். 'கு' என்பது இகழ்ச்

சிலையைக் காட்டும், தன் அழகால் மன்மதனை இகழ்ந்தவன் என்பது ஒரு பொருள்.

'கு' என்றால் உலகம். 'மா' என்றால் திருமகள். 'ர' என்றால் தருபவன். உலகில் செல்வம் பலவும் தருபவன் குமாரன், இது இரண்டாவது பொருள்.

குமாரன் என்பது குமரன் என்ற சொற் பொருளைத் தரும். அதாவது அழிவில்லாத இளமை உடையவன்; என்றும் இளையோனாய் விளங்குபவன் என்பது பொருள்.

முருகப் பெருமான் கங்கையில் பிறந்ததால் காங்கேயன் என வழங்கப்படுகிறார். கார்த்திகைப் பெண்கள் எடுத்துப் பாலூட்டி வளர்த்ததால் கார்த்திகேயன் எனப்படுவார்.

முருகப் பெருமானுக்கு ஏன் இவ்வளவு அருமை பெருமை யென்றால், சிவனும் அவனும் ஒன்று என்பதால்தான். சுவாமி என்றால் முருகன் ஒருவனைத்தான் குறிக்கும். அதனால்தான் அவன் இருக்கும் மலையைச் சுவாமிமலை என்கிறோம். சுவாமி யென்றாலும், நாதன் என்றாலும் பொருள்ஒன்றுதானே? சிவன், முருகன் இரண்டும் ஒன்றே என்பதால் சுவாமி, நாதன் இரண்டையும் சேர்த்து ஒரு பெயராகச் சொல்கிறோம்:

வெண்ணெய்தான் நெய் என்றாலும் நெய்யால்தானே வெண்ணெய்க்குப் பெருமை? நூல்தான் ஆடையென்றாலும், ஆடையால் தானே நூலுக்குப் பெருமை? அதேபோல் முருகனால் சிவபெருமானுக்குப் பெருமை.

சோமநாதனாகிய சிவபிரானுக்கும் கந்தன் பிரணவப் பொருள் உபதேசித்துச் சுவாமிநாதன் ஆனான். கும்பகோணத்தை அடுத்துள்ள சுவாமிமலையே தந்தைக்குத் தனயன் உபதேசித்த தலம். இத்தலத்தில் தந்தையைக் கோயிலின் கீழ்த்தளத்திலும், நம்பியை மேல் தளத்திலும் காணலாம். தந்தைக்கு உபதேசம் செய்ததால் முருகனுக்குத் 'தகப்பன் சுவாமி' என்றொரு பெயரும் உண்டு. தந்தையினும் பெருமை வாய்ந்தவன் என்பதையே இது குறிக்கும். பிரம்மண்யம் என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்றும், 'மேலான' பிரம்மண்யம் என்ற அடைமொழி சேர்ந்த ஸு-ப் பிரம்மணியம் என்பது கந்தனைக் குறிக்கும் என்றும் சொல்

வர். ஐயன் பிரம்மத்தின் வடிவமாக விளங்குவதாலும் சுப் பிரமணியன் எனப்படுவார். வேதங்களுக்கும் வேதியருக்கும் நாயகனுக மறையின் மரபை ரட்சிப்பதாலும் சுப்பிரமணி யன் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

சுப்பிரமணிய மந்திரத்தின் பொருளை எவ்வளவு கூறினு லும் முடிவு பெருது. அவ்வளவு பொருளையும் நாம் அறிந் திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மந்திரம் தெரிந் திருந்தாலே போதுமானது! மருந்தின் தராதரம் நமக்கெல் லாம் புரிவதில்லை யென்ருலும், உண்ட மருந்து உள்ளே போய்த் தன்னுடைய வேலையைச் செய்யத் தவறுவ தில்லையே!)

12. துணைவர் வரு படலம்

சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய அக்கினிப் பொறிகளின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் உமாதேவியார் ஓடினர் அல்லவா? அவ்வாறு அஞ்சி ஓடிய அம்பிகை, மாலயனுதி தேவர்கள் ஒரு திருக்குமாரர் வேண் டும் என்று சிவபெருமானிடம் விண்ணப்பித்துக் கொண்ட தையும், அவ்வேண்டுகோளுக்கிணங்கிய எம்பெருமான் தமது நுதல் விழியிலிருந்து தீப்பொறிகளைத் தோற்றுவித்து, சரவணப் பொய்கையில் சேர்ப்பித்தருளியதையும் அறிந் தார்.

(முருகன் தோற்றத்துக்குக் காரணமான தேவர்களின் பத்தினிகளும் தம்மைப் போலவே பிள்ளைப் பேறு வாய்க்கப் பெருதிருக்க வேண்டுமென அம்பிகை அப்போது சபித் தனர். ஊன்றிப் பார்த்தால் இதில் சாபமில்லை; தம்மைப் போலவே தேவ மாதர் யாவரும் உயிரினம் முழுவதையும் குழந்தைகளாகக் கருதி தேவ சக்திகளைப் பரப்பவேண்டு மென தேவி அருள் புரிந்ததாகவே தோன்றும்.)

ஆக்கினிப் பொறிகளின் வெம்மை நீங்கியபின், கண்ணு தற் கடவுள் கருணை செய்து, உமாதேவியாரைத் தம் பக் கத்தே இருத்திக் கொண்டார்.

உமாதேவியார் அஞ்சியோடிய அவரது திருவடிகளின் சிலம்பிலிருந்து நவரத்தினங்கள் சிதறின. அந்த இரத்தினங் களெல்லாம் சிவபெருமானின் திருமுன் விளங்கின. அரனு ரின் திருவருளால், அந்நவமணிகளிலிருந்தும் அம்பிகையின் திருஉருவம் தோன்றியது. அவ்வுருவங்களை நோக்கிய சிவ பெருமான், 'வாருங்கள்' என்று திருவாய் மலர்ந்தருளினர். ஒவ்வோர் இரத்தினத்திலிருந்தும் ஒவ்வொரு சக்தியாக நவசக்திகள் தோன்றினார்கள். உமாதேவியாரை யொத்த அவர்கள், முக்கண் மூர்த்தியின் முளரியந்தாளை வணங்கினர். ஐயன் அருளால் கருத்தரித்தார்கள். இதனைக் கண்ட உமா தேவியார். அந்நவசக்திகள் மீது சினந்து. "நீங்கள் எனக்கு மாறுயினமையால், பல காலம் இக்கர்ப்பத்துடன் இருக்கக் கடவீர்" என்று சபித்தார், சாபத்தைக் கேட்ட நவசக்தி களும் அஞ்சி நடுங்கினர்; உடல் வியர்த்தனர். சிவபெரு மானது திருவருளால் நவசக்திகளின் வியர்வையினின்றும் இலட்சம் வீரர்கள் உதித்தார்கள். பொன்னுடை உடுத்தி, வாளையும் பலகையையும் கரத்திலே ஏந்தி, இடியேறனைய சொல்லை உடையவர்களாயிருந்த அந்த வீரர்கள் கண்ணுதற் கடவுள் முன்சென்று, திருவடிகளை இறைஞ்சித் துதித்து நின் ருர்கள். "மைந்தர்களே! அமரர்களுக்குப் பகைவர்களாகிய அசுரர்களை அழிக்க வந்த நமது புதல்வனுகிய முருகவேளுக்கு நீங்கள் யாவரும் படை வீரர்களாகுக" என்று சிவபெருமான் அவர்களை நோக்கித் திருவாய் மலர்ந்தருளினர். அந்த இலட் சம் வீரர்களும் நாடாளும் இறைவனிடம் பேரன்பு உடைய வர்களாய்ச் சிவசந்நிதியை அகலாது திருத்தொண்டின் வழி நின்ருர்கள்.

உமாதேவியாரால் சபிக்கப்பட்ட நவசக்திகள் நடு நடுங்கி, மலைவளர் காதலியை மனமொழிமெய்கரணங்களால் வழிபாடு செய்துகொண்டு, கருப்பத்தோடு பலகாலம் இருந் தரார்கள். அந் நவசக்திகளின் கருவிலே உதித்தவர்கள் காளை யர்களாகி, சிவபெருமானைச் சிந்தித்துத் தொழுது கொண் டிருந்தார்கள். அவர்கள் கருப்பத்தில் சிவயோகம் செய்து கொண்டிருந்ததால் அன்னையருக்கு மிகவும் பாரமாகியது. நவசக்திகள் அதனைத் தாங்கமுடியாமல் வருந்தி. பார்வதி

பரமேசுவரரைப் பணிந்து வேண்டினர். எம்பெருமான் தண்ணருள் புரிந்து, உமாதேவியாரை நோக்கி, "உமையே, உன் காற்சிலம்பினின்றும் தோன்றிய இந்நவசக்திகள் உன் சாபம் காரணமாக நெடுங்காலம் கருப்பத்தைச் சுமந்து துன்புற்றார்கள். இனி புதல்வர்களைப் பெறத் திருவருள் செய்க" என்று பணித்தருளினர். அம்பிகை சினம் நீங்கிப் புன்முறுவல் பூத்தாள். கருணை கொண்ட அம்பிகை நவசக்திகளை நோக்கி, "இனி நீங்கள் ஆற்றலிற் சிறந்த அரும் புதல்வர்களைப் பெறக்கடவீர்களாக" என்று திருவாய் மலர்ந்தருளினர். நவசக்திகளின் வயிற்றினுள் இருந்த வீரர்கள் இதனை அறிந்து யோகத்தை விடுத்தனர். உமாதேவியாரின் கருணை நிறைந்த திருமொழிகளைக் கேட்ட நவசக்திகள் அம்மையப்பரை வணங்கித்துதித்து அங்கிருந்து நீங்கிப் புதல்வர்களைப் பெற்றார்கள்.

நவசக்திகளில் மாணிக்கவல்லியிடத்துத் திரமிக்க வீரவாகுத் தேவரும், மௌத்திகவல்லியிடத்து வீரகேசரியும், புட்பராக வல்லியிடத்து வீரமகேந்திரரும், கோமேதகவல்லியிடத்து வீரமகேச்சுரரும், வைடூரிய வல்லியிடத்து வீரபுரந்தரரும், வைர வல்லியிடத்து வீரராக்கதரும், மரகதவல்லியிடத்து வீரமார்த்தாண்டரும், பவளவல்லியிடத்து வீராந்தகரும், இந்திரநீல வல்லியிடத்து வீரதீரரும் அவதரித்தார்கள். நவமணிகளின் பெயர் பூண்ட நாரீமணிகள் அளித்த இந்த வீரர்கள் ஒன்பதுபேரும் சிவபெருமானுடைய திருவருளினாலே தங்கள் அன்னையர்களது நிறத்தை உடையவர்களாய், பொன்னுடை ஆபரணம் உடுத்தியவர்களாய், பல காலம வளர்ந்த உறுப்புக்களோடு நவசக்திகளுடைய உந்தியின் வழியே நான்முகக் கடவுள் திருமாலின் திருவுந்தியில் தோன்றியதுபோல், உதித்தார்கள். இவ்வண்ணம் உதித்த வீரர்கள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி நின்றனர். எம்பெருமான் உமாதேவியை நோக்கி, "புவனேசுவரி! இவர்கள் நம் மைந்தர்கள்; மிகுந்த அறிவுடையவர்கள்; ஆற்றலுடையவர்கள்; இவர்கள் புதியவர்கள் அல்லர்; நந்திகணத்தவர்களே" என்று திருவாய் மலர்ந்தருளினர். உமாதேவியார் அம் மைந்தர்களுக்குத் திருவருள் புரிந்தார். சிவபெரு

மான் அவர்கள் எல்லோருக்கும் தனித்தனி வாள் கொடுத்து, "ஓர் இலட்சம் மைந்தர்களோடு நீங்களும் சேர்ந்து உங்கள் தலைவனாகிய அறுமுகனுக்கு ஏவல்புரிந்து வருவீர்களாக" என்று அருளிச் செய்தார்.

இந்த ஒன்பது வீரர்களும், முன்பு நவசக்தியரின் வியர்வையில் தோன்றிய இலட்சம் வீரர்களும் முருகப் பெருமானுடைய திருக்கோயிலை அகலாது அவர் பணித்த பணியில் ஒழுகி வந்தனர்.

[சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறி தோன்றியபோது பார்வதிதேவி உண்மையிலேயே அஞ்சி ஓடினாரா? அல்ல. பார்வதி அஞ்சி ஓடுவதுபோல் ஓடியது ஒரு நாடகம். அவ்வாறு ஓடியதால்தானே பாதச் சிலம்பிலிருந்து நவமணிகள் சிதறி, நவசக்திகள் தோன்றினர்? அதற்காகவே அம்பிகை ஓடினார். இச்சக்திகள் அம்பிகையின் வேறு வடிவங்களேயாவர், இதேபோல் உமாதேவியார் நவசக்தியரின் கருப்பம் நீடிக்கச் சாபமிட்டதும் நன்மைக்காகவே, கருப்பத்தில் நன்றாக ஊறிய குழந்தைதான் வல்லமையோடு இருக்கும். கருவில் வலிமையில்லாவிட்டால் உருவிலேயும் வலிமை இருக்காது. இதற்குச் சான்று சகுந்தலை வரலாறு. சகுந்தலை மூன்று ஆண்டுகள் கருவிருந்தாள். மூன்று ஆண்டுகள் கருவில் ஊறிய காரணத்தால், பிறந்த ஆறும் மாதத்திலேயே சிங்கக் குட்டிகளின் பிடரிகளைப் பற்றி இழுத்துவந்து விளையாடினான் பரதன். இளமையில் ஞானம் பெற்ற பெரியோர் சிலர் கருவில் நீண்ட நாள் ஊறியவர்கள். சிவவாக்கியர் அப்படிப்பட்டவர். எனவே, அம்பிகை வரத்தையே சாபமாக மறைத்துத் தந்தார் என்றறிதல் வேண்டும்.)

13. சரவணப் படலம்

முருகப் பெருமான் சரவணப் பொய்கையில் திருவிளையாடல் புரிந்துகொண்டிருந்தபோது, சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி, "உமையே! முன்பு நம் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றி சரவணப் பொய்கையில் வளரும் உன் குமாரனை நாம் இங்கே கொண்டு வருவோம்; வா" என்று

திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்ட அகிலாண்டநாயகி உவகையும், அன்பும் கொண்டாள். "எம்பெருமானே! நமது அருமைப் புதல்வனை நாம் இங்கு கொண்டு வருவோம்; எழுந்தருளுக" என்று கூறினள். சிவபிரான் எம்பிராட்டியுடன் இடபமீது ஏறியருளினர். அதுகண்ட தேவர்கள் "நம்முடைய தீவினைகளெல்லாம் கழிந்தன" என்று உளம் உவந்து போற்றித் துதித்தார்கள். ஆலாலசுந்தரர் முதலியகணத்தவர்களும் உருத்திரர்களும் வந்து இரு பக்கத்தும் நெருங்கித் துதித்தார்கள். திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் பூமாரி பெய்து திருவடிகளை வணங்கிக் கொண்டு புடைசூழ்ந்தனர். பூதர்கள் நானாவித வாத்தியங்களை முழக்கினர்கள். நான்கு வேதங்களும், பிரணவமும் பல கலைகளும் ஒலித்தன; விஞ்சையர்கள் கீதம் பாடினர்கள். சந்திர சூரியர்கள் வெண்குடை பிடித்தார்கள்; பூதர்கள் சாமரம் வீசினர்கள். நூறு கோடி கணங்கள் சூழ்ந்தார்கள்; இடபக்கொடிகள் நெருங்கிச் சென்றன; உமையம்மையுடன் இடபமீது ஏறிக்கொண்ட சிவபெருமான், கயிலையங்கிரியை விட்டுப் புறப்பட்டு இமய மலைச் சாரலில் உள்ள சரவணப் பொய்கையை அடைந்தார்.

அம்மையும் அப்பரும் ஆறுமுகங் கொண்ட முருகக்கடவுளுடைய ஆடலின் தன்மையைப் பார்த்துப் பார்த்துத் திருமுகம் மலர்ந்து திருவுளம் களித்தார்கள். பொய்கைக் கரையில் நின்றிருந்த அம்மையப்பரைக் கண்ட முருகக் கடவுளும் திருமுகம் மலர்ந்து திருவுளம் களித்தார்; சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி. "நீ உன் புதல்வனைக் கொண்டுவருவாய்' என்று பணித்தருளினர். பிராட்டியார் இடபவாகனத்தினின்று இறங்கி, அகில சராசரங்களிடத்தும் தாய்மையன்பு பிரவகிக்கும் இனிய வுள்ளத்திலே பொங்கி எழும் பேரன்புடன் சரவணப் பொய்கையை அடைந்தார். ஒவ்வொரு குழந்தையாகத் தூக்கிக் கொஞ்சும் அளவுக்கு ஆசையைத் தேக்கிவைக்க முடியாத உமாதேவியார் அந்தக் குழந்தைகள் ஆறினையும் அப்படியே அள்ளியெடுத்துக் கொண்டார். அப்படி வாரியெடுத்ததும் ஆறு குழந்தைகளின் உடல்களும் ஒருடலாக மாறியது; தலைகள் மட்டும் ஆருகவே நின்றன. உலகை யெல்லாம் பேதமுறச் செய்து காட்டும்

தேவிதான் அவற்றை ஒன்றுபடுத்திச் சேர்த்தும் வைப்பாள் என்பதன் தத்துவ விளக்கமே இது.

எந்தை சத்திகள் உயிரெலாம் ஒடுங்குறும் எல்லை
முந்து போலஒன் ருகியே கூடிய முறைபோல்
அந்த மில்லதோர் மூவிரு வடிவும்ஒன் ருகி
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்.

உயிர்கள் எல்லாம் சர்வசங்கார காலத்தில் ஒடுங்கும் போது, இறைவனுடைய சக்திகள் ஒன்றுபடுவதுபோல், அம்பிகை ஆறு குழந்தைகளையும் அணைத்தபோது ஆறு திருவுருவங்களும் ஒன்றுகூடின, அதனுல் முருகவேள் கந்தன் என்ற பேரைப் பெற்றனன்.

தேவர்கள் பூமாரி பொழிந்து போற்றி வணங்கினர். ஆறுருவும் ஒன்ருனமையால் ஸ்கந்தன் என்னும் திருநாமத்தை முருகன் பெற்ருர். ஈசனின் கண்ணினின்று ஐயன் தோன்றினுலும் அம்பாளின் அணைப்பினுல் அவன் பெற்ற பெயரையே அவனது தலை சிறந்த நாமமாகக் கொண்டு இந்நூலைக் 'கந்தபுராணம்' என்று சொல்கிருேம். ஈசன் முருகனைத் தீப்பொறிகளாக வெளியே அனுப்பினுர். தேவி தானே அவற்றை ஒன்று சேர்த்து, அருகே கொணர்ந்தார்.

ஆதி நாயகன் கருணையாய் அவலமாய்ப் பரம
போத நீரதாய் இருந்ததன் கொங்கையில் பொழிபால்
ஏதி லாததோர் குருமணி வள்ளமீ தேற்றுக்
காதல் மாமகற் கன்பினுல் அருத்தினள் கவுரி.

குழந்தையைக் கையில் எடுத்த பார்வதிதேவியார், குமரவேளுடைய முடிகள் தோறும் மோந்து அழகிய முதுகினைத் தடவி, ஆதி முதல்வராகிய சிவபெருமானுடைய கருணையாகவும், நிர்மலமாகவும், சிவஞான போதகமாகவும் விளங்குகின்ற தனது திருமுலைகளில் பொழிகின்ற திருஞானப்பாலை குற்றமில்லாத நவமணிக் கிண்ணத்தில் ஏற்றுக் காதல் சிறந்த குமாரனிடம் உமாதேவியார் தந்து குடிக்குமாறு புரிந்தருளினுர். அதனை உண்ட முருகவேள், ஞான பண்டித

சுவாமியாகவும், சிவபெருமானுக்கே குருவாகவும் விளங்கினார்.

குமரவேளுக்குப் பார்வதி தேவியார் பாலூட்டியபின், கந்தக் கடவுளை எம்பெருமான் திருமுன்னே கொண்டுபோய் வணக்கம் செலுத்துமாறு கூற, முருகப் பெருமான் சிவபெருமானை வணங்கி நின்றார். இறைவன் தம் திருக் கரங்களினால் குமரக் கடவுளை எடுத்து மார்பில் அணைத்துப் பெருங் கருணையோடு தம் பக்கத்தில் இருத்தி அருளினார். பின்பு பிராட்டியாரையும் திருக்கரத்தால் எடுத்துத் தமது இடப் பக்கத்தில் இருத்தியருளினார். அம்மையாருக்கும் அப்பருக்கும் இடையில் குமாரமூர்த்தி எழுந்தருள சிவபெருமான் சோமாஸ்கந்த மூர்த்தியாக (உமை, ஸ்கந்தர் இவர்களுடன் கூடிய ஈசனாக) இனிது வீற்றிருந்தார்.

அருத்தி தந்திடு குமரவேள் ஒருபுடை அமரப்
பெருத்த மன்னுயிர் யாவையும் முன்னரே பெற்ற
ஒருத்தி தன்னையுங் கையினா லொய்யென வாங்கி
இருத்தி னான்தன திடந்தனில் எம்மையாள் இறைவன்.

ஏல வார்குழல் இறைவிக்கும் எம்பிரான தனக்கும்
பால னாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞால மேலுறும் இரவோடு பகலுக்கும் நடுவாய்
மாலை யானதொன் றழிவின்றி வைகுமா றொக்கும்.

ஏலவார் குழலியாகிய இறைவிக்கும் இறைவர்க்கும் இடையே குமாரக் கடவுள் வீற்றிருக்கின்ற காட்சி. இரவுக்கும் பகலுக்கும் இடையே மாலைப்பொழுது நிலைபெறாக நிற்பதை நிகர்க்கும்.

(சிவம் - சத்து, சக்தி - சித்து. முருகன் – ஆனந்தம், சச்சிதானந்தம். உண்மை என்பது சிவபெருமான், அறிவு என்பது சக்தி; இன்பம் என்பது முருகன்: மூன்றும் சேர்ந்து மோட்சமாகிய சச்சிதானந்தம்:

'முருகன்' என்ற பெயரில் வல்லினம், இடையினம், மெல்லினம் ஆகிய ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் அட்சரம் உண்டு என முன்பு கூறினோம். வல்லமை பொருந்திய ஈசன் வல்லினம்; மென்மை மிகுந்த தேவி மெல்லினம்; இருவர்க்கு

மிடையே இரண்டு குணமும் கூடிப் பொலிந்தவன் முருகன், 'முருக' என்ற பெயரின் முதலெழுத்தான 'மு' இடையினத்தையே சேர்ந்ததல்லவா?)

இடபத்தின் மீது அரனருக்கும் அம்பிகைக்கும் இடையே ஆறுமுகப் பெருமான் எழுந்தருளியிருத்தலைக் கண்டு, திருமால், பிரம்மன். இந்திரன் முதலிய தேவர்கள் கடல் போல் ஆரவாரித்து, பக்கத்தும் முன்னும் பின்னுமாக நெருங்கி, "குமாரசுவாமியே! அடியேங்கள் சூரபன்மனால் மிகவும் வருந்திக் கொண்டிருக்கிறோம். தாங்கள் ஆட்கொண்டருள வேண்டும்" என்று அவதார காரியத்தை நினைவூட்டுவது போல் விண்ணப்பம் செய்து பூமழை பொழிந்து வணங்கித் துதித்தார்கள்:

அப்பொழுது கார்த்திகைப் பெண்கள் சிவபெருமானைப் பேரன்போடு வணங்கி நின்றனர். இறைவன் அவர்கள் மீது திருவருள் நோக்கஞ் செய்து,

கந்தன்தனை நீர்போற்றிய கடனால்இவன் உங்கள்
மைந்தன்எனும் பெயராகுக மகிழ்வால்எவ ரேனும்
நுந்தம்பக லிடைஇன்னவன் நோன்றாள்வழி படுவோர்
தந்தங்குறை முடித்தேபரந் தனை நல்குவம் என்றான்.

"கார்த்திகை மாதர்களே! முருகனை நீங்கள் வளர்த்தபடியால் இவன் உங்கள் மகன் என்ற பொருளில் கார்த்திகேயன் எனப் பேர் பெறுவான். உங்கள் தினமாகிய கார்த்திகையில் முருகன் திருவடிகளை வழிபடுவோர்க்கு நாம் இகபர நலன்களை யருள்வோம்" என்று சிவபெருமான் அருள் புரிந்தார்.

உமாதேவியார் தம்முடைய திருக்குமாரரைச் சென்று தழுவிய பொழுது பேரன்போடு சுரந்த பால் சரவணப்பொய்கையில் சிந்திப் பெருகிப் புகுந்தது. அந்தப் பாலையுண்ட ஆறு மீன்கள் ஆறு முனிவர்களாக வடிவம் கொண்டு சிவபெருமானைத் துதித்தனர். இதனைக்கண்ட உமையம்பிகை வியந்து நின்றார்; மீன்கள் முனிவர்களாக மாறியதன் காரணத்தைப் பரமேசுவரனிடம் கேட்டாள். இது தேவிக்குத் தெரியாத

விஷயமல்ல என்ருலும், சிவபெருமானின் அமுதவாக்கால் கேட்க வேண்டும் என்று விரும்பினுர்.

“வசிஷ்டரின் குமாரர் சக்தி முனிவர், இளமையிலேயே இறந்துவிட்டார். அப்போது கருவுற்றிருந்த அவரது மனைவி பெற்றெடுத்த பிள்ளை பராசரர். இவருக்கு, தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்ரபாணி, மாலி என்று புதல்வர்கள் அறுவர். இந்தக் குழந்தைகள் அறுவரும் தண்ணீரில் விளை யாடிய பொழுது மீன்கள் இறந்துபோயின. இதனை அறிந்த பராசர முனிவர், “மீனுகக் கடவது” என்று தம் குழந்தை களுக்கே சாபம் கொடுத்தார். (சொந்த மக்களென்றும் ஏனை யோர் என்றும் முனிவர்களுக்கு வித்தியாசம் கிடையாது. அதனுல் சபித்தார். குழந்தைகள் செய்த பிழை சிறிதுதான்; அதற்கு அவர்களடைந்த தண்டனையோ பெரிது. தங்கமே யானுலும் அடித்து நீட்டினுலன்றி ஆபரணமாகச் செய்ய முடியாதல்லவா? தண்டனையாலேயே மக்கள் மேன்மை பெறுவரென்று பராசரர் இப்படி அவர்களைத் தண்டித்தார்.)

மீன்களாய் மாறிய பராசர குமாரர்கள், “எத்தனை காலம் நாங்கள் மீனுக இருக்க வேண்டும்?” என்று கேட்க. “சரவணப் பொய்கையிலே முருகன் அவதரித்ததும் அவ னுக்கு ஊட்டப்படும் ஞானப்பால் சிந்தும். அதனை நீங்கள் சுவைத்தால் சாபம் நீங்கும்” என்று பராசரர் கூறினுர்.

ஈசன் இவ் வரலாற்றைப் பார்வதி தேவிக்குக் கூறினுர்.

சிந்தை மகிழச் சிவபிரானை நோக்கிப் பராசர புதல்வர் அறுவரும் துதித்தனர். இறைவன் அவர்களை நோக்கி, “நீங்கள் திருப்பரங்குன்றம் என்னும் மலையிலே தவம் செய்து கொண்டிருங்கள். விரைவில் நம்முடைய குமாரனுகிய கந்தன் அங்கு வந்து உங்களுக்கு அருள் செய்வான்” என்று திரு வாய் மலர்ந்தருளினுர். பராசர குமாரர்கள் அவ்வாறே அகன்றனர்.

கார்த்திகைப் பெண்களுக்கும் திருமால், பிரம்மன் முதலிய தேவர்களுக்கும் அவரவர் இடங்களுக்குச் செல்லுமாறு சிவ பெருமான் விடை தந்து, கயிலாயத்தை யடைந்து, முருகக்

கடவுளோடும், உமா தேவியாரோடும் இடப வாகனத்தினின்றும் இறங்கிச் செம்பொன் திருக்கோயிலினுட் சென்று சிங்காசனத்தின் மீது வீற்றிருந்தருளினர். நவவீரர்களும், இலக்க வீரர்களும் தங்கள் தலைவனாகிய கந்தப் பெருமானைப் பூசித்து வணங்கி, அவர் தொண்டின் வழி நின்றனர்.

14. திருவிளையாடல்

சிவபெருமானுக்கும் பார்வதி தேவியாருக்குமிடையே எழுந்தருளியிருந்த முருகக் கடவுள் தம் தம்பியரோடு பற்பல திருவிளையாடல்கள் செய்யத் திருவுளம் கொண்டருளினர்.

கந்தப் பெருமான் கழலிணைகளிலே தண்டையும் கழலும் சதங்கையும் ஒலித்தன. திருவரையிலே கிண்கிணி இசைத்தது. திருச்செவிகளிலே குண்டலமும், திருமார்பிலே மதாணியும், திருநெற்றியிலே வீரபட்டிகையும் விளங்கின.

பாடின்படு மணியார்த்திடும் பணிமென்குழல் இசைக்கும்
கோடங்கொலி புரிவித்திடும் குரல்வீணைகள் பயிலும்
ஈடொன்றிய இறுபல்லியம் எறியும் எவரெவரும்
நாடும்படி பாடும்களி நடனஞ்செயும் முருகன். 49

முருகன் இனிய மணியை ஒலிக்கும்; புல்லாங்குழலை ஊதும்; கொம்பு வாத்தியத்தை வாசிக்கும்; வீணைகள் பயிலும்; அதற்கு ஏற்பச் சிறிய வாத்தியங்களை முழக்கும்; எல்லோரும் நாடிக் கேட்குமாறு இனிதுபாடும்; ஆனந்த நடனம் புரியும்.

இளம்பூரணனும் எம்பெருமான் சிறிது அசைந்து ஆடல் புரிகின்றபோது அப்பெருமானுடைய திருஅரையில் கட்டிய தங்கமணிகளாகிய கிண்கிணிகள் "கல்", 'கல்" என்று அசைய, அந்த இன்னேசை பதினலு உலகங்களிலும் பரவியது.

'உலகமுண்ட நாராயணரது நலம் புரியும் வலம்புரிச் சங்கத்தின் ஓசை அருகில் இருந்த கற்பகச் சோலையும் தடாகமும் மட்டுமே கேட்டன. மலைகள் பிளக்குமாறு திருவிளையாடல் புரியும் இச்சிறிய பெருந்தகையின் கிண்கிணியின்

இனிய நாதம் ஈரேழு பதினாலு லோகங்களிலும் கேட்டது' என்று அருணகிரிப் பெருந்தகை அருளிச் செய்கின்றார்.

மண்கமழ் உந்தித் திருமால் வலம்புரி ஓசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது. வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி ஓசை பதினாலுலகமுங் கேட்டதுவே,

கந்தக் கடவுள் மன்றங்களிலும் குன்றங்களிலும் உலவுவார்; சோலைகள் ஆறுகள், கடல்கள், தடாகங்கள் தோறும் சென்று உலவுவார்; சிவத்தலந்தோறும் உலவுவார்; வடமொழி தென் மொழி கற்கும் கழகந்தோறும் கடிகைதோறும் உலவுவார்; மண்ணில் உலவுவார்; திக்குகளில் உலவுவார்; சந்திர சூரியர் முதலிய கிரகங்களும் நட்சத்திரங்களும் உள்ள இடங்களில் உலவுவார்; இந்திர லோகத்தில் உலவுவார்; பிரம்மலோகத்தில் உலவுவார்; நாராயணரது உலகத்தில் உலவுவார்; சிவலோகத்தில் உலவுவார்; பிருதிவி அண்டங்கள் எங்கும் உலவுவார்; அப்பு அண்டங்களெங்கும் உலவுவார்; தேயு, வாயு அண்டங்களிலும் மற்றைப் புவனங்களிலும் உலவுவார்; ஆறுமுகங்கொண்டு பலராய்த் திரிவார்; ஒரு முகங்கொண்டு ஒருவராய்த் திரிவார்; வேதியராகத் திரிவார்; வீரராயும் முனிவராயும் திரிவார்; திருவடிகளால் நடந்து செல்வார்; குதிரை, யானை, யாளி, தேர், விமானம் ஆகியவற்றின் மீதும் செல்லுவார்; மேகத்தின் மீதும் செல்லுவார்; மணியசைப்பார்; வீணை வாசிப்பார்; குழல் ஊதுவார்; கல்லையும் கனிய வைக்கும் இசைபாடிக் கூத்தாடுவார்.

மன்றுதொ றுலாவுமலர் வாவிதொ றுலாவுந்
துன்றுசிறு தென்றல்தவழ் சோலைதொ றுலாவும்
என்றுமுல வாதுலவும் யாறுதொ றுலாவும்
குன்றுதொ றுலாவுமுறை யுங்குமர வேளே.

இவ்வாறாக, கந்தக் கடவுளின் திருவிளையாடல்கள் நாள்தோறும் பெருகின. கந்தக் கடவுளின் திருவிளையாடல்களைக் கண்டு வியந்த உமாதேவியார், சிவபெருமானை வணங்கி, "எம்பெருமானே! நம் குமரன் இச்சிறு குழவிப் பருவத்தே செய்யும் திருவிளையாடல்கள் அதியற்புதமாக இருக்கின்றன.

இதனை எண்ணிப் பார்க்கின்றபொழுது. மாயையில் அவன் தங்களுக்கு ஒப்பானவன் எனக் கருதுகிறேன்; அவனுடைய பெருமையைத் திருவாய் மலர்ந்தருள வேண்டும்'' என்று ஒன்றும் அறியாதவர்போல் வேண்டிக் கொண்டார்.

"உமையே! எல்லா உயிர்களும் இவ்வுண்மையை அறிந்து உய்யும் பொருட்டு உன் குமரனது இயல்பை நீ வினவினாய். நாம் அதனை மகிழ்ச்சியுடன் கூறுவோம்.

உமை வினவ சிவபெருமான் முருகன் பெருமையை மொழிகின்றார்.

நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன்
தன்முக மாகி யுற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண் டெழுத்தும் ஒன்றாய்
உன்மகன் நாமத் தோரா றெழுத்தென உற்ற அன்றே. 50

தேவி! நமக்கு ஆறு திருமுகங்கள் உண்டு. அவையே முருகனுடைய ஆறுமுகங்கள். ஓம் என்ற குடிலையுடன் நமது மந்திரம் ஆறெழுத்தும் உன் மகனுடைய சடக்கர மந்திர மாகியது.

சரவணபவ; ச — மங்கலம்; ர — ஒளி — கொடை; வ—சாத்துவிகம்; ந—போர்; பவ—இவைகளுடன் தோன்றியவர்.

கந்தக் கடவுள் நமது சத்தியே; அவனுக்கும் நமக்கும் வேற்றுமையில்லை. அவன் நம்மைப்போல் யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கிறான். அவன் பாலன் போலத் தோன்றினாலும் எல்லாவற்றையும் உணர்ந்த முற்றறிவினன். தன்னை அன்போடு வழிபடுவோர்க்குச் செல்வத்தையும், ஞானத்தையும் முக்தியையும் கொடுக்க வல்லவன்.

ஆதலின் நமது சத்தி அறுமுகன்; அவனும் யாமும்
பேதகம் அன்றால்; நம்போற் பிரிவிலன்; யாண்டும் நின்றான்;
ஏதமில் குழவி போல்வான்; யாவையும் உணர்ந்தான்; சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்.''

இவ்வுலக இன்பமனைத்தும் தருபவள் உமையாகிய அன்னை. மறுவுலக இன்பம் தருபவன் சிவமாகிய அப்பன்.

குமாரனே இம்மை, நலம், மறுமை நலம். இரண்டையும் தருவான் என்கிறார் அருணகிரிநாதர். இரு பயனும் தருவது அவனது சடக்ஷர மந்திரம் என்பதையும் உணர்த்துகிறார்.

சிவபெருமான் உமையம்மையிடம் மேலும் கூறுவார்: "பார்வதி தேவி! யான் ரூபமற்ற நிட்களன்; நீ அழிவிலா சத்தி. படைத்தல், காத்தல். அழித்தல், இம்மூன்றும் அடங்கும் மாயா லீலையான திரோபவம், இந்நான்கினின்றும் பக்தரை விடுவிக்கும் அநுக்கிரகம் ஆகிய ஐந்தொழிற்கு அதிபனாக, ஐந்து முகமுடைய சதாசிவனாக யாம் இருக்கிறோம். நீ பலவாறாக இருப்பினும் ஒரு முகமுடைய பரமேசுவரி. குமரன் உனது ஸ்வரூபத்தையும் எனது ஸ்வரூபத்தையும் ஒருங்கே கொண்டுள்ளான். ஆதலால், அவன் ஆறுமுகன் எனப்படுகின்றனன்; அவன் ஐந்தொழில்களையும் விளையாட்டாகவே புரிகின்றனன்.

"பிரியமுள்ள கல்யாணி! இச்சகத்திடை வாழும் தேவர்; மனிதர், மிருகம் முதலிய உயிர்களிடத்து வீரியம், செல்வம், அழகு, கல்வி, அறிவு என்பவற்றுள் எத்துணை யெத்துணை உள்ளனவோ, அவையனைத்தும் குமரனுடைய மகிமையே, முருகன் பெருமையை உனக்குச் சுருங்கச் சொன்னேன். விரித்துச் சொல்வதாயிருந்தால் நூறு கோடி வருஷங்களானாலும் முடிவு பெறாது."

"யத்ர யத்ர ஜகத்யஸ்மின் தேவதிர்யங் நராதிஷு!
வீர்யம் ஸ்ரீரதி காந்திர் யா வித்யா ஞானாதிகம் ப்ரியே!
தத்ஸர்வமஸ்ய கல்யாணி விபூதிரிதி நிச்சிதம்!"

என்று கூறியருளினார். உமாதேவியார் தம் அருமைத் திருக்குமாரருடைய பெருமையைக் கேட்டுத் திருவுளம் மகிழ்ந்து பூரித்தார்.

• முருகப் பெருமான் உலகெங்கும் சென்று அரிய திருவிளையாடல் புரிந்தார். மலைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் கொண்டு வந்து சேர்ப்பார்; பின்னர் அம்மலைகளைத் தலைகீழாகப் பூமியில் நிறுத்துவார். ஏழு கடல்களையும் ஒன்றாக்குவார்; சக்ரவாளகிரியைப் பாதாளத்தில் புகுத்துவார். கங்கை நதியை ஓடவிடாமல் அடைப்பார். பாதாள

லோகத்தில் உள்ள அஷ்ட நாகங்களையும் பிடித்து மேருமலை முதலிய பெரிய மலைகளில் பூட்டித் தேராக உருட்டிச் செல்வார். திசைகளில் உள்ள ஐராவதம் முதலிய எட்டு யானைகளையும் கொண்டு வந்து ஒன்றோடொன்று போர் புரியுமாறு செய்வார். கருடனையும் வாசுகியையும் பிடித்து ஒன்றோடொன்று போர் புரியுமாறு செய்வார். சூரியனைச் சந்திர மண்டலத்திலும், சந்திரனைச் சூரிய மண்டலத்திலும் சேர்ப்பார். மேகங்களுக்குள் இருந்த மின்னல்களையும் இடிகளையும் பறித்து மாலையாக்கித் தரித்துக் கொள்வார். ஆகாயத்தில் செல்லும் விற்கள் இரண்டையும் பிடித்து. கிரகங்கள் நட்சத்திரங்கள் இவற்றை உருண்டைகளாக்கி தேவர்களது தலை, மார்பு, கழுத்து, முகம் இவைகளைக் குறியாகக்கொண்டு எய்தி, வில் வன்மையைக் காட்டுவார். சுராசுரர்கட்கும். நரர்கட்கும் யாதொரு தீங்கும் நேராத வண்ணம் குமரக் கடவுள் திருவிளையாடல்களைப் புரிந்தார்.

ஆறுமுகப் பெருமானின் திருவுருவத்தைக் காணமல் திருவிளையாடல்களாகிய பெரும் செயலை மட்டும் உணர்ந்த தேவர், வியப்புற்று, மேரு மலையிலிருந்த தேவேந்திரனிடத்து இவ்வதிசயங்களைத் தெரிவித்தனர். "நாம் எல்லோரும் சென்று பிரம்மதேவரிடம் கேட்போம்" என்றான் இந்திரன். தேவர்கள் உண்மையான தவம் புரிந்தவர்களாதலால் அவர்கள் கண்களுக்குத் தெரியும் வண்ணம் ஆறுமுகக் கடவுள் ஒரு திருமுகமுடைய பாலராக வந்து அங்கு தோன்றினர்.

தாம் முருகன் என்பதை உணர்த்தாமலே மேரு மலையை அசைத்து அதன் கொடுமுடிகளைத் தாமரை இதழ்களைக் கொய்வதுபோல் கொய்து வீசினர் எம்பிரான். இந்திரன் முதலிய இமையவர்கள், 'மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் மாறுபடச் செய்தவன் இவனே. இவனது ஆற்றல் அசுரர்களின் ஆற்றலைக் காட்டிலும் கொடியது. இவனைப் பாலன் என்று கருதாமல் போர் செய்து வெல்வோம்' என்று தீர்மானித்தார்கள். யாருக்காகத் தவமிருந்து பிரார்த்தித்தனரோ அவரையே எதிர்க்க முற்பட்டனர். (இப்படித்தான் நாமும் ஆண்டவன் செயல் எது என்று அறியாமல் யார்

யாரிடமோ பகை கொள்கிறோம். நமக்கு அவன் போதனை யாக அளிக்கும் இன்னல்களைத் தீங்காக எண்ணி வருந்து கிறோம்.)

அக்கினி மலையைச் சூழும் கொசுக்களைப்போல் தேவர்கள் முருகப் பெருமானைச் சூழ்ந்து கொண்டனர். இந்திரன் போர்க்கோலம்பூண்டு தன் வெள்ளை யானைமீது ஏறி, குலிசம், வாள், வில், வேல் என்னும் ஆயுதங்களைத் தாங்கிச் சென்று முருகக் கடவுளோடு போர் செய்யத் தொடங்கினான். தேவர் களுக்காக அசுரருடன் போராடவே தோன்றிய ஐயனும் தேவருடனேயே போராட எண்ணம் கொண்டார். இந்திரன் ஏவிய ஆயுதங்கள் பூக்களைப்போல் முருகக் கடவுள்மீது விழுந்தன. அதனைக் கண்ட இந்திரன் வஜ்ராயுதத்தை எய்து ஆரவாரித்தான். அது முருகப் பெருமான்மீது பட்டு மணல் போலப் பொடியாயிற்று. அவனது ஐராவதம் கர்ஜித்துக் கொண்டு முருகன் திருமுன் சென்றது. அதனைக் கண்ட கந்தப் பெருமான், சங்கல்ப மாத்திரத்தில் ஒரு வில்லையும் பல கணை களையும் படைத்து, கர்ஜித்து வந்த யானைமீது ஒரு கணையை விடுத்தார். அது யானையின் நெற்றியில் புகுந்தது. யானை புலம்பி வீழ்ந்து மடிந்தது. ஐராவதம் வீழ்ந்து மடிந்ததைக் கண்ட இந்திரன் பெரிதும் வருந்திச் சினமே மிகுந்தான். அவன் கோபத்துடன் தனது வில்லை வளைக்க இந்திரனின் தோள்மீது முருகப்பெருமான் ஒரு கணையை விடுத்தார். அக் கணை பட்டதும் இந்திரன் தனது ஆற்றலை இழந்தானாயினும் ஒருவாறு வேலை எம்பெருமான்மீது விடுத்தான். அது சிறு புல்லைப்போல் சென்று அழிந்தது. இந்திரன் வீழ்ந்தான். வருணன்மீது முருகப் பெருமான் நான்கு அம்புகளை விடுத் தார்; வருணன் இறந்தான். இயமன்மீது ஐந்து அம்புகளை விடுத்தார்; இயமன் இறந்தான். சந்திரன் இறந்தான். வாயு, அக்கினி யாவரையும் வதம் செய்தார். எஞ்சிய தேவர்கள், "இவன் ஒருவனே எல்லோரையும் கொன்றுவிடுவான்" என்று மனம் கலங்கி ஓடி ஒளிந்தார்கள். ஆறுமுகப் பெரு மான் போர்க்களத்தில் சர்வசங்கார காலாக்கினி ருத்திர ரைப்போலத் தனித்து நின்று உலவினர்.

• • •

இவற்றையெல்லாம் கண்ட நாரத முனிவர், கருணையின் மிகுதியினால் தேவகுருவாகிய வியாழ பகவானிடம் ஓடினார்; நிகழ்ந்தவற்றை யெல்லாம் கூறினார். அது கேட்ட தேவகுரு போர்க்களத்துக்கு ஓடினார். அங்கே மாண்டு கிடந்த தேவர் களைக் கண்டு மனங் கலங்கினார். அற்புதத் திருவிளையாடல் கள் புரிந்து கொண்டிருந்த கந்தவேளையடைந்து, திருவடித் தாமரைமீது விழ்ந்து வணங்கினார்.

"எம்பெருமானே! தாரகன், சிங்கமுகன், சூரன் ஆகிய அசுரர்களின் தொல்லையால் இந்திரன் பெரும் துன்பமுற்று, தனது பொன்னுலகத்தையும் விட்டு இம்மேரு மலையில் மறைந்து வசித்திருந்தான். தேவரீரது கருணையினால் அசுரர்களை யெல்லாம் அழிக்க அவன் எண்ணியிருந்தான். அதற்காகப் பல காலம் அருந்தவம் செய்து வாடினான். துயரெல்லாம் நீங்கியதென்று சரவணப் பொய்கையில் தேவரீரது திரு அவதாரத்தைக் கண்டு உளம் பூரித்தான். தேவரீருக்குத் தொண்டு செய்யவே விரும்பிய இந்திரன் தாங்கள் திருவிளையாடல் புரிந்ததை அறிந்திலன். திருமால் முதலியோர் தேடிக் காணாத சிவபெருமானும், உமாதேவி யாரும், அவர் திருவருள் பெற்றோர் சிலருமன்றித் தேவரீரை யாரே அறிய முடியும்? சிற்றறிவு காரணமாக, தங்களை யறியாது போர் செய்தான். மற்ற தேவர்களும் தங்களை எதிர்த்து மாண்டனர். தவறு செய்த குழந்தைகளைத் தாய் தந்தையரே தண்டிப்பது நீதியாகுமோ? அருட்பெருங்கடலே! ஆற்றல் மிக்க அசுரர்களை அடியோடு ஒழித்தருளி, தங்கள் திருவடியை மறவாத தேவர்களுடைய பிழையைப்பொறுத்து அவர்கள் அறிவு பெற்று எழுமாறு திருவருள் செய்ய வேண்டும்" என்று தேவகுரு இறைஞ்சினார்.

முருகப் பெருமான் திருமுறுவல் செய்து, இந்திரன் முதலிய தேவர்கள் வாகனங்களோடும், ஆயுதங்களோடும் எழும் வண்ணம் திருவுளம் கொண்டருளினார். உடனே தேவர்கள் யாவரும் உயிர் பெற்றெழுந்து மெய்யறிவு பெற்றனர். பாலகரை முருகன் என அறிந்து மனமுருகினர். செய்த பிழைக்கு மனம் கலங்கி எம்பிரானுடைய சரண கமலங்களில் வீழ்ந்து பணிந்து,

"கந்நம; ஐந்துமுகர் தந்தமுரு கேசநம: கங்கை உமைதன்
மைந்தநம; பன்னிரு புயத்தநம; நீபமலர் மாலை புனையும்
தந்தைநம; ஆறுமுக ஆதிநம; சோதிநம; தற்ப ரமதாம்
எந்தைநம; என்றும்இளை யோய்நம; குமாரநம என்று
[தொழுதார்"

கந்தக் கடவுளே போற்றி, ஐம்முகமுடைய அரனார் தந்த முருகேசா! போற்றி; கங்கைக்கும் மலைமங்கைக்கும் பாலனே! போற்றி; பன்னிரு புயங்களை யுடையவனே! போற்றி; கடப்ப மலர் மாலை புனைந்த தலைவனே! போற்றி, ஆறுமுக முதல் வனே! போற்றி; சோதியே போற்றி; தனிப் பரம்பொரு ளாகிய எமது பிதாவே போற்றி; என்றும் இளையவரே! போற்றி; குருமூர்த்தியே! போற்றி என்று தொழுதார்கள்.

தொழுது நின்ற தேவர்களுக்குக் கந்தவேள் திருவருள் செய்து அச்சமும் துன்பமும் நீக்கினார். தேவர்களும், "முன்பு தக்கன் வேள்வி செய்தபோது சிவபெருமானை இகழ்ந்தான். அந்த வேள்வியில் தரப்பட்ட பாகத்தை அடியேங்கள் உண்டோம். அதனால் ஏற்பட்ட பாதகம் இன்னும் தொடரு கிறது. அத்துடன் தேவரீருடன் போர் செய்ய முற்பட்ட பாதகமும் சேர்ந்தது. பரம பிதாவே! பரம கருணையால் அடியேங்களைத் தண்டித்து அப்பாவங்களைப் போக்கி யருளினீர். தங்களுக்கு நாங்கள் என்றும் அடிமைகள். இவ்வாறு கூறுவதும் தவறு! ஏனெனில் சிறுவர்கள் தங்களைத் தங்கள் தாய்தந்தையருக்குத் தருவது என்பதும் தகுதியான செயலல்லவே" என்றனர்.

"நம்மைச் சிறுவன் என்று நினைந்து நீங்கள் போர் புரிந்தீர்கள். நமது வன்மையையும் பெருமையையும் இன்னும் நீங்கள் உணரும் வண்ணம் காட்டுவோம்" என்று கூறினார் சுவாமி. எதற்காக இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்தார்? பல கோடி அசுரர்களையும் தம்மால் மாய்க்க முடியும் என்ற நம்பிக்கையையும், ஆறுதலையும் தேவர்க்கு ஊட்டவே இவ் விதம் செய்தருளினார்.

இந்நேரம் புரிந்ததற்கும் மேலாகப் பேரற்புதம் புரிய எண்ணி அற்புதக் கோலம் கொண்டார் ஐயன். விசுவ முழுவதும் தம் வடிவான வடிவேலன், எட்டுத் திக்குகளும்,

பதினறு உலகங்களும், எட்டு மலைகளும், ஏழு கடல்களும், புறக் கடலும், சக்ரவாளகிரியும், வெவ்வேறண்ட நிரைகளும், பிரம-விஷ்ணு-உருத்திரர்களும் அடங்கிய விசுவரூபமெடுத்தார்.

எண்டிசையும் ஈரேழு திறத்துலகும் எண்கிரியும் ஏழு கடலுந்
தெண்டிரையும் நேமிவரை யும்பிறவும் வேறுதிரி பாகி யுளசீர்
அண்டநிரை யானவும் அனைத்துயிரும் எப்பொருளு
[மாகி அயனும்
விண்டுமர னுஞ்செறிய ஓருருவு கொண்டனன் விறற் குமரனே.

முருகப் பெருமான் விசுவரூபம் எடுத்துத் திவ்விய தரிசனம் தந்தருளியபோது ஏழு பாதாள லோகங்களும் சுவாமியின் திருவடியில் இருந்தன. ஏழு தீவுகளின் புடவி கணைக்காலில் காணப்பட்டன. ஏழு கடல்களும் உடுத்த உடையில் காணப்பட்டன. திசைகள் புயங்களில் தெரிந்தன. ஆகாயம் நாபியில் அமைந்தது. தியுவென்னும் சுவர்க்கம் சென்னியிலும், சந்திரன் சூரியன் அக்கினி என்பன அழகிய மூன்று கண்களிலும் பொருந்தின. மேகங்கள் கேசங்களிலும் நட்சத்திரங்கள் அக்கேசங்களிலிருந்த அலங்கார மலர்களிலும் விளங்கின. சிவ பரம்பொருள் ஆன்மாவிலும், சிவசக்தியாகிய கௌரி மதியிலும், விஷ்ணு இடப் பாரிசத்திலும், பிரம்மதேவர் வலப் பாரிசத்திலும் காணப்பட்டனர். சரஸ்வதி வேத மணம் கமழும் வாக்கிலும் இட்சுமி திருநிலையிலும் காணப்பட்டனர், பிராணன் முதலிய பத்து வாயுக்கள வாயு நிலைகளிலும், காலாக்கினி ருத்திரன் சீற்ற நிலையிலும், அக்கினி தேவன் சாடராக்கினியிலும், அளவற்ற மாநாகங்கள் நூபுரம் முதலிய காலணிகளிலும், ஓஷதியனைத்தும் உரோமங்களிலும் பொலிந்தன. அந்த உரோமங்களில் நுண்ணிய கிருமிகளைப்போல் அண்ட கோடிகளெல்லாம காணப்பட்டனவாம்.

மண்ணளவு பாதலமெ லாம்சரணம்
மாதிர வரைப்பும் மிகுதோள்
விண்ணளவெ லாமுடிகள் பேரொளி யெலாம் நயனம்
மெய்ந்ந டுவெலாம்

பண்ணளவு வேதமணிவாய் உணர்வெ
லாஞ் செவிகள் பக்கம் அயன்மால்
எண்ணளவு சிந்தையுமை ஐந்தொழிலும்
நல்கியருள் ஈசன்உயிரே.

பேரொளி வாய்ந்த பேருருவத்தைத் தரிசித்த தேவர்களது விழிகள் பார்வையற்றுப் போய்விட்டன. சுரர்களாகிய பிரம்ம, விஷ்ணுக்கள் முதலிய தேவ சிரேஷ்டர்கள் கந்தக் கடவுளது அளவிலாத தேஜோ மண்டலத்தில் ஆயிரத்தில் ஓர் அம்ச அளவையே அவன் அருளால் அறிய முடிந்தது.

ததஸ்தே விபுதேந்த்ராத்யா: ப்ரஹ்ம விஷ்ண்வாதயஸ்ஸுரா:
தத்தேஜோ மண்டலஸ்யைதே ஸஹஸ்ராசம் அலோகயங்! |

தேவர்கள் வேதவாக்கியங்களால் எண்ணிலாத ஸ்தோத்திரங்களைச் செய்து "எம்பெருமானே! அடியேங்கள் தேவரீரது விசுவரூபத்தை முற்றும் தரிசிக்கும் வண்ணம் எங்களுக்கு ஆற்றல் தந்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள். கருணைக் கடலாகிய குமாரக் கடவுள் திருவுளம் இரங்கி அவர்களுக்குத் திவ்விய நேத்திரங்களைக் கொடுத்தார். (கண்ணபிரான் கலித் தொடக்கத்தில் அர்ஜுனனுக்கு விசுவரூப தரிசனம் தந்தபோதும் அதனைக் காண திவ்விய நேத்திரம் நல்கினர்.) அநந்தகோடி சூரியர்கள் திரண்டாற்போலப் பேரொளி வீசி நின்ற விசுவ ரூபத்தை அடி முதல் முடி வரையும் தேவர்கள் தரிசித்து, ஆனந்த பரவசம் கொண்டு வணங்கி நின்றார்கள்.

அடிமுதல் முடியின் காறும் அறுமுகன் உருவம் எல்லாம்
கடிதவன் அருளால் நோக்கிக் கணிப்பிலா அண்ட முற்றும்
முடிவறும் உயிர்கள் யாவும் மூவருந் தேவர் யாரும்
வடிவினில் இருப்பக் கண்டு வணங்கியே வழுத்திச் சொல்வார்.

அம்புவி முதலாம் பல்பேர் அண்டமும் அங்கங் குள்ள
உம்பரும் உயிர்கள் யாவும் உயிரலாப் பொருளும் மாலும்
செம்பது மத்தினோனும் சிவனோடும் செறிதல் கண்டோம்
எம்பெரு மானின் மெய்யோ அகிலமும் இருப்ப தம்மா.

"எம்பெருமானே! பிருதிவியண்டம் முதலிய அண்டங்களும், ஆங்குள்ள தேவர்களும், உயிர்ப் பொருள்களும், பிரம்மன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும், தேவரீரது திருமேனியில் இலங்கக் கண்டோம். அகிலம் எங்கும் இருப்பது தேவரீரது திருமேனிதான் என்பதைப் பெருங்கருணையுடன் தாமே அறிவித்ததால் பிரத்தியட்சமாக அறிந்து கொண்டோம். அருவமும் உருவமுமாகிய தேவரீரது திருவருளைப் பெற்றுப் பேருருவத்தின் அடியையும் முடியையும் எங்களைப் போலக் கண்டவர் வேறு யார் உளர்? தங்களின் முழுப் பெரும் திருவுருவத்தைத் தரிசித்ததன் மூலம் இனி நாங்கள் பிறவித் துன்பமடையாது முத்தியின்பம் அடைவோம்" என்று தேவர்கள் மகிழ்ந்து கூறினர்.

முருகப் பெருமான் தமது விசுவ ரூபத்தை மறைத்து, ஆறு முகங்களுடன் முன்னைய வடிவத்தில் காட்சி தந்தார். இந்திரன் முருகக் கடவுளை வணங்கித் துதித்து, "கருணாமூர்த்தியே! அடியேனும் தேவர்களும் தொண்டு செய்ய விண்ணுலகத்தைத் தேவரீரே அரசு செய்து சூராதியரை அழிக்கவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

இகமொடு பரமும் வீடும் ஏத்தினர்க் குலப்பு றுமல்
அகனமர் அருளால் நல்கும் அறுமுகத் தவற்குத் தன்சீர்
மகபதி யளிப்பான்சொற்ற வாசகம் சுடரொன்றங்கிப்
பகவனுக் கொருவன் நல்கப் பராவிய போலு மாதோ.

தம்மை வழிபடும் அடியவர்கட்கு இகம் பரம் வீடு என்று முத்திற நலன்களையும் அருளால் வழங்கும் ஆறுமுகத் தடங்கடவுளுக்கு, இந்திரன் தனது அரசைத் தருகின்றேன் என்று கூறியது, அக்கினி தேவனுக்கு ஒருவன் ஒரு விளக்கைத் தருகின்றேன் என்றது போலும்.

கந்தப் பெருமான் இந்திரனை நோக்கி அருளுடன் "நீ நமக்குத் தந்த அரசை நாம் உனக்கே திருப்பித் தந்தோம், நீங்கள் சேனைகள். நாமே சேனைகளுக்குச் சேனாதிபதியாகி அசுரர் யாவரையும் வெல்லுவோம். வருந்தாதீர்கள்" என்று கூறி அருள் செய்தார். தேவர்கள் பெரு மகிழ்ச்சி கொண்டனர்.

"எம்பெருமானே! இந்த அண்டத்து மலைகள், கடல்கள், உலகங்கள், உயிர்கள் முதலியன வெல்லாம் இந்நாளில் தேவரீர் திருவிளையாடலால் முறை பிறழ்ந்தன. அவைகளை யெல்லாம் முன்பு போல நிறுவியருள வேண்டும்" என்று இந்திரன் வேண்டிக் கொண்டான். எம்பெருமான் இளநகை புரிந்து, "நம்மாலே முறை பிறழ்ந்தன எல்லாம் பண்டைய நிலையை அடையக் கடவன" என்று திருவாய் மலர்ந் தருளினர். உடனே அவையெல்லாம் முன்னை நிலையை அடைந்தன.

இந்திரன் கந்தக் கடவுளிடம், "மூவர் தேவாதிகள் தம் பிரானே! வேத முடிவிலே விளங்குகின்ற தங்கள் திருவடி களைப் பூசித்து வழிபட விரும்புகின்றோம். அதற்குத் திரு வருள் புரியவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். ஐயன் இசைந்தார். தேவர்கள் பின்தொடர மேரு மலையி லிருந்து புறப்பட்டுத் திருக்கயிலை மலைக்கு அணித்தாயுள்ள ஒரு மலையை அடைந்தார். அங்கு இந்திரன் தேவதச்சனைக் கொண்டு நவமணிகள் பதித்த ஒரு செம்பொன் ஆலயமும், அதனுள் ஒப்பற்ற அரியணையும் அமைத்தான். தேவர்கள் திருமஞ்சனம், சந்தனம், நறுமலர், தூபம், தீபம், நிவேதனப் பொருள்கள் முதலியவற்றைக் கொண்டுவந்தனர். கோயிலி னுள் அமைந்திருந்த அரியணையில் முருகக் கடவுள் எழுந்தரு ளினர். இந்திரனும் மாலயனாதி தேவர்களும் "ஞானநாய கரே! நாங்கள் எல்லாரும் உமது சேனைகள். தாங்கள் எமக் குச் சேனாதிபதியாகுக" என்று கூறி ஆகாய கங்கையால் திரு மஞ்சனம் செய்து அர்ச்சித்துப் போற்றி வழிபட்டார்கள். தேவ சேனாதிபதியாக முடிசூட்டினார்கள்.

ஆன காலை அமரர்கள் வாசவன்
ஞான நாயக! நாங்கள் உனக்கொரு
தானை யாகும்! தலைவனை நீயென
வான நீத்தத்து மஞ்சனம் ஆட்டினர்.

(தேவசேனாதிபதியாகப் பட்டம்சூடிய பெருமானை "தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே" என்று வாய் நிறைய வாழ்த்துவார் அருணகிரிநாதர்.)

கந்தக் கடவுளைத் தேவர்கள் பூசித்தற்கு அவர் எழுந்தருளிய அம்மலை 'கந்த வெற்பு' எனப் பெயர் பெற்றது. முருகப் பெருமான் கந்த வெற்பை நீங்கித் திருக்கயிலையை அடைந்தார். இந்திரனும் தேவர்களும் தங்கள் தங்கள் இடங்களுக்குச் சென்றார்கள். திருக் கயிலையில் இலக்கத் தொன்பது வீரர்களும், பூதர்களும் சேவிக்க முருகப் பெருமான் எழுந்தருளியிருந்தார்.

15. தகரேறு படலம்

சிவபெருமானின் பிரீதிக்காக நாரத முனிவர் ஒருவேள்வி செய்ய விரும்பினார். அரி, அயன், இந்திரன், அந்தணர், அருந்தவர் முதலியவர்களுடன் பூவுலகில் யாகத்திற்கெனத் தகுந்த க்ஷேத்திரம் அமைத்து வேதாகம விதிப்படி வேள்வி செய்யத் தொடங்கினார். வேள்வி செய்யும்போது மந்திரம் மாறுபட்டதால் யாக அக்கினியிலிருந்து செவ்வானம் போன்ற நிறத்துடன் ஓர் ஆட்டுக்கடா தோன்றியது. (ரஸாயனப் பரிசோதனைகளில் ஒரு பொருளுக்கு மாறாக வேறு உபயோகித்தால் விபரீதம் ஏற்பட்டுவிடுமல்லவா? ஒலிகளின் ரஸத்துக்கட்புகுந்து முனிவர்கள் கண்ட மந்திர நாதங்கள் மாறுபட்டாலும் இவ்வாறே ஆகும். ஒலிகளும் நம் கண்ணுக்குத் தெரியும் பொருட்களைப்போல் உள்ளே அணுசக்தி கொண்டுள்ளன.)

கோர உருவத்துடன் வேள்வித் தீயினின்று எழுந்த ஆட்டுக்கடா பெரும் சினத்துடன் ஆரவாரம் செய்தது. அதனைக் கண்டு அங்கிருந்தோர் அனைவரும் அஞ்சி நடுங்கினார்கள். உயிர்களைக் கொல்ல நினைத்த அந்த ஆட்டுக்கடா அஷ்ட குலாசலங்கள் அசைந்தாட ஆர்த்தது. வயிரத்துக்கு நிகரான கொம்புகளை நிலத்தில் குத்தித் தூளி கிளப்பியது. அதனைக் கண்ட நாரத முனிவர் முதலியோர் நடுநடுங்கி யாகத்தைவிட்டு வெளியேறினர். ஆட்டுக்கடா அவர்களைத் துரத்திச் சென்று போரிட்டது. போரில் சிலரது கால்கள் ஒடிந்தன; சிலரது குடல்கள் சரிந்தன. சிலர் கைகளை இழந்தனர். ஆட்டுக்கடா உயிர்களைத் துன்புறுத்தி உலகம் யாவும் அஞ்ச உலவியது. ஆகாயத்தில் பாய்ந்து சூரிய

சந்திரர்களது தேர்களை அழித்தது. தேர்களில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளுடன் போர் புரிந்தது.

இதனைக் கண்டு அஞ்சி ஓடிய நாரதரும் மற்ற முனிவர்களும், தேவர்களும் கயிலை மலையை அடைந்தனர். மலையில் ஏறிச் செல்லும்போது எல்லா ஆற்றலும், எல்லா முதன்மையும், எல்லா அனுக்கிரகமும் உடைய எந்தை கந்தவேள் இலக்கத்தொன்பது வீரர்களுடன் கூடி விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டனர். அவரைக் கண்டதும் சந்திரனைக் கண்ட கடல்போல் உவகை பொங்க உளம் மகிழ்ந்தனர். "நாம் இதற்காகச் சிவபெருமானிடம் செல்ல வேண்டாம. நம் துயரத்தை நீக்கும் பொருட்டுக் குமரக் கடவுளே இங்கு எழுந்தருளி யிருக்கின்றார்" என்று தங்களுக்குள் தெளிவு கொண்டனர். நம்பினோர்க்கு அருளும் எம்பிரான் முன் சென்று அவரது திருவடித் தாமரையில் வீழ்ந்து, ஓலமிட்டுத் துதித்தனர்.

"மூவர்கள் முதல்வா ஓலம்; முக்கண்ணன் புதல்வா ஓலம்;
சேவலங் கொடியாய் ஓலம்; சிறந்தசிற் பரனே ஓலம்;
தேவர்கள் தேவே ஓலம்; தெய்வநா யகனே ஓலம்;
ஆவலுற் றருள்வாய் ஓலம்; அறுமுக ஓலம்; ஓலம்!"

என அரற்றிப் போற்றினர்.

கந்தப் பெருமான் தேவர்களுடைய பெருந் துன்பத்தைக் கண்டு மனமிரங்கி, "அஞ்சாதீர்கள்" என்று அபயம் தந்தார்.

தம் அருகே நின்ற வீரவாகு தேவரைப் பார்த்து, "வேள்வியில் தோன்றி உயிர்களைக் கொன்று எங்கும் திரிகின்ற ஆட்டுக்கடாவை நீ விரைந்து சென்று இப்பொழுதே பிடித்துக்கொண்டு வா" என்று பணித்தருளினர். வீரவாகு தேவர் அவ்வாக்ஞையைச்சிரமேல் தாங்கி, ஆட்டுக்கடாவைத் தேடிச் சென்றார். ஆட்டுக்கடா பூமியில் உள்ளவர்களைச் சிதைத்து, கீழ் ஏழுலகிலும் சென்று அங்குள்ளோரை வதைத்து, சுவர்க்கலோகம் முதலிய மேல் உலகங்களையும் தன் கொம்பால் தகர்த்து நாசஞ் செய்து, நான்முகனின் உலகமாகிய சத்திய லோகத்தில் இறுமாந்து ஆரவாரித்து நின்றது.

வீரவாகுதேவர் அதன் கொம்பை அநாயாசமாகப் பற்றிக் கரகர வென்று சப்தம் உண்டாகுமாறு இழுத்துக் கொண்டு போய்த் திருக் கயிலாயமலை வந்தடைந்து முருகன் திருமுன் விடுத்துப் பணிந்து நின்றார். தேவர் யாவரும் கண்டு நடுங்கிய ஆட்டினை வீரவாகு தேவர் அவ்வளவு எளிதில் அடக்கியது எவ்வாறு? ஆறுமுகனின் அருளாலும் ஆறுமுகனிடம் அவருக்கிருந்த அளப்பரும் பக்தியாலுமேயாகும்.

முருகக் கடவுள் முறுவல் பூத்து, தேவர்களையும் முனிவர்களையும் பார்த்து, "ஆட்டுக்கடா நம்மிடம் வந்துவிட்டது. இனி நீங்கள் அஞ்சாது யாகத்தை இனிது முடியுங்கள்" என்று அருளிச் செய்தார்.

தேவர்கள் எல்லையில்லாத திருப்தியும் ஆனந்தமும் அடைந்தனர். "எம்பெருமானே! அடியேங்கட்கு இன்னும் ஒரு வரம் தரவேண்டும். இவ்வாட்டுக் கடாவை வேறெங்கும் விடாமல் தாங்கள் வாகனமாக ஏற்றுக்கொண்டு அருளுதல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டனர்.

(கொடியவர்களே அடியவர்களை விடப்பாக்கியசாலிகள்! எம்பிரானுடனேயே எப்போதும் இருப்பார்கள். நடராஜர் பாதத்தின் கீழே அநவரதமும் முயலகன் வாழ்வது போலும், துர்க்கையம்பிகையின் திருவடியின் கீழே மகிஷன் நிரந்தரமாய் வாழ்வது போலும், முருகனுடன் ஆட்டுக்கடா வாழலாயிற்று. முயலகனும் மகிஷமும் போல் ஆடு அஞ்ஞானத்தைக் குறிக்கும்) ஞானமூர்த்தி அஞ்ஞானத்தின் மீது ஆரோகணித்தார்.

(ஆண்டவனுக்கு வேண்டுவது வேண்டாதது எதுவுமே இல்லை. நமக்குத் தீயனவாகத் தோன்றுபவையும் இறைவனுக்கு வேண்டாதன அல்ல. நம்மிடமிருந்து அவற்றைப் பிரித்துத் தன்னிடமே வைத்துக் கொள்வான்.

அக்கினிக்கு வாகனம் ஆடு. முருகப் பெருமான் அக்கினியேதான். அக்னிபூ என வேதத்தால் பிரதிபாதிக்கப் படுபவன். எனவே ஐயனும் ஆட்டை வாகனமாகக் கொண்டு அருளினார். அக்கினி தேவனுக்குள்ளேயிருந்து அதற்கு வெப்பம் தரும் மூலாக்கினி தேவன் தானே என்பதைக்

காட்டுதற் பொருட்டு ஆட்டு வாகனத்துடன், அண்டங்களி லெல்லாம் பவனி வந்தார். ஜனனமற்ற முழு முதற் பொருள் என்பதால் அஜன் என்று பெயர் கொண்ட ஆறுமுகச் சிவனை அஜவாகனன் என்பதாலும் வேதங்கள் "அஜன்" என்று அழைக்கின்றன.

முருகப் பெருமான் மும்மலத்தை அடக்கியவர் என்பதாலேயே அவருக்கு மயில், ஆடு, யானை என மூன்று வாகனங்கள். ஆணவம், கன்மம், மாயா என்று மலங்கள் மூன்று. நமது இயல்பிலேயே, நமது அமைப்பின் அணுவிலேயே, உள்ளது 'நான்—எனது' என்ற இரு கூறு கொண்ட ஆணவ மலம். நமது செயல்களில் வந்து சேருவது கன்ம மலம். நாம் பரம்பொருளிடமிருந்து பிரிந்து பேதமாய் அஞ்ஞான வயப்பட்டு நிற்பது மாயா மலம்.

ஆன்மா என்று உளதோ அன்றே ஆணவ மலமும் உண்டு. அதன் வேகத்தை அடக்கவே கன்ம, மாயா மலங்கள் உள்ளன. தன் இயல்பால் செருக்கு மிகுந்த மயில் ஆணவ மலம். தனது செயலால் மதம் பிடித்த யானை கன்ம மலம். அறிவற்ற ஆடு மாயா மலம்.

காலா காலத்தில் மலம் நீங்காதாயின் எப்படி நோயற்ற வாழ்வு வாழ முடியாதோ அவ்வாறே இம் மும்மலம் நீங்காது போனால் ஆன்மாவுக்கு உய்வு இல்லை. 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை' என்று மணிவாசகர் பாடியது போல் இறைவனிடமிருந்து ஜீவர்களை வேறு படுத்தினற் போல் மாயா மலத்துக்காட்படுத்தும் அம்பாள்தான் மும் மலத்தைப் போக்கவும் ஜீவர்களைத் தூண்டி, அவர்களை நல் வழியில் 'வளர்த்தெடுத்து' அருள்கிருள். மும்மலத்தினின்றும் நீங்கிப் பசுபதியுடன் சேரவேண்டும்.

"இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயு நானுமாய்
இறுகும் வகை பரமசுக மதனையருள்" —திருப்புகழ்

முருகப் பெருமானிடம் மயில்போல் அடங்கியிருக்கிறது ஆணவ மலம்; ஆடுபோல் ஒடுங்கியிருக்கிறது மாயா மலம், கட்டுண்ட யானைபோல் முடங்கியிருக்கிறது கன்ம மலம்.

16. அயனைச் சிறை புரிதல்

குமரக் கடவுள் ஆட்டுக் கடாவை வாகனமாகக்கொண்டு எல்லா உலகங்களிலும் உலவிப் பற்பல திருவிளையாடல்களைப் புரிந்து இலக்கத்தொன்பது வீரர்களும் சூழ வெள்ளி மலையின் கண் எழுந்தருளியிருந்தார்.

ஒருநாள் பிரம்மதேவர், இந்திராதி தேவர்களுடனும், கின்னரர், கிம்புருடர், சித்தர், வித்யாதரர் முதலிய கணங்களோடும் சிவபெருமானைச் சேவிக்கும் பொருட்டுத் திருக்கயிலாய மலையை அடைந்தார். சிவ சந்நிதிக்குச் செல்லும் வழியில் முதல் கோபுர வாயிலின் வடபால் செவ்வேள் லீலை புரிந்து கொண்டிருந்தார். பிரம்மனைத் தவிர மற்ற எல்லோரும் யான்—எனது என்னும் செருக்கின்றி முருகப்பிரானை வணங்கி வழிபட்டனர். பின்னர் திருக்கோயிலினுட் சென்று சிவபெருமானையும், உமாதேவியாரையும் வலம் வந்து துதித்துத் திருவருளைப் பெற்றுத் திரும்பினுர்கள்.

எனுதியான் எனுஞ்செருக் கிகந்துதன் னுணர்ந்துளார்
மனுதிகொண்ட செய்கைதாங்கி மரபின்முத்தி வழிதரும்
அநாதியீசன் அடிவணங்கி அருள டைந்து மற்றவன்
தனுதுமன்றம் நீங்கிவாயில் சாருகின்ற வேலையில்.

திரும்பி வரும் வழியில் இலக்கத்தொன்பது வீரர்கள் புடைசூழ நவரத்தின சிங்காதனத்தில் எழுந்தருளிமுருகவேள் திருவிளையாடல் செய்து கொண்டிருந்தார். எல்லாத் தேவர்களும் ஆறுமுக வள்ளலை வலம் வந்து அடிமலர் தொழுது தோத்திரம் புரிந்து சென்றனர். மூவர்களுக்கும் தேவர்களுக்கும் எட்டாத முழுமுதலாகிய முருகப் பெருமானைக் கண்ட பிரம்ம தேவர், 'இவன் ஒரு பாலன்தானே, இவனை நானும் வணங்க வேண்டுமா?' என நினைத்து இறுமாந்து சென்றுர்.

'சிவன் வேறு; தான் வேறு' அன்று; மணியும் ஒளியும் போல் சிவனும் தானும் ஒன்று' என்பதையும், முருகனுகிய தன்னை யொழித்துச் சிவபெருமானை வழிபடுவோர்க்குத் திருவருள் உண்டாகாது என்பதையும் பிரம்மன் வாயிலாக உல

குக்கு உணர்த்த எண்ணிய முருகப் பெருமான் அயனின் செருக்கை அகற்றி நல்லருள் பாலிக்கவும் திருவுளங் கொண்டார்.

தருக்குடன் செல்லும் பிரம்மனை அழைத்தார் கந்தன். பிரம்மதேவர் ஆறுமுகனை அணுகி அகங்காரத்துடன் சிறிது கைகுவித்து வணங்கிடாத பாவனையாக வணங்கினர்.

முருகப் பெருமான் பிரம்மனை நோக்கி "நீ என்ன தொழில் செய்கின்றாய்?" என்று வினவினர். முருகனின் கம்பீரக் குரலே எத்தொழிலுக்கும் அதிபராக, மற்றைய தேவரை அவரவரது தொழிலில் செலுத்துபவர் அவர்தான் என்பதைப் புலப்படுத்தியது, பிரம்மனுக்கும் சிறிது அச்சமுண்டாயிற்று.

"சிவபெருமான் ஆணையினாலே படைக்கும் தொழில் செய்கின்றேன்" என்று நடுங்கிக் கொண்டே கூறினர்.

"படைப்புத் தொழிலை மேற்கொண்டிருக்கும் உனக்கு வேதம் வருமோ?" என்று முருகவேள் வினவினர்.

"சிவபெருமான் அளவற்ற வேத சிவாகமங்களை அருளிச் செய்து அவற்றுள் சிலவற்றை யான் உய்யும் பொருட்டு எனக்கு உபதேசித்துள்ளார்; அவற்றை நான் உணர்வேன்" என்று நான்முகன் கூறினர்,

கந்தவேள் அதைக்கேட்டு நகைத்தார், பிரம்மன் வேதத்தை அறிந்திருந்தானே யன்றி உணர்ந்திருக்கவில்லை என்பதை ஐயன் தெரிந்துகொண்டே நகைத்தார். "நன்று நன்று! வேத உணர்ச்சி நினக்கிருக்குமாயின் முதல் வேதமாகிய இருக்கு வேதத்தினைச் சொல்லக் கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

தாம ரைத்தலை யிருந்தவன் குடிலைமுன் சாற்றி
மாம றைத்தலை எடுத்தனன் பகர்தலும் வரம்பில்
காமர் பெற்றுடைக் குமரவேள் நிற்றிமுன் கழறும்
ஓமெ னப்படும் மொழிப்பொருள் இயம்புகென் றுரைத்தான்.

வேதங்களுக்கெல்லாம் முன் சொல்லப்படும் 'ஓம்' என்ற குடிலை மந்திரத்தைக் கூறி, இருக்கு வேதத்தைச் சொல்ல

ஆரம்பித்தார் பிரம்மதேவர். அப்பிரணவ மந்திரத்தையே தமது திருமுகங்களில் ஒன்றாகவுடைய வேத மந்திரஸ்வரூப ராகிய ஐயன் திருநகை செய்து, "பிரம்மனே நில்! நீ முதலில் சொன்ன ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் யாது?" என்று கேட்டார்.

பிரம்மன் பிரணவத்தின் பொருள் தெரியாது விழித் தனன். அவனது கண்கள் சுழன்றன; நாணமுற்று விக்கித் திகைத்தான்.

முகத்தில் ஒன்றதா அவ்வெழுத் துடையதோர் முருகன்
நகைத்து முன்னெழுத் தினுக்குரை பொருளென நவில
மிகைத்த கண்களை விழித்தனன் வெள்கினன் விக்கித்
திகைத்தி ருந்தனன் கண்டிலன் அப்பொருள் திறனே.

சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் பீடமாயும், எல்லா மந்திரங்களுக்கும், வேதங்களுக்கும் மூலமாயும், மற்றைத் தேவர்களுக்கெல்லாம் பிறப்பிடமாயும், காசியில் இறப் பவருக்கு எம்பெருமான் உபதேசித்தருளும் தாரகப் பிரம்ம மாயும் விளங்கும் பிரணவத்தின் பொருளை ஆராயலானான் பிரம்மன்.

ஈசன் மேவரு பீடமாய் ஏனையோர் தோற்றும்
வாச மாய்எலா எழுத்திற்கும் மறைகட்கும் முதலாய்க்
காசி தன்னிடை முடிபவர்க் கெம்பிரான் கழறும்
மாசில் தாரகப் பிரமமாம் அதன்பயன் ஆய்ந்தான்.

(தாரகம் என்ற சொல்லுக்குத் தாண்டச் செய்வது என்று பொருள். எதனைத் தாண்டச் செய்வது? பிறவிப் பெருங் கடலைத் தாண்டச் செய்வது. பிறவிக் கடலைக் கடக்க உதவுவதால் ஓம் என்பது தாரக மந்திரம் எனப்பெற்றது.

கர்ப்ப ஜன்ம ஜராமரண ஸம்ஸார மஹத்பயாத் ஸந்தாரயதி தஸ்மாத் தாரகம்—என்கிறது தாரகோபநிஷதம்.)

தாரகப் பிரமத்தின் பொருள் பிரம்ம தேவருக்கு விளங்க வில்லை. அவ்வாறெனில் நாம் எம்மாத்திரம்? யாருமே தங்க ளது அறிவால் விளங்கிக் கொள்ளக் கூடிய தத்துவமன்று, இறைவனிடம் அடைக்கலம் புகுந்தால் அவனது அருளால் மட்டுமே பிரணவப் பொருளை உணரலாம்.

தூமறைக் கெலாம் ஆதியும் அந்தமும் சொல்லும்
ஓமெ னப்படும் ஓரெழுத் துண்மையை யுணரான்
மாம லர்ப்பெருங் கடவுளும் மயங்கினன் என்றால்
நாமி னிச்சில அறிந்தனம் என்பது நகையே.

தூய வேதங்களுக்கெல்லாம் முதலிலும் முடிவிலும் சொல்லப்படும் ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருளை பிரமதேவரே அறியாது மயங்கினார் என்றால், நாம் இனிச் சிறிது அறிந்தோம் என்பது நகைப்புக்கு இடமாகும் என்கிறார் கச்சியப்பர்.

பிரணவப் பொருள் அறியாத பிரம்மதேவர் சிவபெருமானிடம் வேதங்களைப் பாடம் கேட்டபோது இதனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் போனேமே' என்று எண்ணி எண்ணி ஏங்கினார். பிரம்மதேவர் மயங்குவதைக் கண்ட முருகப் பெருமான் "பிரணவத்தின் பொருளை அறியாத நீ படைத்தல் தொழிலை எவ்வாறு புரிவாய்?" என்று சினந்து கூறிப் பிரம்ம தேவரின் நான்கு தலைகளும் குலுங்கும் வண்ணம் குட்டினார்.

எட்டொணுதவக் குடிலையிற் பயன் இனைத் தென்றே
கட்டுரைத் திலன் மயங்கலும் இதன்பொருள் கருதாய்
சிட்டி செய்வதித் தன்மைய தோவெனுச் செவ்வேள்
குட்டினுன் அயன் நான்குமா முடிகளும் குலுங்க.

ஒன்றினைச் செய்யு முன் அதன் பொருளை உணர்ந்திருக்க வேண்டும். இல்லாவிடில் விபரீதமாகும். உலகைப் படைப்ப தாகச் சொன்ன பிரம்மனே அதன் உட்பொருளாக உறையும் பிரணவ வார்த்தையையே அறிந்திருக்கவில்லை; அதனால்தான் முருகன் அவ்வளவு சினம் கொண்டார்.

பிரம்மதேவனின் நான்கு தலைகளிலும் முருகப்பெருமான் தமது பன்னிரண்டு கரங்களையும் தலைக்கு மூன்று வீதம் வைத்துக் குட்டினார். பிரம்மதேவரின் எட்டு நாசித் துவாரங்களிலும் உதிரம் வந்தது. அவரது சிகை விபூதிபோல் துகள் பட்டு உதிர்ந்ததாம். இதை அருணகிரியார் கூறுகிறார்:

நாலுமுக னுதியரி யோமெனஅ தாரமுரை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடு மிளையோனே.

"உகந்த பிரணவத்தின் உண்மை—புகன்றிலையால்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்றுமுனங்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே"
—கந்தர் கலிவெண்பா.

பிரம்மதேவனின் அகங்காரம் முழுதும் தொலைந்துபுனிதமுறும்படி குமார மூர்த்தி தமது திருவடியால் அவனை எற்றித் தள்ளிப் பாத தீட்சை தந்தருளினார். கற்பகோடி காலம் கடுந் தவம் புரிந்தாலும் கிடைத்தற்கரிய எம்பெருமான் திருவடி பிரம்மதேவர் மேல் படுவதற்கு அவர் எத்தகைய புண்ணியம் செய்தாரோ?

மறைபுரிந்திடுஞ் சிவனருள் மதலை மாமலர்மேல்
உறைபுரிந்தவன் வீழ்தரப் பதத்தினால் உதைத்து
நிறைபுரிந்திடு பரிசனரைக் கொடே நிகளச்
சிறைபுரிந்திடு வித்தனன் கந்தமாஞ் சிலம்பில்.

கந்தக் கடவுள் வீரவாகு தேவரை நோக்கி, "தம்பி! இருண்ட மனத்தினனாகிய இவனைச் சிறையிடுக" என்று கட்டளையிட்டார். வீரவாகு தேவரும் மற்ற வீரர்களும் பிரம்மதேவரின் கைகளிலும் கால்களிலும் விலங்கு பூட்டி, அவரைக் கந்தவெற்பில் ஒரு குகைக்குக் கொண்டுபோய் "முருகவேளை நம்பி எண்ணாமையால் கம்பி எண்ணக் கடவாய்" என்று சிறை வைத்தனர்.

அயனைச் சிறைபுரிந்த பின் கந்தக் கடவுள் படைப்புத் தொழிலைத் தாமே ஏற்கத் திருவுளங்கொண்டார். முத்தொழிலுக்கும் தலைவராம் முருகப் பெருமான் கந்தவெற்புக்குச் சென்று ஒரு திருமுகமும் நான்கு திருக் கரங்களும் கொண்டு, ஒரு திருக்கரம் ஜபமாலையும், ஒரு திருக்கரம் கமண்டலமும் தாங்க, மற்றைய இரு திருக்கரங்களும் வரதமும் அபயமும் வழங்க, படைப்புத் தொழிலை மேற்கொண்டருளினார். நவ வீரர்கள், இலக்க வீரர்கள், இந்திரன், திருமால், தேவர்கள், இருடியர் முதலிய கணத்தவர்கள் எம்பெருமானைச் சூழ்ந்து துதித்து நின்றார்கள்.

ஒருகரந் தனில் கண்டிகை வடம்பரித்(து) ஒருதன்
கரதலந் தனில் குண்டிகை தரித்திரு கரங்கள்

வரதமோ டபயந்தரப் பரம்பொருள் மகனேர்
திருமுகங் கொடு சதுர்முகன் போல்விதி செய்தான்.

மூவர்களை முத்தொழில் புரிய நியமித்த எம்பெருமான், நாமே இப்போது சிருட்டித் தொழில் புரிந்தநால் அதற்கேற்பத் திருமகள் நாயகனுற் காத்தல் தொழிலும், உருத்திர மூர்த்தியால் அழித்தல் தொழிலும் புரிய முடியவில்லை. முருகப் பெருமான் அவற்றையும் தாமே செய்தருளி முத்தொழிற்கும் தாமே முதல்வர் என்பதைக் குன்றின்மேலிட்ட விளக்கென உணர்த்தியருளினர்.

உயிரினுக் குயிராகியே பரஞ்சுடர் ஒளியாய்
வியன்மறைத் தொகைக் கிறதாய் விதிமுதல் உரைக்கும்
செயலினுக் கெலாம் ஆதியாய் வைகிய செவ்வேள்
அயன்எனப் படைக் கின்றதும் அற்புதம் ஆமோ?

உயிர்க்குயிராயும், பேரொளிப் பிழம்பாயும், வேதமுடிவாயும், ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்கட்கும் தலைமையாயும் விளங்கும் முருகப் பெருமான் படைத்தல் தொழிலைப் புரிகின்றதில் ஒன்றும் வியப்பு இல்லை.

சொற் பிரபஞ்சம், பொருட் பிரபஞ்சம் என்னும் இருவகைப் பிரபஞ்சங்களையும் கந்தவேள், தாம் நிமித்தக்காரணராகி நின்று, முதற் காரணமாகிய மாயையிலிருந்தும், துணைக் காரணமாகிய சத்தியைக் கொண்டும் படைத்து, காத்து, அழித்து திருவருள் புரிந்தார். செவ்வேட் பரமன் புரியும் படைப்பில் தோன்றிய ஆன்மாக்கள் பெற்ற பேற்றை அளவிட்டுக் கூற வல்லார் யார்? அப்படைப்பில் வந்த யாவரும் புண்ணிய வடிவாகவே விளங்கினர். பாவம் என்பது அறவே நீங்கிற்று. எங்கும் மெய்ஞ்ஞானம் மிளிர்ந்தது; சிவ மணம் கமழ்ந்தது.

ஆறுமுகக் கடவுள் அளிவற்ற காலம் அயனைச் சிறை வைத்துச் சிருட்டித் தொழிலைப் புரிந்து கொண்டிருந்தார்.

17. அயனைச் சிறை நீக்குதல்

பிரம்மனைச் சிறையிலிருந்து விடுவிக்க எண்ணிய திருமால். ஆதித்தர்களும், மருத்துக்களும், வசுக்களும், சப்த மாதர்களும், விஞ்சையர்களும், கருடர்களும், இயக்கர் களும், திக்குப் பாலகர்களும், சந்திரனும், ஏனைய கிரகங்களும், நட்சத்திரங்களும், அகத்தியர் முதலிய முனிவர்களும், ஆதி சேடனும், நாகர்களும் தொடர வெள்ளியங்கிரி யடைந்தார். சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, மறைமுறை துதித்து நின்றார். "எம்பெருமானே! தேவரீருடைய திருக்குமாரராகிய சுப்பிரமணியக் கடவுள், பிரம்மதேவரிடம் பிரணவத்துக்குப் பொருள் கேட்டார். பிரம்மதேவர் அதனை யறியாது மயங் கியதால் அவரது சிரங்களில் குட்டி, சிறையில் அடைத்து விட்டுத் தாமே படைப்புத் தொழிலையும் பாலனத் தொழிலை யும் செய்கின்றார். அடியேனுக்கு வேலை யில்லை..."

"எமது துன்பம் நீக்கி இன்பம் வழங்கும் பொருட்டு அவ தரித்த முழு முதற்கடவுளாகிய முருகப்பெருமானைப்பிரம்மன் தமது பேதைமையால் சிறுபிள்ளை என்று எண்ணி வணங்காது சென்றார். அதன் பயனாக எண்ணற்ற காலமாகச் சிறைப் பட்டு மனம் நொந்திருக்கிறார். எவ்வுயிர்க்கும் தேவரீரே பரம பிதா. முருகக் கடவுளைப் போல் பிரம்ம தேவரும் தேவரீருக்கு மைந்தரே யாவர். ஆகவே அவரைச் சிறையி னின்றும் விடுவித்துத் திருவருள் புரிய வேண்டும்" என்று திருமால் விண்ணப்பித்துக் கொண்டார்.

சிவபெருமான் புன்முறுவல் செய்தார். "தேவர்களே! சிவம் வேறு, குமரன் வேறு என்று பின்னம் பேசுவோர் மட வோரே. என்னையும் குமார மூர்த்தியையும் பிரித்து உணர் கின்றவர்கள் ஒரு போதும் இன்பமடைய மாட்டார்கள். இந்த உண்மையை உணராத பிரம்மன் நல்லுணர்ச்சி பெற்று உய்யும் பொருட்டே நம் குமாரன் அவனைத் தண்டித்துச் சிறையில் அடைத்தானேயன்றித் தன்னை வணங்கவில்லை என் பதற்காக அல்ல.

'ஈசாநஸ் ஸர்வவித்யாநாம் ஈச்வரஸ் ஸர்வபூதாநாம்
ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிர்
ப்ரஹ்மா சிவோமே அஸ்து ஸதாசிவோம்,'

என்று வேதம் எம்மை ஒரு முறையே பிரணவ சப்தத்தால் அழைக்கின்றது. நம் குமாரக் கடவுளையோ, 'சுப்ரஹ்மண்யோம்! சுப்ரஹ்மண்யோம்! சுப்ரஹ்மண்யோம்!' என்று மூன்று முறை 'ஓம் ஓம் ஓம்' எனப் பிரணவத்தில் இணைத்துக் கூவி யழைக்கும். இதனை யறியாது தருக்குற்ற பிரம்மனைச் சிறையினின்று விடுவிப்பது எவ்வாறு?

''எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும் பிரமனுக்கும்
ஈசன் என்னத்
தக்கமுதற் பரப்பிரமஞ் சதாசிவன்ஓம் எனவேதம்
சாற்று மல்லான்
முக்கனல்சூழ் வேள்வியிற் சுப்பிரமணியன் ஓமெனவும்
முக்காற் கூறும்
இக்கருத்தை யறியானை யெவ்வாறு விடுவிப்பாய்
இயம்பு மின்னே?''

என்று வினவியருளினர்.

எனினும், கருணைக் கடலானபடியால் கண்ணுதற் கடவுள் தேவர்பால் திருவுளம் இரங்கினர். ''நந்தி! நீ குமரக் கடவுளிடம் சென்று, நம் வாசகத்தைக் கூறி நான்முகனைச் சிறைவிடுத்து இங்கு மீண்டு வருக'' என்று பணிந்தருளினர். நந்திதேவர் அக்கட்டளையைச் சிரமேற் கொண்டு அளவற்ற கணங்கள் சூழக் கந்த வெற்பை யடைந்து, ஆறுமுகவள்ளலது அருணசரணாரவிந்தங்களை முறைப்படி வணங்கித் துதித்து வந்த காரியத்தைக் கூறினர்.

முருகக் கடவுள் புன்னகை புரிந்து, ''நான்முகனைச் சிறை நீக்கேன்; இங்கு நீ நின்றால் உன்னையும் சிறையிலிடுவேன்; விரைந்து ஓடிப் போ!'' என்று திருவாய் மலர்ந்தருளினர். திருநந்தி தேவர் வேறொன்றும் விளம்பாது அஞ்சி நடு நடுங்கி, முருகப் பெருமானை வணங்கிக்கொண்டு, திருக்கயிலை சென்றார். அங்கே சிவபெருமானின் திருமுன் சென்று வணங்கி, முருகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய வாசகத்தை விண்ணப்பம் செய்தார்.

நந்திதேவர் கூறியதைக் கேட்ட மணிகண்டப் பெருமான் திருநகை செய்து, சிங்காசனத்தினின்றும் எழுந்தார். இடப வாகனத்தில் அமர்ந்து திருமாலும் ஏனைய தேவர்களும் அருந்தவ முனிவரும் துதித்துப் பின் தொடரத் திருக்கயிலை, நீங்கித்தாமே கந்த வெற்பை அடைந்தார். முருகக் கடவுளின் திருக்கோயிலின் முன் சென்றவுடனே இடபத்தினின்றும் இறங்கி, உள்ளே புகுந்தருளினார்.

தந்தையைக் கண்ட குமாரக் கடவுள். "எந்தையர் வந்தருளினார்" என்று இருக்கை விட்டிறங்கி எம்பெருமானை எதிர்கொண்டு வணங்கி, அழைத்துக் கொண்டு போய்த் தமது திவ்விய சிங்காசனத்தின் மீது எழுந்தருளச் செய்தார். "உயிருக்குயிராகிய எப்பெருமானே! தாங்கள் இங்கு எழுந்தருளி வந்த செயல் யாது?" என்று வினவினார். சிவபெருமான் தமது திருக்குமாரருடைய இனிய மொழிகளைக் கேட்டுப் பேருவகை கொண்டார். "குழந்தாய்! நீ பிரம்மனைச் சிறை புரிந்தாய். அதனை நீக்கக் கருதியே நாம் வந்தோம், அவனைச் சிறையினின்று நீக்கக் கடவாய்?" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இளம்பூரணர் தமது திருமுடியை அசைத்தார். "எந்தையே! பிரணவத்தின் பொருள் தெரியாதவன் உலகத்தைப் படைப்பது என்பது பேதைமையே! அவன் வேதங்களில் வல்லவன் என்பதும் பேதைமையே! ஐயனே! தங்கள் திருவருளின் அழகே அழகு! வேதத்தின் முன் நின்ற குடிலை மந்திரத்தின் பொருளறியாதவன் தங்களுக்குப் பூசை செய்வதா? தேவரீர் படைத்தல் தொழிலாகிய பொறுப்பை அவனுக்குத் தருவதா? அகந்தை நீங்காத அயனைச் சிறையினின்றும் வெளியே விடுவது முறையன்று" என்று கூறினார்.

சிவபெருமான் சற்றே சினம் கொண்டவர் போல் குமரக் கடவுளைப் பார்த்தார். "மகனே! உன் செய்கை நன்று. நமது ஆணையின்படி நந்தி வந்து கூறியும் நீ கேட்கவில்லை; நான் முகனைச் சிறையினின்றும் விடுவிக்குமாறு நாமே வந்து கூறியும் மறுக்கலாமோ?" என்று மொழிந்தருளினார்.

பிதாவின் கருணையைக்கண்ட முருகக் கடவுள். "ஐயனே தேவரீர் திருவுளம இதுவாயின் பிரம்மனைச் சிறை நீக்கித்

தருவேன்'' என்று கூறினர், அருகில் நின்ற பூதர்களில் சிலரை நோக்கிய கந்தக் கடவுர், "நீங்கள் விரைந்துசென்று பிரம்மனைச் சிறை நீக்கி, நம் முன் கொண்டு வாருங்கள்'' என்று பணித்தருளினர். அந்த ஆணையின் வண்ணம் பூதர்கள் சென்று குகைக்குள்ளே விலங்கிடப்பட்டு ஒடுங்கியிருந்த பிரம்மனைச் சிறை விடுத்து முருகவேள் திருமுன் அழைத்து வந்தனர். முருகவேள் பிரம்மனின் கையைப் பிடித்துச் சிவ பெருமான் திருமுன் விடுத்தார்.

சிறையினின்றும் விடுபட்ட பிரம்மன் சிவபெருமானை மெய்யன்புடன் வணங்கித் துதித்து வெட்கி நின்றான். சிவ பெருமான் நான்முகனுக்குத் திருவருள் நோக்கம் செய்தார். "நான்முகனே! நீ நெடுங்காலம் சிறைப்பட்டு இளைத்தனை போலும்!'' என்று திருவாய்மலர்ந்தருளினர்.

"கருணைக் கடலே! தேவரீருடைய திருக்குமாரர் அடியேனுக்கு அளித்த இத்தண்டனை சிறைவாசம் அல்ல; தவச் சாலை வாசம்! அவர் திருவடி தீண்டியது ஸ்பரிச தீட்சை! அதனால், யான்-எனது என்னும் அகந்தை அழிந்து இவினைகள் நீங்கின; சித்தசுத்தி விளைந்தது; அடியேன் புனிதனானேன்'' என்று விண்ணப்பம் செய்தார் பிரம்மதேவர். சிவபெருமான் பிரம்மனை நோக்கி, "நீ இன்று முதல் உன் படைப்புத் தொழிலை முன் போலவே செய்துகொண்டிரு'' என்று அருளிச் செய்தார்.

கந்தக் கடவுளை நோக்கித் திருமுறுவல் செய்தார் தந்தைக் கடவுள். "குழந்தாய்! வருக'' என்று அழைத்தார். அருகே வந்த குமாரக் கடவுளைத் தமது திருக் கரத்தினல் எடுத்துத் தமது மடியின் மீது அமர்த்திக்கொண்டு உச்சி மோந்து தாமரையனைய தமது திருக்கரங்களால் தழுவிக் கொண்டார். "குழந்தாய்! பிரம்மனும் அறியாத பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமா? தெரிந்தால் சொல்வாயாக'' என்று திருவாய் மலர்ந்தருளினர்.

காமரு குமரன் சென்னி கதுமென வுயிர்த்துச் செக்கர்த்
தாமரை புரையுங் கையாற் றழுவியே அயனுந் தேற்ரு

ஓமென வுரைக்கும் சொல்லின் உறுபொருள்
உனக்குப் போமோ
போமெனில் அதனை யின்னே புகலென இறைவன்
சொற்ருன்.

"அண்ணலே! உலகமெல்லாம் பெற்றருளிய அன்னை யாகிய எம்பிராட்டிக்குத் தாங்கள் பிறர் அறியாத வண்ணம் உபதேசித்தருளிய பிரணவத்தின் பொருளை இரகசியமாகக் கூறுவதே அன்றி யாவரும் கேட்கும் வண்ணம் சொல்வது முறையாமோ? காலம் இடம் அறிந்து முறைப்படி கேட்டால் சொல்வோம்" என்ருர் ஆசாரிய நாயகரான ஆறுமுக சுவாமி.

உபதேசிக்கும் குருவாயிருந்த சிவபெருமானுக்கு உப தேசம் கேட்கும் சிஷ்யனுகவும் இருக்கவேண்டும் என்ற ஆசை பிறந்தது. எளிமைக்காகவே ஏங்குபவரல்லவா எம் பெருமான்!

"குழந்தாய்! நீ கூறியது முற்றிலும் உண்மை" என்று கூறிய சிவபெருமான், தமது இருக்கை விட்டெழுந்து, கைகளைக் குவித்து, சிரம் தாழ்த்தி, வாய் பொத்திச் செவி சாய்த்து, "உலகங்களுக்கெல்லாம் நாதனே! குமாரக் கடவுளே!" என்று பக்தியுடன் துதித்து நின்ருர்.

நாத போற்றி யெனமுது தாதைகேட்க அனுபவ
ஞான வார்த்தை யருளிய பெருமாளே. —திருப்புகழ்.

குருநாதரிடம் சிஷ்யன் எப்படிநடந்துகொள்ளவேண்டும் என்ற தர்மத்தை உலகுக்கு உணர்த்தும் பொருட்டுச் சிவபெரு மான், தனக்குத் தானே முருகனுகிய அப்பெருமானிடம் உப தேசம் கேட்டார்.

"நிருபகுரு பரகுமர என்றென்று பக்தி கொடு
பரவஅரு ளியமவுன மந்த்ரந்த னைப்பழைய
நினதுவழி யடிமையும்வி ளங்கும்ப டிக்கினிது
ணர்த்தியருள்வாயே"
—திருப்புகழ்

புரமெரித்த புரிசடைக் கடவுள் பக்தியுடன் வழிபட்டு நிற்க, முருகக் கடவுள் தவிசின் கண் வீற்றிருந்து கல்லாலின்

கீழ் தென்முகப் பரமாசாரியராக எழுந்தருளி சனகாதி முனிவர்களுக்கு மோன நிலையை உபதேசித்த குருநாதருக்கும் குருவாக விளங்கி, அகரமுதலெனவுரைசெய் ஐம்பத்தொரக்ஷரத்தில் தொடங்கிக் குடிலை மந்திரத்தின் பொருளை அமுதமான மழலை மொழியால் அற்புதம் அற்புதமாக உபதேசித்தருளினர்.

''அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்
அறிவை யறிவது பொருளென அருளிய பெருமாளே'
—திருப்புகழ்

பிரணவ மந்திரத்துக்குப் பொருள் தெரியாமலே உலகைப் படைத்துத் தருக்குற்றிருந்த பிரம்மனுல் நேர்ந்த அமுதமான நிகழ்ச்சியல்லவா இது?

(பிரணவப் பொருள்தான் என்ன? ப்ர என்றுல் விசேஷமானது; நவம் என்றுல் புதுமை. அநுபவிக்க அநுபவிக்கப் புத்தம் புது விசேஷ உண்மைகளை உணர்த்துவது பிரணவம் (பிரநவம்). என்றும் வாடாமல், காலத்தால் தேயாமல் எப்போதும் புதுமையாகவே இருக்கும் ஆன்ம தத்துவம்தான் பிரணவம். உலகை மாயா என்று சொல்லுகிறோம். இதற்கு வேறு வேறு மதஸ்தர்கள் வேறு வேறு பொருள் கொள்கிறுர்கள். ஒரு பொருள்: 'மா'—ஒடுக்கம். 'யா'—தோற்றம். தோற்றமும் ஒடுக்கமும் உடையது உலகம் என்பது பொருள். இந்த உலகம் எதில் தோன்றியதோ அதில் ஒடுங்குகிறது. உலகமும் உயிர்களும் மாயையில் தோன்றி மாயையிலேயே முடிகின்றன. உலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் 'பரப்பிரம்மம்' தான் காரணம் என்று வேதம் சொல்கிறது. கடல் நீரை மாயை என்று சொல்வோமானுல் அதன் அகண்ட வெளிதான் பிரம்மம். கடலில் தோன்றிக் கரையில்மோதி மோதி அழியும் அலைகள்தான் உயிர்கள். ஆக, உயிர்களும் உலகும் பிரம்மத்திலிருந்து தோன்றிப் பிறகு, அங்கேயே மடிகின்றன.

மூலப்பிரகிருதி என்பது ஆன்மாக்கள் எல்லாம் வெளிப்படுவதற்கும், எண்ணற்ற அண்டங்கள் தோன்றிப் பெருகு

வதற்கும் அடிப்படையாக இருப்பது. மூலம் என்றால் வேர். பிரகிருதி என்றால் இயற்கை. ஆன்மாக்கள் அத்தனையும் அந்த மூலப் பிரகிருதியிலேயே அணுவடிவில் அடங்கியிருக்கின்றன. மூலப் பிரகிருதியில் அடங்கியுள்ள ஆன்மாக்களுக்குத் தன் தனிப்பெருங் கருணையால் விடுதலை தந்து, வடிவு எடுத்துக்கொள்ள உடலும் தந்து சிந்திக்க உள்ளமும், வாழ உலகமும் தந்து, ஆட்டுவிக்கிறது அருட்பெருஞ்சோதி. தனு, கரணம், புவனம், போகம் என்ற பெயர்களில் முறையே உடல், உள்ளுறுப்பு, உலகம், இன்பம் இவற்றை அளிக்கிறது. இறைவனுடைய இந்தத் தனிப்பெருங் கருணையைத்தான் பராசக்தி என்கிறோம். பராசக்தியாகிய அந்தக் கருணை வெள்ளத்தை எது தாங்க முடியும்? மகா நதியைப் பயிர்கள் தாங்க முடியாததால் பற்பல கால்வாய்களின் மூலம் பிரித்து வயலுக்குள் விடுகிறோமல்லவா? இதே போல் பராசக்தியாகிய கருணை வெள்ளமும் பிரிந்து பிரிந்து வந்து உயிர்களுக்கு உய்வு அளிக்கிறது, பராசக்தி வெள்ளத்தின் ஆயிரத்தில் ஒரு பங்காக ஆதிசக்தி பிரிந்தது. அதன் ஆயிரத்தில் ஒரு பங்காக ஞான சக்தி பிரிந்தது. இதிலிருந்து ஆயிரத்துள் ஒரு பங்காகப் பிரிந்தது கிரியா சக்தி. இது தான் உலகை இயக்குவது. கிரியா சக்தியின் ஆயிரத்துள் ஒரு பங்காகப் பிரிந்தது இச்சா சக்தி. இச்சா சக்தியான அருள் வீழ்ச்சி விந்து என்கிற சுத்த மாயையில் விழ அது சுழன்றது. நீர் வீழ்ச்சியானது சக்கரத்தில் விழுந்தவுடன் அது சுழன்று மின்சாரம் பிறப்பது போல் குடிலா சக்தி பிறந்தது. (வட்டமான விந்திலிருந்து நேரான ஒரு சக்தி பிறந்ததைக் குறிக்கு முகமாகவே சுழியுடன் கோடு சேர்த்து 'உ' என்று பிரணவப் பொருளாகிய பிள்ளையார் சுழி இடுகிறோம்.) குடிலையின் வடிவமே ஓம். குடிலை விந்துவின் சுழற்சியிலிருந்து நேராகப் பிறந்தபோது அதிலிருந்தே நாதம் உண்டாயிற்று. அதாவது இறைவனது அருள் வீழ்ச்சியானது சுத்த மாயையின் மேல் விழும்போது அது சுழலத் தொடங்குகிறது; அப்போது பிறந்த குடிலையிலிருந்து முத்தொழில் புரியும் மும்மூர்த்திகள் தோன்றுகிறார்கள். விந்து சுழன்றது. நாதம் நேராகத் தோன்றியது. இதுவே சுழியும் கோடும் சேர்த்து "உ" என்று முதலில் எழுதுகின்ற பிள்ளையார் சுழி.

"நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம"

பராசக்தியி லிருந்து கடைசியில் குடிலா சக்தி வரை ஆறு சக்திகள் உள்ளன. இந்தச் சக்திகள் ஆறும் முருகப் பெருமானது ஆறுமுகங்கள்.

"ஆதியொடு மந்த மாகிய நலன்கள்
ஆறுமுகமென்று தெரியேனே"

என்று அருணகிரியார் பாடுவது இதனைத்தான்.

மயில் தோகையை விரித்து ஓம் என்ற பிரணவ வடிவத்தைக் காட்டி ஆடுகின்றது. மயிலின் கழுத்திலிருந்து தொடங்கி விரித்த தோகையைச் சுற்றிக் கீழே அதன் காலடிகள் வரை கொணர்ந்து முடித்து எழுதினுல் 'ஓ' என்ற ரூபமாகவே அமையும்.

"ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடு மயிலென்ப தறியேனே"

என்று அருணகிரிநாதர் பாடுகிறுர்.

முருகப் பெருமான் ஓங்காரத்துட் பொருளாகவும் அதே போழ்தில் அதற்கு அப்பாலும் நிலவுகிறுன். அவனது வேலே ஞான சக்தி. மயில் விந்தின் வடிவம். சேவல் கொடியே நாதம். (வேல் முருகன் மேல் சாய்ந்தே யிருத்தல் வேண்டும். முருகன் தலைக்கு மேல் வேல் உயர்ந்து நிற்றல் கூடாது:) இவ்வரலாற்று முடிவில் வல்லீதேவசேனு சமேதராக நாம் சுப்பிரமணிய ஸ்வாமியைக் காணும்போது வள்ளியும், தெய்வயானையும் முறையே இச்சா சக்தியும் கிரியா சக்தியும ஆவர். முருகப் பெருமானின் வலக் கரம் மேல் நோக்கியிருந்து அபயமும் இடக்கரம் கீழ்நோக்கியிருந்து வரதமும் காட்டும். வள்ளி முருகனுக்கு வலப்பக்கமும், தெய்வயானை இடப்பக்கத்திலும் நின்றிருப்பர். வள்ளியின் கையில் தாமரையும் தெய்வயானையின் கையில் குமுதமும் மலர்ந்து நிற்கும். முருகப் பெருமானுக்கு வலக் கண் சூரியனுகவும் இடக் கண் சந்திரனுகவும் அமைந்திருப்பதால் சூரிய ஒளி படும் தாமரை மலரும் குவிவ

தில்லை; சந்திர ஒளி படும் குமுதமும் குவிவதில்லை. முருகப் பெருமானின் ஆறுமுகங்களிலும் ஆறு தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. ஓம் என்ற எழுத்தில் அகரம், உகரம், மகரம், விந்து, நாதம், கலை இந்த ஆறும் அடங்கியுள்ளன என்பதை ஆறுமுகம் தரித்த ஐயன் உணர்த்துகிறார். இந்தத் தத்துவங்களைப் பரமனுக்குக் குமரன் ஓதியதையே 'ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே' என்று அருணகிரிநாதர் பாடுகிறார்.

ஒப்பற்ற வேலையுடைய பரம்பொருளைக் குருவாகக் கொண்டு அருள் பெற்றாலன்றி மெய்ப்பொருளை அறிய முடியாது. பல பிறப்புக்களில் முயன்றாவது முருகப் பெருமானையே குருநாதராக அடைய வேண்டும். ஞானாசிரியராகிய சிவபெருமானுக்கே உபதேசித்த முருகக் கடவுள் ஞான பண்டிதன் அல்லவா?

கந்தக் கடவுளிடம் உபதேசம் கேட்டருளிய சிவபெருமான், திருவுளம் மகிழ்ந்து எத்தகைய பெருமிதம் உள்ளவர்க்கும் குருநாதன் அவசியம் இருத்தல் வேண்டும் என்பதை உலகுக்கு உணர்த்தினார்.)

குமாரக் கடவுளை அங்கேயே இருக்கும் வண்ணம் பணித்துப் பிரமன், திருமால், இந்திரன் முதலிய தேவர்களுக்கு விடை தந்து திருக்கயிலாய மலையடைந்து திருக்கோயிலினுட் சென்று வீற்றிருந்தருளினார். இவ்வாறாக, சுவாமியாகிய சிவபிரானுக்கு நாதனாகி உபதேசித்து சுவாமி நாதனாகிப் பெருமை கொண்டார் முருகப் பெருமான்.

முருகப் பெருமானிடம் சிவபெருமானே உபதேசம் கேட்டார் என்பதை அறிந்த அகத்திய முனிவர் தாமும் குடிலை மந்திரத்தின் பொருளை உணரவேண்டும் என்று முருகப்பெருமானை நாடிக் கந்த வெற்புக்கு வந்தார். வீரவாகு தேவரிடம் அனுமதி பெற்று, செம்பொன்னாலயத்தினுள் சென்று, கந்தவேளை வலம் வந்து வணங்கினார். "எம்பெருமானே! காமனை எரித்தவர் தேவரீருடைய தந்தை; காமன் கணையால் வாடுபவன் நான். காலனை உதைத்தவர் தேவரீர் தந்தை; காலனுக்கு அஞ்சுபவன் நான். எல்லாம் வல்லி

இறைவனுக்கே பிரணவ மந்திரத்தின் பொருளை உபதேசித்த தேவரீர், அதனை அடியேனுக்கும் உபதேசித்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கை கட்டி வாய் பொத்தி நின்றார்.

அகத்திய முனிவரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட கந்தவேள், பிரணவ மந்திரப் பொருளையும், வேதாகமங்களின் மெய்ப்பொருளையும் உலகமெல்லாம் உய்யும் பொருட்டு அவருக்கு உபதேசித்தருளினார்.

18. விடைபெறு படலம்

திருமாலின் கண்ணின் மணியிலிருந்து சொரிந்த ஆனந்த பாஷ்பத்திலிருந்து சுந்தரம் மிகுந்த இரு நங்கையர் தோன்றினர். திருமாலின் நயனத்தில் உதித்த புதல்வியராகிய அமிர்தவல்லியும், அவள் தங்கை சுந்தரவல்லியும் கந்தக் கடவுளைத் திருமணம் புரிந்துகொள்ள விரும்பினார்கள். அவர்கள் இருவரும் தங்கள் விருப்பம் நிறைவேறும் பொருட்டு, இமயமலையில் உள்ள சரவணப் பொய்கைக்கு வந்து, சடக்கர மந்திரம் ஜபித்துப் பன்னெடுங் காலம் அருந்தவமிருந்தார்கள். தவத்துக்கு இரங்கிய முருகப் பெருமான் அவர்கள்முன் எழுந்தருளிக் காட்சி தந்தார்.

இறைவனைக் கண்ட கன்னியர் இருவரும், அவரது திருத்தாளைப் பணிந்து துதித்து நாணி நின்றார்கள்.

கந்தவேள் அவர்களை நோக்கி, ''நீங்கள் எதனை விரும்பித் தவம் செய்தீர்கள் ?'' என்று வினவினார்.

திருமால் புதல்வியர்கள் கைகுவித்து நின்று, ''எம்பெருமானே! தேவரீர் அடியவர்களாகிய எங்களைத் திருமணம் புரிந்து கொள்ளும் பொருட்டுத் தவம் செய்தோம்; எங்களுக்குத் திருவருள் செய்யவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

(அவர்களை, அப்பொழுதே முருகப் பெருமான் மனைவியராக ஏற்றுக்கொள்ளவில்லை. இறைவன் சக்தியோடு இருக்கும் பொழுது அழித்தல் வேலை நிகழாது. சக்தி அருளின் வடிவம் அல்லவா ? ஆகவே, சூரசம்ஹாரம் நிகழ்ந்த பின்பே முருகப் பெருமான் அவர்களை மணக்க எண்ணம் கொண்டார்.

சிவபெருமானும் உமாதேவியாரை மணப்பதற்கு முன்பு தான் காமனை எரித்தார்; இராமபிரானும் சீதையைப் பிரிந்த பின்பே இராவணனை அழித்தார்.)

ஆறுமுகக் கடவுள் அமிர்தவல்லியை நோக்கி, "நீ இந்திரனுக்கு மகளாய் வளரக் கடவாய்'! என்று அருள்பாலித்தார். சுந்தரவல்லியை நோக்கி, "நீ பூமியிலே சிவமுனிக்குப் புதல்வியாகத் தோன்றி, வேட்டுவரிடத்தில் வளரக் கடவாய்" என்றார்.

(ஒருத்தி துரை மகள்; ஒருத்தி குறமகள். ஒருத்தி பொன்னுலகம்; ஒருத்தி மண்ணுலகம். ஒருத்தி கற்பகச் சோலைக்கு அரசி, ஒருத்தி தினைப்புனத்திற்குக் காவற்காரி.)

கன்னியர் இருவரையும் நோக்கிக் கந்தக் கடவுள், "நீங்கள் இருவரும் இவ்வாறு வளரும்பொழுது நாம் வந்து, உங்களை முறைப்படி திருமணம் செய்து கொள்ளுவோம்; செல்லுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினர். கன்னியர் இருவரும் கைதொழுது விடைபெற்றுச் சென்றனர்.

அமிர்தவல்லி ஓர் அழகிய குழந்தை வடிவம் கொண்டு மேரு மலையில் வாழ்ந்த இந்திரன் முன் சென்று. "தேவர் கோமானே! நான் உன்னுடன் உபேந்திரனாகப் பிறந்த நாராயணரின் மகள்; ஆதலால் நீ எனக்குத் தந்தை முறையாவாய்! நீ என்னை மகளாக வளர்க்கக் கடவாய்" என்றாள். இந்திரன் அவளை நோக்கி, "தாயே! இங்கு வா" என்று சொல்லி எடுத்தணைத்து உள்ளம் பூரித்தான். தனது ஊர்தியாகிய ஐராவதத்தை அழைத்து "இவள் நம்முடைய மகள்; இவளை நீ அன்போடு வளர்த்துவரக் கடவாய்; இவளால் இனி நமக்கு எல்லையில்லாத சீரும் சிறப்பும் உண்டாகும்" என்றான். ஐராவதம் அந்தக் குழந்தையைத் தன் பிடரி மேல் வைத்துக்கொண்டு, சத்திய உலகத்தின் தலைநகராகிய மனோவதியை அடைந்தது. அங்கேயே அக் குழந்தையை வளர்த்து வந்தது. தேவராஜனின் யானை வளர்த்ததால் அக் குழந்தைக்குத் தெய்வயானை என்னும் பெயர் ஏற்பட்டது. சேனையும் அரசும் இழந்து தவித்த தேவராஜனுக்கு

ஒரு சேனையே கிடைத்தாற்போன்ற உற்சாகமளித்தமையால் தேவசேனை என்றும் அவளைச் சொல்வதுண்டு.

திருமகளும் நாணும் வனப்புடன் திகழ்ந்தாள் தெய்வயானை. அரைநொடியும் விடாது அறுமுகதேவனைத் தியானித்த வண்ணமாகவே இருந்தாள்.

இளையவளாகிய சுந்தரவல்லி தொண்டை நாட்டிலுள்ள வள்ளி மலைக்கு வந்து முருகப் பெருமானைக் குறித்துத் தவம் செய்து கொண்டிருந்தாள்.

[காமமே இல்லாத கடவுளை அடையத் தவம் கிடந்தனர் அமிர்தவல்லியும், சுந்தரவல்லியும், அவர்களுக்கு முருகப் பெருமான் திருவருள் புரிந்தார். பற்று விட்டவர் சளைத்தான் செல்வங்கள் பலவும் வந்தடைகின்றன; இச்சா சக்தியும், கிரியா சக்தியும் காமத்தை வென்றவன் கட்டளையை விரும்பி நிறைவேற்றுகின்றன, ஆகவே பற்றின்றி ஒன்றை எண்ணும்போதும், பேசும்போதும், குகனைச் சிந்தை செய்ய வேண்டும்.

அழகு அழகுடன்தானே சேர வேண்டும்? அழகே உருவான திருமாலின் புதல்விகள் முருகனைத்தானே சேரவேண்டும்? முருகன் அழகுத் தெய்வம், அந்திச் செவ்வானத்தின் அழகுதான் முருகன். முருகன் என்பதே அழகன் என்பதைக் குறிக்கும். முருகு என்ற சொல்லுக்கு அழகு என்பது பொருள்.

"எழுதரிய அறுமுகமு மணிநுதலும் வயிரமிடை
யிட்டுச் சமைந்தசெஞ் சுட்டிக் கலன்களுந் துங்கநீள்பன்
னிருகருணை விழிமலரு மிலகுபதி னிருகுழையும்
ரத்நக்குதம்பையும் பத்மக்கரங்களுஞ் செம்பொனூலும்
மொழிபுகழு முடைமணியு மரைவடமு மடியிணையு
முத்தச் சதங்கையுஞ் சித்ரச் சிகண்டியுஞ் செங்கை [வேலும்
முழுதுமழ கியகுமர கிரிகுமரி யுடனுருகு
முக்கட் சிவன்பெறுஞ் சற்புத்ர வும்பர்தந் தம்பிரானே"

என்று அருணகிரிநாதர் முருகனை அழகாக வர்ணிக்கிறார். இத்தகைய அழகுத் தெய்வத்தை மணாளனாகத் தேர்ந்தெடுத்த அந்தக் கன்னியர்கள் எப்படிப்பட்டவர்கள்?

அமிர்தவல்லி என்ருல் அமுதமே உருவெடுத்த கொடி போன்றவள். சுந்தரவல்லியோ அழகே வடிவெடுத்த கொடி போன்றவள். கலைமகளுக்குச் சொல்லில் அழகு. திருமகளுக்கு முகத்தில் அழகு. திருமாலுக்குக் கண்கள் அழகு. இப்படி ஒவ்வொருவருக்கும் முக்கியமான அழகு தருவது ஓர் அவயவம். ஆனுல் அமிர்தவல்லியும், சுந்தரவல்லியும் எல்லா வகையிலும் அழகு பெற்று இலங்கினர்.]

திருமாலின் புதல்வியர்கள் இருவருக்கும் வரமளித்தபின் முருகப் பெருமான் கந்தவெற்பை யடைந்தார். பெருங் கருணையோடு அங்கு சிலகாலம் வீற்றிருந்தபின், இலக்கத் தொன்பது வீரர்களும் பூதகணங்களும் சூழத் திருக்கயிலாய மலையையடைந்தார். தாய் தந்தையரான சிவபெருமானையும், உமாதேவியாரையும் அன்புடன் வணங்கி, அவர்களுக்கு நடுவே கவினுற எழுந்தருளியிருந்தார். இவ்வாறு எழுந் தருளியிருக்கும்போது, சூரபன்மன் உள்ளந்தளர்ந்த திருமால் தேவர்கள் திருக்கயிலாய மலையை யடைந்தார்கள்.

இந்திரன் சிவபெருமானை நோக்கி, "அருட் சக்தியாகிய அம்பிகையுடன் எழுந்தருளியுள்ள முழுமுதற் கடவுளே! அடியார்களாகிய நாங்கள் எண்ணில்லாத யுகங்களாகச் சூரன் முதலிய அசுரர்களால் துன்பப்பட்டு ஒடுங்கினேம். அடியேனுடைய புதல்வனுகிய சயந்தனும் தேவர்களும் அரம்பையர்களும் சூரனுல் சிறைப்பட்டு வருந்தி வாடுகிருர் கள். அரக்கர்கள் விண்ணுலகத்தை அழித்தார்கள். இவை யெல்லாம் தேவரீர் அறியாததோ?

சீகர மறிகடல் சென்று நவ்விசேர்
காகம தென்னவுன் கயிலை யன்றியே
ஏகவோர் இடமிலை எமக்கு நீயலால்
சோகம தகற்றிடுந் துணைவர் இல்லையே.

நீர்த்துளிகளுடன் கூடிய கடலில் கப்பலில் சேர்ந்த காகத்தைப் பன்முறை அடித்துத் துரத்தினுலும், காகம் வேறு எங்கும் போக்கிடமின்றி அந்தக் கப்பலையே நாடுவது போல், ஐயனே! எமக்கு இக் கயிலாய மன்றி வேறு புகலி

டம் இல்லை. எங்கள் துயரை நீக்குபவர் உம்மையன்றி வேறு ஒருவரும் இல்லை.

ஏற்றெழு வன்னிமேல் இனிது துஞ்சலாம்
தோற்றிய வெவ்விடம் எனினுந் துய்க்கலாம்
மாற்றலர் அலைத்திட வந்த வெந்துயர்
ஆற்றரி தாற்றரி தலம்இப் புன்மையே.

எம்பெருமானே! கொதித்து எரிகின்ற நெருப்பின் மீதுந் துயில் புரியலாம்; கொடிய நஞ்சினையும் உண்ணலாம். பகைவர் துன்புறுத்துவதனால் வரும் துயரைத் தீர்க்க முடியாது. இக் கீழ்மை போதும்; போதும்.

கருணைக் கடலே! அடியேன் முன்னர்த் தவம் செய்த பொழுது தேவரீர் எழுந்தருளி, 'நம்மிடத்தே ஒரு குமாரன் பிறந்து சூரன் முதலிய அரக்கர்களைக் கொன்று உங்களைக் காத்தருளுவான்' என்று திருவாய் மலர்ந்தருளினீர்கள். அவ்வாறே தேவரீருக்குத் திருக்குமாரன் தோன்றியும் எங்கள் துன்பம் இன்னும் நீங்கவில்லையே! அடியேங்கள் துன்பம் இன்னும் தொலையவில்லை போலும்!'' என மனமுருகிக் கூறினான்.

சிவபெருமான் தேவர்களின் குறைகளைக் கேட்டுப் பெருங் கருணை புரிந்தார். தேவர்களின் துயர் தீர்ப்பதற்குரிய தருணம் வந்துவிட்டது எனத் திருவுளம் கொண்டார். தமது பக்கத்தில் எழுந்தருளியிருந்த கந்தவேளை நோக்கி, ''குமர! உலகத்திலுள்ள உயிர்களுக்குத் துன்பம் செய்து தேவர் உலகத்தை அழித்து. மிகுந்த வலிமை படைத்த சூரபன்மனை அசுரர்களோடு கொன்று, அதர்மத்தை அழித்து, அற மார்க்கத்தை நிலைநிறுத்தி, அமரர்களுடைய துன்பத்தை நீக்கி, இந்திரனுக்கு அவன் அரசை மீட்டுக் கொடுத்துத் திரும்பி வருவாயாக'' என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பாரினை யலைத்துப் பல்லுயிர் தமக்கும்
பருவரல் செய்து விண்ணவர்தம்
ஊரினை முருக்கித் தீமையே இயற்றி
உலப்புறு வன்மை கொண்டுற்ற

சூரனை யவுணர் குழுவொடுந் தடிந்து
சுருதியின் நெறிநிறீஇ மகவான்
பேரர சளித்துச் சுரர்துயர் அகற்றிப்
பெயர்தி என்றனன் எந்தை பெருமான்.

“எந்தையே! கட்டளைப்படியே அடியேன் இப்பணியைச் செய்வேன்” என்று முருகன் விண்ணப்பம் செய்தார். அவதாரப் பணி தொடங்கிவிட்டது.

சிவபெருமான் பதினொரு உருத்திரர்களையும் தம் திருவுளத்தில் நினைத்தார். அவர்கள் அங்கு வந்து தோன்றினர்கள் “நீங்கள் முருகன் கையில் படைக்கலங்களாக இருக்கக் கடவீர்” என்று முக்கண் மூர்த்தி திருவாய் மலர்ந்தார்.

பொன்றிகழ் சடிலத் தண்ணல்தன் பெயரும்
பொருவிலா உருவமும் தொன்னுள்
நன்றுபெற் றுடைய உருத்திர கணத்தோர்
நவிலருந் தோமரம் கொடிவாள்
வன்றிறற் குலிசம் பகழியங் குசமும்
மணிமலர்ப் பங்கயம் தண்டம்
வென்றிவில் மழுவு மாகிவீற் றிருந்தார்
விறல்மிகும் அறுமுகன் கரத்தில்.

பொன்போன்ற சடைமுடியுடைய சிவமூர்த்தியினுடைய பேரையும் உருவத்தையும் பெற்றுள்ள பதினொரு உருத்திரர்களும், சிவமூர்த்தியின் கட்டளையின்படி தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டு, வில், மழு என்ற பதினொரு ஆயுதங்களாகி கந்தவேளின் கரங்களில் வீற்றிருந்தார்கள்.

ஆயதற் பின்னர் ஏவில்மு தண்டத்
தைம்பெரும் பூதமும் அடுவ
தேயபல் லுயிரும் ஒருதலை முடிப்ப
தேவர்மேல் விடுகினும் அவர்தம்
மாயிருந் திறலும் வரங்களும் சிந்தி
மன்னுயிர் உண்பதெப் படைக்கும்
நாயக மாவ தொருதனிச் சுடர்வேல்
நல்கியே மதலைகைக் கொடுத்தான்.

விடுத்த மாத்திரத்தில் பழமையான அண்டங்களின் ஐம்பெரும் பூதங்களையும் அழிக்க வல்லதும், எல்லாவுயிர்களையும் ஒருசேர முடிக்க வல்லதும், யார்மேல் விடுப்பினும், அவர்களுடைய வரங்களையும் உயிரையும் ஒருங்கேயுண்பதும் எல்லா ஆயுதங்களுக்கும் நாயகமாக விளங்குவதும் ஆகிய ஒப்பற்ற ஒளியுடைய வேலாயுதத்தை யுண்டாக்கிக் குமாரவேளின் திருக்கரத்தில் சிவபெருமான் கொடுத்தருளினர்.

முருகப் பெருமான் சிவபெருமானையும், உமாதேவியாரையும் தொழுது நின்றார். கண்ணுதற் கடவுள் தமது அருமைத் திருக் கரத்தினால் கந்தவேளை எடுத்துத் திருத்தொடையில் இருத்திப் பெருங் கருணையோடு தழுவினர்; உச்சி மோந்து திருவருள் புரிந்து, எம்பெருமாட்டியாருடைய திருக்கரங்களிலே கொடுத்தருளினர். தமது அன்புக்கு உறைவிடமான இன்பக் குமாரரை எம்பெருமாட்டியார் தனது மடியில் இருத்திப் பேரருட் பொலிவோடு அணைத்து உச்சிமோந்தார். "குழந்தாய்! இலக்கத்தொன்பது வீரர்கள் புடை சூழச் சென்று, அசுரர்களைக் கொன்று, தேவர்களின் குறையை நீக்கி மீள்வாயாக" என்று எம்பெருமாட்டியார் ஆசி கூறினர்.

ஆறுமுகக் கடவுள் அம்மையப்பரை வணங்கி விடை பெற்றார். ஐம்பெரும் பூதங்களின் வலிமை கொண்டதும், இலக்கம் குதிரை பூண்டதும், மனத்தைவிட விரைந்து செல்வதுமாகிய ஒரு தேரைத் திருவுளத்தினாலே சிருட்டித்து முருகப் பெருமானிடம் கொடுத்தார் பரமேசுவரர். "குமர! இனி நீ செல்லக் கடவாய்; வெற்றி பெற்று யாவருக்கும் இன்பம் தரக் கடவாய்" என்று வாழ்த்தினர். இலக்கத்தொன்பது வீரர்களை நோக்கிய எம்பெருமான், "நீங்கள் முருகனுக்குத் துணையாக அசுரர்களை அழிக்கச் செல்லுங்கள்" என்று பணித்தார். அவர்களுக்கும் படைக்கலங்கள் பலவற்றை அளித்தார்.

அண்டாபரணர், நந்தி, உக்கிரர், சண்டர், அக்கினி நேத்திரர், சிங்கர் முதலாகிய பெரிய கணநாதர்களை நோக்கி "நீங்கள் இரண்டாயிரம் வெள்ளம் பூதங்களோடு செவ்வே

ஞருக்குச் சேனாதிபதியாய்ச் செல்லக் கடவீர்" என்று திருவாய் மலர்ந்து, முருகக் கடவுளுக்கு அவர்களைப் படைத் தலைவர் களாகக் கொடுத்தருளினார்.

திருமால், பிரம்மன், இந்திரன் முதலிய தேவர்கள் எம்பெருமானை வணங்கினர். "இனி அடியேங்கள் துன்பம் நீங்கியது" என்று மகிழ்வுடன் நன்றி கூறினர். சிவபெரு மான் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அருள் செய்யும் நாய கனாகிய நம் குமாரனோடு நீங்களும் செல்லுங்கள்" என்று விடை கொடுத்தருளினார்.

19. படையெழுச்சிப் படலம்

விடையவன் பால் தேவர்கள் விடை பெற்றபின் திருமால், வாயுதேவனைப் பார்த்து "நீ ஆறுமுகக் கடவுளுக் குத் தேர்ப்பாகனாக இருந்து தேரைச் செலுத்தக் கடவாய்" என்று கட்டளையிட்டார். அதன்படி வாயுதேவன் ஆகாயத் தில் சென்று கொண்டிருந்த தேர் மேல் பாய்ந்து தன் இன மாகிய நாற்பத்தொன்பது வாயுக்கள் பக்கத்தே சூழ்ந்து வர மகிழ்ச்சியோடு தேரைச் செலுத்திக் கொண்டு குமரக் கடவுள் திருமுன்னே வந்தான். கந்தக் கடவுளைக் கைதொழுத வாயுதேவன், "எம்பெருமானே! இத்தேர்மீது ஏறியருளுக" என்று வேண்டிக் கொண்டான். முருகக் கடவுள் அத்தேர் மீது ஏறியருளினார்.

சிவபெருமானுடைய சாரதி பிரம்மன்; விஷ்ணுவுடைய சாரதி தாருகன்; இந்திரனுடைய சாரதி மாதலி; தனஞ்சய னுடைய சாரதி தாமோதரன்; முருகவேளுடைய சாரதி வாயுதேவன்.

முருகவேள் போருக்கு ஆரோகணித்ததைக் கண்ட இந்திரன் முதலிய இமையவர்கள் 'இனிச் சூரன் இறந்தான்' என்று அப்போதே நிச்சயம் பெற்றுத் துள்ளி ஆர்த்தனர். இலக்கத்தொன்பது வீரர்களும் முருகக் கடவுளைச் சூழ்ந்தார் கள். இமையவர்களும் இருடிகளும் அவ்வீரர்களைச் சூழ்ந்தார் கள். திருக்கயிலாயத்தில் இருந்த அனந்தவெள்ளம் பூதங் களுள் இரண்டாயிரம் வெள்ளம் கணங்கள் நூற்றெட்டு

சேனுதிபதிகளோடு முருகக் கடவுளிடம் வந்து வணங்கித் துதித்து ஆரவாரித்தன. பூதர்களில் சிலர் பலவித வாத்தியங் களை முழக்கினுர்கள்.

முருகவேளுடன் படைகளாகச் செல்லுகின்ற பூதர்கள் ஒவ்வொருவரும் நினைத்தால் அண்டங்கள் அனைத்தையும், அவற்றில் வாழும் உயிர்த்தொகைகள் எல்லாவற்றையும் உண்டு உமிழ வல்லவர்கள்; அன்றியும் வயிற்றிலுள்ள அக்கினியால் அழிக்கவும், அழிந்தவர்களைச் சிவபெருமான் கருணையால் முன்போல் உயிர்த்தெழுமாறு அருளவும் வல்ல வர்கள்.

அண்டம் யாவையும் ஆண்டுறை உயிர்த்தொகை யனைத்தும்
உண்டு மிழ்ந்திட வல்லவர் அன்றியும் உதரச்
சண்ட அங்கியால் அடுபவர் அட்டவை தம்மைப்
பண்டு போல்சிவன் அருளிஞல் வல்லையில் படைப்போர்.

படைக் கலங்கள் பல தாங்கிய படைகள் சூழ முருகக் கடவுள் திருக்கயிலாய மலையை நீங்கிப் பூமியின் மேல் சென்ற ருளினுர். அப்போது எழுந்த புழுதியால் விண்ணுலகும் மண்ணுலகும் மறைந்தன.

20. தாரகன் வதைப் படலம்

செவ்வேட் பரமன் சேனையுடன் செல்லும் பொழுது கிரௌஞ்சமலை வழியில் வந்தது. அதனைக் கண்ட தேவர்கள் நடுநடுங்கினுர்கள்; இந்திரனும் கலங்கினுன்.

நாரதர் வந்து கந்தக் கடவுளை வணங்கி, "எம் பெருமானே! இதுதான் கிரௌஞ்ச மலை. அந்தணர் அருந் தவர் முதலியோர் இவ்வழியில் செல்லும் போது, இது வழி காட்டிபோல் பாவனை செய்து தவருன வழி காட்டி மாயை செய்து அவர்களைக் கொல்லுவது வழக்கம். அகத்திய முனிவர் கொடுத்த சாபத்தால் இது இவ்வடிவில் நிற்கிறது.

இந்தக் கிரௌஞ்ச மலையைச் சார்ந்துள்ள மாயாபுரி யிலே சூரனுடைய இரு தம்பிகளில் ஒருவனுன தாரகாசுரன் வாழ்கிறுன். அவன் யானை முகத்தை உடையவன். போரிலே

விஷ்ணுவை வென்று அவருடைய சக்கராயுதத்தை மார்பில் பதக்கமாக அணிந்தவன். இவனைக் கொன்றால் இவனுடைய தமையனாகிய சூரனைக் கொல்லுவது எளிது" என்று விண்ணப்பம் செய்தார்.

முருகவேள், "அவ்வாறே செய்வோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். இந்திரன் முதலிய தேவர்கள், "தாரகன் இன்றே இறந்தான்" என்று மனக்கவலை நீங்கி மகிழ்ந்தார்கள்.

வீரவாகுதேவர் வேலவனை வணங்கி, "அண்ணலே! தாரகன் சூரனுக்குத் தம்பி. ஆதலால் பகைவன் தம்பி மேல் தங்கள் தம்பியாகிய என்னை ஏவுங்கள் நம்பி! அவனை அழித்து வருவேன்" என்றார்.

முருகவேள், அவ்வாறே வீரவாகுவைப் பணித்தருளினார்.

"நீங்கள் வீரவாகுவுடன் செல்லுங்கள்" என்று வீரர்களையும் பூதர்களையும் பணித்தார் ஐயன். தேவ தச்சனைக் கொண்டு ஒரு கணப்பொழுதில் குதிரைகள், பூதங்கள், சிங்கங்கள் பூட்டிய பல தேர்களைச் செய்து வீரவாகு தேவருக்கும் மற்ற வீரர்களுக்கும் கொடுத்தருளினார். வீரர் யாவரும் முருகப் பெருமானை மும்முறை வலம் வந்து வணங்கித் துதித்து விடைபெற்றுத் தேரில் புறப்பட்டார்கள். நானாவித வாத்தியங்கள் முழங்க ஆயிரம் வெள்ளம் பூதங்களோடும் பூத சேனாதிபதிகளோடும், இலக்கத்தெட்டு வீரர்களுக்கும் தலைவராக வீரவாகு தேவர் சென்றார். பிறிதோர் ஆயிரம் வெள்ளம் பூத சேனைகள் சூழவும், இந்திரன் முதலியோர் வணங்கவும் பின்னணியாகச் செல்லும் படை வகுப்பில் முருகக் கடவுள் சென்றார்.

வீரவாகு தேவர் மாயமாபுரியை அடைந்தார். பூதர்கள் நகரினுள் புகுந்து எதிர்ப்பட்ட அசுரர்களோடு போர் புரிந்து நின்றார்கள். அசுர தூதர்கள் ஓடிச் சென்று தாரகாசுரனை அடைந்து "அரசே! 'சூரபன்மன் சிறையிட்ட தேவர்களை மீட்கும் பொருட்டு, சிவபெருமான் ஒரு குமாரரைப் பெற்றார்.

அக்குமாரசுவாமி அசுரர்களைக் கொன்று விடுவார்'' என்று ஆகாயத்திலே செல்லும் தேவர்கள் கூறக் கேட்டோம். அதனை நாங்கள் பொருட் படுத்தாதிருந்தோம்; இப்பொழுது அவர்கள் கூறியவாறே இரண்டாயிரம் வெள்ளம் பூதர்கள் சூழக் கந்தசுவாமி வந்திருக்கிறார்; அப்படையின் தூசியே நமது நகரத்தை அழிக்கிறது'' என்று கூறினார்கள்.

தூதர்கள் கூறியதைக் கேட்ட தாரகாசுரன் வடவைத் தீயைப் போல் கொதித்து அண்டங்கள் நடுங்க எழுந்தான். ''உலர்ந்த புற்காட்டில் இட்ட தீயைப் போல, இந்த நகரத்தை வளைத்துள்ள சேனையை விரைந்து சென்று அழிப்பேன். தூதர்களே! நமது படைகளைத் திரட்டுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

அசுரர் படை விரைந்து வந்தது. ''நமது தேரைக் கொண்டு வாருங்கள்'' என்று தாரகாசுரன் பரிசனரிடம் ஆணையிட்டான். தேர் வந்தது. அத்தேரில் தாரகாசுரன் ஏறிக்கொண்டான். சகல இராஜ விருதுகளுடனும், யானை, குதிரை முதலியன சூழத் தாரகாசுரன் பவனி சென்றான். பல சிங்கங்களால் இழுக்கப்பட்ட தேரில் மகாமேரு மலையைப் போன்ற வயிர தண்டமும், பல படைக்கலங்களும் சென்றன. ஏழு கப்பல்களைப் போல் அசுரர் சேனைகள் சூழ்ந்தன.

அசுரர் அணிவகுப்பைக் கண்ட பூதர்கள் ஆரவாரித்துக் குமரக் கடவுளின் திருவடித் தாமரையைச் சிந்தித்துக் குன்றுகளையும், மரங்களையும், சூலங்களையும், தண்டங்களையும் பகைவர்கள் மீது வீசினார்கள். அசுரர்கள், பூதர்கள் மீது அம்புகளையும், வேல்களையும், சக்கரங்களையும் வீசினார்கள். இரு திறப்படைகளுக்கும் போர் மூண்டது. போரிலே உதிர நதி பெருக்கெடுத்து ஓடியது. சிரங்களும், கரங்களும், தோள்களும் துண்டுபட்டுத் துள்ளின, அசுரர்களில் பலரும் பூதர்களில் சிலரும் இறந்துபட்டனர்.

பூதர்களால் தன் சேனை அழிவதைக் கண்ட தாரகன் பெரும் கோபம் கொண்டான். தேரினின்றும் பூமியில் குதித்துத் தன் கையிலிருந்த பெரும் தண்டத்தால் அடித்துப் பூதர்கள் பலரைக் கொன்றான்; அண்டங்கள் அதிரும்படி ஆர்த்

தான். தாரகனால் பூதர்கள் அழிந்ததைக் கண்ட பூத சேனாதிபதிகள் தாரகனை எதிர்க்கும் வன்மையின்றி மனம் தளர்ந்து ஓடினார்கள். அது கண்ட இலக்கம் வீரர்கள் மிகுந்த கோபத்துடன் வில் வளைத்துக் கணைகளைத் தொடுத்துத் தாரகனை வளைத்துக் கொண்டார்கள். இலக்கம் வீரர்கள் விடுத்த கணைகள் தாரகனுக்கு எவ்விதத் தீமையும் புரியவில்லை. இதனைக் கண்ட இலக்கம் வீரர்கள் வெகுண்டு தெய்வப் படைக்கலங்களைத் தாரகன் மீது வீசினார்கள். அவையும் தாரகனுக்குத் தீங்கு விளைவிக்காமல் துகளாயின. தேவர்கள் செய்வதறியாது கலங்கி நின்றனர்.

தாரகன் தன் வயிர தண்டத்தைச் சுழற்றினான்; யானை முகம் படைத்த அவன் தன்னைச் சூழ்ந்த இலக்கம் வீரர்களின் தேர்ப் படைகளை யெல்லாம் அடித்துத் தனது துதிக்கையினை நீட்டி வீரர்களைப் பற்றி எடுத்துக் கடலில் வீசினான். கடலில் வீழ்ந்த வீரர்கள் வில்லுடன் எழுந்து ஒதுங்கிச் சென்றார்கள்.

இக்காட்சிகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வீரகேசரிக்குக் கோபம் பொங்கியது. குமாரக் கடவுளின் திருவடிகளை மனத்தில் நினைத்து நூறு கணைகளைத் தாரகன் மீது விடுத்தார். அக்கணைகள் தாரகனுடைய மகுடத்தைத் தள்ளின. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். தன்னுடைய மகுடம் வீழ்ந்ததைக் கண்ட தாரகன் நாணமும் சினமும் கொண்டான். கை தண்டத்தை வீரகேசரி மீது எறிந்தான் தேர்மீது ஏறி வேறு ஒரு மகுடத்தை அணிந்து கொண்டான். தாரகன் எறிந்த தண்டம் மார்பிலே பட்டதும் வீரகேசரி மயங்கி விழுந்தார். அதனைக் கண்ட வீரவாகு தேவர் தாரகன் மீது பல் வகைக் கணைகளைப் பொழிந்து, அவன் உடலைப் புண்படுத்தினர்.

தாரகனுக்கும், வீரவாகு தேவருக்கும் போர் மூண்டது; கணை மழை பொழிந்தது. வீரவாகு தேவர் பதினான்கு பாணங்களை விடுத்துத் தாரகனுடைய வில்லை ஒடித்தார். தாரகன் சினத்துடன், ''இனி நீ இறந்தாய்'' என்று கூறி ஒரு சூலத்தை விடுத்தான். அந்தச் சூலம் மார்பில் பட்டது. வீரவாகு தேவர் மயங்கினர். தாரகன் இடிபோல் ஆர்த்தான்.

எஞ்சி நின்ற வீரவாகுதேவரின் தம்பியர் எழுவரும் தாரகனை எதிர்த்துப் போர் செய்து தோற்றார்கள். இதற்குள் வீர வாகு தேவர் மயக்கம் தீர்ந்து எழுந்தார். தாரகனுடன் மீண்டும் போர் புரிந்தார். போர் கடுமையாயிற்று. வீர வாகுதேவர் வில்லை வளைத்து நாண் ஒலி செய்தார். மலைகள் சுழன்றன; அசுரர்கள் காதுகளைப் பொத்திக்கொண்டு ஓடி ஒளிந்து கொண்டார்கள். தாரகனை நோக்கிய வீரவாகு தேவர், ''வீரர்களையும் பூதர்களையும் வென்று விட்டோம் என்று எண்ணாதே; உன்னை நான் விரைந்து கொல்லுவேன்'' என்றார்.

அதற்கு விடையாகத் தாரகன், ''திருமால் விடுத்த சக் கராயுதத்தை என் மார்பில் பதக்கமாக அணிந்திருக்கிறேன். அப்படிப்பட்ட என்னைக் கொல்லுவேன் என்று நீ சொன்னது சிங்கத்தை நரி வெல்லுவதாக வீரம் பேசுவதே போன்றது! உன் வீரர்கள் அழிந்தார்கள்; வீரம் பேசும் நீயும் சிறிது நேரத்தில் அழியப் போகிறாய்'' என்று கூறினான்.

வீரவாகு தேவர் ஆயிரம் பாணங்களைத் தொடுத்தார். தாரகன் தன் வில்லை வளைத்து ஆயிரம் பாணங்களை எதிர்த்து விடுத்தான்; வீரவாகு தேவரின் பாணங்கள் பொடியாகின. தாரகன் மேலும் நூறு பாணங்களை விடுத்தான். அதனை எதிர்த்து வீரவாகுதேவர் நூறு பாணங்களை விடுத்தார். 'வில் வன்மையில் இணையற்ற இவ்வீரனைத் தெய்வப் படைக் கலங்களால்தான் வெல்லவேண்டும்' என்று எண்ணிய அவன் அக்கினிக் கணையை ஏவினான். வீரவாகு தேவரும் அதற் கேற்ற எதிரிடைத் தெய்வக் கணையை ஏவித் தாரகன் விடுத்த கணையை அழித்தார். தாரகன் விடுத்த வருணாஸ் திரம், சூரியாஸ்திரம், வாயு அஸ்திரம், பிரம்மாஸ்திரம் முதலிய தெய்வப் படைக் கலங்களுக்கும் இந்தக் கதி நேரிட்டது.

வீரவாகு தேவரைப் படைக்கலங்களால் வெல்லுவது இயலாது என்று கருதிய தாரகன், 'இவனை மாயையால்தான் வெல்ல முடியும்' என்று கருதி மாயா மந்திரத்தை உச்சா ரணம் செய்யலானான். எண்ணில்லாத மாய வடிவங்களை எடுத்துக் கணக்கில்லாத கணைகளைச் செலுத்தினான். இருட்

படலம் எங்கும் பரந்தது போல் தாரகன் ஒருவனே எங்குமாய் நின்று கடும்போர் செய்வதைக் கண்ட தேவர்கள் திக்குத் திசை தெரியாது ஏங்கினார்கள், முன்னரே ஒதுங்கி நின்ற பூதர்கள் பின்னும் அஞ்சியோடினார்கள்; போர் செய்து இளைத்த வீரர்களும் வெகுண்டு நின்றார்கள்; அசுரர்கள் அகமகிழ்ந்து வீராவேசத்தால் கொக்கரித்துக் குதித்துக் கூத்தாடினார்கள்.

தாரகனின் மாயப் போரையும், அது கண்டு தமது படையினர் கலங்கி நிற்பதையும் அறிந்த வீரவாகுதேவர் அனற்பொறி சிந்த நோக்கினார். ஊழிக் காலத்தில் எழும் பெருந்தீயைப்போல் வெகுண்டு வீரபத்திரப் படைக்கலத்தை எடுத்தார். அவ்வாயுதத்தை எடுத்தவுடனேயே சூரியன் முன் இருள் மறைந்தோடுவதுபோல் தாரகனுடைய மாயா உருவுகளெல்லாம் அழிந்தன. தாரகன் தனித்து நின்றான். ஞான ஒளியின் முன் மாயத் தோற்றம் யாவும் மறையவேண்டியதுதானே?

வீரவாகு தேவருடன் பின்பு ஏமாற்றுப் போர் புரியலாம் என்று வஞ்சனையாக எண்ணித் தன் தேரை விட்டு இறங்கி ஓடினான் தாரகன். தோற்று ஓடுபவன் மேல் ஆயுதம் விடுத்தல் வீரமும் அன்று; போர் நெறிக்கு உகந்ததும் அன்று என்று எண்ணிய வீரவாகு தேவர், வீரபத்திரப் படைக்கலத்தைத் தூணியுள் இட்டார். 'வலியிழந்து ஓடிய தாரகனை எவ்வாறேனும் பிடித்துக் கட்டி எம்பெருமான் திருமுன் கொண்டு போய்ச் சேர்ப்பேன்' என்று கருதி ஆறுமுகப் பரஞ்சுடரது அடிமலரைச் சிந்தித்துத் தாரகனைத் தொடர்ந்து ஓடினார். தாரகனோ தன் சூதுத் திட்டத்தின்படி மாயைக்கு உறைவிடமாகிய கிரௌஞ்ச மலையின் குகை யொன்றில் புகுந்து ஒளிந்தான்.

இருள் அடர்ந்த அம்மலையின் குகையினுள் வீரவாகு தேவர் மெல்லப் புகுந்து சென்று தாரகனைத் தேடினார். தாரகனைக் காண இயலவில்லை; மலையினின்று மீளும் வழியையும் காண இயலவில்லை. 'ஓ, "இதுவும் இம்மலையின் மாயையோ?'' என்று சிந்தித்து நின்றார் வீரவாகு தேவர். அப்பொழுது அக்கிரௌஞ்ச மலையாகிய அசுரன், ''இதுதீரன்

நல்ல சமயம்'' என்று எண்ணி வீரவாகு தேவரின் அறிவை மயக்கினன். அவரும் தமது முந்தை அறிவினை இழந்து தூங்குவது போலக் கிடந்தார்.

(மாயையின் வீச்சில் ஞானியரும் மயங்குவர் என்பதை உணர்த்தும் வரலாறே இது. அந்த மயக்கத்தைப் பரம்பொருளின் அநுக்கிரகமே தெளிவிக்கும் என்பதைப் பிற்பாடு காண்போம்.)

வீரவாகு தேவர் திரும்பி வராததைக் கண்ட அவருடைய அன்புடைத் தம்பியர்கள் இலக்கத்தெண்மரும், பூதப் படைத் தலைவர்களும் சிறகொடிந்த பறவைகள்போல மனமுடைந்து வருந்தினர். 'நமது தலைவர் தோற்று ஓடிய தாரகனைத் தொடர்ந்து சென்று போர் புரிகின்றார் போலும்! நாமும் அங்கே செல்லுவோம்' என்று கருதி விரைந்து சென்று, கிரௌஞ்ச மலைக் குகையினுள்ளே புகுந்தனர். கிரௌஞ்சமலை வீரவாகுதேவரை மயக்கியது போலவே, எண்ணில்லாத மாயத்தைச் செய்து இலக்கத்து எண்மரையும் அறிவிழக்கச் செய்தது; அவர்களும் அறிவிழந்து மயங்கித் துயின்றார்கள். மாயை என்பது அத்தகைய இருள் சூழ்ந்த பெரு மலையாகும்! அண்ட சராசரத்திலுள்ள உயிர்கள் அனைத்தையுமே அஞ்ஞான இருட் குகையில் ஆட்படுத்தியிருப்பதல்லவா அது ?

தாரகன் மகிழ்ந்தான். "நம் மாயையினால் இவர்கள் இறந்தார்கள்'' என்று எண்ணிப் பூரித்தான். வானவர்கள் கண்ணீர் விட்டுக் கலங்கினார்கள்; பூதப் படைகள் தலைவரின்றி அச்சமுற்றன. மலைமீது எழுந்த தாரகன் தேரில் ஏறிக்கொண்டான்; அசுரர்கள் பலரும் வந்து அவனைச் சூழ்ந்து ஆரவாரித்தார்கள். பூதப்படைகள் மீது தாரகன் மீண்டும் கோடிக் கோடிக் கணைகளைப் பொழிந்தான். முக்கியமான வீரர்களை இழந்த நின்ற பூதர்கள் பல திசைகளிலும், ஆகாயத்திலும் சிதறியோடினர்.

இவற்றை யெல்லாம் கண்ட நாரதர் இமையவருடன் சேர்ந்து முருகப் பெருமானை அடைந்து அவரது திருவடிகளை

வணங்கினர். தாரகனுடைய மாயப் போரை எடுத்துக் கூறினர்.

நாரதர் கூறியதைக் கேட்ட அபய நாயகனுகிய அறுமுக அருள்மூர்த்தி, "தேவர்களே! வருந்த வேண்டாம். நாமே போர்க்களம் சென்று, தாரகனை வேற்படையினுல் கொல்லுவோம். கிரௌஞ்ச மலையைப் பிளந்து அதனுள் குகையில் சிறைப்பட்டு மயங்கியுள்ள நம் வீரர்களைக் கணப் பொழுதில் மீட்டருள்வோம்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

தாரகனின் மாயத்தை மாய்ப்பதற்காக மாமயிலோனே எழுந்தருளுவார் என அறிந்த இமையவர்கள் ஆனந்த பரவச முற்று ஐயனின் திருவடிகளைத் தொழுதனர்.

* * *

முருகப் பெருமான் தமது சாரதியாகிய வாயு தேவனைப் பார்த்து, "மனத்திலும் விரைந்து செல்லும் வண்ணம் தேரைச் செலுத்து" என்று பணித்தருளினர். வாயு தேவன் குதிரைகளைத் தூண்டி ஆர்த்தான். விண்ணும், மண்ணும், மலைகளும், கடல்களும், திக்கு யானைகளும் நடுங்கின. குமரக் கடவுளுடைய தேர் ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்றது, பூத சேனைகள் முருகப் பிரானைச் சூழ்ந்து சென்றன. போரில் தோற்று ஓடிய பூதர்கள் எல்லோரும் முருகக் கடவுளைத் தரிசித்தவுடன், புது உற்சாகம் பெற்று அவரை வணங்கிச் சூழ்ந்தனர். வானவர்கள் மகிழ்ந்து வாத்தியம் முழக்கினர்.

முருகப் பெருமான் தாரகனுடைய போர்க்களத்தை யடைந்தார். பூதப் படைகளுக்கும் அசுரப் படைகளுக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. ஐயன் பிரசன்னமானதால் ஊக்கமும் உற்சாகமும் பெற்ற பூதர்களால் அசுரர் பலர் மாண்டனர். மாண்டு போகாதவர்கள் தோற்று ஓடினர்.

தாரகன் கடுங் கோபம் கொண்டான். தன்னை எதிர்த்த கணநாதர்களின் மீது பல பாணங்களைச் சொரிந்து துரத்திக் கொண்டு முருகக் கடவுள் திருமுன்னரே வந்து விட்டான். ஆறுமுகக் கடவுளை நேருக்கு நேராகக் கண்டான்.

பூரண சந்திரனை யொத்த ஆறு திருமுகங்களையும், அருளொழுகும் பன்னிரண்டு நயனங்களையும், ஞான சக்தியாகிய வேலையும், மற்ற திவ்வியாஸ்திரங்களையும், அவற்றைத் தாங்கும் செவ்விய திருக் கரங்களையும், அழகிய நவரத்தினத் தண்டை ஒலிக்கும் திருவடித் தாமரைகளையும் தாரகன் கண்டான்.

முழுமதி அன்ன ஆறு முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரம் ஈராறும் அணிமணித் தண்டை ஆர்க்கும்
செழுமலர் அடியுங் கண்டான்; அவன்தவம் செப்பற்
பாற்றே?

அந்த மகாசூரனை எதிர்க்க வந்த மூர்த்தி பச்சிளம் குழந்தை என்பதைக் காட்டவே கச்சியப்பர், 'அணிமணித் தண்டையார்க்கும் செழுமலர் அடி' என்கிறார். அசுரன் கோபாக்னி மயமாக வருகிறான். அப்போதும் ஐயன் குளிர்ச்சி பொழியும் பூரண சந்திரனை யொத்த திருமுகமும் விழிகள் பொழியும் கருணையுமாகத் தரிசனம் சாதிக்கிறார். இத்தகைய தரிசனம் பெற்ற தாரகன் செய்த தவம் என்னவோ எனக் கவி வியக்கிறார். முழுமதி முகமும், விழிபொழி அருளும் தாரகனைத் திருத்தி நல்வழிப்படுத்தாது என்பதாலேயே ஐயன் 'வேலும் வேறுள படையும்' தாங்கி வந்ததையும் குறிப்பிடுகிறார்.

சிற்பர மூர்த்தியாகிய செவ்வேட் பரமனுடைய திருவுருவை நோக்கிய தாரகன் வியப்புற்றான்.

தற்பம துடைய சிந்தைத் தாரகன் இனையவாற்றால்
சிற்பர மூர்த்தி கொண்ட திருவுரு வனைத்தும் நோக்கி
அற்புதம் எய்தி நம்மேல் அமர்செய வந்தான் என்றால்
கற்பனை கடந்த ஆதிக் கடவுளே இவன் கொல் என்றான்.

• "வஞ்சனையுடைய மனத்தினனாகிய தாரகாசுரன் இவ்வாறு ஞான மூர்த்தியாகிய குமாரக் கடவுளின் திருவுருவனைத்தையும் நோக்கி, அதிசயமடைந்து, இப்பாலன் நம் மீது போர்செய்ய வந்தான் என்றால், கற்பனை கடந்த ஆதிக் கடவுளே போலும்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்

டான். எனினும், சிவமூர்த்தி தனக்குத் தந்த வரத்தையும், வன்மையையும், அளவற்ற செல்வத்தையும் நினைந்து பெருமிதம் அடைந்த தாரகாசுரன் தனது நல்ல நினைவுகளை அகந்தையால் அழித்துக் கொண்டு மீண்டும் கோப வசப்பட்டான்.

முருகப் பெருமானை நோக்கிய தாரகன், "திருமாலுக்கும் நான்முகனுக்கும் இந்திரனுக்கும் நம்மிடம் விரோதமுண்டு. ஆனால் எம் தவத்துக்கு இரங்கி வரம் தந்த சிவபெருமானுக்கும் எமக்கும் போர் நிகழ்வதற்குக் காரணம் ஒன்றுமில்லை. ஆதலால், சிவகுமாரனாகிய நீ நம்முடன் போர் செய்ய வந்த காரணம் யாது? சொல்" என்று கேட்டான்.

"நாரணன் தனக்கு மற்றை நான்முகன் தனக்கும் வெள்ளை
வாரணன் தனக்கும் அல்லால் மதிமுடி அமலனுக்கும்
தாரணி தனில் எமக்குஞ் சமரினை இழைப்ப இங்கோர்
காரண மில்லை மைந்தா வந்ததென் கழறு" கென்றான்.

முருகப் பெருமான் விடை கூறுவார். "தாரகாசுர! உயிர்கள் செய்யும் நல்வினை. தீவினைகளுக்கேற்ப அநுக்கிரகமும் தண்டனையும் அளிக்கும் சிவபெருமான் நீயும் உன் சோதரரும் தவமாகிய நல்வினை புரிந்தமையால் தவப்பலனாக உங்களுக்குப் பெரும் பலமளித்தார். அந்தப் பலத்தைக் கொண்டு தேவரைச் சிறை வைத்துத் தீவினை புரிந்துள்ள உங்களுக்கு இப்போது தீவினைப் பயனையும் அளிக்கத் திருவுளம் கொண்டுள்ளார். உங்கள் வீரத்தையும் வலியையும் அழிக்கும் பொருட்டே நம்மை விடுத்தருளினார்."

அறவினை புரிந்தே யார்க்கும் அருளொடு தண்டம் செய்யும்
இறையவ னாகும் ஈசன் இமையவர் தம்மை நீங்கள்
சிறையிடை வைத்த தன்மை திருவுளங் கொண்டு நுந்தம்
விறலொடு வன்மை சிந்த விடுத்தனன் எம்மை என்றான்.

"தாரகனே! உயிர்கள் புரியும் நல்வினை தீவினைகளைநாடி, அவற்றிற்கு ஏற்ப, அருளும் தண்டமும் புரியும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், தேவர்களை நீங்கள் சிறையில் வைத்ததைத் திருவுளங் கொண்டு, உங்கள் வீரத்தையும் வலிமையையும் அழிக்கும்பொருட்டு நம்மை விடுத்தருளினார்" என்றார்.

தாரகன் இறுமாந்து "கருடன் மீது வந்து என்னை எதிர்த்த திருமாலின் சக்கரம் என் கழுத்தில் ஆபரணமாக இருப்பதை நீ பார்க்கவில்லையா? என்னைப் பகைத்து எதிர்த் தவர்களில் வென்றவர் எவரும் இன்றுவரை இல்லை. எல்லோ ரும் தோற்றோ அல்லது அழிந்தோ போனார்கள். பாலகனே! நீ முன்பு என் மீது போருக்கு அனுப்பிய தலைவர்களை வென்று கிரௌஞ்ச மலையினுள் இருக்கும்படி செய்தேன்; பல கணங் களையும் அழித்தேன்; நீயும் இப்போது என்னோடு பொருது அழியாமல் உனது தந்தையாகிய சிவபெருமானிடம் செல்லு வாய்" என்றான்.

ஆறுமுகக் கடவுள் அதற்கு மறுமொழியாக, "படைக் கலங்களுக் கெல்லாம் தலைமைப் படைக்கலமாகிய நம் வேற் படை ஒரு போதும் பழிப்புக்கிடமாகாது; அது உன் உயிரைக் குடிக்கவே வந்திருக்கிறது. மாயையின் உறைவிடமாகிய கிரௌஞ்ச மலையையும் உன்னையும் வேற்படையால் வென்று நம் சேனைகளை விரைவில் மீட்கின்றோம்" என்று திருவாய் மலர்ந்தார்.

சிவகுமாரன் கூறியதைக் கேட்ட தாரகனுக்குச் சினம் மூண்டது. வில்லை வளைத்து நாண் ஒலி செய்தான். முருகப் பெருமானும் வில்லை எடுத்து வளைத்தார்; நாண் மீட்டினார். அதன் ஒலியைக் கேட்டே அசுரப் படைகள் அஞ்சின. ஐய னுக்கும் அசுரனுக்குமிடையே அற்புதமான யுத்தம் நிகழ்ந் தது.

குமாரக் கடவுள் கோடி பாணங்களை ஏவினார். தாரகன் உடல் முழுவதையும் அந்தப் பாணங்கள் துளைத்தன. தார கன் கோபம் மேலும் பெருகியது. இரண்டு கோடி பாணங் களைப் பெருமான் மீது விடுத்தான். செவ்வேட் பரமன் இரண்டு திவ்விய அஸ்திரங்களைச் செலுத்தி, தாரகனுடைய தும்பிக்கையையும் முகத்திலுள்ள கொம்பையும் துண்டாக் கினார். தனது சிறப்பு அங்கங்களை இழந்த தாரகன் மனம் தளர்ந்தான். நாணமும் ஆத்திரமும் பெருக ஆயிரம் பாணங் களை ஏவி ஆறுமுகப் பெருமானுடைய தேரில் உள்ள கொடியை அறுத்து வீழ்த்தினான். அது கண்டு வெகுண்டாற்

போல் பாவித்த முருகக் கடவுள் எட்டுக் கணைகளைச் செலுத்தி அவனுடைய தேரையும் பாகனையும் தேர்க் குதிரைகளையும் பாழ்படுத்தினர். தாரகன் வேருெரு தேரில் ஏறி ஐந்நூறு அக்கினிக் கணைகளை விடுத்து முருகப் பெருமானுடைய தேர்ப்பாகனுகிய வாயுதேவனின் தோள்களைப் புண்படுத்தினன்.

முருகப் பெருமான் ஆயிரம் கணைகளைச் செலுத்தித் தாரகனின் நெற்றியைத் துளைத்தார். தாரகாசுரன் 'ஓ' வென்று கதறி உதிர வெள்ளஞ் சொரியத் தேர் மீது மயங்கி விழுந்தான்.

தாரகன் மயங்கி விழுந்ததைக் கண்ட அசுர சேனைகள் சினங்கொண்டு முருகப் பெருமானைச் சூழ்ந்து கொண்டார்கள்; சூலம், சக்கரம், தோமரம், பிண்டிபாலம், வேல், வாள் தண்டு முதலிய படைக்கலங்களைச் செலுத்தி ஆரவாரித்தார்கள். முருகப் பெருமான் தம் வில்லை வளைத்துச் சரமழை பொழிந்தார். அவுணர்களின் தலைகளும், மார்புகளும், கரங்களும், தோள்களும் துண்டிக்கப்பட்டன. சிலர் இரத்தக் கடலில் நீந்திச் சென்று கரையேறி ஒளிந்து கொண்டார்கள். சூரியன் முன் மறையும் பனித்துளிகள் போல் தேவதேவனின் வீர பராக்கிரமத்தின் முன் அசுரர்அனைவரும் அழிந்தனர்.

தாரகாசுரனுக்கு மயக்கம் நீங்கியது. எழுந்து பார்த்தான். தனது மாபெரும் சேனைகளைக் காணுது, துன்பத்துடன் நகைத்தான். "சிவகுமாரன் ஒருவன் என்னுடன் வந்து போர் செய்ததில் நான் எனது துதிக்கையையும், கோடுகளையும் இழந்தேன்; இப்போது தனித்து நிற்கிறேன். அழகு தான் என் ஆண்மை! இச்சிறுவனைக் கொல்லுவதோ, வெல்லுவதோ அரிய செயல். ஆகவே, இனி தேவாஸ்திரங்களைச் செலுத்திப் போர் செய்ய வேண்டும்" என்று எண்ணினுன். நாராயணுஸ்திரம், பிரம்மாஸ்திரம் முதலிய தெய்வாஸ்திரங்களை விடுத்தான். அந்த அஸ்திரங்கள் எல்லாம் அஞ்சி நடுங்கி வந்து முருகப் பெருமான் பக்கத்தே ஒதுங்கி நின்றன.

அடலரி நான்முகன் ஆதி வானவப்
படையினை யாவையும் பவஞ்செய் தாரகன்
விடவிட வந்தவை வெருவி மேலையோன்
புடைதனில் ஒடுங்கியே போற்றி நின்றவே.

சிவபெருமானைத் தேவதையாகக் கொண்ட பாசுபதாஸ்திரத்தைஎடுத்து மானத பூஜை செய்த தாரகன் சிவகுமாரன் மீதே அதைக் கோபத்துடன்செலுத்தினான். அச்சிவப் படைக்கலம் நஞ்சையும், தேவப் படைக்கலங்களையும், பூதங்களையும், பாம்புகளையும், சூலங்களையும், அக்கினியையும் உண்டாக்கிக் கொண்டு சர்வ அண்டங்களும் வருந்தும்படியும், சகல உயிர்களும் உலைந்து சுழலும் வண்ணமும் சினத்துடன் சென்றது. முருகப் பெருமான் அதைக்கண்டு தந்தையாகிய சிவபிரானைச் சிந்தையில் தியானித்துக் கொண்டு, ஒரு திருக்கரம் நீட்டிப் பற்றிக் கொண்டார். தந்தவனே திரும்பப் பற்றிக் கொள்வது போலிருந்தது அந்தக் காட்சி.

கந்தவேள் அனையது கண்டு தந்தையைச்
சிந்தையில் உன்னியோர் செங்கை நீட்டியே
அந்தவெம் படையினை அருளில் பற்றினான்
தந்தவன் வாங்கிய தன்மை யென்னவே.

தாரகன் நிலைகுலைந்துவிட்டான். "இன்றே எம் செல்வமும் வாழ்வும் அழிந்தன" என்று ஏங்கலானான்.

'இவன் அறப்போர் அன்றி மாயப்போர் புரியமாட்டான். நான் மாயைகள் செய்து, மறைந்து நின்று போர் செய்வேன். என்று எண்ணி, விரைந்து கிரௌஞ்ச மலைமுன் சென்றான். "கிரௌஞ்சமே! நீ விரைந்து மாயைகளைச் செய்வாயாக" என்று கூறினான். உடனே கிரௌஞ்சமலை பல மாயைகளைச் செய்யத் தொடங்கியது. முப்புரங்களிலும் அந்த மலை வரத் தொடங்கியது. முப்புரங்களில் உள்ள அசுரர்களாய்வந்தான் தாரகன். கிரௌஞ்ச மலை பலப் பல மேகங்களாக வந்தது. தாரகன் அவற்றினுள்ளே இடியாக வந்தான். கிரௌஞ்சம் பல கடல்களாய் வந்தது; தாரகன் அவற்றினுள்ளே வடவா முகாக்கினியாய் வந்தான். கிரௌஞ்சம் சக்ரவாளகிரியைச் சூழும் இருளாய் வந்தது; தாரகன் அதனுள்ளே பூதமாய்

வந்தான். கிரௌஞ்சம் எட்டுத் திக்கயங்களாய் வந்தது; தாரகன் சடசடவென்ற ஒலியோடு குலமலைகளாய் வந்தான்; கிரௌஞ்சம் வாயுவாய் வந்தது; தாரகன் அக்கினியாய் வந்தான்; கிரௌஞ்சம் நெருப்புக் கொள்ளியாய் வந்தது; தாரகன் ஆயிரம் கோடி சூரியர்களாய் வந்தான்.

தாரகன் இவ்வாறாக, கிரௌஞ்ச மலையோடு சேர்ந்து எண்ணற்ற மாயைகளைச் செய்து கொண்டு திரிவதைக் கண்ட முருகப் பெருமான், தம் கையிலுள்ள வேலாயுதத்தை நோக்கி, "நீ தாரகாசுரனையும், கிரௌஞ்ச மலையையும் ஒரு கணப் பொழுதில் பிளந்து உயிரை உண்டு, இலக்கத் தொன்பது வீரர்களையும், பூதப் படைகளையும் மீட்டு இங்கே வருவாயாக" என்று பணித்தருளி, அதனைச் செலுத்தினார்.

சர்வசங்கார காலத்தில் மாயையாலாகிய உலகங்களையும் உயிர்களையும் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணினின்று தோன்றும் அக்கினி சுடுவதுபோல, முருகப் பெருமானுடைய வேலாயுதம் தாரகனும் கிரௌஞ்சமலையும் செய்த மாயைகள் அனைத்தையும் அழித்தது. எம்பெருமானின் ஆறுமுகங்களி லிருந்தும் எழுந்த சினம் ஒரு வடிவெடுத்துச் செல்வதுபோல் அந்த வேற்படை சென்றது. தாரகன், வேற்படையைப் பிடித்து முறித்துப் போடுவதற்காக எதிர்த்து வந்தான். அது அக்கினியை எதிர்க்கக் கொசு வந்தது போலிருந்தது. வேற் படை தாரகனின் மார்பைக் கிழித்துக் கிரௌஞ்ச மலையை யும் தகர்த்து இரு கொடிய உயிர்களை உண்டது; மலையினுள் துயின்ற வீரர்களுக்கு உணர்வைத் தந்து எழுப்பிவிட்டது. பின்னர் ஆசார சீலமாக ஆகாய கங்கையில் நீராடி முருகப் பெருமான் திருக்கையில் வந்து சேர்ந்தது.

கிரௌஞ்ச மலை பிளந்தவுடனே, அதனுள் மயங்கிக் கிடந்த வீரவாகு தேவர் முதலியோர் மயக்கம் தெளிந்து எழுந்தனர். விரைந்து முருகப் பெருமானை யடைந்து வணங்கித் துதித்தனர்.

கருணைக் கடலாகிய கந்தவேள் அவர்களை நோக்கி, "நீங்கள் அனைவரும் தாரகனால் கிரௌஞ்ச மலையில் அடை

பட்டு அல்லலுற்றீர்களா?'' என வினவினர். "எந்தையே! தங்கள் திருவருள் இருக்கும்போது அடியோங்கள் அல்லற் படுவதுமுண்டோ? மையலுடன் உறங்குவது போல எது துயரும் அறியாது மயங்கி யிருந்தோமே யன்றி, கிரௌஞ்ச மலையின் மாயத்தால் சிறிதும் துன்பம் அடையவில்லை'' என்று வீரவாகு தேவர் முதலிய வீரர்கள் மகிழ்ந்து கூறினர்கள்.

முருகக் கடவுள் வீரவாகு தேவரை அழைத்துத் தாரகன் விடுத்த சிவப் படைக்கலத்தை அவருக்கு அளித்தார். எதிரி ஆத்திரத்துடன் எய்த ஆயுதத்தையும் அழுதன் அன்புப் பரிசாக்கிவிட்டார். தாரகனுடன் நடந்த போரில் இறந்த பூதர்களை எழுப்பி, அவர்கள் புடைசூழ, வானவர் துதிக்க வீரர்களுடன் போர்க்களத்தினின்று புறப்பட்டார் வெற்றி வேலர்.

21. தேவகிரிப் படலம்

இமய வெற்பைக் கடந்து, தென் திசையில் நடந்து, கதிரவன் மேற்கடலில் மூழ்கும்பொழுது தேவகிரியை அடைந்தார்.

மாலைக் காலம் செவ்வானத்துடன் வந்தது; அதனை யடுத்து இருளும் சூழ்ந்தது; அதனிடையில் இளம் பிறை விளங்கியது. விண் மீன்கள் ஒளி சிந்தின. இரவின் ஆட்சி தொடங்கியது. அப்பொழுது திருமால், நான்முகன், இந்திரன் முதலியோர் முருகப் பெருமானின் செம்மலர்ப் பாத கமலங்களைச் சென்னி பொருந்தப் பணிந்தனர்.

"எம்பெருமானே! தாரகர்களைக் கிரௌஞ்ச மலையோடு அழித்தருள் புரிந்த தேவரீரைப் பூசிக்க விரும்புகிறோம்; இம் மலையில் எழுந்தருள்க'' என்று வேண்டினர். ஆறுமுகக் கடவுள் அவ்வேண்டுகோளுக்கு இணங்கினர். இமையவர்கள் உடல் உரோமஞ் சிலிர்த்துப் பேருவகை எய்தினர்.

குமரக் கடவுள் சேனைகளோடும் தேவர்களோடும் தேவ கிரியின் மேற் சென்றார். தம்மைத் தொழுத தேவதச்சனை நோக்கி. "நாமும் நம்முடைய தம்பியரும், தேவர்களும் கணங்களும் தங்குவதற்கு இம்மலையில் இப்பொழுதே ஒரு

நகரத்தை உண்டாக்குவாய்'' என்று பணித்தருளினர். அவ்வாறே தேவதச்சன் அழகியதொரு நகரத்தையும் அதனுள்ளே எம்பெருமான் எழுந்தருளும் பொருட்டுச் செம்பொன்னுலயத்தையும், அதனுள்ளே இரத்தின சிங்காசனத்தையும் செய்து முடித்துவிட்டு முருகப் பெருமானிடம் வந்து தெரிவித்தான்.

முருகப் பெருமான் தன்னைச் சூழ்ந்த அனைவருடனும், அத்திருநகரத்தினுட் சென்று, பூத சேனைகளைத் திருக்கோயில் திரு வீதியிலே நிறுவினர். தேரினின்றும் இறங்கி, மறைக்கும் எட்டாத மலரடியைச் செம்பொற் பாதுகைகளிலே வைத்து வீரர்களும் தேவர்களும் சூழத் திருக்கோயிலினுள்ளே புகுந்து பேரொளி வீசும் மணித் தவிசின் மேல் எழுந்தருளினர்.

முருகப் பெருமானைப் பூசிக்க எண்ணிய திருமால் முதலிய தேவர்கள் உமா தேவியாருடைய திருக் கரத்தில் தோன்றிய கங்கையை நினைக்க அது அங்கு வந்து பாய்ந்தது, அதனல் ஆறுமுகனுக்கு அபிஷேகம் செய்தார்கள். அமிர்தம் வைத்த குடங்களைக் கொண்டு வந்து வேதங்களை ஓதிக் கங்கையிலே திருமஞ்சனம் எடுத்தார்கள். பிரம்மதேவர் முதலிய தேவர்களும் முனிவர்களும் மந்திரம் சொல்லித் திருமஞ்சன மிட்டார்கள். அதன்பின் வேறு பீதாம்பரம் சாத்தி வேறொரு சிங்காசனத்தில் எழுந்தருளியிருக்கச் செய்து, முருகனுடைய திருநாமம் சொல்லி, நறுமணமாலை சூட்டி; சந்தனக் குழம்பு அணிவித்துப் பச்சைக் கர்ப்பூரம் அப்பினர்கள். கஸ்தூரி திலகம் வைத்து. திருமேனி யெங்கும் திவ்வியாபரணங்களைச் சாத்தி, மணி ஒலியோடு மலர்களைத் தூவி அருச்சித்து, தூப தீபம் காட்டி, மெய்யன்போடு துதித்தனர். முருகப் பெருமான் அந்த அற்புதமான தேவ பூஜையை ஏற்று அருள் புரிந்தார்;

22. அசுரேந்திரன் மகேந்திரஞ்செல் படலம்

தாரகன் இறந்த செய்தியைத் தூதர் சொல்லக் கேட்ட தாரகன் மனைவி சௌரி இடியோசை கேட்ட நாகம் போல் நடுங்கினள். விழுந்தும், எழுந்தும், தொழுதும் கதறியழுது சென்று தன் கணவனின் உடலின்மீது புரண்டு புலம்பினள்.

தாரகனின் மற்ற மனைவியர்களும் வந்து நெருங்கிச் சடலத்தைச் சுற்றிப் புலம்பி அழுதார்கள். "தன்னுடைய ஆழிப் படையை உனக்கு ஆபரணமாக அளித்த திருமாலும், இந்திராதி தேவர்களும், இயமனும் இன்று அல்லவா மனக் கவலை தீர்ந்தார்கள்?" என்று கதறினாள் சௌரி.

"உந்துதனி ஆழி உனக்கணியாத் தந்தோனும்
இந்திரனும் ஏனை இமையவர்கள் எல்லோரும்
அந்தகனுர் தாமும் அனைவர்களும் இன்றன்றோ
சிந்தைதனில் உள்ள கவலையெலாம் தீர்ந்தனரே!"

தாரகாசுரனின் புதல்வனாகிய அசுரேந்திரன். சூரனின் மற்றொரு சோதரனாகிய சிங்கமுகனுடைய நகரமாகிய ஆசுர புரிக்குச் சென்றிருந்தான். தந்தையின் மரணச் செய்தியைக் கேட்ட அவன் விரைந்து வந்து தாரகனின் உடலை ஒருதேரின் மீது கிடத்தி ஈமக் கடன்களைச் செய்து தகனக் கிரியைகள் செய்தான். தாரகன் மனைவியாகிய சௌரியும் மற்ற மனைவியர்களும் உடன்கட்டை ஏற விரும்பினார்கள். அசுரேந்திரன் எவ்வளவோ தடுத்துக் கூறியும் அவர்கள் கேட்கவில்லை. எல்லோரும் உடன் கட்டை ஏறினார்கள். (எங்கெங்கு பெண்மை உண்டோ அங்கெல்லாம் கற்பு நிலை உண்டு. அசுரப் பெண்களிடமும் பதிவிரதா தருமம் தலை தூக்கி நின்றது.)

அசுரேந்திரன் தன் சுற்றத்தார் சூழத் தென் கடலிலுள்ள வீரமகேந்திர புரியை அடைந்தான். அங்கு ஆட்சி அதிகாரம் செலுத்தும் தனது பெரியப்பனான சூரபன்மனை யடைந்து வணங்கி, அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு அழுதான்.

"மைந்தனே! ஏன் வருந்திப் புலம்புகின்றாய்?" என்று வினவினான் சூரபன்மன்,

"பெரியப்பா! இந்திரன் செய்த சூழ்ச்சியினால் சிவ குமாரன் பூதப் படைகளோடு வந்து உங்கள் தம்பி தாரகாசுரனைக் கிரௌஞ்சி மலையோடு சேர்த்து வேற்படையினாலே கொன்றான்" என்று கூறினான் அசுரேந்திரன்.

சூரபன்மன் அடங்காத சினமும் வியப்பும் அடைந்தான். "மகனே! இது பொய். என்ன நடந்தது? பயப்படாமல் உண்மையைச் சொல்" என்றான்.

"நான் கூறியது யாவும் உண்மையே" என்று அசுரேந்திரன் கூறினன்.

தன்னுடைய தம்பி உண்மையிலேயே முருகப்பெருமானல் மாண்டான் என்பதைக் கேள்விப்பட்ட சூரபன்மன் எல்லையில்லாத துயரமும் ஆத்திரமும் கொண்டான். "என் தம்பியைக் கொன்ற முருகன்மீது இப்போதே போர் தொடுத்தாக வேண்டும். தேரும் ஆயுதங்களும் விரைவில் கொண்டு வாருங்கள்" என்று ஏவலர்களுக்கு உத்தரவிட்டான் சூரபன்மன்.

அப்போது அமோகன் என்ற மந்திரி சூரபன்மனை வணங்கி நின்றான். "அசுரேச! சாம—தான—பேதம் என்ற மூன்று முதல் உபாயங்களைப் பின்பற்றாமல் எடுத்த எடுப்பிலேயே நான்காவது உபாயமாகிய போருக்குப் புறப்படுவது முறையல்ல; ஆராயாமல் எந்த ஒரு செயலையும் செய்யக்கூடாது; எதிரிகளின் பலத்தை ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்ட பின்பே செய்வது என்ன என்பது பற்றி முடிவு எடுக்க வேண்டும். எதிரிகள் நம்மைவிடப் பலம் வாய்ந்தவர் என்று நான் சொல்வதாக எண்ணக் கூடாது. எங்கள் தலைவராகிய தாங்கள் அழிவில்லாதவர்; எல்லா உலகங்களையும் ஆள்பவர். தேவர்கள் யாவரையும் ஏவலராகப் பெற்றிருப்பவர்; திருமாலாலும், பிரம்மனாலும் புகழப்படுபவர்; இப்படிப்பட்ட தாங்கள் நமது படை பலத்துக்கு மிகவும் குறைந்த பலமுடைய எதிரிகளுடன் போராடினல் அதில் பெருமை என்ன உண்டு? இந்திரன் பேச்சைக் கேட்டுப் பூதப் படை சூழ வந்த நேற்றுப் பிறந்த குழந்தை மீது மகாசூரராகிய தாங்கள் போருக்குப் போவது ஒருவேளை பழிப்புக்கு இடமாகலாம் எனவே பகைவரின் பலத்தை முதலில் அறிவோம்" என்றான்.

"நன்று, நன்று" என்று கூறி, அந்த யோசனையை ஏற்ற சூரபன்மன், பகன், மயூரன், சேனன், சக்கரவாகன், சுகன் முதலிய தூதர்களைக் கூப்பிட்டு, "கந்தவேளுடைய இயல்பையும் அவனது சேனையின் தொகையையும் ஆராய்ந்து வாருங்கள்" என்று பணித்தான். அவர்கள் சூரபன்மனை வணங்கி விரைந்து பூமியை நோக்கிச் சென்றார்கள்.

23. வழிநடைப் படலம்

தேவகிரியில் எழுந்தருளி யிருந்த குமாரக் கடவுள் கதிரவன் உதயமானதும், தேவர்களும், சேனைகளும் புடை சூழத் தென் திசை நோக்கிச் சென்றார்.

பிருங்கி முனிவர் உமையன்னையை நீக்கிச் சிவபெருமானை மட்டும் வலஞ் செய்ததன் காரணமாக தேவியார் சிவபெருமானிடமிருந்து தம்மைப் பிரிக்க முடியாமல் அவரது இடப் பாகத்தைப் பெற விரும்பித் தவம் செய்த திருக்கேதாரம் என்னும் திவ்வியத் தலத்தைக் கண்டு தரிசித்தாரீர் முருகவேள். திவ்விய ஸ்தலங்களின் அரசாக மதிக்கப் பெறும் காசியம்பதியைத் தரிசித்தார். சிலாத முனிவரின் புதல்வராகிய திருநந்தித் தேவர், சிவபெருமானைத் தாங்கும் பொருட்டுத் தவம் செய்து மலையாகிப் பரமேசுவரனைத் தாங்கிய திருப் பருப்பதத்தைத் தரிசித்தார். மாங்கனிக்காக உமாதேவியாரிடம் தாம் கோபித்துக் கொண்டு பாதாளத்துக்குச் சென்று குகை வழியே வெளியே தாம் வந்ததும், அவ்வாறு வெளியே வந்த இடத்திருந்த புஷ்கரணி தீரத்திலே திருமால் முதலிய தேவர்கள் தம்மைப் பூசித்ததுமாகிய திருவேங்கடமலையை அடைந்தார்.

(திருவேங்கடமும் முருகனுக்குரிய திவ்விய ஸ்தலங்களுள் ஒன்று. பண்டு தான் வரும் வேங்கடகிரியையும் பார்த்தான்' என்று கச்சியப்பர் கூறுகிறார்.)

சிலந்தியும், பாம்பும், யானையும், சிவகோசரியாரும், கண்ணப்ப நாயனாரும், நக்கீர தேவரும், கன்னியரும் முத்தியடைந்த தட்சிண கைலாயமாகிய திருக்காளத்தி மலையைத் தரிசித்தார். காளி தேவி ஆடல் புரிந்தபோது அவளது செருக்கு அழியவும் உலகம் இன்புறவும் சிவபெருமான் ஆடல் புரிந்த திருவாலங்காட்டைத் தரிசித்தார். ஊழிக் காலத்தும் அழிவில்லாததாய், திருமால், நான்முகன் முதலிய தேவர்களுக்கு இருப்பிடமாய் அமைந்ததும், சிவபெருமான் மாமர நிழலில் எழுந்தருளியுள்ளதுமான திருக்காஞ்சி நகரத்தைத் தரிசித்தார்; அங்கே காமாட்சி அம்மையார் பூசித்த திருவேகம்பத்தையும், நான்முகன், திருமால் முதலிப அமரர்

கள் பூசித்த மற்றைய ஆலயங்களையும் தரிசித்தார். பிரம்மாவும், விஷ்ணுவும் அடிமுடி அறியவொண்ணு மல்எம்பெருமான் எழுந்தருளிய திருவண்ணுமலையைத் தரிசித்தார். இறந்த குற்றமற்ற உயிர்களையெல்லாம் உமாதேவியார் தமது ஆடையால் விசிறிக் களைப்பாற்றச் சிவபெருமான் தமது திருத் தொடையின் மேல் அவர்களைக் கிடத்தி, திருவைந் தெழுத்தின் உண்மையை உபதேசித்துத் தமது சாருப்யத்தைக் கொடுத்தருளும் காசிக்குச் சமமான விருத்தாசலத்தைத் தரிசித்தார். ஒப்பற்ற கடுந்தவம் புரிந்த பதஞ்சலி வியாக்கிர பாத முனிவருக்காகச் சிவபெருமான் எல்லையில்லாத பெருங் கருணையோடு ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளும் திருத் தில்லையம்பதியைத் தரிசித்தார். அகத்திய முனிவரின் கமண்டலத்தினின்றும் பெருகி வேறு வேருகப் பிரிந்து பற்பல பெயர்களைத் தாங்கிச் செல்லும் காவிரியாற்றின் வட கரையில் உள்ள மண்ணியாற்றங்கரையை அடைந்தார்.

24. குமாரபுரிப் படலம்

முருகப்பெருமான் மண்ணியாற்றங்கரையை அடைந்த போது கதிரவன் தன் கிரணங்களை ஒடுக்கிக் கொண்டு மேலைக் கடலில் மறைந்தான். அப்போது சிவப்பு வானம் பிட்சாடன வடிவங் கொண்டுவந்த சிவபெருமானைப்போல் விளங்கியது. தாருக வனத்தின் தோற்றம் போல் இருந்தது இருள்; தாருக வனத்து மாதர்களைப் போல் விண்மீன்கள் மயங்கி நின்றன. சிவபெருமான் திருக்கரத்திலேந்திய பிரம்ம கபாலத்தைப் போல் தோன்றியது இளம்பிறை.

மிக்க தாருக வனத்தினை ஒத்தது விசும்பில்
தொக்க பேரிருள்; மாதரொத் தனஉடுத் தோற்றம்;
செக்கர் ஈசனை ஒத்தது; ஒண் போனகஞ் செறிந்த
கைக்க பாலம(து) ஒத்தது கதிரிளம் பிறையே.

இச்சமயத்தில் பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்கள் குமாரக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! இந்த ஆற்றங் கரையெல்லாம் மணற்குன்றுகள் மலிந்துள்ளன; மலர் வனங்கள் நிறைந்தன; எண்ணிலாத சிவஸ்தலங்கள் இருக்கின்றன.

ஆகவே, இந்த நதிக் கரையில் எழுந்தருளுக'' என்று வேண்டிக்கொண்டார்கள். முருகப் பெருமான் அதற்கிணங் கித் தேவ தச்சனைக் கொண்டு மண்ணியாற்றங் கரையில் கவின் மிக்க நகரம் ஒன்றை அமைத்துக் கொண்டு எழுந்தரு ளினார். தேவர்கள் அந்நகருக்குத் திருச்சேய்ஞலூர் எனப் பெயரிட்டார்கள். இதனைக் குமாரபுரி என்று வடமொழியில் கூறுவர்.

தாரகன் கிரௌஞ்ச மலையுடன் அழிந்ததை எண்ணிய இந்திரன் துயர் நீங்கி மகிழ்ந்திருந்தான். அப்போது சீர்காழி யில் உள்ள வனதேவதை இந்திரனை வந்து வணங்கியது. ''தேவர் கோமானே! நீ இந்திராணியுடன் சீர்காழியில் தங்கித் தவம் செய்தபோது என்னிடம் இந்திராணியின் ஆபரணங்களை எடுத்துக் கட்டி அடைக்கலமாகக் கொடுத்து வைத்தீர்கள். அதை இப்போது ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று ஆபரணக் கிழியை அமரேசனுக்கு அளித்தது. இந்தி ராணியின் ஆபரணங்களைக் கண்ட அளவிலேயே இந்திர னுக்கு விரகம் மேலிட்டது. இரவு முழுவதையும் ஒரு பூஞ் சோலையின் புறத்தேயுள்ள மணற் குன்றில் தாபத்துடன் கழித்தான் தேவராஜன்.

சூரியோதயம் ஆயிற்று. இந்திரன் பதைபதைத்தான். 'முருகக் கடவுளுடன் இருக்கும்போது எனக்குக் காம உணர்வு வந்ததே' என்று வருந்தினான்.

தீமை யுள்ளன யாவையுந் தந்திடும் சிறப்பும்
தோமில் செல்வமும்கெடுக்கும்நல் லுணர்வினைத்தொலைக்கும்
ஏம நன்னெறி தடுத்திருள் உய்த்திடும் இதனால்
காம மன்றியே ஒருபகை உண்டுகொல் கருதில்.

காமமானது தீமை யென்பன யாவையுங் கொடுக்கும்; சிறப்பையும் செல்வத்தையும் கெடுக்கும்; நல்ல அறிவை அழிக்கும்; நல்ல நெறியைத் தடுக்கும்; நரகத்தில் விடுக்கும். ஆதலால் காமத்தின் மிக்க பகையில்லை.

காமம் செய்யும் தீமைகள் அனைத்தையும் உணர்ந்த இந்திரன் அங்கிருந்து நீங்கித் தேவர்கள் சூழச் சென்று முருகப் பெருமான் சந்நிதியை யடைந்து வணங்கித் துதித்தான்.

இந்திரனை நோக்கிய கந்தவேள், "நாம் சிவபெருமானைப் பூசிக்க விரும்புகிறோம். பூசைக்கு வேண்டிய உபகரணங்களை வருவிக்கக் கடவாய்" என்று பணித்தருளினர். இந்திரனின் பாவம் தொலையவே, சிவப் பணியில் ஈடுபடுத்தினர் போலும்!

பூசைக்கு வேண்டிய திவ்விய தீர்த்தம், நறுமலர், பீதாம்பரம், சந்தனம், திருவமுது, தூபம், தீபம் முதலியவைகளை இந்திரன் உடனே தருவித்தான். முருகப் பெருமான் தேவதச்சனைக் கொண்டு சிவபெருமானுக்கு ஒரு திருக்கோயில் அமைத்துச் சிவகாம விதிப்படி சிவலிங்கத்தை ஸ்தாபித்து வழிபட்டு வலம் வந்து வணங்கித் துதித்தார். பக்தர்களின் பூசனை யாவையும் பெற்றருளும் பரமேசுவரன் தமது மறு உருவான ஆறுமுகன் புரிந்த ஆராதனையில் உவகையுற்றார். சிவபெருமானுக்குக் கந்தவேள் புரிந்த பூஜையைவிடப் புண்ணியமும், அழகும், அநுபூதியும் நிறைந்த வழிபாடும் உண்டா?

உமாதேவியாரோடு இடபத்தின்மீது ஈசுவரர் தோன்றியருளினர். குமாரக் கடவுளும் இலக்கத்தொன்பது வீரர்களும், தேவர்களும் சிவபெருமானைத் தரிசித்து மனங்கசிந்துருகித் துதித்தார்கள். சிவபெருமான் தமது திருமைந்தரை நோக்கி "உன் வழிபாட்டுக்கு மகிழ்ந்தோம். நீ இதனைப் பெற்றுக்கொள்" என்று கூறி உலகம் முழுவதையும் ஒரு நொடியில் அழிக்க வல்ல சர்வ சங்காரப் படையென்னும் உருத்திரப் பாசுபதப் படைக்கலத்தைக் கொடுத்தருளினர்.

"மைந்தனே! இது நம்மிடத்தே தோன்றிய படைக்கலம்; பிரம்ம விஷ்ணுக்களும் இதனைப் பெற்றிலர்; இதனைத் தாங்கவல்லவன் நீயன்றி வேறு ஒருவரும் இலர்; இது சூரபன்மனுடைய அளப்பற்ற சேனையை அழிக்க வல்லது" என்று திருவாய் மலர்ந்தார்.

25. சுரம்புகு படலம்

சிவபெருமான் மறைந்த பின்னர் கந்தவேள், அங்கிருந்து தேரில் புறப்பட்டார். தேவரும், பூதரும், வீரரும் புடை சூழக் காவிரியைக் கடந்து திருவிடைமருதூர், மாயூரம், திருப்பறியலூர் முதலிய சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு உலையில் காய்ந்த இரும்பு போன்ற மிகுந்த வெப்பம் கொண்ட பாலைவனத்திலே சென்றார். உடனே அது நறுமலர்ச் சோலைபோல் குளிர்ச்சியுடையதாயிற்று. புறச் சமய நெறியில் புகுந்து அலைகின்றவர்களுக்குச் சிவபெருமான் திருவருள்பாலித்த பொழுது பொறி புலன்கள் மாறுபட்டன போல, அப்பாலைவனம் பால முருகனின் பரிசம் பட்டதும் குளிர்ந்த மலர்ச் சோலையாக மாறி மகிழ்ச்சி தந்தது.

> புறநெ றிக்கணே வீழ்ந்துளோர் சிவனருள் புகுங்கால்
> அறிவும் ஆற்றலும் குறிகளும் வேறுபட் டனபோல்
> வறிய செந்தழல் வெவ்வனம் வேலவன் வரலால்
> நறிய தண்மலர்ச் சோலையாய் உவகைநல் கியதே.

வெம்மை நீங்கிய அப்பாலைவனத்தில் கந்தவேள் சென்று கொண்டிருப்பதைத் திருப்பரங்குன்றிலே தவம் செய்து கொண்டிருந்த பராசர முனிவரின் புத்திரர்களாகிய தத்தர், அநந்தர், நந்தி, சதுர்முகர், சக்ரபாணி. மாலி என்னும் அறுவரும் ஞான நோக்கினால் அறிந்து வடதிசை நோக்கி வந்து கந்தக் கடவுளை எதிர்கொண்டு சென்றனர். கந்தப் பெருமானைக் கண்டதும் கழலிணைகளில் வீழ்ந்து வணங்கினர்.

ஆறுமுகக் கடவுளைச் சரவணப் பொய்கையிலிருந்து எடுத்தபோது அகிலாண்ட நாயகியின் திருப்பால் வெள்ளமாய்ப் பெருக அதனை மீனுருவில் இருந்து உண்டு சுயரூபம் பெற்ற தவச் செல்வர்களே இவ் வறுவரும். இவர்கள் சிவாக்ஞையை மேற்கொண்டு திருப்பரங்குன்றத்துக்குச் சென்று தவம் செய்துகொண்டிருந்தார்கள். கந்தவேள் பராசர முனிவருடைய புதல்வர்களுக்குப் பூரண அநுக்கிரகம் புரிந்தார்.

26. திருச்செந்திப் படலம்

அதன்பின் கந்தக் கடவுள், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருச்செங்குன்றூர்(திருச்செங்கோடு)அடைந்து, சிவபெருமானைத் தரிசித்துக்கொண்டு, கடற்கரையில் உள்ள ஒரு திவ்விய ஸ்தலத்துக்கு எழுந்தருளினார். அதுவே அலைவாயாகிய திருச்செந்தூர்.

அங்கு தேவதச்சனைக் கொண்டு ஒரு திருக்கோயில் அமைக்கச் செய்து அக்கோயிலினுட் புகுந்து, வீரர்களும் பூத சேனாதிபதிகளும் துதிக்க மணியாசனத்தில் வீற்றிருந்தருளினார் கந்தவேள். கடற்கரையில் கருணைக் கடலாக எழுந்தருளினார். அப்போது கந்தருவர்கள் யாழ் வாசித்தனர். தேவர்கள் பூமழை பொழிந்தனர்; வாயுக்கள் வெண்சாமரம் வீசி நின்றனர். அக்கினியும், வருணனும், வெண்குடை பிடித்து நின்றனர். வீரவாகு தேவர் உடைவாள் பற்றி நின்றார். மற்றைய இலட்சத்து எண்மரும் தலைவாயிலில் துதித்துக்கொண்டு நின்றார்கள்.

செந்திலம்பதியில் வீற்றிருந்த குமாரக் கடவுள் ஒன்றும் அறியாதவர்போல் இந்திரனை நோக்கி, "சூராதி யவுணர்கள் பிறந்ததும், தவம் செய்ததும், அவர்களது வீரமும், உங்களுக்கு அவர்கள் இழைத்த தீமையுமாகிய எல்லாவற்றையும் நமக்கு விரிவாகச் சொல்லக் கடவாய்" என்றார்.

தேவ குருவாகிய வியாழ பகவானை நோக்கிய இந்திரன், "தாங்களே இவற்றைச் சொல்லியருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். வியாழபகவான் அதற்கு இணங்கி, முருகப் பெருமான் திருவடிகளை வணங்கி அந்தக் கதையைக் கூறலானார்.

2. அசுர காண்டம்

1. மாயைப் படலம்

பெருமை மிக்க வியாழ பகவான் அசுரர்களின் கதையைச் சொல்வதற்கு முன்பு துதிக்கின்றார்.

ஊரி லான்குணங் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரி லான்ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரி லான்உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்,

ஊர் குணம் குறி செயல் பேர் முன்பின் சார்பு வரல் போக்கு மேல் ஒப்பு முதலியன இல்லாத ஒருவன் உயிர்க் கடவுளாக அடியேனுக்குள் இருக்கின்றான்.

அறுபத்தாறு கோடி அசுரர்களுக்கு அரசனாகிய அசுரேந்திரன் மங்கலகேசி என்னும் அரக்கியை மணந்து சுரசை என்னும் மகளைப் பெற்றாள். அவள் வளர்ந்தபின் அரச குருவாகிய சுக்கிராசாரியர் மாயையின் கல்விகள் அனைத்தையும் அவளுக்குக் கற்பித்தார். அந்தக் கல்வியில் அவள் கொண்ட திறமை காரணமாக அவளை மாயை என்றே அழைத்தனர்.

அசுரர்களின் சிறுமையையும். இந்திராதி தேவர்களின் பெருமையையும், தேவர்கள் இன்பம் இழந்து அசுரர்களால் துன்புறும்படி திருநந்தி தேவர் சபித்ததையும் எண்ணிய சுக்கிரன் மாயையை நோக்கி, "மாயையே! திருமாலாலும் இந்திரனாலும் முனிவர்களாலும் கணக்கற்ற அசுரர்கள் அழிந்தார்கள். உன் தந்தையும் தன் வலி இழந்து ஒடுங்கினான். அசுர குலம் இனி உன்னால் வளரவேண்டும், நீ திருமகளும் நாணும் வனப்புடன் சென்று காசிப முனிவரை மயக்கிப் புத்திரர்களைப் பெற்று, குல விருத்தி செய்து அசுரர் பலம் ஓங்கச் செய்வாயாக" என்று பணித்தார்.

மாயை அதற்கு இசைந்து சுக்கிராசாரியரிடம் விடை பெற்று மேருகிரிக்கு வடக்கே தவம் செய்யும் வனத்தை வந்தடைந்தாள். அங்கு மாயை பூஞ்சோலைகளையும், மணல் மேடைகளையும், தாமரை ஓடைகளையும், கொடிப் பந்தர்களையும், மலர்ப் படுக்கைகளையும் உண்டாக்கினாள். காசிப முனிவர் அவற்றைக் கண்டு, 'தேவலோகம் இங்கு இறங்கி வந்ததோ? அல்லது அளகாபுரி இங்கு இறங்கி வந்ததோ?' என்று வியந்து, இவற்றை உண்டாக்கியவர் யாரோ என்று ஐயுற்றார். அப்போது மாயை ஓர் இரத்தினக் குன்றின்மேல் வான வில்போல் தோன்றினாள். அவளது பேரெழிலைக் கண்ட காசிப முனிவர் மையல் கொண்டார். அவள் அருகே சென்று, அவள் யாரென வினவினார்.

"முனிவரே! நீர் என்னிடம் தனித்து வந்து என் வரலாற்றை வினவி நிற்பது தகுதியன்று; தவம் செய்யப்போம்" என்றாள் மாயை, மாயாஜால நடிப்புடன்.

"மங்கையே! உன்னை அடைந்தபின் வேறெதற்குத் தவம் புரிய வேண்டும்?" என்றார் காசிபர்.

(காமவேகத்துக்கு ஆட்பட்டவர்கள் ஒரேயடியாக மனமிடிந்து விடாமல் ஆறுதல் செய்துகொண்டு தம்மைத் திருத்திக் கொள்ளவே இதுபோன்ற வரலாறுகள் உள்ளன. மகா முனிவர்களும் மதி மயங்கினர் என்பது நாம் ஒரேயடியாக மனம் ஒடிந்துவிடாமல் காக்கிறது. ஆனால் முனிவர்களின் வாழ்வில் இது போன்ற வேகம், தோன்றியது போலவே மறைந்தும் விடும். காசிபரின் காம வேகத்தை நாம் பரிகசிப்பதற்குத் தகுதியற்றவர். அவர் தவமும் விரதமும் இருந்தது போல கோடியில் ஒரு பங்கு நம்மால் இருக்க இயலுமா? முனிவர்களின் ஞானத்தையும் இந்திரிய நிக்கிரகத்தையும் போற்றி அவர்கள் தந்துள்ள மந்திரங்களைக் காப்பதே நமக்கு அழகேயன்றி எப்போதேனும் அவர்களிடம் காணக் கூடிய நமக்குப் புரியாத செயல்களைக் கொண்டு இழுக்கு கற்பிக்கலாகாது.)

"தவமுனிவரே! நான் உத்தர பூமியில் உள்ளவள். மேரு மலைக்குத் தெற்கே உள்ள கங்கையில் நீராடச் செல்லுகிறேன்; நீர் இங்கேயே நில்லும்" என்றாள் மாயை.

"பெண்ணே! கங்கை முதலிய நதிகள் ஏழினையும், சிவ விஷ்ணு ஸ்தலங்கள் யாவற்றையும், பொன்னுலகம் முதலிய தேவர் உலகங்களையும், ஆங்காங்குள்ள தேவர்களையும் இமைப்பொழுதில் இங்கே வரவழைப்பேன்: நீ காண விரும்பினால் மும்மூர்த்திகளையும், மூவுலகிலுள்ளோரையும் இங்கு வரவழைப்பேன்; தேவாமிர்தம் கேட்டாலும் வரவழைப்பேன்; அரம்பையர் முதலிய மகளிர் வந்து உனக்கு ஏவல் செய்யச் செய்வேன்; என் மையலைத் தணிப்பாய்" என்றார் காசிபர்.

"பெரியவரே! நான் தனித்திருப்பதால்தானே இவ்வாறெல்லாம் பேசினீர்கள்? இனி இவ்வாறு பேசுவதை விட்டு, இங்கேயே நில்லும்" என்று நடிப்பாகக் கூறி கங்கையை நோக்கிச் செல்வதுபோல் சென்று மறைந்தாள் மாயை. காசிபர் அவளை எவ்விடத்துத் தேடியும் காணாமல் மிகவும் துன்புற்றுப் புலம்பினார்.

2. காசிபன் புலம்புறு படலம்

கதிரவன் மேற்கடலில் மூழ்கினான். காசிபர் காம நோயால் மிகவும் கலங்கினார். அவர்நோக்கிய இடமெல்லாம் மாயையின் தோற்றத்தையே கண்டார். (உள் பார்வைக்கு அன்றிக் கண் பார்வைக்கு அகப்படுவன எல்லாமே மாயை தானே?)

கீழ்த் திசையில் சந்திரன் தோன்றியதும் தாமரை குவிந்தது; அல்லி மலர்ந்தது. காசிப முனிவர் மாயையை நினைந்து துன்புற்றார். மீண்டும் அவருக்கு முன்னே தோன்றினாள் மாயை.

3. அசுரர் தோற்று படலம்

கருத்தழிந்து நின்ற காசிபர். மாயையைக் கண்டு மகிழ்ந்தார். அவள் முன்னே சென்று, "என்னை ஆட்கொள்" என்று வேண்டி நின்றார்.

"மாதவரே! என்னுடைய பேரழகுக்கேற்ற வடிவத்தை இப்போது நீர் எடுத்துக் கொள்ளுங்கள்; பின்னர் நான் எடுக்

கும் ஒவ்வொரு வடிவத்துக்கும் ஏற்ற வடிவத்தை நீர் எடுத்துக் கொண்டால் நான் உம்மைக் கூடுவேன்'' என்றாள் மாயை.

காசிப முனிவர் அழகு மிகுந்த ஒரு தேவ வடிவம் கொண்டார். அந்த வடிவத்தைக் கண்டு மயங்கிய மாயை புன்னகை பூத்து அவருடைய கரம் பற்றினாள். அங்குள்ள மணி மண்டபத்தினுள் புகுந்து, தன் ஆணையால் உண்டாக்கிய அழகிய சயனத்தின் மீது அமர்ந்து கொண்டாள். காசிபர் அவளை அடைந்தார். சூரியன் அஸ்தமித்த முதல் யாமத்தில் சூரபன்மன் தோன்றினான். மாயை-காசிபர் ஆகியோரின் வேர்வையில் முப்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் தோன்றினார்கள். அவர்களை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு மாயை காசிப முனிவரோடு வேறிடம் சென்றாள். இரண்டாம் யாமத்தில் இருவரும் சிங்க வடிவம் கொண்டனர். அப்பொழுது ஆயிரம் சிங்க முகங்களும், இரண்டாயிரம் கரங்களுமுடைய சிங்கமுகாசுரன் பிறந்தான். சிம்ம தம்பதியின் வேர்வையினின்றும் சிங்க முகத்துடன் நாற்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் தோன்றினர்கள். பின்னர், யானை, ஆடு, யாளி, புலி, குதிரை, மான், பசு, கரடி, பன்றி, கூளி முதலிய வடிவங்களை விடியற்காலை வரை எடுத்தார்கள்; பல்லாயிரக் கணக்கான அசுரர்களைப் பெற்றார்கள். அப்போது தீக்குறிகள் தோன்றின.

இரவு நீங்கியது; கதிரவன் உதித்தான். மாயையும், காசிப முனிவரும் முன்னை வடிவம் கொண்டு சூரன் முதலிய மக்களையும், இரண்டு இலட்சம் அசுரர்களையும் கண்டு மகிழ்ந்தனர்.

4. காசிபன் உபதேசம்

சூரபன்மனும், சிங்கமுகனும், தாரகனும் தாய் தந்தையர்களைத் தொழுது, "நாங்கள் செய்வது யாது? சொல்லுங்கள்" என்று கேட்டார்கள்.

காசிப முனிவர், சூரபன்மன் முதலான தமது பிள்ளைகளுக்கு ஞானோபதேசம் செய்தார்.

(மனம் ஓடுகிறபடி ஓட்டும் என்று முதலில் விட்டுப் பிடித்ததால் அசுரரைப் பெற்ருர். பிறகு தமது இயல்பான ஞானத்தில் நின்று புத்திரர்களுக்கும் ஞானம் புகட்ட முயன் ருர்.)

"பெரியோர்கள் ஆராய வேண்டிய பொருள்கள் மூன்று. அவை பதி, பசு, பாசம் எனப்படும். ஐந்தொழிற்கும் அதிப ராகிய சிவபெருமானே பதியெனப்படுவர். பிறப்பு, இறப்பு என்னும் வலையுட்பட்டு உழலும் உயிர்களாகிய நாம் பசுக்கள்; ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களே பாசம். இவ்வாறு வேதம் கூறுகிறது. பாசமாகிய இத் தளையிலிருந்து உயிர்கள் விடுபட்டுப் பதியைச் சென்றடைவதே கடமை யாகும்.

சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி; ஆரு யிர்த்தொகை
வான்றிகழ் தளையென வகுப்பர் அன்னவே.

அளித்திடல் காத்திடல் அடுதல் மெய்யுணர்
ஒளித்திடல் பேரருள் உதவ லேஎனக்
கிளத்திடு செயல்புரி கின்ற நீலமார்
களத்தினன் பதியது; கழறும் வேதமே.

உயிர்களின் பொருட்டு, படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்ற ஐம்பெருந் தொழில்களையும் புரிகின்ற சிவபெருமானே பதியென வேதங்கள் மொழியும்.

மூவகை யெனுந்தளை மூழ்கி யுற்றிடும்
ஆவிகள் உலப்பில அநாதி யுள்ளன
தீவினை நல்வினை திறத்தின் வன்மையால்
ஓவற முறை முறை உதித்து மாயுமே.

ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களாகிய பாசங்களாலே பந்திக்கப்பட்ட உயிர்கள் எண்ணில்லாதன. அவை அநாதியே யுள்ளன; அவ்வுயிர்கள் தாம் புரிந்த நல் வினை தீவினைகளினுலே இடையருது பிறந்து இறந்து உழலும்.

பாசத்தாற் கட்டுண்ட பசுக்களுக்கு உறுதியைத் தருவது அறமேயாகும். கல்வி, செல்வம், வீரம் முதலியவை நிலையற்றவை. அறம் செய்தால் அன்பும் அருளும் உண்டாகும். அவை உண்டாகத் தவம் உண்டாகும். தவம் உண்டாயின் உயிர், சிவத்தைச் சார்ந்து பிறவித் துன்பம் நீங்கி இன்புறும். தவத்திற் சிறந்த பொருள் மூவுலகங்களிலும் இல்லை. தவம் செய்தே பிரம்ம விஷ்ணுக்கள் மேற்பதவி யடைந்தனர். தவம் செய்த மார்க்கண்டேயர் மறலியை வென்றார்'' என்று கூறி மார்க்கண்டேயர் சரிதத்தை மொழிந்தார் காசிபர்.

5. மார்க்கண்டேயப் படலம்

கடாசம் என்னும் நகரில் குச்சகன் என்று ஓர் அந்தணர் இருந்தார். அவருடைய தவப் பயனாய் கௌசிகன் என்று ஒரு புதல்வர் தோன்றினார். அவர் மறைகள் முழுவதும் ஓதி முடித்துவிட்டுப் பின்னர் ஓர் தடாகக் கரை சார்ந்து சிவபெருமான் ஐந்தெழுத்தை நினைந்து தவஞ்செய்ய லானார். உடல் உணர்ச்சியில்லாது தவஞ் செய்து வந்த அவர் உடல்மீது விலங்குகள் தம் தினவு தீர உராய்ந்து கொண்டு போயின. இப்படித் தவம் செய்யும் அவர் முன் திருமால் தோன்றி அவர் உடம்பைத் தடவிக்கொடுத்து (மிருகங்கள் அவர் முதுகில் உராய்ந்து சென்றமையின்) உன் பெயர் இனி மிருககண்டுயன் என்று வழங்கட்டும் என்று கூறினார். முனிவரும் எழுந்து தொழுது நின்றார். ''மதியணி பெருமான் முழுதுறு கருணை நின்பால் முற்றுக'' என்று கூறித் திருமால் மறைந்தார்.

மிருககண்டுயர் பின்னர் தந்தைபால் அணைந்து தவம் புரிந்து வந்த விவரம் கூறினார். குச்சகர் கேட்டு மகிழ்ந்து பின்னர் மரபு வளர மணஞ்செய்துகொண்டு இல்லறத்தில் ஒழுகுமாறு உரைத்தார். புதல்வர் திருமணத்திற்கு உடன்படவில்லை. தேவர்களும் முனிவர்களும் காமத்தினால் அடைந்த துன்பங்களுக்கு அளவில்லை. முன்பே தொடர்ந்த பிறவித் தளையை அறுத்துக் கொள்ள விரும்பும் நான் பின்னும் ஒரு பாசப் பிணிப்பை ஏற்றுக்கொண்டால் பிறவித்துன்பத்தை எப்படிப் போக்குவேன்? அழியாச் செல்வம் என்று கூறப்

படும் தவத்தைச் செய்து இன்பம் எய்துவேன் என்று கூறினர்.

குச்சகர், புதல்வரை நோக்கி "துறந்தார்க்கு வேண்டிய பணிவிடையும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலானவையும் விருந்தோம்பி, அறம் பலவும் செய்தாலன்றி பிறவியால் யாதும் பயனில்லை"

துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புரவு நல்கி
இறந்தவர்கள் காமுறும் இருங்கடன் இயற்றி
அறம்பலவும் ஆற்றிவிருந் தோம்புமுறை யல்லால்
பிறந்தநெறி யாலுளதோர் பேருதவி யாதோ?

ஆகவே, மணம் புரிந்து இல்லறத்தில் வாழ்வதே சிறந்தது. மறுப்பது நல்லது அல்ல என்று வற்புறுத்தினர். மிருககண்டூயர்,

"தந்தை சொல் மறுப்பவர்கள், தாய்சொல் தடுப்பவர்கள் குருவின் கட்டளையை மீறியவர்கள் வந்தனைக்குரிய வேத மார்க்கத்தை மாற்றியவர்கள் மாருத எரிவாய் நரகிடை மூழ்குவார்கள்."

"தந்தை சொல் மறுப்பவர்கள் தாயுரை தடுப்போர்
அந்தமறு தேசிகர்தம் ஆணையை இகந்தோர்
வந்தனைசெய் வேதநெறி மாற்றினர்கள் மாருச்
செந்தழல வாயநிர யத்தினிடை சேர்வார்."

என்று கூறி ஒருவாறு திருமணம் புரிய இசைந்து தான் கூறிய இலக்கணங்கள் அமைந்த ஓர் பெண்மணியைத் தேர்ந்தெடுத்துவரச் செய்தார்.

குச்சகரும் பல நாடுகள் சென்று அநாமயம் என்னும் வனத்தை அடைந்தார். அவ்விடம் இருந்த உசத்தியன் என்னும் முனிவருக்கு அவர் பத்தினி மங்கலையிடம் தோன்றிய விருத்தையைத் தன் புதல்வர்க்குத் திருமணம் செய்து வைத்தார்.

மிருகண்டு என்னும் அம் முனிவர் தவம் செய்து பெற்ற புதல்வரே மார்க்கண்டேயர். நீண்ட ஆயுள் கொண்ட கொடிய நூறு புதல்வரை வேண்டாம் என்று மறுத்துவிட்டு, பதினாறு வயதையே கொண்ட சற்புத்திரன் ஒருவன் போதும் என்று வரம் பெற்றார் மிருகண்டு. அந்த சற்புத்திரரே மார்க்

கண்டேயர். இளமை முதலே சிவபெருமானிடம் குன்றாத அன்பு கொண்டு பூசித்துப் பரம பக்தனானர் மார்க்கண்டே யர். அவர் ஆயுள் முடிந்ததும் யமதூதர் அவனைப் பற்ற வந்தார்கள். தவத்தின் ஒளியாகிச் சுடர்வீசிய மார்க்கண்டே யரை நெருங்க முடியாமல் யம தூதர்கள் திரும்பினர்.

"முதிர்ந்த தவத்தைப் புரியும் முனிவர்களானாலும், சிறந்த செல்வம் படைத்தவர்களானாலும். அறிஞர்களாயி னும், ஆற்றல் படைத்தவர்கள் எனினும் விதியினை வெல்ல லாகாது.

முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்."

என்று கூறிக் காலனை ஏவினான் இயமன்.

யமனுடைய அமைச்சனாகிய காலனே நேரில் வந்து மார்க்கண்டேயனைப் பற்றப் பயந்து, தன்னுடன் வந்துவிடும் படி பணிவாக வேண்டுகோள் விடுத்தான். மார்க்கண்டேயர் அதற்கு இணங்கவில்லை.

பின்னர் இயமனே வந்து "எவர் காப்பினும் உன் உயிர் கொண்டே ஏகுவன்" எனக் கூறினான்.

"இயமனே! சிவனடியார்கள் உன்னை ஒரு பொருளாக நினைக்க மாட்டார்கள். தேவர்கள் இந்திரன், பிரம்ம விஷ் ணுக்கள் முதலியோர்களையும் பொருட்படுத்தமாட்டார்கள்"

உன்னை எண்ணலர் உம்பரை எண்ணலர்
மன்னை எண்ணலர் மாமலர்ப் பங்கயன்
தன்னை எண்ணலர் தண்டுள வோனையும்
பின்னை எண்ணலர் பிஞ்ஞகன் அன்பினோர்"

என்று கூறி மார்க்கண்டேயர் தான் பூஜிக்கும் சிவமூர்த் தத்தைப் பற்றிக் கொண்டார்.

மார்க்கண்டேயர் மொழி கேட்ட இயமன் சினங் கொண்டான். புண்ணியம் மிகுந்தவர்க்கு ஆயுள் முடிந் தாலும், அவரைப்பற்றும் உரிமை யமனுக்கு இல்லை.

ஆனல் அதிகார போதையில் ஆணை எல்லை மறந்து விடுமல்லவா? இயமன் பாசத்தை வீசினான்.

பாசமறுக்கும் பசுபதி லிங்கத்தினின்று உற்பவித்துக் காலனைக் காலால் உதைத்து மாய்த்துப் பாலனைக் காத்தருளினார்.

மதத்தான் மிக்கான் மற்றிவன் மைந்தன் உயிர்வாங்கப்
பதைத்தான் என்று உன்னிவெ குண்டான் பதிமுன்றுஞ்
சிதைத்தான் வாமச் சேவடி தன்னால் சிறிதுந்தி
உதைத்தான் கூற்றன் விண்முகில் போல்மண் ணுறவீழ்ந்தான்.

பின்னர் திருமாலும் பிரமனும் வேண்டிட இயமனை எழுப்பி நல்லுரை கூறினார்.

"இயமனே! திருநீறு, உருத்திராக்கம் அணிந்து, எம்மை நினையும் அடியார்களிடம் நீ செல்லாதே" என்று தம்மை வணங்குகின்ற இயமனை நோக்கிச் சிவபெருமான் கட்டளையிட்டருளினார்.

போற்றிடு தருமனைப் புராரி நோக்கியே
சாற்றிடு கின்றனன் தயங்கு கண்டிகை
நீற்றொடு புனைந்தெமை நினையும் நீரர்பால்
கூற்றுவன் யான்எனக் குறுகு வாயலை.

"மற்றவர்களால் பெறுவதற்கு அரிய கதியைப் பெற்ற நமது அடியார்களை நீ மண்ணுலகில் வாழும் மனிதர்கள் என்று எண்ணாதே; அவர்களைச் சிவமாகவே நினை. அவர்களைக் கண்டால் அவர்களின் திருவடியில் வீழ்ந்து வணங்குவாய்."

நன்னரும் கதிபெறு நமது தொண்டரை
மண்ணுல கத்தவர் மனித ரேயென
எண்ணலை அவர்தமை யாமென் றெண்ணுதி
கண்ணுறின் அன்னவர் கழலின் வீழ்தியால்.

"இயமனே! சிவனடியார்கள் உன்னை ஒரு பொருளாக நினைக்கமாட்டார்கள்; தேவர்களையும் இந்திரன் பிரமா, விஷ்ணு முதலியோர்களையும் பொருள்படுத்த மாட்டார்கள்."

சிவனடியார்கள் யமனையோ பிறதேவரையோ எண்ணி அஞ்சத் தேவையில்லை. மார்க்கண்டேயனை யமனிடமிருந்து

காப்பாற்றியது போல், தன்னையும் யமன் வருங்கால் "'நம் அன்பன்'' என்று கூறிட வருமாறு இறைவனை வேண்டு வோம். மார்க்கண்டேயனை வழிகாட்டியாகக் கொண்டு இறைவன் திருவடிகளை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும்'' என்றார் காசிபர்.

6. மாயை உபதேசப் படலம்

"தவத்தைச் செய்து சிவத்தை அடையுங்கள்'' என்று காசிபர் கூறியதைக் கேட்ட மாயை நகைத்தாள். "முனிவரே! முத்தியடைய விரும்பும் முனிவர்களுக்கல்லாமல் நாம் பெற்ற சிறுவர்களுக்குத் தவத்தைப்பற்றிச் சொல்லலாமா? இவர்கள் பெருஞ் செல்வத்தையும், வெற்றியையும், அழிவில்லாத ஆயுளையும், புகழையும் அடைய வேண்டும். அவற்றை யெல்லாம் இவர்கள் விரைவில் பெறுவதற்கு வழி காட்டுங்கள்'' என்று கூறினாள்.

"மாயை! உன் கருத்து இது என்றால், நீயே அதனை அவர்களுக்குச் சொல்லுவாய்''. என்றார் காசிபர்:

மாயை தன் புதல்வர்களை நோக்கிக் கூறலுற்றாள்:

"பிறவியால் உயிர்கள் அடையும் பயன் கல்வியும் செல்வமும் ஆகும். இவற்றுள் ஏதேனும் ஒன்றை அடையாத பிறப்பு பேய்ப் பிறப்பாகும். கல்வி, செல்வம் என்னும் இரண்டில் செல்வமே சிறப்புடையது. கல்வியுடையவர்களும் செல்வத்தை விரும்பிச் செல்வரைப் பணிந்து நிற்பர்; கலைகள் எல்லாம் கற்றவர் வறுமை அடைந்தால், செல்வம் வேண்டித் தம் பகைவரையும் பணிந்து நிற்பர்.

செல்வம் இல்லாதவன் உயிரற்ற உடம்புக்கு நிகரானவான். செல்வம் முயற்சியால் வரும். நீங்கள் பெரு முயற்சி செய்து ஒருவராலும் பெறுதற்கரிய பெருஞ் செல்வத்தையும் தலைமையையும் பெறவேண்டும். அதற்காக வேள்வி செய்ய வேண்டும். இத்திசை ஆலந்தீவு எனப்படும். இதற்கு நேரே வடக்கிலுள்ள பூமி அசுரர்கள் தவம் செய்வதற்கு ஏற்றது. நீங்கள் பரிசனங்களுடன் அங்கு சென்று வேள்வி செய்வதற்குக் குண்டங்களைச் செய்து நச்சுச் சமித்துக்களையிட்டு,

மாமிசம், உதிரம் முதலியவற்றை இட்டு, சிவபெருமானை நோக்கி வீர வேள்வி செய்யுங்கள்: அவர் தோன்றித் திருவருள் புரிந்து வேண்டியவற்றை யெல்லாம் தருவார்.

வேள்விக்குப் புறப்படுங்கள். நீங்கள் அங்கு போனதும் வேள்விக்கு வேண்டியவற்றை யெல்லாம் நான் தருகிறேன்'' என்று கூறி சூரன் முதலிய மூவர்க்கும் வேள்வி செய்யும் விதியையும் அதற்குரிய மந்திரங்களையும் உபதேசித்தாள். சூரபன்மன் தம் தம்பியருடன் தாய் தந்தையரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு உத்தர பூமிக்குப் புறப்பட்டுச் சென்றான்.

7. மாயை நீங்கும் படலம்

அவர்கள் சென்றதும் மாயை, தன் அருகிலிருந்த காசிபரை நோக்கி, ''புதல்வர்களைக் காப்பாற்றும் பொருட்டு நான் போகிறேன். நீங்கள் கவலைப்படாமல் இருங்கள்'' என்று கூறிப் புறப்பட்டாள்.

காசிபர் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார். ''முனிவரே! மக்களைப் பெறுவதற்காகவே நான் இங்கு வந்தேன். மேலும் நான் மாயை. என் பிரிவால் நீங்கள் வருந்த வேண்டாம்'' என்று சொல்லி மறைந்தாள்.

மாயையின் பிரிவால் காசிபர் மதிமயங்கி, ஏங்கினார். அப்போது பிரம்மன் தமது புதல்வராகிய காசிபர் முன் தோன்றி, ''மகனே! வேதம் ஓதியுணர்ந்த நீ ஒரு பெண் மீது மையல் கொண்டு வருந்தலாமா?'' என்று வினவினார்.

''உள்ளினும் சுட்டிடும் உணருங் கேள்வியில்
கொள்ளினும் சுட்டிடும் குறுகி மற்றதைத்
தள்ளினுஞ் சுட்டிடும் தன்மை ஈதினால்
கள்ளினும் கொடியது காமத் தீயதே''

நெஞ்சினும் நினைப்பரோ நினைந்து ளோர்தமை
எஞ்சிய துயரிடை ஈண்டை உய்த்துமேல்
விஞ்சிய பவக்கடல் வீழ்த்தும். ஆதலால்
நஞ்சினுந் தீயது நலமில் காமமே.

"மகனே! காமத்தை ஒழித்தவன்தான் முத்தி இன்பம் பெற முடியும். காமம் நரகத்துக்கு வழிகாட்டி; மனிதனின் பெரும்பகை. மேலும் நீ எந்தப் பெண் மீது மையல் கொண்டிருக்கிறாயோ, அந்தப் பெண் வஞ்சனையே வடிவானவள்; மாயை. அவளுடன் கூடிய நீ பெரும் தீமை புரிந்துவிட்டாய். நீ செய்த அந்தத் தீமை நீங்குவதற்காகத் தவம் செய்" என்று பிரமதேவர் கூறினார்.

அறிவு தெளிந்த காசிபர் காமம் நீங்கி, காமனைக் கடிந்த சிவபெருமானை நோக்கித் தவம் செய்யலானார்.

8. அசுரர் யாகப் படலம்

சூரபன்மன் தாயின் கட்டளைப்படி, வேள்வி செய்வதற்காகத் தம் தம்பியரும் சேனைகளும் சூழ, விண்ணும் மண்ணும் கடலும் குல மலைகளும் நடுங்கும் வண்ணம் வடதிசை நோக்கிச் சென்றான்.

அப்பொழுது அசுர குருவாகிய சுக்கிராச்சாரியர் ஆகய வழியாக விமானத்தில் வந்தார். அசுர சேனைகளின் வேகத்தைக் கண்டு நடுங்கினார். 'இவர்களுக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை. மாலயனாதி வானவர்களை இவர்கள் கணப்பொழுதில் வென்றுவிடுவார்கள்' என்று பலவாறு எண்ணி வியந்தார். உயிர்களை வசீகரிக்கும் ஒரு மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு சுந்தர வடிவுடன் சேனைக் கடலின் நடுவே புகுந்து சூரபன்மன் முன் சென்றார். "சூரனே! நீ இந்திரன் முதலிய அனைவரையும் வென்று யாவருக்கும் தலைவனாகக் கடவாய்" என்று ஆசி கூறினார். சூரபன்மன் சுக்கிராச்சாரியரை நோக்கி, "ஐயனே! தாங்கள் யார்? இங்கு வந்த காரணம் யாது? தங்களைக் கண்டவுடனே என்னை அறியாது என் உள்ளமும் எலும்பும் உருகுகின்றன" என்றான்.

"சூரா! நான் உன் குலகுரு சுக்கிராச்சாரியர். உனக்கு ஆறுதல் கூற வந்திருக்கிறேன். நீ தவம் செய்யும்போது பகைவர்கள் உனக்குத் தொல்லை கொடுப்பார்கள். அத் துன்பங்களைப் போக்க ஒரு மந்திரம் உபதேசிக்கிறேன். இந்த மந்தி

ரத்தை நாள்தோறும் ஜபித்துப் புலன்களை யடக்கிப் பெருந் தவம் செய்'' என்று கூறிச் சிவபெருமானுடைய மந்திரம் ஒன்றை அவனுக்கு உபதேசித்தார். சூரபன்மன் சுக்கிராச் சாரியரின் கால்களில் விழுந்து வணங்கி மந்திரத்தைக் கிரகித்தான். அவர் விதித்த வண்ணமே தவம் செய்வதாகக் கூறினன்.

அசுரர்கள் சூழச் சென்ற சூரபன்மன் ஓர் ஆல வனத்தை அடைந்தான். அங்கே வீர வேள்வி செய்வதற்குச் சாலை யமைத்தான். பதினாயிர யோசனைப் பரப்பை உள்வைத்து அதனைச் சுற்றிலும் மலைகளினாலே மதில் அமைத்தான். மதில் களைச் சுற்றிலும் எண்ணற்ற அசுரர்களைக் காவல் வைத்தான். நான்கு திசைகளிலும் வாயில்கள் அமைத்து அவற்றைக் காவல் செய்ய வீர மடந்தையை மந்திரத்தால் அழைத்தான். மதிலைச் சுற்றிலும் காவல் செய்வதற்காகப் பூதங்களையும் பிசாசுகளையும், காளிகளையும், மந்திரத்தால் அழைத்து நிறுத்தினன். மந்திர பலத்தாலேயே வைரவர்களை அழைத்து யாகத்தைக் காவல் காக்க நிறுத்தினன். மதிலுக்குள்ளே நடுவில் ஆயிரம் யோசனை அகலமும் ஆழமும் உள்ள ஓர் ஓம குண்டமும், அதனைச் சுற்றி நூற்றெட்டு ஓம குண்டங்களும், அவற்றைச் சுற்றி ஆயிரத்தெட்டு ஓம குண்டங்களும் செய்வித் தான். யாகத்துக்கு வேண்டிய மற்றைய பொருள்களுக்காகத் தன் தாய் மாயையை நினைந்தான் சூரபன்மன்.

தவம் செய்து சிவபெருமானுடைய அருள் பெற்ற மாயை சூரபன்மன் முன் தோன்றி யாகத் திரவியங்களாகச் சிங்கம், புலி, யானை, கரடி, குதிரை, ஆடு முதலிய மிருகங் களின் மாமிசம், இரத்தம், மற்றும் எண்ணெய், நெய், பால், தயிர், மது, வெண் மிளகு முதலிய திரவியங்கள், நெய் யன்னம். யாகப் பசுக்கள், செந்நெல், அரிசி, மலர், கஸ்தூரி முதலிய சுகந்த வஸ்துக்கள், சுருக்குச் சுரவம் (வேள்விக்கான அகப்பைகள்), தர்ப்பை, நெற்பொரி, நவதானியங்கள், நச்சு சமித்து முதலியவற்றை வரவழைத்து மலைபோல் குவித்து விட்டாள்.

சூரபன்மன் நடுவேதியின் மத்தியில் வச்சிர கம்பத்தை நாட்டி, நான்கு வாயில்களுக்கும் சென்று வீர மடந்தையைப்

பூசித்து மாமிச பலி கொடுத்தான். மதில் நடுவிலுள்ள பூதங்களுக்கும் பிசாசுகளுக்கும் பலி கொடுத்தான். ஆயிரத்தெட்டு குண்டங்கள் தோறும் நச்சு விறகிட்டு, அக்கினி மூட்டினான். தன் தம்பியரோடு சிவபெருமானின் நாமத்தை உச்சரித்து மாமிச பலி கொடுத்தான். தாரகனை நோக்கி, "நீ இக் குண்டங்கள் தோறும் அக்கினி தணியாது வளர்ப்பாயாக" என்று கட்டளை யிட்டான். பின்னர் நூற்றெட்டு குண்டங்களுக்குச் சென்று வேள்வி செய்தான். சிங்கமுகாசுரனை நோக்கி, "நீ இங்கிருந்து இக் குண்டங்கள் தோறும் தீ குறையாமல் வளர்ப்பாயாக" என்று பணித்தான். அங்கிருந்து நடு வேள்விக் குண்டம் சென்ற சூரபன்மன் சிவபெருமானைத் தியானித்து விதிப்படி பூசை செய்தான். நெய், பொரி, உதிரம், மாமிசம் முதலியவற்றைச் சொரிந்து, சிவமந்திரத்துடன் வேள்வி செய்யலானான்.

குண்டத்திலிருந்து தோன்றிய யாகாக்கினி வானளாவியது; எட்டுத் திசைகளையும் மேலுலகங்களையும் சுட்டது. திருமால், பிரமன் முதலியோர் அதனைக் கண்டு நடுங்கினார்கள். சூரபன்மன் தம் தம்பியருடன் பதினாயிரம் ஆண்டுகள் வேள்வி செய்தான். ஆயினும் சிவபெருமான் தரிசனம் கிடைக்கவில்லை. அதனால் மிகவும் வருந்திய சூரபன்மன், தம் தம்பியரை யாகத் தொழிலில் அமர்த்திவிட்டு ஆகாயத்தை அடைந்தான். ஆகாயத்தில் நின்று கொண்டு தன் தசைகளை வாளினால் அறுத்து ஓம குண்டத்தில் போட்டு உதிரத்தை நெய்போல் சொரிந்தான். தசைகளை அரிய அரிய அவை முன் போல் மீண்டும் மீண்டும் வளர்ந்தன. அதனைக் கண்ட சூரபன்மன் "இது சிவபெருமானின் திருவருள்" என்று எண்ணி, விண்ணில் நின்ற வண்ணமே தன் உடலின் தசைகளை அறுத்துப் போட்டும் உதிரம் சொரிந்தும் ஆயிரம் ஆண்டுகள் யாகம் செய்தான். அப்போதும் சிவபெருமான் காட்சி தரவில்லை. அதனால் மனச் சோர்வு கொண்ட சூரபன்மன் "இனி மாள்வேன்" என்று கூறித் தீயினால் சூழப்பட்ட ஆதி குண்டத்தில் செந்நிறத்துடன் நிற்கின்ற வச்சிர கம்பத்தில் பாய்ந்து கீழே இறங்கிச் சாம்பலானான்.

சூரபன்மன் யாகாக்கினியில் வீழ்ந்து இறந்ததைக் கண்ட சிங்கமுகனும் தாரகனும் தாயை இழந்த கன்றுபோல் கதறினுர்கள். தன் தமையன் இறந்தபின் தான் உயிரோடு இருக்கலாகாது என்று சிங்கமுகன் கருதித் தன் ஆயிரம் தலைகளையும் அறுத்துச் சூரபன்மன் வீழ்ந்து இறந்த ஆதிகுண்டத்தில் போட்டான். தலைகளை அறுக்க அறுக்க அவை வளர்ந்தன. அதனைக் கண்ட தாரகன் தன் தலையை அறுத்து அக்கினியில் போட்டான். அவனுக்குத் தலைகள் வளர்ந்து கொண்டேயிருந்தன. இவ்வாறு தலைகள் அறுக்க அறுக்க வளர்வதைக் கண்ட அசுரர்களில் சிலர் தங்கள் தலைகளையும் அறுத்து யாகாக்கினியில் இட்டனர்.

சூரபன்மனைப் போலவே யாகாக்கினியில் வீழ்ந்து இறக்க எண்ணிய சிங்கமுகன் ஆகாயத்தில் எழுந்தான். அவுணராயினும் அவர்களுக்குள்ள திட சங்கல்பத்தையும் சகோதர வாஞ்சையையும் ஆண்டவன் மெச்சத்தானே வேண்டும்? எனவே, சிவபெருமான் வயோதிக அந்தணர் வேடத்தில் யாக வேதியின் அருகே பிரசன்னமானுர். சிங்கமுகாசுரனை நோக்கி, "நீங்கள் எல்லோரும் ஏன் இங்கே புலம்பி அழுது கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் வரலாற்றைக் கூறுங்கள்" என்று கேட்டார்.

'இவர் நமது தந்தையைப் போன்றிருக்கிறுர்' என்று எண்ணிய சிங்கமுகன் அவரை வணங்கித் தங்களுடைய வரலாற்றைக் கூறினுன். வயோதிக அந்தணர் சிங்கமுகனை நோக்கி, "வருந்த வேண்டாம்; இப்பொழுதே சூரபன்மனை யாகாக்கினியினின்றும் எழுப்பித் தருகிறேன்" என்று அருளிச் செய்து தேவ கங்கையை அங்கு வரும்படி திருவுளம செய்தார். கங்கை வந்து சிவபெருமானைப் பணிந்தாள். கங்கா நதியை அவர் நடுக் குண்டத்தில் புகச்செய்தார். நடுக் குண்டத்தில் கங்கை புகுந்ததும் சூரபன்மன் ஆர்த்தெழுந்தான். சிங்கமுகனும் தாரகனும் பெரு மகிழ்ச்சியடைந்தார்கள். அசுரர்கள் ஆரவாரம் செய்தார்கள். இவற்றையெல்லாம் கண்ட தேவர்கள் அழிந்த அவுணன் உயிர் பெற்றுனே எனக் கலங்கி அஞ்சி நடுங்கி ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

9. வரம்பெறு படலம்

வயோதிக அந்தணர் வடிவத்தில் வந்த சிவபெருமான் தம் வயோதிக வடிவத்தை நீக்கி, விடையின்மீது மூன்று கண்களும் நான்கு தோள்களுமாய் உமாதேவியாருடன் காட்சி தந்தருளினார். சூரபன்மன் தம் தம்பியரோடும் துணைவரோடும் கீழே விழுந்து வணங்கிப் பலவாறு துதித்து நின்றான்.

"சூரபன்ம! நீ நம்மை நினைத்து, நெடுங்காலம் பெருந் தவம் செய்து இளைத்தாய். உனக்கு என்ன வரம் வேண்டும்? சொல்" என்று கேட்டார் சுவாமி.

இத்தனை தவம் செய்தும் அதனால் மன அமைதியும் முக்தி நாட்டமும் பெறாத அசுரத் தன்மை அப்போது சூரன் வாய் மொழியில் வெளியாயிற்று. தாய் புகட்டியவாறு அண்டங்கள் அனைத்தையும் ஆளும் அதிகார ஆசையை வெளியிட்டான்.

"எம்பெருமானே! இப்பிருதிவியில் உள்ள எல்லா அண்டங்களுக்கும் நான் அரசனாக வேண்டும். அந்த அண்டங்களை ஆள்வதற்குரிய ஆக்ஞா சக்கரமும், நினைத்தவுடனேயே அவ்விடங்களுக்குச் சென்று திரும்பும் ஊர்தியும் வேண்டும்; எப்பொழுதும் அழியாதிருக்கின்ற யாக்கையும், திருமால் முதலிய தேவர்களை வெல்லும் படைக்கலங்களையும் தந்தருள வேண்டும்" என்று சூரபன்மன் வேண்டிக் கொண்டான்.

தேவர் யாவரும் சென்று தொழப்படும்
மூவ ராகி மொழிந்திடு நுங்களை
தாவி லாதநஞ் சத்தியொன் றேயலால்
ஏவர் வெல்பவர் என்று விளம்பிமேல்.

ஈறுறாத இரதமும் தன்பெயர்
கூறு தெய்வப் படையுங் கொடுத்திடா
வெறு வேறு மிகவருள் செய்துமேல்
ஆறு சேர்சடை ஆண்டகை ஏகினன்.

"சூரபன்ம! நீ இப்பிருதிவியிலுள்ள ஆயிரம் கோடி அண்டங்களுள் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆளக் கடவாய்" என்று சிவபெருமான் அருள் செய்தார். (என்றும் வாழும் வரத்தை அளிக்கவில்லை.) ஆயிரத்தெட்டு அண்டங்கள் எங்கும் செல்லத் தக்க வலிமை மிக்க இந்திர ஞாலம் என்னும் தேரையும், ஆக்ஞா சக்கரத்தையும், சிங்க வாகனத்தையும், தேவர்கள் யாவர்க்கும் முதல்வனாகும் தலைமையையும், யாவரையும் வெல்லும் வீரத்தையும் ஆற்றலையும், பாசுபதம் முதலிய தெய்வாஸ்திரங்களையும் வச்சிர உடலையும் சிவபெருமான் தந்தருளினார். இதன் பின், யாக சாலையில் புகுந்து சூரனுயிரை மீட்ட தேவ கங்கையை விண்ணுலகுக்கு அனுப்பினார்.

தேவ கங்கை கலந்த யாகாக்கினியிலிருந்து பதினாயிரம் கோடி வெள்ளம் அசுர சேனைகளைத் தோற்றுவித்துச் சூரனுக்குக் கொடுத்தார் பிரமன். சூரபன்மனுக்குச் சிவபெருமான் அருள் புரிந்தபோது, சூரனுடைய தம்பியராகிய சிங்கமுகனும் தாரகனும் சிவபெருமானின் திருவடிகளை வணங்கினார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, "நீங்களிருவரும் சூரபன்மனுக்கு இரு தோள்களைப்போல் நூற்றெட்டு யுகங்கள் சிறப்போடு வாழுங்கள். நீங்கள் தேவர் அனைவரையும் வென்று புகழ் பெறுவீர்கள். உங்கள் மூவரையும் நம் சக்தி ஒன்றாலன்றி வேறு எவராலும் வெல்ல முடியாது" என்று அருளிச் செய்து அழியாத தேர், பாசுபதாஸ்திரம் முதலியவற்றை அவர்களுக்குத் தனித் தனியாகக் கொடுத்து மறைந்தருளினார்.

சிவபெருமானிடம் அளவற்ற வரங்களைப் பெற்ற சூரபன்மனை அசுர சேனைகள் வந்து சூழ்ந்துகொண்டு துதிசெய்தனர்; மகிழ்ச்சியுடன் கடல்போல் ஆரவாரித்தனர்.

மேருகிரியை ஏழு கடல்களும் சூழ்வது போல் சூரபன்மனை அசுரர்கள் சூழ்ந்து கொள்ள, மண்ணும் விண்ணும் நிறைந்து சூரபன்மன் தம்பியருடன் யாக சாலையை விட்டுப் புறப்பட்டு காசிப முனிவரிடம் வந்து வணங்கினான்; சிவபெருமானிடம் தான்பெற்ற வரங்களை யெல்லாம் கூறி, "இனி

நாம் செய்வது யாது?''என்று வினவினன். தேவர்கள் வாழ்வு தீர்ந்தது என்று எண்ணிய காசிப முனிவர், "உங்கள் குலகுருவாகிய சுக்கிராச்சாரியாரிடம் செல்லுங்கள்'' என்று விடை கொடுத்து அனுப்பினர்.

10. சுக்கிரன் உபதேசப் படலம்

அதேபோல் சூரபன்மன் தன் சேனைகளுடன் சுக்கிராச்சாரியரை வந்தடைந்தான்.

"பதி, பசு, பாசம் என்று முப்பொருள் உள என்று சிலர் கூறுவர். பதியும் பசுவும் ஒன்றே. முத்தியென்பதொன்றில்லை; பாவ புண்ணியமுமில்லை. எதைச் செய்ய வேண்டுமென்றாலும் செய்யலாம். மறுபிறப்பு என்று ஒன்று கிடையாது. நீயே பிரம்மம். எனவே பிரமன், திருமால் முதலிய தேவர்களை மேலோர் என்று கருதி வணங்காதே'' என்று தொடங்கினர் சுக்கிரர். பாவ புண்ணியத்தை மீறி, பிரம்ம பாவத்திலிருப்பவனுக்கு உலக காரியங்கள் கிடையா. ஜீவன் பிரம்மம் என்கிற கொள்கை அவனை எந்தக் காரியத்திலும் ஏவாத தத்துவம். கர்மம் கடந்த நிலை அது. ஆனல் சுக்கிரரோ சூரனைக் கெட்ட காரியத்தில் ஏவுவதற்குச் சாதகமாக "நீயே பிரம்மம்; உனக்குப் பாவ புண்ணியமில்லை; எது வேண்டுமாயினும் செய்யலாம்'' என்று திரித்துக் கூறினர்.

தொடர்ந்து, "தேவர்கள் உனக்குப் பகைவர்கள். அவர்கள் செல்வங்களைக் கவர்ந்து. அவர்களைத் தண்டிப்பாயாக! இந்திரன் முன்னர் அளவற்ற அசுரர்களை அழித்தான்; அவனைப் பிடித்துச் சிறையில் வை. மனம் விரும்பியபடியெல்லாம் செய். முனிவர்களையும் திக்குப் பாலகர்களையும் ஏவலாக்கிக் கொள். கொலை, களவு, காமம், வஞ்சகம் முதலியவற்றை உறுதியென்று செய். அதனல் உனக்குத் தீமை ஏதும் இல்லை. சிவபெருமான் உனக்குத் தந்த ஆயிரத்தெட்டு அண்டங்களுக்குச் சென்று ஏவல்கொண்டு வருவாய்'' என்று சுக்கிராச்சாரியர் அவனுக்கு உபதேசித்தார்.

11. அண்டகோசப் படலம்

சுக்கிராச்சாரியர் கூறியதைக் கேட்ட சூரபன்மன், "குரு நாதா! உங்கள் கட்டளைப்படியே நடக்கிறேன்" என்று கூறி, சிவபெருமான் அளித்த ஆயிரத்தெட்டு அண்டங்களின் பரப்புக்களையும் கூறும்படி வேண்டிக் கொண்டான். அதன் படி சுக்கிராச்சாரியர் அண்டங்களின் பரப்புக்களைக் கூறினார். சுக்கிராச்சாரியரின் திருவடிகளை வணங்கிச் சூரபன்மனும் சிங்கமுகாசுரனும் விடைபெற்றுச் சென்றனர். தாரகனிடம் சென்றதும், தனக்குச் சுக்கிராச்சாரியர் உபதேசித்தவற்றை யெல்லாம் கூறினான் சூரபன்மன்,

அது சமயம் மாயை ஆகாயத்தில் வந்து தோன்றினாள். சூரபன்மன் தன் தம்பியரோடும், அசமுகியோடும் சென்று அவளை வணங்கினான். மாயை தன் மக்களை வாழ்த்தி "மைந்தர்களே! நீங்கள் பெற்ற வரத்தினால் இந்திராதி தேவர்களை வென்று எல்லா உலகங்களையும் அரசு புரிந்து, நீண்ட காலம் வாழ்வீராக! நீங்கள் மாயை செய்யவேண்டும் என்று எண்ணினால் என்னை நினையுங்கள். நினைத்தபோது நான் வந்து உங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பேன்" என்று கூறிச் சென்றாள்.

மாயை சென்றதும் சூரபன்மன் திக்கு விஜயம் செய்யப் புறப்பட்டான். அசுரப்படைகள் வடதிசை நோக்கி ஆரவாரத்தோடு புறப்பட்டன.

12. திக்கு விஜயப் படலம்

திக்குவிஜயம் புறப்பட்ட சூரபன்மன் அசுரசேனைகளுடன் புறப்பட்டு அளகாபுரியை அடைந்தான். இந்திர ஞாலம் என்னும் தன் தேரில் ஏறிக்கொண்டான்.

சிவபெருமானால் அளிக்கப்பட்ட இந்திர ஞாலத்தேர் சூரியனுடைய தேரைவிட ஒளி பொருந்தியது; விசாலமானது; அதில் ஏறினால் இமைக்கின்ற நேரத்தில் எங்கு வேண்டுமானாலும் சென்று திரும்பிவிடலாம்; இத்தேர் பகைவர்களின் தேர் மீது பாய்ந்து அழித்துவிடும். ஒரு கோடிக் குதிரைகள் பூட்.

டப்பெற்ற இந்தத் தேரின் மணிகள் ஒலித்தால் இடியொலி போன்றிருக்கும்.

பல்லாயிரம் யாளிகளும். குதிரைகளும், பூதங்களும் பூட்டப்பட்ட தேரில் சிங்கமுகனும், பதினாயிரம் குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் தாரகனும் ஏறிச் சென்றனர். அவர் களைச் சூழ்ந்து எண்ணற்ற அசுரப் படைகள் சென்றன. சூரபன்மன் குபேரனுடைய நகரத்தை வளைத்துக் கொண் டான்.

சூரபன்மனும் அவனது சேனைகளும் அளகாபுரியை வளைத்துக் கொண்டதை யறிந்த குபேரன் முதலில் அஞ்சி நடுங்கினான். சிவபெருமானிடம் வரம் பெற்ற அசுரர்களை வெற்றிகொள்ள முடியாது என்பதை உணர்ந்து, புஷ்பக விமானத்தில் ஏறிச் சென்று சூரபன்மனை யடைந்தான். அவ னைக் கண்டதும் வணங்கி, "நான் உங்கள் அடியவன்" என்று காலில் விழுந்தான். "இந்த வாக்கிலிருந்து நீ தவறக்கூடாது" என்று சொல்லி அனுப்பிவிட்டான் சூரபன்மன். அசுரப் படைகள் அளகாபுரி நகரத்தினுள் புகுந்து செல்வங்களை யெல்லாம் சூறையிட்டன, செல்வமெல்லாம் இழந்த அள காபுரி களையிழந்து கிடந்தது.

குபேரனை அடிமை கொண்ட சூரபன்மன் அளகாபுரியி லிருந்து வட கிழக்கே சென்றான். அது ஈசான ருத்ரருடைய தலம் என்று அறிந்து அங்கிருந்து இந்திர உலகம் சென்றான்.

சூரபன்மன் இந்திர உலகம் வருவதை அறிந்த இந்திரன் அஞ்சி நடுங்கி, சுவர்க்கத்தில் போய் ஒளிந்து கொண்டான். இந்திரன் சுவர்க்கத்தில் ஒளிந்து கொண்ட செய்தி சூரபன்ம னுக்குத் தெரிந்தது; உடனே அவன் சுவர்க்கத்தைக் கொளுத் தினான். பின்னர் அங்கிருந்து தன் சேனைகளுடன் அக்கினி பகவானின் நகரத்துக்குச் சென்றான். சூரபன்மன் வருவதை யறிந்த அக்கினி பகவான் மிகுந்த சீற்றம் கொண்டு, பல கோடி வீரர்களுடன் வந்து சூரபன்மனை எதிர்த்தார். இரு தரப்பினருக்கும் கடுமையான யுத்தம் நடந்தது. அக்கினி பகவான் பெரிய உருவம் எடுத்து அசுரர்களை வளைத்து அழித் துக் கொண்டிருந்தார். அப்போது தாரகன் மிகுந்த கோபத்

துடன் சிவாஸ்திரம் விடுப்பதற்காக வழிபாடு செய்தான். சிவாஸ்திரத்தினுல் உலகமே அழிந்துவிடும் என்று கருதிய அக்கினி பகவான் தமது பேருருவத்தைக் குறுக்கிக்கொண்டு, தாரகாசுரன் எதிரில் வந்து வணங்கி, "நான் செய்த குற்றத்தை மன்னித்துவிடுங்கள்; சிவாஸ்திரத்தை ஏவவேண்டாம்" என்று கேட்டுக் கொண்டார். அக்கினி அடிபணிந்ததால் தாரகனின் கோபம் நீங்கியது.

அப்போது அசுரர்கள் அக்கினி தேவரைக் கொல்ல முற்பட்டார்கள். அவர்களை யெல்லாம் தடுத்த தாரகன் அக்கினியிடம், "நீ நம் அடிமையானதால் உயிர்ப் பிச்சை கொடுத்தோம்" என்று கூறி அனுப்பினுன். அசுரப் படைகள் அக்கினி தேவரின் நகரத்துள் புகுந்து செல்வங்களையெல்லாம் கொள்ளையடித்தன.

பின்னர் சூரபன்மன் இயமபுரிக்குச் சென்றுன். ஒரு தூதன், சூரபன்மன் வரும் செய்தியை இயமனிடம் தெரிவித்தான்.

இயமன் நடுங்கினுன்; சேனைகள் சூழச் சூரபன்மனிடம் வந்து வணங்கி நின்றுன் இயமன். அவன் தன்னிடம் அடிமையாக வந்து நிற்பதைக் கண்ட சூரபன்மன் மிக்க மகிழ்ச்சியடைந்தான். "நீ என் ஏவலைச் செய்து கொண்டு இங்கேயே இரு" என்று பணித்தான். சூரனுடைய சேனைகள் இயமபுரியில் புகுந்து செல்வங்களை யெல்லாம் அள்ளிக் கொண்டன.

சூரபன்மன் திக்கு விஜயத்தைத் தொடர்ந்தான். படைகளுடன் தென்மேற்குத் திசை நோக்கிச் சென்று நிருதியின் மீது போருக்கு ஆயத்தமானுன், சிவபெருமானிடம் பெருவரம் பெற்ற சூரனுடன் யார்தான் போரிட முடியும்? நிருதி தன் சேனைகளுடன் சென்று சூரபன்மனை வணங்கி, "நான் உன் சுற்றம்" என்று அடிபணிந்தான். சூரபன்மன் மகிழ்ச்சியுற்று நாகர் உலகுக்குச் சென்றுன். ஆதிசேடன் சூரபன்மனை எதிர்த்தான். சூர்பன்மனே வெற்றி பெற்றுன்; நாகருலகச் செல்வம் முழுவதையும் தன் வசமாக்கிக் கொண்டான். தேவர்களிடம் முன்பு ஆதிசேடன் வாங்கி வைத்திருந்த அமிர்தத்தைச் சூரன் பெற்றுத் தன் தம்பியரோடு உண்டான்.

1974—11

எல்லாத் திசைகளிலும் புகழை நிலைநாட்டிய சூரன் சாகத்தீவைக் கடந்து பாற்கடலுக்குச் சென்றான். அவுணப் படைகள் பாற்கடலைக் கலக்கின. ஆதிசேடன் மீது அறிதுயில் கொண்டிருந்த திருமால் துயிலை விட்டு நீங்கினார். நிலமகளும் திருமகளும் அச்சத்தால் திருமாலைத் தழுவிக்கொண்டார்கள். "பயப்படாதீர்கள்" என்று அவர்களுக்கு ஆறுதல் கூறிய திருமால் சினங்கொண்டு கருடன் மீது ஏறிப் பெருமழை பொழிவதுபோல் அசுரர்மீது பாணங்களைப் பொழிந்தார். அசுர சேனைகள் சூறாவளியில் சிதறுண்ட மேகங்கள் போலப் பாண மழையில் பதைத்து ஓடின. தேவர்கள் ஆரவாரம் செய்தனர்.

அவுணப் படைகள் தோற்று ஓடுவதைக் கண்ட தாரகன். அவர்களுக்கு ஊக்கமளித்துக் கோபத்துடன் திருமாலோடு நெடுநேரம் போர் புரிந்தான்; கணைகளைப் பொழிந்து ஆரவாரம் செய்தான். திருமால் அளவற்ற கணைகளை அவன் மீது செலுத்தித் தேரையும் தேர்ப்பாகனையும் வீழ்த்தினார். பின்னர், திருமாலும், தாரகனும் மாய வடிவங்களைத் தாங்கி நான்கு நாட்கள் போர் புரிந்தனர். திருமால் கோடி பாணங்களை விடுத்துத் தாரகனின் வில், தேர், குதிரை முதலியவற்றை அழித்தார். தாரகன் வெகுண்டு தண்டாயுதத்தை ஏந்தி அண்டங்கள் நடுங்க யுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டான். திருமாலை உக்கிரமாக எதிர்த்தான். திருமால் விடுத்த கணைகளையெல்லாம் தண்டினால் தடுத்தான் சூரன். திருமால் சக்கராயுதத்தை விட்டார். அது தாரகன் கழுத்தை அறுத்துத் தள்ளாமல் செம்பொன்னாரமாக விழுந்தது.

தாரகனின் தவப் பெருமையைக் கண்ட திருமால் வியப்புற்று, அவனுடன் சமாதானம் செய்துகொண்டார்.

"உனக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை. நீடூழி காலம் வாழ்க" என்று வாழ்த்தினார்.

சூரபன்மன் முன் சென்று நடந்தவற்றையெல்லாம் தாரகன் தெரிவித்தான். அவற்றைக் கேட்டு மகிழ்ந்த சூரபன்மன் தன் படைகளோடு புறப்பட்டுச் சுவர்க்க

லோகத்தை யடைந்தான். சூரபன்மன் சுவர்க்கம் வந்திருக்கும் விஷயமறிந்த இந்திரன் அஞ்சி நடுங்கினான். சூரனைத் தன்னால் நிச்சயமாக வெல்ல முடியாது என்பதால் தேவராஜன் இந்திராணியுடன் குயில் உருவம் கொண்டு பறந்து ஓடி ஒளிந்தான்.

அரசனை இழந்த அமரர் அனைவரும் சூரபன்மனைப் பணிந்து ஏவல் செய்வாராயினர். அசுரர்கள் இந்திரனைத் தேடி யலைந்தும் அவன் கிடைக்கவில்லை. அவனுடைய செல்வங்களை அசுரர்கள் கவர்ந்து புறப்பட்டனர்.

சூரன் பிரமலோகஞ் சென்றான். நான்முகக் கடவுள் சூரபன்மன் முன் வந்து, "நான் உனது பாட்டன். திருமாலை எதிர்த்து வெற்றிபெற்ற உன்னை வெல்ல எவராலும் இயலாது. நீ நெடுங்காலம் வாழ்ந்திரு" என்று ஆசி கூறி, தனது படைக்கலங்களைச் சூரபன்மனுக்கும் அவன் தம்பி யருக்கும் தந்தார்.

சூரபன்மன் திருக்கயிலாயம் சென்றடைந்தான்—போர் புரிவதற்கல்ல—போரில் தனக்குப் பேராற்றல் தந்த பிரானைப் பணிவதற்கே சென்றான். தன்னுடன் வந்த படை வீரர்களை வெளியில் நிறுத்தி வைத்துத் தம்பியருடன் எம்பெருமான் திருக்கோயிலின் புறக்கடை வாயிலை அடைந்தான். திருநந்தி தேவரிடம் அனுமதிபெற்று உள்ளேசென்று, உமாதேவியையும் சிவபெருமானையும் பணிந்து துதித்தான். கருணை நிறைந்த சிவபெருமான் சூரபன்மனை நோக்கி, "அண்டங்களை யெல்லாம் உனது ஏவலால் அரசு புரிந்து கொண்டு வாழ்வாயாக" என்று அருள் புரிந்தார். சூரன், எம்பெரு மானுடைய பொன்னார் திருவடிகளை வணங்கி விடை பெற்றான்.

சூரபன்மன் தன் சேனைகளுடன் ஆயிரத்தெட்டு அண்டங் களையும் சென்று பார்வையிட்டான்; இதுகாறும் யுத்தம் புரிந்து தோல்வியுறச் செய்யாதவர்களை யெல்லாம் சமர் புரிந்து வென்றான். அவுணர்களை ஆங்காங்கே ஆட்சியில் நியமித்துத் தன் ஆட்சியை நிலைநாட்டிக் கொண்டான்.

13. எதிர்கொள் படலம்

அசுரர்களின் அரசனுகிய அசுரேந்திரன், சூரபன்மன் சிவபெருமானிடம் பெற்ற வரங்களையும், அருளையும் எண்ணிச் சுக்கிராச்சாரியருடன் வந்து சூரனைத் தொழுது உறவு கொண்டாடி மகிழ்ந்தான். சூரபன்மன் அசுரேந்திரனிடம் குசலம் விசாரித்தான். அசுரேந்திரன் சூரபன்மனை நோக்கி, "தாங்கள் இருக்கும்போது க்ஷேமத்துக்கு என்ன குறை?" என்று கேட்டான். நியாயமான கேள்விதானே? சூரன் அதிகாரத்தில் இருந்த வரை அதருமக்காரர்களின் க்ஷேமத்துக்கு என்ன குறை?

சூரபன்மன் மண்ணுலகம் வந்தடைந்தான். இச்செய்திதான் தேவர்களை மிகவும் நடுக்குறச் செய்தது. தேவருலகைச் சூரன் வென்ற பின்னும் மண்ணுலக மறையவரின் வேள்வியால் அவர்களுக்கு ஆஹுதி கிடைத்து வந்தது. மண்ணுலகில் வேத கருமம் மறைந்ததால்தான் தேவர்களுக்குத் துர்ப்பிட்சம். தேவர்கள் மானுடரை வாழ்விக்கின்றனரெனில், மானுடர்தான் தேவரை வாழ்விக்கின்றனர். (வேள்வியின் மூலம்; இவ்வாறு பரஸ்பரம் வாழ்வித்துக் கொள்ளுமாறு கீதையில் கண்ணன் உபதேசித்திருக்கிருர்.) எனவே, சூரன் பூவுலகில் புகுந்ததும் தேவர்களும் முனிவர்களும் பாற்கடலை அடைந்து அறிதுயில் புரியும் அரவணைச் செல்வரை வணங்கி, சூரபன்மனுல் தங்களுக்கு நேர்ந்த துன்பங்களைக் கூறி முறையிட்டுக் கொண்டார்கள்.

"சிவபெருமானை நீக்கித் தக்கன் செய்த வேள்வியில் கலந்து கொண்டதால் வந்த துன்பம் இது. இதனை விலக்க எவராலும் இயலாது, சூரபன்மன் சிவபெருமானிடம் அளவற்ற வரங்களைப் பெற்றிருக்கிருன்; அண்டங்கள் எல்லாவற்றையும் வென்றிருக்கிருன். அவனை வெல்ல நம்மால் முடியாது. அவனுடன் சமாதானம் செய்ய முயல்வதே நம்மால் இயலும்" என்ருர் நாராயணர்.

அவ்வாறே திருமால், பிரமன், இந்திரன் முதலியோர் புறப்பட்டுச் சென்றனர். சூரபன்மனிடம் வந்து ஆசி கூறி நின்ருர்கள்.

தேவர்களுடன் பதினோரு கோடி உருத்திரர் கூட்டங்கள் ஒருங்கு நிற்பதைக் கண்ட சூரபன்மன், "சிவபெருமானைப் போல் வடிவம் கொண்டுள்ள இவர்கள் யார்?" என்று கேட்டான்.

14. உருத்திரர் கேள்விப் படலம்

அசுரகுலத்தரசே! முன்னொரு கற்ப காலத்தில் பிரமன் மூவுலகங்களையும் உயிர்களையும் படைத்து, அதனால் செருக்குற்றான். தானே முழு முதற் கடவுள் என்று கருதிச் சிவபெருமானை மறந்துவிட்டான். அவன் அவ்வாறு எண்ணிய உடனே சராசரங்களின் வளர்ச்சி நின்றுவிட்டது. அதனைக் கண்ட பிரமன், 'இதற்குக் காரணம் என்ன?' என்று சிந்தித்தான். சிந்தனையின் விளைவாக ஐந்தொழில்களைச் செய்பவராகிய சிவபெருமானை மறந்து, அவரது அருளின்றிப் படைத்தல் தொழில் செய்ததே காரணம் என்று உணர்ந்தான். எம்பெருமானை நோக்கி அளவற்ற காலம் தவம் புரிந்தான். சிவபெருமான் பிரமனுக்குக் காட்சி தரவில்லை. எனவே, பிரமன் வருந்திக் கதறினான்; அவனது கண்களினின்றும் நீர்த் துளிகள் சிந்தின; அக்கண்ணீர்த் துளிகள் பேய்களாய் எழுந்து நின்றன. அப்பேய்களைக் கண்டு பிரமன் நடுங்கி மயங்கி வீழ்ந்தான்.

கருணாமூர்த்தியான கைலாசநாதர் பிரமனுக்கு உணர்வு அளித்து, அவனது கனவில் தோன்றினார். "மகனே! வருந்த வேண்டாம். நீயே முழுமுதற் பொருள் என்று கருதி எம்மை மறந்ததால் உன் படைப்புத் தொழில் நிறைவேறவில்லை. அது மீண்டும் விரைவில் நிறைவேறும் வண்ணம் நம் பக்கத்தில் உள்ள உருத்திரர்களை உன்னிடத்து அனுப்புவோம்" என்று சிவபெருமான் அருளிச் செய்தார். அதன்பின் பிரமன் நல்லுணர்வு பெற்றான். சிவபெருமான் திருவருளினால் பதினோரு உருத்திரர்கள் பிரமன் நெற்றியிலிருந்து வெளிப்பட்டு நின்றார்கள்.

"நீங்கள் எனது நெற்றியில் தோன்றியது ஏன்?" என்று அவர்களைக் கேட்டான் பிரமன். "உன் படைப்புத் தொழில்

நிறைவேற வேண்டும் என்பதற்காகச் சிவபெருமான் எங்களை இவ்வாறு தோன்றச் செய்துள்ளார்'' என்று உருத்திரர்கள் பதில் கூறினார்கள்.

"அன்போடு என்னிடம் வந்த நீங்கள் விரைவில் உயிர்களைச் சிருஷ்டியுங்கள்'' என்று பிரமன் கூறினான். அந்தப் பதினொரு உருத்திரர்களும் தங்களைப் போலவே பதினொரு கோடி உருத்திரர் கூட்டத்தைப் படைத்தார்கள், பிரமனின் படைப்புப் போல் அல்ப ஜீவர்களை அவர்களால் படைக்க இயலவில்லை.

"உருத்திரர்களைச் சிருஷ்டி செய்தால் உலகம் தாங்காது'' என்று முறையிட்டான் பிரமன்.

"அப்படியானால் நீ முன்போல் உயிர்களைச் சிருஷ்டி செய்து கொண்டிரு. நாங்கள் இப்போதே பதத்துக்குச் செல்கிறோம்'' என்று கூறிப் பதினொரு உருத்திரர்களும் தங்கள் புவனம் அடைந்தார்கள். தாங்கள் சிருஷ்டித்த பதினொரு கோடி உருத்திரர்களைத் தேவர்கள் கூட்டத்தில் இருக்கும்படி சொல்லிவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர், அவர்களே இந்த உருத்திரர்கள். இவர்கள் சிவசாரூப்பியம் எய்தித் தேவர்களுடன் சேர்ந்துவிட்டவர்கள்.''

இவ்வாறு திருமால் சூரபன்மனுக்கு உருத்திரர் சரிதத்தைக் கூறினார்.

15. நகர் செய் படலம்

சூரபன்மன் முன்னிலையில் தேவதச்சன் வந்து நின்றான். "இப்பூவுலகில் வசிப்பதற்கு ஏற்ற அழகானதொரு நகரத்தை விரைவில் அமைத்துக் கொடு'' என்று சூரபன்மன் ஆணையிட்டான். அதன்படி தேவதச்சன் தென் கடலையடைந்தான். அதன் நடுவில் எண்பதினாயிரம் யோசனை விரிவுடையதாக ஒரு நகரத்தை அமைத்தான். செம்பொற் கோபுரங்கள் அந்நகரில் வானளாவி நின்றன; மதில், அரண்மனைகள், மாட மாளிகைகள், பொன்னெடுந் தெருக்கள் ஆதியன பாங்குற அமைந்திருந்தன; எல்லா வகையிலும் சிறந்த பெரிய நவரத்தின மாளிகையையும் அங்கே உண்டாக்கி, அந்நகருக்கு

'வீரமகேந்திரபுரம்' என்று பெயரிட்டான். வீரமகேந்திர புரத்தின் எட்டுத் திசைகளிலும் ஏமபுரம், இமையபுரம், இலங்கைபுரம், நீலபுரம், சுவேதபுரம், அவுணர்புரம், வாம புரம், பதுமபுரம் என்னும் எட்டு நகரங்களையும் அழகு பெற அமைத்தான்.

சூரபன்மன் கட்டளைப்படி தேவதச்சன் சிங்கமுகாசுர னுக்காக வடகடலில் எண்பதினுயிரம் யோசனை விஸ்தார முள்ள 'ஆசுரம்' என்னும் நகரத்தை உண்டாக்கினுன். நாவ லந்தீவில் ஏமகூட மலைக்கு ஒருபுறத்தில் தாரகனுக்காக 'மாய மாபுரம்' என்ற நகரை உண்டாக்கினுன். அவுண சேனைகள் தங்குவதற்கென மற்றைய கடல்கள் தோறும், தீவுகள் தோறும் பல நகரங்களை அமைத்தான்.

ஆணையின் வண்ணம் அழகு நகரம் அமைக்கப்பெற்ற செய்தியைத் தேவதச்சன் சூரபன்மனிடம் கூறினுன், சூரபன் மன் நல்ல நாளில் தன் படைகளுடன் சென்று வீரமகேந்திர புரத்தில் குடிபுகுந்தான்.

16. பட்டாபிஷேகப் படலம்

பிரமன் முதலிய தேவர்கள், சகல புவனங்களையும் வென்று ராஜதானியில் புகுந்த சூரபன்மனுக்கு முடிசூட்ட ஆயத்தம் செய்தனர். சூரபன்மன் நீராடி, பீதாம்பரம் உடுத்தி. மலர்களைச் சூடி, ஆபரணங்கள் அணிந்து பட்டாபி ஷேகத்துக்குத் தயாரானுன். தம்பியர் இருமருங்கும்வர அவுணர்களும் அமரர்களும் துதிக்க சிங்காதனத்தில் அமர்ந் தான். பிரமதேவர் மணிமகுடத்தை எடுத்துச் சூட்டினுர். அவுணர்கள் ஆரவாரம் செய்து வணங்கினுர்கள். தேவர்களும் முனிவர்களும் பொன் மலர்களைத் தூவினுர்கள். யுத்தம் செய்து வெற்றி பெற்றவனுக்கு உரிய மரியாதையைச் செலுத்தத்தானே வேண்டும்?

சூரபன்மனுடைய இளவல்களின் ஏவலினுல் தேவராஜ ணுகிய இந்திரன் சூரபன்மனுக்குக் காளாஞ்சியை ஏந்தினுன்; குபேரன் அடைப்பையை ஏந்தினுன்; வாயு சாமரை வீசினுன்; அசுரேந்திரன் உடைவாள் பிடித்தான்; சந்திர சூரியர்கள்

குடை பிடித்தார்கள். வருணனும் புத்திரர்களும் ஆலவட்டம் வீசினுர்கள்; கருடனும், கந்தருவரும், சித்தரும் இசை பாடினுர்கள்; இயமனும் அக்கினியும் பணியாட்களாகப் பிரம்பு ஏந்திச் சபையினரை வரிசைப்படுத்தி நிறுத்திச் சூர பன்மனைப் புகழ்ந்து துதித்தார்கள். தேவ குருவும் அசுர குருவும் முனிவர்களும் பொற்கலசத்திலிருந்த கங்கை நீரைத் தெளித்து ஆசி பல கூறினுர்கள். மேனகை, அரம்பை முதலிய தெய்வ மாதர்கள் ஆடிப் பாடினுர்கள்.

தேவரும் பிறரும் ஏவல் செய்யச் சூரபன்மன் ஒப்பாரும் மிக்காருமின்றி அரசு செய்யலானுன்.

17. அரசு செய் படலம்

ஆட்சிப் பீடத்தில் ஏறியதும் சூரபன்மனின் அதிகார வெறி தலைக்கேறியது.

உலகையெல்லாம் பரிபாலிக்கும் ஸ்ரீமந் நாராயணமூர்த்தியிடமும் தன் அதிகார சக்தியைக் காட்டினுன் சூரன்.

திருமாலிடம் சூரன் கூறுவான்: "நீ என் தந்தையாராகிய காசிப முனிவருக்குப் பாட்டன். ஆதலால் உன்னை அழைக்கும் பொழுது விரைந்து வரவேண்டும்" என்று கட்டளையிட்டான்.

பிரமதேவரை நோக்கி. "உன் புத்திரர்களுடன் எப்போதும் இங்கு வந்து பஞ்சாங்கம் சொல்லிப் போகவேண்டும்" என்ருன்.

கதிரவனை நோக்கி, "நீ நம்முடைய நகர் மதிலின் மேல் உக்கிரமான வெப்பத்துடன் செல்லுதல் கூடாது. எந்நாளும் இங்கு இளங்கதிராய்த் திகழ வேண்டும்" என்று பணித்தான்.

சந்திரனை அழைத்து "நீ இனி தேய்தல் வளர்தலின்றி, பூரண கலையோடு நம் நகரில் சஞ்சரிக்க வேண்டும்" என்று கட்டளையிட்டான்.

அக்கினியை நோக்கி, "நம் ஊரில் உள்ளவர்கள் யார் நினைத்தாலும் அவரிடத்து வந்து அவர்கள் இடுகின்ற பணி

யைச் செய்யவேண்டும். உன்னை என் மக்களில் யார் நீண்டி ஞலும் செந்தாமரை மலர் போலக் குளிர்ந்திருக்க வேண்டும்'' என்ருன்.

இயமனை அழைத்து, ''அசுரர்கள், நம்முடைய யானை, குதிரை முதலிய விலங்குகள் ஆகியவற்றின் உயிரைப் பறிக்க வேண்டும் என்று கனவிலும் கருதக் கூடாது'' என்று கூறினுன்.

வாயுவை அழைத்து, ''என் நகரத்தில் உள்ள புழுதியை நீக்கிச் சுத்தம் செய்வது உன் தொழில்'' என்ருன்.

வருணனை நோக்கி ''வாயு சுத்தம் செய்த இடங்களில் எல்லாம் பன்னீர் தெளித்துப் பச்சைக் கர்ப்பூரம் சந்தனம், கஸ்தூரி முதலியவற்றைத் தெளிக்க வேண்டும்'' என்று கட்டளையிட்டான்.

சூரபன்மன் தேவதச்சனுடைய மகளாகிய பதுமகோமளை யைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினுன். விதிப்படி திருமணம் செய்து வைத்தார் சுக்கிராச்சாரியார். தேவர். அசுரர், கந்தருவர், சித்தர், கின்னரர், இயக்கர், நாகர், கிம் புருடர் முதலிய பல சாதிப் பெண்களைக் காமக் கிழத்தியர் களாகக் கொண்டு சூரன் இன்புற்ருன். சிங்கமுகாசுரனுக்கு இயமனுடைய மகளாகிய விபுதையையும், தாரகாசுரனுக்கு நிருதியின் மகளாகிய சௌரியையும் திருமணம் செய்து வைத்து அவர்களை அவர்களது நகரங்களுக்கு அனுப்பிவைத் தான். தன் இளவல்களுக்கு இரண்டு கோடி வெள்ளம் சேனைகளையும் அளித்தான்.

விண்ணுலகத்திலும், மண்ணுலகத்திலும், ஏழ் பிலங்களி லும், எண்டிசைகளிலும் அசுர சேனைகள் சூரபன்மனுடைய கட்டளைப்படி கொடுங்கோல் செய்து வந்தார்கள். தான் வசித்த வீரமகேந்திரபுரத்தில் இலக்கம் வெள்ளம் அசுரர்களை மாளிகைகள் தோறும் இருத்தினன் சூரன். யானை., குதிரை, யாளி, கரடி, புலி, பன்றி, சிங்கம், மான் ஆகியவற்றின் முகங் களைக் கொண்ட எட்டு அசுரத் தலைவர்களை வீரமகேந்திர புரத்தின் எட்டுத் திக்குகளிலும் உள்ள நகரங்களுக்கு அனுப்பிவைத்தான். தேவர்களும் முனிவர்களும் சூரபன்ம

னுடைய வீரமகேந்திரபுரத்திலும், சிங்கமுகாசுரனுடைய ஆசுர நகரத்திலும், தாரகாசுரனுடைய மாயமாபுரியிலும் சென்று அவர்கள் இட்ட பணியைச் செய்து வந்தார்கள்.

18. தேவரை ஏவல் கொள் படலம்

"தேவர்களே! நாம் உத்தரவிடும்போது நீவிர் மீன்பிடித்துத் தரவேண்டும்" என்று கட்டளை பிறப்பித்தான். தேவர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கிச் சூரன் கட்டளையைத் தவறுமல் நிறைவேற்றி வைப்பதாகக் கூறினார்கள்.

தேவர்கள் தமது விதியை நொந்துகொண்டு "கற்பகத் தருவின் கீழ் வாழும் வாழ்க்கை நீங்கி வலைஞர்கள் போல் மீன்பிடிக்க வேண்டிய காலம் வந்துவிட்டதே" என்று வருந்தி, சூரபன்மனை வணங்கி நாள்தோறும் மீன்களைப் பிடித்து வந்து அசுரர்களுக்குக் கொடுத்தார்கள். மீன் கூடைகளைச் சுமந்து வந்த தேவர்களை நோக்கிய அசுரர்கள் அவர்களை ஏளனம் செய்து துன்புறுத்தி மகிழ்வார்கள்.

19. புதல்வரைப் பெறு படலம்

சூரபன்மனுக்குப் பதுமகோமளையிடத்துப் புதல்வன் ஒருவன் பிறந்தான். அம் மகவைக் கண்டு மகிழ்ந்த சூரபன்மன் விழாக் கொண்டாடினன். பொன் மழை பொழிந்தான். தன் சுற்றத்தார்க்கெல்லாம் செல்வங்களை வாரி வாரி வழங்கி மகனைத் தொட்டிலில் இட்டான். அரம்பையர்களும் அசுரப் பெண்களும் அக்குழந்தையை ஆசீர்வதித்தனர்.

வளர்பிறை போல் வளர்ந்து வந்த அக்குழந்தை ஒருநாள் தொட்டிலில் தூங்கும்போது திறந்திருந்த சாளரத்தின் வழியாக சூரியகிரணம் தாக்கியது. உடனே அக்குழந்தை கோபத்துடன் ஆகாயத்தில் பாய்ந்து சூரியனைக் கையால் பிடித்து இழுத்து வந்து தொட்டிலின் காலில் கட்டிவிட்டு முன்போல் துயில் கொண்டது. விண்ணில் விரிசுடரோன் இல்லாமையால் விண்ணவர்கள் அஞ்சி வருந்தினார்கள். இந்திரன் முதலிய தேவர்கள் சூரபன்மனிடம் வந்து கதிரவனைச்

சிறை விடுக்கும்படி வேண்டிக் கொண்டனர். சூரபன்மன் தன் மகனுடைய வீரச் செயலை நினைத்து மகிழ்ந்தான்.

"என் மகன் சூரியனைச் சிறை செய்தது எனக்குத் தெரியாது. என் மகன் சிறையிடும்படியாக சூரியன் என்ன குற்றம் செய்தான் ?" என்று கேட்டான். "கதிரவனின் கிரணம் உம் மகனுடைய முகத்தைத் தீண்டியது, அதனால் சூரியனைப் பிடித்துச் சிறையிலிட்டு விட்டான்" என்று பிரமதேவர் கூறினர். "நீங்கள் என் மகனிடம் இன்சொல்லால் வேண்டிக் கதிரவனைச் சிறை விடுத்து இங்கே கொண்டு வாருங்கள்" என்றான் சூரபன்மன்.

அரம்பையர்கள் பாடி யாட்டுகின்ற தொட்டிலில் கிடந்தான் சூரபன்மனின் மகன். பிரமதேவரும் ஏனைய தேவர்களும் அங்கு வந்து குழந்தைக்கு நல்லாசிகள் பல கூறினர்.

"உங்களுக்கு என்னவேண்டும்? சொல்லுங்கள்" என்று அக் குழந்தை பிரமதேவரிடம் கேட்டது.

"சூரியனைச் சிறையிலிருந்து விடுவிக்கவேண்டும்" என்று பிரமதேவர் வேண்டிக் கொண்டார்.

"உன்னுடைய அஸ்திரத்தை எனக்குத் தந்தால் சூரியனைச் சிறை விடுப்பேன்" என்று குழந்தை கூறியது. அதற்கு இணங்கிப் பிரமதேவர் தமது மோகப் படையைக் குழந்தைக்குக் கொடுத்தார்: அதனைப் பெற்ற அக் குழந்தை சூரியனைக் கட்டவிழ்த்துவிட்டது.

சூரியனும் பிரமதேவரும் குழந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு சூரபன்மனிடம் சென்றார்கள். அவனிடம் நிகழ்ந்தவற்றை யெல்லாம் சொன்னார்கள். பானுவாகிய சூரியனிடம் தன் மகவு கோபித்த காரணம் பற்றியே சூரன் தன் குழந்தைக்குப் பானுகோபன் என்று அந்த நாளில் பெயர் சூட்டினன்.

பானுகோபனுக்குப் பின் பதும கோமளையிடம் சூரபன்மனுக்கு அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு என்ற மூன்று புதல்வர்கள் பிறந்தார்கள். ஏனைய மனைவியரும் ஏககாலத்தில் மூவாயிரம் புதல்வர்களைப் பெற்றார்கள்.

சிங்கமுகாசுரன் தனது பட்டத்துத் தேவியாகிய விபுதையிடம் அதிசூரன் என்னும் மகனையும், மற்ற மனைவியரிடம் நூறு புத்திரர்களையும் பெற்றான். தனது பட்டத்துத் தேவியாகிய சௌரியிடம், தாரகன் அசுரேந்திரன் என்னும் மகனைப் பெற்றான். அப் புதல்வன் சகல நற்குணங்களுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்தான். அழகு மிக்க அவன் சகலகலைகளிலும் வல்லவனாக வளர்ந்தான். அவன் தீமைகள் புரிய மாட்டான். பாவ காரியங்களில் ஈடுபட மாட்டான். தருமமல்லாதவற்றை நினைக்கவும் மாட்டான். கள்ளிச் செடி அகிலைத் தந்ததுபோல் தாரகன் அசுரேந்திரனைப் பெற்றான்.

20: வில்வலன் வாதாவிப் படலம்

சூரபன்மனின் தங்கை அசமுகி திருமணம் செய்து கொள்ளாதவள். கற்பு நெறியைப் பின்பற்றாமல் விரும்பிய ஆடவனுடனெல்லாம் சேர்ந்து வாழ்ந்தாள். பாவமே வடிவாக வந்த அவள் தருமத்தைக் கனவிலும் நினைக்கவில்லை. அவள் தேவர்களின் மனைவியரைத் தன் தமையன்மார்களுக்கு மனைவியராக்கி வைப்பவள்; முனிவர்கள் செய்யும் வேள்விகளைக் கெடுப்பவள்; அசுரர் குலத்தை அழிக்க அநீதி புரிந்து உலவுவாள்; அழகிற் சிறந்த ஆடவரை வலியப் புணர்வாள்.

ஒருநாள் அசமுகி துருவாச முனிவருடைய ஆசிரமத்துக்குச் சென்று “உங்களுடன் கூடி’ மக்களைப் பெற வந்திருக்கிறேன்” என்று கூறினாள்.

துருவாச முனிவர், பெண்ணே! உன்னுடன் நான் கூடினால் என் தவம் வீணாகும்; நீ இங்கு நிற்பதே எனக்குப் பழியைத் தரும்” என்று கூறினார்.

“முனிவரே! என்னிடமிருந்து தப்பி ஓடிவிடலாம் என்று எண்ண வேண்டாம். நான் உங்களைக் கூடாது போகமாட்டேன்” என்று கூறி அசமுகி அவரைப் பலாத்காரம் செய்தாள். அப்பொழுது அவளிடத்தில் வலிமை மிக்க வில்வலன் வாதாவி என்ற புதல்வர்கள் பிறந்தார்கள்.

அக் குழந்தைகளை அசமுகி அன்புடன் தழுவி உச்சி மோந்தாள். அப் புதல்வர்கள் இருவரும் துருவாச முனிவரை வணங்கினார்கள். அவர் "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். "தந்தையே! உங்கள் தவம் முழுவதையும் எங்களுக்குத் தந்தருள வேண்டும்" என்று கேட்டனர். "மைந்தர்களே! நான் அரிதிற் செய்த தவத்தைத் தரமாட்டேன். வேறு பொருளைக் கேளுங்கள்" என்று துருவாசர் கூறினார். அப் புதல்வர்கள் கோபத்துடன் தங்கள் தந்தையாகிய துருவாசமுனிவரையே கொல்ல விரைந்து எழுந்தார்கள். அவர்கள் செயலைக் கண்டு சினமடைந்த துருவாச முனிவர் "நீங்கள் நாடோறும் முனிவர்களுக்குத் துன்பம் செய்து வாழ்ந்து அகத்திய முனிவரால் அழியக் கடவது" என்று சாபம் கொடுத்துவிட்டு மறைந்து போனார்.

வில்வலன், வாதாவி இருவரும் தாயாகிய அசமுகியிடம் சென்றனர். முனிவர்களைத் துன்புறுத்திக் கொல்லும்படி அவர்களுக்கு அசமுகி உபதேசம் செய்தாள். அங்கிருந்து வேறு வனம் சென்று வில்வலனும் வாதாவியும் அக்கினியில் நின்று பிரமதேவரைக் குறித்து அளவற்ற காலம் கடுந்தவம் செய்தனர். பிரமதேவர் தரிசனம் தராததால் மனம் வருந்திய வில்வலன் தன் தம்பியாகிய வாதாவியைக் கொன்று அவனது இரத்தத்தையும், தசையையும், நெய்யும் அவியுமாக நெருப்பில் சொரிந்து யாகம் செய்தான். பிரமதேவர் பிரசன்னமானார். வில்வலன் பிரமதேவரைப் பணிந்து துதித்து, "என் தம்பி குறைவில்லாத வடிவத்துடன் எழுந்து வரவேண்டும்" என்று கேட்டான். "வாதாவி எழுக" என்று பிரமதேவர் கூறியதும் அவன் எழுந்துவந்தான்.

அதனைக் கண்டு அதிசயித்த வில்வலன் மனத்தில் சூதான எண்ணத்தோடு ஒரு வரம் கேட்டான். "இப்போது தாங்கள் கூறியவுடன் இறந்த வாதாவி மீண்டும் வந்தானன்றோ? இதே போல ஆட்டின் உருவம் கொண்ட என் தம்பி உடல் வெட்டுப்பட்டு இறக்க, அதன் பின் நான் 'தம்பியே எழுக' என்று அழைத்ததும் அவன் உயிர் பெற்று எழுந்து வரத் தாங்கள் வரம் தரவேண்டும்" என்று பிரமரைக் கேட்டுக் கொண்டான். பிரமதேவரும் வரத்தை அருளினார்.

பிறகு வில்வலன், வாதாவி இருவரும் சூரபன்மன் முன் சென்று தங்கள் வரலாற்றைச் சொல்லி அவனை மகிழ் வித்தனர். சூரபன்மன் அவ்விரு மருமக்களையும் தழுவி மகிழ்ந்து தன்னுடன் அவர்களைச் சில காலம் வைத்துக் கொண்டான்.

பிறகு அவர்கள் குடக நாட்டில் வளமை மிக்க ஒரு காட்டில் ஆசிரமத்தை நிறுவி அதில் முனிவர் போல் வேஷ மிட்டு வசித்து வந்தார்கள். அவ்வழியே வரும் முனிவர்களைக் கொல்ல வேண்டும் என்று எண்ணிய வில்வலன், முனிவர்கள் வந்தால் அவர்களைப் பணிந்து உபசாரத்துடன் அழைத்து வருவான். "உணவு அருந்த வாருங்கள்" என்று கூறி ஆட்டுக் கடா வடிவத்தில் இருக்கும் வாதாவியைக் கொன்று கறி சமைத்து அவர்களுக்கு விருந்தளிப்பான். முனிவர்கள் விருந்துண்ட பின், "தம்பி எழுக" என்று கூவுவான். உடனே பிரமதேவர் தந்த வரத்தின் சக்தியால் வாதாவி, தன்னை உண்ட முனிவருடைய வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வருவான். இந்தச் சூழ்ச்சியில் சிக்கி இறக்கின்ற முனிவர்களின் தசைகளை இருவரும் உண்டு களிப்பார்கள். இவ்வாறே வாதாவியும், வில்வலனும் நாடொறும் முனிவர் களைச் சூழ்ச்சியால் கொன்று வந்தனர்.

21. இந்திரன் கரந்துறை படலம்

சூரபன்மன் இந்திரஞாலத் தேர்மீது ஏறி நாடோறும் ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் சென்று அரசு செய்து கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் பாதாளத்தில் இருப்பான்; ஒரு நாள் விண்ணுலகத்தில் இருப்பான்; ஒரு நாள் சத்தியலோகத்தில் இருப்பான்; ஒரு நாள் வைகுந் தத்தில் இருப்பான். இவ்வாறாகப் பகல் முழுவதும் வெளிச் சென்று மாலையில் வீரமகேந்திரபுரிக்குத் திரும்புவான் சூரபன்மன்.

அதிகார வெறியோடு காம வெறியும் மிகுந்தது. தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற எண்ணத்தில் மனம் போனபடி செல்ல விரும்பினான். பாவம் புரிந்தால் விட்ட

யிருத்தே தீரவேண்டும் என்பதை மறந்தான், (இதுவே கட்டுக்கடங்காத அதிகார பலத்தின் போக்கு.) பின்னல் வரும் கேட்டை உணராமல் கற்புக்கரசியாகிய தேவி இந்திராணி யையே அபகரிக்க எண்ணம் கொண்டான் சூரன். தன் படைத் தலைவனை அழைத்து. "நீ இப்பொழுதே சென்று இந்திரனைப் பிடித்து என் முன் கொண்டு வந்து நிறுத்து" என்று கூறினன். இந்திராணியைக் கவர வீரப் பெண்களை யும் ஏவினன். அவர்கள் சூரபன்மனின் கட்டளையை நிறை வேற்றுவதற்காக விரைந்து அமராவதி சென்றனர்.

அவர்களைக் கண்ட ஒற்றர்கள் இந்திரனிடம் செய்தி யைக் கூறினர்கள். இந்திரன் இந்திராணியையும் அழைத்துக் கொண்டு மாயா சக்தியால் பூமியில் மறைந்து சென்றான். சூரபன்மனல் ஏவப்பட்ட அசுர வீரர்களும் வீரப் பெண்களும் அமராவதி சென்று இந்திரனையும் இந்திராணியையும் தேடி ஞர்கள். அவர்கள் இருவரையும் காணததால் ஏமாற்றம் கொண்டார்கள்.

வந்த காரியம் தோற்றுப்போன ஆத்திரத்தில் அங்குள்ள தேவர்களை அசுரர்கள் பிடித்து அடித்து "இந்திரனும் இந்தி ராணியும் இருக்குமிடத்தைக் காட்டுங்கள்" என்று வற்புறுத் திச் சித்திரவதை செய்தார்கள். அவர்களுக்கு இந்திரனும் அவனது சதியும் சென்ற இடம் தெரியாது என்று கண்டபின் அவர்களை விட்டுச் சென்றார்கள்.

வீரமகேந்திரபுரிக்குத் திரும்பிய அசுரர்கள் வானுலகில் நிகழ்ந்ததை சூரபன்மனிடம் கூறினர்கள். சூரபன்மன் கடுங் கோபம் கொண்டான்; மணியை இழந்த நாகம் போல் வருந்தினன். இந்திரனும் இந்திராணியும் இருக்குமிடத்தை எப்படியும் அறிந்து வரும்படி பல ஒற்றர்களை ஏவினன். அந்த ஒற்றர்கள் உலகெங்கும் தேடித் திரிந்துகொண்டிருந்தார்கள்.

இந்திரனும் இந்திராணியும் நீங்கியதால் விண்ணுலகம் பொலிவிழந்தது. மதியும் விண்மீனும் இழந்த இரவு போலச் சோபை குன்றியது. தேவர்களின் புலம்பல் மிகுந்தது.

இந்நிகழ்ச்சிக்கு முன்னரே, இந்திரனின் சோதரனுன படியால் உபேந்திரன் எனப்படும் விஷ்ணுமூர்த்தி விண்ணுல

கத்தை விட்டுத் தமது வைகுண்டத்தை அடைந்தார். இந்திர னின் புதல்வனுகிய சயந்தன் ஸ்ரீமந் நாராயணரைக் காண வைகுண்டம் சென்று அங்கேயே தங்கியிருந்தான். தனது தாய் தந்தையர் மறைந்தோடியதையும் அசுரர்களின் கொடு மையையும் கேட்டு அவன் மிகவும் வருந்தி மீண்டும் பொன் னுலகம் வந்தான். தேவர்களின் ஆறாத்துயரைக் கண்டு மனம் நொந்தான். தாய் தந்தையைக் காணுமல் துயரக் கடலில் மூழ்கினுன்.

நாரத முனிவர் சயந்தனின் முன் தோன்றினுர். சயந்தன் நாரதரை வணங்கி, "சூரபன்மனுக்கு அஞ்சி என் தாய் தந்தையர் மறைந்தோடி ஒளிந்தனர்; அவர்கள் எங்கே சென் றனர் என்பதறியாமல் வருந்துகிறேன். எனது துயர் எப் போது நீங்கும்?" என்ருன்.

தீங்குவந் தடையு மாறும் நன்மைதான் சேரு மாறும்
தாங்கள்செய் வினை யினுலே தத்தமக் காய அல்லால்
ஆங்கவை பிறரால் வாரா அமுதநஞ் சிரண்டி னுக்கும்
ஓங்கிய சுவையின்பேதம் உதவினுர் சிலரும் உண்டோ.

எல்லாம் உணர்ந்த பெரியோர்கள் இன்பம் அடைந்த போது மகிழ்ச்சியடையார்; துன்பம் அடைந்த போதும் நடுங்கித் தளர்ச்சி யடையார். இன்ப துன்பம் இந்தவுடம் பிற்கு மாறி மாறி வரும் இயல்புடையன என்று முன் புரிந்த வினையை ஆராய்ந்து அமைதி யுறுவர்.

இன்பம தடைந்த காலை இனிதென மகிழ்ச்சி எய்தார்
துன்பம துற்றபோதுந் துண்ணெனத் துளங்கிச் சோரார்
இன்பமுந் துன்பந்தானும் இவ்வுடற்கியைந்த வென்றே
முன்புறு தொடர்பை ஓர்வர் முழுவதும் உணர்ந்த நீரார்.

தரித்திரர் தனவந்தராவர்; தனவந்தர் தரித்திரர் ஆவர்; சிறியவர் பெரியவர் ஆவர். பெரியவர் சிறியவர் ஆவர். இவ்வாறு முறையே நிகழ்வது முன்வினையால் என உணர்க இது உலகத்து இயற்கை.

வறியவர் செல்வர் ஆவர் செல்வர்பின் வறியர் ஆவர்
சிறியவர் உயர்ந்தோர் ஆவர் உயர்ந்துளோர் சிறியர் ஆவர்

முறை முறை நிகழும் ஈது முன்னையூழ் வினையே கண்டாய்
எறிகதிர் வழங்கும் ஞாலத் தியற்கையும் இனைய தன்றோ.

செல்வமும், வறுமையும் துன்பமும், இன்பமும் உயிர்கட்கு நிலையாக என்றும் பொருந்தமாட்டா? மாறி மாறி வரும். இனிய கிரணத்தைப் பொழிகின்ற சந்திரன் வளர்வதும் தேய்வதும் மாறி மாறி நிகழ்கின்றன.

ஆக்கமும் வறுமைதானும் அல்லலும் மகிழ்வும் எல்லாம்
நீக்கமில் உயிர்கட்கென்றும் நிலையெனக் கொள்ளற்பாற்றோ?
மேக்குயர் கடவுள் திங்கள் வெண்ணிலாக் கதிரின் கற்றை
போக்கொடு வரவு நாளும் முறைமுறை பொருந்திற்றன்றே.

வருந்தாதே. விரைவில் சூரபன்மன் அழிவான்'' என்று ஆறுதல் கூறினர். மனம் தேறிய சயந்தன் மற்ற தேவர்களுக்கும் ஆறுதல் கூறினன்.

விண்ணுலகிலிருந்து மறைந்து போன இந்திரன் தன் தேவியான இந்திராணியுடன் தமிழகத்தில் உள்ள சீர்காழிப் பதியை யடைந்தான்.

தேவலோகத்தில் ஏகச்சக்கராதிபனுக வாழ்ந்த காலம் முடிந்த பின் தனது எளிமையை உணர்ந்தான். அமரர் நாயகன் என்ற விருது போன பின் ஆண்டவனின் அடிமையாக இருக்கும் விருப்பம் அவனுள் எழுந்தது. சோதனைக் காலங்களிலேயே சித்தத் தெளிவும், தெய்வ நினைவும் மிகும். இறைவன் சோதனை புரிவதன் நோக்கமே இதுதான். தேவராஜன் தெய்வபக்தி மிகப் பெற்றுன். ஆண்டவனருளின்றி உய்ய வழியில்லை யெனக் கண்டான்.

சிவபெருமானுக்குத் தொழும்பு செய்ய விரும்பிய தேவராஜன் சீர்காழியில் திருநந்தவனம் அமைத்தான். சந்தனம், அகில் முதலிய மரங்களால் வேலி ஊன்றிச் சிறு சண்பகம், கோங்கு, மல்லிகை, முல்லை, செவ்வந்தி முதலியவற்றைப் பயிர் செய்தான். அந்த நந்தவனத்தில் மலர்ந்த மணம் மிகுந்த மலர்களால் சிவபெருமானைப் பூசித்துவழிபாடு செய்து கொண்டிருந்தான்.

சூரபன்மனின் ஒற்றர்கள் அவ்விடத்தையும் நெருங்கி னதை அறிந்த இந்திரன் தன் மனைவியுடன் மூங்கில் வடிவாய் மறைந்திருந்து தவம் புரியலானான். சூரபன்மனின் ஒற்றர்கள் இந்திரனைக் காணாமல் திரும்பினார்கள்.

அவுணர்களின் கொடுங்கோன்மையால் மழை பொழிய வில்லை. அதனால் இந்திரன் வளர்த்த திரு நந்தவனம் வாடி யது. தேவராஜப் பதவியில் தான் சுகமாக இருக்க இயல வில்லை எனில் ஆண்டவனுக்குக் கிங்கரனாக இருந்து மலர் வழி பாடு செய்யவும் தடை வந்ததே என்று உளம் வருந்திய இந்திரன் எம்பெருமானை வணங்கித் துதித்தான்.

"தேவராஜன்! துயருறாதே! நீ வைத்த நந்தவனம் வாடிப் போயிருந்தாலும் அழிந்து விடாது. இந்தத் தலத்தில் திவ்விய தீர்த்தமொன்று வந்துபாய்ந்து அதனை வளப்படுத்தும்" என்று அசரீரி வாக்கு எழுந்தது.

"இதுவும் சிவபெருமானின் திருவருளே!" என்று இந்தி ரன் மகிழ்ந்தான்.

தமிழகத்தைத் தேடிப் பாய்ந்து, தாயாக அருள் புரியும் அந்தத் திவ்விய தீர்த்தத்தின் வரலாற்றை இனி பார்ப்போம்.

22. விந்தகிரிப் படலம்

பின்னர் நிகழப் போவதை யெல்லாம் சிவபெருமான் திருவருளால் முன்னரே அறியும் ஆற்றல் பெற்றவர் நாரத முனிவர். பின்னால் நடக்க வேண்டியதற்கு அநுகுணமான செயல்களை முன்னரே அவர் தொடங்கி வைப்பார். அவர் விந்தகிரியை அடைந்து அதற்கு ஆசி கூறினார். "விந்தகிரியே! மேரு மலை மிகவும் கர்வப்படுகிறது. 'நான் சிவபெருமானின் வில்லாக விளைந்தேன். உமாதேவியார் என்னிடமே வளர்ந் தார். எல்லா மலைகளுக்கும் நான் அரசனாகத் திகழ்கிறேன். சந்திரசூரியரும் மற்ற கிரகங்களும் என்னையே வலம் வரு கின்றன. நான் ஆயிரம் கொடுமுடிகளைக் கொண்டிருக் கிறேன். என்னுடைய ஒரு பாகத்தில் திருக்கயிலாய மலை இருக்கிறது. தேவர்கள் என்னிடம் குடிகொண்டிருக்கிறார் கள். நான் பொன்னாகத் திகழ்கிறேன். எனக்கு ஒப்பாக

வேறு மலை இல்லை' என்றெல்லாம் மேருமலை செருக்குற்றுள்ளது'' என்று கூறினர்.

நாரதர் கூறியதைக் கேட்ட விந்தகிரி ஏக்கப் பெருமூச்சு விட்டது. ''மேரு மலைக்கு எவ்வளவு அகங்காரம்? வீரபத்திரக் கடவுளாகிய சரபப்பறவை பேருருவம் கொண்டு நரசிங்கத்தின் முன் நின்ற பொழுது ஒரு பருக்கைபோல் அதன் காலடியில் கிடந்த இந்த மேருவுக்கு இவ்வளவு செருக்கா? நாரத முனிவரே! மேரு மலையின் செருக்கை யொடுக்கி என் பெருமையைக் காட்டுகிறேன்'' என்று கூறிய விந்தகிரி உடனே வளரத் தொடங்கியது. விரைவிலேயே சத்திய உலகம் வரை வளர்ந்து நின்றது. அதனல் சந்திர சூரியரின் கதி தடைப்பட்டது. தேவரும் முனிவரும் வருந்தினர். விந்தகிரியை அடக்கக் கூடியவர் யாரென யோசித்தனர். மகா சமுத்திரத்தை உள்ளங்கை நீராக எடுத்து ஆசமனம் செய்த அகத்திய முனிவரால்தான், விந்தகிரியின் தருக்கை அழிக்க முடியும் என்று ஆராய்ந்து தெளிந்தார்கள்.

அகத்தியர் பார்வைக்குச் சிறியவராக இருப்பார். இதன் தாத்பரியம் வெளித் தோற்றத்தில் சிறுமை காணுமிடத்தில் தான் உள்ளார்ந்த பெருமை உறையும் என்பதேயாகும்.

அண்டகடாகம் வரை வளர்ந்த விந்தகிரியின் செருக்கை அடக்குவதற்காகச் சந்திர சூரியரும் பிறரும் அகத்திய முனிவரை நினைத்தார்கள்.

மகத்துவ முடையா யோலம் மறையுணர் மணியே ஓலம்
மிகத்துயர் படைத்தேம் ஓலம் விமலனே ஓலம் விந்த
நகத்தினல் அலைந்தோம் ஓலம் ஞானநா யகனே ஓலம்
அகத்திய முனிவா ஓலம் அடிகளே ஓலம் ஓலம்!

''தவசிரேஷ்டரான அகத்தியப் பெருமானே! கிரகங்களின் ஆகாய வீழியை விந்தகிரி தடை செய்து நிற்பதால் உலகம் முழுவதும் இரவு பகல் பொழுதுகள் நிலைதடுமாறி விட்டன. அமிழ்தினும் இனிய தமிழ் கண்ட முனியே! இத்துன்பத்தை நீக்கியருள வேண்டும்'' என்று அவர்கள் வேண்டிக் கொண்டனர்.

23. அகத்தியப் படலம்

அகத்திய முனிவர் மேரு மலைச் சாரலில் தவம் செய்து கொண்டிருந்தார். சூரிய சந்திரர் தம்மை நினைந்து வேண்டியதை அறிந்த அவர், இமையவரின் துயர் போக்கக் கருதினார். மதுரத் தமிழ் சுரந்த தவமுனியின் இதயம் கருணை மயமாகத் தானே இருக்கும்?

அகத்தியர் தம் சக்தியைப் பற்றித் தருக்குறவில்லை. தமக்கு ஏதும் சக்தி இருப்பின் அது இறைவன் அருளியதே எனக் கருதி அம் மகா முனிவர் சிவபெருமானை மனத்தில் தியானித்தார்.

அந்தி வண்ணப் பெருமான் நந்தியுடன் வந்து அகத்திய முனிவருக்குக் காட்சியளித்தார். குறுமுனிவர் சிவபெருமானைப் பலமுறை வணங்கி வழிபட்டு. "விந்தகிரியின் செருக்கை அகற்றி உயிர்களுக்கு நலஞ் செய்யும் ஆற்றலை அருளவேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

"முனிபுங்கவா! நீ வேண்டிய ஆற்றலைத் தந்தருளினோம். விந்தகிரியை அடக்கி, அதன்பின் தென் திசையில் பொதிய மலையில் சென்றிரு" என்று சிவபெருமான் அருளிச் செய்தார்.

அகத்தியர் சிவபெருமானைத் தொழுது, "நான் எங்கு சென்றாலும் அபிஷேகப் பிரியரான தேவரீரைப் பூசிப்பதற்கு ஒரு தீர்த்தத்தைத் தந்தருள வேணும்" என வேண்டினார்.

சிவபெருமான் திருக்கயிலாய மலையிலிருந்த ஏழு நதிகளுள் புனிதமாகிய காவிரி நதியை அழைத்து அகத்தியருடன் போகுமாறு பணித்தார்.

காவிரி சிவபெருமானை வணங்கினாள். "சுவாமி! இவர் ஐம்பொறிகளையும் அடக்கிய அருந்தவராயினும் ஓர் ஆடவர். இவருக்குப் பின் நான் செல்லுதல் முறையாகுமோ?" என்று வினவினாள்.

"பெண்ணே! இம்முனிவன் தவ ஒழுக்கத்தில் ஒப்பற்றவன். மாறுபாடில்லா மனத்தினன். நம் அடியார்களில் சிறந்தவன். நீ இவன் பின் தயக்கமின்றிச் செல்வாயாக! இவன் என்றைக்கு உன் பொருட்டாகப் பார்த்து, 'போ' என்று கை-

காட்டுவானே அன்றே இவனை விட்டு நீங்கி உலகில் பரவுவாய்'' என்று சிவமூர்த்தி திருவாய்மலர்ந்தருளினர்.

அகத்திய முனிவரை நோக்கி, ''காவிரியை உன் கமண்டலத்தில் ஏற்பாய்'' என்று பணித்தருளினர் ஈசன். காவிரி நதியை அகத்தியர் கமண்டலத்தில் ஏற்றுக் கொண்டு தென் திசை நோக்கிப் புறப்பட்டார்.

24. கிரவுஞ்சப் படலம்

அவர் செல்லும்பொழுது தாரகாசுரனுடைய மாயமாபுரி சமீபித்தது. அங்கே உள்ள கிரௌஞ்சன் என்ற அசுரன் அகத்தியர் வருவதைக் கண்டான். மண்ணுலகை விண்ணுலகாகவும் விண்ணுலகை மண்ணுலகாகவும், மலையைக் கடலாகவும், கடலை மலையாகவும், சூரியனைச் சந்திரனுகவும், சந்திரனைச் சூரியனுகவும் தோற்றுவித்து மாயம் செய்யவல்ல அந்த அசுரன் அகத்தியர் வரும் வழியில் பல சிகரங்களைக் கொண்ட மலையாய் நின்முன். அந்த மலையினுள்ளே செல்வதற்கு ஒரு வழியும் இருந்தது. முனிவர் பெருமான் மலையின் நடுவே தெரிந்த வழியில் நடந்து சென்றூர். சிறிது தூரம் சென்றதும் அந்த வழி மறைந்து வேறு வழி தோன்றியது. அந்த வழியைப் பின் பற்றினர் அகத்தியர். சிறிது தூரம் சென்றதும் அந்த வழியும் மாயமாய் மறைந்தது. பின்னர், வேறொரு வழி தோன்றியது. அந்த வழியாக அகத்திய முனிவர் செல்லும் பொழுது அக்கினி நெருங்கிச் சூழ்ந்தது; சுழற்காற்று வீசியது; மழை பொழிந்து இடி இடித்து இருள் சூழ்ந்தது. இருள் படிந்ததும் கிரவுஞ்சன் பற்பல மாயங்களைச் செய்தான்.

'இது அசுரர்களின் வஞ்சனை' என்பதை முனிவர் ஞானத்தால் அறிந்து அனல்போல் சினந்து நகைத்தார். தமது கையிலிருந்த பிரம்ம தண்டத்தினல் மலையில் குத்தினர். மலை நொறுங்கிப் பல துவாரங்கள் ஏற்பட்டன. அகத்திய முனிவர் சினம் கொண்டு ''அறிவற்ற அசுரனே! நீ மலை வடிவாகவே இருந்து அவுணர்கட்கு இருப்பிடமாவாய்! உன்னால் சிவ நிந்தை புரிந்த அமரர்கட்குத் துன்பம் நேரட்டும். எனது

கைத் தண்டினால் குத்தி உன்மீது ஏற்படுத்திய துவாரங்கள் யாவும் மாயங்கட்கு உறைவிடமாகுக. நீ பின்னொரு காலத்தில் முருகனின் வேற்படையால் மாளக் கடவாய்'' என்று சபித்தார்.

தமது கமண்டலத்தில் உள்ள நீரை மந்திரத்துடன் தெளித்து, கிரௌஞ்சனின் மாயத்தைக் கெடுத்தார் அகத்தியர். பின் தென் திசை வழியில் சென்றார்.

25. விந்தம் பிலம்புகு படலம்

தேவகிரிச் சாரலை அடைந்தார் அகத்தியர். காசியிற் சென்று கண்ணுற்ற பெருமானை வணங்கித் துதித்துப் புறப்பட்டார். அதன்பின் தெற்கு நோக்கிச் செல்லும் வழியில் மிகவும் உயர்ந்து வளர்ந்து நின்ற விந்தமலையைக் கண்டார். ''விந்தமலையே! யாம் பொதியாசலம் செல்ல இவ்வழி வந்தோம்; வழி விடுக'' என்றார்.

''கதிரவனும் திங்களும் செல்ல முடியாதபடி ஆகாய வழியை மறைத்து நெடிய வடிவையுடைய திருமாலைப்போல் நிற்கும் நான் குறுகிய வடிவுடைய உமக்குப் பயந்து வழி விடுவேனோ? வந்த வழியே திரும்பிப்போம்'' என்று விந்தமலை கூறியது.

மேருவின் தருக்கை அறுப்பதற்காக உருப்பெருக்கி நின்ற விந்தமலை இப்போது தானே தருக்குற்று இப்படிப் பேசிற்று. ஆற்றல் உள்ள இடத்தில் அகம்பாவமும் தானே வந்து சேர்கிறது என்பதை உணர்த்தவே இச் சரிதங்களை முனிவர்கள் தந்திருக்கிறார்கள்.

விந்தமலை கூறியதைக் கேட்ட அகத்தியர் நகைத்தார். அவரும் எல்லையற்ற ஆற்றல் பெற்றவர்தான். ஆனால் அகம்பாவமின்றி, அது ஐயன் அளித்த பிரசாதமே என்றிருந்தார். இப்போதும் ஐயனையே எண்ணினார். தமது கரத்தை நீட்டினார். குறுகிய தோற்றமுடைய அவரது கரம் மேலும் மேலும் நீண்டு கொண்டே சென்றது. சத்திய லோகத்தைத் தடவுமளவுக்குக் குறுமுனியின் கரம் வளர்ந்தது. வளர்ந்து

வரும் தமது உள்ளங்கையை விந்த மலையின் தலையில் ஆசி கூறுவதுபோல் வைத்தார் முனிவர். அவ்வளவே! பெருமை பேசிய பெருமலை பாதாளத்துக்குள் புதைந்துவிட்டது. இந்த அற்புதத்தைக் கண்டு விண்ணவர் வியப்பெய்தினர். தமது காற் பெருவிரலால் கைலாயத்தை இலங்கேசன் மீது அழுத்திய சிவபெருமானின் திருவருள் பெற்றவர் எந்த அற்புதத்தைத் தான் செய்ய முடியாது? பாதலத்தில் அழுந்திய விந்தமலை ஆதிசேடனின் வாசஸ்தலத்தை அடைந்தது. அப்போதுதான் அதற்கு அறிவும் தெளிந்தது.

"தபோதனரே! அறியாது செய்த என் குற்றத்தை மன்னிக்க வேண்டும். நான் திரும்பவும் உயர எழுங்காலம் எப்போது?" என்று அகத்தியரிடம் விந்தமலை வேண்டியது. "யான் தென் திசை சென்று மீளவும் இவ்வழியே திரும்பும் போது மேலெழுவாய்" என்றார்.

அகத்திய முனிவர் தமது தென் திசைப் பயணத்தை மறுபடியும் தொடர்ந்தார்.

26. வில்வலன் வாதாவிப் படலம்

தட்சிண திசை நோக்கிச் சென்று கொண்டிருந்த அகத்திய முனிவர் வில்வலனும் வாதாவியும் வாழ்ந்து வந்த கானகத்தை நெருங்கினார்.

முனிவர் வருவதையறிந்த அவ்விரு அரக்கர்களின் இதயத்தில் ஆத்திரத் தீ மூண்டது; நாவிலோ உமிழ் நீர் சுரந்தது. அமுத மறைகளை உள்ளடக்கிய அருந்தவர்களைப் பட்சித்து ருசி கண்ட நாவல்லவா?

"இதோ வருகிற இந்த அகத்திய முனிவன் கிரௌஞ்சனாகிய அவுணனைக் கடிந்தவன்; எனவே நமது பரம விரோதி. இவனுக்கு நமது வழக்கம்போல் உணவு படைத்துக்கொன்று விட வேண்டும்" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். உடனே, வாதாவி ஆட்டுக்கடா வடிவம் கொண்டு புல் மேயத் தொடங்கினான். வில்வலன் சடையும், திருநீறும், உருத்திராக்கமும், மரவுரியும் தரித்து முனிவர்போல் வடிவம் கொண்டு அகத்தியர் முன் சென்று முறைப்படி வண

னன். "எம்பெருமானே! இன்றே எளியவன் அரும்பேறு பெற்றேன். தங்களைக் காண இன்றைக்குத்தான் எனக்குக் கொடுத்து வைத்தது. இது எனது ஆசிரமம். அடியேன் தரும் புற்கையை அமுது செய்து ஆண்டருள வேண்டும்" என்று வேண்டினன்.

வில்வலனுடைய அன்பு கலந்த வஞ்சனை மொழியைக் கேட்ட அகத்தியர் உள்ளத்தில் கருணை மிகுந்தது; அவனுடைய வேண்டுகோளுக்கு இசைந்தார். முனிவர் முக்காலமும் உணருவார் என்பது உண்மையே. எனினும் அந்தச் சக்தியை எப்போதும் பயன்படுத்த வேண்டும் என்ற அவசிய மில்லை. வில்வலனிடம் அவர் அவநம்பிக்கை கொள்ள இடமே யில்லாததால் தமது ஞான திருஷ்டியைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

முனிவர் உண்ண இணங்கியதில் வில்வலன் மகிழ்ந்தான். தடாகத்தில் நீராடி மடைப்பள்ளியை அடைந்து சுத்தி செய்தான். மிகவும் தூய்மையாகவும், சுவையாகவும் அன்னங்களையும் கறியமுதுகளையும் சமைத்தான். ஆட்டுக்கடாவாய் நின்ற வாதாவியை இழுத்து வந்து கொடுவாளினல் அறுத்துக் கறி சமைத்தான். பின்னர், பழங்களையும் தேன், நெய், பால் இவற்றையும் பூசைக்குரிய மற்ற திரவியங்களையும் சேகரித்து வைத்து அகத்திய முனிவரை அடைந்தான். அவரை வணங்கினன்.

"எம்பெருமானே! காலந் தாழ்த்ததற்கு மன்னிக்க வேண்டும். உணவுக்கு எழுந்தருள்க" என்று வேண்டினன். அகத்தியர் உணவு கொள்வதற்குச் சென்ருர். அவரை வில்வலன் ஆசனத்தில் எழுந்தருளச் செய்து இலையிட்டு ஆட்டுக் கறியையும் பிற உணவுகளையும் படைத்தான். வஞ்சனையை உணராத அகத்திய முனிவர் சிவத்தைப் பேணித் திருவமுது செய்தார்; உண்டு முடிந்தபின் ஆசிரமத்தின் மற்ருரிடத்தில் சிவ சிந்தையுடன் சிரம பரிகாரம் செய்து கொண்டிருந்தார்.

பிரமதேவர் தமக்குத் தந்த வரத்தை நினைத்த வில்வலன் அகத்திய முனிவரைக் கொல்லக் கருதி. "வாதாவி!

விரைந்து வருவாய்!'' என்று அழைத்தான். உடனே வாதாவி அகத்தியமுனிவரின் வயிற்றினுள்ளே ஆட்டுக்கடாவாய் எழுந்து நின்று, ''அண்ணு! இம் முனிவனின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வருவேன்'' என்று ஆர்த்தான்.

அசுரர் செய்த மாயத்தை மாமுனிவர் உணராது போவாரா? மாயத்தை மாயத்தாலே மாய்க்க நினைத்தார். எளிதில் பெரிய காரியங்களைச் சாதித்து முடித்த சாதுவல்லவா அவர்? வெகு சுலபமாக வயிற்றைத் தடவி, ''வாதாபி, ஜீர்ணோபவ''—''வாதவி! சீரணமாவாய்'' என்ருர். அவ்வளவே! வாதாவி அகத்திய முனிவரின் வயிற்றுக்குள் வெந்து குழைந்து சீரணமாகிவிட்டான்.

தம்பி வாதாவி வெளிவரமாட்டாது முனிவரின் உதரத்திலேயே தங்கி இறந்ததைக் கண்ட வில்வலன் வெகுண்டு அசுர வடிவங்கொண்டான். ஒரு தண்டாயுதத்தை ஏந்தி அகத்திய முனிவரைக் கொல்ல வந்தான். அகத்தியர் தமது கரத்திலிருந்த ஒரு தருப்பையைச் சிவப்படைக்கலமாக்கி விடுத்தார். அதனுல் வில்வலனும் மாண்டான். பூதேவியை இரு கொடியோரின் கொடுமையிலிருந்து நீக்கி அருள்புரிந்து விட்டார் அகத்தியப் பெருமான்.

27. காவிரி நீங்கு படலம்

அதன்பின் முனிவர் மீண்டும் தமது வழியில் புறப்பட்டார். கொங்கு நாட்டை நோக்கிச் சென்ருர். அவ்வாறு செல்லும்போது, இறந்த வில்வலனும் வாதாவியும் கரிய உடம்பும், சுழலும் கண்களும் உடையவராய் முனிவரை அணுகி அகன்றும் சூழ்ந்தும் ஆரவாரித்தார்கள். அதனைக் கண்ட முனிவர், 'நாம் கொன்ற வில்வலனும் வாதாவியும் துருவாச முனிவரின் புத்திரர்களாதலால் அவர்களைக் கொன்ற பாவம் பிரமஹத்தியாய் நம்மை இவ்வுருவங்களில் தொடர்ந்து வருகிறது. இப்பாவம் நீங்கும்பொருட்டு இங்கு சிவபெருமானை வழிபாடு செய்வோம்' என்று கருதி அங்கே ஒருபுறத்தில் சிவலிங்கம் அமைத்துப் பல நாட்கள் மெய்யன்போடு வழிபாடு செய்து கொண்டிருந்தார். அகத்தியரைத் தொடர்ந்த பிரமஹத்தித் தோஷம் நீங்கியது.

அகத்தியரின் செயல்களை உணர்ந்தார் நாரதப் பிரம்மம். வருங்காலத்துக்கு எப்படி வழி வகுப்பது என்பதைத் தெளிந்தார். சூரபன்மனுக்குப் பயந்து மூங்கில் வடிவாய்ச் சீர்காழியில் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து கொண்டிருக்கும் இந்திரனிடம் சென்றூர். நாரதரைக் கண்ட இந்திரன் பணிந்து வணங்கினான்.

நாரதர் அவனை வாழ்த்தி, "சுகமாய் இருக்கின்றயா?" என்று ஏதுமறியாதவர்போல் வினவினர். இந்திரன் தொழுத கையினனாய், "சுவாமி! அடியேன் இதுவரை சுகமாய்த்தான் இருந்தேன். இப்பொழுதுதான் அடியேன் செய்யும் சிவ பூசைக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. நான் சிவபூசைக்கு என்று பயிரிட்ட நந்தவனம் நீரின்றி வாடுகின்றது; எளியோனாகிய எம்பெருமானை எளிமையாகப் பூசிப்பதற்குக் கூடக் கொடுத்து வைக்கவில்லையே என்ற குறையால் நான் தேவ ராஜ பதவி போனதைவிட அதிகமாக வருந்துகிறேன்" என்று கூறினான்.

"தேவராஜனே! சிவபூசைக்கு வந்த இடையூறு இறைவனருளால் இனிதே நீங்கும். சிவானுக்கிரகத்தால் பழைய படியே உனக்குப் பொன்னுலக அரசாட்சியும் வரப்போகிறது. அகத்திய முனிவர் கொங்கு நாட்டில் சிவபூசை செய்து கொண்டிருக்கிறார். அவருடைய கமண்டலத்திலுள்ள காவிரியாற்றை இங்கே வருமாறு செய்தால் உன் மனக்குறை தீர்ந்து மகாதேவனை அபிஷேகிக்க நீர் கிடைக்கும்" என்று நாரதர் கூறினர்.

"சுவாமி! அகத்திய முனிவரின் கமண்டலத்திலுள்ள காவிரியாற்றை இங்கே வரச்செய்வது எப்படி?" என்று நாரதரிடம் இந்திரன் ஆர்வமாகக் கேட்டான்.

"அகத்திய முனிவரின் கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டால் காவிரி தன்னால் வந்துவிடும்" என்றார் நாரதர்.

"கமண்டலத்தைக் கவிழ்ப்பது எளிய காரியம்தான். ஆனல் கமண்டலத்துக்குரியவர் மகா தபஸ்வியாகிய அகத்திய முனிவரல்லவா? அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்க்க

வல்லவர் யாவர்? அக்கினி மலையை அணுகும் கொசுவும் உளதோ?'' என்று இந்திரன் கேட்டான்.

''இந்திரா! உனக்கு ஏன் இந்த ஐயம்? வினையைத் தீர்க்கத்தான் விக்நேசுவரப் பெருமான் இருக்கிறாரே! விநாயகக் கடவுளை மெய்யன்போடு வழிபாடு செய். அல்லல் களைந்து அருள் வழி காட்டும் ஆனைமுகன், காவிரி இங்கு பரவக் கருணை புரிவார்'' என்று நாரதர் நவின்றார்.

வந்திப்பாரது வினைகளை யெல்லாம் தீர்க்கவல்ல விநாயகப் பெருமானை, ஐந்துகரத்து ஆனைமுகப் பெருமானை அருச்சனை புரிந்து துதித்து வழிபட்டான் இந்திரன்.

சொற்பதம் கடந்த தூய மெய்ஞான அற்புதம் நின்ற கற்பகக் களிறாகப் பல கோடி கணங்கள் சூழ விநாயகக் கடவுள் இந்திரனுக்குக் காட்சியளித்தார். அவரை இந்திரன் பன்முறை பணிந்து துதித்தான்.

''என்ன வரம் வேண்டும்?'' என்று மனம் குளிர்ந்து கேட்டார் வேண்டிய வேண்டியாங்கு வழங்கும் விநாயகப் பெருமான்.

ஈசனைத் திருமுழுக்காட்டத் தீர்த்தமில்லாத குறையைத் தேவராஜன் தெரிவித்தான்.

இது இந்திரனுக்கு வரமளிப்பதோடு, தந்தைக்குச் செய்யும் தொண்டுமாயிற்றே என விக்நேசுவரர் மகிழ்ச்சியுற்றார். ''இந்திரனே! தீர்த்தம்தானே வேண்டும்? கங்கை நதியை இங்கே அழைத்து வரட்டுமா? அல்லது கடல்களை யெல்லாம் கொண்டு வர வேண்டுமா?'' என்று கேட்டார் தயாநிதி.

''சுவாமி! அவையெல்லாம் வேண்டாம். அகத்திய முனிவர் கொங்கு நாட்டில் சிவபூஜை செய்துகொண்டிருக்கிறார். அவருடைய கமண்டலத்திலுள்ள காவிரியைத் தேவரீர் இங்கு வருமாறு செய்தால் நந்தவனம் செழிக்கும்'' என்று இந்திரன் வேண்டிக் கொண்டான்.

"அவ்வண்ணமே செய்வோம். கவலைப்படாதே;" என்று விநாயகக் கடவுள் அருள் புரிந்துவிட்டு விரைந்து கொங்கு நாடு சென்றார். அடியார் குறையை விரைந்து தீர்க்கும் வள்ளலன்றோ விநாயகர்?"

கொங்கு நாடு சென்ற விநாயகப் பெருமான் தமது துப்பார் பெருந் திருமேனியில் பவள ஒளியையும், பரந்து விரிந்த பெருமையையும் அருட்பாங்கால் மாற்றிக் கொண்டு காக வடிவம் எடுத்தார்; அகத்திய முனிவரின் கமண்டலத்தின்மீது அமர்ந்தார். அகத்திய முனிவர் கையை உயர்த்தி அதனை ஓட்டினார். காக வடிவமாயிருந்த கணபதி உடனே கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டுச் சிறகடித்துக் கிளம்பினார். கமண்டலத்தினின்று பெருகிய காவிரியாற்றை நோக்கி, "நீ பூமியிற் செல்லக் கடவாய்" என்று பணித்தருளினார்.

தேவி காவிரி தனது யாத்திரையைத் தொடங்கினாள். விண்ணுலகமும் மண்ணுலகமும் நடுங்கும்படி ஆரவாரித்துக் காவிரி நதி விரைந்து பூமியில் பாய்ந்தது.

கமண்டலம் கவிழ்ந்ததைக் கண்ட அகத்தியர் சீறிக் காக்கையைப் பார்த்தார். சீற்றத்தில் ஞானதிருஷ்டியும் மறைந்தது. விநாயகர் காக வடிவம் நீக்கி அந்தண பிரமசாரி வடிவம் கொண்டு தேஜோமயமாக நின்றார்—இப்போதேனும் முனிவர் தம்மைப் புரிந்து கொள்வாரா என்று பரீட்சிப்பதே போல.

அகத்திய முனிவரின் சினம் அந்தணச் சிறுவனின் அழகில் லயிக்குமா? தேவ தேவனை அபிஷேகிப்பதற்காகத் தேவ தேவனிடமிருந்தே அவர் பெற்றுவந்த தீர்த்தம் போய்விட்டதெனில் மனம் தாளுமா? புரம் எரித்த புரிசடைக் கடவுள் போலவே வெகுண்டார் அகத்தியர். "கமண்டலத்தைக் கவிழ்த்த இவன் தேவனோ? அவுணனோ? வேறு எவனோ? அகந்தை கொண்ட இவன் வலியை விரைந்து அழிப்பேன்" என்று கருதி அந்தணச் சிறுவனைப் பின் தொடர்ந்து ஓடினார். முனிவர் ஓட முடியாமல் ஓடித் துரத்திக்கொண்டுவருவதைக் கண்ட விஷமக்கார விநாயகர் பயந்து ஓடுவதுபோல் தாமும்

விரைந்து ஓடினார். அருந்தவ முனிவர் அந்தணர் சிறுவனது சென்னியிற் குட்டுவதற்குத் தம் இரு கரங்களையும் குவித்துக் குவித்துத் துரத்தினார். அந்தணச் சிறுவனைப் பிடிக்க முயன்ற அகத்தியர் தமது முயற்சி வெற்றி பெறாமல் மிகவும் தளர்ந்தார்; "இவன் பெரும் மாயனாக இருக்கிறானே; என் செய்வது?" என்று வருந்தினார்.

ஒற்றை மருப்புடைய வெற்றிக் கணபதி திருவுளம் இரங்கினார். வேதியக் கிழவனாரை இனியும் வேதனைப்படுத்தலாகாது எனக் கசிவு கொண்டார். ஞான ஸ்வருபமாய் விளங்கும் தமது மலையனைய திருமேனியை அகத்தியருக்குக் காட்டித் தரிசனம் அருளினார்.

அகத்தியர் பரவசப் புல்லரிப்பு கொண்டார். அடுத்த கணமே தாம் செய்த அபசாரத்துக்காக நடு நடுங்கினார். "ஆ! நான் கெட்டேன். ஐந்து கரத்து எந்தையா இங்கு என்னிடம் வந்து எழுந்தருளினார்? அறியாமையினால் நான் அடித்துத் துரத்திவிட்டேனே!" என்று கலங்கி ஏங்கினார். விநாயகப் பெருமானைக் குட்ட ஓங்கிய கரங்களால் தமது சென்னியில் இடி விழுந்தாற்போலக் குட்டிக் கொண்டார்.

கருணையே உருவான கணபதி அவரது கரங்களைப் பற்றி நிறுத்தி, "அஞ்சாதே!" என்று அபய வாக்கு அளித்தார். "தேவேந்திரன் சிவபூஜைக்கு என்று நிலவுலகில் வைத்த நந்தவனம் நீரின்றிக் கரிந்து போய்விட்டது. அதனால் நீர் பெற விரும்பி நம்மைத் துதித்து வழிபட்டனன். அவன் வேண்டுகோளுக்கு இணங்கி நாம் காக வடிவாய் வந்து உன் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரி நதியை நிலவுலகத்தில் பாயும்படி கட்டளையிட்டோம். தவத்திற் சிறந்த நீ நம் தந்தையாகிய சிவபெருமானிடத்து ஆராத அன்பு கொண்டவன்; ஆதலால் நமக்கும் நீ அன்பன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ, கேள்" என்றார் விநாயகர்.

"ஞானமே உருவான யானை முகத் தெய்வமே! அடியேன் தேவரீரிடத்திலும் சிவபெருமானிடத்திலும் குன்றாத அன்புடையவனாய் என்றும் இருக்க வரம் தரவேண்டும். இப்பொழுது அடியேன் செய்தது போல் தேவரீரது சந்நிதியில்

சிரசில் குட்டிக் கொண்டு வழிபடுவோருக்கு அறிவு பெருக வேண்டும்; அவர்களது குறையை நீக்கி நல்லருள் பாலிக்க வேண்டும்" என்று அகத்திய முனிவர் வேண்டிக்கொண்டார். ஐங்கரத்தண்ணல் அவ்வண்ணமே அருள் புரிந்தார்.

28. திருக்குற்ருலப் படலம்

அகத்திய முனிவர் கொங்கு நாட்டை விட்டகன்று தென்திசை நோக்கிச் சென்றனர். வழியில் குற்ருலம் என்ற வளநகரை யடைந்தார். அவ்விடமிருந்த திருமுற்றம் என்ற திருமால் கோயிலையடைந்து வழிபட எண்ணினர். அவ்விடமிருந்த வைணவர்கள் இவர் சிவனடியாராக இருத்தல் கண்டு தடை செய்தனர். அகத்தியர் பின்னர் வைணவவேடம் பூண்டு அந்த ஆலயத்தையடைந்து பூஜை செய்யத் தொடங்கி, திருமாலின் திருமேனிமீது தன் கையை வைத்துக் 'குறுகு குறுகு குற்ருலவா' என்று கூறி சிவலிங்கத் திருமேனியாகச் செய்தார். அவரை முறைப்படி வழிபாடு செய்துவிட்டு மேலும் தென்திசை சென்றனர்; அருவிகள் இழிகின்ற பொதிய மலையை அடைந்து அவ்விடமே தங்கித் தவம்புரிந்து கொண்டிருந்தார்.

29. இந்திரன் அருச்சனைப் படலம்

ஐந்துகரப் பெருமான் காக வடிவிற் சென்று அகத்திய முனிவருடைய கமண்டலத்தைக் கவிழ்த்ததால் அக் கமண்டலத்தினின்றும் புறப்பட்ட காவிரி நதி, பல காத வழி கடந்து சந்தன மரம் முதலிய விருட்சங்களையும், யானைத் தந்தம், பொன், முத்து முதலிய உயர் பொருட்களையும் வாரிக்கொண்டு கிழ்த் திசை நோக்கிச் சென்றது. புண்ணியம் மிக்க தமிழ் நிலத்துக்கு மேலும் புண்ணிய வளமூட்டியது. தமிழ் மக்களின் வயிற்றுக்கு உணவு படைக்கும் மரகத வயல்கள் காவிரியின் அருளில் தோன்றுவதோடு, உள்ளத்துக்கு உணவு படைக்கும் தெய்வத் திருக்கோயில்களும் இனி இந்தக் காவிரியின் இரு கரைகளிலும் எழும்பி மகோன்னதமாக நிற்கப்போகின்றன. காவிரியின்றேல் தமிழகத்துக்குப் பொருளாதாரமும் இல்லை; அருளாதாரமும் இல்லையன்றோ?

இந்திரன் தவம் செய்து கொண்டிருந்த சீர்காழிப் பதியைக் காவிரியடைந்தது. காவிரியைக் கண்ட இந்திரன் துன்புற்று வெந்த தன் உள்ளத்தில் அமுதப் பெருக்காகிய காவிரி பாய்வதேபோல் கவலை நீங்கினான். ஈசனுக்காக அவன் வளர்த்த நந்தவனத்தில் தேவி காவிரி பாய்ந்து காய்ந்த செடிகளுக்குப் புத்துயிர் ஊட்டினாள். திவ்விய மலர்கள் மீண்டும் புஷ்பித்தன. அமரேசன் காலந்தோறும் மலர் கொய்து பரமேசனுக்கு வழிபாடு செய்து கொண்டிருந்தான்.

30. தேவர் புலம்புறு படலம்

இதேபோதில் சூரபன்மனின் கொடுமையால் வருந்திய தேவர்களும் சீர்காழிப் பதிக்கு வந்து சேர்ந்தனர். இந்திரனின் அடிகளில் வீழ்ந்து வணங்கி, "எங்கள் அரசே! அறநெறி சிறிதும் இல்லாத அசுரர்கள் வசத்தில் எங்களை விட்டு விட்டு இப்படித் தேவியாரோடு மட்டும் இங்கு வந்து விட்டீர்களே, இது தகுமா? எங்களைக் காக்க வல்லவர் தாங்களே அல்லவா? மன்னவனாகிய தங்கள் கடமையன்றோ மக்களாகிய எங்களைப் பரிபாலிப்பது? புரந்தரனே! எமைப் புரந்திடாமல் இப்படி வெளியேகலாமா? தாரகன் என்னும் மத்தகஜம், சிங்கமுகன் என்னும் கொடிய சிங்கம், சூரன் என்னும் வெம்புலி—இவற்றிடம் தேவர்களாகிய பசுக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டுத் தாங்கள் மறைந்து வந்திருப்பது நன்றோ? நாங்கள் சூரபன்மனுக்கு ஊனும் மீனும் சுமந்து, மானங்கெட்டு ஞானம் கெட்டு உழல்கிறோம். வேதங்களை மறந்தோம், சீலமும் சிவ பூஜையும் எங்களை விட்டு நீங்கி விட்டன. அமரபோகம் நீங்கியதற்காக வருந்தாவிடினும் ஆன்மபோதத்தை இழந்த துயரத்தைத்தாள முடியவில்லை. இனியும் எங்களால் துன்பப்பட முடியாது. எங்கள் இடர் நீங்க ஓர் உபாயம் தாங்கள்தான் காண வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

இந்திரன் கலங்கினான். நீண்ட நேரம் யோசித்தான். அயர்ந்து பெரு மூச்சு விட்டான்.

"என் அருமைத் தேவர்காள்! சூரபன்மன் அளப்பரும் தவம்செய்திருக்கிறான். அவனால்தான் நமது வாழ்வும் வலிவும்

நீங்கின. என்றால் எதிர்க்க வொண்ணாத அந்தப் பாவி தீய எண்ணங் கொண்டு அயிராணியைக் கைப்பற்றவும் என்னைச் சிறையிலிடவும் கருதிப் பல அசுரர்களை ஏவினான். அவனுடன் போரிட முடியாது என்று கண்டபின் நான் இந்திராணியுடன் இங்கு மறைந்து வந்தேன். என்றால் வேறொன்றும் செய்வதற்கு இல்லாததால் நீங்களும் அறியாமல் இங்கு வந்து சேர்ந்தேன். நமக்கு நலம் உண்டாக வேண்டுமானால் ஈசுவரன் அனுக்கிரகத்தாலேயே அது கிட்டவேண்டும். இதன் பொருட்டு சிவத்தைப் பேணித் தவத்தைச் செய்து கொண்டிருக்கிறேன். இனி நாம் எல்லோரும் திருக்கயிலாய மலைக்குச் சென்று சிவபெருமானைத் தரிசித்து நம் குறைகளை முறையிடுவோம், வாருங்கள்'' என்றான்.

தேவர்கள் மழை கண்ட பயிர் போல் மகிழ்ந்தனர். "அரசே! இப்போதே நாம் கைலாயநாதனைக் கண்டு குறையிரந்து வருவோம்'' என்று ஆர்வத்துடன் கூறினார்கள். இந்திரன் தேவர்களைச் சிறிது நேரம் அங்கேயே இருக்கச் சொல்லி, இந்திராணி இருக்கும் இடத்துக்குச் சென்றான்.

31. அயிராணி சோகப் படலம்

"பெண்ணரசியே! தேவர்கள் இங்கு என்னிடம் வந்து தங்கள் குறைகளைக் கூறி முறையிட்டுக் கொண்டார்கள். நம் துன்ப நீக்கத்தின் பொருட்டு நான் தேவர்களுடன் கயிலை மலைக்குச் செல்கிறேன். விடை தருக'' என்று இந்திரன் கூறினான்.

இந்திரன் கூறியதைக் கேட்ட இந்திராணி பாணம் ஏறுண்ட மயில் போல் மயங்கினாள். அவளை இந்திரன் அன்போடு எடுத்து மயக்கம் தெளிவித்தான்.

"ஐயனே! நான் பொன்னுலகப் பெருவாழ்வை விட்டு மண்ணுலகம் வந்தும் தங்களுடன் இருப்பதால்தான் மகிழ்ச்சி குன்றாமல் இருக்கிறேன். தாங்கள் இங்கிருந்து என்னைப் பிரிந்து சென்றால் என்னால் உயிர் வாழமுடியுமா? சக்கரவாகப் பட்சிக்குச் சந்திரனும், வானம்பாடிக்கு மேகமும் துணையாயிருப்பது போல் எனக்குத் தாங்கள்தானே துணை? பிரிவாற்

றுமை தாங்காது தவிப்பேன் என்பதோடு, தாங்கள் இல்லாத போது கொடிய அவுணர்கள் வந்து துன்புறுத்தவும் நேருமே! நம் புதல்வன் சயந்தனும் இங்கு இல்லை; ஐராவதமும் இல்லை; வேறு பணிப் பெண்களும் இல்லை. பழிக்கு அஞ்சாதவரும் பாவங்களுக்கு உறைவிடமானேருமாகிய அவுணர்கள் என்னை அபகரிப்பார்கள். என்னை விட்டுச் செல்லாதீர்கள். நானும் உங்களுடன் வருகிறேன்'' என்று இந்திராணி நடுங்கிக் கொண்டே கூறினாள்.

அபிராணி கூறியவற்றைக் கேட்ட இந்திரன் சிறிது நேரம் யோசித்தான். பின்னர், ''அன்புக்குரியவளே! வருந்தாதே. உனக்குத் துணையில்லை என்று கலங்க வேண்டாம். சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் புதல்வராக உதித்த ஐயனர் நமக்கு ஒப்பற்ற காவலாக இருக்கிறார். அவரைத் தியானித்தால் இங்கு எழுந்தருளுவார். அவரிடம் உன்னை அடைக்கலமாகக் கொடுத்து நான் செல்கிறேன். அவர் உன்னைக் காத்தருள்வார். அஞ்ச வேண்டாம்'' என்று கூறினான்.

''சுவாமி! திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் மகவு உதித்ததா? எப்போது? ஐயனருடைய வரலாறு யாது? அடியேனுக்குச் சொல்லுங்கள்'' என்று தேவராணி ஆர்வத்துடன் வினவினள். ஐயனரின் வரலாற்றைக் கூறத் தொடங்கினன் இந்திரன்.

32. மகா சாத்தாப் படலம்

''முன்பு திருமாலை முன்னிட்டுக் கொண்டு தேவர்கள் அமிர்தம் விரும்பிப் பாற் கடலைக் கடைந்த கதை நீ அறிவாயல்லவா? அப்போது ஆலகால விடம் எழுந்ததும், அதனைக் கண்டு தேவர்கள் அனைவரும் அஞ்சி நடுநடுங்கி ஓடியதும் உனக்குத் தெரிந்தவைதாமே? நாங்கள் திருக்கயிலாய மலை சென்று சிவபெருமானைத் தஞ்சம் அடைந்து முறையிட்டுக் கொள்ள, கருணையே உருவான கண்ணுதற் கடவுள் பாற் கடலினின்று எழுந்த ஆலகால விடத்தைத் தாமே உண்டு கண்டத்தில் அடக்கிக் கொண்டு தேவர்களுக்குத் திருவருள் பாலித்த அருட் சரிதையும் நீ அறிவாய். பின்னர் தேவர்கள்

தொடர்ந்து பாற்கடலைக் கடைய அமுதப் பொற்குடம் அத னின்று எழும்பியது. அமிர்தம் உண்ணுவதில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் மூண்டது. திருமால் மூவுலகமும் விரும்பத் தக்க வண்ணம் மோகினி வடிவம் எடுத்தார். அம் மோகினி வடிவைக் கண்ட அசுரர்கள் அவளது அழகில் மயங்கி, காமப் பித்துக்கொண்டு அமிர்தத்தைமறந்தார்கள். தேவர்களும் மோகினியின் மீது மையல் கொண்டார்கள். ஆம்! பெண்ணாசை யாரைத்தான் விட்டது ?

'எண்ணு அவுணர் தொகையல்லதை எந்தை மாயம்
உண்ணுடு வானோர் களும்பெண்மயல் உற்று நின்றார்;
மண்ணசை தன்னில் பொருளாசையின் மாய வாழ்க்கைப்
பெண்ணசை நீங்கல் எளிதோ பெரியோர் தமக்கும் !'

தேவர்களும் அசுரர்களும் காமத்தால் மயங்கி நின்ற போது, மோகினி வடிவம் கொண்ட திருமால் அவர்களை நோக்கி, "உங்கள் சண்டையை விடுங்கள். இங்கு நான் இருக்கிறேன்; அமிர்தமும் இருக்கிறது. இவ்விரண்டில் நீங் கள் எதையாவது ஒன்றை விரும்பி எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறினர். பெண் மோகம் யாருக்குமே இயல்பு. எனி னும் விவேகமுடன் முடிவெடுக்க ஒரு வாய்ப்பு உண்டானல் அறிவுடையோர் பெண்ணசையைத் தள்ளிவிடுவார்கள். அமரர்கள் இவ்வாறே மோகினி ஆசையை மறந்து அமிர் தத்தை வேண்டினர். எக்காலும் திருந்தாத அசுரர்களோ பெண் பித்துப் பிடித்து, "மோகினியே வேண்டும்" என்றார் கள். மோகினி அசுரர்களைப் பார்த்து, "உங்களில் வீரன் யார்?" என்று வினவினள். அசுரர்கள் ஒவ்வொருவரும் "நானே வீரன், நானே வீரன்" என்று போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தார்கள். இதனல் அசுரர்களுக்குள்ளேயே சண்டை மூண்டது. அச்சண்டையில் ஒருவரை ஒருவர் தாக் கிக் கொண்டு அழிந்து போனர்கள்.

"திருமாலின் மோகினி வடிவ மாயத்தை அறிந்த அசுரர் களில் இருவர் மட்டும் சண்டையில் இறங்காமல் தேவ வடி வங் கொண்டு அமரர்களுடன் கலந்து நின்றார்கள். திருமால் மோகினி வடிவம் நீங்கித் தேவர்களிடம் சென்று அமிர்தத் தைப் பகிர்ந்தளித்தார். அமரர் வடிவிலிருந்த அசுரர் இரு

வரும், அமிர்தத்தைத் தேவர்களுக்கு முன்னதாக உட்கொண்டனர். அதனைக் கண்ட சூரிய சந்திரர் இவர்கள் அமரர்கள் அல்லர்' என்று திருமாலுக்கு உணர்த்தினர்கள். திருமால் தன் கையிலிருந்த அகப்பையினால் அவர்கள் தலையில் அடித்தார். அதனால் அவர்களின் தலை துண்டாகியது. அமிர்தம் கண்டத்தை அடையும்போது தலை முண்டத்திலிருந்து துண்டானதால் அவர்களின் உடல்கள் அழிந்தபோதிலும் தலைகள் அழியாமலிருந்தன. "நீங்கள் அமிர்தம் உண்டதால் விண்ணுலகில் இருக்கத்தகுந்தவர்கள்; நீங்கள் இருவரும் கிரகங்களாகுக" என்று திருமால் பணித்தார். அதன்படி அந்த அசுரர்கள் இருவரும் இராகு, கேது என்னும் கிருகங்களாயினர். தேவி! இக்கதை யாவும் நீ முன்பே அறிந்திருக்கக் கூடியதுதான். இனி நீ அறியாத கதையைச் சொல்கிறேன்.

தேவர்களுக்கு அமிர்தம் பகிர்ந்தளித்த பின் திருமால் தாம் முன்பு கொண்ட மோகினி வடிவுடன் பாற்கடலின் கரையில் இருந்தார். சிவபெருமானுக்கு நால்வகைச் சக்திகள். பராசக்தி மாயா காரிய சம்பந்தத்தால் நான்கு வகையாகித் திருவருள் புரிகிறாள். உலகை உற்பத்தி செய்யும் ஜகன்மாதாவாக இருக்கும்போது சிவபெருமானுக்குத் தேவியான பார்வதியாகவும், அன்பு கொண்டு உலகை ரட்சிக்கும் போது திருமாலாகவும், கோபங் கொண்டு உலகைப் பட்சிக்கும்போது காளியாகவும், நன்மையை நிலைநாட்டுவதற்காகச் சமர் புரியும்போது துர்க்கையாகவும் விளங்குவாள்.

ஏகைவ சக்தி: பரமேச்வரஸ்ய
ப்ரயோஜநார்த்தாய சதுர்விதாபூத்
போகே பவாநீ புருஷேஷு விஷ்ணு
க்ரோதே ச காளீ ஸமரே ச துர்கா

தம் சக்திகள் நால்வரில் திருமாலும் ஒரு சக்தியாயிருப்பதை நம்மனோர்க்குத் தெரிவித்தருளும் பொருட்டு, சிவபெருமான் பெருவனப்புடைய திருவடிவம் தாங்கித் திருப்பாற்கடலருகே வந்தார். அவரைக் கண்டு திருமாலாகிய மோகினி மாலாகி மையலுற்றாள். கணவன் மனைவியிடையும், மாதா மக்களிடையும், தோழர்களிடையுமுள்ள அன்புக்கெல்லாம்

ஊற்று சிவ சக்தியின் பரஸ்பர அன்பேயாகும்! சக்தியாகிய திருமாலிடம் சிவபெருமான் ஈர்க்கப்பட்டார்.

கண்டகி நதி அங்கிருந்து பிரவகித்தது. அதன் நீரில் வச்சிரதந்தி என்னும் ஜீவராசிகள் உள்ளும் புறமும் சக்கரக் குறியுடன் பொன் வண்ணமாய் உதித்தன. அவை மண்ணினால் கூடுகளை உண்டாக்கி, அதிலேயே வாழ்ந்து மடியும்; அவை மடிந்த பின் அந்தக் கூடுகள் சக்கரக் குறியுடன் காணப்படும். அவற்றை ஆற்றோட்டம், கரையில் கொண்டு வந்து ஒதுக்கிவிடும். உலகிலுள்ளோர் அவற்றை எடுத்துச் சென்று உள்ளே இருக்கும் பொன்னை எடுத்து அடையாளங்களைப் பார்த்து, இன்ன இன்ன மூர்த்தம் என்று உணர்ந்து விஷ்ணுவாக பாவித்துப் பூசிப்பார்கள், அந்த மண் கூடு தான் சாலக் கிராமம்.

"அரியும் அரனும் அன்பில் லயித்தபோது, கரிய மேனியும், சிவந்த சடையும், செண்டு தரித்த கையுமாய் ஒரு குமாரர் அவதரித்தார். அப் புதல்வருக்கு ஹரிஹர புத்திரர் என்று அரனார் நாமம் சூட்டிப் பல வரங்களைத் தந்து உருத்திரர்களுக்குள் ஒருவராக்கினார். ஒரு புவனத்தை நல்கி தேவர்களும் முனிவர்களும் வணங்கும் முதன்மையும் தந்தார். ஹரிஹர புத்திரரே, சாஸ்தா என்றும் ஐயனார் என்றும் ஐயப்பன் என்றும் திருநாமங்களைப் பெற்றார்.

சாஸ்தா உதிக்க வேண்டுமென்றேதான் அரனும் அரியும் ஒன்றாயினர். எனவே ஐயப்பன் அவதரித்தவுடன் திருமாலுக்கும் ஐயனாருக்கும் விடை தந்து மறைந்தருளினார் துறவித் தெய்வமான சிவபெருமான்.

சசிதேவி! ஹரிஹர புத்திரர் தமது புவனத்தில் பூத கணங்களுடன் இருப்பார். விண்ணவரும் மண்ணவரும் விரிஞ்சனும் வணங்கும் விசிட்டமுடையவர் அவர். விஷ்ணுவாலும் புகழத்தக்கவர் அவர். அவர் உன்னைக் காத்தருள்வார்" என்று இந்திரன் கூறினான்.

ஐயனாரின் பெருமையைக் கேட்டு மகிழ்ந்த இந்திராணி சீர்காழியிலேயே தங்கியிருக்க உடன்பட்டாள்.

இந்திரன் ஐயப்பனைத் தியானித்தான். அவர் பூத கணங்கள் சூழ வெள்ளை யானைமீது பூரணை, புட்கலை என்ற தேவியர் சமேதராய் அங்கே பிரசன்னமானார். அவரை வணங்கிய இந்திரன், "எம்பெருமானே! சிவபெருமானிடம் சூரன் கொடுமையை விண்ணப்பிக்கும் பொருட்டு அடியேன் தேவர்களுடன் திருக்கயிலாயம் செல்கிறேன். நான் சென்று திரும்பி வரும்வரையில் இவளைத் தங்களிடம் அடைக்கலமாகத் தருகின்றேன். நமியேன் போய் வரும்வரை இவளைக் காத்தருள வேணும்!" என்று வேண்டினான்.

"அமரபதி! அஞ்சவேண்டாம். இந்திராணிக்குத் துன்பம் வராமல் யாம் காத்து நிற்போம். நீ கயிலைக்குச் செல்க" என்று ஐயனார் பணித்தருளினார்.

தமது வீரருள் வாட்போரில் நிகரற்ற மகா காளரை நோக்கி "இந்திரன் திரும்பி வரும்வரையில் தனித்திருக்கும் சசிதேவியைக் காத்து நிற்பாய்" என்று கட்டளையிட்டார்.

அமரர்கோன் அயிராணியிடம் விடைபெற்றான்.

33. இந்திரன் கயிலை செல் படலம்

இந்திரன் தேவர்களை அழைத்துக் கொண்டு திருக் கயிலாய மலையைச் சென்றடைந்தான். முதல் வாயிலையடைந்ததும் திருநந்தி தேவரை வணங்கித் தன் குறைகளைக் கூறினான்.

"சிவபெருமான் சனகாதி முனிவர் நால்வருக்கும் மௌன நிலையை உணர்த்திக் கொண்டிருக்கிறார். ஆகவே, இத் தருணம் அங்கு யாரும் செல்லக் கூடாது" என்றார் நந்தி தேவர்.

சென்ற இடமெல்லாம் தோல்வியாயிற்றே என இந்திரன் மிகுந்த வேதனை அடைந்தான். நந்தி தேவரை வணங்கிக் கூறினான்: "எந்தையே! சூரபன்மனுக்கு அடிமை செய்து இளைத்தோம். எங்கள் குறைகளை ஈசுவரனிடம் முறையிடவே வந்தோம். எங்கள் வேண்டுகோளை இறையவர் செவிமடுத்தாராகில் அவரது கருணைப் பண்புக்கேற்ப சூரனை உடனே

சம்ஹரிக்க வேண்டியிருக்கும். அவ்வாறு அவர் சூரபன்மனை அழித்தால் அவனுக்கு முன்பு தாமே கொடுத்த வரத்தையும் அழித்ததாகும். சத்திய ஸ்வரூபமான சர்வேசுவரனே சொல் தவறினார் என்று ஏற்படும்; மாறாக நாங்கள் விண்ணப்பம் விடுத்த பின்னும் எங்கள் அல்லலை அகற்றாவிட்டாலோ அருள் வள்ளல் என்று இறைவர் பெற்றுள்ள புகழுக்கு இழுக்கு உண்டாகும். ஆதலால்தான் நாங்கள் வேண்டுகோள் விடுத்து அவரை இக்கட்டில் ஆழ்த்தக் கூடாது என்றே மோன நிலையில் வீற்றிருக்கிறாரோ?'' என்று புலம்பினான் இந்திரன்,

சூரனுக்குத் தந்த வரமும், அமரருக்குப் புரிய வேண்டிய அருளும் ஒன்றுக்கொன்று முரணாகுமோ எனத் தேவர்கோன் திகைத்தான். எல்லையற்ற துன்பமுற்ற இந்திரன் மனம் மிடிந்து போனான்.

பூவுலகத்திற்குச் சென்றால் அசுரர்கள் சிறையிடுவார்கள் என்று கருதி இமையவருடன் வெள்ளியம்பொருப்பில் ஒரு புறத்தில் காத்திருந்தான்.

34. அசமுகிப் படலம்

இந்திரன் திருக்கயிலை சென்ற பிறகு அவன் நினைத்துச் சென்ற காரியம் இனிது நிறைவேறும் பொருட்டு இந்திராணி சீர்காழி வனத்தில் தவம் செய்து கொண்டிருந்தாள். இந்திரன் நெடுநாட்களாகியும் திரும்பி வரவில்லை. கணவன் வராததால் தேய்பிறைச் சந்திரன்போல் தன் உடல் தேய, அழலிடைப்பட்ட மெழுகுபோல் உள்ளம் உருகிக் கொண்டிருந்தாள் இந்திராணி.

இந்திராணிக்கு நேர் எதிரான ஒரு படைப்பு அசமுகி. பொறுமை, நாணம், கற்பு. ரூப சௌந்தரியம் யாவற்றிலும் இந்திராணிக்கு மறு துருவம் அசமுகி.

அசமுகி தன்னுடைய தோழி துன்முகியுடன் சூலப் படையை ஏந்திச் சுற்றி வரும்போது இந்திராணி இருக்கும் நந்தவனத்துக்குள் வந்துவிட்டாள்!

தவம் செய்து கொண்டிருந்த சசிதேவியைக் கண்டதும் அரக்கருக்கே உரிய இழுக்கான எண்ணம் அசமுகிக்குத் தோன்றியது. 'என் தமையனாகிய சூரபன்மனுக்கு அஞ்சித் தான் இந்திராணி தேவருலகிலிருந்து ஓடி ஒளிந்து இங்கு தவம் செய்துகொண்டிருக்கிறாள். இவளைத் தேடிப் பிடித்து வருவதற்காகவே அண்ணன் பல ஆட்களை அனுப்பியிருக்கிறான்; இப்போது நானே இவளைக் கண்டுபிடித்து விட்டேன். இவளும் தனியாக இருக்கிறாள். இவளைக் கவர்ந்து கொண்டுபோய் அண்ணனுக்கு அளிப்பேன்' என்று எண்ணினாள்.

இந்திராணியை அணுகினாள் அசமுகி. பூசை வேளையில் பேயாக எதிரே நின்ற அவளைக் கண்ட இந்திராணி அஞ்சி நடுங்கி எழுந்தோட முயன்றாள்.

"நில்!" என்று அதிரக் கூறியவாறு எதிரே வந்தாள் அசமுகி. அச்சத்தில் நடுங்கும் அழகு மங்கையைக் கண்டதும் அவளுக்கும் சிறிது மனம் இரங்கிற்று போலும்! ஆதரவாகப் பேசுவதே போலச் சொன்னாள்; "இலட்சுமியும் கண்டு பொறாமைப்படத் தக்க அழகு படைத்த நீ ஏன் உன்னுடைய இளமையை வீணாக்கித் தவம் செய்து கொண்டிருக்கிறாய்? நாட்டை இழந்து ஓடிவிட்ட இந்திரன் உனக்கேற்ற கணவன் அல்லன்; ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் தலைவனாகிய சூரபன்மனே உனக்குத் தகுந்த மணாளன். அவனும் உன்னை விரும்பித் தவம் புரிகிறான். அற்பனாகிய இந்திரனை வெறுத்து அருமை பெருமையுடைய என் அண்ணன் சூரபன்மனைக் கணவனாக அடைவாய். என்னோடு விரைந்து என் அண்ணன் நகருக்கு வந்து அரியணை ஏறுவாய்" என்று கூறினாள்.

35. இந்திராணி மறுதலைப் படலம்

அசமுகியின் சொற்களைக் கேட்ட இந்திராணி இடியேறுண்ட மயில்போல் செயலிழந்து கலங்கி நின்றாள். பதிவிரதா தருமத்தைப் பழுதின்றிக் காத்துவரும் தன் காதுகளில் இத்தகைய கடுஞ்சொல் விழலாயிற்றே என்றெண்ணிச் செவிகளைப் பொத்திக் கொண்டாள். சிறிது போதிலேயே

தேவராணிக்குரிய கம்பீரமும், கடுங் கோபமும் கொண்டு அசமுகியை நோக்கிக் கூறினாள்: "அடி பேதாய்! பெண் குலத்தின் பெருமையை அழிக்கவே நீ பிறந்தாய் போலும்! நிதில்லாத கற்புடைய நான் தேவர் கோமானைத் தவிர ஏனையோரைக் கனவிலும் கருதேன். என் மானத்தையும் உயிரையும் காத்துக் கொள்ள எனக்கு எங்கும் காவல் உண்டு. நீ இங்கிருந்து விரைந்து செல்லாவிடில் அழிந்து போவாய்" என்று கூறினாள். கற்பு என்ற பெருங் காவலோடு ஐயனாரின் அருட் காவலும் இருந்ததால் அயிராணி இவ்வாறு கூறினாள்.

அசமுகி வடவைத் தீயென வெகுண்டாள். "அறிவற்ற அமரப் பெண்ணே! நான் உன் நன்மைக்காக நல்லது சொன்னேன், அந்த நல்ல வார்த்தைகள் உன் செவிகளில் ஏறவில்லை. மூவுலகாளும் அசுரர்கோனின் உடன் பிறப்பாகிய என்னைத் தாக்கிப் பேசினாய். உன்னை இப்போதே கொன்று தின்றுவிட என்னால் முடியும். எனினும் என் அண்ணன் உன்னை விரும்புகிறான் என்பதால் உன்னைக் கொன்று புசிக்காமல் விட்டு விட்டேன். நீயாக என்னுடன் வராவிடில் நான் உன்னைப் பிடித்து இழுத்துச் செல்கிறேன். பார்!" என்று ஆர்ப்பரித்த அரக்க இளவரசி, இந்திராணியின் திருக்கையைப் பிடித்து இயமன் உயிரை இழுப்பதுபோல் இழுத்துச் செல்ல முற்பட்டாள். பருந்து வாய்ப்பட்ட புள்ளின் பேடையைப் போலத் தவித்த இந்திராணி ஐயப்ப சுவாமியை எண்ணித் துதிக்கலானாள்.

36. மகா காளர் வரு படலம்

ஆரணச் சுருதி யோர்சார் அடலுருத் திரனென் றேத்துங்
காரணக் கடவுள் ஓலம்; கடல் நிறத்(து) எந்தாய் ஓலம்;
பூரணைக் கிறைவா ஓலம்; புட்கலை கணவா ஓலம்;
வாரணத் திறைமேற் கொண்டு வரும்பிரான் ஓலம் என்றாள்

இந்திராணியின் பிரார்த்தனை ஐயனாரின் படைத் தலைவராகிய வீர மகா காளரை எட்டியது. தேவியைக் காக்கவே சாஸ்தாவால் நியமிக்கப்பட்ட மகாகாளர் தமது வடிவாளைச் சுழற்றிக்கொண்டு அங்கு விரைந்து வந்து நின்றார், இந்தி

ராணியை நோக்கி, "அம்மே அஞ்சாதே!" என்று அபய ஹஸ்தம் தந்தார். அவளைப் பற்றி இழுக்கும் அசமுகியைப் பார்த்து இடி முழக்கக் குரலில் "நில்" என்று கட்டளை இட்டார். தன்னை அதட்டிய வீர மகா காளரை அலட்சிய மாக நோக்கிய அசமுகி, "மும்மூர்த்திகளே என்னை எதிர்த்து நிற்க மாட்டார்கள். அப்படியிருக்க நீ யார் என்னைத் தடுக்க? இந்திராணியைக் காப்பாற்றவா நீ இருக்கிறாய்? உனக்கு இந்தக் காவல் வேலையைத் தந்தது யாரப்பனே? மூவுலகங் களிலும் ஆதிபத்தியம் செலுத்தும் என் தமையனுக்கு மேலாகக் கட்டளை இட்டது யார் சொல்!" என்று மிடுக்காகக் கேட்டாள்,

"இதோ சொல்கிறேன் கேள். மூவுலகங்களையும் காக்கும் கரிய மேனியன்; அவரது திருநாமம் ஐயன். அவரே எனக்கு இந்தப் பணியைத் தந்துள்ளார்" என்று கூறினர் வீர மகா காளர்.

"தாரணி முதல மூன்றுந் தலையளி புரிந்து காப்பான்
காரணி செறிந்துற் றன்ன கரியவன் கடவுள் வெள்ளை
வாரண முடைய ஐயன் மற்றிது பணித்தான் என்பேர்
வீரரில் வீர ஞன வீரமா காளன் என்ருன்.

வீர மகாகாளர் இந்திரனைத்தான் 'ஐயன்' என்றும் 'வெள்ளை வாரண' னென்றும் கூறினர் என்று எண்ணிய அசமுகி, நீயும் அற்ப இந்திரனின் ஆள்தானு?" என்று கேட்டுத் தன் கையிலிருந்த சூலத்தை அவர் மீது எறிந்து அட்டகாசம் செய்தாள். வீர மகாகாளர் அந்தச் சூலத்தைத் தமது வாளால் அநாயாசமாகத் துண்டாக்கினர். உடனே அவள் துன்முகியின் கையிலிருந்த சூலத்தை வாங்கி வீர மகாகாளரின் மார்பை நோக்கி விடுத்தாள். அதனையும் வாளினல் வெட்டி வீழ்த்தினர் மகாகாளர். அசமுகி பின் வாங்கிச் சென்று, மலைகளையும் மரங்களையும் பறித்து வீசிப் போர் புரிந்தாள். மகாகாளர் மலைகளை வீசிய மகா பலம் பொருந்திய அசமுகியின் கரத்தையே இலகுவில் துணித்தார். அவளைக் காலால் உதைத்து உருட்டினர். துன்முகியின் கரத்தையும் வெட்டி வீழ்த்தினர். உதிர ஆறு பெருக உருண்டாள் அசமுகி.

37. அசமுகி சோகப் படலம்

அந்த நிலையிலும் அடியுண்ட வேங்கைபோல் ஆருச்சினம் கொண்டு "இந்திராணியை உண்பேன்" என்று எழுவாள்; விழுவாள்; உதட்டைக் கடிப்பாள்; துடிப்பாள்; 'தனக்கும் நோல்வியா' என்று எண்ணிப் பெருங் குரலெடுத்து ஓல மிடுவாள். "உலகையெல்லாம் அழிப்பேன்" என்று சீறுவாள்.

உலகங்களை யெல்லாம் அழித்துவிட எண்ணிய அசமுகிக்கு ஆறுதல் கூறினுள் துன்முகி: "தலைவிப் பெருமாட்டியே! வீர மகாகாளர் உங்கள் கரத்தை வெட்டியதற்காகப் பூவுலகும் பொன்னுலகும் என்ன செய்யும் உலகங்களை எல்லாம் இதற்காக அழித்தால் அவற்றுக்குத் தலைவரான சூரபன்மாசுரருக்குக் கோபம் ஏற்படாதா? தங்கள் துயர் துடைக்கத் தமையனர் உள்ள போது தாங்கள் ஏன் பழிவாங்க முற்பட வேண்டும்? தாங்கள் இப்படித் துயரப் படலாகாது. இறைவனையும், ஞானிகளையும் தவிர மற்ற உயிர்களுக்கு ஊழ்வினையில் உண்டாகும் விளைவு நீங்காது" என்று தேற்றினுள்.

நினைவருங் கண்ணுதல் நிமலற் கேயலால்
அனையனை அடைதரும் அறிஞர்க் கேயலால்
எனைவகை யோர்க்குமெவ் வுயிர்க்கும் ஏற்பதோர்
வினைபடும் இழிதுயர் விட்டு நீங்குமோ?

துன்முகியின் நன்மொழி கேட்ட அசமுகி எழுந்தாள். இந்திராணியைப் பார்த்து, "உன்னையும் உன் கணவனையும், ஏனைய தேவர்களையும் என் அண்ணனைக் கொண்டு நொடிப் பொழுதில் சிறைப்படுத்துவேன். அப்படிச் செய்யாவிடில். நான் சூரபன்மனின் தங்கையல்ல" என்று சபதம் செய்து விட்டு அவ்விடத்தை விட்டு நீங்கினுள்.

38. இந்திரன் மீட்சிப் படலம்

அப்போதைக்குத் தெளிவு பெற்றாலும், பதியின்றிக் கலைமானைப் பிரிந்த பிணை மானைப்போல மனம் பதைத்த இந்திராணி கணவன் கருதிச் சென்ற காரியம் வெற்றி பெற வேண்டும் என்று மீண்டும் தவம் செய்யலானுள்.

சீர்காழி நந்தவனத்தில் இந்திராணிக்கு நிகழ்ந்த ஆபத்தையெல்லாம் அறிந்த நாரத முனிவர் திருக்கயிலாய மலைக்கு விரைந்து சென்றார். சிவபெருமானைத் தரிசிப்பதற்கு உற்ற சமயத்தை எதிர் நோக்கியிருந்த இந்திரனிடம் நிகழ்ச்சிகளை எடுத்துரைத்தார். அதனைக் கேள்விப்பட்ட இந்திரன் தனது விதியை நினைத்து வருந்தினான். திருநந்தி தேவரை வணங்கி, "அரனாரின் தரிசனத்துக்கு உற்ற சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டு நெடுங்காலம் காத்திருந்தோம். எங்கள் தீவினை காரணமாக இதுவரை நினைத்த காரியம் கைகூடவில்லை. பூவுலகம் சென்று தவம் செய்ய எங்களுக்கு விடை தரவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். திருநந்தி தேவர் மனமுவந்து விடை கொடுத்தனுப்பினார்.

இந்திரன் மற்ற தேவர்களோடு சீர்காழிக்கு வந்தான். அயிராணியைக் காத்து நின்ற மகாகாளரை அன்புடன் தழுவிக்கொண்டு பல இனிய மொழிகளைக் கூறி ஐயனாரிடம் அனுப்பி வைத்தான். பின்னர், தவம் செய்து கொண்டிருந்த தாரத்திடம் சென்று அவளது தாபத்தை நீக்கினான்.

சூராதியவுணர் படைகள் எந்த நொடியிலும் சீர்காழிக்கு வந்துவிடக் கூடிய ஆபத்தை இந்திராணி இந்திரனுக்கு உணர்த்தினாள். அவ்விடத்தை விட்டு நீங்குவதே முறை என இந்திரன் கண்டான். இந்திராணியையும் மற்ற தேவர்களையும் அழைத்துக்கொண்டு மேரு மலையிற் போய் மறைந்திருந்தான்.

இந்திரனேயாயினும் வேறு யாராயினும் வினைப் பயன் விடாதல்லவா?

39. சூரன் அரசிருக்கைப் படலம்

நிறைமதியை நிகர்த்த இரு வெண்கொற்றக்குடைகளின் நிழலில் சூரபன்மன் அரசு வீற்றிருந்தான். அருமைச் சகோதரர்கள் தாரகனும் சிங்கமுகனும் இரு பக்கங்களிலும் வீற்றிருந்தார்கள். புதல்வர்களும் அமைச்சர்களும் அருகில் அமர்ந்திருந்தனர். முன்பு தேவசபைக்கு அழகூட்டிக் கொண்டிருந்த ஊர்வசி, அரம்பை, திலோத்தமை முதலிய

தேவ மாதர்கள் இப்போது அசுர அரசனின் சபாமண்டபத்தில் நடனமாடிக் கொண்டிருந்தனர். பஞ்சாங்கம் சொல்லுவதற்கு ஏற்ற சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டு பிரமதேவர் நின்று கொண்டிருந்தார். அசுரர்களின் கொடுமைகளுக்குள்ளாகி நிர்ப்பந்தமாக ஆசி கூற வேண்டிய நிலையில் இருந்த முனிவர்களும் சூரனை வாழ்த்தச் சமயம் எதிர்பார்த்து ஒரு பக்கம் ஒதுங்கி நின்றார்கள். தீபத் தட்டுகள் ஏந்திய பெண்கள் பலர் சூரபன்மனுக்குப் போற்றி கூறினர். கின்னரரும், கிம்புருடரும், சித்தரும், கந்தருவரும் மங்கலம் ஓதிக் கொண்டிருந்தார்கள். திக்குப் பாலகர்கள் சூரபன்மனது வீரத்தையும் வெற்றியையும் துதித்துப் புகழ் பாடிக் கொண்டிருந்தனர். அசுரகுருவாகிய சுக்கிராசாரியர் மந்திரம் ஜபித்து அட்சதை தூவிச் சூரனை ஆசிர்வாதம் செய்து கொண்டிருந்தார்.

40. அசமுகி நகர் காண் படலம்

இத்துணைச் சிறப்புக்களுடன் சூரபன்மன் அரசு செய்து கொண்டிருந்தபோது அவனது அருமைத் தங்கை அசமுகி வெட்டுண்ட கரங்களிலிருந்து உதிரம் கொட்ட, தோழி துன்முகியுடன் வீரமகேந்திர புரியின் கீழ்த்திசை வாயிலை அடைந்தாள். வீரமகேந்திரபுரி அழிய வேண்டிய காலம் நெருங்கிவிட்டது என்பதை முன்கூட்டியே தெரிவிப்பது போலிருந்ததாம் அவளது வருகை.

தமது இளவரசியை இந்நிலையில் கண்ட அசுரர்கள், "பெரும் பலம் பொருந்திய இவளை இவ்வாறு கொடுமைப் படுத்தியவர் யார்?" என்று அதிசயமும் ஆறாச் சினமும் கொண்டனர்.

"இவளது கைகளை வெட்டியவர் சிவபெருமானோ? துர்க்கையோ? ஐயனாரோ? விநாயகரோ? சங்கு கன்னரோ? குண்டோதரரோ? பானு கம்பரோ? அல்லது இந்திரனோ? இல்லாவிடில் திருமாலேதானோ?" என வியந்து பேசிக் கொண்டனர். தேவர்கள் யாவரும் சூரனுக்கு அடங்கிவிட்டதால் அவர்களால் அசமுகிக்குத் தீங்கு நேர்ந்திராது என எண்ணி, 'தவ சிரேஷ்டர்களிடம் போய் இவள் ஏதாவது

சேஷ்டை செய்திருப்பாள். அவர்கள் சாபம் தந்திருப்பார்கள் அதனால் இவளுக்கு இப்படி நேர்ந்திருக்கலாம்' என்று சிலர் பேசிக்கொண்டனர். எனினும், இவ்வாறு அவளுக்குக் கொடுமை இழைத்தது யார் என்று அசமுகியைக் கேட்க யாருக்கும் துணிவில்லை.

41. அசமுகி புலம்புறு படலம்

நகர மாந்தர் அனைவரும் ஆச்சரியமும் ஆத்திரமும் உற்றிருக்க, அசமுகி சூரபன்மன் அரசு வீற்றிருந்த அத்தாணி மண்டபத்தை அணுகினாள். சூரபன்மனின் அவைக்களத்தையடைந்ததும் அவளுடைய சீற்றமும், துயரமும் எல்லை மீறி விட்டன. பலவாறாகக் கதறினாள்; தாய் தந்தையரை நினைத்துப் புலம்பித் தனக்கு நேர்ந்த துன்பத்தைச் சொல்லி அழுதாள்.

"சகோதரர்களே! நீங்கள் இருந்துமா எனக்கு இந்தக் கதி? உங்களுக்காக அயிராணியைப் பிடித்து இழுத்துவர நினைத்ததன் மீதுதான் வீரமகாகாளன் என் கரத்தைவெட்டி விட்டான். நான் அநாதையாய் நின்றபோது நீங்கள் யாரும் வந்து என்னைக் காப்பாற்றவில்லையே! தேவர்களுக்கு அஞ்சி ஓடி ஒளிந்து கொண்டீர்களா? என் கரத்தை வெட்டிய போது, தேவர்களை வென்று அடிமையாக்கிக் கொண்டோம் என்று பெருமை பேசிக்கொள்ளும் உங்கள் அகந்தையையும் மகாகாளன் அறுத்து விட்டான். அது மட்டுமல்ல; இனி உங்களையுமே அழிக்கப் போகின்றான். நீங்கள் எனக்கு உடன் பிறந்தவர்களாக இருந்தும் என்ன பயன்?" என்று ஓலமிட்டாள். தன் வாயினாலேயே அபசகுனம்போல் சோதரரின் அழிவைச் சொன்னாள்.

மருமகர்களை நோக்கினாள். "நீங்கள் பராக்கிரமசாலிகளாக இருந்தும் என் கையைத் துண்டித்தது யார் என்று கேட்காமல் இருக்கிறீர்களே! பழி வாங்கப் புறப்படாமல் இருக்கிறீர்களே! இது என்ன கொடுமை?" என்று கூறி அழுதாள்.

அரக்கத்தனத்துடன் அறியாமையும் ஆறாத அவமான உணர்ச்சியும் கலந்ததால் அசமுகி தன்னை மறந்து தன்

சுற்றத்தை நிந்தித்தாள். அவர்கள் அழிவுக்குத் தன் வாயாலேயே கட்டியம் கூறினாள்.

தாரகாசுரனை நோக்கி, "அண்ணா, திருமால் விடுத்த சக்கரத்தை ஆரமாக அணிந்து கொண்ட தாங்கள், அருமைத் தங்கையின் கரம் வெட்டுண்டது என்ற பழியை ஆரமாகக் கொண்டு விட்டீர்களே. உங்களுடைய பராக்கிரமம் எங்கே பறந்து விட்டது அண்ணா?" என்று புலம்பினாள்.

சிங்கமுகாசுரனைப் பார்த்து, "முன்பு ஒரு முறை தாங்கள் இந்திரனை ஐராவதத்தோடு தூக்கி எறிந்து உதைத்தீர்களே! இன்று தேவரின் ஏவலாள் என் கையை வெட்டியபோது உங்கள் வீரம் எங்கு சென்றிருந்தது?" என்று கதறினாள்.

கடைசியாக அசமுகி, அசுர வேந்தனாகிய சூரபன்மனிடம் சென்றாள். "அண்ணா! அண்டங்களுக்கெல்லாம் அதிபதியான உங்களைக் கண்டு தேவர்கள் யாவரும் அஞ்சி நடுங்குவார்கள். அப்படியிருக்க, அவர்களின் ஏவலாள் ஒருவன் உங்களைக் குறித்துச் சிறிதும் அஞ்சவில்லை. அவன் அஞ்சாததும் நியாயம் தான்! எனக்கு இத்தகைய கோரத்தை இழைத்த பின்னும் அவன் கவலையின்றி உயிர் வாழ்கிறானல்லவா? முன்பு அகத்திய முனிவன் என் குமாரர்களான வில்வலனையும் வாதாவியையும் கொன்றான். அவனும் உயிருடன்தான் இருக்கிறான் எனக்கு உங்களால் ஆதரவு இல்லை. கையிழந்த நான், தன் கையே தனக்குதவி என்றும் இனி வாழ முடியாது. நான் உயிருடன் இருப்பதைவிட இறப்பதே மேல்" என்று கூறிச் சூரபன்மனின் கால்களில் விழுந்து சகடக்கால் போல் உருண்டு கதறினாள்.

42 சூரன் தண்டஞ் செய் படலம்

அசமுகியின் கண்களிலிருந்து தாரை தாரையாகப் பெருகிய கண்ணீர் சூரபன்மனின் கால்களில் விழுந்ததும் அவனுள் எரிந்த கோபத்திக்குத் தைலம் வார்த்தது போல் அவனது கண்களில் பொறி பறந்தது. அசுரர்களிடம் சகோதர பாசத்துக்குக் குறைவே கிடையாது.

இந்திராணியைத் தனக்கென்று கவர்ந்து வந்த போது தான் தங்கையின் கை வெட்டப்பட்டது என்பதையறிந்த சூரபன்மனின் கண்கள் நெருப்பைக் கக்கின; வாய் புகையை உமிழ்ந்தது; மூச்சு விஷ வாயுவைக் கக்கியது. பற்களால் உதட்டைக் கடித்துக் கொண்டான். அண்டங்களெல்லாம் வெடித்துவிடுவது போலப் பெருஞ் சிரிப்புச் சிரித்தான். அவனது புருவங்கள் துள்ளின; உடல் வியர்த்துவிட்டது. சூரபன்மனின் சீற்றத்தைக் கண்ட முனிவர்கள் மூலைக்கொருவராக வெருண்டு ஓடினார்கள். திசைக்காப்பாளர்கள் எந்தத் திசை நோக்கிச் செல்கிறோம் என்பதை அறியாது தலை தெறிக்க ஓடினர். நடனமாடிக் கொண்டிருந்த தேவமாதர்கள் நடனமாடியபடியே ஓடினார்கள், மலைகளும் கடல்களும் கூட சூரனின் கோபாவேசத்தைக் கண்டு நடுக்கம் கொண்டன. விண்ணும் மண்ணும் விலுவிலுத்தன.

சூரபன்மன் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டே தம்பியரை நோக்கிப் பேசினான்.

"தேவர்களின் ஏவலாள் ஒருவன் நம் வலிமை மிக்க சகோதரியின் கையை வெட்டினான் என்றால், மனிதர்களுக்கும் இனி நாம் பயந்து வாழும் காலம் வந்துவிடும் போல் இருக்கிறதே! இந்திரனை அற்பமாக நினைத்துச் சிறைக்குள் போடாமல் விட்டேன். அவன் கூரையில் ஒளித்து வைத்திருந்த நெருப்புப் பொறியாகி விட்டான். அசமுகியின் கரத்தை வெட்டியது என் அங்கத்தை வெட்டியதுபோல் இருக்கின்றது. தம்பியராகிய நீங்கள் இருக்க, மக்களிருக்க, கோடானுகோடி சேனையிருக்க, தெய்வாஸ்திரங்கள் இருக்க, இந்திரஞாலத்தேரும் இருக்க, இதோ நானும் திரிபுவன சக்கரவர்த்தி என்ற பட்டத்துடன் இருக்கிறேன். மலை போன்ற பஞ்சுப் பொதியை ஒரு சிறு தீப்பொறி அழிப்பது போல இவள் கையிலிருந்து சிந்தும் உதிரத்துளிகள் என் மாபெரும் புகழையும் எரித்துச் சாம்பராக்கி விட்டதே! இந்தப் பழி என்றும் என்னைவிட்டு நீங்காதே! அசமுகி துன்பப்படுவதா? அதனைக் கண்டு என் உயிர் பொறுப்பதா? நன்று நன்று என் அரசியல்" என்று கூறி நகைத்தான்.

சூரனின் சொற்களைக் கேட்டதும் அவனது புதல்வன் பானுகோபன் கோபாவேசத்தோடு எழுந்தான்; தந்தையை வணங்கினன். "அப்பா! நமது ஏவலால் வருந்தி இளைத்த தேவராஜனாகிய இந்திரனே எங்கோ மறைந்தான். அவ்வாறிருக்க, தேவர்களில் ஒருவன் அசமுகியின் கரத்தைத் துண்டித்தான் என்பது, மலடி மகன் வானத்தில் பூத்த தாமரையைக் கையால் பிடித்தான் என்பது போல் அல்லவா இருக்கிறது? இதனை ஆராய வேண்டும். இப்போதே சீர்காழி சென்று அந்தையின் கரத்தை வெட்டினவனையும், இந்திராணியையும், இந்திரனையும், மற்ற தேவர்களையும் சிறை பிடித்து வருகிறேன். அவர்கள் அங்கிருந்து மறைந்துவிட்டாலும், தேவலோகம் சென்று அதனைக் கொளுத்தித் தேடிப்பார்க்கின்றேன். அங்கு எஞ்சியுள்ள தேவர்களையும், அரம்பையர்களையும் பிடித்துக் கொண்டு வருகிறேன். எனக்கு உத்தரவு கொடுங்கள்'' என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

"படையுடன் செல்க'' என்று பானுகோபனுக்கு அனுமதி கொடுத்தான் சூரபன்மன். பானுகோபனுக்கு இடம் காட்டுவதற்காகத் துன்முகியை அனுப்பி வைத்தான். பானுகோபன் தந்தையையும் சிறிய தந்தையரையும் வணங்கிப் புறப்பட்டான்.

சூரபன்மன் நான்முகனைக் கூப்பிட்டான். படைப்புக் கடவுள் சூரபன்மன் முன் வந்ததும், திதி, வாரம் கூறத் தொடங்கினர். சூரபன்மன், "உன்னை நாம் அழைத்தது இதற்காக அல்ல'' என்று அதட்டி விட்டு, அசமுகியின் வெட்டுண்ட கையை விரைந்து கூடச் செய்வாய்'' என உத்தரவிட்டான். நொடிப்பொழுதில் அவ்வாறே செய்தார் படைப்புக் கடவுள்.

சூரபன்மன் கிரகங்களையும்நட்சத்திரங்களையும் அழைத்து வரச்செய்தான். "என் தங்கையின் கையை வெட்டியவன் யார் என்று ஆகாயத்தில் திரியும் உங்களுக்குத் தெரியாதா? இளவரசியின் கரம் துண்டிக்கப்படுவதைப் பார்த்தும் நீங்கள் வாளாவிருந்தது ஏன்? உங்கள் ராஜ விசுவாசம் இதுதானா?'' என்று கடுகடுத்துப் பேசி, அவர்களை யெல்லாம் சிறையில் அடைத்தான்.

"வாயுவே! நீ எங்கும் நிறைந்திருக்கின்றாய். நீ இல்லாத இடத்தில் எந்த உயிரும் ஒளிந்திருக்க முடியாது. அப்படியிருக்க, என் தங்கையின் கையை ஒரு வானவன் வெட்டியதைப் பார்த்ததும் நீ ஏன் நம்மிடம் வந்து தெரிவிக்கவில்லை?" என்று முழக்கமிட்டான். வாயு பகவான் வாய் திறவாது நின்றார். அவரையும் சிறைக்குள் தள்ளினான் அசுரன்.

பின்னர், வருஷம், இருது, மாதம் முதலிய காலவரையறைக்கு உரிய தெய்வங்களையும் சிறையில் அடைத்தான்.

பூவுலகில் உள்ள அரசர்களை யெல்லாம் அழைத்த சூரபன்மன், "விண்ணுலகிலிருந்து ஓடி மண்ணுலகில்மறைந்து வாழ்கின்ற இந்திரனுக்கு உதவியாக ஓர் ஏவலாள் வந்து என் தங்கை அசமுகியின் கரத்தை வெட்டிவிட்டான். அதைக்கூட உணராமல் நீங்கள் மயங்கிக் கிடந்தீர்களே, ஏன்?" என்று கோபாவேசமாகக் கேட்டான். தன் தங்கையின் கரம் வெட்டுண்டதை அவர்கள் தடுக்காதிருந்ததற்குப் பிரதியாகச் சில அரசர்களின் நாவையும், நாசியையும், சிலரது செவியையும் அறுத்தான். வேறு சிலரின் கால்களை வெட்டினான். சில அரசர்களின் சிரத்தையே சேதம் செய்தான்.

சூரபன்மன் தரும்ண்டலை விதிக் படலம் ஒருவாறாக ஓய்ந்தது. அவனது தம்பியரும் விடைபெற்றார்கள். பிரமதேவர் சிறிதுதயங்கி நின்றார். பிறகு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "ஒரு சிறு கோரிக்கை! சூரியனும், நட்சத்திரங்களும் மற்ற காலக் கடவுள்களும் தங்கள்கடமையைச் சரிவரச் செய்யாவிட்டால் பிரபஞ்சம் இயங்காது. ஆகவே சிறையில் அடைத்துள்ள அவர்களை விடுதலை செய்ய வேண்டும்'; என்று வேண்டிக் கொண்டார். எக்காரணம் பற்றியோ வேண்டுகோளுக்குச் சூரனும் இணங்கினான். சூரிய சந்திரரையும் விடுதலை செய்து, "உங்களை விட்டுவிட்டேன். இனி இந்திரனுடன் சேராமல் நம் கட்டளைப்படி நடந்துகொள்ள வேண்டும்" என்று உத்தரவிட்டான்.

"தங்கள் உத்தரவுப்படியே செய்கிறோம்" என்று கூறி அகிலாண்டத்துச் சக்திகளும் அசுரனின் அடிபணிந்து வெளியேறின.

43. அமரர் சிறைபுகு படலம்

தந்தையிடம் விடைபெற்றுத் தனது மாளிகைக்கு வந்த பானுகோபன் போருக்குச் செல்வதற்கு ஆயத்தம் தொடங்கினான். தும்பை மாலை அணிந்து, பல்வகைப் படைக்கலங்களை எடுத்துக்கொண்டு, இரண்டாயிரம் குதிரைகள் பூட்டிய தேரில் ஏறிப் புறப்பட்டான். அவனது சேனைகள் சென்ற போது ஏற்பட்ட புழுதியினால் வீரமகேந்திரபுரமே மறைந்தது. பானுகோபன் கடலைக் கடந்து பூமியை அடைந்தான். இடம் காட்டுவதற்காக உடன் இட்டு வந்திருந்த துன்முகியிடம், "அசமுகி அத்தையின் கைகள் எந்த இடத்தில் வெட்டப்பட்டன!" என்று கேட்டான்.

துன்முகி அவனைச் சீர்காழி நந்தவனத்துக்கு அழைத்துச் சென்றாள். நந்தவனத்தில் புகுந்தான் பானுகோபன். அவனது சேனைகள் நந்தவனத்தை அழித்தன. நந்தவனமெங்கும் தேடிப் பார்த்தபொழுது இந்திராணியையோ வீரமகாகாளரையோ காணாததால் பானுகோபன் மிகவும் ஆத்திரம் கொண்டான். பூவுலகெங்கும் தனது படை வீரர்களுடன் சென்று தேடினான். அங்கும் அவர்களைக் காண முடியவில்லை; நால்வகைச் சேனைகளுடன் விண்ணுலகம் சென்றான். அதனை அறிந்த தேவர்கள் அஞ்சியோடி இந்திரனின் புதல்வனாகிய சயந்தனிடம் சென்று படையெடுப்புச் செய்தியைத் தெரிவித்தனர். தேவர்களில் பலரும் தேவகுரு வியாழ பகவானும் தேவராஜனும் விண்ணுலகில் இல்லாத சமயம் அது; எனினும் சயந்தன் அசுரர்களை எதிர்த்துப் போரிடுவது என்றே தீர்மானித்தான்.

"அசுரர்களிடம் புறங்காட்டி ஓடுவது நமது தன்மானத்துக்குத் தகாது. இவர்களிடம் அடிமைப்பட்டு உயிர் வாழ்வதைவிட எதிர்த்துச் சாவதே மேல். புறப்படுங்கள் யார்க்கு" என்று தேவர்களைத் தூண்டினான். அவர்களும் இளைது அன்புக்குரிய இளவரசனுடன் உற்சாகமாக வாளத்துக்கு ஆயத்தம் செய்யலானார்கள்.

என்றசிங்காதனத்திலிருந்து இறங்கிய சயந்தன் ஐராவதத்தை அடைணியவுடன் அந்தத் திவ்வியமான வெள்ளையானை அவன்

எதிரில் வந்து நின்றது. அதன் மீது ஏறிக்கொண்ட சயந்தன் தேவர்கள் புடைசூழப் போருக்குப் புறப்பட்டான்.

பானுகோபனின் சேனைக்கு எதிரே தேவர் படை அணி வகுத்து நின்றது. சமர் புரியாமலே அமரர் ஓடிவிடுவர் என்று எதிர்பார்த்த அசுரர்களுக்கு வியப்பாகி விட்டது. "நன்றாயிருக்கிறது. நேற்று வரை நம்மிடம் ஏவல் செய்து கொண்டிருந்த தேவர்கள் இன்று நம்மை எதிர்த்துப் போர் செய்ய வந்துவிட்டார்களே!" என்று ஆச்சரியமுற்று நின்றார்கள்.

இரு படைகளும் மோதிக் கொண்டன. இரு தரப்பினரும் வேற்படை, வாட்படை, சக்கரம், மழுப் படைகள், முத்தலைச் சூலங்கள், குலிசங்கள் முதலியவற்றைக் கொண்டு கடுமையாகப் போர் புரிந்தனர். உதிரம் வெள்ளம் போல் ஓடியது. நீண்ட நாட்கள் அடிமை வாழ்வு வாழ்ந்து இளைத்திருந்த வானவர்களால் அதிகார பலம் பெற்று மதர்த்திருந்த அசுர கணங்களுக்கு ஈடு கொடுப்பது கடினமாயிருந்தது. போர்க் களத்தினின்று தேவர்கள் ஓடலாயினர், ஓடிய தேவர்களை அசுரர்கள் துரத்திச் சென்று கயிற்றினால் கட்டிப் பானுகோபனிடம் இழுத்து வந்தார்கள்.

தேவர்கள் கயிற்றினால் ப்பகட்டி இழுக்கடும் கோரக் காட்சியை வெள்ளை யானை மீது அமர்ந்திருந்த சயந்தன் கண்டான். அவனுக்குத் தன்மானம் பொங்கியது; கோபம் மிகுந்தது. உடலிலுள்ள சக்தியை யெல்லாம் வரவழைத்துக் கொண்டு வில்லை வளைத்து நாணை ஏற்றிப் பாணங்களை மழை போல் பொழிந்தான். அதற்கு எதிராக அசுரர்களும் கோடிக் கணக்கில் பாணங்களை விடுத்தார்கள். தன்னை நோக்கி வந்த பாணங்களை யெல்லாம் எதிர்ப் பாணங்களால் தவிடுபொடியாக்கினான் சயந்தன். கடும் போர் புரிந்து நூறு வெள்ளம் அசுரர்களையும் அழித்தான். பானுகோபனுடைய படைவீரர்கள் பலரை ஐராவதம் காலால் மிதித்து அழித்தது. மற்றும் சில வீரர்களைத் துதிக்கையினால் வாரி வீசியது; சில வீரர்களைத் தந்தத்தினால் குத்திக் கொன்றது; சிலரை வாலினால்அடித்துக் கொன்றது.

° °

அசுர வீரர்களின் தலைவன் நீலகேசன் சயந்தன்மீது நூறு பாணங்களை விடுத்தான். சயந்தனும் நூறு பாணங்களை விடுத்தான். அதனால் நீலகேசனின் கவசம் பிளந்தது. ஆத்திர மடைந்த நீலகேசன் பிறைமுக அஸ்திரத்தைச் சயந்தன் மீது விடுத்தான். இதனால் சயந்தனுடைய வில்லின் நாண் அறுந் தது. சயந்தன் நிராயுதபாணியாகிவிட்டான். அஸ்திரசஸ்திர மற்ற சயந்தன் மந்திரதந்திரங்களை நாடினான்; பலவித மாயங் களைச் செய்து போரிட்டான். அந்த மாயங்களை எதிர்த்துப் போர் செய்ய வகையறியாத நீலகேசன் மயங்கி விழுந்து இறந்தான். எஞ்சியிருந்த அசுர வீரர்கள் பல திசைகளிலும் சிதறி ஓடினார்கள். சோமாசுரன், மாயாபலி, சுரகேசரி, பதுமன், மாருதபலி, தண்டகன், வாமன், வருணன், மாகதன் முதலியவர்களின் மாயாவிப் போர்முறை யாவும் தேவராஜ குமாரனின் மந்திர பலத்துக்கு முன்னால் ஏதும் செய்ய இயல வில்லை.

அசுர வீரர்களின் தோல்வியையும், அவர்கள் மடிவதை யும், சயந்தனின் ஆற்றலையும் கண்ட பானுகோபன் சுக்கிராச் ராரியர் முன்பு தனக்கு உபதேசித்திருந்த மூல ஞான மந்தி ரத்தை ஜபிக்கத் தொடங்கினான். அதன் மூலம் சயந்தன் செய்யும் மாயைகளை அறிந்து அதற்கு எதிராகப் போர் செய் தான். சயந்தனின் மாய உருவங்கள் எல்லாம் மறைந்து விட்டன. சயந்தன் தன்னந் தனியனாக ஐராவதத்தின் மீது அமர்ந்திருந்தான். அவனுக்கு அருகில் ஆர்த்துச் சென்றான். பானுகோபன். "இந்திர குமாரா! நான் உனக்குப் பக்கத்தில் வந்தவுடனேயே உன் மாயா பலம் மறைந்து விட்டதெனில், என் வலிமை எப்படிப் பட்டது என்பதைத் தெரிந்துகொள். பாலப் பருவத்திலேயே நான் பகலவனைச் சிறை புரிந்தவன். எப்படிச் சிறை வைத்தேன் என்று நீ கண்ணுக்கு நேரே உணருவதற்காக இப்போது உன்னையும் சிறையில் அடைக்கப் போகிறேன். ஆற்றல் இருந்தால் வா என்னுடன் போருக்கு" என்று அழைத்தான். இதைக் கேட்டதும் சயந்தனுக்குச் சினம் பிறந்தது.

இந்திர குமாரனுக்கும் சூர குமாரனுக்குமிடையே கடுமையான யுத்தம் நடந்தது. ஒன்றுக்கொன்று நேர்

எதிரான அசுர சக்திக்கும் தேவசக்திக்கும் உருவகம் தாங்கிய இளைஞர்களின் யுத்தம் அற்புதமாக இருந்தது. இருவருமே சளைக்காமல் ஒருவரை யொருவர் சாடிக் கொண்டார்கள். தேரிழந்து மறு தேர் ஏறிய பானுகோபன் சயந்தன் உடல் மீதும், ஐராவதத்தின் மீதும் சரமாரி பொழிந்தான். சயந்தன் மயங்கி வெள்ளை யானை மீது விழுந்தான். அவனது உடலி லிருந்து பெருகிய உதிரம் தண்ணென்று தன் மீது பட்டதும் விசுவாசம் மிக்க வெள்ளை வாரணமாகிய ஐராவதம் நிலை மையைப் புரிந்து கொண்டது; கடுஞ்சினம் கொண்டது; பானுகோபனுடைய தேர் மீது பாய்ந்தது. தேரில் பூட்டப் பட்டிருந்த குதிரைகளையும், தேர்ப்பாகனையும் தாக்கி அழித்தது. தேரையும் ஓங்கித் தரையில் வீசி நொறுக்கியது. தேரிலிருந்த பானுகோபன் பூமியில் குதித்தான். வெகுண்டு ஐராவதத்துடன் போர் செய்தான். அவனது மார்பில் முட்டியது ஐராவதம். ஐராவதம் முட்டியதால் பானுகோபன் அழியவில்லை. மாறாக, யானையின் தந்தங்கள் முறிந்தன. பானுகோபன் ஆவேசத்தோடு ஐராவதத்தின் துதிக்கையை ஒரு கையினால் பிடித்து முறுக்கிக் கொண்டு மற்றொரு கையினால் திவ்விய கஜத்தை ஓங்கி அறைந்தான். குன்ற மெனப் பருத்து நின்ற ஐராவதம் அடியின் பலத்தில் பாதியும், அடியுண்ட அவமானத்தால் பாதியுமாகத் தன் சக்தியை இழந்து அப்படியே தரையில் சாய்ந்தது. அதன் மீது மயங்கிக் கிடந்த சயந்தன் நிலத்தில் உருண்டு விழுந்தான். பூமி ஸ்பரிசம் பட்டதும் மயக்கத்தினின்று தெளிந்தான். நடந்த வற்றை யெல்லாம் அறிந்தான். தனது ஆற்றல் அடங்கி யொடுங்கி விட்டது என்பதை உணர்ந்தான்.

அசுர வீரர்களின் தலைவர்கள் அசக்தனாகக் கிடந்த சயந்தனைச் சூழ்ந்து கொண்டு, "அடியுங்கள்; உதையுங்கள்" என்று கூச்சலிட்டார்கள். அவர்களை விலக்கிக்கொண்டு அங்கே வந்த பானுகோபன். "இவனைத் துன்புறுத்தாமல் தேவர்கள் இருக்கும் சிறைக் கூடத்தில் கொண்டு போய் அடையுங்கள்" என்று உத்தரவிட்டான். என்ன இருந் தாலும் அசுரர்களின் இளவரசன் அல்லவா? அவனிடம் ஓரளவு கௌரவ புத்தி இருக்கவே செய்தது.

அசுர வீரர்கள் கயிற்றினால் கட்டி ஏற்கனவே சிறை செய்யப்பட்டிருந்த தேவர் கூட்டத்தோடு இமையவரின் இளவரசனையும் சேர்த்து விட்டார்கள்.

வெற்றி கண்ட அசுரர்களின் வெறி முற்றியது. சொர்க்கம் எங்கும் சுற்றித் தேவர்களையும் அரம்பையர் களையும் பிடித்து வந்து பானுகோபன் முன்பு அசுர வீரர்கள் நிறுத்தினார்கள். சொர்க்கத்தைக் கொளுத்திச் சாம்பராக்கி மிகவும் மகிழ்ந்தார்கள். தேவர்கள் சிறைப்பட்டதையும் பொன்னுலகம் மயானமானதையும் கண்ட பானுகோபன் அளவிலா ஆனந்தமடைந்தான். அசுரர்களை அழைத்து, "நம்மை எதிர்த்த வானவர்களும் இந்திர குமாரனும் அடிமை களாக எனக்கு முன்னே செல்ல, அவர்கள் கூறுமல் கூறும் வெற்றியின் உறைவிடமாக நான் அவர்களுக்குப் பின் ஊர்வலம் வரவேண்டும்" என்று ஆணையிட்டான். அதன்படி அசுரர்கள் தேவர்களையும் சயந்தனையும் இழுத்துக் கொண்டு முன்னே சென்றார்கள். பானுகோபன் வெற்றி வீரனாக மகேந்திரபுரியை அடைந்தான்.

சிறைப்பட்ட தேவர்கள் சூரபன்மன் முன்னிலையில் நிறுத் தப்பட்டனர். பெருமிதத்துடன் தனது போர்த் திறனைத் தந்தைக்கு விளக்கினான் பானுகோபன். சங்கற்பத்தைச் சிறப் புற நிறைவேற்றித் திரும்பிய மகனைச் சூரபன்மன் ஆரத் தழுவிக் கொண்டான். மகனை மகிழ்ச்சியுடன் கண்ட அதே கண்களால் அனலை உமிழ்ந்தபடி தேவர்களை நோக்கினான் சூரன். "என் தங்கையின் கரம் வெட்டுப்பட்டதற்குப் பிரதி யாக இவர்கள் எல்லோருடைய கைகளையும் துண்டியுங்கள்" என்று காவலாளிகளுக்குக் கட்டளையிட்டான். வானவர் களின் கைகளையும் கால்களையும் காதுகளையும் அசமுகியின் எதிரிலேயே வெட்டி மகிழ்ந்தனர் காவலாளிகள். ஆனால் என்னே அதிசயம்! தேவர்களின் அங்கங்களை வெட்ட வெட்ட தவ வலிமையால் அவர்களுக்கு அங்கங்கள் மீண்டும் வளர்ந் தன. சூரபன்மன் பழிக்குப் பழி வாங்க முடியாது என்று கண்டான்.

தேவர்களுக்கும் தேவராஜ குமாரன் சயந்தனுக்கும் விலங்கு பூட்டினர். சிறையில் அடைக்கப்பட்டார்கள். அதன்

பின்பு அவர்கள் அநுபவித்த இழி வாழ்வு காரணமாக தேவர்கள் தாங்கள் ஏன் முன்பு அமுதம் அருந்திேனும் என்றே வருந்தலானுர்கள். இப்போது அசுரரிடம் தோல்வியுற்றதற்குப் பதில் முன்பு அமுதம் கடையும்போதே அவர்களிடம் தோற்றிருக்கலாகாதா என்று எண்ணினுர்கள். தேவர்கள் அமிர்தம் உண்டிருந்ததால் மரணத்தை வென்றுவிட்டார்கள். இப்போது அற்பரும் கயவருமான அசுரர்களின் கொடுங்கோன்மைக்கு ஆளாகி அடிமை புரிந்த அமரர்கள் சாவையே வரவேற்றனர். ஆனுல் அமுதமுண்டவர் எப்படிச் சாக முடியும்?

அங்கே போர்க்களத்தில் பானுகோபனின் தாக்குதலால் மயங்கி விழுந்த ஐராவதம் அறிவு தெளிந்து எழுந்தது. அசுரர் வசமாகி அழிந்து போன அமராவதிக்குள் நுழைய அதன் கம்பீரமான கால்கள் கூசின. பதவி போனபின் பரமன் நினைவு மிகுந்தது. பரமன் நினைவு வந்தால் தமிழ் மண்ணின் நினைவும் வரும். திருவெண்காடு என்ற திவ்விய ஸ்தலத்தை ஐராவதம் அடைந்தது. அங்கு எம்பெருமானைச் சிவாகம விதிப்படி பூசித்து, சிவபெருமான் திருவருளால், முன்பு இழந்த கோடுகளைத் திரும்பப் பெற்றது; திருவெண்காட்டிலேயே தங்கி விட்டது.

அயிராணியுடன் மேரு மலையை அடைந்த இந்திரன் சொர்க்கம் எரியுண்டதையும் சயந்தன் சிறைப்பட்டதையும் அறிந்து துடிதுடித்தான்.

சிவபெருமானை நோக்கி நெடுநாட்கள் தவம் புரிந்தான். தேவர்களின் சிவாபசாரக் குற்றம் நீங்கும் தருணம் வந்தது. தருணேந்து சேகரப் பெருமான் தரிசனம் தந்தார். தமது தேமதுரத் திருவாய் திறந்து, "நாம் உமையை மணந்து ஒரு குமாரனைத் தருவோம். அவன் அசுரர்களை அழித்து உங்களுக்கு வாழ்வு தருவான்" என்று அருளி மறைந்தார் சிவபெருமான்.

பின்னர் நடந்ததெல்லாம் நாமறிவோம். எனினும், எல்லாமறியும் சர்வக்ஞராம் சண்முகநாதன் அறியாதது போல் மாயம் செய்ததால், செவ்வேட் பரமன் செந்திற் கரை

யில் எழுந்தருளியிருக்க அசுர உற்பத்தியிலிருந்து தொடங்கி வரலாற்றினை விரித்துரைத்த வியாழ பகவான் தொடர்ந்து கூறுவார்:

விஷ்ணு, பிரமன், தேவர்கள் முதலியவர்களுடன் இந்திரன் ஆலோசனை நடத்தி மன்மதனைச் சிவபெருமானிடம் அனுப்பினான். பெருமான் மீது மலர்க்கணை விடுத்த மன்மதன் எரிந்து சாம்பரானான். இதனைக் கண்டு கலங்கிய தேவர்கள் தங்களை இனியும் சோதிக்கலாகாது என்று எம்பெருமானை வேண்டிக் கொண்டனர். ஐயனும் உளம் குழைந்தார். பார்வதி தேவியை மணந்த பரமேசுவரர் தேவரீரைத் தமது நெற்றிக் கண்களினின்றும் தந்தருளினர். தாங்கள் திரு அவதாரம் செய்த பின்பே இந்திரனும் பிரம்மவிஷ்ணுக்களும் மற்ற வானவரும் முனிவரும் புத்துணர்ச்சி பெற்றனர். ஆயினும் அவர்கள் துன்பம் முழுமையாகத் தீராமல் சூராதியவுணரின் ஆட்சியே இன்னமும் நடைபெற்று வருகின்றது. அவர்களை அழிக்கத் தங்களையன்றி வேறு எவராலும் இயலாது. ஆகவே, தாங்கள் விரைவிலேயே நல்லசுரர் வாழ வல்லசுரர் மாய அருள்புரிய வேண்டும்" என்று வியாழ பகவான் கந்தக் கடவுளிடம் முறையிட்டுக் கொண்டார்.

வியாழபகவானின் முதுகைத் தமது திருவிரல்களால் தடவிக் கொடுத்து அருள் புரிந்தார் குமாரசுவாமி.

"எம்பெருமானே! தேவரீர் அந்தச் சூரனை அழிக்க வேண்டும் என்று திருவுளம் கொண்டால் நொடிப் பொழுதில் அவ்வண்ணமே நடந்துவிடும். ஆயினும், தேவரீர் ஒரு திருவிளையாடலை எண்ணி இங்கு எழுந்தளியிருக்கின்றீர்கள்" என்றார் வியாழபகவான்.

கந்தவேள் தமது காந்தக் கண் ஒளியைத் தேவராஜவிடம் திருப்பினர். "அமரபதி! துயர் வேண்டாம்! தேவர்களைச் சிறை மீட்டு விண்ணுலக ஆட்சியைப் பழையபடியே உனக்குத் தருவோம்" என்று வாக்களித்தார் சத்திய ஸ்வரூபமான சக்திகுமாரர்.

பல்லாண்டுகளாக மழையின்றிக் காய்ந்து பாளம் பாளமாக வெடித்த பூமியின்மீது அமுத மழை பெய்தால் அதனை

நிலம் எவ்வளவு ஆர்வமாக உள்ளிழுத்துக் கொள்ளும்? அதே போல் துன்பத்துக்குமேல் துன்பமாக அநுபவித்து, அயர்ந்து போய் அதனைத் தீர்க்கவென்றே பிறந்த முருகனின் அருளை நாடிய வானவர் ஆறுமுகனின் அபயவாக்கினை ஆர்வத்தோடு அருந்தினர். தம்மைக் காக்க வென்றே பிறந்த தெய்வத்தின் அபய வாக்கு கேட்டுத் தேவர்கள் எல்லையில்லாத உவகை பெற்றுக் கருணாமூர்த்திக்குப் போற்றி கூறினர்.

அசுர காண்டம் முற்றிற்று.

3. மகேந்திர காண்டம்

துதி

விரிஞ்சன்மால் தேவ ராலும் வெலற்கரும் விறலோ னாகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத வொழுக்கமும் பிறவும் மாற்றி
அருஞ்சிறை அவர்க்குச் செய்த அவுணர்கோன் ஆவி கொள்வான்
பரஞ்சுடர் உருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வாம்.

1. வீரவாகு கந்தமாதனஞ் செல் படலம்

திருச்செந்தூரில் தேவாதியரின் துயர்களைத் திருச்செவி மடுத்து இன்னல் தீர்ப்பதாக அபயம் அளித்த ஐயன் உடனே போருக்குப் புறப்பட்டுவிடவில்லை. ஏனெனில், இறைவனின் சக்தி சாந்தியிலேயே நிலைபெற்றது. சாந்தமான முறையில் சூரனுடைய தவறுகளைத் திருத்த வொண்ணாமற் போனாலே போர் புரிய வேண்டுமென எண்ணினர் சுவாமி. சாம—தான—பேத—தண்டம் என்றவாறு படிப்படியாகவே போருக்குச் செல்ல வேண்டும் எனக் கருதினர். எதிராளியின் நல் லெண்ணத்துக்கு முழு இடமும் அளிக்கத் திருவுளம் கொண்டார். எனவேதான் சூரனிடம் முதலில் பேசிப் பார்ப்பது எனக் கருதினர்.

"தூதன் சொற்கேட்டுச் சூரன் தேவர்களைச் சிறையிருந்து விடுவித்தால் அழியாமல் வாழ்வான். அவ்வாறு

செய்ய மறுத்தால், நாமே சென்று அவனை யழிப்போம். இதுவே அறநெறி" என்று கூறினர் ஷண்முகர். வானவரும் சுவாமியின் கருத்தை ஆமோதித்தனர்.

"நமது வீரர்களில் சூரபன்மனிடம் வீரமகேந்திர புரிக்குத் தூது செல்லத் தக்கவர் யார்?" என்று வேலவர் கேட்டார்.

"கந்தநாயக! தேவர்களின் நிலைமை தங்களுக்குத் தெரியாததல்ல. அடியேன் உட்பட வானவர்கள் அனைவரும் சூரனுக்குக் கைகட்டி ஏவல் செய்து வருகிறோம். ஆகவே நம்மில் யார்வரும் சூரனிடம் தூது சென்று உயிருடன் மீள முடியாது. வீரவாகு தேவர் ஒருவர்தான் தூது சென்றால் காரியத்தைச் சிறப்புற நிறைவேற்றி விட்டுச் சூரனிடமிருந்து வெற்றியுடன் திரும்பி வரமுடியும்" என்று பிரம்மதேவர் கூறினர்.

ஐயனின் திருவுள்ளத்துக்கு உகந்த யோசனையாகவே அது அமைந்தது. தமது பேரன்புக்குரிய வீரவாகுவை அருள் கனிய நோக்கினர் ஆறுமுகன்.

"வீரவாகு! நீ வீரமகேந்திரபுரிக்கு விரைந்து சென்று சூரபன்மனை அணுகி, சயந்தனையும் தேவர்களையும் சிறையிலிருந்து விடுவித்து நல்வாழ்வு வாழுமாறு அவனுக்கு அறநெறியை எடுத்துக்கூறு. அவன் செவி சாய்க்காவிட்டால், அவனையும் அவனது சுற்றத்தையும் அழிக்க நாம் நாளையே படைகளுடன் வருவோம் என்று தெரிவித்து மீண்டு வருக" என்று குமாரக் கடவுள் வீரவாகுதேவருக்குக் கட்டளையிட்டார்.

அப்பணியைத் தலை மேல் தாங்கி வீரவாகுதேவர் புறப்பட்டார்.

புத்திரவாத்ஸல்யம் மேலோங்கிய இந்திரன் வீரவாகு தேவரின் பின் சென்று, "வீரரே! முதலில் வீரமகேந்திரத்தில் சிறைப்பட்டிருக்கும் என் குமாரன் சயந்தனையும் மற்ற தேவர்களையும் கண்டு ஆறுதல் கூறவேண்டும்; பின்பு தூது செல்லும் வேலையை முடிப்பீராக!" என்று பிரார்த்தித்துக் கொண்டான்.

தேவர்கோனுடைய துயரத்தை அநுதாபத்துடன் புரிந்து கொண்ட வீரவாகுதேவர் "அவ்வாறே செய்வோம். கவலைப் பட வேண்டாம்" என்று கூறிப் புறப்பட்டார்.

இலக்கத்தெட்டு வீரர்களும் அவரை வணங்கிப் பின் தொடரலாயினர்.

"நீங்கள் பூதப் படைத் தலைவர்களுடன் இங்கேயே இருங்கள்" என்று அவர்களுக்கு உத்தரவிட்டுப் புறப்பட்ட வீரவாகுதேவர் கடற்கரையை அடைந்தார்.

வீரவாகுதேவர் தம் கால்களின் வீரகண்டை 'கலீர் கலீர்' என ஒலிக்கக் கந்தமாதன பர்வதத்தின் உச்சியில் ஏறி நின்றார். அவர் உற்சாகத்துடன் திமுதிமு என ஏறி நின்றதும் அந்தப் பாரம் தாங்காமல் மலை பிளந்து நிலத்தில் அமுந்திவிட்டது. போரில் தோற்று ஓடிவந்து அந்த மலைக் குகைகளில் ஒளிந்துகொண்டிருந்த தாரகனின் படைவீரர்கள் வெளிப்பட்டனர்; வீரவாகுதேவரைக் கண்டதுமே புலன் களெல்லாம் செயலிழக்க, உயிரை விட்டனர். மகேந்திர புரிக்குச் செல்ல வேண்டும் என்று எண்ணிய வீரவாகுதேவர் 'கந்தநாயகா' என்று தியானித்தார். அகில புவனுண்டமாக விளங்கும் ஐயனின் பெருமையை உள்ளத்தில் இருத்தி அதனுடன் வீரவாகுதேவர் லயம் அடைந்தபடியால் அவ ருமே விசுவரூபம் கொண்டார்.

உலகங்கள் எல்லாவற்றையும் ஒருங்கே பார்க்கத் தக்க அளவில் பெரியதாக விளங்கினார் வீரவாகுதேவர். அங்கு நின்றபடியே உலகில் உள்ள நகரங்களை யெல்லாம் பார்த் தார். சூரபன்மனின் பெரிய நகரத்தையும் நோக்கினார். அந்த நகரத்தையே கையால் பிசைந்து பகைவர்களை யெல் லாம் கொன்றுவிடலாமா என்று ஓர் எண்ணம் தோன்றிற்று. சயந்தனும் மற்ற வானவரும் அங்குள்ள சிறையிலிருப்பதால் அந்நகர் முழுவதையும் நாசமாக்கலாகாது என்று தெளிந்து அந்த எண்ணத்தைக் கைவிட்டார். வீரவாகுதேவரின் பேரு ருவத்தைக் கண்ட அசுரர்கள், முன்பு அழிந்ததாகக் கூறப் பட்ட கிரௌஞ்ச மலைதான் இந்த மாயத்தைச் செய் கிறதோ என்று ஐயங்கொண்டனர். பிரமதேவர், இந்திரன்,

இலக்கத்தெட்டு வீரர்கள், மற்றும் பூதர்கள் ஆகியோர் வீரவாகு தேவரின் பேருருவத்தைக் கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஆனால் வீரவாகுவோ தமது சக்தியில் பெருமிதமுறாமல், தமக்குச் சக்தி தந்த சக்தி குமாரனையே ஸ்மரித்திருந்தார்.

‘ஆவதோர் காலை எந்தை ஆறிரு தடந்தோள் வாழ்க!
மூவிரு வதனம் வாழ்க! முழுதருள் விழிகள் வாழ்க!
தூவுடை நெடுவேல் வாழ்க! தொல்படை பிறவும் வாழ்க!
தேவர்கள் தேவன் சேயோன் திருவடி வாழ்க!’ என்றான்.

இவ்வாறு ஆறுமுகக் கடவுளை வாழ்த்திய வண்ணம் வீரமகேந்திரபுரத்தை அங்கிருந்தவாறே தமது விசுவரூபத்தால் நோக்கியவுடன் விசுவரூபத்தின் அவசியம் முடிந்ததென எண்ணினார் வீரவாகுதேவர். ‘நான் இப்பேருருவத்துடன் சென்றால் உயிர்கள் அழியும்’ என்று கருதி உருவத்தைக் குறுக்இக் கொண்டார். பெரியோர்தான் பெருமையை எப்படிக் குறைத்துக் கொள்வது என்பதை அறிவர். அற்பர்களே தமக்குள்ள சக்தியை எப்போதும் பிரயோகம் செய்யவேண்டும் என்று அலைவர்.

2. கடல் பாய் படலம்

எளிமைக்கு உரிய பெருமையை உணர்ந்து சிறிய உருவம் எடுத்துக் கொண்ட வீரவாகுதேவர் கந்தமாதன மலையை முன் போலவே எழும்புமாறு அருள்செய்தார். அதன்பின் அம்மலையிலிருந்து வானமார்க்கமாகப் புறப்பட்டார் வீரவாகுதேவர். மீண்டும் எல்லையற்ற சக்தி அவரைத் தானாகவே வந்தடைந்தது. அவர் புவியிலிருந்து வானத்துக்குக் கிளம்பிய வேகத்தில் பூமியிலுள்ள மலைகள் பல இழுக்கப்பட்டு அவருடன் செல்லத் தொடங்கின; அண்டங்கள் பின் தொடர்ந்தன; உயிர்கள் சுழன்றன. வீரவாகுதேவர் கடலில் பாய்ந்து சென்ற தோற்றம் சிவபெருமான் முப்புரத்தை நோக்கித் தமது திருவாய் எனும் வில்லில் பூட்டிய நெருப்புச் சிரிப்பு அம்பாகப் பாய்ந்ததை நினைவூட்டியது. ‘கந்தவேள் சூரபன்மனை அழிக்க வேலாயுதத்தை விடுத்தாரோ?’ என்று

என்னும்படி வீரவாகுதேவர் கடற் பரப்பின் மீது வான வெளியில் தகதகவென்று ஒளிர்ந்தவாறு சென்ருர்.

3. வீரசிங்கன் வதைப் படலம்

வீரமகேந்திரபுரத்தின் வடபுறம் உள்ள இலங்கை என்னும் நகரத்துக்கு அருகில் போய்ச் சேர்ந்தார் வீரவாகு தேவர். யாளிமுகன் என்னும் அசுர வீரன் இலங்கையைக் காவல்புரியும் பொறுப்புப் பெற்றவன். வீரவாகுதேவர் அங்கே சென்றபோது, யாளிமுகன் சூரபன்ம மகாராஜனைத் தரிசிக்க வேண்டும் என்று சேனைகளுடன் வீரமகேந்திர புரிக்குச் சென்றிருந்தான். அவனது மகன் அதிவீரன் ஆயிரம் வெள்ளம் சேனைகளுடன் காவல் புரிந்து வந்தான். அவன் அந்தப்புரத்தில் இருக்கும்போது வடக்கு வாசலில் நின்ற படைத் தலைவனுகிய வீரசிங்கன், வீரவாகுதேவர் இலங்கையுள் நுழைந்து விரைந்து உட்சென்று கொண்டிருப்பதைக் கண்டான். ஐந்நூறு வெள்ளம் சேனைகளுடன் வீரவாகு தேவரை வழி மறித்தான்.

"உனக்கு உன் உயிர்மீது ஆசையில்லை போலிருக்கிறது. அதனுல்தான் நீ தனியாக வந்திருக்கிருய். நான் உன்னைக் கொல்வதற்கு முன், இங்கு வந்த காரணத்தைச் சொல்லிவிடு" என்று வீரவாகு தேவரிடம் ஆர்த்தான் வீரசிங்கன்.

"நான் வீரமகேந்திரபுரம் சென்று உயிருடனேயே திரும்பும் எண்ணத்துடன்தான் வந்திருக்கிறேன். உன்னுல் என்ன முடியுமோ அதைச் செய்" என்று வீரவாகுதேவர் கூறினுர்.

"இவனைக் கொல்லுங்கள்!" என்று சேனைகளுக்கு உத்தர விட்டான் வீரசிங்கன். அவர்கள் வீரவாகுதேவரை வளைத்துக் கொண்டு ஆயுதங்களை ஏவிப் போர் புரிந்தார்கள். வீர வாகுதேவர் வாளாயுதத்தைச் சுழற்றிச் சுழற்றிச் சேனைகளை வெட்டிக் கொன்ருர். அவுணர்கள் இறந்ததால் பெருகிய உதிரம் கடலில் போய்க் கலந்தது. வீரசிங்கனின் சேனைகள் எல்லாம் அழிந்தன. ஆத்திரங்கொண்டு எதிர்த்த வீரசிங்கனையும் எளிதில் சம்ஹாரம் செய்தார் வீரவாகுதேவர்.

4. இலங்கை வீழ் படலம்

வீரவாகுதேவர் இலங்கைக் கரையில் உள்ள மலையின் மூன்று சிகரங்களில் நடுச் சிகரத்தின் மீது பாய்ந்தார்.

வீரவாகுதேவர் இலங்கை மீது பாய்ந்து குதித்தவுடன் அதனைக் காவல் புரிந்திருந்த அதிவீரனும் பிற அசுரர்களும் நிலைகுலைந்து மயங்கி விழுந்தனர். அவுண வீரர்களுடன் இலங்கை கடலில் முழுகத் தொடங்கியது. கடலில் விழுந்த அசுரர்களைப் பெருமீன்கள் துன்புறுத்தத் தொடங்கின. சில அசுரர்கள் அஞ்சி ஓடி ஒளிந்தனர்.

5. அதிவீரன் வதைப் படலம்

இலங்கை கடலில் மூழ்குவதைக் கண்ட அதைக் காவல் செய்து கொண்டு அரண்மனையிலிருந்த அதிவீரன் என்னும் அரச குமாரன் மிகவும் கோபங்கொண்டான். இந்தச் செயலை கரந்து திரிகின்ற இந்திரனும் செய்யமாட்டான். மற்றைத் தேவர்களும் செய்ய மாட்டார்கள்? நான் காவல் செய்வது நன்றாக இருக்கின்றது. இது தெரிந்தால் என் தந்தையும் சூரபன்மனும் கோபிப்பார்கள் என்று எண்ணி கடலுக்கு மேலே வந்து பார்த்தான். வீரவாகு தேவரைக் கண்டு தன் சேனைகளோடு சூழ்ந்து எதிர்த்தான். பல ஆயுதங்களைக் கொண்டு போர் செய்தான். நெடுநேரம் வாள் கொண்டு போர் செய்து வீரவாகுதேவரின் வாளுக்கு இரையாகி உயிர் துறந்தனன்.

6. மகேந்திரஞ் செல் படலம்

பின்னர் வீரவாகுதேவர் இலங்கையை விட்டு எழுந்தார். அவர் வந்திறங்கிய வேகத்தில் கடலில் அழுந்திய இலங்கை அவர் எழுந்து சென்றதும் மீண்டும் பழைய நிலைக்கு உயர்ந்தது.

வீரவாகுதேவர் வான வழியில் சென்று மகேந்திர புரியின் பெரும் மதில்களையும் உயர்ந்த கோபுரங்களையும் கூர்ந்து நோக்கினர். மகேந்திரபுரியின் வடக்குவாசலில்

கோரன், அதிகோரன் என்ற இரண்டு அசுரவீரர்கள் காவல் செய்து கொண்டிருந்தனர். ஏராளமான யானைகள், தேர்கள், குதிரைகள், காலாட்படைகள் ஆகியவை அவர்களுக்கு இருந்தன. 'இந்தப் படைகளை வெல்ல வேண்டுமென்றால் பகல் முழுவதும் கழிந்துவிடும். மற்றும் இந்த நகரில் உள்ள இதர சேனைகளையெல்லாம் அழிக்க எவ்வளவோ காலம் ஆகும். அப்படியே அழித்தாலும் சூரபன்மன் வந்து எதிர்ப்பான். கந்தவேளையன்றி வேறு ஒருவராலும் அவனைக் கொல்ல முடியாது. மேலும் தூதாக வந்த நான் போர் செய்து பொழுதைப் போக்குவது முறையன்று. வந்த வேலையைக் கருதிச் சூரபன்மனிடம் செல்வதே முறை என்று ஒப்பற்ற புத்தி நுட்பம் படைத்த வீரவாகுதேவர் முடிவு செய்தார். பலத்த காவலுள்ள வடக்குவாயில் வழியாகச் சண்டையின்றிச் சீக்கிரத்தில் உள்ளே போவது அரிது என்று கருதிக் கீழ்த்திசை வாயிலை அடைந்தார். அங்கு மகிஷாட்சன் (மேதிக் கண்ணன்), வீரபானு என்ற இரண்டு அசுரத் தலைவர்கள் வாளும் கையுமாகக் காவல் செய்து கொண்டிருந்தனர். நால் வகைச் சேனைகள் அவர்களுக்குத் துணையாக நின்று கொண்டிருந்தன, "இந்த வாசலைக் கடந்து செல்வதும் அரிது" என்று கருதிய வீரவாகு தேவர் தெற்கு வாயிலை நோக்கிச் சென்றார்.

7. கயமுகன் வதைப் படலம்

கயமுகன் என்ற அசுரன் அந்த வாசலில் காவல் புரிந்து கொண்டிருந்தான், அவன் ஆயிரம் யானை முகங்களைக் கொண்டவன். தன்னுடன் போர் செய்வதற்குப் பகைவர்கள் இல்லையே என்று ஏங்குபவன். அவன் ஆகாயத்தில் செல்லும் வீரவாகுதேவரைக் கண்டு "சீறுகின்ற சிங்கம் இருக்கும் குகையில் மான் வருவதுண்டோ? உன்னை அனுப்பியவர் யார்? நீ வந்த காரணம் என்ன?" என்று கோபத்துடன் கூச்சலிட்டான்.

கயமுகன் கூறியதைக் கேட்ட வீரவாகுதேவர் சிரித்துக் கொண்டே, "அப்பனே, உயிரை விடுவதற்கு உனக்கு இத்துணை அவசரம் ஏன்? வலுவில் என்னை அழைக்கின்றாயே!

வா வா" என்றார். வீரவாகுதேவர் போரை விரும்பா விடினும், யுத்தம் புரிய அழைப்பு வந்தபின் அதனை மறுப்பது வீரலட்சணமாகாது என்பதால் கயமுகனுடன் போர் தொடங்கினார். கயமுகன் பறித்தெறிந்த மலைகளையெல்லாம் மாலை போல் மார்பில் ஏற்றுக்கொண்ட வீரவாகு தேவர் இறுதியில் கயமுகனுடைய மார்பில் ஒரு காலால் உதைத் ததுமே அவன் அலறி விழுந்து உயிர் இழந்தான்.

"கந்தவேளின் கட்டளையை விரைவில் நிறைவேற்ற முடியாமல் இப்படியே அசுரர்களுடன் போர் செய்து காலத் தைச் செலவிடும்படியாயிற்றே" என்று வருந்திய வீரவாகு தேவர் சூரபன்மனின் நகரத்திற்குள் எளிதில் செல்ல வழி என்னவெனச் சிந்திக்கலானார். இந்த வடிவத்துடன் அசுரக் காவல்காரர் கண்ணில் படாமல் செல்ல முடியாது என்று கருதிக் கந்தவேளைத் தியானித்து எவரும் காண்பதற்கு அரிய தோர் அணுவுருவங் கொண்டு மகேந்திரபுரியின் கிழக்கு வாயிலில் உள்ள கோபுரத்தின் மேல் அமர்ந்தார். 'அணு விலும் நுணுகியவன்; பெரிதினும் பெரியவன்' என்று வேதம் ஆண்டவனை வருணிக்கிறது. முன்பு பெரிதினும் பெரியவனான பெருமான் வீரவாகுவுக்கு விசுவ ரூபம் தந்தான். இப்போது அணுவிலும் நுணுகிய அவனே அவருக்குச் சின்னஞ்சிறு உருவை அளித்தான்.

8. நகர் புகு படலம்

கோபுரத்தின் மீது அணு உருவில் அமர்ந்திருந்த வீரவாகுதேவர் வீரமகேந்திரத்தின் சிறப்புக்களைக் கண் டார். அங்கு நின்ற அளவற்ற சேனைகளைக் கண்டதும், வியாழ பகவான் கூறியதைக் காட்டிலும் அதிகச் சிறப் புடையது வீரமகேந்திரபுரம் என்று எண்ணினார். "இங்கே யானைகள் எத்தனை? தேர்கள் எத்தனை? குதிரைகள் எத்தனை? காலாட் படைகளோ கடற்கரை மணல்களைக் காட்டிலும் அதிகம்!

சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களுளிம் உள்ள வளங்களையும் வனப்புக்களையும் எட்படித்தான் இந்த ஒரே

நகரத்தில் வைத்தானே? பானுகோபன் சொர்க்கத்தை எரித்தான் என்பது பொய். சொர்க்கம் தன்னைக் காட்டிலும் எவ்வளவோ அழகான இந்த மகேந்திரபுரியைக் கண்டு நாணமும் வெட்கமும் சுடத் தானே எரிந்து அழிந்தது போலும்! இங்கே பௌதிகப் பெருமைகள் எல்லாவற்றையும் கண்டேன். ஆனால் இந்தப் பெருமை எவ்வளவு இருந்தும் என்ன? இங்கு அறம் இல்லை; வாய்மை இல்லை'' என்று எண்ணினார்.

வீரமகேந்திரபுரியில், நரம்புகள் மேல் எழுந்து, சதைகள் வற்றி, நரைத்து, தடியூன்றி, கிழப்பருவமுற்று நடுங்குவோர்களையும், இறந்து போகின்றவர்களையும், நோய்வாய்ப் பட்டவர்களையும், வறுமையால் வாடுகின்றவர்களையும் காணமுடியாது; இதற்குக் காரணம் தவவலிமையே யாகும் என்று நினைத்தார்.

நாடி மேலெழத் தசையிலா துலறியே நரையாய்க்
கோடு பற்றிமுத் தசைந்திடு வோரையுங் கூற்றால்
வீடு வோரையும் பிணியுழப் போரையும் மிடியால்
வாடு வோரையும் கண்டிலம் இதுதவ வலியே.

செந்தாமரை மலர்மீதமர்ந்து வண்டுகள் தேன் பருகுவது போல வீரமகேந்திரபுரியிலிருந்த பெண்கள் மாணிக்க மாளிகைகள் மீது அமர்ந்து கள்ளைப் பருகிக் கொண்டிருந்தனர். அந்த மாளிகைகளிலே வருணன் சிறந்த அரிசியைக் களைந்து கொடுக்க, அவற்றை அக்கினித் தேவன் தன்னைத் தானே தீ மூட்டிக் கொண்டு ஊன்களோடு கலந்து பக்குவம் செய்து வைத்தான். அத்தகைய அற்புத உணவு வகைகளை அரக்கர் தம் மனைவியரோடு உண்டு மகிழ்ந்தனர்.

கொடுங்கோலாட்சியில், ஆளும் சக்தி படைத்தோருக்கு உற்றவர் யாவரும் அதிக சுகபோகம் பெற்று வாழ்வது வழக்கம். அசுரர்கள் இருக்கும் இடத்தைத் தேடிச் சென்று காமதேனுவும் சிந்தாமணியும் வேண்டியவற்றைக் கொடுத்தன. வாயுதேவனே வீரமகேந்திரபுரியின் வீதிகளைப் பெருக்க, வருணன் பன்னீர் தெளிக்கின்றான்!

வந்த காரியத்தை விட்டு இந்த நகரத்து வளங்களையே பார்த்துக்கொண்டு காலந் தாழ்த்துவது சரியல்ல என்று கருதிய வீரவாகுதேவர் சூரபன்மன் உறையுமிடத்தை அடையக் கருதி ஆகாய வழியாகத் தமது சூட்சும உருவுடன் சென்றார். 'சூரனைக் காணுமுன் என் பிள்ளையைக் கண்டு ஆறுதல் கூறுக' என்று அமரர்கோன் கேட்டுக் கொண்ட நினைவு அவருக்கு வந்தது. உள்ளத்தில் அன்பும், துயரமும், பரிவும் பெருக, தேவரும் சயந்தனும் இந்தக் கேளிக்கை நகரில் எங்கு சிறைப்பட்டு அவலமாக அவதியுறுகின்றனரோ என்று தேடலானார். அசுரரின் தலைமை அமைச்சனாகிய தரும கோபனின் மாளிகைச் சிகரத்தில் தங்கி நகரைத் தம் பார்வையால் துழாவும்போது சயந்தனும் தேவர்களும் சிறையிருந்த இடத்தைக் கண்டுபிடித்தார்.

9. சயந்தன் புலம்புறு படலம்

சிறையில் நூற்றெட்டு யுகங்கள் துன்பப்பட்டு நாளுக்கு நாள் கொடுமை பொறுக்க முடியாமல் தவித்த சயந்தன் யாரை நம்பியும் பயனில்லை என்று கண்டு இறைவனொருவனையே கசிந்துருகி வேண்டினான்.

"தண்டேன் துளிக்கும் தருநிழற்கீழ் வாழ்க்கைவெஃகிக்
கொண்டேன் பெருந்துயரம் வான்பதமும் கோதென்றே
கண்டேன் பிறர்தம் பதத்தொலைவும் கண்டனனால்
தொண்டேன் சிவனேநின் தொல்பதமே வேண்டுவனே!"

குளிர்ந்த தேன் துளிக்கின்ற கற்பக மர நிழலின்கீழ் வாழ்கின்ற பெரும்பதவியை விரும்பி அடியேன் இப்பெருந் துயரத்தை யடைந்தேன். தேவ பதவிகள் சாறுபோன சக்கையென்று உணர்ந்தேன். தேவ பதவிகள் அழிந்ததையும் பார்த்தேன். சிவபெருமானே! அடியேன் உமது திருவடி ஒன்றையே இனி வேண்டுவேன்.

அல்லல் பிறவி அலமலம் விண்ணு டுறைந்து
தொல்லைத் திருநுகரும் துன்பும் அலமலமால்
தில்லைத் திருநடஞ்செய் தேவே இனித்தமியேற்
கொல்லைத் துயர்தீர்த் துனதுபதந் தந்தருளே.

தில்லையில் திருநடனஞ் செய்கின்ற தேவ தேவா! துன்பத்துக்கு உறைவிடமான பிறவி போதும், போதும். தேவருலகத்தில் வாழ்ந்து உயர்ந்த செல்வத்தைத் துய்க்கின்ற துன்பமும் போதும், போதும். துணை-இல்லாத அடியேனுடைய துயரைத் தீர்த்து விரைந்து ஆண்டு அருள்புரிவீர்.

ஒன்ருய் இருதிறமாய் ஓரைந்தாய் ஐயைந்தாய்
அன்ருதியின்மீட்டும் ஐந்தாய் அளப்பிலவாய்
நின்ருய் சிவனேயிந் நீர்மையெலாம் தீங்ககற்றி
நன்ருவிகட்கு நலம்புரிதற் கேயன்ரே.

'சிவபெருமானே! சிவமாயும், சக்தி சிவமாயும், பஞ்ச சாதாக்கியமாயும் இருபத்தைந்து மகேச்சுர உருவங்களாயும் பின்னர் சங்காரக் கிரமமாகப் பஞ்ச சாதாக்கியமாயும், அளவிடப்படாமல் நின்றீர். இத்தன்மைகள் யாவும் ஆன்மாக்களின் துன்பத்தை நீக்கி அருள்புரியும் பொருட்டே-யாகும்' என்று அல்லும் பகலும் பிரார்த்தித்தான் தேவ ராஜ குமாரன்.

10. சயந்தன் கனவு காண் படலம்

சோகத்தின் தாலாட்டில் தன்னை மறந்து உறக்கம் கொண்டான் சயந்தன். அவனுக்கு அருள் புரிய எண்ணிய ஆண்டவனும் அதுவே தருணமெனக் கொண்டார். அவனது கனவிலே முருகப் பெருமான் ஆறு திருமுகமும் பன்னிரு திவ்விய கரங்களுமாகத் தோன்றினர்.

வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறி லாதவேல் அபயமே வலம்; இடம் வரதம்
ஏறு பங்கயம் மணிமழுத் தண்டுவில் இசைந்த
ஆறி ரண்டுகை ஆறுமுகங் கொண்டுவேள் அடைந்தான்.

வலது கரங்களில் ஐந்தில், பெருமை யுடைய சேவற் கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல் இந்த ஆயுதங்களைத் தாங்கித் தன் வீரப் பெருமையைப் பிரகடனம் செய்த ஐயன், ஆருவது கரத்தால் தன் அன்பின் பெருமையை அபய முத்திரையால் வெளிப்படுத்தினர். அடியாரின் பவ பயத்தையும் மற்ற பயங்களையும் போக்குவதுடன் அவர்களுக்கு முக்திநிலை

என்ற வரத்தையும், மற்ற கோரிக்கைகளையும் அருள்பவ ரல்லவா ஐயன்! அத்தகைய வரத முத்திரையை இடது கரங் களில் ஒன்று தாங்க, மற்ற ஐந்து கரங்களில் மோகனஸ்திர மான தாமரையையும், நாதத்தாலேயே எதிரியைக் கலங்கச் செய்யும் மணியையும், மற்றும் மழு, தண்டு, (கதை), வில் இவற்றையும் ஏந்தி வந்தார் கந்தன். அபய தத்துவமும் வரத தத்துவமுமே இருகினுற் போன்ற முறுவல் பூத்த ஆறுமுகங் களுடன் சயந்தனுடைய கனவில் காட்சி தந்தருளினர்.

தந்தை யில்லதோர் பரமனைத் தாதையா வுடைய
கந்தன் ஏகியே அனையதன் உருவினைக் காட்ட
இந்திரன் மகன் உளப்படும் யாக்கையுள் இருந்த
முந்துகண்களாற் கண்டனன் தொழுதனன் மொழிவான்.

துன்பச் சுமையைத் தாங்க மாட்டாத சயந்தன் மூர்ச்சை யாகி விட்டான். மூர்ச்சையானல் கண் மூடும். அப்போது தான் தூக்கம் வரும். சயந்தன் கண்மூடி யிருக்கும்போது சுவாமி போய்க் காட்சி கொடுக்கிருர். "முந்து கண்களாற் கண்டனன்" சயந்தன் என்கிருர் கவி.

(இந்தச் சரீரத்தினுள்ளே இன்னெரு சரீரம் இருக்கிறது. அதற்குச் சூக்கும சரீரம் என்று பெயர். இந்த உடலை விட்டு உயிர் நீங்குவதைத்தான் மரணம் எனறு சொல்கிறோம். கனமான ஸ்தூல சரீரத்தைக் கழற்றி வைப்பதுதான் மரணம்.)

இறக்கும் போது மட்டுமின்றி, இருக்கும் போதும் சூக்கும சரீரம் உள்ளேயிருக்கிறது. உறக்கத்தின்போது இதுவே இயங்குகிறது அதன் மூலம் சயந்தன் கனவில் கந்தனைக் கண்டு தொழுதனன்.

அவன் குமாரக் கடவுளைக் கண்டதே யில்லை அல்லவா? எனவே, ஆறுமுகமும் பன்னிரு கையுமுடைய இத்தெய்வம் யாரென யோசித்தான். 'வந்திருப்பவர் நாராயணர் அல்லர் ஏனெனில், அவரது நிறம் நீலம். இவரோ ரத்தின வண்ணர் பிரமனும் அல்லர். ஏனெனில், ஆறுமுகம் படைத்துள்ளார். ஆனாலும் அவர்களுக்கெல்லாம் மேலான அருளைப் பொழி கிருர்' என்று கண்டான் சயந்தன்.

தொண்ட னேன்படும் இடுக்கணை நாடியே தொலைப்பான்
கொண்டபேரருள் நீர்மையில் போந்தனைக் குறிக்கின்
விண்டும் அல்லை;அப் பிரமனும் அல்லைமே லாகும்
அண்டர் நாதனும் அல்லைநீ ஏவர்மற் றென்றான்.

பெருமானே! அடியேன் படுகின்ற துன்பத்தைக் களைதற் பொருட்டு,பெருங்கருணையால் வந்தருளிக் காட்சி தருகின்றீர். நீர் திருமாலுமன்று; பிரமாவும் அன்று; அவர்கட்கு மேலான சிவபெருமானும் அன்று; தேவரீர் யார்? என அருள்புரியும்." என்று முருகக் கடவுளையே வினவினான்.

"சயந்தா! நான் சிவகுமாரன்! உன் துன்பத்தை நீக்கவே இங்கு வந்திருக்கிறோம். கவலைப்படாதே. தேவர்கள் சிறைப் பட்டபின் உன் தந்தை தன் குறையையும் உங்கள் குறை யையும் எம்மிடம் முறையிட்டுக் கொண்டார். அந்த வேண்டு கோளின்படி நாம் எண்ணற்ற படைகளுடன் புறப்பட்டுப் பூவுலகம் வந்தோம். கிரௌஞ்ச மலையையும், தாரகனையும் அழித்துவிட்டுத் திருச்செந்தூரில் வீற்றிருக்கிறோம். நான் முகனும் நாராயணரும் உன் தந்தையும் மற்ற தேவர்களும் எம்முடன் இருக்கிறார்கள். உன்னுடைய தங்கை தேவயானை மேருகிரியில் வளர்கிறாள். நீ யாரைக் குறித்துமே வருந்தாதே. உன்னைக் குறித்தும் வருந்தாதே. சூரபன்மனிடம் வீரவாகு என்ற தூதரை அனுப்பியிருக்கிறோம். அவன் நீதிநெறிகளைச் சொல்லுவான். ஆனால் அவற்றை யெல்லாம் சூரபன்மன் கேட்கமாட்டான் என்பதும் எமக்குத் தெரியும். நாம் நாளையே செந்திலம்பதியை விட்டு நீங்கி மகேந்திரபுரிக்கு வர நேரும். பிறகு போர் மூளும். தேவர்களுக்கெல்லாம் நலன் விளையும்" என்று கூறியருளினார்.

சயந்தன் சிந்தை குளிர்ந்து கந்தனை மனம் உருகிப் போற்றினான்.

"சயந்தா! நாம் அனுப்பியுள்ள தூதன் உன்னையும் தேவர் களையும் வந்து சந்தித்து ஆறுதல் கூறுவான்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தார் ஆறுமுகன். சயந்தனுக்கு ஆறுதல் கூறி யதுபோலவே முருகப் பெருமான் மற்ற தேவர்களின் கனவி லும் தோன்றி ஆறுதல் கூறி மறைந்தார்.

கனவு நீங்கி நனவு வரப் பெற்றதும் தேவர்கள் ஒருவருக்கொருவர் தாம் கண்ட கனவுகளைச் சொல்லிக் கந்தவேளின் திருவருளை நினைந்து ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருந்தனர்.

11. வீரவாகு சயந்தனைத் தேற்று படலம்

முன்பு தேவர்கோன் சிறையிலிருக்கும் சயந்தனுக்கு ஆறுதல் கூறுமாறு வீரவாகுதேவரிடம் கூறியதுடன், இப்போது ஷண்முகப் பெருமானும் அதனையே சயந்தனுக்கு வாக்களித்துவிட்டதால், வீரவாகு சிறைச்சாலையை நெருங்கினார். மோகன மந்திரத்தால் காவலரை மயங்கச் செய்து சிறைச்சாலைக்குள் சென்றார்.

வீரவாகுதேவரைக் கண்ட சயந்தன் முன்னமேயே கந்தக்கடவுளின் வாக்குறுதியைக் கேட்டிருந்ததால், "இவரே அவரது தூதர்" என்று ஊகித்துக் கொண்டான். வீரவாகு தேவர் கந்தப் பெருமானின் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே சயந்தன் முன் சென்றார். அத் திருநாமம் சயந்தன் காதுகளின் வழியே உள்ளம் புகுந்தது.

"சிவகுமாரராகிய கந்தவேளுக்கு நான் தம்பியும் தூதனுமாவேன்" என்று வீரவாகுதேவர் தம்மை அறிமுகம் செய்து கொண்டார்.

"எங்கள் துன்பத்தை நீக்கத் தாங்கள் வந்துவிட்டீர்கள். எங்கள் சிறை வாழ்வும் இப்போதே நீங்கியது போல உணர்கிறோம்" என்று சயந்தனும் தேவர்களும் கூறினார்கள்.

தமது தூதுப் பணியைக் கூறிய வீரவாகுதேவர், "சிவபெருமானே ஆறு திருமுகங்களுடனும், பன்னிரண்டு திருப்புயங்களுடனும், கந்தவேள், முருகவேள் என்ற திருப்பெயர்களுடனும் உங்கள் துன்பங்களைப் போக்க வருவார். உங்கள் சிறையையும், பிரமன் குறையையும் தீர்த்து உலகங்களையெல்லாம் இரட்சிக்கும் பொருட்டே சிவபெருமான் கந்தவேளாக எழுந்தருளியிருக்கின்றார்" என்றார்.

"தன்னிகர் இன்றி மேலாய்த் தற்பர வொளியாய் யாரும்
உன்னரும் பரமாய் நின்ற ஒருவனே முகங்கள் ஆறும்
பன்னிரு புயமுங் கொண்டு பாலகன் போன்று கந்தன்
என்னுமோர் பெயரும் எய்தி யாவருங் காண வந்தான்.

பங்கய முகங்கள் ஆறும் பன்னிரு புயமுங் கொண்டே
எங்கடம் பெருமான் போந்த ஏதுமற் றென்னை என்னில்
செங்கண்மால் உந்தி பூத்தோன் சிறுமையும் மகவான் துன்பும்
உங்கடஞ் சிறையும் நீக்கி உலகெலாம் அளிப்பக் கண்டாய்"

வீரவாகு கூறியதை யெல்லாம் கேட்டுச் சோர்வ நீங்கி உற்சாகம் கொண்ட தேவர்கள், "பெருமையில் சிறந்த வீர திலகமே! நீர் வெற்றி பெறுவீராக!" என்று அவரைத் தொழுது வாழ்த்தினுர்கள். வீரவாகுதேவர் சிறைக்கூடத்தி லிருந்து புறப்பட்டார்.

12. அவைபுகு படலம்

வீரவாகு தேவர் சிறைக் கூடத்தினின்று ஆகாய வழி யாகப் புறப்பட்டார். சூரபன்மனின் அரண்மனைக் கோபுரத் தைக் கண்டு அதன் அழகை வியந்தார். கோபுரவாயிலில் உக்கிரன் மாயூரன் முதலிய அரக்க வீரர்களும், நால்வகைச் சேனைகளும் காவல் காத்துக் கொண்டிருந்தனர். ஆகவேதான் வீரவாகு தேவர் நிலத்தில் நடந்து செல்லாமல் வான வழியே சென்று அவ்வரண்மனையைக் கண்டார். அது நவரத்தின மயமாக ஜொலித்தது. ராஜ சபையில் இரத்தினம், முத்து, பவளம், கோமேதகம், வைரம், இவற்ருல் இழைத்து அணி செய்யப்பட்ட சிங்காதனத்தில் வீற்றிருந்தான் சூரபன்மன். அவனுக்கு மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலிய தேவ மாதர்கள் ஆலவட்டம் வீசிக் கொண்டிருந்தார்கள். சந்திர னும் சூரியனும் இரண்டு பக்கங்களிலும் குடை பிடித்து நின்ருர்கள். அரம்பையர் நடனமாடிக் கொண்டிருந்தனர். வித்தியாதரரும், கின்னரரும் வீணை வாசித்துக் கொண்டிருந் தனர். துதி பாடகர்கள் பிரம்பை ஏந்தித் துதித்தனர். சூரபன்மனுடைய தலையிலே இரத்தின முடி ஒளிர்ந்தது. காதுகளில் குண்டலங்கள் ஆடின. உடலில் கலவைச் சாந்தின் மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. இடுப்பிலே

பீதாம்பரம் அணிந்திருந்தான். அதில் உதரபந்தம் என்னும் அணியும் இருந்தது. மழைச் சூல் கொண்ட பெரிய கருமேகம் ஒன்று சந்தியா காலத்தின் நானுவித வர்ண விசித்திரங் களால் தன்னை அலங்கரித்துக் கொண்டிருப்பதுபோல் சூரபன் மன் வீற்றிருந்தான்.

சூரபன்மனுடைய அவையின் சிறப்பையும், அவன் பெரு மையையும் கண்ட வீரவாகுதேவருக்கு அவனிடம் கௌரவ புத்தியும், இரக்கமும் ஏற்பட்டன. 'இந்த போக வாழ்வை யெல்லாம் பரமேசுவரனிடமிருந்து அல்லவா இவன் தவமி யற்றிப் பெற்றிருக்கிறன்? பாவம்! தேவர்களைச் சிறை வைத்த ஒரு குற்றத்துக்காக இவ்வளவும் தொலையப் போகிறதே' என்று பரிதாபப்பட்டார். 'தூதுசெல்லும் நான் சூரபன்மனைத் திருத்த முயல்வேன். என்னுடைய சொல்லால் அவன் திருந்தவில்லையெனில் முருகப் பெருமானின் வேலினுல் தான் திருந்துவான்' என்று எண்ணினுர்.

புத்தியில்லாத தூக்கணாங் குருவி யொன்று மரத்தில் கூடு கட்டி முட்டையிட்டது. அது முட்டையிடுவது ஓர் இடம்; குஞ்சு பொரிப்பது மற்றோரிடம்தான். குஞ்சு பொரிக்கும் இடத்துக்கு முட்டையை எடுத்துச் சென்றது குருவி. இரவில் வெளிச்சம் வேண்டும் என்பதற்காகக் கொஞ்சம் களிமண் எடுத்து வந்து, ஒரு மின் மினிப் பூச்சியைப் பிடித்து அந்த மண்ணில் குத்தி வைப்பது தூக்கணாங் குருவிகளின் வழக்கம். ஆனுல் இந்தப் புத்தியில்லாத தூக்கணாங் குருவி மின் மினிப் பூச்சி யென்று நினைத்துக் கொள்ளியுடனிருந்த ஒரு சுள்ளியைக் கொண்டு வந்ததாம். அதைக் கூட்டிற்குள் கொண்டு போய் வைத்தால் என்னவாகும்?

மெய்ச்சோதி தங்கு சிறுகொள்ளி தன்னை
விரகின்மை கொண்ட குருகார்
கச்சோதம் என்று கருதிக் குடம்பை
தனில் உய்த்து மாண்ட கதைபோல்
அச்சோ எனப்பல் இமையோரை ஈண்டு
சிறைவைத்த பாவம் அதனுல்
இச்சூர பன்மன் முடிவெய்து நாளை
இதனுக்கொர் ஐயம் இலையே.

சூரபன்மன் வீரமகேந்திரபுரியாகிய தன் குருவிக் கூட்டில் மின்மினி என்று எண்ணித் தேவர்களாகிய தீக்கங்கு களை வைத்திருக்கிறான். தீயில் வெந்து மாள விருக்கிறானே' என்று அந்தப் பகைவனிடம் அருள் கூர்ந்தார் கருணை வடிவான முருகப் பெருமானின் தூதர்.

சூரபன்மன் உயர்ந்த சிம்மாதனத்தில் கால் மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான், 'மேரு மலையை வில்லாகக் கொண்டுள்ள சிவபெருமானின் புதல்வரும் வீர வேலைத் தாங்கும் தீரருமான முருகப் பெருமானுடைய தூதனாகச் செல்லும் நான் சூரபன்மனுடைய சபா மண்டபத் தில் அவனுக்குத் தாழ்வாக உட்கார்ந்தால் முருகப் பெரு மானுக்கு அல்லவா அவமானம்?' என்று எண்ணினார் வீர வாகுதேவர்.

ஒற்றை மேருவில் உடையதோர் பரம்பொருள் உதவும்
கொற்ற வேலுடைப் புங்கவன் தூதெனக் கூறி
இற்றை இப்பகல் அவுணர்கோன் கீழியான் எளிவாய்
நிற்றல் எம்பிரான் பெருமையின் இழிபென நினைந்தான்.

'கந்த நாயகா' என்று தியானித்தார் வீரவாகுதேவர். சிவபெருமான் திருவருளால் திருஞானசம்பந்தருக்கு முத்துப் பந்தரும், முத்துச் சிவிகையும் வந்தன அல்லவா? அதுபோல ஆயிரங் கோடி சூரியன் ஒளி வீசுவது போன்று ஜகஜ்ஜோதி யாக ஜொலிக்கும் பொன்மணிச் சிங்காதனம் ஒன்று முருகப் பெருமான் திருவருளால் அந்தச் சபையில் அக்கணமே தோன்றியது.

இனைய துன்னியே அறுமுகப் பண்ணவன் இருதாள்
நினையும் எல்லையில் ஆங்கவன் அருளினால் நிசியில்
தினகரத் தொகை ஆயிர கோடி சேர்ந் தென்னக்
கனக மாமணித் தவிசொன்று போந்தது கடிதின்.

நித்திலப்படு பந்தருஞ் சிவிகையும் நெறியே
முத்தமிழ்க்கொரு தலைவனும் மதலைக்கு முதல்வன்
உய்த்த வாறெனக் குமரவேள் வீரனுக்குதவ
அத்தலைப்பட வந்தது மடங்கலேற் றணையே.

வீரவாகுதேவர் அதில் அமர்ந்தார். சூரபன்மன் அவரைக் கண்டான். அவனுடைய உள்ளுணர்ச்சியே அவர் தேவர்களின் சார்பில் வந்திருப்பவர் என்று உணர்த்தியது.

வீரவாகுதேவரை ஏறிட்டு நோக்கினன் சூரன். சூரபன்மன் பெருங் கோபங்கொண்டான்; பற்களைக் கடித்தான். "நீ வரவழைத்தாயே பொன்மணிச் சிம்மாதனம்; அந்த வேலையை எங்கள் வீட்டுப் பெண்கள் செய்வார்கள். எங்கள் ஊரில் கர்ப்பத்திலிருக்கின்ற ஒரு மாதக் குழந்தையும் இந்த வித்தையைச் செய்யும். நீ செய்தது என்ன பிரமாதமான செப்படி வித்தை! உன் உயிர்போவதற்கு முன்னே நீ யார் என்பதைச் சொல்லிவிடு" என்றான்.

உரைசெய் இந்நகர் மகளிரும் செய்வர், ஊன்முற்றுக்
கருவின் உள்ளுறு குழவியும் செய்திடும் கருத்தில்
வரைகளும் செயும் மாக்களும் செய்யும் மற்று அதனால்
அரியது அன்றரோ பேதைநீ புரிந்திடும் ஆடல்.

சூரபன்மன் தொடர்ந்து கூறுவான்:

வாசவன் கரந்தோடினன் பிறரிது மதியார்
கேசவன் இதுநினைகிலன் மறைகளின் கிழவோன்
ஆசி கூறியே திரிந்திடும் அவர்க்கெலாம் முதலாம்
ஈசன் என்னிடை வருகிலன் யாரைநீ என்றான்.

தேவேந்திரன் மறைந்து ஓடிவிட்டான்; மற்றவர்கள் இதனை மனதிலும் நினைக்க மாட்டார்கள். நாராயணன் இப்படிச் செய்யத் துணியமாட்டான்; பிரமதேவன் என்னைச் சதா வாழ்த்துரை கூறித் திரிகின்றான். அவர்க்கெல்லாம் தலைவராகிய சிவபெருமான் அடியவன் என்று என்பால் வரமாட்டார்.

அப்படியிருக்க என் அரண்மனையில் 'பிரவேசித்துள்ள' நீ யார்?" என்று கேட்டான் சூரபன்மன்.

வீரவாகு தேவர், சூரபன்மனைப் பார்த்து, "மாயங்களைச் செய்து உழலும் வலியில்லார் போன்று என்னை எண்ணாதே.

"புரந்தரன் குறை அயன்முதல் அமரர் தம் புன்மை
வருந்தும் வானவர் சிறையெலாம் நீக்கி மற் றவர்தம்
திருந்து தொல்லிறை உதவுவான் செந்திமா நகர்வந்
திருந்த ஆதியம் பண்ணவன் அடியனேன் யானே"

தேவேந்திரன் குறை தீரும் பொருட்டும், தேவர்கள் சிறை மீளும் பொருட்டும் திருச்செந்தூர் வந்திருக்கின்ற ஆதிப்பரம் பொருளாக இருக்கின்றவரின் அடியவன் நான்" என்று கூறினுர் வீரவாகு தேவர்,

(முருகவேளைப் போலவே வீரவாகு தேவரும் சிவகுமாரர் தான். 'சிவபெருமான் என்னிடம் பகைகொண்டு இங்குவர மாட்டார்' என்று கூறிய சூரனிடம் வீரவாகு தான் சிவ குமாரனே எனக் கூறி மரியாதை பெற்றிருக்கலாம்; அல்லது தம்மை முருகனின் தம்பி என்று பெருமையாகச் சொல்லி யிருக்கலாம். ஆயினும் பணிவின் உருவாக அண்ணலின் பணியில் வந்த வீரவாகு அவ்விதம் சொல்லவில்லை. 'ஆறு முகனின் அடியேன்' என்றே சொல்கிறுர்.)

சூரபன்மன் ஆச்சரியமடைந்தான். "முருகனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தேவர்களுக்கு உதவி புரிய அவன் முயல்வதை அறிவேன். என் அருமைச் சோதரன் தாரகனை அவன் வதம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. எனினும் அவன் சின்னஞ்சிறு பாலகன், பால் மணம் மாருதவன் என்பதால் அவன்மீது போருக்குச் சென்ருல் மாருத பழி வருமே என்று விட்டுவிட்டேன். நீ அவனுக்குத் தூதனு? வேண்டுமானுல் அந்தக் குழந்தையே என்னிடம் நேராக வந்திருக்கலாம். சரி வந்த விஷயம் என்ன? சொல்" என்று கேட்டான் சூரபன்மன்.

சூரனின் பெருமையைக் கண்டு அவனது தவத்தை எண்ணி மகிழ்ந்த வீரவாகுவுக்கு அவனுடைய வாழ்வு முடியும் தருணம் வந்ததே என்று கருணை ஏற்பட்டது. கருணை ஏற்பட்டால் உள்ளத்தில் சகோதர பாவம் ஏற்படும். அவ்வாறே வீரவாகுதேவருக்கும் ஏற்பட்டது. (உண்மை யிலேயே உலகத்து உயிரினங்கள் அனைத்தும் உடன் பிறந்த

யையே அன்றோ? நல்லன கொடியன யாவும் உடன் பிறந்தவைதாம். இதையே நான் புராணங்கள் காசிபர் என்ற தத்துவமாக்கிக் காசிபருக்கே தேவர், அசுரர், மனிதர் மற்றும் எல்லா ஜீவராசிகளும் பிறந்தன என்கின்றன. இதை நினைந்து வீரவாகுதேவர் சகோதர பாவத்துடன் சூரபன்மனுக்குத் தருமத்தை எடுத்துக் கூறலானர்:

நாதை யாகியோள் காசிபன் ஆங்கவன் தனயன்
ஆத லால்உனக் கமரரைச் சிறைசெய்வ தறனே
வேத மார்க்கமும் பிழைத்தனை சிறுபொருள் விழைந்தாய்
நீதி யால்உல களிப்பதே அரசர்தம் நெறியே.

உயிரினங்கள் அத்தனை பேருக்கும் காசிபர்தான் பிதா. காசிபருக்குப் பதின்மூன்று மனைவிகள், அவர்களில் அதிதியின் வயிற்றிலே முப்பத்து முக்கோடி தேவர்களும் பிறந்தனர்.

"சூரபன்மனே! உனக்குத் தந்தை காசிபர். தேவர்களும் அவருடைய புதல்வர்கள்தான். எனவே, தேவர்கள் உனக்கு மூத்த சகோதரர்கள். அவர்களை நீ சிறை வைப்பது நியாயமா? தர்மமா? நீ வேத நெறியை விட்டுவிட்டாய். செம்மையான நெறியை நீ கைக்கொள்ளவில்லை. அற்பப் பதவியைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். மன்னனுக்கு என்று நீதி நெறி உண்டு. அந்த நெறியில் நிற்பதுதான் அரசனுக்கு அழகு, அந்த ராஜ தர்மத்தை நீ மேற்கொள்ள வேண்டாமா? குற்றமற்றவர்களைச் சிறையில் வைத்திருக்கலாமா? முன் காலத்தில் அசுரர்களுக்குத் தேவர்கள் துன்பம் செய்திருக்கிறார்கள் என்பதற்குப் பிரதியாக அவர்களைச் சிறை வைப்பதாயிருந்தாலும் அதற்கும் ஓர் எல்லை இருக்க வேண்டாமா?

பரம சாதுக்களுக்கும், மிகவும் உத்தமமான பெரியவர்களுக்கும் எவன் ஒருவன் தீங்கு செய்கிறானோ, மகான்களுக்கு எவன் கெடுதல் எண்ணுகிறானோ அவன் தன் அழிவுக்கு மட்டுமின்றித் தன் சுற்றத்தாருடைய அழிவுக்கும் காரணமாவான். அதுமட்டுமல்ல; பிறவி எழுந்தோறும் எழுந்தோறும் அந்தப் பாபம் அவனைத் தொடரும்.

மெய்மை நீங்கியே கொலைகள வியன்றுமே லுள்ள
செம்மை யாளரைச் சீறியே அணங்குசெய் தீயோர்
தம்மில் ஆற்றரும் பழிசுமந் தொல்லையில் தமரோ
டிம்மை வீடுவர் எழுமையுந் துயரினே டிருப்பார்.

சத்தியந்தவறி, கொலை களவுகள் புரிந்து "சூரபன்மா! நீ எத்தனை சாதுக்களுக்கும், மகரிஷிகளுக்கும் தீங்குசெய்தாய்? நீ இப்போதேனும் திருந்தினல் முருகன் அருள்பெற்று உய்வாய். திருந்தாவிடில் கூண்டோடு அழிந்துவிடுவாய். உனக்கு அறிவுரை சொல்ல யாரும் இல்லை. நான் சொல்கிற நல்லுரையையேனும் மனத்தில் வாங்கிக்கொள். போனதெல்லாம் போகட்டும். நீ இப்பொழுதேனும் தேவர்களைச் சிறையிலிருந்து விட்டு உய்யவேண்டும் என்பதற்காக உனக்கு நீதி நெறியை இதமாகச் சொல்லச் சொன்னர் முருகப் பெருமான். இன்னமும் நீ பிடிவாதமாக இருந்தால் முருகப் பெருமான் உன்னைக் குலத்தோடு அழித்துவிடுவார். இது உறுதி" என்று வீரவாகுதேவர் கூறினர்.

கெடுதல் இல்லதோர் அமரர்கள் சிறையிடைக் கிடப்ப
அடுதல் செய்தனை பல்லுகம் அவர்தமை இன்னே
விடுதல் உய்வகை ஆகுமால் மறுத்தியேல் விரைந்து
படுத லேநினக் குறுதியாம் முறையும்அப் பரிசே.

அவர் கூறியதைக் கேட்ட சூரபன்மனின் கண்கள் தீப்பொறி கக்கின. ஆத்திரத்துடன் அட்டகாசம் செய்தான். வீரவாகுதேவரை நோக்கி, "நீ தூதனக இருப்பதால் உன்னை விட்டுவிடுகிறேன். மாதரையும், தூதரையும் கொல்லக் கூடாது. நீ சொன்ன மொழிகளைச் சிவபெருமான் என்னிடம் வந்து சொல்லியிருந்தால் கௌரவமாக இருந்திருக்கும்; நாராயணர் வந்து சொல்லியிருந்தாலும் பாதகமில்லை. ஆயிரத்தெட்டு அண்டங்களையும் வென்று ஏகச் சக்கராதிபதியாய் விளங்கும் எனக்குப் பல் முளைக்காத சின்னஞ்சிறு குழந்தை புத்தி சொல்லியனுப்ப. அதனை ஏவலாளாகிய நீ எடுத்தியம்புவதா? இதைவிட அவமானம் என்ன வேண்டும்? தூதனே! சிறையில் அடைத்து வைத்திருக்கும் தேவர்களை ஒருகாலும் விடுதலை செய்யமாட்டேன். அது

மட்டும் அல்ல; எனக்குப் பயந்து எங்கோ ஓடி ஒளிந்து கொண்டிருக்கிற இந்திரனையும் பிடித்துச் சிறை செய்யவிருக்கிறேன். என் அருமைச் சோதரன் தாரகனைக் கொன்றவன் சிறு பிள்ளை என்பதாலேயே, "பச்சிளங் குழந்தையுடனா போர் செய்வது?" என்று கட்டுப்படுத்திக் கொண்டேன். மற்றபடி எனக்கு முருகனிடம் அச்சமேதும் கிடையாது. அவனுடைய குழந்தைப் பேச்சுக்கு இந்த சூரன் செவிசாய்க்க மாட்டான். என் போக்கை யாரும் மாற்ற முடியாது" என்று கர்ஜித்தான்.

"மேலை ஆயிரத் தெட்டெனும் அண்டமும் வென்றே
ஏலு கின்றதோர் தனியிறை யாகிய எனக்குக்
கோல வாலெயி றின்னமுந் தோன்றிலாக் குதலைப்
பால னேகொலாம் இனையன புந்திகள் பகர்வான்!"

"என் ஆளுகைக்குட்பட்ட ஆயிரத்தெட்டு அண்டங்களிலே, ஆயிரத்தெட்டு நாராயணர்கள் எனக்கு அடங்கி வேலை செய்கிறார்கள். ஓர் அண்டத்திற்கு ஒரு பிரமன் வீதம் ஆயிரத்தெட்டு பிரமர்கள் என் ஏவலைச் செய்கிறார்கள். ஓர் அண்டத்திற்கு ஓர் இந்திரன் வீதம் ஆயிரத்தெட்டு இந்திரர்கள் என் உத்தரவுக்குக் காத்து நிற்கிறார்கள். என்னிடம் தோற்றுப்போய், எனக்கு 'ஜய விஜயீபவ' கூறுகிறார்கள். அப்படியிருக்க ஏன் வீண் பேச்சு? சிறு குழந்தையின் பேச்சைக் கேட்டு இங்கே வந்த உன்னை ஒரு பேதையாகக் கருதி உனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தேன். பிழைத்துப் போ; ஓடு" என்றான்.

அரிகள் எண்ணிலர் இந்திரர் எண்ணிலர் அல்லாச்
சுரர்கள் எண்ணிலர் அண்டங்கள் தொறுந்தொறும் இருந்தார்
செருவின் ஆற்றலர் வழுத்தியே போயினர் சிவன்கண்
நெருநல் வந்திடு சிறுவனோ என்எதிர் நிற்பான்.

சூரபன்மனின் மறுமொழியைக் கேட்ட வீரவாகு தேவருக்கு ஆத்திரம் பொங்கியது. ஆயினும் சூரபன்மனுக்காக இரக்கப்பட்டார். 'அவன் விளங்காமல் பேசுகிறான். நான் வந்தது அவனுக்கு விளங்க வைக்கத்தானே? அவன்

விளங்காமல் கூச்சல் போட்டால் நாமும் எதிர்க் கூச்சல் போடுவதா?' என்று எண்ணினர். மீண்டும் நல்ல வார்த்தை கூறினர்.

முருகப் பெருமான் சிறுவராயிருப்பினும் சக்தியில் மிகப் பெரியவர் என்று சூரனுக்கு விளக்கு முகமாக, அரியும் அய னும் அடி முடி தேடியும் காணமாட்டாத அரன் மகன் அவர் என்பதைக் கூறினர் வீரவாகு தேவர்.

மண் அளந்திடும் மாயனும் வனசமே லவனும்
எண்ணரும் பகல் தேடியுங் காண்கிலா திருந்த
பண்ணவன் நுதல் விழியிடைப் பரஞ்சுடர் உருவாய்
உண்ணிறைந்த பேரருளினல் மதலையாய் உதித்தான்.

மாலும் அயனும் எண்ணில்லாத காலம் தேடியும் காண மாட்டாத சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து, முருகப் பெருமான் திருவுள்ளத்தில் எழுந்த பெருங் கருணை யினல் சோதி சொருபமாய்க் குழந்தையாய்த் திருஅவதாரஞ் செய்தருளினர்.

முன்ன வர்க்குமுள் ளுகுவோர் தமக்கு முற்பட்டுத்
தன்னே நேரிலாத ஈசனும் தனிப் பெயர் தாங்கி
இன்னுயிர்க் குயிராய் அருவுருவமாய் எவர்க்கும்
அன்னே தாதையாய் இருந்திடும் பரமனே அவன்காண்.

முன்னவர்க்கும் முன்னுக நிற்பவர் தமக்கும் முற்பட்டும். தனக்கு ஒப்பின்றி. ஈசன் என்ற திருப்பெயரைத் தாங்கியும், உயிர்க்கு உயிராயும், அருவுருவாயும், எல்லார்க்கும் அம்மை யப்பராயும் விளங்குகின்ற சிவபெருமானே முருகன்.

''ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன்காண்
ஆசிலா அவன் அறுமுகத் துண்மையால் அறிநீ
பேசில் ஆங்கவன் பரனெடு பேதகன் அல்லன்
தேசுலா வகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்''

'சூரபன்மனே! சங்கரனே ஷண்முகன்; ஒரு திருவிளை யாடல் காரணமாக சிவமூர்த்தி குழந்தையாக வந்தனர். குற்றமற்ற அவருடைய ஆறுமுகங்களின் உண்மையால் நீ

உணர்வாயாக; மாணிக்க மணியிலிருந்து ஒளிவரும்; அந்த மணி வேறு ஒளி வேறு அல்ல; சிவன் என்னும் மாணிக்கக் கல்லிலிருந்து தோன்றும் ஒளி முருகன்.

சிவபெருமான் வேறு; கந்தன் வேறு என்று நினைத்தது தான் சூரபன்மன் செய்த பெரும்பிழை. சூரனுக்கு வீரவாகு இதனை எடுத்துக் காட்டினார்.

பூதம் ஐந்தினுட் கீழ்நிலைத் தாகிய புவியுள்
ஓது கின்றபல் லண்டத்தின் ஓராயிரத் தெட்டும்
கோதில் ஆக்கமும் படைகளும் உனக்குமுன் கொடுத்த
ஆதி யீசனே அவன்எனில் மாற்றுவ தரிதோ.

பஞ்சபூத அண்டங்களுள், கீழே யுள்ளவை பிருதிவி யண்டம் ஆயிரங் கோடியாகும். அவற்றுள் ஆயிரத்தெட்டு அண்டமும் செல்வமும் ஆயுதங்களும் உனக்கு உரியனவாகத் தந்த முதற்கடவுளாகிய சிவபெருமானே அந்த முருகப் பெருமான் என்றால், தந்த அவர் அவற்றை மாற்றுவது அரிதோ?

ஏதமில்புவி யண்டங்கள் பெற்றனம் என்றே
பேதை உன்னினை; சிறிதவன் தன்னருள் பெறுவோர்
பூதம் ஐந்தனும் ஏனைய திறத்தினும் புறத்து
மீதுமாம் அண்டம் எவற்றிற்கும் வேத்தியல் புரிவார்.

அறிவில்லாதவனே! பிருதிவியண்டங்களில் சிலவற்றை மட்டும் பெற்றோம் என்று எண்ணி அகங்கரித்தனை; அப் பெருமானுடைய திருவருளைச் சிறிது பெறுவோர்கள், பஞ்ச பூத அண்டங்களினும், மற்றை ஆன்ம தத்துவ அண்டங்களினும், வித்யா தத்துவ அண்டங்களினும், இவற்றிற்கெல்லாம் மேலாய சிவ தத்துவ அண்டங்களிலும் அரசியல் புரிவார்கள்.

எல்லாவற்றிற்கும் முதலாகிய பிரணவமும் திருஐந் தெழுத்தும், வேதங்கள் அனைத்தும், பல ஆகமங்களும், மற் றைக்கலைகளும், இவற்றால் எட்டும் ஞானங்களும் குமாரக் கடவுளின் ஒப்பில்லாத திருவுருவமாகும்.

ஆதி யாகிய குடிலையும் ஐவகைப் பொறியும்
வேதம் யாவையும் தந்திரம் பன்மையும் வேரு
ஓத நின்றிடு கலைகளும் அவ்வவற் றுணர்வாம்
போதம் யாவையும் குமரவேள் பொருவிலா உருவம்.

பிரமதேவன் முதலிய தேவர்களும் பொருள் தெரியாது மயங்குகின்றதும் வேதங்கட்கெல்லாம் முதன்மை பெற்று விளங்குவதும் ஆகிய ஓம் என்ற பிரணவ மந்திரமே ஒப்பில்லாத முருகனுடைய திருமுகங்களுள் ஒன்ருகும். அங்ஙனமாயின் அப்பெருமானுடைய பெருமையை யாவர் சொல்ல வல்லவர் ?

தாம ரைக்கணுன் முதலிய பண்ணவர் தமக்கும்
ஏமு றப்படும் மறைக்கெலாம் ஆதிபெற் றியலும்
ஓமெ னப்படும் குடிலையே ஒப்பிலா முருகன்
மாமு கத்துள்ஒன் ரும்அவன் தன்மையார் வகுப்பார்.

"பிரபஞ்சம் எங்கும் நிறைந்து அருள் செய்கின்ற குமர வேளுக்கு எங்கும் திருமுகங்கள்; எங்கும் திருக்கண்கள்; எங்கும் திருச்செவிகள்; எங்கும் திருக்கரங்கள்; எங்கும் திருவடிகள்; எங்கும் திருமேனி, அடியார்கள் எங்கெங்கு கண்ணீர் விடுகிருர்களோ அங்கெல்லாம் தேடிச் சென்று அவரது முகம் அருள் புரிகிறது.

எங்கணும் பணி வதனங்கள் எங்கணும் விழிகள்
எங்கணும் திருக் கேள்விகள் எங்கணும் கரங்கள்
எங்கணும் திருக் கழலடி எங்கணும் வடிவம்
எங்கணும் செறிந் தருள்செயும் அறுமுகத் திறைக்கே.

சிவபெருமானும் அவர்; திருமாலும் அவர்; பிரமாவும் அவர்; திசை பாலகர்களும், சந்திர சூரிய அக்கினி என்ற மூச்சுடர்களும், முனிவர்களும் தேவர்களும் அவர் இவர்களியாவர்க்கும் மேலானவரும் அவரே.

முக்கண் மூர்த்தியும் ஆங்கவன் முண்டகா சனனும்
சக்க ரப்படை அண்ணலும் ஆங்கவன் தானே
திக்குப் பாலரும் கதிர்களும் முனிவரும் சிறப்பின்
மிக்க தேவரும் ஆங்கவன் யாவர்க்கும் மேலோன்.

ஈட்டு மன்னுயிர் எவற்றிற்கும் இருவினைப் பயனைக்
கூட்டு வானவன் ஆங்கவை துலையெனக் கூடின்
வேட்ட மேல்நிலைக் கதிபுரி வான்அவன் மேலாய்க்
காட்டு வான்முதல் திறம்எலாம் ஆங்கவன் கண்டாய்

இருவினைகளை ஈட்டுகின்ற உயிர்கட்கெல்லாம் அவ்வினைப் பயனைக் கூட்டுகின்றவர் அவர்; அவ்வுயிர்கட்கு இருவினை யொப்பு உண்டாக்கிய காலத்தில், அவை விரும்பிய மேலான முத்தியைக் கொடுப்பவர்; காண்பான், காட்சி, காட்சிப்பொருள், காட்டுவான் ஆகிய திறங்கள் எல்லாம் அவர்.

சிறுவன் போலுறும் குரவனே போலுறும் திணையில்
குறியன் போலுறும் நெடியவன் ஆகியுங் குறுகும்
நெறியின் இன்னணம் வேறுபல் லுருக்கொடு நிலவும்
அறிவர் நாடருங் கந்தவேள் ஆடலார் அறிவார்.

சிவமூர்த்தியின் அருளாடலால் எழுந்தருளிய முருக வேளின் ஆணையினாலன்றி ஓரணுவும் அசையாது; அவரு டைய ஆற்றலைக் கடந்தவர் யாவர்? சூரபன்மனே! நீ அவரு டைய மாயையில் அகப்பட்டு மிக மயங்கினாய்.

எல்லை யில்லதோர் பொருளெலாம் ஆகுறும் இயாவும்
அல்ல னாகியும் இருந்திடும் அருவமு மாகும்
பல்வ கைப்படும் உருக்கொளும் புதியரில் பயிலும்
தொல்லை ஆதியாம் அநாதியும் ஆகியே தோன்றும்.

அக் கடவுள் முடிவு இல்லாத பொருள்களுமாவர், அவை அல்லவுமாவர்; அருவப் பொருளுமாவர்; பல்வேறு வகைப் பட்ட உருவங்களையும் கொள்வர்; புதியருமாவர்; பழையரு மாவர்; அநாதியும் அவரே யாவர்.

வாரி வீழ்தரும் புன்னுனித் துள்ளிகள் மான
நேரி லாதமர் குமரவேள் நெடியபேர் உருவின்
ஒரு ரோமத்தின் உலப்பிலா அண்டங்கள் உதிக்கும்
ஆர வன்திரு மேனியின் பெருமையை அறிவார்.

குமாரக் கடவுளின் திருமேனியிலுள்ள ஒரு உரோ மத்தில் புல் நுனியின் மழைத்துளிபோல், அளவிறந்த

அண்டங்கள் தோன்றும்; ஆர் அவருடைய திருமேனியின் பெருமையை அறிவார்?

தொலைவி லாஉயிர்த் தொகுதியும் தொல்லைஐம் பூதத்
தலைவில் அண்டமும் ஏனவும் ஆதியங் குமரன்
நிலைகொள் மேனியில் நிவர்தரும் உரோமத்தி னின்றே
உலவை யின்றிமுன் உதித்திடும் இறுதிநாள் ஒடுங்கும்.

ஆன்ம கோடிகளும், பஞ்சபூத அண்டங்களும், மற்றைத் தத்துவ அண்டங்களும், சிருட்டி காலத்தில் குமாரக் கடவுளின் திருமேனியில் உள்ள ஒரு உரோமத்தினின்றே தோன்றும்; சங்கார காலத்தில் அதில் ஒடுங்கும்.

தண்டல் இல்லதோர் ஒன்றொரு மயிர்நுனித் தலையின்
அண்டம் எண்ணிலகோடிகள் கோவைபட் டசையப்
பண்டு மேருவில் கந்தவேள் கொண்டதோர் படிவங்
கண்டிலாய் கொலாம் கணிப்பிலாப் பவம்புரி கடியோய்.

அப் பெருமானுடைய கெடுதல் இல்லாத ஒரு உரோமத்தின் நுனியில் எண்ணில்லாத அண்டகோடிகள் கோவைபட்டு அசைவதை முன்னொருநாள் மேருமலையில் எம்பெருமான் கொண்ட விசுவரூபத்தை அளவில்லாத பாவத்தைச் செய்த நீ காணவில்லை போலும்.

அளப்ப ருங்குணத் தாதியாம் எம்பிரான் அமரர்
தளைப் படுஞ்சிறை மாற்றவும் சதுர்முகன் முதலோர்
கொளப்ப டுந்துயர் அகற்றவும் கொடியரை யறுத்து
வளப்ப டும்பரி சுலகெலாம் போற்றவும் வந்தான்.

அளவிடப்படாத குணங்களை யுடைய முழுமுதற் கடவுளாகிய அவர் தேவர்களுடைய சிறையை விடுவிக்கவும், பிரமா முதலாயினோருடைய துயரை நீக்கவும், தீயரை அழித்து உலகங்கள் எல்லாவற்றையுங் காக்கவும் திருவுருக் கொண்டு வந்தருளினார்.

வாழி யானநின் ஆயுளும் வன்மையும் வரமும்
கேழில் சுற்றமும் படைகளும் வான்தொடக் கிளர்ந்து
பூழி யாலுயர் மால்வரைச் சூழலில் புகுந்த
ஊழி மாருதம் போலடும் எம்பிரான் ஒருவேல்.

நெடுங்காலமாகவுள்ள உனது வாழ்நாளையும், வலிமை யையும், வரத்தையும் சிறந்த சுற்றத்தையும், புழுதி மலையில் புகுந்த உகாந்த சண்ட மாருதம் போல், எம்பிரானுடைய ஒப்பற்ற வேலாயுதம் அழித்துவிடும் என்று வீரவாகுதேவர் கூறினார்.

ஆணவமே வடிவமான சூரபன்மன் கந்தநாயகனின் பெருமையை உணரவில்லை; வீரவாகுதேவர் எவ்வளவோ எடுத்துரைத்தும் திருந்தவில்லை. எண்ணிறந்த குற்றங்களைச் செய்த சூரன் பச்சாத்தாபமோ, திருந்தவேண்டும் என்ற உணர்வோ பெறவில்லை. அவரது நல்லுபதேசம் விழலுக்கு இறைத்த நீராகவே வீணாயிற்று. முன்னிலும் பெருஞ் சினம் கொண்டான் சூரன். "உயிரை விட்டாலும் விடுவேனே யன்றித் தேவர்களைச் சிறையினின்றும் விடுதலை செய்யமாட்டேன்" என்றான். அதைக் கேட்ட வீரவாகு தேவர், "அப்படியானல் நீ ஐயனின் வேலால் அழிந்துபடுவாய்" என்றார்.

சூரபன்மன் தூதரைக் கொல்லுதல் கூடாது என்று உணர்ந்தவன். விரவாகு கூறிய மொழிகளைக் கேட்டு சூரபன்மன் திருந்தவில்லை.

எனவே வீரவாகுதேவரைக் கொல்ல ஆணை பிறப்பிக்கவில்லை. அருகிலிருந்த வீரர்களில் ஆயிரவரை நோக்கி, "இவனையும் பிடித்து, இவன் காக்க வந்த தேவருடன் சிறையில் அடையுங்கள்" என்று உத்தரவிட்டான்.

வீரர்கள் வீரவாகுதேவரைப் பிடிப்பதற்குச் சூழ்ந்து கொண்டார்கள். தனியொருவரான அவரே அந்த ஆயிரம் வீரர்களின் சிகைகளையும் ஒரு கையால் பிடித்துச் சூரபன்மனின் அவைக்களத்திலேயே அடித்துக் கொன்றார்; மலைகளைப் பெயர்த்தெறிந்து நகரையே நிர்மூலமாக்கினார். சூரனின் எதிரிலேயே இறந்தவரின் உடல்களை எறிந்து அங்கிருந்து கிளம்பினார். அவர் அகன்றதும் அவர் அமர்ந்திருந்த சிங்காதனமும் மாயமாய் மறைந்தது.

13. சதமுகன் வதைப் படலம்

வீரவாகு செய்த வீர சாகஸங்களைக் கேட்கக் கேட்க சூரபன்மனுக்கு ஆத்திரம் எல்லை மீறிப் பொங்கிற்று. சதமுகனை அழைத்து "நீ போய் அவனைப் பிடித்து அடக்கிக் கொண்டு வா" என்று ஆணையிட்டான். சதமுகன் வீரர் பலரின் துணையுடன் வீரவாகுதேவரைத் தொடர்ந்தான். வீரவாகுதேவர் கந்தவேளைத் தியானித்துச் சதமுகனின் படையுடன் போரில் இறங்கினர். கந்தன் கருணையினால் அசுரர் எய்த படைக்கலங்களைத் துகள் துகளாக்கி அழித்தார். இருபதினாயிரம் சிகரங்களைக் கொண்ட ஒரு சூளிகையைப் பறித்து அசுரர்கள் மீது எறிந்தார் வீரவாகுதேவர். அது அசுரர்களை மாய்த்தது. வீரவாகுதேவர் சதமுகனைப் பூமியில் உருட்டி அவனுடைய நூறு தலைகளையும் இடறிக் கொன்றார். 'கருணை நிறைந்த கந்தவேளின் அறவுரையை இகழ்ந்து பேசிய சூரபன்மனின் அத்தாணி மண்டபத்தை முதலில் அழித்துவிட்டுப் பின்னர் அவனது நகரத்தையும் அழிக்கவேண்டும் என்று எண்ணம் கொண்டனர் வீரவாகுதேவர்.

14. காவலாளர் வதைப் படலம்

கந்தவேள் திருவடிகளை நினைந்து வீரவாகுதேவர் பேருருவம் கொண்டார். அந்தப் பேருருவத்தின் சுமை தாங்காது வீரமகேந்திரபுரி நடுங்கியது.

அரண்மனையைக் காவல் புரிந்த ஐம்பது வெள்ளம் அசுரர்களையும் அழித்தனர் வீரவாகுதேவர்.

15. நகரழி படலம்

ஐந்நூறு யோசனை அகலமும் ஆயிரம் யோசனை உயரமும் இலட்சம் சிகரங்களும் கொண்ட ஒரு செய்குன்றைக் கையால் பெயர்த்தெடுத்து அத்தாணி மண்டபத்தில் அதனை வீசினர். அதனால் மண்டபத்தில் பெரும் பகுதி அழிந்தது. இதனைக் கண்ட சூரபன்மன் ஐந்நூறு முகங்களும், ஆயிரம் தோள்களும் உடைய ஆயிரம் வீரர்களை ஏவினன். அவர்கள் வீரவாகுதேவரை யடைந்து போர் செய்வதற்கு முன்பே அவர் வீரமகேந்திரபுரியின் சோலை மண்டபம், கோபுரம் இவற்றை

யும் மற்றுமிருந்த வனப்புக்களையும் அழித்து, மதில்களை உதைத்துச் சிதைத்துச் சூரபன்மனின் அரண்மனையையும் அழித்தார். சூரபன்மனின் அரண்மனையைச் சூழ்ந்த அகழியைத் தூர்த்தார். அசுரர்கள் இறந்ததால் ஏற்பட்ட உதிரப் பெருக்கம் வீரமகேந்திரத்தைச் சேருக்கியது. வரவிருக்கும் பேரழிவுக்குக் கட்டியம் கூறியது போல் வீரமகேந்திரபுரி தன் வளங்களையெல்லாம் இழந்து அழிந்தது.

16. சகத்திர வாகுகள் வதைப் படலம்

ஐந்நூறு தலைகளும் ஆயிரம் கைகளும் கொண்ட சகத்திர வாகுகள் வந்து வீரவாகுதேவரை எதிர்த்தனர். அவர்களை மராமரத்தினால் அடித்துக் கொன்றார் வீரவாகுதேவர். ஆகாயத்தில் நின்று போரைப் பார்த்துக் கொண்டிருந்த சூரபன்மனின் ஒற்றர்கள் சகத்திரவாகுகளை வீரவாகுதேவர் கொன்றுவிட்ட செய்தியைச் சூரனுக்குத் தெரிவித்தார்கள். இச்செய்தியைக் கேட்ட சூரபன்மனின் கோபம் வடவாமுகாக்கினி போலக் கொழுந்துவிட்டெரிந்தது.

17. வச்சிரவாகு வதைப் படலம்

சூரபன்மனின் இளைய மகன் வச்சிரவாகு. அவன் வச்சிர சரீரமும், பத்துத் தலைகளும், இருபது தோள்களும் உடையவன். தந்தையின் கோபத்தைக் கண்ட அவன் தானே வீரவாகுவைச் சிறைப்பிடிக்கச் சென்றான்.

பதினாயிரம் குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு தேரின் மீது, போர்க்கோலம் பூண்ட வச்சிரவாகு ஏறிக் கொண்டான். அவனது தோழர்களும் தேர்களில் ஏறிக்கொண்டு, வச்சிர வாகுவைச் சூழ்ந்தனர். பேரிகை, சங்கு, உடுக்கை, துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்க, வச்சிரவாகு தனது சேனைகளுடன் வீரவாகுதேவரை நோக்கி விரைந்து சென்றான். அவன் போருக்குப் புறப்பட்டுச் சென்றபோது துர்ச் சகுனங்கள் பல தோன்றின. காகம், கழுகு, பருந்து, முதலியவை இரக்கத்துடன் கூவின. வச்சிரவாகுவின் கையிலிருந்த வில் தானாகவே நழுவி விழுந்தது. அவனது அம்பறாத் தூணி

அறுந்தது. தேர்க்கொடிகள் கிழிந்து விழுந்தன. வச்சிரவாகுவின் இடத் தோளும், இடக் கண்களும் துடித்தன.

வச்சிரவாகு போர்க்களத்தை அடைந்தான். அவனிடம் சூரபன்மனின் முகச் சாயலைக் கண்டார் வீரவாகுதேவர். "சூரபன்மனின் புதல்வர்களில் ஒருவன் வந்திருக்கிறான். இவனையும் அழித்து இன்று மாலை கந்தக் கடவுளின் திருவடிகளைத் தரிசிக்கும்படி விரைந்து செல்வேன்" என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டு, கந்தவேளின் கருணையைவேண்டி வணங்கித் துதித்தார். பின் தமது தோள்களைத் தட்டி ஆரவாரம் செய்தார். அப்போது வானமும் வையமும் குலுங்கின.

"இப்பொழுது எழுந்த ஒலியைப் போன்ற ஒலியைப் பதினான்கு உலகங்களிலும் நான் கேட்டதில்லை. இது என்ன ஒலி?" என்று தனது தேர்ப்பாகன் விசயனிடம் கேட்டான். வச்சிரவாகு.

"இளைய மகாராஜா! அந்தத் தூதன் தோள்களைத் தட்டினான், அதனால் ஏற்பட்ட ஒலி இது" என்று தேர்ப்பாகன் கூறினான்.

வீரவாகுதேவருக்கும் வச்சிரவாகுவின் படைகளுக்குமிடையே பயங்கரப் போர் மூண்டது.

அசுர வீரர்களும் வச்சிரவாகுவின் அருமைத் தோழர்களும் வீரவாகுதேவரால் மாண்டனர். வச்சிரவாகுவை நெருங்கிய வீரவாகுதேவர் பேருருவம் எடுத்து ஆரவாரம் செய்தார்.

இருவரும் சளைக்காமல் களைக்காமல் கோர யுத்தம் புரிந்தனர். போரின் தீவிரம் முற்றி, வீரவாகுவின் அங்கங்கள் மீதெல்லாம் அம்பு தொடுத்துப் புண்ணாக்கினான் வச்சிரவாகு.

வெகுண்டெழுந்த வீரவாகுதேவர் வச்சிரவாகுவின் தேரைக் கையால் எடுத்து வானத்தில் எறிந்தார்; அவனுக்குத் துணையாக வந்திருந்த மற்ற தேர்களை அழித்தார். விண்ணில் தேருடன் தூக்கி எறியப்பட்ட வச்சிரவாகு இலட்சம் யோசனை தூரம் ஆகாயத்தில் சென்று வீரவாகுதேவரின்

முன்பு திரும்பி வந்து விழுந்தான். சிறிதும் களைப்பின்றி வீர வாகுதேவருடன் மீண்டும் போர் செய்ய ஆயத்தமானான். உடனே, வீரவாகுதேவர் அவனது வில்லைப் பறித்து முறித்தார். அதன் பின் வாட்படையால் வீரவாகுதேவரை எதிர்த்துப் போர் செய்தான் வச்சிரவாகு. தமது வாளினால் அவனது கையை வெட்டி வீழ்த்தினார் வீரவாகுதேவர். ஒரு கை துண்டிக்கப்பட்டதும் மற்றொரு கையால் ஒரு தண்டாயுதத்தை எடுத்து வீரவாகுதேவர் மீது எறிந்தான் வச்சிரவாகு. அந்த ஆயுதத்தைப் பொடியாக்கி வச்சிரவாகுவின் பத்துத் தலைகளையும் வாளாயுதத்தினால் அறுத்தார் வீரவாகு. அசுர அரசிளங் குமரன் மாண்டான்.

வச்சிரவாகு இறந்தபின் வீரவாகுதேவருடன் போர் செய்ய அசுரர்கள் எவரும் முன் வரவில்லை. மாலைப்பொழுது வருவதைக் கண்ட வீரவாகுதேவர் கந்தக் கடவுளின் திருவடிகளை நினைந்து, திரும்பிச் செல்ல விரும்பினார். போரைவிட்டு வீதி வழியே காற்றும் கனலும் காலனும் சேர்ந்து போவது போலப் போனார்.

18. யாளிமுகன் வதைபடலம்

ஆகாய வழியாக வீரமகேந்திரத்தை விட்டுப் புறப்பட்டார் வீரவாகு. வடதிசையில் உள்ள இலங்கை மலையை அடைந்தார். ஆயிரம் முகங்களும் ஈராயிரம் கைகளும்உடையவனும், இயமபுர வாசல் போன்ற வாய்களைப் பெற்றவனுமான யாளிமுகன் இலங்கையைக் காவல் செய்து கொண்டிருந்தான். அன்று காலை அவன் சூரபன்மனிடம் சென்றிருந்தான்; அப்போது தனது மகன் அதிவீரன் வீரவாகுவால் கொல்லப் பட்ட செய்தியறிந்தான். வீரவாகுதேவர் விரைந்து செல்லுவதைக் கண்ட அவன், 'என் மகன் அதிவீரனைக் கொன்றவன் அதோ வருகிறான்' என்று ஊகித்து ஆத்திரமுற்றான்.

யாளிமுகனும் அவனது வீரர்களும் வீரவாகுதேவரைச் சூழ்ந்து கொண்டார்கள். வீரவாகுதேவர் அக்கூட்டத்துள் நுழைந்து அவர்களை வெட்டி வீழ்த்தினர். யாளிமுகனின் ஈராயிரம் கைகளையும் அவர் அறுத்துத் தள்ளினர். அவர்

தனது ஆயிரம் துதிக்கைகளாலும் வீரவாகுதேவரைப் பிடிக்க முயன்றான். அவனது ஆயிரம் தலைகளையும் ஒருங்கே அறுத்து யாளிமுகனைக் கொன்றார் வீரரில் வீரரான வீரவாகு.

19. வீரவாகு மீட்சிப் படலம்

இடையூறுகள் யாவும் நீங்கின. அதன்பின் ஒரே மூச்சில் வீரவாகுதேவர் கடலைத் தாண்டிக் கந்தமாதன மலையைச் சார்ந்துள்ள திருச்செந்தூரை அடைந்தார். கந்தக் கடவுளின் பூத சேனைகள் வீரவாகு தேவரைக் கண்டு முழுமதியைக் கண்ட கடல் போல் கோஷித்தன. பூதகணங்களின் தலைவர்கள் கரம் குவித்து அவரை வணங்கிப் பின்னர் ஆரத் தழுவிக் கொண்டார்கள்.

பகைவனிடத்தும் அன்பு செய்யும் வீரவாகு தம் உற்றோரின் அன்பில் கரைந்தார். "அந்தப் பாவிகள் வாழும் ஊரைப் பார்த்ததால் அடைந்த பாவம் உங்களைக் கண்டதால் நீங்கிப் போயிற்று" என்று அவர்களிடம் மிகுந்த அன்புடன் கூறினார் வீரவாகுதேவர்.

திருச்செந்தூர் திரும்பிய வீரவாகுதேவர், முருகப் பெருமானின் திருவடிகளை வணங்கி இவ்விஷயத்தையெல்லாம் கூறலானார்.

"அண்ணலே! கல்லைப் பஞ்சாக்க முடியாது. மூடர்களை யாராலும் திருத்த முடியாது. தேவரீரின் திருவாக்கைச் சூரபன்மனிடம் கூறினேன். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் சூரபன்மன் திருந்தவில்லை. வேல் ஒன்றுதான் அவனைத்திருத்தும்" என்றார் வீரவாகுதேவர்.

"வீரவாகு! நீ எப்படி மீண்டு வந்தாய்? நீ செய்த செயல்கள் யாவை? அவற்றைப்பற்றி யெல்லாம் சொல்லவில்லையே. அவற்றையும் சொல்" என்று அன்பு உருவமாகிய ஆறுமுக வள்ளல் ஆர்வமிகுதியுடன் அவரைக் கேட்டார்:

"தங்களுக்குக் கூறவும் வேண்டுமா? சூரபன்பனின் நகரத்திற்குச் சென்று மீண்ட போது அடியேனின் காரியத்தைத் தடுத்து இடையூறு செய்தவர்களைத் தேவரீரின் திருவருளைத்

துணையாகக் 'கொண்டு தானேவென்று வந்தேன்?'' என்று வீரவாகுதேவர் கூறினர்.

முருகக் கடவுளின் திருவுள்ளத்தில் திட சங்கற்பம் உருவாயிற்று. பிரமன், இந்திரன் முதலிய தேவர்களைப் பார்த்து, ''நாம் சொல்லியனுப்பிய அறிவுரையைச் சூர பன்மன் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆதலால், நாமே நாளைக்கு அவனோடு போர் செய்யப் புறப்படுவோம்'' என்று கூறி யருளினர்.

தேவர்கள் அதனைக் கேட்டுப் பேரானந்தம் எய்தினர். ''எங்கள் துன்பம் இப்போதே நீங்கியது'' என்று கூத்தாடினர்.

வீரவாகுதேவர் தாம் சயந்தனைச் சிறையில் சந்தித்து வந்ததையும், அவனுக்கு ஆறுதல் கூறியதையும் இந்திரனுக்கு எடுத்துரைத்தார். இன்பம் என்பதையே மறந்திருந்த இந்தி ரனும் அதைக் கேட்டுப் பெருமகிழ்ச்சியுற்றான்.

20. சூரன் நகர்புரி படலம்

இங்கே திருச்செந்தூரில் தேவர்கள் இவ்வாறு மகிழ்ந் திருந்த வேளையில் வீரமகேந்திரபுரியிலே வச்சிரவாகு இறந்த தையும் வீரவாகுதேவர் மீண்டு சென்றதையும் கேள்வியுற்ற சூரபன்மன் துயரக்கடலில் ஆழ்ந்திருந்தான்; அவனது சுற்றத் தாரும், பதுமகோமளையும் கதறி அழுதார்கள். மகேந்திர புரியில் மங்கல ஒலி அடங்கியது; அழுகைக் குரல் ஓங்கியது.

ஆற்றொணுத் துயரில் சூரபன்மன் ஆழ்ந்திருந்த போது மந்திரி தருமகோபன் வந்து வணங்கினன். ''ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அளவற்ற செல்வங்களையும் பெற்று ஒப் பாரும் மிக்காருமின்றி ஆட்சி புரியும் அரசர்க்கரசே! தாங்கள் கண்ணீர் விட்டால் மும்மூர்த்திகளும் தேவர்களும் நகைக்க மாட்டார்களா? உங்கள் புகழ் குன்றிப் போகாதா? எவ்வளவு இன்னல்கள் நேர்ந்தாலும் மனவலி குன்றாது தாம் எண்ணிய காரியங்களைச் செய்து முடிப்பவர்களே வீரர்கள். விதியை வெல்ல யாராலும் முடியாது. உங்கள் புதல்வனின் விதி முடிந்து விட்டது. ஆதலால்தான் கந்தனின் தூதன் அவனைக் கொன்றானேயன்றி, அந்தத் தூதனின் வீரத்தினால்

நம் இளவல் இறந்துபடவில்லை. வரம்பில்லா வரங்களைப் பெற்ற தாங்கள் இதற்காக வருந்தக் கூடாது'' என்று கூறி, மேலே நடக்க வேண்டியதை ஆராய்ந்து பார்க்கும்படி வேண்டினன்.

சூரபன்மன் ஒருவாறு மனம் தெளிந்தான். இனி என் செய்வது என்று யோசித்த அவன் அழிந்த நகரத்தைப் புதுப்பித்துத் தன் தோல்வியை விரைவில் மறைத்துவிட வேண்டும் என்று முடிவு செய்துகொண்டான். அருகிலிருந்த ஏவலர்களை நோக்கி, ''நீங்கள் விரைந்து சென்று பிரமனை அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டான்.

அந்த ஏவலர்கள் அச்சத்துடன் கூறினர்: ''பிரமன் இந்திராதி தேவர்களோடு முருகனுடன் போய்த் தங்கி இருக்கிறன் என்று நேரில் பார்த்தவர்கள் சொன்னர்கள்; நாம் அழைத்து அவர் வருபவராகத் தெரியவில்லை.''

சூரபன்மன் நெருப்புச் சிரிப்பு சிரித்தான். ''இந்த அண்டத்துப் பிரமன்தானே நமக்குத் துரோகம் செய்து விட்டு எதிரியுடன் போய்ச் சேர்ந்துகொண்டான்? மற்ற அண்டங்களில் உள்ள பிரமன்களில் ஒருவனை அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டான்.

அதன்படி ஒரு பிரமன் வந்ததும், ''எதிரியின் தூதன் அழித்த இந்நகரத்தை முன் போல் அழகாக நிர்மாணம் செய்'' என்று சூரன் உத்தரவிட்டான். ''இமைப் பொழுதில் உமது ஆணையை நிறைவேற்றுவேன்'' என்று கூறிய இந்தப் பிரமன் வீரமகேந்திரபுரியின் அழிந்த வீதிகளை முன்னிலும் அழகுற அமைத்தான்; சோலைகள் முன்னிலும் பசுமையாகத் திகழ்ந்தன; நீர் நிலைகளிலே நீர் வளம் முன்னிலும் மிகுந்தது; முன்னிலும் உறுதியாக மதில்களும் கோபுரங்களும் அமைந்தன. அவற்றைக் கண்டு மகிழ்ந்த சூரபன்மன், அதன் அழகை வியந்தான். ''நீ உன்னுடைய அண்டத்துக்குச் சென்று முன் போல் படைப்புத் தொழிலைச் செய்துகொண்டிரு'' என்று அந்த பிரமனுக்கு ஆணையிட்டான்.

21. சூரன் அமைச்சியல் படலம்

சூரன் செந்தில் மாநகருக்கு அனுப்பியிருந்த பகன், மயூரன் முதலிய ஒற்றர்கள் முருகப் பெருமானின் சேனைகளைக் கண்டு திரும்பி வந்தார்கள். அவர்கள் அசுரபதியை வணங்கி, "நானேயே இங்கு வந்து யுத்தம் செய்வது என்று முருகன் இப்பொழுது முடிவு செய்துள்ளான்" என்று கூறினர்.

மந்திரிகளையும் சேனாதிபதிகளையும் தமது புதல்வர்களையும் அழைத்தான் சூரன். மந்திராலோசனை தொடங்கியது; மந்திராலோசனை நடக்கும் பொழுது வேறு யாரும் உள்ளே இருக்கக் கூடாது. வண்டு உருவத்தில் வந்துகூட தேவர்கள் ரகசியங்களை அறிந்து செல்வார்கள். ஆகவே, 'அழைத்தவர்களைத் தவிர, எறும்பு கூட அங்கிருக்கக் கூடாது' என ஆக்ஞை யிட்டான் சூரபன்மாசுரன்.

மந்திராலோசனை மண்டபத்தில் மன்னர் மன்னனாகிய சூரபன்மன் பேசலானான்: "துணைவர்களே! அமைச்சர்களே! நமது பகைவர்களாகிய தேவர்களை நீங்காத சிறையிலிட்டேன். தேவர்களின் சிறையை நீக்குவதற்காக சிவபெருமான் ஒரு குமாரனைப் பெற்று இங்கு அனுப்பி வைத்தார். பூவுலகம் வந்த அந்தக் குமரன் கிரவுஞ்ச மலையை அழித்தான்; தாரகனைக் கொன்றான். அதன்பின் கடற்கரையில் வந்திருந்து, ஒரு தூதனை என்னிடம் அனுப்பினான். அத் தூதன் இலங்கை மலையில் பாய்ந்து அதனை அழித்தான். அஞ்சாமல் வந்து என் அவைக்களத்தில் வீற்றிருந்து சில வார்த்தைகள் பேசினான். என் கண்முன்னே சில அசுரர்களைக் கொன்றான். இந்த நகரை பாதிக்கு மேல் அழித்துவிட்டான். என் அருமந்தப் புதல்வன் வச்சிரவாகுவைக் கொன்றுவிட்டான். தூதனாய் வந்து இவ்வளவு அட்டூழியங்களைச் செய்த அவனைப் பிடித்துச் சிறையில் தள்ளினேன் இல்லை; கொன்றேன் இல்லை. பெரும் பழியைப் பெற்றுவிட்டேன். அது மட்டுமல்ல; அந்தத் தூதன் வீரமகேந்திரபுரியிலிருந்து திரும்பிச் சென்றபோது, நம் பெரும் காவலாள் யாளிமுகனையும் கொன்றுவிட்டான்.

துணைவர்களே! கவனமாகக் கேளுங்கள். தூதனுப்பிய குமரன் கடலைத் தாண்டி இங்கு வந்து நம்மோடு போர்

புரியவும் துணிந்திருக்கிறுன். இந்தத் தகவலை ஒற்றர்கள் வந்து சொல்லுகிறுர்கள். நானே சென்று இமைப் பொழுதில் சேனைகளையும், வீரர்களையும் அந்தக் குமரனையும் வென்று ஒழித்துவிடலாமா என்றுகூட எண்ணினேன். ஆனல் சூரன் என்னும் பெயர் பெற்ற நான்—எண்ணற்ற படைபலம் பொருந்திய நான்—போயும் போயும் பூதர்களுடனும் ஒரு பாலகனுடனும் போர் செய்வதா என்று நினைந்து வாளா விருந்து விட்டேன். எத்தகைய வீரமும் வலிமையும் செல்வமும் ஒருவர் பெற்றிருந்தாலும் தம் துணைவர்களுடன் ஆராய்ந்தே ஒரு செயலைச் செய்ய வேண்டும். ஆகவே தான் உங்கள் யாவரையும் இங்கு கூட்டியுள்ளேன். நாம் என்ன செய்வதென்று ஆராய்ந்து சொல்லுங்கள்."

சூரபன்மனின் அமைச்சர்களில் எருமை முகம் அமைந்த மகிஷன் சூரபன்மனை வணங்கிக் கூறினுன்: 'அரசே, திருமாலையே வென்றவர் உங்கள் தம்பி தாரகாசுரன். அவரையும் கிரௌஞ்ச மலையையும் வென்ற வீரனைச் சிறுவன் என்று கூறுவது சரியாகுமா? கடலைத் தாண்டி வந்து நம் நகரத்தை அழித்ததோடு வச்சிரவாகுவையும் கொன்ற துஷ்டனை சாமானிய தூதன் என்று கருதுவது பொருத்தமானதுதானு? உமது தம்பியும் கிரௌஞ்ச மலையும் அழிந்த அன்றே அந்தச் சிவகுமாரன் மீது போருக்குப் போயிருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால் அந்தத் தூதன் வந்து இங்கு அட்டூழியம் செய்திருக்க முடியுமா? போகட்டும். கடந்ததை எண்ணி வருத்தப்படாமல் இன்றே செயலில் இறங்குங்கள். நால்வகைச் சேனைகளோடும் சென்று போர் புரிவோம். முன்னைப் போல் அஜாக்கிரதையாக இருந்து காலந் தாழ்த்திவிடலாகாது."

மகிஷன் கூறி முடித்ததும், மற்ருெரு அமைச்சனுகிய துர்க்குணன் எழுந்தான். "அரசே! தாங்கள் இதுவரை திருமாலோடும் மற்றைய தேவர்களோடும் போர் செய்வதற்குச் சென்று சென்றதில்லை. உமது தம்பிமார்களைக் கொண்டே அவர்களையெல்லாம் போரில் வென்றீர்கள். அப்படிப்பட்ட தாங்கள் இன்றைக்கு ஒரு சிறுவனை எதிர்த்துப் போருக்குச் செல்வதா? தவத்தைப் பெருக்கி அழியாத வரங்களையும்,

அளவற்ற ஆயுளையும், வீரத்தையும் பெற்றுக் கொண்டதெல்லாம் ஒரு சிறுவனோடு போர் புரிவதற்குத்தானா? சிறுவனுக்காக வந்த தூதனைத் தொடர்ந்து நீங்கள் போக வேண்டுமா? கொசுவைக் கொல்லச் சிம்மமா செல்வது? நமது படைத் தலைவர்களை அனுப்பி வைத்தால் அவர்களே அந்தப் பூதகணங்களையும் சிவ குமாரனையும் வென்று வருவார்கள்; இது திண்ணம்.'' என்று கூறினான்.

தலைமை அமைச்சனாகிய தருமகோபன் எழுந்தான்: ''அரசர்க்கரசே! அச் சிறுவனுடன் சக்கரவர்த்தி போர் செய்வது புன்செய் நிலத்தை நவரத்தினங்கள் பதித்த பொற் கலப்பையால் உழுவது போலத்தான். அவன் உங்களைக் கண்டதும் புறமுதுகு காட்டி ஓடிவிடுவான். அப்படி அவன் ஓடி விட்டால், 'கேவலம் இந்தச் சிறுவனுடனா போர் புரிய வந்தோம்' என்று நீங்கள் எண்ணி அவனைத் தொடர்ந்து சென்று கொல்லாமல் மன்னித்துவிட்டு வந்துவிடுவீர்கள்: அவனுக்கு அழிவு ஏற்படாது. தனக்குச் சமானமில்லாதவர்களுடன் அறிஞர்கள் போர் செய்ய மாட்டார்கள். உங்கள் குமாரர்களான அக்கினிமுகன், இரணியன் இருவரில் ஒருவரை அனுப்பினாலே போதும். நகத்தால் கிள்ளியெறியும் முளையை வாளால் வெட்டுவார்களா? சிவபெருமான் கொடுத்த வேலாயுதத்தை அச்சிறுவன் செலுத்தியதும் அதற்கு மாறான படையை விடுக்காததால் தாரகன் மாண்டான். இதை வைத்து அந்தச் சிறுவனை வீரன் என்று கருதுகிறீர்களா? கிரௌஞ்சமலை அழிந்தது என்று சொல்கிறார்கள். ஆனால் கிரௌஞ்ச மலைக்கு அகத்தியரின் சாபத்தினால் தான் அழிவு வந்தது என்பதை மறப்பதற்கில்லையல்லவா? அழியாத தேர், கவசம், வில் முதலியவற்றை வச்சிரவாகுவுக்குக் கொடுக்கவில்லை. அவைகள் இல்லாததால்தான் முருகனின் தூதன் வந்து தாக்கியபோது, வச்சிரவாகு இறந்தான். இனி பலப்பல சொல்ல வேண்டாம். அந்தச் சிறுவனையும் அவனுடன் உள்ள மற்ற வீரர்களையும் இங்கிருந்தே பாணம் போட்டு நான் கொன்றுவிடுகிறேன். அல்லது ஒரு சேனாதிபதியை அனுப்பி வைத்தால் அவனே முருகனை வென்றுவிடுவான்'' என்று கூறினான்.

தருமகோபன் சொல்லி முடித்ததும் உடல் குலுங்கச் சிரித்தான் காலசித்து என்ற அமைச்சன். சூரபன்மனை நோக்கி, "அரசர்க்கரசே! இது என்ன பெரிய பிரமாதமான காரியம்? திருச்செந்தூரில் வந்திருக்கும் சிறு பாலனை அநாயாசமாகத் துரத்துவதற்கு மந்திராலோசனையும் செய்ய வேண்டுமா? திருமாலோடும், இந்திரனோடும், சயந்தனோடும் சமர் செய்தபோதுகூடத் தாங்கள் இவ்வாறு மந்திராலோசனை செய்ததில்லையே! இதோ என்னை அனுப்புங்கள். நான் சென்று அந்தச் சிறுவனையும் அவனுடைய பூதப்படைகளையும் காலபாசத்தால் கட்டி இழுத்துக் கொண்டு வருகிறேன்" என்று கூறினான்.

காலசித்து கூறியதைக் கேட்ட சண்டன் எழுந்து தன் ஒருவனை அனுப்பி வைத்தாலே போதுமென்றான்.

அசுரர் படைத் தலைவனான அனலி கோபத்துடன் எழுந்தான். "ஏதோ ஒரு முடிவு உடனேயே செய்வோம். அற்பச் சிறுவனை அழிப்பதற்காக இன்னமும் மந்திராலோசனை செய்வது அவமானம்" என்று கூறினான்.

விழிகளில் தீப்பொறி பறக்க எழுந்தான் சிங்கன். "அரசே! இந்த அண்டத்தில் உள்ளவர்கள் எல்லோரும் வந்து என்னுடன் போர் செய்தாலும், நான் ஒருவனே தனித்து நின்று யுத்தம் செய்து அவர்களை வெல்லுவேன். என்னைப் பற்றி நானே சொல்லிக் கொள்வது சரியல்ல. போருக்குச் செல்ல உத்தரவு கொடுங்கள். பகைவர்களைக் கண்டதுண்டமாக வெட்டி வீழ்த்தி வெற்றியுடன் வருகிறேன்" என்றான்.

சூரபன்மனின் புதல்வர்களில் ஒருவனான இரணியன் எழுந்தான். "தந்தையே! முன்பே எனக்கு உத்தரவு கொடுத்திருந்தால் அந்தப் பகைவர்களையெல்லாம் வென்று சரியான பாடம் புகட்டியிருப்பேன்" என்றான்.

இரணியனின் தம்பியான அக்கினிமுகாசுரன், சூரபன்மனை நோக்கி, "அப்பா! தாங்கள் போவானேன்? அல்லது நான்தான் போவானேன்? இதென்ன பெரிய காரியம்? என்னுடைய ஆட்களை அனுப்பினாலே போதும். நம் பகைவர்கள்

அவ்வளவு பேர்களையும் கொன்றுவிட்டு வருவார்கள்'' என்றான்.

இப்படியாக அனைவரும் பலப் பல பேசுகையில் சூரபன்மனின் மூத்த மகனும் வீராதி வீரனுமான பானுகோபன் கம்பீரமாக எழுந்திருந்து பேசலானான்.

"தந்தையே! பெரியோர்களே! சகாக்களே! வணக்கம். சென்று போனதையெல்லாம் பேசிப் பயனில்லை. இப்பொழுது நாம் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நம்முடைய எதிரிகளின் பலத்தை மிகையாகக் கூறுவது தவறு எனில், ஒரேயடியாக அலட்சியம் செய்வதும் தவறு. அந்தச் சிறுவனின் பலத்தையும், பூதர்களின் ஆற்றலையும் அறிய வேண்டுமானால், நானே போயாக வேண்டும். என்னை அனுப்பி வையுங்கள். சென்று மீளும் போது அவர்களைப் பாசத்தால் கட்டி இழுத்துக்கொண்டு வருகிறேன்'' என்றான் வீராவேசத்தோடு.

இதுவரை பேசியவர்களிடையே முருகனுடன் போரிடத்தான் வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இல்லை. போருக்கு யார் செல்வது என்பதில்தான் அபிப்பிராய பேதம். இப்போது அடிப்படையிலேயே அபிப்பிராய பேதம் கொண்ட சிங்கமுகாசுரன் எழுந்தான். சிம்மத்தின் தலை பெற்ற இவன் சூரபன்மனின் தம்பி; பெரிய விவேகி.

அண்ணன் சூரபன்மன் காலில் விழுந்து எழுந்து அதன் பின் சிங்கமுகாசுரன் பேசலானான்; "மந்திராலோசனை கூறியவர்கள் எல்லோரும் அறிவுரை சொல்லவில்லை. அவ்வளவு பேரும் அறிவின்றி உளறினார்கள். அடியேன் சொல்வதைத் தாங்கள் கவனமாகக் கேட்டு வாழ வேண்டும். அண்ணா! மயக்க உணர்வினால் மீன்கள் தூண்டில் முள்ளை உணவு என்று எண்ணி அதனைக் கடித்து அதனில் அகப்பட்டு வருந்துதல் போல, தேவர்களுக்குத் தீமை செய்வதால் இப்போது பெருமைப்பட்டாலும் இறுதியில் இன்னலே அடைவோம். தேவர்களைச் சிறையினின்றும் இன்னும் விடுதலை செய்யாத காரணத்தாலேயே ஆறுமுகக் கடவுள் போர் செய்ய வந்துள்ளார்."

'அண்ணு! செந்தில் மாநகரம் வந்துள்ள கந்தக் கடவுள் எத்தகைய சக்தி பொருந்தியவர் என்பதைத் தாங்கள் ஏற்க மறுப்பது நமக்கு அபாயமாகவே முடியப் போகிறது...'

"நரகத்துக்குப் போய்த் துன்பப்படுபவர் யார்? பெரியவர்களுக்குத் துன்பம் செய்தவர்கள், குழந்தைகளுக்குத் தீங்கு செய்தவர்கள், பெண்களை ஹிம்சித்துக் கொல்கிறவர்கள், விரதம் இருப்போருக்குக் கெடுதல் செய்வோர்; தான தருமம் செய்வோரைத் தடுப்போர் ஆகிய இவர்களெல்லோரும் நரகங்களுக்குச் சென்று துன்புறுவார்கள். ஆகவே, அண்ணு! தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் தாங்கள் தீங்கு செய்வது நியாயம் அல்ல" என்று சிங்கமுகாசுரன் கூறினுன்.

குரவ ரைச்சிறு பாலரை மாதரைக் குறைதீர்
விரத நற்ஞெழில் பூண்டுளோர் தம்மைமே லவரை
அரும றைத்தொழி லாளரை ஒறுத்தனர் அன்ஞே
நிரய முற்றவும் சென்றுசென் றலமரும் நெறியோர்.

(நிரயம்—நரகம்)

இவ்வாறு தம்பி கூறி வருவதைக் கேட்ட சூரபன்மன் இடைமறித்துக் கோடையிடிபோல் சிரித்தான், சிங்கம்போல் கர்ஜித்தான். "தம்பி! நன்ருயிருக்கிறது உன் பேச்சு! உனக்குப் புத்தி மயக்கம் ஏற்பட்டுவிட்டதா? யாரிடம் யாரைப் பற்றிப் பேசுகிருய்?"

"இளைய சகோதரா! எனக்குச் சிவபெருமான் கொடுத்த வரம் அழியாததன்ருே? 'நமது சக்தி ஒன்றே உன்னை வெல்லும். வேறு எவரும் வெல்ல முடியாது' என்று சிவபெருமான் கூறியது பொய்யாகுமா? வரத்தைக் கொடுத்தவரே அழிப்பாரா? தாரகன் இறந்தான் என்ருல் அவன் என்னைப்போல் அரிய தவம் செய்து அழியா வரத்தைப் பெறவில்லை. வச்சிரவாகு சிறுவன். வலிமை குறைந்தவன், ஆதலால் இறந்தான். ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆட்சி புரிந்து தேவர்களை ஏவலர்களாக்கிக் கொண்ட என்னை யார் வந்து எதிர்த்தாலும் என்னிடம் தோற்றுவிடுவார்கள்.

மும்மூர்த்திகளாலும் வெல்ல முடியாத வலிமையுடைய தம்பீ! நமக்கு ஏவல் புரிந்து இன்னமும் மறைந்திருக்கும்

இந்திரனுக்கும், தேவர்கட்கும், சிறு பாலனுக்கும், கயிலை யில் காவல் புரியும் பூதர்களுக்கும் அஞ்சினை; உன் அறிவு இழந்தனையோ?

ஏவல் தொண்டுசெய் தின்னமும் கரந்தஇந் திரற்கும்
தேவர்க் குஞ்சிறு பாலற்கும் சிவனுறை கயிலை
காவல் பூதர்க்கும் அஞ்சினை கருத்தழிந் தனையோ
மூவர்க் கும்வெலற் கரியதோர் மொய்ம்புகொண்
டுடையோய்.

அப்படியிருக்க, என்னிடம் வந்திருக்கும் சிறுபாலகன் என்னை வெல்லமுடியும் என்று நீ நினைப்பது 'கண்ணில்லாத வன் சூரியனைப் பழம் என்று காட்ட, கையில்லாதவன் அதனைப் பிடித்துக் கொண்டான்!' என்பதைப் போலிருக்கிறது'' என்றான் சூரபன்மன்.

''எண்ணி லாததோர் பாலகன் எனைவெல்வன் என்கை
விண்ணி லாதவன் தன்னையோர் கனியென வெஃகிக்
கண்ணி லாதவன் காட்டிடக் கையிலா தவன்போய்
உண்ணி லாதபேர் ஆசையால் பற்றுமா(று) ஒக்கும்''

இவ்வாறு மூர்க்கத்தனத்தில் ஊறிப் போய்ப் பிடிவாத மாகப் பேசிய சூரனிடம் சகோதர வாஞ்சை கொண்ட சிங்க முகாசுரன் மேலும் முருகன் பெருமைகளையும் உண்மைகளை யும் நீதிகளையும் எடுத்துரைக்கலானான்.

அண்ணா! தமக்கு ஒரு மூல காரணம் இல்லாத சுத்த மாயாதீதராகிய சிவபெருமான் தூய சந்திரனைத்தரித்த சடை முடியும், பவள மலை போன்ற திருமேனியும் நான்கு திருப் புயங்களும், திருநீலகண்டமும் கொண்டு நின்றனர்.

வாலி தாமதிச் சடிலமும் பவளமால் வரையே
போலு மேனியும் முக்கணும் நாற்பெரும் புயமும்
நீல மாமணிக் கண்டமும் கொண்டுநின் றனனால்
மூல காரணம் இல்லதோர் பராபர முதல்வன்.

தமக்கு ஒப்பில்லாத தனிப்பெருங் கடவுள் இவ்வாறு திருவுருவங் கொண்டது என்ன காரணம் என்று வினவுவாயா யின், ஐம்பெருந்தொழில்களைப் புரிந்து ஆன்மாக்களைப் பந்

நித்த பாசங்களை நீக்கி, வீடுபேறு வழங்கியருளும்படி தமது திருவுள்ளத்தில் கொண்டருளிய பெருங்கருணையேயாகும்.

தன்னை நேரிலாப் பரம்பொருள் தனியுருக் கொண்ட
தென்ன காரணம் என்றியேல் ஐந்தொழில் இயற்றி
முன்னை ஆருயிர்ப் பாசங்கள் முழுவதும் அகற்றிப்
பின்னை வீடுபே றருளுவான் நினைந்தபே ரருளே.

(தேவரைச் சிறை வைத்த நின்னை) வரம் தந்த தாமே அழிப்பது முறையன்று; வரத்தினால் பெருமை பெற்ற உன்னைப் பிறராலும் அழிக்க முடியாது; என்று சிவபெருமான் திருவுளங்கொண்டு, தமது திருவுருவாகிய ஒரு திருக்குமாரரைக் கொண்டு கொல்ல நினைத்தருளினார்.

வரம ளித்தயாம் அழிப்பது முறையன்று வரத்தால்
பெருமை பெற்றுள சூரனை யடுவது பிறர்க்கும்
அரிதெ னப்பரன் உன்னியே தன்னுரு வாகும்
ஒருமகற்கொடு முடித்துமென் றுன்னினான் உளத்தில்.

சிவந்த திருமேனியும், ஆறு திருமுகங்களும், பன்னிரு திருத்தோள்களும் உடைய ஒரு திருக்குமாரரை, ஆதி முதல்வராகிய சிவபெருமான் தமது நெற்றிக்கண்களிலிருந்துதோற்றுவித்தருளினார்.

செந்நிறத் திருமேனியும் திருமுகம் ஆறும்
அன்ன தற்கிரு தொகையுடைத் தோள்களு மாக
முன்ன வர்க்குமுன் னாகிய பராபர முதல்வன்
தன்னு தற்கணால் ஒருதனிக் குமரனைத் தந்தான்.

மனிதர்களிலும், விலங்குகளிலும், பறவைகளிலும், மற்றை யோனிகளிலும் பிறந்து உழல்கின்றவர்களைப் போல் நீ நினைக்காதே; சிவபரஞ்சோதியின் நெற்றிக் கண்ணிலிருந்து வேதங்களையுங் கடந்து நின்ற விமலனார் திருவவதாரம் புரிந்தருளினார்.

மானு டத்தரில் விலங்கினில் புட்களில் மற்றும்
ஊன முற்றுழல் யாக்கையில் பிறந்துளார் ஒப்ப
நீநி னைக்கலை பரஞ்சுடர் நெற்றியந் தலத்தே
தானு தித்தனன் மறைகளுங் கடந்ததோர் தலைவன்.

சீலம் இல்லாதவர்களால் உணர முடியாத ஞான மூர்த்தியைப் பாலன் என்று இகழ்ந்தனே; சிறிய ஒரு ஆலம் விதையில் மிகப்பெரிய ஆலமரம் யாவும் ஒடுங்கியிருந்து தோன்றியதுபோல் எல்லாப்பொருள்களும் முன்னுளில் அவரிடத்திலின்றுந் தோன்றின.

சீலம் இல்லவர்க் குணரவொண் ணுதசிற் பரனைப்
பாலன் என்றனை அவனிடத் திற்பல பொருளும்
மேலை நாள்வந்து தோன்றிய சிறியதோர் வித்தின்
ஆலம் யாவையும் ஒடுங்கியே அவதரித் ததுபோல்.

குமாரக்கடவுள் அருவமும் ஆவர்; உருவமும் ஆவர்; உருவருவமும் ஆவர்; நிமித்த காரணமும் ஆவர்; செயப்படு பொருளும் ஆவர். அப் பரமனுடைய திருவிளையாடலை யாவரே சொல்ல வல்லவர்?

"தமையனே! எல்லாம் படித்த தாங்கள் மயங்கி இருக்கிறீர்கள். மயக்கத்தில் உள்ள தாங்கள் எனக்கு மயக்கம் என்கிறீர்கள். அடியேன் சொல்வதைக் கேளுங்கள். முருகனின் ஒப்பற்ற சக்தியை உணருங்கள்.

அருவும் ஆகுவன் உருவமும் ஆகுவன் அருவும்
உருவும் இல்லதோர் தன்மையும் ஆகுவன் ஊழின்
கருமம் ஆகுவன் நிமித்தமும் ஆகுவன் கண்டாய்
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடற் பாலார்?

"அவர் வேதங்களின் ஞானத்திற்கும், உபநிடதங்களின் ஞானத்திற்கும் காணுதற்கு அரியவர்; புதியார்க்கும் புதியவர் முதியர்க்கும் முதியவர்; முதலுக்கு முதலானவர்; முடிவிற்கும் முடிவு ஆனவர்; உயிர்க்கும் உயிராய் நின்றவர்" என்று சிங்கமுகாசுரன். அண்ணலின் பெருமையை அண்ணனுக்கு எடுத்துக் கூறினன்.

வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன்; புதியரில் புதியன்;
மூதக் கார்க்குமு தக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயிராய் நின்ற அமலன்.

"ஞானமே வடிவமாக இருக்கின்ற எம்பெருமான் திருமேனியின் தன்மையை நீயும் நானும் சொல்வதென்றால் அஃது

எளிதோ? பரம மௌனிகளாக இருக்கின்ற ஞானிகளுக்கே அவர் பெருமை தெரியாதே!

ஞானந் தான்உரு வாகிய நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்தும்என் றால்அஃ தெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதும்
தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தலைமை.

முருகப் பெருமானுக்குத் தன் பெருமை தெரியாமலில்லை. அவர் சர்வக்ஞர். சிலரிடம் அளவுக்குமேல் செல்வமிருந்தால் எவ்வளவு இருக்கிறது என்று தெரியாது. அது போலத்தான் முருகனுக்கும்.

உலகில் நாமே பரம்பொருள் என்று கூறுகின்ற நாரணனும் நான்முகனும் மாயையுட் பட்டவராவர். முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து அப்பாற்பட்டு நிற்கின்ற தனி முதல்வர் அவரை யன்றி வேறு யாவர்?

ஞாலம் உள்ளதோர் பரம்பொருள் நாமெனப் புகலும்
மாலும் வேதனும் மாயையாம் வரம்பினுட் பட்டார்
மூல மாகிய தத்துவ முழுவதுங் கடந்து
மேலு யர்ந்திடு தனிமுதல் அவன்அன்றி வேறார்.

அத்தகைய அநந்த கோடி யண்டங்களையும் தமது வல்லமையால், ஒரு இமைப்பொழுதினில் உண்டாக்கவும் அழிக்கவும் வல்ல ஒப்பில்லாத முதற் கடவுளாகிய முருகவேள் உன்னுடன் போர் புரிய வேண்டும் என்று திருவிளையாடலாக திருச்செந்தூரில் வந்து எழுந்தருளியிருக்கின்றார்.

அன்ன வாகிய அண்டங்கள் அநந்தகோ டியையும்
தன்ன தாணையால் ஓர்இமைப் பொழுதினில் தரவும்
பின்னர் மாற்றவும் வல்லதோர் ஆதியம் பிரான்காண்
உன்னொ டேபொரும் ஆடலால் செந்திவந் துற்றான்.

தேவர்களை நீ வருத்துவதை உயிர்க்குயிராகிய சிவபெருமான் திருவுளஞ்செய்து, தாம் ஈந்தருளிய வரத்தைத்தாமே தவிர்ப்பாராயின், "ஏன் செய்தீர்?" என்று கேட்டு "இவ்வாறு செய்க" என்று அவரைக் கற்பிப்பார் யாருளர்?

வான்செய் தேவரை நீயலைக் கின்றதை மதியா
ஊன்செய் கின்றபல் லுயிருக்கும் உயிரதாம் ஒருவன்
தான்செய் கின்றதொல் வரத்தினைத் தான்தவிர்த் திடுமேல்
ஏன்செய் தாயென வினவியே நிறுவுவார் எவரே.

"அண்ணா! தத்துவங்களை யெல்லாம் கடந்து தனி முதல்வனாயிருக்கின்ற முருகப் பெருமானைப் பாலன் என்று இகழ்ந்து பேசுகிறாயல்லவா? உனக்குத் தன் பேராற்றலை உணர்த்துவான் வேண்டியே அவர் போர்க் களத்தில் வந்திருக்கிறார். 'பிறப்பவர் இறப்பது திண்ணம். வச்சிர சரீரம் பெற்று விட்டோம் என்றும், ஆதலால் அழிவு இல்லை என்றும்எண்ணி விடவேண்டாம். தேவர்களை யெல்லாம் சிறையிலிருந்து விடுதலை செய்து அழியாமலிருக்க வழி தேடுங்கள்" என்று சிங்கமுகாசுரன் கூறினான்.

சூரபன்மன் முருகனைப் பற்றிப் பேசிப் பாலன் என்று பழித்துப் பேசலானான்.

காற்றில் தள்ளுண்டு, நெருப்பினில் சூடுண்டு, கங்கை
ஆற்றில் தாக்குண்டு, சரவணம் புக்கலைப் புண்டு
வேற்றுப் பேர்முலை யுண்டுழு தேவிளை யாடும்
நேற்றைப் பாலனை யோபரம் பொருளென நினைந்தாய் ?

"காற்றினால் தள்ளப்பட்டும், நெருப்பினால் கொளுத்தப் பட்டும், கங்கை நதியில் அலைக்கழிக்கப்பட்டும், சரவணப் பொய்கை அலைகளால் மோதப்பெற்றும், தாய் அல்லாத வேற்றுப் பெண்களிடம் ஸ்தன்ய பானம் செய்தும் அழுது விளையாடும் பாலனையா பரம்பொருள் என்றாய்? நான் பெரியவன்; வரங்கள் பல பெற்றவன். ஆகவே, அந்தச் சிறுவனை வென்று நான் வெற்றி வாகை சூடுவேன். அசுரர் குலத்தில் பல பேரை அழித்தார்கள். நம் குலத்தை அழித்த தேவர்களைச் சிறை வைத்தது குற்றமன்று. குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பது நியாயமே என்று மனுநூல் கூறுகிறது. ஆகவே ஒருபோதும் நான் தேவர்களைச் சிறையினின்றும் விடுவிக்க மாட்டேன். அதுமட்டுமல்ல; எனக்குப் பயந்து ஓடி ஒளிந்து கொண்டிருக்கும் இந்திரனையும் பிடித்துக் கொண்டு வந்து சிறையில் வைப்பேன். என்னை எதிர்த்துச் சிவபெரு

மானே வந்து போர் செய்தாலும் பயப்படமாட்டேன். நீ எனக்கு உடன் பிறந்தவனாயிருந்தும் வானவர்களுக்குப் பரிந்து பேசுகின்றாயே! உடன் பிறந்தே எனக்குத் தீங்கு செய்ய முற்படும் உன்னைவிட எனக்கு வேறு பகையும் வேண்டுமோ? பூமிக்குப் பாரமாகவா நீ ஆயிரம் சிம்மத் தலைகளையும் இரண்டாயிரம் தோள்களையும் சுமந்து கொண்டிருக்கிறாய்? உன்னுடைய வலிமையும் வீரமும் எங்கே போய்விட்டது? உன்னால் அசுரர்களின் புகழ் மங்கிவிட்டது. நீ உயிருடன் இருப்பதும் ஒன்றுதான்; இறப்பதும் ஒன்றுதான். நானே போகிறேன் போருக்கு, நீ உன் நகரம் சென்று உடம்பில் ஒரு புண்ணும் படாமல் சௌக்கியமாக இரு'' என்று கர்ஜித்தான் சூரபன்மன்.

சிங்கமுகாசுரன் எவ்வளவோ சொல்லியும் சூரனால் முருகனைச் சிறு குழந்தையாகத்தான் காண முடிந்தது. தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்க முடியாது என்று பிடிவாதமாகக் கூறிவிட்டான்.

சிங்கமுகாசுரனுக்குத் தாபம் பொங்கியது. ''நான் நல்லதைச் சொன்னேன். கேட்காமல் என்னையே இகழ்ந்து விட்டார் தமையனார். பின்னால் என்ன நேரும் என்பதை அவர் அறிந்துகொள்ளவில்லை, எல்லாம் விதியின் செயல், விதியை வெல்ல யாரால் முடியும்? சிவபெருமான் அண்ணனுக்குத் தந்தருளிய காலக் கெடு முடிந்து மறைய வேண்டிய தருணம் நெருங்குகிறது போலும்'' என்று மனத்துக்குள் எண்ணினான். அவனது உள்ளத்தில் சகோதர வாஞ்சை பெருக்கெடுத்தது. 'அண்ணன் தன்னை எவ்வளவு கடிந்து கொண்டாலும் அவனைக் கைவிடலாகாது. அவர் இறப்பதற்கு முன்பே தான் இறப்பது முறை' என்று முடிவுசெய்து கொண்டான். சூரபன்மனை நோக்கி. ''அண்ணா! நான் தவறு ஏதும் செய்திருந்தால் மன்னித்து விடுங்கள். நான் போருக்குச் செல்கிறேன். போரில் பகைவர்களைக் கொன்று வெற்றியுடன் மீளுவேன். எனக்கு விடை தாருங்கள்'' என்று கூறினான்.

தம்பியின் சொற்களைக் கேட்டு சூரபன்மன் அளவிலா ஆனந்தமடைந்தான். ''தம்பி! உன் வல்லமை எனக்குத்

தெரியும். என் நெஞ்சுறுதியைச் சோதிக்கத்தான் முன்பு ஏதேதோ பேசினுய் போலும்! நீ உன் ஊருக்குச் செல். அங்கு படைகளை யெல்லாம் திரட்டிக்கொண்டு தயாராக இரு. போருக்கு நான் அழைக்கும்பொழுது வரலாம்'' என்று கூறினன். அதன்படியே சிங்கமுகாசுரன் தனது நகரமாகிய ஆசுரத்துக்குச் சென்றுவிட்டான்.

மகேந்திர காண்டம் முற்றிற்று.

4. யுத்த காண்டம்

1. ஏமகூடப் படலம்

துதி

நாரணன் என்னுந் தேவும் நான்முகத் தவனும் முக்கட்
பூரணன் தானு மாகிப் புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவுந் தேரு அநாதியாய் உயிர்கட் கெல்லாம்
காரண ஞய மேலோன் கழலிணை கருத்துள் வைப்பாம்.

திருமாலாகியும் பிரம தேவராகியும், உருத்திர மூர்த்தியாகியும் உலகங்களைப் படைத்தும் காத்தும் நீக்கியும். வேத முடிவாகிய உபநிடதங்களாலுங் காண முடியாத அநாதியாகியும், எல்லா உயிர்கட்கும் காரணமாகியும் நின்ற தனிப்பெருந் தலைவரது திருவடியைச் சிந்தையில் வைப்போமாக.

கதிரவன் உதயகிரியினை அடைந்தான். திருச்செந்தூரில் எழுந்தருளியிருந்த கந்தக் கடவுள் வீரவாகுதேவரை நோக்கி, "பழிக்கு அஞ்சாது பாவங்களைப் புரியும் சூரபன்மனையும் சூது நிறைந்த அசுரர்களையும் அழித்து தேவர்கள் துயர் நீக்குவதற்' காக வீரமகேந்திரபுரி செல்ல வேண்டும். நம் தேரைக் கொண்டுவா'' என்று கட்டளையிட்டார். தங்கள் துயரெல்லாம் நீங்கியது என்று கருதிய தேவர்கள் கந்தப்பெருமானின் கழலிணைகளை வணங்கித் துதித்தனர்.

கந்தப் பெருமானின் கட்டளைப்படி வீரவாகு தேவர் மனோவேகத் தேரைக் கொண்டு வந்து எம்பெருமானின் திருமுன்னர் நிறுத்தினர். சிங்காதனத்திலிருந்து இறங்கிய எம்பெருமான், "நாம் சூரபன்மனை அழிக்க வீரமகேந்திரபுரி செல்கிறோம். நீங்களும் அவரவரது வாகனங்களில் நம்முடன் புறப்பட்டு வாருங்கள்" என்று தேவர்களுக்கு உத்தர விட்டார்.

பிரமதேவர் அன்னப் பறவை மீதும், திருமால் கருடன் மீதும், இந்திரனும் மற்றைய தேவர்கள் தத்தம் வாகனங்கள் மீதும் ஏறிக் கந்தவேளைச் சூழ்ந்து கொண்டார்கள். நினைத்த மாத்திரத்திலேயே எல்லாப் புவனங்களையும் அழிக்கும் ஆற்றல் பெற்ற படைத் தலைவர்கள் நூற்றெட்டுப் பேரும் தொடர்ந்தார்கள். அதனை அடுத்து இரண்டாயிரம் வெள்ளம் பூதப் படைகளும் ஆரவாரத்துடன் புறப்பட்டன. வானவர்கள் பூ மழை பொழிந்தார்கள்.

முருகப் பெருமானுடன் சென்ற பூதப் படைகளின் பேரொலி எங்கும் ஒலித்தது. அவர்கள் சென்றபோது ஏற்பட்ட புழுதி சூரிய சந்திரர்களுடைய ஒளியையும் மறைத்து விட்டதாம். கடலில் பூத சேனைகள் இறங்கினர்கள். அவர்களுக்குக் கடலே கணுக்கால் அளவுதான் இருந்தது. கடலில் இருந்த பெரிய பெரிய மீன்களும் திமிங்கிலங்களும் சிறு புழுக்களைப் போன்றிருந்தன. பூதப் படை இறங்கிக் கடலைக் கலக்கியதால் அது சேருகியது. அந்தச் சேறு உலர்ந்த பின் புழுதியாக எங்கும் பறந்தது.

வீரமகேந்திரபுரி தென்கடலில் உள்ளதொரு தீவு. வடக்கே உள்ள தீவு இலங்கை. அந்த வழியாக எம்பெருமான் சென்றபோது, பிரமன், திருமால், இந்திரன் ஆகிய மூவரும் சுவாமியை வணங்கி, "மகா பாவியாக உள்ள சூரபன்மன் இருக்கும் மகேந்திரபுரி தங்கள் திருப்பாதம் பதியத் தகுதி பெற்றதல்ல, அந்நகருக்கு அடுத்த எல்லையாகிய இங்கேயே தங்கியிருந்து போர் செய்வதற்குப் பாசறை அமைத்துக் கொள்ளலாம்" என்று வேண்டிக் கொண்டார்கள். சுவாமி அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். தேவதச்சனை

அழைத்து, "உடனே விரைந்து இங்கு ஒரு பாசறை ஏற்படுத்து" என்று எம்பெருமான் ஆணையிட்டார், அந்த ஆணையின் வண்ணம் தேவதச்சன் ஒரு பாசறையை அமைத்தான். அதற்கு ஏமகூடம் என்று பெயரிடப்பட்டது.

எம்பெருமானின் தேர் கீழே இறங்கியது. சுவாமி ஏமகூடத்தின் வீதிகளில் பூத சேனைகளை நிறுத்தினர். இலக்கத்தொன்பது வீரர்களோடு திருக்கோயிலினுள் சென்று அரியணையில் அமர்ந்தார்.

(ஏமகூடம்தான் கதிர்காமம். கதிர்காமம் என்றால் ஒளிமயமான விருப்பத்தை யெல்லாம் நிறைவேற்றித் தருவது என்று பொருள். அங்கே சுவாமி ஒளிமயமாக விளங்குகின்றார். எனவே, அவரைத் தரிசிக்கக்கூடாது என்று திரை போடப்பட்டுள்ளது. அங்கே உள்ள கர்ப்பூர தீப ஒளியைத் தரிசனம் செய்ய வேண்டும்.

முருகப் பெருமான் கதிர்காமத்தில் வந்து தங்கிவிட்டார். சூரபன்மன் போருக்கு வர வேண்டாமா?)

2. வரவு கேள்விப் படலம்

கந்தவேள் ஏமகூடத்தில் எழுந்தருளியிருந்ததை உணர்ந்த நாரதர் ஆயிரம் தந்தியையுடைய மகதி வீணையை மீட்டிக்கொண்டு சூரனின் தலைநகரான வீரமகேந்திரபுரிக்குச் சென்றார்.

சூரபன்மன் மாளிகையை அடைந்து அவன் மிகுந்த சிறப்போடு வீற்றிருத்தல் கண்டார் 'இத் தீயோன் வாழ்வு விரைவில் முடியவேண்டும்' என்று மனத்தில் கருதிக்கொண்டு வாயினால் ஆசி கூறினர்.

நாரதரை நோக்கிச் சூரபன்மன் "நீயார்? எங்கிருந்து என்ன காரியமாக வந்தாய்?" என்று வினவினன்.

நாரதர் பின்வருமாறு கூறினர்.

"நான் சிவபெருமான் இருக்கும் வடகயிலையில் வாழ்பவன்; என் பெயர் நாரதன்; உங்கள் குலகுருவாகிய சுக்கி

ராச்சாரியரின் நண்பன்; ஆசைகளை வெறுத்துத் தவம் செய்பவன்· உங்கள் நலத்தை என்றும் விழைபவன். உன்னிடம் ஒன்று தெரிவிக்க வந்தேன். சிவபெருமான் உன்னை அழிப்பதற்காக தன் நெற்றிக் கண்களிலிருந்து கந்தன் என்ற புதல்வனைத் தோற்றுவித்தார். இந்திரன் முதலிய தேவர்கள் அந்தக் கந்தனை இறைஞ்சித் தாங்கள் படுந்துன்பங்களைக் கூறினர். அவர்கள் முறையீட்டைக் கேட்ட கந்தன் அஞ்சேல் என்று கூறி பூத சேனைகளுடன் பூமியில் வந்தான்,

உன் தம்பி தாரகனையும் கிரவுஞ்ச மலையையும் வேற்படையால் அழித்தான். பின்னர் செந்திமாநகரம் வந்து தங்கி ஒரு தூதனை உன்னிடம் அனுப்பினான். தூதன் மீண்டபின் தன் சேனையோடும் கடலைக் கடந்து இந்நகர் வடபால் பாடி வீடு அமைத்துள்ளான். இதைத் தெரிவிக்க வந்தேன் என்றனர்.

நாரதர் கூறியதைக் கேட்ட சூரபன்மனின் கண்கள் அனலைக் கக்கின. "அந்தச் சிறுவன் மகேந்திரபுரியை இந்திரலோகம், பிரமலோகம், விஷ்ணுலோகம் போல் சர்வ சாதாரணமாக எண்ணிக் கொண்டிருக்கிறான் போலும். ஆயிரத்தெட்டு அண்டங்களை ஆட்சி செய்பவன் நான். என் ஆணையை மதியாமல் கடலைத் தாண்டி வந்த அந்தச் சிறுவனை இப்பொழுதே வென்று வருவேன். இதற்கு நானே போக வேண்டிய அவசியமில்லை. என் புதல்வன் பானுகோபனை அனுப்புகிறேன். உமது கண்களாலே அவன் வெற்றியுடன் திரும்புவதைக் காணலாம்" என்று கூறினான்.

"சூரபன்மா! இனியும் தாமதம் செய்யாமல் அக் குமாரனோடு போர் செய்ய உடனே படைகளை அனுப்பு. வெற்றி கிடைக்க வேண்டும் என்று நான் போய்த் தவம் செய்கிறேன்" என்று கூறிவிட்டு ககன மார்க்கத்தில் புறப்பட்டு விட்டார் நாரதர். யாருடைய அழிவையும் யாருடைய வெற்றியையும் அவர் மனத்தில் கொண்டிருந்தார்என்பதைச் சூரன் புரிந்துகொள்ள முடியுமா?

தனது அருகில் நின்ற ஒற்றர்களை அழைத்துச் சூரபன்மன், "வருணனை விரைவில் கொண்டு வாருங்கள்" என்று

உத்தரவிட்டான். அவ்வாறே வருணன் அழைத்து வரப் பட்டான். "வருணனே! அந்தக் குமாரனும் பூத சேனை களும் கடலைக் கடந்து இங்கு வர ஏன் அனுமதித்தாய்?" என்று கோபத்துடன் கேட்டான் சூரபன்மன்.

"மன்னர் மன்னவா! திருமால், பிரமன், இந்திரன், இலக்கத்தொன்பது வீரர்கள் ஆகியோருடன் சிவகுமாரர் விண் வழியே சென்றார். எனவே அவர்களை நான் தடுக்க முடியவில்லை. பூத சேனைகள்தான் என்மீது நடந்து சென்றனர். அப்போது கடல் அவர்களது கணுக்கால் வரை கூட எட்டவில்லை. ஆகவே அவர்களைத் தடுத்து நிறுத்தமுடியாமல் போய்விட்டது. அவர்களை நான் எதிர்த்திருந்தால் முன்பு அகத்தியர் என்னைக் கையால் அள்ளிக் குடித்ததுபோல் செய்திருப்பார்கள்" என்று நடுங்கிக்கொண்டே கூறினான் வருணன்.

இதற்குள் முருகக் கடவுள் மகேந்திரபுரியை நெருங்கி விட்டார். இதனைக் கண்ட ஒற்றர்கள் சூரபன்மனிடம் ஓடி வந்தார்கள். "அரசே! திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களுடனும். இலக்கத்தொன்பது வீரர்களுடனும், இரண்டாயிரம் வெள்ளம் பூதசேனைகளுடனும் சிவகுமாரன் மகேந்திரபுரியின் வடதிசையில் வந்து பாடி வீடு அமைத்துத் தங்கியிருக்கிறார்" என்று கூறினார்கள்.

3. முதல் நாள் பானுகோபன் யுத்தப் படலம்

சூரபன்மன் துடிதுடிப்புடன், "ஒற்றர்களே! நீங்கள் போய்ப் பானுகோபனை விரைந்து அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

"உத்தரவு" என்று கூறிப் புறப்பட்ட ஒற்றர்கள். பானுகோபன் அரண்மனையை அடைந்து சூரனின் ஆணையைத் தெரிவித்தார்கள்.

போருக்குத் துடித்துக் கொண்டிருந்த பானுகோபன் அரியணையை விட்டு அவசரமாக இறங்கினான்; விரைவாகத் தேரில் புறப்பட்டான்.

பானுகோபனின் தேர் சூரபன்மனின் அரண்மனையை அடைந்தது. "தந்தையே! என்னை அழைத்த காரணம் யாது?" என்று பானுகோபன் சூரனை வினவினான்.

"மகனே! இலக்கத்தொன்பது வீரர்களுடனும் பூத சேனைகளுடனும் கந்தன் திருச்செந்தூரிலிருந்து நம் நகருக்கு வந்து வடக்கு வாயிலில் பாடி வீடமைத்துக் கொண்டு தங்கியிருக்கிறான். நமது வீரமகேந்திரம் இந்த வீரர்களும் பாலனும் வரக்கூடிய நகரமா? நம்மை எதிர்த்து வந்திருக்கும் பகைவர்களோ மிகச் சிறியவர்கள்; நானோ அண்டங்களை யெல்லாம் ஆளும் அரசர்க்கரசன். ஆகவே, நீ உன் சேனைகளுடன் சென்று அவர்களை வென்று வா" என்று சூரமன்மன் உத்தர விட்டான்.

"போருக்குப் போ" என்று சூரபன்மன் கூறிய சொல்லைக் கேட்டதும் பானுகோபனின் தோள்கள் பூரித்தன. "அப்பா! அந்தச் சிறுவனையும் அவனுடன் வந்திருக்கும் படைகளையும் வென்று வருவது எனக்குப் பெரிய செயல் அன்று. அந்தப் பாலனை எதிர்த்துப் போருக்குச் செல்ல நான் முன்பிருந்தே துடித்துக்கொண்டிருந்தேன். இப்போது என் சேனைகளுடன் சென்று அந்தப் பாலனை வென்று வருவேன்" என்று கூறி விடைபெற்றுக் கொண்டான்.

பானுகோபன் ஆடை ஆபரணங்களைச் சிறப்பாகஅணிந்து கொண்டான்; வச்சிர கவசம் அணிந்து அம்பறாத் தூணியும் பாணங்களும் எடுத்துக் கொண்டான்; வாட்படையை மருங்கில் செருகிக் கொண்டான்; வீரக் கழல் அணிந்து கொண்டான்; நெற்றியில் பட்டங் கட்டிக்கொண்டு தும்பை மாலை யணிந்தான்; பாணங்கள் தாக்காமல் இருப்பதற்காக உடும்புத் தோலால் செய்யப்பட்ட உறைகளைத் தரித்துக் கொண்டு, பல்வகை ஆயுதங்கள் ஏந்திய சதுரங்க சேனைகள் சூழ முப்பதினாயிரம் குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு தேரில் ஏறிப் போருக்குப் புறப்பட்டான்.

சதுரங்க சேனைகளுடன் பானுகோபன் போருக்குப் புறப்பட்டதைக் கண்ட நாரத முனிவர் ஏமகூடப் பாசறையை அடைந்து முருகக் கடவுளின் திருவடிகளை

வணங்கினர். "சுவாமி! தேவரீர் இங்கு எழுந்தருளியிருப் பதை அறிந்த சூரபன்மன் தங்களோடு போர் செய்ய அவனது குமாரனாகிய பானுகோபனை அனுப்பி யிருக்கிறான். பானு கோபன் எண்ணற்ற சேனைகளுடன் போர்க்கோலம் பூண்டு வருகிறான். அவனைத் தேவரீரும் சிவபெருமானுமன்றி வேறு எவரும் எதிர்க்க முடியாது. அவன் திருமாலையும், பிரமனை யும், இந்திரனையும் வென்றவன், மாயங்கள் பல கற்றவன். அவனுக்கு பிரமா தமது அஸ்திரங்களைக் கொடுத்திருக்கிறார் வருணனின் பாசத்தையும், இயமனின் சூலத்தையும் கவர்ந்தவன் அவன். ஆகவே, தாங்களே அவனைக் கொல்ல வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

நாரத முனிவர் கூறியவற்றைக் கேட்ட எம்பெருமான் புன்முறுவல் செய்தார்.

"வீரவாகு!" என்று அழைத்தார்.

வீரவாகுதேவர் வந்து முருகப் பெருமானின் காலில் விழுந்தார்.

"நம்முடன் போர் செய்ய சூரபன்மன் தனது மகனாகிய பானுகோபனை அனுப்பியிருக்கிறான். நீ இலக்கம் வீரர் களுடனும், உனது எட்டுத் தம்பிகளுடனும், ஆயிரம் வெள்ளம் பூத சேனைகளுடனும் போய் மகேந்திரபுரியைத் தாக்கிப் பானுகோபனை வென்று வருவாயாக" என்று ஆணை யிட்டார். வீரவாகுதேவர் முருகப் பெருமானை வணங்கி விடைபெற்றுச் சென்றார்.

மேருகிரி போன்ற ஒரு வில்லையும் அம்பறாத் தூணியும் ஏந்தி ஒரு தேரில் ஏறிக் கொண்டார் வீரவாகு. ஆயுதங்கள் நிறைந்த தேர்கள் பல அவரைச் சூழ்ந்து கொண்டன. ஆயிரம் வெள்ளம் பூதர்களும் இலக்கத்தெட்டு துணைவர்களும் போர்க்கோலம் புனைந்து சூழ்ந்தனர். வீரவாகுதேவரின் தேர் புறப்பட்டு மகேந்திரபுரியின் மதிற் பக்கத்தே வந்தது. அசுரர்கள் பானுகோபனிடம் ஓடி, வீரவாகுதேவர் போருக்கு வந்துள்ள செய்தியைத் தெரிவித்தார்கள். அதைக் கேட்ட பானுகோபன், கைகொட்டி, "என்னை எதிர்த்து வந்திருக்கும்

வீரர்களை அழிப்பேன்" என்று ஆரவாரித்துப் போருக்குப் புறப்பட்டான்.

அசுர சேனைகளுக்கும் பூத சேனைகளுக்குமிடையே போர் தொடங்கிற்று. அசுர சேனைகள் அளவற்ற ஆயுதங்களை எறிந்து போர் புரிந்தனர். பூத சேனைகள் மரங்களையும் மலைகளையும் பெயர்த்து வீசி அசுரர்களை மாய்த்தனர். இப்படியாக இரண்டு பக்கங்களிலும் உள்ள சேனைகள் துவந்த யுத்தம் செய்தன. இருதிறத்திலும் பலர் இறந்ததால் உதிரம் கடல் போலப் பெருகியது. பூத சேனைகள் மிகுந்த ஆத்திரங் கொண்டு அசுர சேனைகளுடன் கடுமையாகப் போர் செய்தன. அசுரர்கள் அத் தாக்குதலைத் தாங்கவொண்ணாது சிதறி ஓடினார்கள். அவர்கள் சிதறி ஓடுவதைக் கண்ட அசுரப் படைத் தலைவனான அனலி தன் கையிலிருந்த வில்லை வளைத்து நாணை மீட்டினான். அந்த ஒலியைக் கேட்டுத் தேவர்களும் அஞ்சினர். அவன் திக்கணைபால் பூத சேனைகளின் தோள்களைத் துளைத்தான். அனலியின் கடும் போரைக் கண்ட பூத சேனைத் தலைவன் சிங்கன், தன் கையிலிருந்த தண்டினால் அனலியின் தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை அடித்துக் கொன்றான். அனலியின் தேரில் பாய்ந்து வதைத்து வில்லைப் பிடுங்கி எறிந்தான் சிங்கன். அனலி தன் கையிலிருந்த தண்டினால் சிங்கனின் தலையில் அடித்தான். சிங்கன் அவனைப் பிடித்துச் சுழற்றித் தரையில் அடித்தான். அவ்வளவில் அனலி இறந்தான்.

அசுர சேனைகளின் மற்றொரு தலைவனான சண்டன் சிங்கனுடன் போருக்கு வந்தான். இறந்த அனலியின் கையிலிருந்த தண்டைப் பறித்துச் சண்டனின் தேரில் பாய்ந்த சிங்கன், அந்தத் தண்டினால் சண்டனின் தோளைத் தாக்கினான். அந்த நிலையில் சண்டன் தன்னுடைய கைத் தண்டினால் சிங்கனின் மார்பில் அடித்தான். இருவரும் பெரு மூச்சு விட்டு மயங்கித் தேரினின்றும் கீழே விழுந்தார்கள்.

அசுர சேனைகளின் இன்னொரு தலைவனான மாயன் என்பவன் சண்டன் மயங்கி விழுந்ததைக் கண்டான். உடனே தேரில் ஏறி அந்த இடத்துக்கு விரைந்தான். அப்போது, பூத சேனைகளின் தலைவனான நீலன் அவனை எதிர்த்துச் சென்று

மார்பை நோக்கித் தண்டத்தை எறிந்தான். உடனே நீலன் மீது ஒரு சூலத்தை யெறிந்தான் மாயன். அந்தச் சூலம் தாக்கியதால் நீலனின் மார்பிலிருந்து உதிரம் பெருக்கெடுத் தோடியது. சிறிது நேரம் மூர்ச்சித்திருந்த நீலன் அறிவு தெளிந்ததும் மாயனின் மார்பில் ஓங்கி அடித்தான்; அவனது தோள்களைக் கட்டிப் பிடித்துக் கழுத்தில் கடித்தான்; அவனது உடலில் உள்ள குருதியைக் குடித்தான். மாயன் மாண்டான்.

இதற்குள் போர் செய்து மூர்ச்சித்துத் தேரினின்றும் கீழே விழுந்த சண்டனும் சிங்கனும் அறிவு தெளிந்து எழுந்தனர். பழையபடி போர் தொடங்கினர். சிங்கன் தண்டத்தினால் சண்டனை அடித்து அவனது தோளை ஒடித்தான். தன்னுடைய ஒடிந்த தோளையே தண்டாக ஏந்திப் போர் செய்தான் சண்டன். இருவருக்கும் கடுமையாகப் போர் நடந்தது. இறுதியில் சிங்கன் சண்டனைக் கொன்றான்.

சண்டன் இறந்ததைக் கண்டதும் அசுர சேனைத் தலைவர்களில் மற்றொருவனான அசமுகன் ஒரு தேரில் ஏறிச் சிங்கனை நெருங்கினான். அந்த இருவருக்குமிடையே மது என்னும் பூத சேனைத் தலைவன் பாய்ந்தான். அசமுகன் மதுவின் மீது பாணங்களை ஏவினான். அந்தப் பாணங்களைச் சிறிதும் பொருட்படுத்தாத மது அருகிலிருந்த ஆலமரம் ஒன்றைப் பெயர்த்து அதனால் பாணங்களைத் தடுத்துக் கொண்டே அசமுகனின் தேரில் புகுந்தான். அப்போது அசமுகன் கையிலிருந்த வில்லும் பாணங்களும் கீழே நழுவி விழுந்தன. அதனைக் கண்ட மது, "நீ போருக்கு ஏற்ற வீரன் அல்ல" என்று கூறித் தேரை விட்டு இறங்கிச் சென்று விட்டான். அசமுகனுக்குச் சொல்ல முடியாத வெட்கம் ஏற்பட்டது. ஒருவாறாக மனம் தேறிய அவன், மதுவைச் தேடிச் சென்று போருக்கு அழைத்தான். "வீரம் இல்லாத உன்னுடன் போர் செய்வது எனக்கு இழுக்காகும்" என்று மது கூறினான். அசமுகன் விடவில்லை. மதுவின் மேல் பல பிறைமுகக் கணைகளை விடுத்தான். அப்போதும் மது ஆயுதம் எடுக்காமல் அக் கணைகளையெல்லாம் கையால் விலக்கித் தடுத்தான். உடனே அசமுகன், சூலம், வேல் முதலியவற்றை மதுவின் மீது எறிந்தான். அசமுகனின் தேரை எடுத்துக் கடலில்

வீசியெறிந்தான் மது. அசமுகன் தேரிலிருந்து பாய்ந்து மது வுடன் மற்போருக்கு வந்தான். மது ஓங்கி ஓர் உதை கொடுத் தான். அசமுகன் ஆகாயத்துக்குப் போய் அங்கிருந்து கீழே வந்து விழுந்தான். உடனே எழுந்து மதுவின் மார்பில் இடி முழக்கம் போன்று அடித்தான். பின்னர் மாயமாக விண்ணில் மறைந்து விஷ்ணுவின் சக்ராயுதத்தை மதுவின் மீது விடுத் தான். சக்ராயுதம் தரும ஸ்வரூபம். அது ஒரு காலும் அதருமப் போர் புரியாது. நிராயுதனுயிருந்த மதுவைச் சக் கரப் படை ஒன்றும் செய்யவில்லே. அது திரும்பிச் சென்று அசமுகனின் தலையையே அறுத்தது. அசமுகன் இறந்தான்.

அசமுகன் இறந்தபின் எஞ்சியிருந்த அசுரத் தலைவர்கள் நால்வகைச் சைன்யங்களுடன் சென்று பூதப் படைகளுடன் கடுமையாகப் போர் செய்தார்கள். இதனுல் பூத சேனைகள் புறங் கொடுத்து ஓடின. இலக்கம் வீரர்களில் ஒருவனுன தண்டகன் அசுர சேனைகளின் மீது மழைபோல் பாணங்களே விடுத்தான். அந்தப் பாணங்களின் தாக்குதலில் அசுரர்களின் நால்வகைச் சேனைகளும் சிக்கி அழிந்தன. உதிரம் பெருகி ஆறுபோல் ஓடியது. உயிர் பிழைத்த அசுரர்கள் 'பிழைத் தால் போதும்' என்று திசை தெரிந்த பக்கம் சிதறி யோடினுர்கள்.

அசுர சேனைகள் சிதறி ஓடுவதைக் கண்டான் பானு கோபன். 'போரில் நானே முன்னணிக்குச் செல்லாமல் சைனியங்களே மட்டும் முன்னுல் அனுப்பியதால்தான் இந்த நிலே ஏற்பட்டது. சரி! நடந்ததை நினைத்துப் பயனில்லே. இனி ஆக வேண்டியதைக் கவனிக்க வேண்டும்' என்று எண்ணிய மகாவீரனுகிய பானுகோபன் தானே போருக்குச் செல்வதென்று முடிவு செய்து பூத சேனைகளுக்கிடையே புகுந் தான். தனது வில்லே வளைத்துக் கணக்கற்ற பாணங்களேப் பூதர்கள் மீது ஏவினுன். பூத வீரர்கள் மலைகளேப் பெயர்த்து பானுகோபன் மீது எறிந்தனர். அந்த மலைகளே யெல்லாம் பாணங்களினுல் தகர்த்தான் பானுகோபன். ஆயிரங் கோடிப் பாணங்களேப் பூத சேனைகளின் மீது விடுத்தான். அதனுல் பூத சேனையைச் சேர்ந்த வீரர்கள் பலர் இறந்தனர். உயிர் தப்பியவர்கள் வீரவாகுதேவரிடம் ஓடினுர்கள்.

பூத வீரர்கள் சிதறி ஓடியதைக் கண்ட பூதப் படைத் தலைவன் உக்கிரன் ஆரவாரத்துடன் ஒரு தண்டாயுதத்தை எடுத்துக்கொண்டு போய் பானுகோபனை எதிர்த்துப் போரிட்டான். பானுகோபன் பெரிய வில்லாளி.

மைக்கின்ற மேனி நெடும்பூதனை வஞ்சன் வாளி
நைக்கின்றில வானுதி மாய்ந்து தளர்ந்து வீழ்ந்த
மெய்க்கின்ற இன்பும் அறனும் விளையாது வாளா
பொய்க்கின்ற வன்கைப் பொருள் வல்லையில் போவதே
போல்.

ஆயிரமாயிரம் பாணங்களை விடுத்தான் பானுகோபன். எடுக்கும் போது ஆயிரம். தொடுக்கும்போது இலட்சம். விடுக்கும் போது கோடியென்று பாணங்களைப் போட்டான். உக்கிரனிடம் வில்லே கிடையாது. அவன் தனது தோளை உலுக்கி விட்டான். 'மைக்கின்ற மேனி' என்று பாட்டு கூறுவதற்கு 'கரிய மேனி' என்று பொருள். பானுகோபன் விடுத்த பாணங்களில் ஒன்றுவது கரிய மேனியை உடைய உக்கிரனின் உடலைத் துளைக்கவில்லை. பானுகோபன் விடுத்த எல்லாப் பாணங்களும் அவனது உடலில் பட்டுக் கூர் மழுங்கி உதிர்ந்து விழுந்தன. பொய்யே பேசுகின்றவன் கையில் ஒரு காலத்தில் பொருள் சேர்கின்ற மாதிரி இருக்கும். ஆனால் நிற்காது. எந்த வழியாகப் போயிற்று என்றே தெரியாமல் அது மறைந்துவிடும். கடையர்களிடம் உள்ள பொருள் அறத்திற்கு உதவாது. அந்தப் பொருள் செல்லும் வழிகூடத் தெரியாமல் போகின்ற மாதிரி பானுகோபன் விடுத்த பாணங்கள் என்னவாயின என்றே அறியாதபடி அழிந்து விட்டனவாம்.

பானுகோபனுக்கும் உக்கிரனுக்கும் கடுமையாகப் போர் நடந்தது. பானுகோபனின் தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை யெல்லாம் உக்கிரன் அடித்துக் கொன்றான். பானுகோபன் வேறொரு தேரில் ஏறிக்கொண்டு பாணங்களை விடுத்து உக்கிரன் கையிலிருந்த தண்டத்தை ஒடித்தான்; உக்கிரன், பானுகோபனின் தேரை அலக்காகத் தூக்கி ஆகாயத்தில் எறிந்தான், அது சூரிய மண்டலம் வரை

சென்றது. பானுகோபன் தன்னை நோக்கி வருவதைக் கண்ட சூரியன் அஞ்சியோடினான். முன்பு பானுகோபனால் துன்பமடைந்தவனல்லவா சூரியன்? பானுவாகிய சூரியனிடம் கோபித்ததாலன்றோ அவனுக்குப் பானுகோபன் என்ற பெயரே உண்டாயிற்று?

உக்கிரனால் தூக்கியெறியப்பட்டு சூரிய மண்டலத்தை அடைந்த பானுகோபனின் தேர் அங்கிருந்து கன வேகமாகக் கீழே விழுந்தது. அதற்கும் உயிர் தப்பிய பானுகோபன், இமைப்பொழுதில் தன்னைச் சமாளித்துக் கொண்டு உக்கிரனைத் தூக்கி ஆகாயத்தில் வீசினான். அவன் ஆகாயத்திலிருந்து கீழே விழும்போது பிரம்மாஸ்திரத்தை மார்பிலே ஏவினான். அதனால் உக்கிரன் மயங்கி விழுந்தான்.

உக்கிரன் மயங்கி விழுந்ததைப் படை வீரன் தண்டி கண்டான். உடனே ஒரு மலையைப் பெயர்த்து பானுகோபன் மீது வீசினான், பானுகோபன் பாணங்களை விடுத்து அந்த மலையைத் தூள் தூளாக்கிவிட்டான். பானுகோபன் விடுத்த பாணங்களால் தாக்குண்ட தண்டி சோர்ந்து விழுந்தான். பூதப் படையைச் சேர்ந்த பினாகி ஒரு மலையைப் பெயர்த்துப் பானுகோபன் மீது எறிய முயன்றான். அவன் மீது ஆயிரம் பாணங்களை விடுத்தான் பானுகோபன். அதனால் பினாகியும் தளர்ச்சியடைந்தான். மற்ற பூதசேனை வீரர்கள் சிறிது நேரம் பானுகோபனுடன் போர் புரிந்தார்கள். ஆனால் பானுகோபன் அவர்களைச் சிதற அடித்தான்.

பூத சேனையைச் சேர்ந்த வீரர்கள் சிதறி ஓடுவதைக் கண்டதும் இலக்கம் வீரர்களும் பெருங்கோபத்துடன் பானுகோபன் மீது மழைபோலப் பாணங்களைப் பொழிந்தார்கள். பானுகோபன் ஆயிரம் கோடிப் பாணங்களை விடுத்து அவற்றையெல்லாம் ஒடித்தான். மேலும் ஆயிரங் கோடிப் பாணங்களை இலக்கம் வீரர்கள் மீது விடுத்தான். அவர்கள் அந்தப் பாணங்களை முறித்துப் பல பாணங்களை பானுகோபன் மீது ஏவினார்கள். பானுகோபன் மிகுந்த கோபத்துடன் எண்ணற்ற பாணங்களை இலக்கம் வீரர்கள் மீது விடுத்து அவர்கள் கையிலிருந்த விற்களையும் அழித்தான். இலக்கம்

வீரர்களும் வேறு விற்களை எடுத்துக்கொண்டு பாணங்களை விடுத்தார்கள். பானுகோபனும் அளவற்ற பாணங்களை விடுத்தான். இலக்கம் வீரர்கள் உடலிலும் பாணங்கள் தைத்து அவர்கள் வருந்தினார்கள். பானுகோபன் இறுதியில் அவர்களை வென்றுவிட்டான்.

இலக்கம் வீரர்களும் பானுகோபனிடம் தோற்றதும் வீரகேசரி பானுகோபன் மீது பாணங்களை விடுத்தார். இருவருக்கும் கடுமையான விற்போர் நடந்தது. பானுகோபன் கடைசியாக நாராயணாஸ்திரத்தை வீரகேசரி மீது செலுத்தினான். அந்த அஸ்திரம் வீரகேசரியின் மார்பில் புகுந்தது. வீரகேசரி மயங்கி விழுந்தார். முருகப் பெருமானின் ஆணையினால்தான் அவரது ஆவி பிரியாமல் நின்றது.

பின்னர் பானுகோபனுடன் வீர மார்த்தாண்டர் கடும் போர் புரிந்தார். அவரது நெற்றியில் உடை வாளால் பானுகோபன் தாக்கினான். வீரமார்த்தாண்டர் மயங்கி விழுந்தார். வீர ராக்கதர் பானுகோபனை எதிர்த்துப் போரிட்டனர். பானுகோபன் அவர் மீது பிரம்மாஸ்திரத்தைவிட்டு மயக்கினான். அதன் பின் வீராந்தகர், வீரமகேச்சுரர் வீரதீரர் வீரமகேந்திரர், வீரபுரந்தரர்—ஆகியவர்கள் பானுகோபனுடன் போர் செய்து தோல்வியுற்றனர்.

முன்பு பூதசேனைகளுடன் போர் செய்து சிதறியோடிய அசுர வீரர்கள் பானுகோபன் போரில் வெற்றிமுகம் பெறுவதைக் கண்டதும் திரும்பி அவனிடம் வந்து சேர்ந்தார்கள். பானுகோபன் வீரவாகு தேவரை நோக்கிவந்தான். அதனைக் கண்ட வீரவாகுதேவர் கந்தவேளைத் தியானித்துக் கையில் வில்லை எடுத்துக் கொண்டார். தேரை வேகமாகச்செலுத்தும் படி கட்டளையிட்டார்.

வீரவாகுதேவர் வில்லை வளைத்து நாணை மீட்டினார், அந்த நாணொலி, தேவர்களுக்கு அமிர்தம் உண்பதைப் போலிருந்ததாம். வீரவாகு தேவருக்கு எதிராகப் பானுகோபன் தனது வில்லை வளைத்து ஒலி எழுப்பினான். அந்த ஒலி, தேவர்களுக்கு விஷத்தை உண்பது போன்றிருந்தாம்.

வீரவாகுதேவருக்கும் பானுகோபனுக்கும் கடுமையாகப் போர் நடந்தது, இருவரும் ஆயிரக்கணக்கில் பாணங்களை மழைபோல் பொழிந்தார்கள். இந்தப் பாண மழையில் பூமியும் வானும், கடல்களும் மறைந்தன. அவர்களின் கடும் போரைக் கண்ட தேவர்களும் அசுரர்களும் அச்சத்தினுல் பல திக்குகளிலும் ஓடினுர்கள். வீரவாகுதேவர் சர்வசங்கார மூர்த்தியைப்போல் போர் புரிந்தார்; பானுகோபனின் தேரை அழித்தார். பானுகோபன் வேறொரு தேரில் ஏறிப் பாணங்களை விடுத்தான். பானுகோபனின் வில்லையும் வச்சிர கவசத்தையும் வீரவாகுதேவர் உடைத்துவிட்டார். பானு கோபனின் மார்பிலிருந்து உதிரம் பெருகி வழிந்தது. பானு கோபன் மார்பில் முன்பு ஏற்படுத்திய துளையின் வழியாக வீரவாகுதேவர் ஆயிரம் பாணங்களை விடுத்து அவனது முதுகில் தொங்கிக் கொண்டிருந்த அம்பறாத் தூணியை அறுத்தெறிந்தார். அதனுல் மனம் தளர்ந்த பானுகோபன், 'வில் வித்தையினுல் இவனை வெற்றிகொள்ள முடியாது, என்று முடிவு செய்து கொண்டான்.

பானுகோபன் முன்பு பிரமதேவரிடமிருந்து மோகனுஸ் திரம் பெற்றிருந்தான். அந்த அஸ்திரத்தை எவர் மீதாவது செலுத்தினுல், அதனுல் தாக்கப்படுபவரின் அறிவு மயங்கும். அந்த அஸ்திரத்தை எடுத்து, "நீ வேகமாய்ச் சென்று எதிரியின் அறிவை மயங்கச் செய்து கொன்று விடுவாயாக" என்று கூறி விடுத்தான் பானுகோபன். பயங்கரமான அந்த அஸ்திரம் எங்கும் இருளைப் பரப்பி விரைந்து சென்றது. அந்த அஸ்திரம் சென்றபோது பூத சேனையைச் சேர்ந்த வீரர்கள் பயந்து விழுந்தனர். பூதசேனைத் தலைவர்கள் மயங்கி விழுந்தனர். அஸ்திரம் நெருங்க நெருங்க இலக்கத் தெண்மரும் வீரவாகுதேவரும் மயங்கி விழுந்தனர். இந்த நிலையை ஆகாயத்திலிருந்து கவனித்த பானுகோபன் மயங்கி விழுந்தவர்கள் மீது ஏராளமான பாணங்களை விடுத்தான். பாணங்கள் தைத்ததால் அவர்களின் உடல்கள் சல்லடைக் கண் போலாகி விட்டன.

இலக்கத்தெண்மரும், பூதசேனைகளும் வீரவாகுதேவரும் அறிவு மயங்கிக் கிடந்ததை யாவுமறியும் முருகவேள் உணர்ந்தார்.

பானுகோபன் விடுத்த மோகனாஸ்திரத்தை எதிர்க்க அமோக அஸ்திரத்தை தமது மலர்க் கரத்தாலேயே எடுத்தார். "பானுகோபன் விடுத்த மோகனாஸ்திரத்தின் சக்தியைக் கெடுத்து வெற்றியுடன் திரும்பி வா" என்று கூறி அதனை விடுத்தார். அந்த அஸ்திரம் விண் வழியே சென்று போர்க் களத்தை யடைந்து மோகன அஸ்திரத்தின் மாயையைக் கிரகித்துக் கொண்டது. வீரவாகுதேவரும் மற்றவர்களும் தூக்கத்திலிருந்து எழுவது போல் எழுந்தனர். முருகப் பெருமான் விடுத்த அஸ்திரம் தன் பணியை முடித்த பின் பரமனிடமே திரும்பிச் சென்றுவிட்டது.

மயக்கம் தெளிந்தெழுந்த வீரவாகுதேவர், 'வஞ்சனையால் வலிமையைக் கெடுத்த பானுகோபனை உடனே கொல்லுவேன்' என்று எண்ணிப் பாசுபதாஸ்திரத்தைக் கையில் எடுத்து அதனை விடுப்பதற்குச் சிந்தித்தார்.

மோகனாஸ்திரத்தினால் மயங்கி விழுந்தவர்கள் அறிவு தெளிந்து எழுந்ததையும், வீரவாகுதேவர் பாசுபதாஸ்திரம் விடுப்பதற்குத் தயாராயிருப்பதையும் அறிந்த பானுகோபன் "இனி இங்கு நின்றால் பாசுபதாஸ்திரம் உயிரை மாய்த்து விடும்" என்று உணர்ந்து அங்கிருந்து மாயமாக விண்ணில் சென்று மறைந்துவிட்டான். அசுர வீரர்களும் மறைந்து ஓடி விட்டனர். மறைந்து செல்கின்றவனைக் கொல்வது யுத்த தர்மம் ஆகாது என்பதால் வீரவாகுதேவர் ஆயுதத்தை விடுக்காது இருந்துவிட்டார். ஓடி ஒளிந்ததே பகைவரின் தோல்விக்குச் சமமெனப் பூதர்கள் மகிழ்ந்தனர்.

இலக்கத் தெண்மரும், பூதவீரர்களும் சூழ வீரவாகு தேவர், ஜயசங்கம் ஊதிக்கொண்டு பாசறையை அடைந்தார் அங்கு எழுந்தருளியிருந்த அருள்மூர்த்தியாகிய கந்தவேளின் திருவடிகளை யாவரும் நன்றியுடன் தொழுதனர். யுத்த களத்தில் நிகழ்ந்தவற்றை யெல்லாம் மகிழ்ச்சியுடன் செவி சாய்த்துக் கேட்ட செவ்வேட்பரமன். வீரர்களுக்கு விடை கொடுத்து அவரவர் விடுதிகளுக்கு அனுப்பி வைத்தார்.

விண்ணில் மாயமாய் மறைந்த் பானுகோபன் பெருத்த அவமானத்துடன் புறக்கடை வழியாக மகேந்திரபுரிக்குச்

சென்று தன் உடலில் ஏற்பட்டிருந்த புண்ணுக்கு மருந்து தடவிக் கொண்டிருந்தான். உடலைப் புண் வாட்டியதைவிட அவமானமும், துக்கமும், பழியும் அவனது உள்ளத்தை அதிகமாக வாட்டிக் கொண்டிருந்தன.

போன மகன் வெற்றியோடு திரும்பி வருவான் என்று சூரபன்மன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். பானுகோபன் வந்துவிட்டசெய்தியைச்சேவகர்கள்தான் அவனிடம் தெரிவித்தார்களே தவிர, பானுகோபன் சூரபன்மனிடம் வரவில்லை. "பானுகோபன் எங்கே?" என்று சேவகர்களைக் கேட்டான் சூரபன்மன். தோட்டத்துப் பக்கம் வந்து படுத்திருக்கிறார்" என்று சேவகர்கள் பதில் கூறினார்கள்.

சூரபன்மனின் உள்ளம் கொதித்தது. 'ஹூம், இவனும் சிறுவன் தானே? போனால் போகிறது. நாளை நானே போகிறேன். அந்தக் கந்தனை எவ்வாறேனும் வென்று விரைவில் திரும்புவேன்' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டான் சூரன். மறுநாள் யுத்த ஏற்பாடுகளை எப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்ற சிந்தனையில் ஆழ்ந்தான்.

4. இரண்டாம் நாள் சூரபன்மன் யுத்தப் படலம்

மறுநாள் பொழுது புலர்வதற்கு முன் நித்திரையிலிருந்து எழுந்த சூரபன்மன், நித்திய கருமங்களை முடித்துக் கொண்டான். சபா மண்டபம் சென்று சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்தான். சேனைத் தலைவர்களும், அமைச்சர்களும் அவனைச் சூழ்ந்தார்கள்.

"நமது சேனைகளை அழைத்து வாருங்கள்" என்று ஒற்றர்களிடம் கட்டளையிட்டான் சூரன். இரதகஜ துரகபதாதிகள் அடங்கிய பல வகைஆயுதங்களை ஏந்திய இலட்சம் வெள்ளத்திற்கு மேற்பட்ட வீரர் படைகளைத் திரட்டி ஒற்றர்கள் அனுப்பினார்கள். அந்தச் சைன்யங்கள் வீரமகேந்திர புரியைச் சூழ்ந்து ஆரவாரம் செய்தன.

சூரபன்மன் சிகரம் ஒன்றின் மீதேறி நான்கு திசைகளிலும் தனது பார்வையைச் செலுத்தினான். கதிரவனின் ஒளிக் கதிர்கள் பாய முடியாத அளவுக்கு நெரிசலாகக் குவிந்

திருந்த சேனையைக் கண்டதும் அவன் உள்ளத்தை வாட்டிய துன்பம் பறந்தது. எதிரிகளை அப்போதே வென்றவன்போல் களிப்படைந்தான்.

சிகரத்திலிருந்து இறங்கி ஆயுதசாலைக்குச் சென்ற சூரபன்மன் சிவதனுசு, பாசுபதாஸ்திரம் போன்ற தெய்வாஸ்திரங்களை எடுத்துக் கொண்டான். அட்சய அம்பறாத் தூணியை முதுகில் கட்டிக் கொண்டான். தலையில் வைர முடியைத் தரித்துத் தும்பை மாலை அணிந்து கொண்டு தேரில் ஏறினான். அண்டங்கள் அதிரக் கனைக்கும் குதிரைகள் பூட்டப்பட்டிருந்த அந்தத் தேர் வாயு வேகத்தில் புறப்பட்டது. அசுர வீரர்களும் அமைச்சர்களும், நால்வகைச் சேனைகளும் அவனைத் தொடர்ந்தனர்.

சூரபன்மனின் தேர் அரண்மனை வாயிலைக் கடந்தது; சிங்கமுகாசுரனின் மகன் அதிசூரனும், தாரகாசுரனின் மகன் அசுரேந்திரனும் போர்க்கோலம் பூண்டு, சூரபன்மனிடம் வந்து அவனை வணங்கினார்கள். "நீங்கள் இருவரும் தலைவராக இருந்து படைகளை அணிவகுத்துச் சென்று போர் புரியுங்கள்" என்று அவர்களுக்குக் கட்டளையிட்டான் சூரபன்மன். அவர்கள் அவ்விதமே செய்தனர்.

பூமி அதிர அசுரப் படைகள் அணிவகுத்துச் சென்றபோது புவியைத் தாங்கும் ஆதிசேஷன் தலையை நெளித்தான். அஷ்டமா நாகங்களும், திசை யானைகளும் அஞ்சின. அணிவகுத்துச் சென்ற யானைகள் பிளிறிய ஒலி எண் திசைகளையும் கிழித்துக் கொண்டு பரவியது.

சூரபன்மன் சதுரங்க சேனைகளுடன் போருக்கு வருவதை அறிந்த இந்திரன் கந்தவேளிடம் ஓடினான். கருணை நிறைந்த பெருமானின் திருவடிகளை வணங்கி, "எம்பெருமானே! சூரபன்மன் இலட்சம் வெள்ளம் சேனைகளுடன் போருக்கு வருகிறான். தேவரீர் சூரபன்மனை வென்று எங்கள் அரச உரிமைகளையும் பொன்னுலக வாழ்வையும் மீட்டுத்தர வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

"அஞ்சாதே!" என்று திருவாய் மலர்ந்தருளிய பின் தேவதேவன், வாயு தேவனை அழைத்துத் தேரைக்கொண்டு

வரும்படி ஆணையிட்டார். வல்லசுரரை மாய்க்கவும் நல்ல சுரரை வாழ்விக்கவுமே வந்துதித்த சரவணபவன் போர்க் கோலம் பூண்டார். மனோவேகத் தேரில் ஏறிப்புறப்பட்டார் குமாரக் கடவுள். பூத சேனைகளும் கடலும் அஞ்சும் வண்ணம் ஆரவாரம் செய்து புறப்பட்டன. வீரவாகு தேவரும், தம்பி யரும், இலக்கம் வீரரும், பூதகணத் தலைவர்களும் போர்க் கோலத்துடன் பூத சேனைகளுக்கிடையே சென்றனர்.

யுத்த களத்தில் அசுர வீரர்கள் பூத சேனையைச் சூழ்ந்தனர். போர் தொடங்கிற்று. பூதர்களில் பலர் கைகால் களை இழந்தனர். பூத சேனைத் தலைவர்கள் அசுர வீரர்களில் பலரை அழித்தனர். அவர்கள் இறந்து விழுந்ததால் பிணங் கள் மலைபோல் குவிந்து கிடந்தன. உதிர வெள்ளம் பெருக் கெடுத்தோடியது. அப்போது, சூரனின் படையில் சிறந்த தொரு வீரனான அதிசூரன் கோபத்துடன் பாணங்களை மழை போல் பொழிந்தான். அவனது வில்லாற்றலைக் கண்ட பூத சேனைகள் திகைத்து நின்றன. உக்கிரன் என்ற பூத சேனைத் தலைவன் தண்டாயுதத்தை எடுத்துச் சுழற்றி அதிசூரனின் மார்பில் எறிந்தான். அதைக் கண்ட அசுர வீரர்கள் "அதி சூரன் இறந்தான்" என்று அலறினார்கள். உக்கிரன் எறிந்த தண்டாயுதம் அதிசூரன் மார்பிலிருந்த கவசத்தை அழித்தது. ஆயினும் அவனது உயிர் போகவில்லை. ஆத்திரமடைந்த அதி சூரன் உக்கிரன்மீது ஆயிரம் பாணங்களை விடுத்தான். அந்தப் பாணங்கள் தைத்ததால் உக்கிரனின் உடலிலிருந்து உதிரம் பெருகிப் பாய்ந்தது; அவன் உடலெல்லாம் புண்ணாகியது. பெரிதும் ஆத்திரமடைந்த உக்கிரன் ஒரு பெரிய மலையைப் பெயர்த்து அதிசூரன் ஏறிவந்த தேர் மீது வீசினான். அவனது தேர் சுக்குநூறாக உடைந்து அழிந்தது. அதிசூரன் மற்றொரு தேரில் ஏறிப் போர் புரிந்தான். அந்தத் தேரில் பூட்டப்பட்டி ருந்த குதிரைகளை அழித்தான் உக்கிரன். அதிசூரன் உக்கிர னின் உடலில் நூறு பாணங்களை விடுத்தான். அவற்றைத் தண்டாயுதத்தால் தடுத்து நிறுத்தினான் உக்கிரன். உக்கிரன் மீது தெய்வாஸ்திரத்தைச் செலுத்த வேண்டுமென்று முடிவு செய்த அதிசூரன் ஆக்கினேயாஸ்திரத்தை விடுத்தான். அதன் உக்கிரத்தைக் கண்ட உக்கிரன் கந்தவேளின் திருவடிகளைத்

தியானித்தான். கந்தக் கடவுள் அவனுக்கு அருள் புரிந்தார். அதிசூரன் வருணாஸ்திரத்தையும், வாயு அஸ்திரத்தையும், நாராயணாஸ்திரத்தையும் விடுத்தான். அவற்றையெல்லாம் தன் இரு கைகளாலும் வாரி விழுங்கிவிட்டான் உக்கிரன். அதனைக் கண்டு அதிசூரன் அதிசயித்து நின்றபோது உக்கிரன் வேகமாகப் பாய்ந்து அசுர சேனையைச் சேர்ந்த வீரர்கள் பலரைக் கொன்றான். எஞ்சிய அசுர வீரர்கள் ஓடினர். உக்கிரனின் செயலைக் கண்ட தேவர்கள் அவனது ஆற்றலை வியந்து பாராட்டினர்.

இந்திரன் பிரமனை நோக்கி, "அதிசூரன் ஏவிய தெய்வாஸ்திரங்களையெல்லாம் உக்கிரன் வாரி விழுங்கி விட்டானே; அதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

"உக்கிரன் அரிய தவம் செய்து சிவபெருமானிடம் வரம் பல பெற்றவன். கந்தவேளின் திருவருள் பெற்றவன்; திருமாலின் சக்கராயுதத்தை விழுங்கிய ததீசி முனிவரை விட ஆற்றல் மிக்கவன். ஆகவே, இவன் தெய்வாஸ்திரங்களை விழுங்கியது வியப்புக்குரியதல்ல" என்று பிரமதேவர் விடை கூறினார்.

யுத்த களத்தில் உக்கிரமாகப் போர் செய்த உக்கிரன் மீது அதிசூரன் சிவபெருமானால் அதிசூரனுக்கு வழங்கப்பட்ட பாசுபதாஸ்திரத்தை விடுத்தான்.

தருமமே உருவமான பரமனின் பெயரைத் தாங்கிய அந்த திவ்வியப்படை அறவழியினின்று அணுவளவும் பிறழாது. இந்தப் பாசுபதாஸ்திரத்தை அதிசூரனிடம் வழங்கிய போது, "கையில் ஆயுதம் இல்லாதவர் மீது செலுத்தினால் அது அவர்களைத் தாக்காமலும் உன்னிடம் திரும்பாமலும் நம்மிடம் வந்து விடும்" என்று சிவபெருமான் அருளியிருந்தார். இப்போது அந்த அஸ்திரம் சீறிக் கொண்டு உக்கிரனைத் தாக்க நெருங்கியது. உடனே அதன் மர்மத்தை அறிந்த உக்கிரன் தன் கையிலிருந்த ஆயுதத்தைத் தூர எறிந்து விட்டு நிராயுதபாணியாகக் கைகுவித்து நின்று பஞ்சாட்சர மந்திரத்தை ஜபித்து அதனைத் தொழுதான். பாசுபதாஸ்திரம் அவனைத் தாக்காமல் சிவபெருமானிடமே சென்றுவிட்டது. அதிசூரன்

வியப்பிலாழ்ந்தான். தன் தேரை விரைவாகச் செலுத்தி உக்கிரனுக்கு அருகே வந்து தேரிலிருந்து இறங்கி தண்டாயுதத்தைச் சுழற்றி உக்கிரன் தோள்மீது வீசியெறிந்தான். அந்தத் தண்டாயுதத்தைப் பிடுங்கிய உக்கிரன் அதனாலேயே அதிசூரனின் மார்பில் ஓங்கி அடித்தான். அதிசூரனின் மார்பு பிளந்தது. பெயருக்கேற்ப அதிசூரனாகவே இருந்த வீரனும் மரணமடைந்தான்.

அதிசூரன் இறந்ததைக் கண்ட அசுரேந்திரன் சீறிப் பாய்ந்து பூத சேனைகளைத் தாக்கத் தொடங்கினான். அவன் விடுத்த பாணங்களால் பூதர்களில் பலர் இறந்தனர். பூதப் படையைச் சேர்ந்த கனகன் அசுரேந்திரனுடன் போர் செய்தான். அசுரேந்திரன் ஆயிரக்கணக்கில் பாணங்களை விடுத்ததால் கனகன் மயங்கி விழுந்தான். உடனே பூதப் படையைச் சேர்ந்த உன்மத்தன் என்பவன் யுத்த களத்தில் இறங்கினான். அசுரேந்திரனின் பாண மழையில் அவனும் மயங்கி விழுந்தான். பூதப் படையைச் சேர்ந்த மந்தன், சிங்கன், தண்டகன் கோமுகன், விசயன் ஆகியோர் அசுரேந்திரனுடன் போர் செய்து தோற்றார்கள். இதனைக் கண்ட வீரவாகுதேவர் தாமே கோபத்துடன் அசுரேந்திரனுடன் போர் செய்ய முன் வந்தார். ஆக்ரோஷமாகப் போரிட்டு அவனது தலையை அறுத்தார். தேவர்கள் மலர் மாரி பொழிந்து மகிழ்ந்தனர். அசுரப்படைகள் சிதறியோடின.

அதிசூரனும் அசுரேந்திரனும் போர்க்களத்தில் இறந்ததையும் அசுர சேனைகள் சிதறி ஓடுவதையும் கண்ட சூரபன்மன் வடவாமுகாக்கினி போலக் கனன்று எழுந்தான். தானே போரில் குதிக்க வேண்டியதுதான் என முடிவு செய்தான். தனது தேரில் ஏறிப் போர்க்களம் வந்து தனுசை வளைத்து நாணை மீட்டிப் பெரும் ஒலி எழுப்பினான், அந்த ஒலியைக் கேட்ட பூத சேனைகள் அஞ்சி நடுங்கின. அச்சங்கொண்ட அவர்கள் தலைவிரிகோலமாக ஓடினர். சூரபன்மனின் நாணொலியின் ரீங்காரம் பன்னிரண்டு ஆண்டுகள் வரை விடாமல் ஒலித்தது. அந்த ஓசையைக்கேட்டு நாராயணமூர்த்தியே தமது தலையை அசைத்தார். பிரமன், இந்

திரன், இயமன் ஆகியோர் தங்களுக்கு என்ன நேருமோ என்று அஞ்சினர்.

பூதசேனைத் தலைவர்கள் நூற்று எண்மரும் மனத்தைத் திடம் செய்துகொண்டு சூரபன்மன் மீது மலைகளையும் மரங்களையும் வீசி யெறிந்தார்கள். சூரபன்மன் பத்து லட்சம் கோடி பாணங்களை விடுத்துத் தன்மீது வந்த மலைகளையும் மரங்களையும் துகள்களாக்கினான். பூதசேனைத் தலைவர்கள் நூற்றெண்மரும் வருந்திச் சோர்ந்து மயங்கினர். இலக்கம் வீரர்களையும் கண் பஞ்சடைந்து போகச் செய்தான் சூரன். வீரமார்த்தாண்டர், வீரராக்கதர், வீரமகேந்திரர், வீரதீரர். வீரமகேச்சுரர், வீரகேசரி, வீரபுரந்தரர், வீராந்தகர் ஆகியோரையும் சூரபன்மன் தோல்வியடையச் செய்து எதிர்ப்பவர்கள் எவருமின்றிப் போர்க்களத்தில் உலவிக் கொண்டிருந்தான்.

வீரவாகுதேவர் தேரில் ஏறிச் சூரபன்மன் இருக்கும் இடத்துக்குச் சென்றார். ''முன்பு வந்து நம் நகரத்தை அழித்துச் சென்றவன் இவன்தான்'' என்பதைச் சூரன் அறிந்ததும் பெரும் கோபம் கொண்டு, வீரவாகுவை இழித்தும் பழித்தும் பேசினான். அதன் பின் இருவருக்குமிடையே அதிகோரமான போர் மூண்டது. வீரவாகுதேவர் சூரபன்மனின் நெற்றியைக் குறிவைத்து எய்த பாணங்கள் வைர மலையில் தாக்கிய பொன்னூசிகளைப் போல முனை மழுங்கித் துகளாகி வீழ்ந்தன. வீரவாகுதேவர் வாயுவாஸ்திரம், அக்கினி அஸ்திரம். சூரியாஸ்திரம், வருணாஸ்திரம், இந்திராஸ்திரம், நிருதி அஸ்திரம் முதலிய தெய்வாஸ்திரங்களை ஏவினார். அந்தத் தெய்வப் படைக்கலங்களும் சூரபன்மனின் உடலில் பட்டு வலிமையிழந்து அழிந்தன.

சூரபன்மனின் அளப்பரும் ஆற்றலைக் கண்டு வியந்த வீரவாகு தேவர் பிரம்மாஸ்திரத்தையும் நாராயணாஸ்திரத்தையும் ஏவினார். அவையும் தமது ஆற்றல் ஒழிந்து அழிந்தன. சூரபன்மன் பெற்றுள்ள வரங்களின் சிறப்பையும் அவனது வல்லமையையும் எண்ணி வியந்து நின்றார் வீரவாகுதேவர்.

சூரபன்மன் வீரவாகுதேவரை நோக்கிக் கொக்கரித்தான்: "அற்பனுன தூதனே! மும்மூர்த்திகளுக்கும் முதல்வராகிய தேவதேவன் சிவபெருமான் தந்தருளிய வரங்களின் மகிமையினுல், எந்தத் தெய்வாஸ்திரத்தை என் மீது ஏவினுலும் என்னை வெல்ல முடியாது" என்று ஆர்ப்பரித்தான்.

தேவாதிதேவனுன சிவபெருமானின் பெயர் பூண்ட அஸ்திரமே எஞ்சியிருந்தது. வீரவாகுதேவர் பாசுபதாஸ்திரத்தை எடுத்து வழிபாடு செய்து சூரபன்மன் மீது பிரயோகித்தார். அந்த அஸ்திரம் வடவாமுகாக்கினி போன்று இடி மின்னல்களுடனும் விஷத்துடனும் இருளைப் பரப்பி ஆரவாரத்துடன் சென்றது. அதிவேகமாக ஆரவாரம் செய்து வரும் பாசுபதாஸ்திரத்தைக் கண்டதும் சூரபன்மன் தன்னிடமிருந்த பாசுபதாஸ்திரத்தை எடுத்து வழிபாடு செய்து ஏவினுன். இரண்டு சிவாஸ்திரங்களும் பிரபஞ்சங்கள் எல்லாம் அஞ்சி நடுங்கும்படி போரிட்டுத் தம்மை விடுத்தவர்களிடமே திரும்பிச் சென்றுவிட்டன. பிறகு இருவரும் முத்தலை பாணம், வேல், தண்டாயுதம் இவற்ருல் போர் செய்து கொண்டார்கள்.

சூரபன்மனின் தண்டாயுதம் வீரவாகுதேவரின் மார்பைத் தாக்கியது. அவரது உடலிலிருந்து உதிரம் ஊற்றெடுத்து ஆறுபோல் ஓடியது. வீரவாகுதேவர் செயலற்றுத் தேரின்மீது வீழ்ந்தார். தேவர்கள் கதிகலங்கினர். அப்போது வீரவாகுதேவரின் தேர்ச் சாரதியாகிய வீசாலி தேரை ஒரு பக்கமாகச் செலுத்தினுன். சூரபன்மன் வீரவாகுதேவர் ஒருவாருக ஒழிந்தார் என்று எண்ணிப் பூதசேனைகளின் மீது பாணங்களைச் சூருவளிபோல் விடுத்தான். பூதசேனையைச் சேர்ந்தவர்களில் எண்ணற்றவர் இறந்தனர். எஞ்சியவர்கள் பயந்து ஓடினர்.

பூதசேனைகளும், வீரவாகுதேவரும் போர்க்களத்தில் வலியிழந்து சின்னுபின்னப்பட்டிருப்பதை யறிந்த கந்தவேள், தமது சாரதியாகிய வாயுதேவனைப் பார்த்து, "நமது தேரை வேகமாகச் செலுத்திச் சூரபன்மன் முன் கொண்டு போய்

நிறுத்து" என்று ஆணையிட்டார். அதன்பின் நவரத்தின மயமான அந்தத் தேரை மனோவேகத்தில் ஓட்டிக்கொண்டு போய்ப் போர்க்களத்தில் இறுமாந்திருந்த சூரபன்மன் முன் நிறுத்தினார் வாயுதேவன்.

"சூரபன்மனும் எம்பெருமானும் முதல் முறையாக சந்தித்தனர். பயங்கரமான அந்தப் போர்க்களத்தில், பகைமை தலைவிரித்தாடும் யுத்த பூமியில் கருணை வழியும் முகத்துடன் காட்சி தந்தார் கந்தப் பெருமான்.

முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோல மார்பும்
எண்டரு கரமீ ராறும் இலங்கெழிற் படைகள் யாவும்
தண்டையுஞ் சிலம்பும் ஆர்க்குஞ் சரணமும் தெரியக்
கண்டான்.

தாமரை மலர்ந்தது போன்ற குளிர்ந்த திருமுகங்களையும், பன்னிரு கண்களையும், பன்னிரு குண்டலங்களையும், திருமுடிகளையும், அழகிய திரு மார்பினையும், பன்னிரு திருக்கரங்களையும், விளங்குகின்ற ஆயுதங்களையும் தண்டையும் சிலம்பும் ஒலிக்கின்ற திருவடிகளையும் சூரன் கண்டனன்.

பூவுல கண்ட மெல்லாம் புரந்திடுஞ் சூரன் தன்னை
தீவினை யாளன் என்றே செப்புவர்; சிறப்பின் மிக்க
மூவிரு முகத்து வள்ளல் முன்னர்வந் தெய்தப் பெற்றான்
ஆ! இவன் தவத்திற்கன்றி அறத்திற்கும் முதல்வன்
அன்றோ?

'எல்லோரும் சூரபன்மனைக் கொடியவன், தீவினையாளன் என்று சொல்லுவார்கள். அவன் எத்துணைக்காலம் தவம் செய்திருந்தால் ஆண்டவன் அவனுக்குக் காட்சி தருவார்? அவன் தவம் மட்டும் அல்ல; அறமும் செய்திருக்கிறான். கண்ணுக்குத் தெரியாமல் முந்தைய ஜென்மத்தில் செய்திருக்கிறான். தேவர்களும் முனிவர்களும் இன்னமும் இத்தன்மையன் என்று கண்டுகொள்ள முடியாத பரம்பொருளை நன்றாகக் கண்டவன் அன்றோ சூரபன்மன்?"

இன்னமும் முனிவர் தேவர் யாவரும் இனையன் என்றே
உன்னருந் தன்மைத் தாகும் ஒருதனிக் குமரன் தன்னைத்

தன்னிரு விழியால் கண்டான் தானவர்க் கிறைவன் என்ருல்
அன்னவன் தவத்தின் பேற்றை ஆரறிந் துரைக்கற் பாலார்.

என்று கச்சியப்பர் வியந்து சொல்கிருர்.

சூரபன்மன் முருகனை நோக்கி, உன் சேனைகள் முழுவதும் வலியிழந்து அழிந்தன. மற்றை வீரர்களும் தூது வந்த வீர வாகுவும் அழிந்தனர். சிறுவனுகிய நீ என்னுடன் போர் செய்ய வருகின்ருய். உன் தந்தையாகிய சிவபெருமானும் நான்முகனும், திருமாலும் என்னுடன் போர்புரிய வேண்டும் என்று எண்ணியதில்லை. முன்னுள் வலியிழந்து அழிந்த கிரவுஞ்ச மலையையும், தாரகனையும்போல் என்னை எண் ணுதே! என் வரங்களையும், வலிமையையும் பிறவற்றையும் நீ சிந்திக்கவில்லை. பூத சேனைகள் புறங்கொடுத்து ஓடிவிட் டன. கடைசியில் சின்னஞ் சிறு குழந்தையான நீ என்னுடன் போர் செய்ய வந்திருக்கிருய்? தேவர் யாவரும் வருந்த என் வில் வலியால் ஓர் விநாடியில் உன் வலியை அழிப்பேன் என்று கூறினுன்.

சூரபன்மன் கூறியதைக் கேட்டு எம்பெருமான் புன்னகை புரிந்தார்.

அருளுருவாகிய எம்பெருமான் புன்முறுவல் பூத்து, மிகுதியான ஆற்றலும், எண்ணில்லாத படைகளையும், அழி யாத இயல்பையும் உடையோம் என்று ஆணவம் கொள் ளாதே. எல்லாவற்றையும் விரைவில் வெல்வோம் என்று அறியாமையால் எண்ணுகின்ருய். சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய ஒரு பொறிதான் உலகங்கள் எல்லாவற்றையும் அழிப்பது. நூற்றெட்டு யுகம் சிறந்து வாழும் உன்னுடைய வலிமை முழுவதையும் இப்பொழுதே அழிப்போம்'' என்று மொழிந்தார்.

எம்பெருமான் கூறியதைக் கேட்ட சூரபன்மனுக்குக் கோபம் பொங்கியது; அவனது கண்கள் அக்கினி ஜ்வாலையைக் கக்கின. தனது பெரிய வில்லை வளைத்தான். கந்தவேள் ஒரு பெரும் வில்லை வளைத்து நாணெலி செய்தார்.

அண்டங்கள் யாவும் உடைவது போன்ற பெருமுழக்கம் ஏற்பட்டது.

சூரனுக்கும், சுவாமிக்குமிடையே போர் தொடங்கியது. சூரபன்மன் கோடி பாணங்களைத் தொடுத்தான். அந்தப் பாணங்களினால் எம்பெருமானும், அவரது தேரும் மறைக்கப் பட்டன. முருகப் பெருமான் விடுத்த பாணங்கள் சூரபன் மனின் பாணங்களை அழித்தன. சூரபன்மன் நஞ்சுதோய்ந்த பாணங்களை விடுத்தான். அந்தப் பாணங்களையும் அழித் தார் சுவாமி. சூரபன்மனின் தோள்களை நோக்கிப் பதி னான்கு பாணங்கள் விடுத்தார். அந்தப் பாணங்கள் சூரபன் மனின் தோள்களைத் துளைக்கவில்லை; மாறாக ஒடிந்து வீழ்ந் தன. அவனது வச்சிர உடலின் வலிமையைக் கண்ட எம் பெருமான், ஆயிரம் பாணங்களை விடுத்து வில்லை ஒடித்தார். சூரபன்மன் பிரமதேவர் அளித்திருந்த அயிற்படையை விடுத் தான். அதனை அழித்தார் சுவாமி.

பின்னர், சூரபன்மனின் தேரையும். அவனுக்கு உதவி யாக வந்திருந்த பதினான்கு லட்சம் தேர்களையும் சிதைத்து அழித்தார். முருகப் பெருமானது வல்லமையைக் கண்ட சூரபன்மன் முத்தலைச் சூலம் ஒன்றை எடுத்து அவர் மீது வீசினான். அதனைப் பாணங்களினால் வீழ்த்திய எம்பெருமான், சூரபன்மனின் தேரின் குடையையும், அவனது மகுடத்தையும் வீழ்த்தினார். சூரனின் ஆபரணங்களையும் அவனது நெற்றியி லிருந்த வீரப் பட்டயத்தையும் அழித்தார். சூரபன்மனுக்கு ஏற்பட்ட பரிபவ நிலையைக் கண்ட அவனது வீரர்கள் முருகப் பெருமானைச் சூழ்ந்துகொண்டு கொடிய போர் செய்தனர். முருகப் பெருமான் தம் திருக் கரத்திலிருந்த சக்ராயுதத்தை ஏவினார். அந்த சக்ராயுதம் அசுரர்களின் சிரங்களை அறுத் தும், கரங்களைத் துண்டித்தும் சூரபன்மனின் நூறாயிரம் வெள்ளம் சேனைகளையும் அழித்துவிட்டது.

இப்படியாக எம்பெருமானுக்கும், சூரபன்மனுக்கும் நீண்ட நேரம் போர் நடந்தது.

போர்க்களத்தில் இறந்த படைகளின் உடல்கள் மலை போல் குவிந்துவிட்டன. பேய்க் கூட்டங்கள் நடமாடின.

தன் படைகள் எல்லாம் அழிந்ததைக் கண்ட சூரபன்மன் இவைகளை யெல்லாம் இந்தச் சிறுவன் எவ்வாறு அழித்தான் என்று வியந்தனன். மீளவும் போர் செய்யத் தொடங்கினன். முருகப் பெருமான் மீது நான்முகன் படைக் கலத்தை ஏவினன்.

மேகம் போன்ற சூரபன்மன் பிரமாத்திரத்தை விடுத்தான். அந்த பெருமை தங்கிய வலிய பாணம் முருகனுடைய அருகில் சென்றது. சென்றதும் எம்பிரான் கரத்தில் இருந்த வேலாயுதம் அப்பிரமாத்திரத்தை விழுங்கிவிட்டது.

சூர்ப்புயல் அன்னதொர் சூரன் விடுக்கும்
மாற்படு போதன் வயப்படை சென்று
பாற்படும் எல்லை பரஞ்சுடர் செங்கை
வேற்படை சென்று விழுங்கிய தன்றே.

பின்னர் திருமால் படைக்கலத்தை ஏவினன். சூரபன்மன் விடுத்த நாராயண அத்திரம் பலப்பல விஷ்ணு வடிவங்களைக் கொண்டு சென்றது. முருகப்பெருமானுடைய திருக்கரத்தில் இருந்த வேல் சென்று, அந்தப் படையையும் விழுங்கியது.

விட்டிடு மாயவன் வெம்படை ஏகி
மட்டறு கண்ணர்தம் மாலுரு ஈன்று
கிட்டிய காலை கிளர்ந்திடும் ஒள்வேல்
அட்டது தன்னையும் ஆர்ந்தது மன்னோ.

சிவப் படைக்கலத்தை வழிபட்டு விடுத்தான். அது மிகவும் ஆரவாரம் செய்து கொண்டு யாவரும் நடுங்க வந்தது.

எந்தைதன் மாப்படை ஈதென ஐயன்
சிந்தை புரிந்தொரு செங்கையை நீட்டி
வந்திடும் அப்படை பற்றினன் மாதோ
தந்தவன் வாங்கிய தன்மைய தென்ன.

முருகப் பெருமான், இது எமது பிதாவினுடைய பாணம் என்று கருதி, தமது திருக்கரத்தை நீட்டி, தந்தவன் வாங்கிய தன்மைபோல் பற்றிக்கொண்டனர்.

சூரபன்மன் தன் படைக்கலங்கள் எல்லாவற்றையும் முருகப்பெருமான் எளிதாக செயலற்றவைபாகச் செய்தது கண்டு "சிவபெருமான் திருமகனேதான் என்பதைக் காட்டி விட்டார். என்னோடு போர் செய்ய இவர் அன்றி வேறு ஒருவரும் இல்லை, இனி இவர் வலிமையை மேலும் பார்ப்போம்" என்று கருதிப் பேசாமல் நின்றான்.

குமாரக் கடவுள் அவனை நோக்கி தேவர்கள் யாவரையும் நீ அளவில்லாத காலம் சிறையில் வைத்துள்ளாய். அவர்களை விடுவிக்குமாறு உன்னிடம் ஒரு தூதன் மூலம் தெரிவித்தோம். ' நீ விடுவிக்கவில்லை. அதனால் நாம் இங்கு வந்தோம். தாரகனை அழித்ததையும் மற்றும் இன்று உன் படைகளையும் படைக்கலங்களையும் அழித்ததும் கண்டாய். படைகளின்றித் தனித்து நிற்கும் உன்னை அழிப்பதும் சரியல்ல என்று கருதுகின்றேன். தேவர் சிறையை நீக்க இன்னும் மறுப்பையேல் உன்னை இப்பொழுது கொல்லுவோம். உன் எண்ணத்தைக் கூறுவாயாக என்றார்.

பன்னு கின்றதென் பற்பல விண்ணுளோர் பலரும்
துன்னு தொல்சிறை விடுத்தியேல் உன்னுயிர் தொலையேம்
அன்ன தன்மையை மறுத்திடின் ஒல்லைநாம் அடுதும்
என்னை கொல்உன தெண்ணங்கள் உரைத்தியால் என்றான்.

சூரபன்மன் நான் வலியிழந்து நிற்பதால் தேவர் சிறையை நீக்கும்படி என்னிடம் இச்சிறு பாலகன் கூறுகின்றான். என்னுடைய வலிமையை அறிந்தானில்லை. நான் தனித்து நின்றாலும் என்னை இவன் கொல்லுவதும், நான் இவனை வெல்லுவதும் அரிது. நீண்டகாலம் போர் நிகழும். வேறு படைகளோடு பின்னர் வந்து மீளவும் போர் செய்வேன் என்று எண்ணி மாயமாய் மறைந்து வீரமகேந்திர புரத்திலுள்ள தன் அரண்மனையை அடைந்தான்.

போர்க்களத்தில் சூரபன்மன் தோற்று ஓடியதைக் கண்டதும், திருமால், பிரமா, இந்திரன் முதலிய தேவர்கள் எல்லையற்ற மகிழ்ச்சி யடைந்தனர். நன்றி நிறைந்த நெஞ்சத்துடன் முருகப் பெருமானை வணங்கித் துதித்தனர். "எம்பெருமானே! தோல்வி என்பதையே அறியாத

சூரபன்மன் இன்றுதான் தேவரீரோடு போர் செய்துதோற்று ஓடியிருக்கிறான். தேவரீர் மட்டும் அவனைக் கொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தால் அவன் தப்பியோடியிருக்க முடியாது. தப்பி ஓடிய அவனைத் தாங்கள் வேலினால் அழிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

சூரபன்மன் போரில் தோற்று ஓடியதை அறிந்த பூத சேனைகளும், அவற்றின் தலைவர்களும் ஆரவாரத்துடன் கந்தப் பெருமான் அருகே வந்தனர். "இனி சூரபன்மனின் நகரத்து மதிலையும், அவனது அரண்மனையையும் தகர்த்துக் கடலில் வீசியெறிவோம்" என்று கூறி, மதிற் பக்கம் படையெடுத்துச் சென்றனர். வீரமகேந்திரபுரியை முற்றுகையிட்டனர். மதிற்சுவர்களும் கோபுரங்களும் தரைமட்டமாயின.

வீரமகேந்திரத்தின் காவலாளியான அசுரப் படைத் தளபதி அதிகோரனுக்கும் பூதப்படைத் தலைவர்களில் ஒருவனாகிய மேகனுக்கும் கடும் போர் நடந்தது. மேகன் அதிகோரனின் மார்பிலும் தோள்களிலும், கபாலத்திலும் ஓங்கி அறைந்தான். அதிகோரன் அலறி விழுந்து அழிந்தான். அதன் பின்னர் பூத சேனைகள் மதிலின் முதல் வாயிலுக்குச் சென்று, அங்கே வானளாவி நின்றகோபுரத்தை அடியோடு பெயர்த்துக் கடலில் வீசினர். திருப்பாற்கடலில் மந்தரகிரி அமிழ்ந்ததுபோல் அந்தக் கோபுரம் சமுத்திரத்தில் அமிழ்ந்தது. அதனால் கடல் நீர் பொங்கியெழச் சூரபன்மனின் நகரத்து வீதிகள் யாவும் வெள்ளக் காடாயின. அந்த வெள்ளத்தில் மிதந்து வந்த மீன்களும் திமிங்கிலங்களும் அசுரர்களை விழுங்கின.

பூதசேனைகள் மதிலின் வடபுறக்கோபுரத்தைத் தகர்த்து, நகருக்குள் நுழைந்து எதிர்த்து வந்த அசுரர்களையெல்லாம் கொன்று குவித்தார்கள். பூதசேனைகளுக்குத் திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது. பட்டணத்துக்குள் பிரவேசிக்கும் போது தலைவனான பெருமான் அல்லவா முன்செல்ல வேண்டும் என்று கருதினார்கள். கந்தவேளை அழைத்து வருவதற்காக அவர் இருந்த இடத்துக்குத் திரும்பிச் சென்றார்கள்.

போர்க்களத்தில் தோற்று ஓடிவந்த சூரபன்மன் தனது அரண்மனையின் அந்தப்புரத்துக்குச் சென்றான். அவனது இன்னுயிர் மனைவி பதுமகோமளை வாசம் செய்யும் மாளிகையை அடைந்தும் அவளைப் பார்க்கவில்லை; பேசவுமில்லை. உணவும் கொள்ளாது ஒருவருடனும் பேசாது, தனியாக அமர்ந்து தனக்குப் போர்க்களத்தில் நேர்ந்த அவமானத்தையெல்லாம் எண்ணி மனம் குமுறிக் கொண்டிருந்தான்.

சூரபன்மன் போரில் தோற்று வந்த செய்தியைத் தூதர்கள் மூலம் கேட்ட பானுகோபன் துடிதுடித்து, மனம் புழுங்கினான். சூரபன்மன் இருக்கும் இடத்துக்குச் சென்று தந்தையை வணங்கினான். "நீங்கள் ஏனப்பா யுத்தத்துக்குச் சென்றீர்கள்? உங்கள் உத்தரவுப்படி நேற்று நான் யுத்தத்துக்குச் சென்று கடுமையாகப் போர் செய்தேன். நான் மோகனாஸ்திரத்தை ஏவிக் குமரனின் வீரர்களது வலிமையை இழக்கச் செய்து வெற்றிவாகை சூடிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் பார்த்து அந்தக் குமரன் என் மீது அமோகாஸ்திரத்தை விடுத்தான். அதனால் என்னுடைய மோகனாஸ்திரத்தின் வலிமை குன்றியது. வலிமை இழந்து மயங்கிக் கிடந்த அவனது வீரர்களும் தெளிவுபெற்று விட்டார்கள். எனினும் நான் உயிருடனிருக்கும் வரையில் அவன் என்னை வென்றுவிட்டதாகச் சொல்ல முடியுமா? இது போல் ஓரிரு சறுக்கல்கள் நேரிடுவது யுத்தத்தில் சகஜம்தானே? எனவே, இன்றேனும் எதிரிகளை எப்படியும் கொன்று அழித்துவிட வேண்டுமென்று நான் ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். அதற்குள் தாங்களே போருக்குச் சென்றதாக அறிந்தேன். அழியாத வரம் பெற்ற தாங்கள் ஒரு பாலகனுடன் போருக்குச் செல்லலாமா? நடந்தது நடந்துவிட்டது. நாளைக்கு நானே போருக்குச் சென்று வெற்றி வீரனாகத் திரும்புகிறேன். எனக்கு விடை தாருங்கள்" என்றான்.

"மகனே! நீ பேசுவது நமக்கு உவகை தருகிறது. எனினும் அந்தச் சரவணபவனின் ஆற்றலை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. நானும் முன்பு அவனைச் சிறுவனாகவே மதித்தேன். ஆனால் அவனுடன் போர் செய்ததிலிருந்து மும்

மூர்த்திகள் சேர்ந்தாலும் அவனை வெல்ல முடியாது என உணருகிறேன். அவனுடன் எதிர் நின்று போர் செய்ய என் ஒருவனுல்தான் முடியும். அந்தக் குமரனின் இரண்டாயிரம் வெள்ளம் சேனைகளுக்கும் தலைவனு யிருக்கிற வீரவாகுவை நீ தனிமையில் போருக்கு அழைத்து வெற்றி கொள். அதுவே உன் சக்திக்குத் தகுந்த செயல். இதற்காக நாளைய தினமே சேனைகளுடன் புறப்படு'' என்று விடை கொடுத்தான்.

தந்தையிடம் விடைபெற்று அரண்மனைக்கு வெளியே வந்த பானுகோபனிடம் மகேந்திரபுரியின் வீரர்கள் ஓடிவந்து வணங்கினுர்கள்.

''அரசிளங்குமரரே! பூதசேனைகள் திரண்டு வந்து தலை நகரை முற்றுகைபிட்டு மதில்களை இடித்துத் தகர்த்து விட்டனர். அதிகோரனையும், அசுர வீரர்கள் பலரையும் அழித்துவிட்டனர். நகருக்குள் கடல் நீர் புகுந்து வருகிறது'' என்று கூறினுர்கள்.

பானுகோபன் உடனே அரும் சக்திகள் பெற்ற அசுரத் தச்சர்களை வரவழைத்து மதில்களைச் சீர்படுத்தும்படி ஆணை யிட்டான். மகேந்திர ஜாலம் போல் அசுரத் தச்சர்கள் விரை விலேயே முன்னைக் காட்டிலும் பன்மடங்கு எழிலும் வலுவும் பொருந்திய மதில்களை மகேந்திரபுரிக்குக் காப்பாக அமைத் தனர். பதினுயிரம் வெள்ளம் படைகளுக்குத் தலைவனுன மகாகாயனை எல்லைக் காவலுக்கு வைத்தான் பானுகோபன்.

5. மூன்ரும் நாள் பானுகோபன் யுத்தப்படலம்

அன்றிரவு நீங்கியது. கதிரவன் கதிர்களை வீசி இருளை நீக்கி ஒளியைப் பெய்தான். பானுகோபன் தன் காலைக் கடன் களை முடித்துக் கொண்டான். தனது பாட்டியாகிய மாயா தேவியை நினைந்து வேண்டினுன். மாயை அந்தக் கணமே அவன் முன் தோன்றி, ''குழந்தாய்! என்னை அழைத்த காரணம் என்ன?'' என்ருள்.

''பாட்டி! நான் நால்வகைச் சேனைகளுடன் சென்று போரிட்டும் முருகனின் தூதனிடம் வலிமை குன்றித் திரும்பி

விட்டேன். அதனல் எனக்குப் பெரும் அவமானம் நேர்ந்ததோடு மாருத பழியும் நேர்ந்தது, பாட்டி! என்னேடு போர் செய்து வெற்றி பெற்ற பகைவர்களை இன்று நான் வெல்லுவதற்குப் படை தந்தருள்க" என்று பானுகோபன் வேண்டிக் கொண்டான்.

மாயாதேவி ஒரு மாயப் படைக் கலத்தை உண்டாக்கிப் பானுகோபன் கையில் கொடுத்தாள். "பௌத்திரா! இப் படைக் கலம் பகைவர்களின் அறிவை மயக்கும். இதனை விடுத்தால் வெற்றி உனக்கே" என்று கூறி மீண்டாள்.

பானுகோபன் மிகவும் மகிழ்ந்துபோர்க் கோலம் பூண்டு தேரில் ஏறிப் புறப்பட்டான். அளவற்ற தெய்வாஸ்திரங்களையும் அவன் கொண்டு சென்ருன். அவனுடன் நாற்பதினுயிரம் வெள்ளம் சேனைகள் சென்றன.

மதிற்புறத்தை அடைந்த அசுர ராஜகுமாரன் ஆயிரங் குதிரை முகங்களைக் கொண்ட ஒரு தூதனை அழைத்து, "நீ சிவகுமாரனின் பாசறைக்குச் செல்வாய். வீரவாகு தேவரிடம் 'இன்றைய யுத்தத்தில் உனது உயிரைக் கவருவதற்காகப் பானுகோபன் வந்திருக்கிருன். உடனே விரைந்து போருக்குப் புறப்படு' என்று தூது சொல்லி வா" என்று அனுப்பினுன்.

வீரவாகுதேவர், தூதன் சொன்னதைக் கேட்டுச் சிரித்தார். "பானுகோபன் உயிரைக் கவருவதற்காக நான் இதோ வருகிறேன் என்று அவனிடம் போய்ச் சொல்" என்று கூறினுர். பின்னர் துணைவர்கள் சூழக் கந்தக் கடவுளை அணுகி அவரது திருவடிகளை வணங்கி நின்ருர். "பானுகோபன் மாயை செய்தால் என் வேல் வந்து துணை செய்யும்" என்று அருளி அவர்களுக்கு விடை தந்து அனுப்பினுர் ஆறுமுகன். (மாயைதனை அழிக்கும் ஞானத்தின் உருவேயன்ருே வேலாயுதம்?)

பூத சேனைகளும் அவுண சேனைகளும் மோதின. அப் போரில் பூதர்கள் சிலரும் அவுணர்கள் பலரும் இறந்தனர். அன்று வீரவாகுவுக்கும் பானுகோபனுக்கு மிடையே அற்புதமான போர் நடைபெற்றது. பானுகோபன் சீறியெழுந்து வருணப் படையை விடுத்தான். அது ஊழிக் காலத்துக்கடல்

வெள்ளம் போல் பரந்து விரைந்தது. வீரவாகுதேவர் அதற்கு எதிராக அக்கினிப் படையை விடுத்தார். அந்தப் படையிலிருந்து புகையும் பொறியும் எழுந்து அண்டங்கள் வெடித்தன. கங்கை வற்றியது. கடல்கள் சுருங்கி மலைகள் வெடித்து நிலம் பிளந்தது. அக்கினிப் படை உலகம் எல்லாம் எரிய வந்து பானுகோபனின் வருணப் படையை வற்றச் செய்து விழுங்கியது. பானுகோபன் வாயுப் படையை விடுத்தான். யுகாந்த மாருதம் போல் சீறிச் சென்ற அந்தப் படை அக்கினிப் படையை அணைத்துப் பூதப் படைகளைக் கொல்ல வந்தது. வீரவாகுதேவர் நாகப் படையை விடுத்தார். அந்தப் படை அளவற்ற பாம்புகளின் கூட்டமாய்ச் சென்று, வாயுப் படையை உண்டது. பானுகோபன் கருடப் படையை விடுத்தான். அதனால் நாகப்படை அழிந்தது. கோபமுற்ற வீரவாகு தேவர் நந்திப் படையை ஏவினர். அந்தப் படை எண்ணற்ற இடபங்களின் உருவுடன் அண்டங்கள் அதிர ஆரவாரம் செய்து சென்று கருடப் படையை அழித்தது. பானுகோபன் இயமப் படையை விடுத்தான். நந்திப் படை அதனையும் அழித்தது. நந்திப்படையின் ஆற்றலைக் கண்ட பானுகோபன் பிரமப் படையை விடுத்தான், அந்தப் படையும் நந்திப் படையைக் கண்டு வணங்கிச் சென்றது. பானுகோபன் விஷ்ணுப் படையை ஏவினன். அது நந்திப் படையுடன்போர் புரிந்து கொண்டிருந்த போது வீரவாகு தேவர் வீரபத்திரப் படையைச் செலுத்தினர். வீரபத்திரப் படை விஷ்ணுப் படையை அழித்தது. அதனைக் கண்ட பானுகோபன் சிவப் படையை எடுத்து வழிபட்டு விடுத்தான். உடனே வீரவாகு தேவரும் சிவப் படையைப் பூசித்து விடுத்தார். இரு சிவப் படைக் கலங்களும் ஊழிக் காற்றையும், தீயையும், நஞ்சையும், நீரையும், காளிக் கூட்டங்களையும் காலர் கூட்டங்களையும் உண்டாக்கிக் கொண்டு எங்கும் போர் செய்தன. உருத்திர கணங்களும் தோன்றிப் போர் செய்தனர். பலவிதமான ஆயுதங்களும் மழைபோல் பொழிந்தன. மேரு மலை துகளாயிற்று. கடல் வற்றியது; உயிர்கள் யாவும் துடித்துஉலைந்தன. குலமலைகள் குலைந்தன; அச்சத்தினால் பூதேவியும், சீதேவியும் திருமாலைத் தழுவிக் கொண்டார்கள். தேவர்கள் நிலைதடு

மாறி ஓட, பானுகோபனுடன் வந்த சேனைகள் விலகாமல் நின்று யுத்த சக்தி தாங்க முடியாமல் அழிந்தன.

பானுகோபன் ஒருவனே உயிர் பிழைத்து நின்றான். "ஊழிக் காலம் இதுதானோ?" என்று அஞ்சி நின்றான்.

வீரமகேந்திரபுரி அஞ்சி நடுங்குவதைக் கண்ட சூரபன்மன், "இவ்வாறு நிகழ்வதற்கு என்ன காரணம்?" என்று அறிந்து வருமாறு தூதர்களை அனுப்பி நடந்தவற்றை அறிந்தான். 'பானுகோபன் சிவப் படையை விடுத்தும் வீரவாகுவை வெற்றிகொள்ள முடியவில்லையே?' என்று ஆச்சரியமும் ஆத்திரமும் ஒருங்கே அடைந்தான்.

இரு சிவப் படைக்கலங்களும் தமது வலிமையைச் சுருக்கிக் கொண்டு தம்மால் அழிந்த மலை, கடல், அண்டங்கள் முதலியவற்றை முன்போல் நிலை நிறுத்தித் தம்மைச் செலுத்தியவர்களிடமே மீண்டும் சென்றன. அழிக்கவும் ஆக்கவும் ஆற்றல் பெற்ற ஆயுதம் அல்லவா அது...?

வீரவாகுதேவருடன் செய்த யுத்தத்தில், உடன் வந்த சேனைகளை யெல்லாம் இழந்து தனித்து நின்றான் பானுகோபன், 'தனி யொருவனாக வீரவாகு தேவருடன் போர் செய்தால் தான் இறப்பது உறுதி. ஆகவே, இனி யுத்த களத்தில் நிற்பதும் சரியன்று' என்று அஞ்சி வானில் மறைந்து நின்றான். அவன் மறைந்தோடியதைக் கண்ட பூத சேனைகள், 'பானுகோபன் தோற்றுவிட்டான்' என்று ஆரவாரம் செய்தன. அப்போது பொழுது சாய்ந்துவிட்டது. பூதப் படைகள் யாவும் பாசறைக்குத் திரும்பின.

வானில் மறைந்து நின்ற பானுகோபன், "இன்றும் நான் தோல்வியுடன் திரும்பினால் நம் புகழ் அடியோடு அழியும். ஆகவே, பகைவரை எப்படியேனும் வெல்ல வேண்டும். வீரவாகுவுக்கு எதிரே நின்று போர் செய்து வெற்றி கொள்ள முடியாது. எனவே, தந்திரத்தினால்தான் வெல்ல வேண்டும்' என்று எண்ணினான். தனது பாட்டி மாயாதேவி கொடுத்த மாயப் படைக் கலத்தை எடுத்து வழிபட்டு, "நீ ஒருவரும் அறியாவண்ணம் சென்று பகைவர்கள் உயிரையும் உணர்

யையும் கெடுத்து நன்னீர்க் கடலில் எறிவாய்'' என்று சொல்லி விடுத்தான்.

வானிலிருந்து பானுகோபன் மாயப் படையைச் செலுத்தினன். அது யாரும் அறியாவண்ணம் பூமியை வந்தடைந்தது. பூத சேனைகளின் அறிவை மயக்கியது. ஆயினும் எம்பிரானின் அருள் பெற்ற அவர்களின் உயிரைக் கவர அதனுல் முடியவில்லை. மாயப்படை ஊழிக் காற்றின் வடிவெடுத்து ஆலகால விஷம்போல் பாய்ந்தது. வீரவாகுதேவர் முதலிய அனைவரையும் விண் வழியே எடுத்துச் சென்று ஆறுகளையும் கடல்களையும் கடந்து நன்னீர்க் கடலில் அவர்களை அழுத்தியது: அவர்கள் அங்கிருந்து வெளியே கிளம்பாதபடி தடுத்தது.

அதனைக் கண்ட பானுகோபன் மகிழ்ச்சிப் பெருக்கினுல் ஜயசங்கம் ஊதினன். விண் வழியாக விரைந்து வீரமகேந்திரம் சென்ருன். சூரபன்மனைப் பணிந்து, ''இன்று நான் பலவாருகப் போராடி வீரவாகுவையும், இலக்கத் தெண்மரையும் ஆயிரம் வெள்ளம் பூத சேனைகளையும் கொன்று வென்றேன். அவர்களது உடல்களை நன்னீர் கடலில் இட்டேன். அப்பா! இனி நீங்கள் வருத்தப்பட வேண்டாம் நான் படைகளோடு நாளை சென்று ஆறுமுகனை வென்று, மால் அயன், இந்திரன் முதலியோரைப் பிடித்துக் கொண்டு வருகிறேன்'', என்ருன்.

பானுகோபன் கூறியதைக் கேட்ட சூரபன்மன் உளம் உவந்து மகனைத் தழுவிக் கொண்டான். ''மகனே! ஒரு மகன் தந்தைக்குச் செய்ய வேண்டியதை நீ செய்துவிட்டாய். உன்னுல் நம் குலம் உயர்ந்தது. இனி நமக்கு ஒரு குறையுமில்லை. நீ கூறியபடியே நாளைக் காலை சென்று முருகனை வென்று பிரமாதி தேவரைப் பிடித்துக்கொண்டு வா'' என்று கூறிப் புதிய அணிகலன்களை அணிவித்து வாழ்த்தி அனுப்பினன். பானுகோபன் தன் அரண்மனைக்கு வந்து அளவிலா மகிழ்ச்சியோடிருந்தான். வீரமகேந்திரபுரி முழுவதும் அன்றிரவு ஒரே களியாட்டம்; வெற்றிக் கொண்டாட்டம்.

பானுகோபனின் மாயப் படையால் வீரவாகுதேவர் முதலியோர் நன்னீர்க் கடலில் அழுந்திவிட்டதைக் கண்டு தேவர்கள் பதைத்தோடினர். நாரத மகரிஷி முருகப் பெருமானிடம் தேவர்களுக்கு முன்னே விரைந்தோடி விஷயத்தைத் தெரிவித்தார்.

கந்தவேள் தமது வேற் படையை நோக்கினர். "நீ நன்னீர்க் கடலுக்குப் போய் அங்கிருக்கிற மாயப் படைகளை அழித்து, வீரவாகு முதலியோர் மயக்கத்தை நீக்கி அவர்களை இங்கே அழைத்து வா" என்று பணித்து வேலை விடுவித்தருளினர் விமலர்.

கங்கை அன்னதோர் வாலிதா கியபுனற் கடற்போய்
அங்கண் வைகிய மாயமாப் படையினை அழித்து
வெங்கண் வீரர்மால் அகற்றியே அனையவர் விரைவில்
இங்கு வந்திடத் தந்துநீ செல்கென இசைத்தான்.

வேற்படை ஆயிரம் கோடி சூரிய ஒளிபோல் புறப் பட்டது. அந்தப் படையுடன் வருணன், வாயு, இந்திரன், அயன் அரி இவர்களின் படைகள் சேவித்துக் கொண்டு உடன் சென்றன. வேற்படை ஆறுகளையும் ஏழு கடல்களையும்கடந்து நன்னீர்க் கடலை யடைந்தது. வேலை வணங்கி, "மாயப் படையை வெல்லும் திறனின்றி நான் செயலற்றிருக்கிறேனே யன்றிப் பூதப் படைகளுக்குப் பிழையேதும் செய்யவில்லை" என்று கூறித் தொழுதான். வேற்படை கடலரசனுக்கு அருள் செய்தது. கடலில் ஆழ்ந்து கிடந்த அனைவருக்கும் வெகு எளிதில் உணர்ச்சி தந்தது. அவ்வளவில் மாயப் படை தானாகவே அழிந்தது. ஒளி வந்தால் இருள் தானாகவே ஓட வேண்டியதுதானே? தீபத்தை எடுத்து வருபவர் இருளை நோக்கிப் 'போ' எனப் பிடித்துத் தள்ள வேண்டியதில்லையே!

நன்னீர்க் கடலில் ஆழ்ந்திருந்த வீரவாகு முதலியோர் எழுந்து கடலுக்குமேல் வந்தனர். கரையற்ற கருணைக் கடலைப் பெருக்கிய கந்தவேளைத் தியானித்து நின்றனர். வேற்படையை வணங்கித் துதித்தனர்.

அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகண் நின்றும் வந்த இயற்கையால் சத்தியாம்பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை தீர்ந்தேம்.

முடிவில்லாத ஒளியின் சிறப்பாலும், ஆறுமுகங்களை யுடையதாலும், எம்பெருமானிடத்தி னின்றும் உதித்தபடியாலும், சக்தி என்ற ஒப்பற்ற பேரைப் பெற்றதனுலும் வேலாயுதமே! உன்னை என்றும் கந்தவேளாகவே கண்டு எமது உள்ளக் கவலை தீர்ந்தோம்.

வணங்கியபடியே வேற் படைக்குப் பின்னல் சென்றனர். வேல், முருகப் பெருமானின்திருக்கரத்தில் வந்தமர்ந்தது.

6. நகர்புகு படலம்

வேற் படைக்குப் பின்னே சென்ற வீரவாகுதேவர், "பானுகோபனைக் கொன்ருலன்றிக் கந்தவேளைச் சேவிக்கச் செல்ல மாட்டேன். பானுகோபனைக் கொல்லவில்லையென்ருல் வில்லுடன் நெருப்பில் புகுவேன்" என்று சபதம் செய்தார்.

அப்போது நள்ளிரவு. வீரவாகுதேவரும் துணைவர்களும் வீரமகேந்திரபுரியின் மேற்கு வாயிலையடைந்தனர். நகரம் ஒரே வெற்றிக் களியாட்டமாயிருந்தது, பூத சேனைகள் கடல் உடைந்தாற்போல் ஆரவாரம் செய்தன. அந்த ஆரவார ஒலியைக் கேட்ட அவுணர்கள் வானை நோக்கினுர்கள். அவர்களது உடல் வியர்த்தது. வெஞ்சினம் கொண்டார்கள். வாரிதியின் அடியில் அழுத்தப்பட்டவர் எப்படி மீண்டும் வாழ்வும் வலிவும் பெற்றனர் என வியந்து நடுங்கினர்.

வீரமகேந்திரபுரியின் மேற்கு வாயிலைப் புலிமுகன் என்பவன் காவல் காத்துக் கொண்டிருந்தான். மாயவளிடத்தில் தோன்றிய அவன் அறக் கடவுளையும் பிடித்துச் சிறை செய்தவன். தீச்சுடர் போன்ற உடலைக் கொண்டிருந்த அவன் நஞ்சினும் கொடியவன். அவன் நால்வகைப் படைகளுடன் பூத சேனைகளை எதிர்த்தான். பூத சேனைகளும் அவுணரும்

கடும் போர் புரிந்தனர். புலிமுகனும் சிங்கன் என்னும் பூத சேனைத் தலைவனும் சூலப் படையுடன் போர் செய்தார்கள். இருவரும் சூலத்தினால் ஒருவரையொருவர் குத்தினர். சூலங்கள் இருவருடைய மார்புகளையும் பிளந்துகொண்டு முதுகில் புறப்பட்டன. இருவரது உடல்களினின்றும் உதிரம் பெருகியது. மீண்டும் மீண்டும் உடலில் பல இடங்களில் சூலத்தினால் குத்தி அவர்கள் போர் செய்தனர். இருவரிடத்து மிருந்த சூலங்கள் ஒடிந்து விழ்ந்தன. சூலங்களை இழந்த இருவரும் மற்போர் செய்தனர். முடிவில் சிங்கன் புலிமுகனைக் கொன்றான்.

பின்னர் பூதசேனைகள் நகரத்திற்குள் புகுந்து மதில்களையும் மாளிகைகளையும் உதைத்துத் தள்ளி அழித்தார்கள். அவுணர்களைக் கூட்டம் கூட்டமாக அழித்தார்கள். வீரவாகு தேவர் அக்கினிப் படையையும் வாயுப் படையையும் ஏவி, "இந் நகரத்தை எரியுங்கள்" என்று பணித்தார். இரண்டு படைகளும் நகரை எரிக்கத் தொடங்கின. நகரின் சில இடங்கள் எரிந்தன; சில இடங்கள் கரிந்தன; சில இடங்கள் பொடிந்தன; சில இடங்கள் வெடித்தன; சில இடங்கள் புகைந்தன. சிவபெருமானின் திருமுறுவலால் முப்புரம் எரிந்ததுபோல் அந்நகர் எரிந்தது.

நகரம் எரிவதைக் கண்ட தூதர் சிலர் சூரபன்மனிடம் ஓடினார்கள். நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அவனுக்குத் தெரிவித்தனர்.

சூரபன்மன் மிகுந்த சினம் கொண்டான். ஒற்றர்களை அழைத்தான். "நீங்கள் எல்லோரும் ஆகாயத்துக்குட் புகுந்து சென்று, உலகனைத்தையும் ஊழிக்காலத்தில் அழிக்கச் செய்வதற்காக உறங்கிக் கொண்டிருக்கும் மேகங்களை இங்கே அழைத்து வாருங்கள்" என்று உத்தரவிட்டான். அதன்படி ஒற்றர்கள் ஆகாயத்துக்குச் சென்று மேகங்களைச் சூரபன்மனிடம் அழைத்து வந்தார்கள். "மேகங்காள்! இந் நகரத்தை எரிக்கின்ற தீயை அணையுங்கள்" என்று பணித்தான் சூரபன்மன். அவனது ஆணைப்படி ஊழிமேகங்கள் மழை பொழிந்தன. அதனால் தீ தணிந்தது.

மழை பொழிந்து தீ அணைந்ததைக் கண்ட வீரவாகு தேவர், தீயை மேகங்கள்தான் அழித்தனவோ, அல்லது இதுவும் அவுணர்களின் மாயமோ என்று பலவாறாக யோசித்துக் கொண்டிருந்தார்.

நாரத முனிவர் அங்கு தோன்றினர். சூரபன்மனின் கட்டளைக்கிணங்க ஊழிக்காலத்து மேகங்கள் இந்தத் தீயைத் தணித்தன, "வீரரே! இதற்கு மாற்றாக வடவாமுகாக்கினிப் படையைச் செலுத்துங்கள்" என்று கூறிவிட்டு மறைந்தார்.

வீரவாகுதேவர் வடவாமுகாக்கினிப் படையைச் செலுத்தினர். அப்படை விரைந்து சென்று மேகக் கூட்டங்களில் உள்ள நீரைக் கடிதில் உண்டு வீரவாகு தேவரிடம் திரும்பி வந்தது. எதிரிக்கு உதவி செய்த போதிலும், வலி விழந்து நின்ற முகிற் கூட்டங்களிடமும் கந்தவேள் கருணை பாலித்தார். வலிமை பெற்ற அம்மேகங்கள் நகரினின்று வெளியேறிப் பெரும் புறக் கடலை நோக்கி ஓடின. பூத சேனைகள் பெரும் ஆரவாரம் செய்தன. தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்.

நடந்தவற்றை அறிந்து ஆறாத சீற்றம் கொண்ட சூரபன்மன், "நானே சென்று பூத சேனைகளையும் வீரவாகுதேவரையும் மற்றையோரையும் கொன்று அந்த முருகனையும் வென்று வருகின்றேன். எனது தேரைக் கொண்டு வருக" என்று ஆணையிட்டான்.

7. இரணியன் யுத்தப் படலம்

சூரனின் மகனாகிய இரணியன் எழுந்தான். அவனுக்கு மூன்று தலைகள். அவன் மாயங்களையும் வஞ்சனைகளையும் கற்றிருந்தாலும், சிறந்த நீதிமான்; நல்லவன்.

இரணியன் தந்தையிடம் கூறலானான்:

"தந்தையே; நாம் தேவரைச் சிறையில் அடைத்திருக்கின்ற தன்மையால் வருவது பாவமே யாகும்; அதனால் வேறு நன்மையில்லை; எல்லாம் தெரிந்த அண்ணலே! நமது செல்வமும் இதனால் அழியும், நம் உயிர் போவதும் உண்மை.

தேவரை நாம்சிறை செய்த தன்மையால்
ஆவது பாவமே ஆக்கம் வேறிலை
யாவையும் உணர்ந்திடும் இறைவ திண்ணமே
போவது நம்உயிர் திருவும் பொன்றுமால்.

அச்சத்தைத் தருங் கானகத்தில் மறைந்து வாழும் புன்மை நீங்கி பிருதிவி யண்டங்கள் பலவற்றை அரசாண்டு பெருஞ் சிறப்புடன் இச் செல்வநிலையில் வாழ்கின்ற பெருமையை நீர் யாரிடம் பெற்றீர்? இதனைச் சிந்திப்பீராக.

சூருடைக் கானகம் தோற்றும் புன்மைபோய்ப்
பாரிடைப் புவனமோர் பலவும் போற்றியே
சீருடைத் தாகிஇத் திருவின் வைகுதல்
ஆரிடைப் பெற்றனை அதனைத் தேர்திநீ.

நாம் முன்னே நாராயணரை வென்றதும், பிரமதேவரையும் முனிவர்களையும் ஏவல் புரியுமாறு அடிமை கொண்டதும், மேன்மையால் உயர்ந்த தேவர்களைத் துன்பம் புரிந்ததும் சிவ பெருமான் அருளிய வலிமையினாலன்றோ?

மாலைமுன் வென்றதும் மலர் அயன்றனை
ஏலுறு முனிவரை ஏவல் கொண்டதும்
மேலுயர் அமரரை விழுமஞ் செய்ததும்
ஆலமர் கடவுள்தன் ஆற்றலால் அன்றோ?

தந்தையே! நீர்புரிந்த தவத்தினை நோக்கி அளவற்ற வரங்களைத் தந்தருளிய சிவபெருமான், ஒரு தீமை காரணமாக அவ்வரங்களை மாற்றத் திருவுளங் கொள்வாராகின். நாம் மாறுபடுவதை விடுத்து அவரை வணங்கித் துதிப்பதுவே முறை; போர் செய்வது தகுமோ?

நோற்றிடு தவத்தினை நோக்கி எண்ணிலாப்
பேற்றினை உதவிய பிரான்ஓர் தீமையால்
மாற்றிட உன்னுமேல் வணங்கி மாறொரீஇப்
போற்றுதல் அன்றியே பொரவுஞ் செய்யுமோ.

ஒப்பற்ற ஒரு உதவியைப் புரிந்தோருடைய மனம் வருந்துமாறு ஒரு தீமையைப் புத்தி பூர்வமாகச் செய்வாராயின், அத்தீவினையாளரை முன் அவர் புரிந்த நன்றியே

அழித்துவிடும்; அவரையழிக்க வேறு கூற்றுவன் வேண்டியதில்லை. நன்றி கொன்றோருக்கு உய்வு கிடையாது.

ஒன்றொரு பயன்றனை உதவினோர் மனங்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்தொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ ?

எந்தையே! சடைமுடியுடைய சிவபெருமான் மன்மதனைப் பார்வைபால் எரித்ததையும், முன் முப்புரங்களை நகையினால் கொளுத்தியதையும் அந்தகாசுரனை சூலத்தில் சுழன்று மாயுமாறு புரிந்ததையும் நீர் கேட்கவில்லையோ ?

கட்டுசெஞ் சடைமுடிக் கடவுள் காமனைப்
பட்டிட விழித்ததும் பண்டு மூவெயில்
சுட்டதும் அந்தகன் சுழலச் சூலமேல்
இட்டதும் கேட்டிலை போலும் எந்தைநீ.

இயமனை உதைத்தருளியதையும்; உலகை அழிக்குமாறு செருக்குடன் வந்த கங்கையின் பெருக்கையும் தருக்கையும் மாற்றிச் சடையில் தரித்ததையும், மாலயனாதி வானவர் அஞ்சி ஓடி ஒளிக்குமாறு வந்த ஆலகால விடத்தை உண்டருளியதையும் நீர் அறியீரோ ?

காலனை உதைத்ததும் கங்கை என்பவள்
மேல்வரும் அகந்தையை வீட்டிக் கொண்டதும்
மாலயன் அமரர்கள் இரிய வந்ததோர்
ஆலம துண்டதும் அறிகி லாய்கொலோ.

ஒரு நரசிங்கமானது தேவர்களை அலைக்க, அதனை நோக்கிய சிவபெருமான் வீரபத்திர மூர்த்தியாகிய சரபப் பட்சியால் தண்டனை புரிந்ததும் தக்கனுடைய யாகத்தை அந்த வீரபத்திரரால் அழித்ததனையும் நீர் கேட்டதில்லையோ ?

அண்டரை ஓர்அரி அலைப்ப அன்னது
கண்டநஞ் சுடையவன் கருதி வீரனால்
தண்டம திழைத்த தும் தக்கன் வேள்வியை
விண்டிடு வித்ததும் வினவி லாய்கொலோ.

தாமரைமீது வாழும் பிரமதேவர் தம்மை யிகழச் சிவ பெருமான், வயிரவக் கடவுளை யனுப்பி அவருடைய உச்சித் தலையை நகத்தால் கிள்ளுமாறு புரிந்ததும், திருமாலிடம் உதிரப்பலி பெறுமாறு செய்ததையும் நீர் அறியீரோ?

கடிமலர் மேலவன் இகழக் கண்ணுதல்
வடுகனை ஏவிவள் ளுகிரின்: அன்னவன்
முடிகளை வித்ததும் முகுந்தன் தன்னிடை
அடைதரு வித்ததும் அறிகிலாய் கொலோ.

உலகங்களை அழிக்க முயன்ற திருமாலாகிய பன்றியின் கொம்பையும், அந்த நாராயணராகிய ஆமையின் ஓட்டை யும், பிரமா முதலிய தேவர்களது தலைகளையும் அரனார் அணி கலன்களாக அணிந்ததை நீர் அறியீரோ!

ஏமுற உலகடும் ஏனக் கொம்பினை
ஆமையின் ஓட்டினை அணிந்த தன்மையும்
பூமலர் மிசையவன் முதல புங்கவர்
மாமுடி அணிந்ததும் மதிக்கிலாய் கொலோ.

தந்தையே! ஆதலினால் சிவபெருமானை அடுத்தவர் உய்வு பெறுவர். அல்லாத மூடர்கள் யாவராயினும் உய்வு பெற மாட்டார். இந்த உண்மை வேதாகமங்கள் எல்லாம் கூறும் உயர்ந்த உறுதிப் பொருளாகும். நீர் புன்னெறியை விடுத்து நன்னெறியை அடைந்து இப்பொருளை உணர்வீராக.

ஆதலால் ஈசன் தன்னை அடைந்தவர் உய்வர் அல்லாப்
பேதையர் யாவ ரேனும் பிழைக்கலர் இனைய வாய்மை
வேதநூல் பிறவும் கூறும் விழுப்பொரு ளாகும் நீயும்
ஏதமா நெறியின் நீங்கி இப்பொருள் உணர்தி எந்தாய்.

இனிமேல் உலகை அகழ்கின்ற திருமாலாகிய பன்றியின் கொம்பை ஒரு கரதலத்தால் பற்றி விண்ணில் சுழற்றி, அவ் வராகமூர்த்தி துதி செய்தபின், அதன் கொம்பை வாங்கி சிவ பெருமான் திருமார்பில் தரிக்க முருகவேள் தந்தார் என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

அங்கண்மா ஞாலந் தன்னை மேலினி அகழு மோட்டுச்
செங்கண்மால் ஏனயாக்கை எயிற்றை ஓர் சிறுகைபற்றி
மங்குல்வா னுலகிற்சுற்றி மருப்பொன்று வழுத்தவாங்கித்
தங்கள்நா யகற்குச் சாத்தச் சண்முகன் அளிக்கும் என்பர்.

அரசே! ஆறுமுகக் கடவுளாகிய எம்பிரானை, ஈசனிடம் உதித்த பாலகன் என்று இகழாதீர்! அப்பெருமான் செய்கையால் பெரியவர். ஒரு கற்ப காலத்தில் சிவமூர்த்தியின் புன்னகையில் தோன்றும் சிறிய நெருப்புப் பொறி உலகங்களையெல்லாம் அழிக்கும்.

அறுமுகத் தொருவ னாகும் அமலனை அரன்பால் வந்த
சிறுவன்என் றிகழல் மன்ன செய்கையால் பெரியன்
கண்டாய்
இறுதிசேர் கற்பம் ஒன்றில் ஈறிலாத'வன்பால் தோன்றும்
முறுவலின் அழலு மன்றே உலகெலாம் முடிப்பதம்மா.

மாதவன் கூர்ம அவதாரம் எடுத்து அமுதம் பெற உதவிய பின்னரும் தம்மைவிடச் சிறந்தோர் ஒருவரும் இல்லை என்று செருக்குற்று உலகுக்குத் துன்பம் செய்தார். பிரமாதி தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டுக் கொண்டனர். கறைமிடற் றண்ணல் தமது மடித்தலத்தில் எழுந்தருளியிருந்த கந்தப் பெருமானை அனுப்பினர். குமாரக் கடவுள் திருப்பாற்கடலை அணுகி ஒரு ஹுங்காரம் செய்தார். அதனைக் கேட்ட அளவிலேயே ஆமை மூர்ச்சித்தது. ஆமையைக் கொல்லாது அதன் ஓட்டினை மட்டும் பெயர்த்துக் கொண்டு போய்ச் சிவபெருமான் முன் வைத்தார். சிவபெருமான் கந்தவேளையணைத்து ஆமையின் ஓட்டைப் பிரம விஷ்ணுக்களின் சிரமாலைக்கு நடுநாயகமாகத் தரித்துக் கொண்டார்.

"அப்பா! இவ்வாறு செயற்கரிய செய்த முருகப் பெருமான் தன்னந் தனியனாக எதையும் செய்வான். இன்னொருவரின் சகாயம் அவருக்குத் தேவையில்லை. அசகாய சூரர் என்று அவருக்குப் பேர் வந்தது இதனால்தான். அவரைச் சிறுவன் என்று இகழாதே" என்று கூறினான் இரணியன். பிள்ளைப் பிராயத்தில் குமாரக் கடவுள் புரிந்த அற்புதங்களையும் எடுத்துக் கூறினான்.

வாசவன் குறையும் அர்தண் மறையவன் குறையும் மற்றைக்
கேசவன் குறையும் நீக்கிக் கேடிலா வெறுக்கை நல்க
ஆசிலோர் குழவி போலாய் அறுமுகங் கொண்டான் [எண்டோள்
ஈசனே என்பதல்லால் பிறிதொன்றை இசைக்க லாமோ?

இவ்வாறு இரணியன் சூரபன்மனுக்கு முருகப் பெருமானின் பேராற்றலை எவ்வளவோ எடுத்துச் சொன்னான்.

இரணியன் கூறிய அறவுரையைச் சூரபன்மன் கேட்கவில்லை.

கரங்கள்பன் னிரண்டு கொண்ட கடவுள்வந் தெதிர்க்கின் நந்தம்
வரங்களும் படைகள் யாவும் மாயையுந் திறலும் சீரும்
உரங்களும் திருவும் எல்லாம் ஊழிநா யகன்முன் உற்ற
புரங்களும் அவுண ரும்போல் பூழிபட் டழிந்திடாவோ.

ஆறுமுகக் கடவுளே போர் செய்ய நினைத்து வந்தால் எல்லா உலகங்களும் அழிந்துவிடும்; நாம் பெற்ற செல்வங்களும் வளங்களும், வரங்களும் பிறவும் அழிந்துவிடும். முருகக் கடவுள் இதுகாறும் போருக்கு வராதது நம்மீது வைத்துள்ள கருணையினால்தான். அக் கடவுளுடைய திருவுள்ளத்தில் நம் மீது அழியாத கோபம் உண்டாவதற்கு முன் இப்பொழுதே தேவர்களைச் சிறையிலிருந்து நீக்கி நம்முடைய உறவினர்களோடு விரைந்து சென்று அவருடைய திருவடிகளைச் சரணடைந்தால், அவர் நம்முடைய பிழைகளையெல்லாம் பொறுத்து அருள்புரிவர். மேலும் பல அளவில்லாத வரங்களைத் தந்து இவ்விடத்தைவிட்டுச் சேனைகளோடு திரும்பிவிடுவர்; நாமும் உய்வோம். இதனை நன்கு ஆராய்ந்து சொன்னேன். இதுவே சிறந்த நன்மை பயக்கும் என்று கூறினான்.

இரணியனுடைய அறவுரையைக் கேட்ட சூரபன்மன் ஆலகாலம் போல் கொதித்தான். அவனது உடல் வியர்த்தது; இதழ்கள் துடித்தன; கண்கள் சிவந்தன. கைகொட்டிச் சிரித்தான், இரணியனைப் பார்த்து, "அறிவிலியே! நீ ஒரு சிறுவனின் ஆற்றலைப் பற்றியும், தூதனின் வீரத்தைப்

பற்றியும், நான் செய்யவேண்டுவது என்ன என்பது பற்றியும் சொன்னாய். இவற்றையெல்லாம் உனக்குச் சொல்லிக் கொடுத்தது யார்? சொல். அவனை இப்பொழுதே கொல்கிறேன். அவனை மட்டுமல்ல; அவனது குலத்தையே வேரறுக்கின்றேன். அது மட்டுமல்ல இன்னொரு முறை இப்படி ஏதேனும் பேசினால் உன்னையே இயமபுரத்துக்கு அனுப்பவும் தயங்க மாட்டேன்'' என்று வெகுண்டுரைத்தான்.

இரணியன், 'விதியை யாரால் வெல்ல முடியும்? தந்தைக்கு அழிவு காலம் வந்துவிட்டது. அவர் இறப்பதற்கு முன் நாம் இறந்துவிடுவது நலம்' என்று எண்ணினான். சூரபன்மனை வணங்கி, ''அப்பா! சிறுவனாகிய நான் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளுங்கள். நான் போருக்குச் செல்கிறேன், விடை கொடுங்கள்'' என்று வேண்டிக் கொண்டான். இரணியனின் சொல் சூரபன்மனின் சினத்தைத் தணித்தது. மகனைத் தழுவி மகிழ்ந்து விடை கொடுத்து அனுப்பினான்.

இரணியன் போர்க்கோலம் புனைந்து ஆயிரம் சிங்கங்கள் பூட்டப் பெற்ற தேரில் ஏறிப் போர்க்களம்சென்றான். ஆயிரம் தோழர்களும், ஆயிரம் சேனாதிபதிகளும், நாலாயிரம் வெள்ளம் சேனைகளும் அவனுடன் சென்றன.

இரணியன் போருக்கு வந்தபோது நாரதர் வீரவாகு தேவரிடம் தோன்றி, ''இவன் சூரபன்மனின் மகன். பெரிய மாயாவி. இவனை வெல்ல உம்மையன்றி வேறு யாராலும் முடியாது'' என்று கூறி மறைந்தார்.

முதலில் இரணியனுக்கும் நீலன் என்ற பூத சேனைத் தலைவனுக்கும் போர் நடந்தது.

நீலன் இரணியனை உதைத்து உருட்டி மிதித்தான். அதனால் இரணியனின் தலையும் மார்பும் பிளந்தன. அவன் வாயிலிருந்து உதிரம் கொட்டியது. அந்த நிலையில் அவன் ஒரு மாயா மந்திரத்தை உச்சரித்தான். இரணியனைப் போல் இன்னொர் உருவம் உண்டாயிற்று. அதனுடன் நீலன் பலவாறு திரிந்து போர் செய்தான். அம் மாய வடிவத்தின் தலையில் தண்டத்தால் அடித்தான் நீலன். அவ்வடிவம் ஆகாயத்

துக்குச் சென்றது. நீலன் அதனைப் பின் தொடர்ந்துசென்றான். அந்த உருவம் மறைந்தது. இப்படியாக, அந்த உருவம் விண்ணில் செல்லும்; மண்ணில் வரும்; சேய்மையதாகும். அண்மையதாகும்; முன்னே வரும்; பின்னே வரும். பலவுருவாகும். நீலன் சற்றுத் திகைத்தான். கடைசியில் 'இது மாயமே' என்று உணர்ந்தான், இதற்குள் பூமியில் விழுந்து கிடந்த இரணியன் அயர்வு நீங்கி எழுந்தான். நீலன் மீது தீக்கணைகளை விடுத்து உடம்பைத் தொளைத்தான். நீலன் சலித்துத் திகைத்து வருந்தினன்.

இரணியனின் மாயத்தைக் கண்ட வீரவாகுதேவர் சினங் கொண்டார். முருகப் பெருமானைத் தியானித்துத் தேரைச் செலுத்திக் கொண்டு இரணியன் முன்பு வந்து ஞானப் படையை விடுத்தார். அதனால் இரணியனின் மாயை அழிந்தது. இருவருக்கும் உக்கிரமான போர் நடந்தது.

இரணியனின் வில், தேர், வச்சிர கவசம், சேனைகள் எல்லாம் அழிந்தன.

இந் நிலையில் அறிவாளியான இரணியன் யோசித்தான். 'சிற்றப்பா தாரகன் அழிந்துவிட்டார்; தந்தையான சூரபன்மனும் அழியப் போகிறார். எல்லோரும் இறந்துவிட்டால் பிதுர்க்களுக்குச் செய்ய வேண்டிய திக்கடனும், நீர்க்கடனும் செய்வது யார்? அதற்கு ஓர் ஆள் இருக்க வேண்டாமா?' என்று எண்ணினன்.

"மைந்த னைப்பெறு கின்றதும் மாசிலாப்
புந்தி அன்பொடு போற்றி வளர்ப்பதும்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
அந்த மில்கடன் ஆற்றுதற் கேயன்றோ?"

"தாய் தந்தையர் நம்மைப் பெற்று வளர்த்ததெல்லாம் கடைசிக் காலத்தில் கடன் ஆற்றுவதற்காக அல்லவா? ஆயிரத்தெட்டு யுகங்கள் வாழ்ந்த தந்தை இறந்து விட்டால் எள்ளும் தண்ணீரும் இறைப்பது யார்?" என்று எண்ணிய இரணியன் திடீரென்று மறைந்து கடலில் மீனாகப் போய் விட்டான்.

வீரவாகுதேவர் வெற்றிச் சங்கை ஊதினர். அவர் நினைத்தால் கடலை வற்றச் செய்து பாணம் விட்டு இரணியனைக் கொன்றிருக்கலாம். ஆனல் உயிருக்குப் பயந்து மீனுகப் போனவனைக் கொல்லுவது ஆண்மையல்ல என்று விட்டு விட்டார்.

8. அக்கினிமுகாசுரன் வதைப்படலம்

போருக்கு ஆற்ருது இரணியன் கடலில் மறைந்த செய்தியை ஒற்றர்கள் சூரபன்மனிடம் சென்று தெரிவித்தனர். அதைக் கேட்ட சூரபன்மன் மனம் குன்றி நாணமடைந்தான். எவருடனும் பேசவே அந்த மாவீரனுக்கு வாய் எழவில்லை. அத்தருணம் அவன் மைந்தனுகிய அக்கினிமுகன் அவனிடம் வந்தான்.

அக்கினிமுகன் திக்குப் பாலர்களையும், சூரியன் தேரையும் திக்கஜங்களையும் வாட்டியவன். தாய் வயிற்றில் இருக்கும் போதே நெருப்பைக் கக்கியவன், சந்திரனைச் சிறைசெய்தவன் அரியும் அயனும் ஊரும் கருடனையும் அன்னத்தையும் பிடித்து வந்து விளையாடியவன்.

"அப்பா! தூதாக வந்த வீரவாகு அவ்வளவு வலிமையுள்ளவனு? இதோ அவனையும் அவனுடன் வந்துள்ள சேனைகளையும் வென்று வருகிறேன். விடை தாருங்கள்" என்று சூரனை உத்தரவு கேட்டான் அக்கினிமுகன். சூரபன்மன் அவனுக்கு விடை தந்து அனுப்பினன்.

பாட்டியாகிய மாயை கொடுத்த வில்லையும் தெய்வாஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு தேரில் ஏறிப் புறப்பட்டான் அக்கினிமுகன்.

யுத்த களத்தில் பூதசேனைகளும் அவுணர்களும் கடும்போர் செய்தார்கள்.

நவவீரர்களில் ஒருவராகிய வீரபுரந்தரர் ஊழித்தீயைப் போல் உருத்து, வில்லை வளைத்து அவுணர்களின் தேர்களை அழித்தார்; அவுண சேனுதிபதியான சோமகண்டனின் தலையை அறுத்தார்; அக்கினிமுகனுக்கு உயிர்த் துணைவனுக நின்ற மேகனையும் கொன்ருர். அக்கினிமுகன் தானே நேரில்

அவரை எதிர்த்துக் கணை மழை பொழிந்தான். அவருடைய தேரையும் வில்லையும் உடைத்து நூறு பாணங்களால் மார்பைத் துளைத்தான். அவுணர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

வீரபுரந்தரரின் வலிமை அழிந்ததைக் கண்ட அவரது துணைவர்களான நவவீரருள் வீரவாகு தவிர ஏனைய எழுவரும் அக்கினிமுகனை வளைத்துப் பாண மழை பொழிந்தனர். அதனால் அசுரனின் வில்லும் தேரும் அழிந்தன. வீரர்கள் அவன் மார்பில் ஆயிரம் கணைகளைச் செலுத்தினார்கள். அக்கினிமுகன் வேறொரு தேரில் பாய்ந்தான். நவவீரருள் எழுவரையும் சினத்துடன் நோக்கி, "இத்துடன் அழியுங்கள்" என்று சிவப் படைக்கலத்தை எடுத்து வழிபட்டு விட்டான். அப்படைக்கலம் விரைந்து சென்றது. அதனை ஏழு வீரர்களும் கண்டு அக்கினிப்படை என்று எண்ணி, வருணப் படைக்கலங்களை விடுத்தார்கள். சிவப்படைக்கலம் அவற்றை விழுங்கி உலகம் அதிரச் சென்று எழுவருடைய உயிரையும் நொடியில் கவர்ந்து மீண்டது. நவவீரரில் எழுவர் இவ்வாறு இறந்தமை கண்ட பூதரும் அமரரும் வெருவி இருந்தனர். வீரவாகுதேவர் பூத வீரர்களுக்கு அபயம் தந்து, அக்கினிமுகனை எதிர்த்தார். இருவரும் பலப் பல கணைகளை விடுத்துக் கடுமையாக அமர் புரிந்தனர். முடிவில் வீரவாகுதேவர் நஞ்சு பாய்ச்சிய கூர்மையான நூறு பாணங்களை விடுத்தார். அவை அக்கினி முகனுடைய மார்பைத் துளைத்தன. அக்கினிமுகன் அலறித்தேர் மீது சாய்ந்தான். அவன் மார்பிலிருந்து உதிரம் வெள்ளம் போல் பெருகியது. அவனது உயிர் போவதும் வருவதுமாக இருந்தது. ஒருவாறு தெளிந்த அக்கினிமுகன், இளமையில் தான் வழிபட்ட காளியை நினைந்தான். பகைவர்களுடைய போரில் நான் தோற்றால் அந்தத் தருணத்தில் உதவி செய்ய வேண்டும்' என்று அக்கினிமுகன் அந்த நாளில் காளியிடம் வரம் கேட்டுப் பெற்றிருந்தான்.

அக்கினிமுகன் காளியை நினைத்ததும், அவள் சூலத்தையும் வாளையும் ஏந்திச் சிங்க வாகனத்தின் மீது வந்தாள். அக்கினிமுகனை அடைந்து, "அஞ்சவேண்டாம். உன் பகைவர்களாகிய பூதசேனைகளைக் கொல்வேன்' என்று அருளி, பூதர்

அனைவரையும் அழிக்குமாறு முத்தலைச் சூலத்தை விடுத்தாள்; அது தீயையும் புகையையும் சிந்திப் பல காளிகளையும் உண்டாக்கி விரைந்து சென்றது. வீரவாகுதேவர் காளியின் சூலத்தை நோக்கிப் பதினான்கு கணைகளைச் செலுத்தி, அதைப் பொடியாக்கினார். காளி மிகவும் சினந்தாள். மற்றொரு சூலத்தை விடுத்தாள். அது ஆலகாலம் போல் கொதித்துச் சென்றது. வீரவாகுதேவர் ஆயிரம் கணைகளால் அதனைத் துணித்தார். காளி உள்ளம் கனன்று சிங்கவாகனத்தினின்றும் இறங்கிக் கூரியவாளை எடுத்து வீரவாகுதேவரை வெட்ட வந்தாள். வீரவாகுதேவர் அவளுடைய எட்டுக் கரங்களையும் இடக் கரத்தால் பிடித்து, வலக்கரத்தால் மார்பில் ஓர் அறை அறைந்தார். காளியின் மார்பு கிழிந்தது; வாயும் மூக்கும் உதிரம் சொரிய மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள். ஆணவமும் வீரமும் அழிந்த அவள் நாணத்துடன் வீரவாகுதேவரின் ஆற்றலை வியந்தாள். கந்தப்பெருமானின் ஏவலால் வந்துள்ள வீரவாகுதேவரை எதிர்த்து யார்தான் வெற்றிகாண முடியும்? வீரவாகுவிடம், "வெற்றி உமக்கே" என்று வாழ்த்திவிட்டுச் சிங்கத்தின் மீதேறித் தன் படைகள் சூழ்ந்து வரத் தனது இடத்துக்குச் சென்றாள் காளி.

அசுர காளி வீரவாகுதேவரை வாழ்த்தி அவரிடம் விடை பெற்றுச் செல்வதைக் கண்ட அக்கினிமுகாசுரன் மிகுந்த சினங்கொண்டு காளியை இகழ்ந்தான். "வீரவாகுதேவரை நானே கொல்வேன்" என்று சேனைகள் சூழத் தேரில் புறப்பட்டான். இருவரும் கோரமாகப் பொருதார்கள்.

இறுதியில் வீரவாகுவின் வீரபத்திராஸ்திரமானது அக்கினிமுகன் விடுத்த பிரமாஸ்திரத்தை விழுங்கி, அவனது தலைகளை வெட்டிக் கீழே தள்ளி உயிரையும் குடித்துவிட்டு வீரவாகுதேவரிடம் மீண்டது. அக்கினிமுகாசுரன் இறந்ததைக் கண்ட அமரர்கள் ஆனந்தக்கூத்தாடி ஆர்த்தார்கள்; வீரவாகுதேவரை வாழ்த்தினார்கள்.

அவுண வீரர்களையெல்லாம் கொன்று போர்க்களத்தின் நடுவே நின்ற வீரவாகுதேவரை பூதர்களும், இலக்கம் வீரர்களும் வந்து சூழ்ந்தார்கள். மூர்ச்சித்துக் கிடந்த வீரபுரந்

தரரும் அங்கு வந்து சேர்ந்தார். ஆனால் வீரவாகுதேவரின் தம்பியர்களான எழுவர் மட்டும் அங்கு காணப்படவில்லை. அவர்களைக் காணாது வருந்திய வீரவாகு, "மற்ற எழுவரும் எங்குற்றனர்?" என்று வினவினார்.

பூதவீரனான உக்கிரன், "நூறு யோசனைக்கு அப்பால் ஆலமர நிழலில் அவர்கள் மாண்டு கிடக்கிறார்கள்" என்றார். இதனைக் கேட்ட வீரவாகுதேவர் திடுக்கிட்டார். மனத்தைத் தேற்றிக்கொண்டு அருகில் இருந்தோர் அனைவரும் உடன் வர ஆலமரத்தடிக்குச் சென்றார். அங்கே பிணக் குவியல் களின்மீது தம்பியர் எழுவரும் இறந்து கிடந்ததைக் கண் டார்; தம்பியர் எழுவரையும் எடுத்தணைத்துப் புலம்பினார். அவர் கண்கள் குருதிநீரைச் சொரிந்தன.

தம்பிமீர் தம்பிமீரென் றுரைத்திடும் தழுவிக்கொள்ளும்
எம்பிமீ ரென்னும்; ஐயோ! எங்ஙனஞ் சென்றீர்என்னும்;
வெம்பினேனென்னும் என்னை விட்டகன் றீரோவென்னும்
நம்பினேன் உம்மையென்னும் நானுமக் கயலோவென்னும்.

"நன்றாக இருக்கிறது என வீரம்! முருகவேளுக்கு இனி நான் என்ன சொல்வேன்?" என்று பற்பலவாறு கூறிக் கண் ணீர் விட்டுக் கவலையில் ஆழ்ந்தார் வீரவாகு. சிறிதுபோதில் மீண்டும் அவரை வீரம் பற்றிக்கொண்டது.

வடவைத் தீயைப்போல் வெகுண்டு, "என் தம்பியர் உயிரைக் கொண்டு சென்ற இயமனை இக்கணமே கொல் வேன். மார்க்கண்டேயர் உயிரைக் கவர வந்தபோது பட்ட உதையை மறலி மறந்தனன் போலும்? திருநீறும் கண்டிகை யும் பூண்டு சிவநாமத்தை உச்சரிக்கும் உண்மையான சிவபக் தர்களிடம் செல்லக் கூடாது என்ற சிவாக்ஞையை அந்தக் கூற்றுவன் மறந்தான் போலும்! ஆறுமுகப் பெருமானின் அடியவர்களாகிய என் தம்பியரின் உயிர்களை இயமன் எப்படித்தான் கவர்ந்து சென்றானோ?"

"நீறு முகத்தார் கண்டிகை பூண்டார் நிமலன்பேர்
கூறு முகத்தார் தம்புடை செல்லக் குலைகூற்றன்
ஆறு முகத்தான் அடியவர் ஆவி யலைத்தானே
சேறு முகத்தாழ் கரியை அடாதோ சிறுபுள்ளும்?"

என்று இயமனைச் சினந்தார். வீரவாகுதேவர் வில்லையெடுத்து நாணைப் பூட்டினார். ஒரு பாணத்தை எடுத்து அதில் நகத்தினால், "கூற்றுவனே! என்னுடைய தம்பியர் உயிரைக் கொண்டு வா" என்று எழுதி விடுத்தார்.

பாணம் இயம லோகத்தில் போய் விழுந்தது. இயமன் எடுத்துப் பார்த்தான். வீரவாகுதேவர் விடுத்த பாணம் என்பதை அறிந்ததும், நடுநடுங்கினான்; "தூதர்களே! நவ வீரர்களில் யாரையாவது கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்று தூதர்களிடம் வினவினான். இயமலோகம் முழுவதும் தேடினார்கள் தூதர்கள். அங்கு காணவில்லை. ஏழு வீரர்களும் கைலாய மலையில் சூக்கும சரீரத்துடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எழுவர் உயிரையும் இயமன் போர்க்களத்துக்குக் கொண்டு வந்து உடலில் சேர்ப்பித்தான்.

தூங்கி எழுந்தாற்போல் வீரர் எழுவரும் உயிர்த்தெழுந்தார்கள். வீரவாகுதேவர் பூதவீரர்கள் ஆகியோர் உள்ளம் எல்லையில்லா உவகை பூத்தது.

இயமன் வீரவாகுதேவரைத் தொழுது, "உங்கள் தம்பியர் உயிரை அடியேன் கவர்ந்து செல்வேனா? கைலை சென்றிருந்த அவர்களை இங்கு அழைத்துவந்தேன்" என்று கூறி, அருள் பெற்றுச் சென்றான்.

அக்கினிமுகாசுரன் இறந்ததையும், மாண்ட எழுவர் உயிர் பெற்றதையும் பார்த்துக் கொண்டிருந்த ஒற்றர்கள் ஓடிச் சென்று சூரபன்மனிடம் நிகழ்ந்ததை உரைத்தனர். அதைக் கேட்ட சூரன், "மகனே! மகனே!" என்று கதறி அழுது துயரக் கடலில் ஆழ்ந்தான். இந்தத் துயர்ச் செய்தியை அறிந்த சூரனின் மனைவி பதுமகோமளை அழுது அரற்றி ஆற்றொணாத் துயரத்தில் மூழ்கினாள். இச் செய்தி நகரத்தில் பரவவே, வீரமகேந்திரம் முழுதும் அழுகையொலி பரவியது.

9. மூவாயிரவர் வதைப் படலம்

சூரபன்மனின் புதல்வர்கள் மூவாயிரர். அவர்கள், அக்கினிமுகன் இறந்ததையும் அதனால் சூரபன்மன் துயரக் கடலில் ஆழ்ந்திருப்பதையும் அறிந்து சூரபன்மனின் அரண்மனைக்கு வந்தார்கள்; தந்தையை வணங்கினார்கள். "தந்தையே! இலக்கத்தொன்பான் வீரரிடம் போர் செய்ய அக்கினிமுகன் ஒருவனை அனுப்பினீர். மெலியராயினும் பலர் கூடினால் வலியரையும் வெல்லுவர் என்பதை நீங்கள் அறிந்ததில்லையா? அக்கினிமுகன் இறந்ததற்காகத் துயரப்பட வேண்டாம். நாங்கள் மூவாயிரம் பேர்கள் இருக்கிறோம். இன்னும் இரணியன் இருக்கிறான்; பானுகோபன் இருக்கிறான்; இவ்வளவு பேர்கள் இருக்கும்பொழுது உங்களுக்கென்ன குறை? நால்வகைச் சேனைகள் அழிந்து விட்டனவே என்று கவலைப்படுகிறீர்களா? அந்தக் கவலையும் வேண்டாம். உங்கள் காலாட் படைகளுக்கு அழிவு இல்லை. இதுவரை போரில் இறந்த சேனைகளை இப்போது இருக்கும் நம்முடைய சேனைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் கடுகளவே மாய்ந்ததாகவும், மலையளவு மீதமிருப்பதாகவும் தெரியும்" என்று கூறினர்.

அவர்களுக்கு சூரபன்மன் விடை தந்து போர்க்களம் அனுப்பி வைத்தான். எண்ணில்லாத சேனைகளுடன் யுத்தப் பறையறைவித்துக் கொண்டு அவர்கள் போர்க்களம் அடைந்தபோது அது கண்ட அமரரும் அஞ்சினார்கள்.

பூத சேனைகளுக்கும் அவுணப் படைகளுக்கும் பயங்கரப் போர் மூண்டது. போரில் அசுரர் பலர் மாண்டனர். எண்ணிறந்த பூதகணங்களும் இறந்தன.

விஜயன், ஜயன், இடபன், சுரவீரன், அதிகோரன், அசலன், அதிகுணன், வாமனன், அந்தன், அகலிங்கன், அநகன், சதவலி. மாருதன், வருணன், சசிகண்டன் முதலாகிய ஆயிரவர் வீரவாகுதேவரிடம் விடைபெற்றுக் கந்தக் கடவுளைத் தியானித்து மூவாயிரவரை எதிர்த்துப் போருக்குச் சென்றனர்.

இரு தரத்தாரும் பொருததின் இறுதியில் ஆயிரவரில் விஜயனைத் தவிர ஏனையோர் அனைவரும் வலியிழந்து தோற்றோடினார்கள்.

துணைவர்கள் தோற்று ஓடியதைக் கண்ட விஜயன், 'சூரபன்மன் குமாரர்கள் மூவாயிரவரையும் யானே கொல்வேன்' என்று வஞ்சினம் கூறினன்; சிவபெருமான் கொடுத்த அழியாத வில்லை எடுத்து வளைத்து மூவாயிரவர் மீதும் பாண மழைகளைச் சொரிந்தான். அப் பாணங்களால் தாக்குண்டவரின் அங்கங்கள் அறுந்தனவெனினும் பிரம்ம தேவர் கொடுத்திருந்த வரத்தின் பலத்தால் அறுந்த அவயவங்கள் மீண்டும் வந்து கூடின.

அதனைக் கண்ட விஜயன் திகைத்தான். அவர்கள் பெற்றுள்ள வரத்தின் சிறப்பை உணர்ந்தான். 'முருகன் திருவடித் துணையின்றி இவர்களை வெல்லுவது அசாத்தியம் என்று உணர்ந்தான். முருகப் பெருமான் திருவடியைச் சிந்தித்து உள்ளம் உருகினன்; கண்களில் நீர் பெருக்கியபடியே கந்தவேளைத் தியானித்தான்.

ஆறுமா முகப்பிரான் அன்றி யிவ்விடை
வேறொரு துணையிலை மெய்ம்மை யீதெனத்
தேறினேன் அவனடி சிந்தை செய்தனன்
மாறிழி யருவிநீர் வழியுங் கண்ணினன்.

'உள்ளம் உருகினல் உடனுவார்' என்பது வேதமொழியல்லவா? பக்தி வலையிற்படும் அருள் வள்ளலாகிய ஆறுமுகப் பெருமான் அவன்முன் விண்ணில் தோன்றினர். "அன்ப! இம்மூவாயிரவரும் பிரமனிடம் வரம் பெற்றவர்கள். இவர்களைத் தனித் தனியாய்ப் போரிட்டு வெல்வது உன்னல் முடியாத காரியம். மூவாயிரவரையும் ஏக்காலத்தில் ஒரே படையால் வீழ்த்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் இறப்பார்கள். இந்தா இது காலவயிரவப் படை. இந்தப் படையால் நீ அவர்களைச் சங்காரம் செய்" என்று கூறித் திவ்வியாஸ்திரத்தை விஜயனுக்குத் தந்து மறைந்தருளினர். விஜயன் மனம் மகிழ்ந்து அன்புடன் அப் படைக்கலத்தைப் பூஜித்து விடுத்தான். வயிரவப் படைக்கலம் விரைவாக வருவதை மூவாயிரருள் ஒருவனுன உன்மத்தன் கண்டான். "இந்தப் படைக்கலம் வந்து நம்மைத் தாக்குவதற்கு முன் ஒரு மாயப் படையினல் இவனை அழிப்பேன்" என்று எண்ணி மாயப் படையை விடுத்தான். விஜயன் விடுத்த வயிரவப்

படை விரைந்து சென்று எங்கும் இருளைப் பரப்பியது. மாயப் படையை அழித்தது. மூவாயிரவரையும் ஒரு கணத்தில் கூண்டோடு அழித்து மீண்டது. தேவர்கள் விஜயன் மீது பூமழை பொழிந்தார்கள். பூதர்கள் சந்திரனைக் கண்ட கடல் போல் ஆரவாரித்தார்கள்.

மூவாயிரம் புதல்வர்களும் ஒருசேர மாண்ட செய்தியைக் கேட்ட சூரபன்மன் சிங்காதனத்தினின்றும் நிலத்தில் வீழ்ந்து புலம்பினன். தனது ஆட்சி அதிகாரம் பிரபை மங்கி மறையும் நாளும் வந்ததோ என எண்ணினன். அப்பொழுது சூரியனும் அஸ்தமித்தான்.

10. தருமகோபன் வதைப் படலம்

தலைமை அமைச்சன் தருமகோபன் சூரபன்மனிடம் வந்து வணங்கினன்.

“தானவேந்திரா! வருந்தாதீர்! இதுவரை பெற்ற வெற்றியை எல்லாம்விட உமது வருத்தமே தமக்குப் பெரிய வெற்றி என்று வானவர் கொக்கரிப்பார்கள். போர் முனையில் இறந்தவர்கள் தந்தையானலும் புதல்வர்களேயானலும் அதற்காக வருந்தித் தளர்வது ஆற்றல்மிக்க வீரர்களுக்கு அழகல்ல.

“முந்துறும் மாற்றலர் முனைவெம் போரிடைத்
தந்தையர் விளியினும் தமர்கள் மாயினும்
மைந்தர்கள் விளியினும் மான வீரர்கள்
சிந்தைகொள் வன்மையிற் சிறிதும் தீர்வரோ?”

“கவர்ந்து சென்ற உயிர்களைத் தர இயமன் இருக்கிறன்; உடலைப் படைத்துத் தர பிரமன் இருக்கிறன். எஞ்சியுள்ள நமக்கும் வலிமை இருக்கவே இருக்கிறது. எல்லாம் இருக்கும் போது ஏன் ஏங்க வேண்டும்?” என்று ஆறுதல் கூறினன்.

இயமனையும், பிரமனையும் ஆட்டிப் படைக்கும் ஆற்றல் இப்போதே தன் கைமீறிவிட்டது என்பதை சூரன் அறிவான் எனினும் தன் உடலில் உயிர் உள்ள அளவும் வருந்துவதில்லை என்று தெளிந்தான். “அமைச்சரே! இயமனைப்போல் நானே சென்று எதிரிகளை அழித்து வருகிறேன்” என்று கோபா

வேசத்துடன் கூறினுன், தருமகோபன் சூரபன்மனை வணங்கி, "அரசர்க்கரசே! தாங்கள் இங்கேயே இருங்கள். யானே சேனைகளுடன் சென்று பகைவர்களைக் கொல்வேன்" என்று வேண்டிக்கொண்டான்.

போர்க்கோலம் பூண்ட தருமகோபன் புண்டரிகம் என்ற திக்கு யானை மீதூர்ந்து, பற்பல படைக்கலங்களைத் தாங்கி, போர் முரசறைய அவுண சேனைகளும் அமைச்சரும் சமுத்திரம் போல் சூழப் போர்க்களத்தையடைந்தான். அதனைக் கண்ட தேவர்கள் "மாவீரர் பலரை வென்றோம். எனினும் புற்றீசல் களாகக் கிளம்பிக்கொண்டே யிருக்கின்றனரே! இதோ யானை மீது மதயானையாக வருபவனை வெல்வதரிது" என்று அஞ்சி யோடினர்.

தருமகோபன் போர்க்களம் அடைந்ததும் பூதர்கள் அவனை எதிர்த்து ஆரவாரம் செய்தனர். பூதப் படைக்குப் பலியான அவுணர் தலைவர் அனைவரும் தருமகோபன் கண் முன் தோன்றினர். அவனது அஞ்சா நெஞ்சிலும் அச்சம் குடி கொண்டது. தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.

அவுண சேனைகளும் பூத சேனைகளும் எதிர்த்துப் போராடின.

இலக்கம் வீரர்கள் போர் செய்து இளைத்தனர். அவுண அமைச்சர்கள் முன்னிலும் பன்மடங்கு வீரத்தோடு விளங்கி நின்றார்கள். அவர்களைக் கண்ட வீர மார்த்தாண்டர் வெகுண்டு எழுந்தார். அவர் ஒருவரது சீற்றம் பூதப் படை முழுவதற்கும் புத்துயிரூட்டியது. அவுணர்களைப் பூதர்கள் கொன்று குவித்தனர்.

தன்னுடைய படைகள் அழிந்ததைக் கண்ட தரும கோபன் சினந்து பூதர்கள்மேல் எண்ணற்ற கணைகளை விடுத் தான். அந்தப் பாணங்களின் தாக்குதலால் பூதர்கள் நடுங்கி மெலிந்தனர். புண்டரீகம் என்ற திக்கு யானை பூதர்களைத் துதிக்கையால் தூக்கி வீசியது. காலாலும், வாலாலும், தந்தங்களாலும் பூதரைச் சின்னபின்னப்படுத்திக் கொன்று வீழ்த்தியது. பூதர்கள் அந்த யானையின்மீது மலைகளை எறிந் தனர்; சரமழை பொழிந்தனர். அந்தப் பாணங்கள் தைத்த

தால் திக்கு யானையின் உடல் முழுதும் உதிரம் பெருக்கெடுத்தோடியது. அந்தத் திக்கஜமோ சிறிதும் தளர்ச்சி யடையாமல் பூத வீரர்களைத் தாக்கிக் கொன்றது.

வீர புரந்தரர் ஒரு வேலை எடுத்துத் தருமகோபன் மார்பை நோக்கி எறிந்தார். தருமகோபன் கதாயுதத்தை எடுத்து வீர புரந்தரர் மேல் எறிந்தான். அது வீரபுரந்தரர் மார்பிற் பட்டதும், அந்த நிகரற்ற மாவீரரும் துன்பமுற்று நடுங்கி விம்மி வருந்தினர்.

இக் காட்சியைக் கண்ட வீரவாகுதேவர் மனத்தினும் விரைந்து தருமகோபன் முன்னே வந்தார். தருமகோபன் வீரவாகுவின் மீது செலுத்திய பாணங்கள் அவரது திருமேனியில் பட்டு, இரப்பவர்க்கு ஈயாது கரந்து, இரவாத செல்வர்கட்கு ஈந்த பொருள் போலப் பயனின்றிக் கூர் மழுங்கி வீழ்ந்து அழிந்தன. வீரவாகு தேவர் சினந்து ஒரு வேலை எடுத்து விடுத்தார். அது தருமகோபன் விடுத்த கணைகளையெல்லாம் அழித்துக்கொண்டு அவனது மார்பைத் துளைத்துச் சென்றது. தருமகோபன் மார்பினின்றும் உதிரம் வெள்ளம் போல் பெருக்கெடுந்தது, 'ஓ' என்று அலறி வீழ்ந்து மூர்ச்சித்தான் தருமகோபன். அவனது நிலைமையை உணர்ந்த திக்கு யானை ஆர்த்து அசைந்தோடி வந்து வீரவாகுதேவரின் தேரைத் தன் கோடுகளினுல் தாக்கியது. ஓர் இரும்புலக்கையால் வீரவாகு தேவருடைய தேர்ப் பாகனை அடித்துக் கொன்று தேரையும் அழித்தது. வீரவாகு தேவர் பிறிதொரு தேரின் மீது பாய்ந்து யானையின் துதிக்கையை ஒரு கரத்தாற் பற்றி மற்ெருரு கரத்தால் அதன் கன்னப் பிரதேசத்தில் அறைந்து வெகு தூரத்துக்கப்பால் செல்லும்படி வீசியெறிந்தார். யானை விண்ணுலக்கு எழும்பி மீண்டும்போர்க்களத்தில் வந்து வீழ்ந்தது.

மூர்ச்சை தெளிந்த தருமகோபன் மீண்டும் போர் தொடங்கினன். வீரவாகுதேவர் மீது குலிசப் படையை வீசினன். அதனை அவர் கையினுற் பற்றித் தருமகோபனுடைய மார்பில் அடித்தார். திருவடியால் அவனை ஒரு தரம் உதைத்தார். ஆயுதங்களுக்கு இல்லாத ஆற்றல் அவரது திரு

மேனி அவயவங்களுக்கே இருந்தன போலும்! தருமகோபன் உயிர் துறந்தான்.

மயக்கம் தெளிந்து உயிர்த்து மெல்ல எழுந்த திக்குயானை தருமகோபன் மாண்டதைக் கண்டது. அவனது சார்பில் தன் சக்தியையெல்லாம் திரட்டிப் போர் செய்து கடமையைச் செலுத்திவிட்டது. இப்போது அது வீரவாகுவை வணங்கி, "எம்பெருமானே! கோபம் கொள்ளாமல்சிறியேன் சொல்வதை அருள் கூர்ந்து கேட்டருள வேணும். நான் திக்கஜம், திசையைக் காவல் செய்பவன். கீழ்மகனாகிய இத் தருமகோபன் இட்ட சிறையில் பல நாட்கள் வருந்தினேன், அவனுக்கு வாகனமாகி இதுவரை சுமந்து வந்தேன். அவனுடைய ஏவல் பலவற்றைச் செய்து வந்தேன், இன்றோடு நீசன் சேவகம் முற்றுப் பெற்றது. உய்வு பெற்றேன்" என்று நெகிழ்ந்து கூறியது.

"இனி நீ உன்னுடைய திக்குக்குச் சென்று காவற் பணி புரியலாம்" என்று வீரவாகு தேவர் அதற்கு விடை கொடுத்தார். திக்கு யானை தன் இருக்கை சேர்ந்தது.

தருமகோபன் இறந்த செய்தியைக் கேட்ட சூரபன்மன் அறிவிழந்து ஓவியம்போல் கிடந்தான்.

11. பானுகோபன் வதைப் படலம்

மன்னன் சூரபன்மன் மயங்கியிருந்தபோது தூதர் சிலர் இளவரசன் பானுகோபனை அடைந்தனர். "அரச குமார! முன்பு நீங்கள் விடுவித்த மாயப் படைக்கலத்தால் நன்னீர்க் கடலில் வீழ்த்தப் பெற்ற வீரவாகுதேவர் முதலியோரை முருகன் பாசறையிலிருந்து கொண்டே வேலால் மீட்டார். அக்கினிமுகன். மூவாயிரவர், தருமகோபன் ஆகியோரும் ஒருவர் பின் ஒருவராகப் போரில் மடிந்தாயிற்று. இரணியனும் மீண்டு ஒளிந்தான். இவற்றை யெல்லாம் கேட்டுத் தங்கள் தந்தையாரும் வெந்துயர் கொண்டுள்ளார்" என்று கூறினர்கள்.

பானுகோபனுக்கு அவமானமும் ஆத்திரமும் ஆறாத் துயரும் ஒருங்கே பொங்கி வந்தன. 'நமது பெரு வாழ்வுக்கு

இறுதி வந்துவிட்டது போலும்' என்று எண்ணினுன். ஒருவாறு தன்னைத் தெளிவித்துக்கொண்டு தந்தையையும் தெளிவிக்க நினைந்தான். அவன் மனத்தில் ஒரு தெளிவு பிறந்தது. முருகனை வெல்வது சாத்தியமல்ல என்று தெளிந்து அதனையே தந்தைக்கும் எடுத்துச் சொல்வதற்காக விரைந்தான்.

"நான் நன்னீர்க் கடலில் மூழ்கடித்தவர்களை நொடியில் மீட்ட முருகனின் சக்தியை இன்னமும் தாழ்த்தி மதிப்பிட லாகாது. அதிகம் சொல்வானேன்? தாங்களே முதல் நாள் அந்தப் பாலகனேடு போர் புரியச் சென்றபோது வில்லம்பு களை இழந்து தோற்று வந்தீர்கள் அன்ருே? இன்னமும் முருக னுக்குக் கோபம் வரவில்லை. அவன் சினமுற்றுவிட்டால் அதனைத் தாங்குவதற்கு எவரால் முடியும்? மாயோன் சக்கரத்தை மாலையாகத் தரித்த தாரகனையும் கிரௌஞ்ச மலையையும் அழித்த வேற்படையை எதிர்ப்பவர் யாவர்?

"அப்பா! முருகன் முனிந்தால் அண்டங்கள் அனைத்தை யும் அழிப்பான்.

புல்லிதாகிய விலங்கினைப் படுப்பவர் புதலுள்
வல்லியந் தனக் குண்டியாய் மாய்ந்திடுங் கதைபோல்
எல்லையில் பகல் அமரரை அலைத்திடும் யாமும்
தொல்லை நாள்வலி சிந்தியே குமரனுல் தொலைந்தோம்.

அற்பமான முயல் முதலிய சிறிய விலங்குகளைப் புதரில் புகுந்து புகுந்து கொல்பவர், சில சமயம் புதருக்குள் இருந்த புலிக்கு உணவு ஆகி மாள்கின்ற கதைபோல், எண்ணில் லாத காலம் தேவரைத் துன்புறுத்திய நாம் இப்போது முருகப்பெருமானுல் வலிமை குன்றி அழிகின்ருேம்.

அவனுடைய தூதனுகிய வீரவாகுவை வெல்வதுகூட அரிதுதான். நடக்கக்கூடிய காரியத்துக்குத்தான் பெரியோர் கள் நீண்ட நாட்களாயினும் முயற்சி செய்வார்கள். இயலாத செயலில் அறிவுடையோர் ஈடுபடமாட்டார்கள்.

"நெடிது பற்பகல் செல்லினும் நிரம்புவ தொன்றை
இடைவி டாமலே முயன்றுபெற் றிடுகின்ற தியற்கை;
உடல்வ ருந்தியும் தங்களால் முடிவுரு ஒன்றை
முடியு மீதெனக் கொள்வது கயவர்தம் முறையே"

"அப்பா! வலிமை மிக்க புதல்வர்களை இழந்து விட்டீர்கள். உங்களுக்கும் எனக்கும் குறி பார்த்து நிற்கிறான் இயமன். போர் என்றால் புறம் கொடுப்பவன் அல்லன் நான். இன்று உங்களிடம் இப்படியெல்லாம் பேசுவதால் போருக்கு அஞ்சினேன் என்று எண்ணிவிடாதீர்கள், நீங்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் என்னும் ஆசையால் இவற்றைச் சொன்னேன். தேவரைச் சிறை விடுத்து உய்வு பெறுவோம்" என்று கூறினான்.

சூரபன்மனுக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டபடியால் அறிவு பிறக்க மறுத்தது. பானுகோபன் கூறியவற்றைக் கேட்டுச் சினமே யடைந்தான் சூரபன்மன். "இந்த உலகில் நிலைத்து நிற்கக் கூடியது புகழ் ஒன்றுதான். இப்பொழுது நான் எதிரிகளுக்குப் பயந்து தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தால் என்னை யார் மதிப்பார்கள்?

கூனொடு வெதிரே பங்கு குருடுபேர் ஊமை யானோர்
ஊனம தடைந்த புன்மை யாக்கையோ டொழியும் அம்மா
மானம தழிந்து தொல்லை வலியிழந் துலகில் வைகும்
ஏனையர் வசையின் மாற்றம் எழுமையும் அகல்வ துண்டோ.

கூன், செவிடு, குருடு, ஊமை முதலிய குற்றங்களையுடையவர்க்கு அமைந்த புன்மை அந்த உடம்புடன் அழியும். மானம் இழந்து பழைய வலியிழந்து உலகில் வாழ்கின்றவர்களுக்கு வந்த பழி எழுமையும் நீங்காது.

சூரன் என்று பேர் பெற்ற நான் என் சூரத்தனத்தை ஒருபோதும் இழக்கமாட்டேன். பிடித்த சிறையை ஒரு போதும் விடமாட்டேன், நிலையற்ற வாழ்வை எண்ணி அழியாப் புகழை இழந்துவிடமாட்டேன். உயிரை விட்டாலும் விடுவேனே யன்றி அதிகாரத்தை விடமாட்டேன். மகனே! நீ போருக்கு அஞ்சிவிட்டாய். நீ உன் வீடு சென்று நிம்மதியாய் உறங்கு. நானே போருக்குச் செல்கிறேன்" என்றான் சூரபன்மன்.

'சரி' இது வினையின் தவிர்க்க முடியாத போக்கு. தந்தையைத் தடுப்பது சாத்தியமல்ல' என்று எண்ணிய பானு

கோபன், தந்தையுடன் உறுதுணையாக நின்று போர் புரிய முடிவு செய்து கொண்டான்,

"அப்பா! நான் அறிவில்லாமல் ஏதேதோ கூறி விட்டேன். அந்தப் புன்மொழியை மனத்தில் கொள்ளாமல் பொறுத்தருள வேண்டும். தாங்கள் இப்போது போருக்குச் செல்ல வேண்டாம். நானே சென்று நம் நகரத்தை அழிக்கும் பூத கணங்களையும், வலிமை மிக்க வீரவாகு தேவரையும் வெல்ல முயல்வேன்" என்று கூறிப் புறப்பட்டான்.

பானுகோபன் பொன் தேரில் ஏறிப் போருக்குப் புறப் பட்டான். நால்வகை அவுணச் சேனைகளும் வந்து சூழ்ந்தன. போர்ப் பறைகள் முழங்கின. தேர்களில் ஏற்றியிருந்த கொடிகள் சூரியமண்டலத்தை மறைத்தன. போர்க்களத்தை அடைந்த பானுகோபன் அங்கே இறந்து கிடந்த தம்பி யரைக் கண்டு எல்லையில்லாத துன்பமுற்றான். துயரம் வெஞ்சினமாயிற்று. "பூதர்களையும் வீரவாகுவையும் கொல் வேன்" என்று சபதம் கூறினான்.

அவுண சேனைகளும் பூதசேனைகளும் போர்க் களத்தில் ஒன்றோடொன்று எதிர்த்து அமர் புரிந்தன. அவுணர்கள் அழிவதைக் கண்ட பானுகோபன் சினமுற்றுச் சரமழை பொழிந்து பூதர்களைச் சின்னபின்னம் செய்தான். பூதர்கள் மனம் பதைபதைத்துத் தோற்று ஓடினார்கள்.

வீரவாகுதேவர் முருகவேளைத் தியானித்து முன்ன ணிக்கு வந்து சேர்ந்தார். வில்லை வளைத்துக் கணை மழை பொழிந்து அவுணச் சேனைகளை யழித்தார். அதைப் பார்த்த பானுகோபன் வீரவாகு தேவர் திருமுன் வந்து, "தூதனே! உன்னைக் கொல்வதாகச் சபதம் செய்து வந்திருக்கிறேன். நீ இங்கிருந்து உயிருடன் திரும்பிச் செல்ல முடியாது" என்று கூறுரைத்து ஆயிரம் கணைகளை விடுத்து அவர் மார்பைத் துளைத்தான். அதனால் சிறிது கிலேசமுற்ற வீரவாகுதேவர், பானுகோபன் புயத்தில் ஆயிரம் கணைகளை விடுத்தார். பானு கோபன் நூறு கணைகளை விடுத்து வீரவாகுதேவரின் வில்லைத் துணித்தான். வீரவாகு தேவர் ஒரு வேலாயுதத்தை எடுத்துப்

பானுகோபன் நெற்றியை நோக்கி எறிந்தார். அவன் நெற்றியைத் துளைத்தது வேல். ஒரு கணம் பானுகோபன் அறிவிழந்து நின்ருன். வீரவாகு தேவர் வாயு, அக்கினி, சூரியன், பிரமன், விஷ்ணு அஸ்திரங்களை ஏவினர். பானு கோபனும் அதே தெய்வப் படைக்கலங்களை ஏவி அவற்றின் போக்கை மாற்றினன்! 'மாயையினலேயே வீரவாகுதேவரை வெல்ல வேண்டும்' என்று கருதி, வீரவாகுதேவருக்கு நாற் புறமும் தேருடன் மாயமாக மறைந்தே சுற்றி வந்து கணை மழை பொழிந்தான். வீரவாகு தேவர் ஞானஸ்திரத்தை விடுத்தார். ஞானம் வந்தவுடன் மாயை தானே ஒழிந்தது. பானுகோபன் மாயை ஒழிந்து விண்ணில் வெளிப்பட்டு நின்ருன்.

அவனை நோக்கிய வீரவாகுதேவர் "வஞ்சகனே! இனி நீ என்னிடமிருந்து தப்ப முடியாது. உன்னை நான் இங்கேயே கொல்வேன்" என்று கூறித் தேருடன் ஆகாயத்தில் சென்று கணைகளைச் சொரிந்தார். நீரும் நெருப்பும் மாறிப் போராடுவது போல் இருவரும் போர் செய்தார்கள். அவர்களுடைய தேர்கள் இரண்டும் ஓர் இமைப் பொழுதினுள் ஆயிரத்து நூறு கோடி சாரிகைகள் திரிந்தன. அவர்கள் விடுத்த பாணங்கள் உலகெங்கும் திரிந்தன; இவர்களுடைய போரால் கடல்கள் வற்றின; மேகங்கள் கரிந்தன; திக்கஜங்கள் எரிந்தன; உடுக்கள் பொரிந்தன; அண்டங்கள் வெடித்தன. அமரரும் ஏனேரும் இறும்பூதுற்று, "இவரைப் போல் போர் செய்தவர் யாவருளர்? இவருக்கிணை யாவருளர்" என்று புகழ்ந்தார்கள்.

பானுகோபன் கடும் கோபம் கொண்டு பிரமன் முன்னுளில் தனக்கு அளித்த வேற்படையையெடுத்து விடுத்தான். அதனைத் தடுப்பதற்காக வீரவாகுதேவர் ஆயிரங்கோடி பாணங்களை ஏவினர். அந்தப் பாணங்களை அழித்த பிரம்மாஸ்திரம் விண்வழியே விரைந்து வந்தது. வீரவாகுதேவர் கந்தக் கடவுளைத் தியானித்து சிவபெருமான் தந்த வாட் படையை எடுத்து வீசினர். அது பிரம்மாஸ்திரத்தை வீழ்த்தியதைக் கண்டு, தேவர்கள் ஆனந்தக் கூத்தாடினர்கள். வீரவாகுதேவர் வாளை உறையில் இட்டார். பானுகோபன்

வாளை உருவிச் சிங்க ஏறுபோல் பாய்ந்து வீரவாகுதேவரின் வில்லைத் துணித்தான்.

வீரவாகு உருத்திரரைப் போல் உத்தண்டமாகச் சினந்தெழுந்தார். தமது வாளை எடுத்து எதிர்த்துப் போராடினார். அக்கினியும் இயமனும் போராடுவதைப் போல் அவர்கள் இருவரும் வாட்போர் செய்தனர். கால் கைகளைத் துணிக்கக் குறி வைத்து வாளை வீசினார்கள். சூறைக் காற்று போல் சுற்றினார்கள். பானுகோபன் தான் கற்ற வாள் வித்தையின் வலியால் வீரவாகு தேவருடைய வாளை விலக்கி அவருடைய தோளில் வெட்டினான். அவருடைய தோளினின்றும் உதிர வெள்ளம் பெருகியது. பானுகோபன் செருக்குடன் நின்றிருந்தான். வீரவாகுதேவர் வேலாயுதக் கடவுளைத் தியானித்து வலிமை முழுவதையும் திரட்டி வாளை வீசி பானுகோபனுடைய வலத் தோளைத் துணித்தார். வெட்டுண்ட வலக்கையோடு சேர்ந்து வீழ்கின்ற வாட் படையை இடக் கையாற் பறித்த பானுகோபன் அடங்காத கோபத்துடன் எதிர்த்துப் போர் செய்ய முயன்றான். வீரவாகுதேவர் அவனது இடத் தோளையும் வெட்டினார். பானுகோபன் மாயப் படையை விட நினைத்தான்.

நினைப்பு நினைப்பாகவே முடிந்ததேயன்றி நடப்பாக மாற வில்லை. வீரவாகுதேவர் பானுகோபனது தலையை அனாயாசமாக அறுத்தெறிந்தார். பானுகோபனுடைய தலையும் புயங்களும் உடம்பும் மண்ணில் வீழ்ந்தன. அளவற்ற ஆற்றல் பொருந்திய மாவீரனின் உடல் ஆற்றலையெல்லாம் இழந்து வெறும் சவமாக மண்ணில் சாய்ந்தது. மண்ணாசை கொண்டவன் மண்ணோடு மண்ணாயினன். கதிரவனையும் கலங்கச் செய்த அவுணகுலச் சிம்மத்தின் அழிவு கண்டு முனிவரும் தேவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். வீரவாகுதேவர் மீது பூமழை பொழிந்தனர். அரக்கர் குலச் சூரியன் அஸ்தமித்தவுடன் கதிரவனும் பன்னாட்களாக உள்ளூரக் கொண்டிருந்த கவலை தீர்ந்து கனன்று ஜொலித்தான்.

சூரன் தந்த அதிசூரனாகிய அரசிளங்குமரன் பானுகோபன் வீரசுவர்க்கம் எய்தியதும் வீரவாகுதேவர் ஆகாயத்தி

லிருந்து மண் தலத்துக்கு வந்தார். துணைவர்களை நோக்கி, "மாயங்கள் செய்த பானுகோபன் அழிந்தான். நமது சபதம் முடிந்தது. நாம் சேனைகளோடு சென்று முருகவேளைச் சேவிப்போம்" என்று மன நிறைவுடன் கூறினார்.

பூதர்கள் ஜயசங்கம் ஊதிக்கொண்டு பாசறை சென்றடைந்தனர். அவ்வளவுக்கும் காரணமாயிருந்தும், அவ்வளவிலிருந்தும் ஒதுங்கியிருந்த முருகப்பெருமானின் கழலிணைகளில் பலமுறை பணிந்து எழுந்தனர். முருகப்பெருமான் தம்பியை அணைத்துக் கொண்டார். அப்போது அத்தவயோகநாதனின் கண்களிலிருந்தும் ஆனந்தபாஷ்பம் பெருகிற்றும். "தம்பி, வீரவாகு! உன் வீர பராக்கிரமம் கண்டு நாம் மகிழ்ந்தோம். உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று அருளிக்கேட்டார் ஆறுமுகப் பெருமான்.

வீரவாகுதேவர் முருகப் பெருமானிடம் இந்திர பதவி கேட்பாரோ, பிரம பதவி கேட்பாரோ என்று அப்போது இந்திரன், பிரமன், குபேரன், விஷ்ணு முதலியோர் நடுங்கிக் கொண்டு நின்றார்களாம். ஆனால் வீரவாகு அப்படியெல்லாம் கேட்டுவிடுவாரா? அவர் என்ன கேட்டார் ?

"கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்;
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெஃகேன்;
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்"

"செல்வத்தினால் அல்லல் விளையும்; ஆதலால் குபேர சம்பத்து எனக்கு வேண்டாம்" என்று வீரவாகுதேவர் கூறியதைக்கேட்ட குபேரன், நிம்மதியாய்ப் பெருமூச்சுவிட்டான். 'இந்திரலோக ஆதிபத்தியத்தைக் கனவிலும் கருதமாட்டேன்' என்று அவர் கூறியதைக் கேட்ட இந்திரன், "பிழைத்தேன்" என்று ஆசுவாசம் செய்து கொண்டான். பிரம, விஷ்ணுக்களின் பதவியும் வேண்டாம் என்று கூறிய வீரவாகு அயனுக்கும் திருமாலுக்கும் விச்ராந்தி தந்தார். "தேவரீர் திருவடியில் என்றும் மாறாத அன்பு வேண்டும்" என்று அவர் வேண்டியபோது அமரர் அனைவரும் உருகிவிட்டனர்.

இறைவன் திருவடிகளிடத்து மாறு அன்பு பூணுவதை விடப் பெரும் பதவி தருவது ஒன்றுமில்லை. ஆன்மாவாகிய கொடிக்கு இறைவனுடைய திருவடியே கொழுகொம்பாகும். இறைவனடி சேர்ந்தார்க்கே துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் உண்டாகும். இறைவனடி சேர்ந்தாரே பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; இறைவனடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடர் எய்தாது எனத் தமிழ் மறை கூறும். 'காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்' என்பது கந்தரலங்காரம்.

வீரவாகுதேவர் கேட்ட இந்த வரம் முத்தியைக் காட்டிலும் சிறந்தது. "உதிக்காது உடையவர் திருவடி பக்தி. உதித்தால் அதுவே முத்தி" என்று பிரகலாதன் தமக்கே சொல்லிக் கொண்டார். வீரவாகுவோ அதனை முத்தியிலும் பெரிதாகக் கருதினார். "அடியேன் உய்யும் பொருட்டு பக்தி என்ற வரம் தாருங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

"தம்பி; உனக்கது தந்தனம்" என்று அருளிச் செய்தார் முருகப் பெருமான்.

"அந்த நல்வரம் முத்தியின் அரியதொன் றதனைச்
சிந்தை செய்திடு தவத்தரும் பெறுகிலர்; சிறியேன்
உய்ந்தி டும்வகை அருள்செய வேண்டுமென் றுரைப்ப
எந்தை கந்தவேள் "உனக்கது புரிந்தனம்" என்றான்.

மற்றைய துணைவர்கள் யாவர்க்கும் முருகக் கடவுள் நல்லருள் புரிந்து இருக்கை போக விடை கொடுத்து அனுப்பினார். வீரவாகுதேவரும் மற்றவர்களும் அவரவர் உறைவிடங்களுக்குச் சென்றார்கள்.

அவுண தூதர்கள் பானுகோபன் வதையுண்ட செய்தியை தயங்கித் தயங்கிச் சூரனிடம் கூற அசுரேந்திரன் உடலெல்லாம் வியர்த்து அறிவு சோர்ந்து மயங்கினான். அக்கணத்தில் அவன் உயிரே ஊசலாடியது. மாண்டவன் போல் வீழ்ந்தான். பின்னர் ஒருவாறு தெளிந்து எழுந்து பானுகோபனை நினைத்து நினைத்துப் பலப் பல கூறிப் புலம்பினான்.

"புத்திரர்கள் பலர் இறந்தும் நீ ஒருவன் இருக்கின்றாய் என்று உள்ளத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தேன். உன்னையே உற்ற துணை என்று கருதினேன். உற்ற துணை

யாகத்தானே நீயும் எனக்கு நன்மொழி கூறினாய். ஆனால் உனது அறிவுரையைக் கேளாமல் இழந்தபின் இப்போது நான் மட்டும் தருமத்தைப் பின்பற்றித் தப்பப் போவதில்லை. போருக்குச் செல்லத்தான் போகிறேன்.

"கண்மணி! உனக்கு அஞ்சி எப்பொழுதும் உன்னையே மலரேந்தி வழிபட்ட தேவர்கள் இப்பொழுது மகிழ்ந்தனரோ! உனக்குப் பயந்து துயிலாது உழன்று கொண்டிருந்த திருமால் இனி நன்றாக சேஷசயனத்தில் உறங்குவான். சிறு வயதில் நீ சிறை பிடித்த சூரியனும் மகிழ்ச்சியுடன் வானில் சஞ்சாரம் செய்வான். என் கண்மணியே! மந்திரிகளும் மற்றப் புதல்வர்களும் மாண்டு என்னை ஆறாத் துயரத்தில் ஆழ்த்திய போது நீதான் என் துயர் துடைக்க இருந்தாய். அண்டங்களையெல்லாம் ஆளும் நான் என் கண்ணீரைத் துடைக்க யாருமில்லாது அவலமானவிட்டேன். இன்னமும் நான் இறக்கவில்லையே! பரமேசுவரனாலன்றி எனக்கு அழிவு கூடாது என்று வரம் பெற்றேனே! அதற்கான தண்டனையாகவே இன்னமும் உயிர் வாழ்கிறேனோ?" என்று புலம்பி அழுதான் சூரபன்மாசுரச் சக்கரவர்த்தி.

போர்க்களத்தில் இறந்து கிடந்த பானுகோபனின் உடலை அவுணர்கள் சூரபன்மன் முன் கொண்டுவந்து கிடத்தினார்கள். உயிரற்ற மகனின் உடலைக் கண்ட சூரனின் ஆவேசம் மிகுந்தது. "மகனே! உன்னைக் கொன்ற அந்த வீரவாகுவைக் கொன்றாலன்றி என் மனம் அமைதியுறாது" என்று சூளுரைத்துத் தேம்பினான். சூரனின் ராணியான பதுமகோமளையின் ஆறாத்துயரை எப்படி விவரிப்பது?

அரண்மனையில் மட்டுமின்றி வீரமகேந்திரமெங்கும் புலம்பல் ஒலி மிகுந்தது. கணவன் இறந்ததறகாகப் பல அரக்கிகள் அழுதார்கள். உடன் பிறந்தவன் போய் விட்டானே என்று பல அரக்கிகள் அழுதார்கள்.

சூரபன்மன் ஒருவாறு தேறினான். "எதிரிகள் யாவரையும் இன்றைக்கே கொல்வேன். அவர்களுடைய உதிரத்தைச் சொரிந்து ஒரு வேள்வியைச் செய்து இறந்து கிடக்கும் என் மகனை எழுப்புவேன். அவனுடைய உடம்பை ஓரிடத்தில்

சேமித்து வைத்துப் பத்திரமாகப் பாதுகாத்து வாருங்கள்'' என்று அவுணர்களுக்கு உத்தரவிட்டான் சூரபன்மன்.

எனினும் அன்றைய மன நிலையில் தானே அன்று போருக்குச் செல்வது பலன் அளிக்காதோ என்றும் சூரன் கருதினான் போலும். சில தூதர்களை அழைத்தான்.

''தூதர்களே! நம் எதிரிகளை எனது தம்பி சிங்கமுகனுக்கு இரையாக்குவேன். நீங்கள் ஆசுர நகரம் சென்று என் அருமைத் தம்பியை அழைத்து வாருங்கள்'' என்றான்.

12. சிங்கமுகன் வதைப் படலம்

தூதர்கள் மனோவேகமாய் வடக்குக் கடலில் உள்ள ஆசுர நகரம் சென்று சிங்கமுகனைத் தொழுது நிகழ்ந்த வற்றையெல்லாம் கூறி, சூரபன்மனின் கட்டளையையும் தெரி வித்தார்கள். அவற்றைக் கேட்ட சிங்கமுகன் பொங்கியெழுந் தான்; தூதர்களை நோக்கி, ''எனது சேனைகளைத் திரட்டிக் கொண்டு வாருங்கள்'' என்று உத்தரவிட்டான். அதன்படி நால்வகைச் சேனைகளும் விரைந்து வந்து அவனைச் சூழ்ந்தன. சேனாதிபதிகளும் வீரர்களும் சூழச் சிங்கமுகன் தேர் ஏறி வீரமகேந்திரபுரம் புறப்பட்டான். ஒரு நாழிகைப் பொழு துக்குள் விண் வழியாக வீரமகேந்திரபுரம் வந்தடைந்தான். மாபெரும் வீரனாகிய அவனது வருகையைக்கண்ட தேவர்கள் அச்சத்தினால் கலக்கமடைந்தனர்.

கந்த புராணத்தில் சிங்கமுகன் வதம் ஒரு சிறந்த பகுதி. சிங்கமுகனுக்கு ஆயிரம் தலைகள்; இரண்டாயிரம் கைகள்;

சூரன் முற்றிலும் தீயவன். சிங்கமுகனுக்கோ நீதி தெரியும். ஆனால் அதைக் கையாள முடியவில்லை. பாவம் என்று தெரிந்தும் அந்தச் செயலையே செய்வான். முருகப் பெருமானின் பிரபாவங்களைச் சூரபன்மனிடம் சிங்கமுகனைப் போல் வேறு எவரும் எடுத்துச் சொல்லவில்லை. அவ்வளவு எடுத்துச் சொல்லியும் பயனில்லாமல் போகவே, அவனே முருகனிடம் போருக்குத் தயாராகி வந்துவிட்டான்.

சூரபன்மனுக்கு உற்ற துணையாக இருந்தவர்கள் எல்லோரும் அழிந்துவிட்டார்கள். சிங்கமுகன் மட்டுமே உயிரோடு இப்போது இருக்கிறான். நால்வகைச் சேனைகளோடும் அவன் வீரமகேந்திரபுரம் வந்து சூரபன்மனை விரைவிலடைந்து அவனது காலில் அடியற்ற மரம்போல் விழுந்தான். "தம்பி!" என்று துன்பமும் அன்பும் ஒழுக அழைத்து அவனை ஆசனத்தில் அமர வைத்தான் சூரபன்மன்.

"அண்ணா! தூதர்கள் எல்லாவற்றையும் சொன்னார்கள். மூவர்க்கும் தேவர்க்கும் யாவர்க்கும் எட்டாத முழு முதற் கடவுளைப் பாலகன் என்று எண்ணிவிட்டீர்கள். என் பேச்சையும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. தானாகவும் தெரியாமல், பிறர் சொல்லியும் கேளாமல் கெட்டீர்களே" என்று துக்கப்பட்டுச் சொன்னான் சிங்கமுகன்.

மூலமும் முடிவுமில் லாத மூர்த்தியைப்
பாலனென் றெண்ணினை படுவ தோர்ந்திலை
ஆலம தானதே ஐய என்மொழி
மேலையின் விதியையார் வெல்லும் நீரினார்.

"அண்ணா! வெள்ளம் வந்த பின் அணைபோடுவதில் பயனில்லை. முன் வினையை யாரால் வெல்ல முடியும்? நான் அதிகம் பேசவில்லை. போருக்குப் போகிறேன். ஆனால் திரும்பி வரமாட்டேன். வேலாயுதத்திடம் சென்று யார் திரும்ப முடியும்? நீங்களாவது அழியாமல் இருக்க வேண்டும். தேவர்களைச் சிறையிலிருந்து விட்டுவிடுங்கள்." என்று கூறி விடை பெற்றுக் கொண்டான் சிங்கமுகன்.

மகேந்திரபுரியிலுள்ள தன் மாளிகையைச் சென்றடைந்த சிங்கமுகன் அன்ன மலைகளையும், மாமிசக் குன்றுகளையும், பால், தயிர், நெய், கள், இரத்த ஏரிகளையும் தின்று, குடித்து, போர்க் கோலம் பூண்டான். பத்து லக்ஷம் குதிரைகளைப் பூட்டிய தேரில் ஏறி, மந்திரிகளும் மைந்தரும், இலட்சம் வெள்ளம் சேனைகளும் சூழப் போர்க்களத்துக்குச் சென்றான்.

சிங்கமுகாசுரன் போருக்குச் செல்வதையறிந்த நான்முகன், இந்திரன் திருமால் முதலிய வானவர்கள் பயந்து பாசறைக்கு விரைந்தனர். திருக்கோயிலில் எழுந்தருளி

யிருக்கும் கந்தக் கடவுளைத் தொழுது, "ஆயிரம் தலைகளையும் இரண்டாயிரம் கைகளையும் உடைய சிங்கமுகாசுரன் போருக்கு வருகிறான். அவன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் வென்றவன். ஆயிரம் யோசனை உயரமுள்ளவன். அளவில்லாத வரம் பெற்றவன். பூமியை ஒரு கையால் தாங்க வல்லவன். வீரத்தில் மட்டுமின்றி வஞ்சனையிலும் மாயையிலும் வல்லவன். மேரு மலையைத் தண்டாயுதம் என்று எடுத்து அண்டகடாகத்தை அடித்தவன். எவ்வுலகத்தையும் பிணிக்கத் தக்க இரண்டு பாசங்களை ஏந்திய கைகளையுடையவன். சூரபன்மனுக்குத் தம்பியான இவன் எண்ணற்ற சேனைகளோடு வருகிறான். அவனைக் கொன்று எங்களைக் காத்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

வானவர் வேண்டுகோளைச் செவிமடுத்தார் கந்தக் கடவுள். வாயுதேவனை அழைத்து, "நம்முடைய தேரைக் கொண்டு வா" என்று பணித்தார். பெருமானே போருக்குப் புறப்பட எண்ணிவிட்டார் என்பது புலனாயிற்று. அது அவரது கௌரவத்துக்குத் தகாது; சூரன் மீண்டும் போருக்கு வருமளவும் பெருமான் வரவேண்டியதில்லை எனக் கருதினார் வீரவாகுதேவர். முருகவேளைப் பணிந்து, "எம்பெருமானே, வந்திருப்பவனோ சூரபன்மனின் தம்பிதான். நான் சுப்பிரமணியரின் தம்பி. தம்பி மீது தம்பியைப் போருக்கு அனுப்புங்கள் நம்பி" என்று வேண்டிக்கொண்டார்.

'சிங்கமுகாசுரன் எதிரில் நிற்கக்கூட உனக்கு ஆற்றல் இல்லை' என்று சொல்லாமலே எம்பெருமான் திருவுள்ளத்தில் சிரித்துக் கொண்டு, "நல்லது, சேனைகளுடன் முன்னே நீ செல்வாயாக" என்று கூறியருளினார்.

தம் மாளிகைக்குச் சென்ற வீரவாகுதேவர் போர்க் கோலம் பூண்டு இலக்கத்தெண்மரும் ஆயிரம் வெள்ளம் பூதப் படைகளும் சூழப் போர்க்களத்தையடைந்தார். போர்க்களத்தில் பூதப் படைகளும் அவுணப் படைகளும் போரைத் தொடங்கின.

அவுணப் படையினரின் வீராவேசத் தாக்குதலால் பூதப் படையினர் நிலைகுலைந்தனர். பூத சேனைகளின் நிலையைக்

கண்ட சிங்கன் என்னும் பூத சேனுதிபதி ஒரு தண்டத்தை எடுத்து ஆத்திரத்துடன் அவுணர் படையைத் தாக்கினுன். சிங்கனுக்கு எதிராக அவுணப் படையைச் சேர்ந்த தசமுகன் என்பவன் வில்லை எடுத்து மழைபோல் பாணங்களைப் பொழிந்தான். அந்தப் பாணங்களையெல்லாம் சிங்கன் தண்டத்தால் அடித்து நொறுக்கினுன். பின்னர் அதே தண்டத்தால் தசமுகன் அணிந்திருந்த கவசத்தையும் அழித்தான். கவசத்தை இழந்த தசமுகன் ஒரு தண்டத்தை எடுத்துச் சிங்கன்மீது வீசி யெறிந்தான். அந்தத் தண்டம் சிங்கன் மார்பில் பட்டதும் ஒடிந்தது. அதனைக் கண்டு ஆத்திரமடைந்த தசமுகன் ஒரு மழுவைச் சிங்கன் மீது எறிந்தான். அந்த் மழுவை ஒரு தண்டினுல் அடித்து வீழ்த்திய சிங்கன், அதே தண்டினுல் தசமுகனின் வில்லை ஒடித்துத் தூளாக்கினுன். தசமுகன் நெருப்புருவமாகிய வேல் ஒன்றைச் சிங்கனுக்கு எதிராகச் செலுத்தினுன். சிங்கன் சக்கரப் படையை விடுத்து அந்த வேற் படையை அழித்தான். அதைக் கண்ட தசமுகன் ஒரு தண்டத்தை யெடுத்துச் சிங்கனின் மார்பை நோக்கி எறிந்தான். அந்தத் தண்டம் சிங்கனின் மார்பில் பாய்ந்தது. உதிரம் பொங்கியது. சிங்கன் கோபாவேசத்துடன் தசமுகனின் மார்பில் ஓங்கி அறைந்தான். அந்த அறை தசமுகனின் உயிரை மாய்த்தது.

பூத சேனையைச் சேர்ந்த அநகன் அற்புதமான போர்த் திறனைக் காட்டி அவுண சேனைகளை நிலைகுலைய ஓடச் செய்தான். துன்முகன் அவர்களைத் தடுத்து நிறுத்தி, "வீரர்களே! இந்தப் பாணங்களைக் கண்டு நீங்கள் ஓடலாமா? என்றைக்காவது சூரியனை மின்மினிப் பூச்சிகள் வெற்றி கொள்ள முடியுமா? என்னை நம்பிப் போரைத் தொடருங்கள்" என்று ஊக்கமளித்தான். தனது வில்லை வளைத்துப் பாணங்களைப் பூதர்கள் மீது பொழிந்தான். அது பயனளிக்காதது கண்டு நூறு நூறு மாய வடிவங் கொண்டு ஒவ்வொரு பூதரையும் தாக்கினுன்.

வீரவாகுதேவர் அவனுடைய மாய வடிவங்களை ஞானப் படையால் அழித்தார். அவுணர் படை யாவும் ஓட்டம்

பிடிக்கத் தனித்து நின்றிருந்த துன்முகனின் வில்லையும், பாணங்களையும் கவசங்களையும் வீரவாகுதேவர் அறுத்து விட்டார். 'இனி இவர்களுடன் போர் செய்தால் இறப்பது திண்ணம், ஆகவே ஒளிந்துகொள்வதே பிழைக்க வழி' என்று கருதி ஒரு மந்திரத்தை உச்சரித்தான் துன்முகன். மந்திர மகிமையால் விண்ணில் மறைந்தான். "ஓடி ஒளிந்த அவனை விரைந்து சென்று பிடிப்போம்; வாருங்கள்" என்று பூதர்கள் கூறினார்கள். வீரவாகுதேவர் "யுத்தத்துக்குப் பயந்து ஓடியவர்களையும் சரணடைந்தவர்களையும் கொல்லுதல் தகாது" என்று நீதி கூறினர். பூத சேனைகள் அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தன.

அவுணப்படை வீரர்கள் தோற்று நாலா திசைகளிலும் ஓடுவதைக் கண்ட சிங்கமுகாசுரன் முன்னணிக்கு வந்தான், பூதர்கள் அவன் முன் கூடி மலைகளையும் மழுக்களையும், தண்டங்களையும் எழுப்படைகளையும் வீசிப் போரிட்டார்கள். சிங்கமுகாசுரன் அவற்றை நோக்கிப் பெருமூச்சு விட்டான். அவ்வளவுதான். பூதர்கள் சண்டமாருதத்தில் அகப்பட்ட பூளைப் பூக்கள்போல் போயினர்.

பூத வீரர்கள் மீண்டும் தைரியத்தைத் தருவித்துக் கொண்டு சிங்கமுகாசுரனை எதிர்த்துப் போர் செய்தார்கள். சிங்கமுகாசுரன் தேரைவிட்டு இறங்கி பூதர்களில் சிலரைக் கீழே எறிந்தான்; சிலரை விண்ணில் எறிந்தான்; சிலரைப் பிரம உலகில் எறிந்தான்; சிலரை விஷ்ணு உலகில் வீசினன்; சிலரை நிலமெங்கும் வீசினன்; சிலரைக் கடலில் எறிந்தான். சிலரை ஒடித்தான்; சிலரை மிதித்தான். சிலரைக் கசக்கினன்; சிலரை அரைத்தான்; சிலரைத் தின்றான்; சிலரை நிலத்தில் வைத்துத் தேய்த்தான், சிலரை வெட்டினன். இப்படியாகச் சிங்கமுகாசுரன் கணப்பொழுதில் கண்ட கண்டபடி பூத வீரர்களைக் கண்ட துண்டமாக்கிக் கொன்று குவித்ததால் எங்கும் உதிர வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. அது கடலில் கலந்து கடலையே செந்நிறமாககியது.

அழற்கண்ணர் என்ற வீரர் சிங்கமுகாசுரன் மீது பல கணைகளை விடுத்தார். அந்தக் கணைகள் அவரது மார்பில்

பட்டதும் முனை மழுங்கி முறிந்து விழுந்தன. அழற்கண்ணர் வடவாமுகாக்கினி போல் சினந்து ஒரு சூலப்படையைச் சிங்கமுகாசுரன் மீது எறிந்தார். அந்தச் சூலம் சிங்கமுகாசுரன் மீது பட்டதும் மலையில்பட்ட முள்ளைப்போல் ஒடிந்து விழுந்தது. சிங்கமுகாசுரனின் வலிமையைக் கண்டு வியந்த அழற்கண்ணர் ஒரு தண்டத்தை எடுத்து அவன் மீது எறிந்தார். அது சிங்கமுகாசுரனின் தேர்ப்பாகனின் தலையைச் சிதறடித்தது. அதனைக் கண்டு சினந்த சிங்கமுகாசுரன் தண்டாயுதத்தை எறிந்தான். அது அழற் கண்ணரின் மார்பைப் பிளக்க உதிர வெள்ளம் பெருகியது. அவர் மூர்ச்சித்தார். சிங்கமுகன் வேறொரு தேர்ப்பாகனைத் தம் தேரில் அமர்த்திக் கொண்டு பூத வீரர்களின் மீது போர் செய்யப் புறப்பட்டான்.

சிங்கமுகாசுரன் போர் செய்ய வருவதைப் பூதப் படையைச் சேர்ந்த சுமாலி என்பவன் கண்டான். உடனே அவன் மேரு மலையைப் போன்ற ஒரு மலையைப் பெயர்த்து வீசி ஆரவாரம் செய்தான். அந்தப் பெரிய மலையைச் சிங்கமுகாசுரன் பந்துபோல் ஒரு கையால் பிடித்துச் சுமாலி மீது திருப்பியெறிந்தான். அதனால் சுமாலி உணர்விழந்து, செயலிழந்து நிலத்தில் விழுந்தான்.

அடுத்து, தண்டி என்பவன் தண்டை ஏந்திச் சிங்கமுகாசுரனுடன் சண்டை செய்தான். சிங்கமுகன் அழியவில்லை; தண்டாயுதம்தான் அழிந்தது. சிங்கமுகன் தண்டியைக் காலினால் உந்தி, வானவர்களும் அஞ்சும்படி ஆரவாரம்செய்து விண்ணில் வீசியெறிந்தான். விண்ணிற் சென்ற தண்டி திரும்பி வந்து சிங்கமுகாசுரனின் இரண்டாயிரம் தோள்களின் மீது குதித்தான். சோலைகளில் பாயும் குரங்கு போல் அவன் தோள்களில் உதைத்துத் திரிந்தான். சிங்கமுகனோ தனது தோள்களில், "ஓர் ஈ உலவுகின்றது" என்ற அளவுக்கே எண்ணி ஒரு கையால் சொறிந்து தண்டியை உருட்டித் துடைத்து விட்டான். தண்டி செயலற்றுப் போனான். பூதர்கள் யாவரும் பயந்து ஓடினார்கள்.

அவர்களை ஊக்குவான் வேண்டி இலக்கத்தெட்டு வீரர்களும், சிங்கமுகாசுரனுக்கு முன்னே தேரைச் செலுத்திக்

கொண்டு வந்து சூழ்ந்து கணைகளைப் பொழிந்தார்கள். சிங்கமுகாசுரன் தேரினின்றும் கீழே இறங்கிச்சென்று இடிபோன்ற பெரு முழக்கத்துடன் இலக்கத்தெண்மரின் தேர்களில் சிலவற்றைத் தூக்கி எறிந்தான். அவர்களது தேர்களிலேயே சிலவற்றை எடுத்து மற்றவற்றோடு மோதும்படி அடித்து நொறுக்கினான். இலக்கத்தெண்மரும் வலிமை இழந்து ஓடினார்கள். சிங்கமுகாசுரன் தனது தேரில் வெற்றி வீரனாக ஏறிக் கொண்டான்.

வீரவாகுதேவர், கோபத்துடன் தேரைச் செலுத்திக் கொண்டு சிங்கமுகாசுரன் முன்பு வந்தார். பெரிய வில்லை வளைத்துப் பல கோடி பாணங்களைப் பொழிந்தார். எதிர்த்து வந்த அவுணர்கள் தலை சிதறின; வெட்டுண்ட அவர்கள் பூமியில் விழுந்து உருண்டனர். அளவற்ற அவுணர்கள் மடிந்ததால் எங்கு நோக்கினும் பிண மலையே காட்சியளித்தது. அம்மலைகளைச் சுற்றிப் பேய்கள் சுற்றிக் கொண்டிருந்தன. இறந்த அவுணர்களின் உடலினின்றும் பெருக்கெடுத்தோடிய உதிர வெள்ளம் இறவாமல் நின்றிருந்த அவுணர்களை அடித்துச் சென்று கடலில் கொண்டுபோய்ச் சேர்த்தது.

இதனைக் கண்ட சிங்கமுகாசுரனின் மக்களாகிய சதவீரர்களுக்குச் சினம் பொங்கியது. கணைகளை மழையென வீரவாகு தேவர்மீது பொழிந்தனர். அவற்றையெல்லாம் தனது கணைகளால் மாற்றினார் வீரவாகு தேவர். வீரவாகு தேவரை விற்போரில் வெல்ல முடியாது என்பதை உணர்ந்த சதவீரர்கள் வாட்போர் தொடங்கினர். சிவபெருமான் தந்தருளிய வாளுடன் வீரவாகு அவர்கள் மீது பாய்ந்தார். சதவீரர்கள் அங்கம் அங்கமாகக் குறி பார்த்து வீசிய வாள் படையினாலும் வீரவாகு தேவருக்குத் திங்கு எதுவும் ஏற்படவில்லை. உடனே அவர்கள் கூட்டமாகச் சென்று வீரவாகு தேவரைப் பிடித்துக் கொண்டார்கள். அதனால் ஆத்திரமடைந்த வீரவாகு தேவர் தமது வாள் படையினால் சதவீரர்களின் உடலைப் பலவாறாக வெட்டிக் கொன்று குவித்தார். சதவீரர்களைக் கொன்ற பின் தேரில் ஏறிக் கொண்டார் வீரவாகு தேவர்.

தமது புதல்வர்களான சதவீரர்கள் இறந்ததைக் கண்ட சிங்கமுகாசுரன் பெரும் துன்பத்தில் ஆழ்ந்தான்.

இதன் பிறகு சிங்கமுகனும் வீரவாகுவும் நேருக்கு நேர் சந்தித்தனர். வீரவாகுதேவரை ஏற இறங்கப் பார்த்தான் சிங்கமுகாசுரன். அவனது கண்கள் தீயைக் கக்கின. "உ...ம்" சிவகுமாரன் என்றால் ஆறு முகங்கள் இருக்கும். உனக்கு ஆறு முகங்கள் இல்லை. ஒரே முகம் உடைய நீ சிவகுமாரன் அன்று. நீ யார்? எண்மர்களில் ஒருவனோ? இலக்கம் வீரர்களின் தலைவனோ? நீதான் முன்பு நமது ஊருக்கு வந்த தூதனோ? யார்? சொல்" என்றான்;

சிங்கமுகனின் கேள்விக்குப் பதில் கூறினார் வீரவாகு தேவர்.

"சிவகுமாரராகிய முருகப் பெருமானின் அடிமை நான். முன்பு உங்களது மகேந்திரபுரிக்குத் தூதனாய் வந்து முருகப் பெருமானின் அருளினால் நகரத்தை அழித்துத் திரும்பிச் சென்றவன் நானேதான். ஆறுமுக சுவாமியின் கிருபையால் அளவற்ற அவுணர்களைக் கணப் பொழுதில் அழித்த நான் உன்னையும் கொல்வதற்காக அவரது அநுக்கிரகத்தைப் பிரார்த்தித்து இங்கு வந்து நிற்கிறேன். என் பெயர் வீரவாகு" என்று கூறினார்.

"விநயமாகப் பேசுவது போலப் பேசியே உன்னைப்பற்றி நீ தற்பெருமை அடித்துக் கொள்கிறாய். போர்ப் பயிற்சி பெறாதவர்களையும், நகரில் உள்ள பாமரர்களையும் வெல்லுவது தான் சுத்த வீரனின் ஆண்மையோ? உன்னையும் உன் தரப்பினர் அவ்வளவு பேரையும் வதைக்க வந்துள்ளேன். சிறையில் சிக்கியுள்ள தேவர்களைச் சிறைவிடுக்க வந்துள்ள நீங்கள் உங்கள் உடலில் அடைபட்டுள்ள உயிரை விடுத்துப் போவீர்கள்" என்று இடிபோல் கர்ஜித்தான் சிங்கமுகாசுரன்.

சிங்கமுகாசுரனின் வீர கர்ஜனையைக் கேட்ட வீரவாகு தேவர் நகைத்துப் பதினெட்டுக் கணைகளைச் சிங்கமுகாசுரன் மீது செலுத்தினார். அந்தப் பாணங்கள் அவன் மார்பில் பட்டுப் பயனற்று வீழ்ந்தன. தொடர்ந்து இருவருக்கும் வெகு உக்கிரமான போர் நடைபெற்றது. சிங்கமுகாசுரன் தன் கையிலிருந்த சூலப் படையைச் சுழற்றி வீரவாகு தேவர்மீது வீசினான். விண் வழியே வந்த அந்தச் சூலத்தின்

ஆற்றலைக் கண்ட வீரவாகு தேவர் அதனை எதிர்த்து ஆயிரம் பாணங்களை விடுத்தார். சூலப்படை அந்தப் பாணங்களையும் வீழ்த்திவிட்டு வீரவாகு தேவரை நோக்கிச் சென்றது. இதனைக் கண்ட இலக்கத்தெண்மரும் வீரர்களும் கலக்க மடைந்தனர். தம்மை நோக்கி வந்த சூலப்படையை வீர வாகுதேவர் சிவபெருமான் அளித்த வாள் படையால் இரு துண்டங்களாக வெட்டினார். சினம் பொங்கச் சிவப் படைக் கலத்தை எடுத்து வழிபாடு செய்து "சிங்கமுகாசுரனைக் கொல்வாயாக" என்று விடுத்தார். சிங்கமுகாசுரனும் அதற் கெதிராக இன்னொரு சிவப் படைக்கலத்தையே வழிபாடு செய்து விடுத்தான். இருவரில் எவருமே அழியவில்லை. சிவப் படைக் கலங்கள் இரண்டும் ஒன்றோடொன்று வந்து கலந்து தம்மைச் செலுத்தியவர்களிடமே திரும்பிச் சென்றன.

சிங்கமுகாசுரனைக் கொல்ல முடியவில்லையே என்று வீர வாகு தேவர் பெரிதும் வருந்தினார். ஆறுமுகக் கடவுளிடம், 'தாங்கள் இவனோடு யுத்தம் புரிய வேண்டாம்; நானே இவனை முடிப்பேன்' எனத் தாம் கூறியது தவறோ?' என்று எண்ணினார். 'இவனது ஆற்றலைக் காணுங்கால் ஆறுமுகக் கடவுளின் திருக்கரத்திலுள்ள படைகளாலன்றி வேறு எவற் றினாலும் இறக்கமாட்டான் என்றே தோன்றுகிறது. ஆயி னும் இவனது தேரையும், படைக் கலங்களையும், சேனைகளையு மாவது அழிப்பேன்' என்று கருதினார் வீரவாகு. சிங்கமுகா சுரனின் தேர்ப்பாகனது தலையைத் துண்டித்தார். சிங்கமுகா சுரனின் தேரை அழித்தார். அந்தச் சமயம் பார்த்துப் பூத வீரர்கள் சிங்கமுகாசுரனைச் சூழ்ந்து மலைகளையும் படைக்கலங் களையும் வீசிப் போர் செய்தார்கள். சிங்கமுகாசுரனின் தேர் அழிந்துவிட்டதால் அவன் வேறொரு தேரில் ஏறி ஆயிரம் கைகளிலும் வில்லும் அம்பும் எடுத்துக் கொண்டு அளவற்ற பாணங்களை விடுத்தான். அந்தப் பாணங்கள் தாக்கியதால் போருக்கு வந்த பூதர்கள் மாண்டனர். சிங்கமுகாசுரனின் பாணத்தினால் தாக்கப்படாத உடலே இல்லையென்றாகி விட்டது.

வீரவாகுவும் சிங்கமுகனும் இலட்சக் கணக்கான பாணங் களால் பரஸ்பரம் தாக்கிக் கொண்டனர். சிங்கமுகாசுரன்

பெருஞ் சீற்றத்துடன் இரண்டாயிரம் பாணங்களைச் செலுத்தினன். அந்தப் பாணங்களால் வீரவாகுதேவரின் கையிலிருந்த வில் வெட்டுண்டு வீழ்ந்தது. அவர் வேறொரு வில்லை எடுப்பதற்கு முன் சிங்கமுகாசுரன் கணை மழை பொழிந்து அவர் மார்பைத் துளைத்தான். வீரவாகுதேவர் வெகுண்டு சிங்கமுகாசுரனின் தேரை அழித்து அவன் ஆயிரம் விற்களையும் அழித்தார். அது கண்ட வானவரும் நான்முகனும், நாரணரும் ஆர்த்தனர். அதனுல் சிங்கமுகாசுரன் நாணமடைந்தான்.

வீரத்தால் செய்வதற்கு இனி ஏதுமில்லை என்று கண்ட சிங்கமுகாசுரன் தனது தாயாகிய மாயை அளித்த மாயா பாசத்தை எடுத்து விடுத்தான்.

பிரளய கால இருளைப் போன்ற கனந்தகாரத்தைப் பரப்பிச் சென்ற அந்த மாயா பாசம், ஏழு கடல்களும் ஒன்று சேர்ந்து மணல்களை வாரி யடித்துக் கொண்டு செல்வதுபோல் வீரவாகு தேவர் முதலிய இலக்கத் தொன்பதின்மரையும் ஏனைய பூதர்களையும் மயக்கி அடித்துச் சென்று உதயகிரியில் வைத்தது. தமது உணர்வுகளின் அஸ்தமனத்தை அடைந்த பூத வீரர்கள் உதயகிரியில் மயங்கிக் கிடந்தனர்.

போர்க்களத்தில் எதிர்த் தரப்பிலிருந்த படைகளையெல்லாம் சிங்கமுகன் உதயகிரிக்கு உருட்டிவிட்டான். இனி ஆறுமுகரும், இதுவரை போர்க்களம் வராத பூதப் படைகளும் தான் அவனேடு போருக்கு வரவேண்டும். "சிவகுமாரன் எனக்குப் பயந்து ஓடி ஒளிவானு? அல்லது இவ்வளவு நடந்த பின்னும் தைரியமாகப் போருக்கு வருவானு? அந்தப் பாலகன் எங்குள்ளான்?" என்று அண்டங்கள் வெடிக்கும்படி ஆரவாரம் செய்து கூறினன்.

ஓர் ஒற்றன் அவனிடம் வந்து, "சிவகுமாரன் ஆயிரம் வெள்ளம் பூதப் படைகளுடனும், சேனைத் தலைவர்களுடனும், பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலியோருடனும் பாசறையில் இருக்கிருர்" என்று கூறினன். அதைக் கேட்டு நகைத்த சிங்கமுகாசுரன், "அவர்கள் இங்கு என்னை எதிர்க்க வருவார் என எதிர்பார்த்துக் காலதாமதம் செய்வதில் பொருள்இல்லை. பயந்து ஒளிந்திருக்கும் அந்தப் பாலகனையும் படையினரையும்

இப்பொழுதே அவர்களது பாசறைக்குச் சென்று கொல்வேன்" என்று கோஷித்தான். அவ்வாறே பாசறை நோக்கிப் போருக்குப் புறப்பட்டான்.

சிங்கமுகாசுரன் வருவதையறிந்த தேவர்கள் வாட்டமடைந்து குமாரக் கடவுளிடம் நிகழ்ந்தவற்றை யெல்லாம் கூறினார்கள். பெருமான் புன்முறுவல் செய்தார். பாசறையினின்று வெளி வந்தார். தம்முடைய தேரைக் கொண்டு வரும்படி பணித்தார். அதன்படி வாயுதேவன் மனோவேகத் தேரைக் கொண்டு வந்து நிறுத்தினான்.

"நாமே புறப்படுவோம்" என்றார் சுவாமி.

சாம்பூநதம் என்ற பொன் ஆயிரம் மாற்றுத் தங்கம். அவற்றில் நவரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட பாதுகைகளைச் சிருஷ்டி கர்த்தாவும் சரஸ்வதிகாந்தனுமான பிரமதேவன் சரவணபவருக்குச் சமர்ப்பித்தார். அந்த இரத்தினப் பாதுகையின்மீது தமது இரத்தினத் திருவடி வைத்துப் புறப்பட்டார் சுவாமி. தேவேந்திரன் தங்கப் பிடி போட்ட வெண் சாமரம் வீசினான். முப்பத்து மூன்று கோடி தேவர்களும் ஆலவட்டம் வீசினார்கள். சூரியனும் சந்திரனும் வெண் கொற்றக் குடை பிடித்தார்கள். அறக் கடவுள் உடைவாள் ஏந்தி வந்தான். இயக்கர் தலைவனான குபேரன் தாம்பூலப்பெட்டி தாங்கினான். வருணன் படியகம் ஏந்தினான்.

இந்திரன் கவரி சாய்ப்ப இமையவர் வட்டம் வீசச்
சந்திரன் தபனன் என்போர் தண்ணிழல் கவிப்புத் தாங்க
அந்தகன் உடைவாள் பற்ற இயக்கர்கோன் அடைப்பை கொள்ளச்
சிந்துநீர் அரசன் செம்பொற் படியகம் ஏந்தச் சென்றான்.

சகல தேவர்களும் கைங்கரியம் செய்ய, சகல தேவர்க்கும் நாயகரான சுவாமி மனோவேகத் தேரில் தமது மனோகரமான பாதம் பதித்து ஏறி வீற்றிருந்தருளினார். கடல்கள் நாணும்படி ஆயிரம் வெள்ளம் பூதர்கள் ஆரவாரம் செய்து சூலம், மழு, தண்டம், எழு, மலை முதலியவற்றை ஏந்தி எம்பெருமானைச் சூழ்ந்து சென்றார்கள். பானுகம்பன் என்றொரு பூத வீரன். அவனுக்கு இரண்டாயிரம் கைகள்; இரண்டாயிரம் கால்கள்

இரண்டாயிரம் கைகளிலும் இரண்டாயிரம் வலம்புரிச் சங்கங்களை எடுத்து ஊதினானும்.

மூவர்கள் முதல்வன் வந்தான் முக்கணன் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தான்
ஏவருந் தெரிதல் தேற்றா திருந்திடும் ஒருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான் என்றன சின்ன மெல்லாம்.

"மும்மூர்த்திகளுக்கும் முதல்வன் வந்தான்; சிவகுமாரன் வந்தான்; பகைவர்கள் என்னும் யானைகளுக்கு ஆண் சிங்கமாயுள்ளவன் வந்தான்; வேற்படை வீரன் வந்தான்; யாவரும் அறிதற்கரிய தனி முதல்வனாகிய பெருமான் வந்தான்! தேவாதி தேவன் வந்தான்" என்று திருச் சின்னங்கள் கட்டியம் ஒலிக்கச் சுவாமிநாதர் போர்க்களம் வந்தார்;

சிங்கமுகாசுரனும் படைகளோடு வந்து எதிர்த்தான்.

இருதிறப் படைகளும் போர் செய்தபோது அவுணர் பலர் அழிந்தார்கள். அதனைக் கண்ட சிங்கமுகாசுரன் மிகப்பெரிய மாயாவுருவத்தையெடுத்து, தேவர்கள் நடுநடுங்க வந்து இரண்டாயிரம் கரங்களால் ஆயிரம் வெள்ளம் பூத வீரர்களையும் எடுத்து விழுங்கிவிட்டான். 'இனி நம்மையும் சிங்கமுகாசுரன் விழுங்கிவிடுவான்' என்று தேவர்கள் ஓடி ஒளிந்தார்கள். சிங்கமுகாசுரனின் வயிற்றுக்குள் சென்ற பூதர்கள், "இத்துணைக் காலமாகப்போரிலேயே ஈடுபட்டிருந்ததால் எம்பெருமானை அதிகம் ஸ்மரிக்க இயலவில்லை. சிவபெருமானைத் தியானிப்பதற்கு மற்றைய இடங்களைவிடச் சிங்கமுகாசுரனின் வயிறே ஏற்ற இடம்" என்று இருந்து விட்டனர்.

இதுகாறும் வீரமகேந்திரபுரத்துக்குத் தோல்விச் செய்தியை எடுத்துச் சென்ற தூதர்கள் சூரபன்மனிடம் ஓடிச் சென்றனர், இன்று வெற்றிப் பெருமையுடன், சிங்கமுகாசுரன், வீரவாகு முதலிய இலக்கத்தொன்பதின்மரையும் ஆயிரம் வெள்ளம் பூதர்களையும் மாயத்தினால் மயக்கி உதயகிரியில் வைத்திருப்பதையும், முருகனோடு வந்த ஆயிரம் வெள்ளம் பூதர்களையும் விழுங்கிவிட்டதையும் கூறினர். "இனி முருகன் அழிவான்" என்று ஆர்ப்பரித்தனர்.

சூரபன்மன் மிகவும் மகிழ்ச்சி கொண்டான். அரியணையி லிருந்து இறங்கிச் சென்று தூதர்களை அன்புடன் தழுவிக் கொண்டான். அருகிலிருந்த ஏவலனை நோக்கி, "ஊரிலுள்ள பல சேனைகளையும் திரட்டிச் சிங்கமுகனுக்கு உதவியாக அனுப்பு" என்று ஆணையிட்டான். பறைபறிவிக்கப்பட்டது. மகேந்திரபுரியிலுள்ள சேனு வீரர்கள் ஆரவாரத்துடன் அணி வகுத்துச் சிங்கமுகாசுரன் நின்று கொண்டிருந்த போர்க் களத்தை யடைந்தனர்.

தன் தம்பியின் போர்த் திறத்தைத் தானே காண வேண்டும் என்று எண்ணிய சூரபன்மன் கோபுரத்தின் மீது ஏறி நின்று போர்க்களத்தை நோக்கினுன். முருகவேள் தனித் திருப்பதையும், தன் தம்பியின் வெற்றியையும் கண்டு நகைத்தான். ஏக நாயகனுகிய சுவாமி ஏகாந்தமாயிருப்பதன் உட்பொருளை அவன் எப்படி அறிவான்?

சிங்கமுகாசுரன் பூத வீரர்களை விழுங்கியதைக் கண்ட முருகவேள் போர் செய்யும் திருவிளையாடலைப் புரியவேண்டும் என்று திருவுளங் கொண்டார்; முறுவல் பூத்துக் கொண்டே முன்னணிக்கு வந்தார். அவுணப்படை வீரர்கள் பெரும் ஆர வாரம் செய்து அவரைச் சூழ்ந்து பாணங்களை ஏவினுர்கள். குமாரக் கடவுள் வில்லையெடுத்து நாணெலி செய்தார். அந்த 'டங்கார' நாதத்தைக் கேட்டே அவுணப்படை வீரர்கள் தங் கள் கைகளிலிருந்த ஆயுதங்களை நழுவவிட்டனர். யானைகளும் குதிரைகளும் அவ்வொலியைக் கேட்டு வீழ்ந்தன. தேர்கள் அதிர்ந்து சிதறின. அதனைக் கண்டு வியந்த சிங்கமுகாசுரன் குமாரக் கடவுளின் திருமுன் வந்தான்.

கந்தவேளும் சிங்கமுகாசுரனும் இப்போதுதான் முதன் முதலில் சந்திக்கின்றனர். முதல் சந்திப்புக்கு எப்பொழுதும் பெருமை உண்டு.

"சுவாமி, சுவாமி என்று பேசப்படும் முருகன் சின்னக் குழந்தையாக அல்லவா இருக்கிறுன்?" என்று தனக்குள் கூறிச் சிரித்துக் கொண்டான் சிங்கமுகாசுரன்.

சுவாமி பரம்பொருள் என்பது சிங்கமுகாசுரனுக்குத் தெரியும். ஆனுலும் போர்க்களம் அல்லவா? அறிவு மயங்

கும். இது இறைவன் திருவிளையாடல், சிங்கமுகன் ஷண்முகரிடம் பேசலானான்:

'கண்ணுதல் முதல்வன் மைந்த கழறுவன் ஒன்று கேண்மோ
எண்ணலர் வலியை மாற்றல் இறையவர் கடனே அற்றால்
விண்ணவர் தமைத் தண்டித்தோம் அவர்க்குளும் அல்லை
வேறோர்
நண்ணலன் எமருக் கில்லை நடந்ததென் அமருக் கென்றான்.

"சிவகுமார! ஒரு விஷயம் சொல்கிறேன். கவனமாய்க் கேள், பிராமண தர்மம் வேறு; க்ஷத்திரிய தர்மம் வேறு, யார் என்ன சொன்னாலும் பொறுமையாக இருப்பவர் பிராமணர். க்ஷத்திரியரால் அப்படி இருக்க முடியாது; இருக்கவும் கூடாது. பகைவர்களை (எண்ணலர்—பகைவர்) அடக்கி ஒடுக்குவது ராஜ தர்மம். அந்த ராஜ தர்மத்தின்படி பகைவர்களை அடக்க வேண்டுமாதலால் நாங்கள் தேவர்களைச் சிறையில் வைத்தோம்; அதிலே தவறு என்ன இருக்கிறது.

"எங்களுக்குப் பகைவர்கள் தேவர்கள். அந்தத் தேவர்கள் கூட்டத்தில் நீயும் ஒருவன் என்றால், அவர்கள் சார்பில் நீ வரலாம். ஆனால். நீ இந்தத் தேவர்கள் கூட்டத்தில் ஒருவன் அல்லவே? நீ விருப்பு வெறுப்பு இல்லாத சுவாமி என்கிறார்களே! நீ ஏன் போருக்கு வந்தாய்? கைலாயத்திலுள்ள சிவபெருமான் மீது கடுகளவும் எங்களுக்குப் பகைமை இல்லையே? எமதாற்றல் அவர் தந்ததேயன்றோ? அப்படியிருக்க, அவரது மைந்தனாகிய நீ எம்முடன் போருக்கு வந்த காரணம் யாது?" என்று கேட்டான் சிங்கமுகாசுரன். அவனது கேள்வியில் நியாயம் இருக்கிறது.

சுவாமி அதற்கு என்ன விடை சொல்கிறார்?

'உறைதரும் அளியன் தன்னை வலிபவன் ஒறுக்கின் நாடி
முறைகெழு தண்ட மாற்றி அண்டங்கள் முழுவ துக்கும்
இறையினைப் புரிதும் அற்றால் நீவிர்கள் இமையோர்க் கிட்ட
சிறையினை அகற்ற வந்தோம் செருவுமத் திறத்துக்
கென்றான்.

கந்தப் பெருமான் சிங்கமுகாசுரனுக்கு இந்த நீதியைத் தான் சொன்னார். "சிங்கமுகாசுரனே! நீங்கள் பரம சாதுக்

களான தேவர்களுக்குத் துன்பம் செய்தபடியினால் இந்தப் போர் வந்திருக்கிறது. எளியவரை வலியவர் ஒறுத்ததால் வலியவரை நீதி முறைப்படி தண்டித்து அறத்தை நிலைநிறுத்த வந்திருக்கிறோம்'' என்று அருளினார்.

முருகவேள் கூறியதைக் கேட்ட சிங்கமுகாசுரன் சிரித்தான். போர்க்களம் செய்த சதி அது. சிங்கமுகனும் நீதி உணர்விழந்தான். 'தேவர்கள் ஏமாற்றுகிறார்கள். அவர்கள் எங்கள் மீது நேரடியாகப் போர் செய்ய முடியாது. அப்படிப்பட்டவர்கள் எங்களுடன் போர் செய்யச் சிவபெருமானை அழைத்து வந்திருக்கலாம். அவரை அழைத்து வந்திருந்தால் எங்களுக்கு எவ்வளவோ கௌரவமாக இருந்திருக்கும். நீ சிறு குழந்தை. உன்னைக் கொன்றுவிட்டால் உமாதேவியார் வருத்தப்படுவார்கள். எனவே, உன்னைக் கொல்ல விரும்பவில்லை. நீ போய் விளையாடிக் கொண்டிரு'' என்றான்.

குகப் பெருமான் வாயால் மறுமொழி சொல்லவில்லை. அநாயாசமாக ஒரு பாணத்தை விடுத்தார். பெரிய மலை போன்ற வடிவம் கொண்டிருந்த சிங்கமுகாசுரன் மார்பில் அப்பாணம் புகுந்து முதுகில் ஊடுருவிச் சென்றது. உதிர வெள்ளம் பெருகியது. ஒரு விநாடி முன் இறுமாப்புடன் பேசிய அவுணன் பெருந்துன்பமடைந்து கலங்கினான். பாணம் ஊடுருவிச் சென்றதால், மார்பும் முதுகும் வாயில்களைப்போல் பிளக்க, அவனது வயிற்றில் அடக்கமாயிருந்த பூத வீரர்கள் அவ்வழியே குதித்து வெளிப்பட முயன்றனர். சிங்கமுகாசுரன், அவர்கள் வழியைப் பத்துக் கைகளால் மூடிக்கொண்டு கந்தவேள் மீது ஒரு தண்டத்தை எடுத்து வீசினான். முருகக் கடவுள் நொடிப் பொழுதில் நான்கு பாணங்களால் அவன் நெற்றியைத் தொளைத்தார். சிங்கமுகாசுரன் மூர்ச்சித்தான். தனது மார்பில் தோன்றிய வாயிலை அடைத்துக் கொண்டிருந்த அவனது கரங்கள் நழுவின. உடனே பூதர்கள் அனைவரும் வெளிப்பட்டு முருகவேளைச் சூழ்ந்து கொண்டனர். திருவருள் இருக்க இறந்த பூதர்கள் உய்ந்ததில் அதிசயமென்ன?

மாயப் படையால் உதயகிரியில் அடைக்கப்பட்டிருந்த வீரவாகுதேவரையும், மற்ற படைத் தலைவர்களையும்

அழைக்கவேண்டும் என்று திருவுளம் கொண்ட முருகப் பெருமான் மீண்டும் ஒரு பாணத்தை ஏவினர். அந்தப் பாணம் உதயகிரியில் சென்று மாயா பாசத்தை அறுத்து, வீரவாகு தேவர் முதலியோர்க்கு உணர்வு தந்து, புட்பக விமானம் போலாகி அவர்களை ஏற்றிக் கொண்டு வந்து முருகவேள் திருமுன் விடுத்தது. எல்லோரும் இளம்பூரணரது திருவடிகளை வணங்கி வாழ்த்தினர்கள். மறைந்தவர் யாவரும் வருவது கண்டு சிங்கமுகன் ஆசாபங்கமும் ஆத்திரமும் கொண்டான்.

இதற்குள் குமாரக் கடவுளின் நாணொலி கேட்டுச் சோர்வுற்று மயங்கி விழுந்த அவுண சேனைகள் மயக்கம் தெளிந்து விரைந்து போர் புரிய வந்தனர். அவர்கள் கோபத்துடன் படைக்கலங்களை வீசிக் கொண்டு முருகப் பெருமானைச் சூழ்ந்து கொண்டனர். குமரவேள் புன்முறுவல் பூத்துக் கோடி கோடி பாணங்களை விடுத்தார். அவர் விடுத்த பாணங்களில் சில அக்கினியை யொத்தன; சில நஞ்சையொத்தன; சில இருளை யொத்தன; சில பாம்புகளை யொத்தன; சில கூற்றுவனை யொத்தன; சில சூலத்தை யொத்தன; சில அறத்தை நிறுவியதால் பிரமதேவரை யொத்தன; சில உலகங்களை ரட்சித்ததால் திருமாலை யொத்தன; சில அவுணர்களை அழித்ததால் உருத்திரனை யொத்தன.

அறத்தை நல்கலின் அந்தணன் போல்வன; அகிலத்
திறத்தை அன்பொடு போற்றலில் செங்கண்மால் போல்வ
ஒறுத்து மன்னுயிர் உண்குறும் அவுணரை ஒருங்கே
இறுத்தல் செய்திடுந் தன்மையால் ஈசனே போல்வ.

முருகவேள் விடுத்த அனந்த கோடி பாணங்கள் கணப் பொழுதுக்குள் அவுண சேனைகள் அனைத்தையும் அழித்தன. சிங்கமுகாசுரன் தனித்தவனாயினன். அவன் முன்பு கொண்டிருந்த மாய வடிவம் முருகவேளின் பாணத்தினால் அழிந்தது. ஆகவே, பழைய வடிவத்துடன் தேரின்மேல் நின்றான்.

தன்னுடைய படைக்கலங்கள் முருகப் பெருமானிடம் பயனற்றுப் போனதைக் கண்ட சிங்கமுகாசுரன் இரண்டாயிரம் கைகளாலும் கந்தவேளைப் பிடித்துவிடலாம் என்று

கோபத்துடன் பாய்ந்து வந்தான். அந்தக்கரங்களையெல்லாம் கணைகளால் அறுத்துத் தள்ளினார் சுவாமி. வெட்டுண்ட அந்தக் கரங்கள் தரையில் விழுவதற்கு முன்பே வேறு கரங்கள் முளைத்தன. நிலத்தில் விழுந்த கைகளை முளைத்த கைகளால் எடுத்துக் கொண்டு போருக்கு வந்தான் சிங்கமுகாசுரன். பெருமான் அவனது ஆயிரம் தலைகளையும், இரண்டாயிரம் கரங்களையும் அறுத்தார். அவை மீண்டும் முளைத்தன. இப்படியாக முருகப் பெருமான் சிரங்களையும் கரங்களையும் அறுக்க அறுக்க அவை முளைத்துக் கொண்டேயிருந்தன. "சிங்கமுகன் யாகாக்கினியில் சிரங்களை அறுத்து ஆகுதி செய்த பலனால் நான் அறுந்த சிரங்களும் கரங்களும் மீண்டும் மீண்டும் முளைக்கின்றன" என்று முருகப் பெருமான் எண்ணினார்.

சிங்கமுகாசுரன் ஆரவாரத்துடன் சிரித்தான். "முருகனே இப்போதாவது தெரிகிறதா? எத்தனை முறை கரங்களையும், சிரங்களையும் அறுத்தாய்? எத்தனை முறை அவை முளைக்கின்றன? இவையெல்லாம் உன் தந்தை கொடுத்த வரத்தின் பலம். கோடிமுறை அறுத்தாலும் அவை முளைத்துக்கொண்டேயிருக்கும். ஆகவே, என்னைக் கொல்ல உன்னால் முடியாது நீ புத்திசாலிப் பிள்ளையாயின் போர்க்களத்தினின்று உடனே புறப்பட்டுச் செல்" என்றான்.

"சிங்கமுகனே! இவ்வளவு நேரம் உன்னுடன் நான் போர் செய்ததாக நினைக்கிறாயா? எனது தந்தை உனக்கு அளித்த வரங்களின் பெருமையைத் தேவர்களுக்குக் காட்டினேன். அவ்வளவுதான். அப்பனே! இதுகாறும் விளையாடினேன்; இனிச் சமர் புரிவோம்" என்றார் முருகப் பெருமான்.

கந்தவேள் கூறியதைக்கேட்ட சிங்கமுகாசுரன் இடிபோல் ஆர்த்தான், மலைகளைப் பெயர்த்து வீசினான். அந்த மலைகளைத் தூள் தூளாக்கிய சுவாமி அவனது மார்பில் ஆயிரம் பாணங்களைச் செலுத்தினார். அதனால் அவனது மார்பு பிளந்தது.

ஷண்முகநாதன் கூறுவார்: "சிங்கமுகனே! இப்பொழுது ஒரு பாணம் விடுகிறேன். உன் சிரங்களும் கரங்களும் முளைக்கின்றனவா என்று பார்" என்று ஓர் அஸ்திரம் விடுத்தார். அந்த அஸ்திரம் ஒருதலையும் இரு கைகளும் தவிர ஏனைய சிரங்

களையும் கரங்களையும் ஒரே வீச்சில் அறுத்துத் தள்ளியது. சிங்கமுகாசுரனின் வெட்டுண்ட தலைகளும் கைகளும் மீண்டும் முளைக்க ஆரம்பித்ததைக் கண்ட பெருமான், "ஊம்" என்று ஒலி எழுப்ப, அவை அக்கணமே உள்ளே புகுந்து ஒளிந்தன.

"சிவபெருமான் தந்த வரத்தை மாற்றிவிட்டார் முருகன். அதை யார் எதிர்க்க முடியும்? சிவன் வேறு; முருகன் வேறு அல்ல. இனி முருகன் நம்மைக் கொன்று விடுவார்" என்று முடிவு செய்து கொண்டான் சிங்கமுகன்.

"முருகா! நீ வேல் ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு என்னைக் கொல்ல நினைக்கிறாய். வேலைத் தவிர வேறு ஆயுதத்தினால் என்னைக் கொல்ல முடியுமா?" என்று கேட்டான் சிங்கமுகாசுரன். அவர் புல்லை ஏவினாலும் புவனம் முழுதும் அழிந்துவிடும் என்பதை மறந்து பேசினான்.

சுவாமியின் வலது கையில் குலிசாயுதம் இருந்தது. இடக் கையில் இருப்பது வேலாகிய சக்தியாயுதம். அந்தக் குலிசாயுதத்தைப் பிரயோகம் செய்தார். அவ்வாயுதம் விரைந்து சென்று புஜபல பராக்கிரமனும், அறிவாளியாயிருந்தும் அறிவை உறவுக்காக முறித்துக் கொண்டவனுமான சிங்கமுகாசுரனைப் பூப்பறிப்பது போல் லகுவாகக் கொன்றது. கங்கையில் நீராடி அசுர ரத்தத்தின் மாசுகளைக் களைந்து, கந்தன் கைக்குத் திரும்பி வந்தது.

பிரமாதி தேவர்கள் ஆரவாரம் செய்து ஆனந்தக் கூத்தாடினர்; பூ மழை பொழிந்தனர்.

சிங்கமுகாசுரன் இறக்கவில்லை. அவனை இறக்கச் செய்வது கருணாமூர்த்தியின் கருத்தல்ல. அவனைத் திருத்துவதே அவரது திருத்தொழில். சிங்கமுகாசுரன் சிம்ம வாகனமாகப் பராசக்திக்குத் தொண்டு செய்ய அனுப்பி வைத்தார் சுவாமி. தேவிக்கு என்றுமே தர்ம ஸ்வரூபமான சிம்ம வாகனமுண்டு. அதனுள் சிங்கமுகனும் ஐக்கியமாகி அம்பிகையின் திவ்விய ஸ்பரிசத்தைப் பெற்றான் என்பதே கருத்து. வதம் செய்தாலும் அது இதமாக முடிவதை நம் புராணங்களில்தான் காணலாம்.

முருகப் பெருமான் அனைவருக்கும் அருள்செய்து வீரவாகு தேவரோடும் பாசறை திரும்பிப் பொற் பீடத்தில் எழுந்தருளினார்.

சிங்கமுகாசுரன் அழிந்த செய்தி கேட்ட சூரபன்மன் அலமந்து போய்விட்டான். "ஆ! இரு சிறகுகளாயிருந்த தாரகன், சிங்கமுகன் இருவரையும் இழந்து சிறகொடிந்த பறவையாகி விட்டேனே! தந்தையும் தாயும் தமருமாய் இருந்த சிங்கமுகன் போய் விட்டபின் எனக்கு என்ன வாழ்வு வேண்டிக் கிடக்கிறது? இனி வெற்றிக்காக நான் போராட வேண்டியதில்லை. நானும் போர்க்களத்தில் மடிந்து உன்னைச் சேரவேதான் சண்டையிட வேண்டும்" என்று கூறிப் புலம்பினான். அருமை மகன் பானுகோபன் மாண்டபோது அலறிய தைவிட உணர்ச்சியுடன் தம்பிக்காகக் கதறினான்.

"பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னை யுளபொருளை யெல்லாம் பெறலாகும்
என்னை யுடையஇளங் கோவே இப்பிறப்பில்
உன்னை இனிப்பெறுவதுண்டோ உரையாயே"

ஒருவன் பெரு நிதியத்தை இழந்துவிட்டாலும் பிற்பாடு சம்பாதித்துக் கொள்ளலாம். குழந்தை ஒன்று தவறிவிட்டாலும் பகவான் கிருபை புரிந்தால் இன்னொரு குழந்தையைக் கொடுப்பார். மனைவி மறைந்தாலும் மறுமணம் செய்து கொள்ளலாம். ஆனால் தம்பியின் இழப்புக்கு இட்டு நிரப்ப எதுஉண்டு? சகோதர பாசத்தினால் சூரபன்மன்ஆயிரத்தெட்டு அண்டங்களும் அதிருமாறு கதறியழுதான்.

இனிக் கதறுவதற்கில்லை என்ற நிலையில், சுற்றமனைத்தையும் போரில காவு தந்த சூரபன்மன் தானும் குமரக் கடவுளுடன் சமரம் புரிவதற்கு எண்ணினான்.

ஆயிரங்கோடி ஒற்றர்களை அழைத்தான். "ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள சேனை யாவற்றையும் விரைவில் திரட்டிக்கொண்டு வாருங்கள்" என்று ஆணையிட்டான்.

13. சூரபன்மன் வதைப்படலம்

சூரபன்மனின் ஆணைப்படி ஒற்றர்கள் ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் சென்று சேனைகளைத் திரட்டிக் கொண்டு வந்தார்கள். அச் சேனைகள் உலகங்களெல்லாம் நடுங்க வந்து கூடின.

அச்சேனைகளின் பெருக்கம், முன்னொருகால் திருமால் பிரமனோடு பகை கொண்டு உலகிலுள்ள உயிர்களை உண்ண அவ்வுயிர்கள் பின்பு திருமாலுடைய உந்திக் கமலத்தின் வழியே தோன்றி வந்ததையும், ஐம்பெரும் பூதங்களும்உயிர்க் கூட்டங்களும் புவனங்களும் வேதாகமங்களும் பிறவும் தொடக்கப் படைப்புக் காலத்திலேயே சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளினின்றும் தோன்றி வந்ததையும் போன்றதாகும்.

முந்தை அண்டத்தின் நெறிதனில் முழங்கிருஞ்சேனை
வந்து வநதிவட் செறிவன விதியொடு மாருய்ச்,
சுந்த ரங்கெழு மாயன்இவ் வுலகுயிர் துய்ப்ப
உந்தி யின்வழி அங்கவை தோன்றுமா றொப்ப.

பூதம் யாவையும் உயிர்களும் புவனமுள் ளனவும்
பேதம் நீங்கிய சுருதியா கமங்களும் பிறவும்
ஆதி காலத்தின் அநாதியாம் எம்பிரான் அளப்பில்
பாத பங்கயத் துதிப்பவும் போன்றன பகரின்.

சூரபன்மன் சிவ பூஜை செய்து ஆகாரம் உண்டான். நீறணிந்து, நறுமணம் பூசிக்கொண்டு பெரும் பொருளைத் தானமாக அள்ளி வீசினன். பின் போர்க்கோலம் பூண்டு, முன் யாகத்தில் தோன்றிய பெரிய தரின்மீது ஏறிப்புறப்பட்டான். சிவப் படைக்கலம் முதலியவைகள் நிறைந்த ஆயிரம் கோடி தேவர்களும், சிங்க வாகனமும் இந்திர ஞாலத்தேரும் சூழ்ந்து வந்தன. பேரிகைகள் முழங்கின. எண்ணில்லாத சேனைகளுடன் சூரபன்மன் போர்க்களம் சேர்ந்தான். தமது இன்னலுக்கெல்லாம் காரணமான அவனைக் கண்ட இமைபவர் இரத்தக் கண்ணீர் வடிய அரற்றினர்கள். இந்திரன் தான் உற்ற அவமானங்களை யெல்லாம் எண்ணி வருந்தினன். நான்முகனும் அரக்கன் ஆணைக்குட்பட்டுத் தான் வாழ்ந்ததை

நினைந்து மனம் விம்மினர். வீரரும் பூதரும் வெய்துயிர்த்தார்கள்.

மாலும் அயனும், மகபதியும் கந்தவேளிடம் வந்து வணங்கி, சூரபன்மன் போர்க்களம் வந்துள்ள செய்தியைத் தெரிவித்தார்கள். கந்தப்பெருமான் கடைக்கண் நோக்க, வாயுதேவன் மனோவேகத் தேரைக் கொண்டுவந்து நிறுத்தினன். புத்தேளிர் பூமழை பொழிந்தனர்.

முருகனின் தலைமையில் முதன் முறையாக மகிழ்வுடன் போர்க்களம் எய்திய அமரர்கள் போர்க்களத்தை அடைந்ததும் எண்ணிறந்த அசுரர் படை கண்டு அயர்வு எய்தினர்.

வரத்தினிற் பெரியர் மாய வன்மையிற் பெரியர் மொய்ம்பின்
உரத்தினிற் பெரியர் வெம்போர் ஊக்கத்திற் பெரியர் எண்ணில்
சிரத்தினிற் பெரியர் சீற்றச் செய்கையிற் பெரியர் தாங்கும்
கரத்தினிற் பெரியர் யாரும் காலனிற் பெரியர் அம்மா.

"ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் உள்ள அவுண சேனைகள் அனைத்தும் இன்று வந்துவிட்டன. இவர்கள் கடல்களைப் பருகுவர், வடவைத் தீயினும் கொடியவர்; மேரு மலையைப் பந்தாடுவர்; சண்டமாருதத்தின் எதிரே பஞ்சுபோல் இவர்கள் முன் நாம் அழிவோம். எங்கும் அசுரர்களாயிருப்பதால் ஓடி ஒளிவதற்கும் இடமில்லை. இவர்களுடன் போர் புரிந்து அழிவது உறுதி" என்றே பூதவீரர்கள் எண்ணத் தொடங்கி விட்டனர். துன்பம் வந்தால்தான் தெய்வ நம்பிக்கைமிகவும் பெருகும்; அதேபோல் துன்ப காலத்தில்தான் அது மிகவும் தளரவும் செய்யும். பிற்பாடு துன்பம் தீர்ந்தபின் தேவர்களின் பக்தி முறுகி முதிர்வதற்கெனவே இப்போது சிறிது தளர்ச்சி கண்டது. முருகவேள் தம் தரப்பில் தலைமை தாங்குவதையும் அவர்கள் மறந்து அச்சத்துக்காட்பட்டனர்.

இந்திரன் நடுங்கிக் கொண்டே திருமாலிடம் வந்தான். "சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள அசுர வீரர்களுடன் ஆறுமுகக் கடவுள்மீது போர் செய்ய வந்து விட்டான். சூரனுடைய படைகளை அழிக்கவே ஊழிக்காலம்

சென்றுவிடும்; அவ்வாருயின் சூரன் மாள்வது என்று? நான் பொன்னுலகம் ஆள்வது என்று? என்று முறையிட்டான்.

ஆண்டகை முருகன் தன்மேல் ஆயிர இருநால் அண்டத்
தீண்டிய தானை யெல்லாம் இறுத்தன இவற்றி னேடு
மூண்டமர் இயற்றி வெல்ல ஊழிநாள் முடியும் என்ருல்
மாண்டிடு கின்ற தெங்ஙன் அவுணர்கள் மன்னன் மன்னே.

திருமால் முருகப் பெருமானின் பெருமையை இந்திர னுக்கு எடுத்துரைத்தார்.

காலமாய்க் காலம் இன்றிக் கருமமாய்க் கருமம் இன்றிக்
கோலமாய்க் கோலம் இன் றிக் குணங்களாய்க் குணங்கள் இன்றி
ஞாலமாய் ஞாலம் இன்றி அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு முகங்கொண் டுற்ருன்.

என்று பரமனின் புகழ் பாடினர்.

இந்திரனே! யாவையுமாய் அல்லையுமாய் என்றபடி காலங்களாகியும், அவை யின்றியும், தொழில்களாகியும், அவையின்றியும், உருவமாயும், குணங்களாயும், உலகமாயும் அவைகளைக் கடந்து அப்பாலாகி அவையன்றி நின்றும், அநாதிமூலமாய் நமக்கெல்லாம் தலைவராகிய சிவபெருமானே ஆறுமுகங்களைக் கொண்டு வந்தருளினர்.

“இந்திரனே! முன்னர் மேருமலையில் முருகவேள் மூவரும் தேவரும் உயிர்களும் தன்பாற்காட்டி ஒரு வடிவங் கொண் டதை நீ மறந்துவிட்டாய் போலும்! அக் குமாரக் கடவுள் பிரமனுகிப் படைப்பார்; என் உருவாகிக் காப்பார். ஈசன் போல் அழிப்பார். வேதங்களுக்கெல்லாம் எட்டாதவர் அவர். உருவாயும் குணங்களாயும், உலகமாயும் அவற்றைக் கடந்து அப்பாலாகியும் நிற்கும் மின் உருவம்போன்ற அவரது வடிவம் யாராலும் அவ்வளவு சுலபமாக அறிந்துகொள்ள முடியாது. அதனை விளக்கும் ஆற்றல் வேதங்களுக்கும் இல்லை.”

பொன்னுரு வமைந்த கஞ்சப் புங்கவ ணுகி நல்கும்
என்னுரு வாகிக் காக்கும் ஈசன்போல் இறுதி செய்யும்

மின்னுரு என்ன யார்க்கும் வெளிப்படை போலும் அன்னன்
தன்னுரு மறைக ளாலும் சாற்றுதற் கரிய தன்றே.

பெரிய கடல்போல் சூழ்ந்த பகைவர்களுடைய சேனைகளையெல்லாம் மிக விரைவில் அழித்தருளுவார், அவர் ஆயிரங் கோடி யண்டங்களிலுள்ள உயிர்களுக்கெல்லாந் தலைவர். நாம் செய்த மாதவப் பயனால் அவர் இங்கு போர் புரிய வந்திருக்கின்றார்.

பாயிருங் கடலிற் சூழ்ந்த பற்றலர் படையை எல்லாம்
ஏயென்னும் முன்னம் வீட்டும் சிறுவன்என் றெண்ணல் ஐய!
ஆயிரகோடி கொண்ட அண்டத்தின் உயிர்கட் கெல்லாம்
நாயகன் அவன்காண் நாம்செய் நல்வினைப் பயனால்
வந்தான்.

இந்திரனை 'ஐய' என்று அழைத்தாராம் நாராயணர். "தேவேந்திரா! சமுத்திரம் போல் உள்ள இந்தச் சைன்யங்கள் எல்லாம் முருகப் பெருமான் 'ஏ' என்று சொல்லும்போதே அழிந்துவிடும். அவர் இப்படைகளையெல்லாம் மிக விரைந்து அழிப்பார். அவர் திருவுளங் கொண்டால் புன்முறுவலால் அழிப்பார்; கோபத்தினால் கொல்வார்; திருவாக்கால் அழிப்பார்; பார்வையால் அழிப்பார். இது அவருக்கு ஒரு திருவிளையாடல், முருகப்பெருமானைக் குழந்தை என்று எண்ணாதே. அவருடைய வேற்படையால் சூரன் அழிவான். எம் பெருமான் கருணைக் கடல். நம்மீது கொண்ட அருட் கருணையினால் தான் அவர் சூரனுடன் போர் செய்ய வந்திருக்கிறார். ஆயிரங்கோடி அண்டங்களுக்கும் அவர் நாயகன். நாம் செய்த நற்பேற்றினால் அவர் நமக்குக் காட்சி தந்திருக்கிறார்."

சூரனே முதலோர் தம்மை இமைப்பினில் தொலைக்க
உன்னின்
முரலால் அடுவன்; கொண்ட முனிவினால் அடுவன்;
வாய்மைச்
சீரினால் அடுவன், நாட்டச் செய்கையால் அடுவன் என்றால்
நேரிலா முதல்வன் வன்மை யாவரே நிகழ்த்தற் பாலார்?

பூத சேனைகளுடன் போருக்கு எழுந்தருளியதும், இலக்கத் தொன்பது வீரர்கள் அருகில் காக்க நின்றதும், ஆயுதங்

களை ஏந்தி சூரபன்மனைக் கொல்லும் பொருட்டு வந்த சூழ்ச்சியும் ஆராய்ந்து பார்த்தால் வேத முதல்வராகிய முருகப்பெருமானுக்கு இத்தனையும் ஒரு திருவிளையாடலேயாகும்.

பாரிடர் சேனை யோடு படர்ந்ததும் இலக்கத் தொன்பான்
வீரர்கள் புடையில் போற்ற மேயதும் படைகள் பற்றிச்
சூரனை அடுவான் வந்த சூழ்ச்சியும் தூக்கின் மாதோ
ஆரண முதலா மேலோற் கனைத்தும்ஓர் ஆட லேகாண்.

"ஆகவே, தேவேந்திரா, கவலைப்படாதே. சூரஸம்ஹாரம் விரைவில் நடைபெறும். நீ பொன்னுலகம் பெறுவாய்," என்று திருமால் கூறினர்.

பூத வீரர்கள் அவுண வீரர்களுடன் பொருது புறந் தந்தார்கள். இலக்கத் தெண்மர் வலிமை இழந்து ஒய்ந்தார்கள். அதனைக் கண்ட வீரவாகுதேவர் தம் வில்லை வளைத்துக் கணை மழை பொழிந்தார். எனினும் அவுணப் படைவீரர்கள் அழியாததைக் கண்டு வருந்தி இளைத்துக் கந்தவேள் அருகிற் சென்றூர்.

அவுணப் படைவீரர்கள் ஆறுமுகக் கடவுளைச் சூழ்ந்து, தண்டு, சக்கரம், குலிசம், சூலம், வேல், கோடரி, பாசம், அம்பு முதலிய ஆயுதங்களையும் தெய்வாஸ்திரங்களையும் ஏவி ஆரவாரம் செய்தார்கள்;

பூத வீரர்கள் புறங்கொடுத்ததையும், இலக்கத் தெண்மர் வலிபிழந்து ஓய்ந்ததையும், வீரவாகு தேவர் வருந்தி நிற்பதையும், அவுணப்படை வீரர்கள் ஆரவாரம் செய்வதையும்கண்ட குமாரக் கடவுள் சிறுநகை புரிந்து வில்லைத் திருக்கரத்தில் ஏந்திக் கணை மழை பொழிந்தார். பூமியில் நின்ற அவுணவீரர்கள் அனைவரும் அழிந்தனர்.

போர் நடைபெறும் பூமியில் நுழைவதற்கு இடமின்றி வெளியே நெருங்கி நின்ற அவுணர்கள் சினந்து உட்புகுந்தனர். தேவர்கள் துதிக்கவும், வீரர்கள் அருகிற் சூழவும் குமாரக் கடவுள் அவுணர்களின் எதிரே எழுந்தருளினூர். மீண்டும் பெரும் போர் தொடங்கியது. முருகப் பெருமான் வாயுவைப் பார்த்து, "நாலா பக்கங்களிலும்

தேரைச் செலுத்து" என்று பணித்தார். வாயு அதனைக் கேட்டு வணங்கி அவுணர் நிற்குமிடந்தோறும் தேரைச் செலுத்தினர். அத்தேர் பூமியிலும், திசைகளிலும், வானத்திலும், கடல்களிலும் எங்கும் விரைந்து சென்றது. குமாரக் கடவுள் தம்மை நெருங்கி நிற்கும் அவுண சேனைகளின் மேல் ஆயிரங்கோடி கணைகளைச் செலுத்தினர். அண்டம் நிறைந்த அவுணர்கள் கந்தவேள் கணைமழையால் அழிந்தனர். பிண மலைகள் குவிந்து உதிர வெள்ளத்தில் பிணங்கள் மிதந்தன. அந்த உதிரத்தைக் குடித்தும், மாமிசத்தைத் தின்றும் ஜீரணமாகாமல் பேய்கள் கரணம் அடித்து விளையாடினவாம்.

குமாரக் கடவுளின் தேர் அவர் விடுக்கும் கணைகளைவிட விரைந்து சென்றது. தேரைச் செலுத்தும் வாயுவையும், கணைகளை விடுக்கும் குமாரக் கடவுளையும் அமரர் வியந்து பாராட்டித் துதித்தனர்.

இவ்வண்டத்தில் உள்ள அவுணர் படைகள் மட்டுமின்றி, மற்றைய அண்டங்களில் உள்ள அவுணசேனைகள் புறப்பட்டு வருவதைக் கண்ட குமாரக் கடவுள் மீண்டும் படைகள்வராதபடி அண்ட கோளகையின் வாயிலை அடைத்தார். தம் கணைகளினால் இறந்த அவுண வீரர்களின் பிண மலைகள் பாதாளத்திலும், கடலிலும், பூமியிலும்மிக உயர்ந்து நிற்பதைக் கண்டு தமது பன்னிரண்டு திருக்கண்களையும் கொடிய வடவாக்கினி போல் ஜொலிக்கச் செய்து உற்று நோக்க அவை வெந்து நீறாகி வெற்றிடமாயின. இரத்த வெள்ளமும் வறண்டது. மூவுலகங்களும் முன்போல் விளங்கின.

போர்க்களத்தில் நின்ற சூரபன்மன் முருகப்பெருமானின் இத்தகைய திவ்வியப் பெருஞ்சாதனைகளையும் அவற்றை அவர் திருவிளையாடலாகவே அநாயாசமாகப் புரியும் பாங்கினையும் கண்டான். தன் சேனைகளை அழித்த சேவலானை நேருக்கு நேர் எதிர்கொண்டு போர் புரியத் தானே முன் வந்தான்.

பெருமானின் தோற்றத்தையும் பன்னிரண்டு திருக்கரங்களையும் கண்டான் சூரபன்மன். அவற்றின் அழகு அந்த அவுணனை ஈர்க்கவில்லை. பெருமான் தமது கரங்களில் ஏந்திய ஆயுதங்களே அவனுக்கு முக்கியமாகத் தெரிந்தன. 'ஓகோ, தன்

வலிமையையும், வீரத்தையும் காட்டுகிருனே?'' என்றே சின முற்ருன் சூரன்.

மேரு மலை போன்ற வில்லை எடுத்துச் சூரபன்மன் நாணை ஏற்றினன். அதனைக் கண்ட பூத வீரர்கள் மலைகளையும், மரங்களையும், சூலங்களையும் சூரபன்மன் மீது எறிந்து போர் செய்தார்கள். சூரபன்மன் மழையெனப் பொழிந்த கணை களால் பூதப் படைகள் அழிந்தன. இலக்கத்தெண்மர் சூரபன்மனைச் சூழ்ந்து கணைகளைப் பொழிந்தனர். அக்கணை கள் சூரபன்மனின் உடலில் பட்டு அழிந்தன. இலக்கத்தெண் மர் புறங் கொடுத்து ஓடினர். வீரவாகுதேவர் சூரபன் மனின் தேரிற் பாய்ந்து சிவபெருமான் தந்த வாளாயு தத்தினுல் அவனுடைய வில்லை வெட்டினுர். கடுஞ் சினங் கொண்ட சூரபன்மன் இடியேறுபோல் அவர் மார்பில் அறைந்தான். உதிரம் பெருகச் சோர்ந்து கீழே விழுந்தார் வீரவாகுதேவர். அவரைத் தூக்கி ஆகாயத்தில் எறிந்தான். வானத்தில் சென்ற வீரவாகுதேவர் உணர்வு பெற்று விரை வில் மீண்டு வந்து முருகவேள் அருகிற் போய் நின்ருர்.

வீரவாகுதேவர் வெட்டிய வில்லைக் கீழே எறிந்த சூரபன்மன். வேருெரு பெரு வில்லை எடுத்து நாணொலி செய் தான். அதனைக் கண்ட கந்தவேள் தாமும் ஒரு மகா தனுசை எடுத்து வளைத்து டங்காரம் செய்தார். சூரபன்மன் இருபது இலட்சம் கணைகளைப் பொழிந் தான்.

குமாரக் கடவுள் எதிர்க் கணைகளை விடுத்து அவற்றை அநாயாசமாக அழித்தார்.

மேலும் மேலும் பாணங்களைக் குமாரக் கடவுள் மீது ஏவினுன் சூரபன்மன். என்னே அவனது அறிவின்மை! நெருப்பை அழிப்பதாக எண்ணிக் கொண்டு யாரேனும் அக்கினிக் கோளத்தில் விறகை எறிவாரா? சூரனின் பாணங்கள் பரமனை அடைந்ததும் நெருப்பை அடைந்த விறகு போல் அழிந்தன.. இவ்வாருக இருவரும் விடுக்கிற கணைகள் மண், விண், கடல், மலை முதலிய எங்கும் உலாவின. கந்தப் பெருமானும் சூரபன்மனும் போர் செய்வதைக் கண்ட

வீரலட்சுமி, "இவ்விருவருள் எவரிடம் செல்வது?" என்று ஐயுற்று நின்றாள்.

குமாரக் கடவுளின் கணைகளையெல்லாம் சூரபன்மன் அழித்தெறிந்தான். அவருடைய தேரில் கட்டிய கொடியை அறுத்து வீழ்த்தி வெற்றிச் சங்கை ஊதினான். கணைகளை விடுத்து அவருடைய திருமேனியை மறைத்தான். முருகவேள் மகிழ்ச்சியோடு அவனது புஜபல பராக்கிரமம் முழுவதும் வெளியாவதற்கு இடமளித்தார். இனி பொறுப்பதற்கில்லை என்ற நிலை தோன்றியவுடன் ஏழு பாணங்கள் விடுத்துக் கொடியை அறுத்துக் கடலில் இட்டார். அதனைக்கண்ட பானுகம்பன் என்ற பூதப்படைத் தலைவன் தனது ஆயிரம் வாய்களிலும் ஆயிரம் வெற்றிச் சங்குகளை வைத்து ஜயகோஷம் எழுப்பினான். பானுகம்பனின் சங்கொலியைக் கேட்டுத் திருமாலின் பாஞ்சசன்ய சங்கும் திடீரென்று முழங்கியது. மற்ற தேவர்களும் தத்தமது சங்குகளை ஊதி ஆர்த்தனர்.

அக்கினி தேவனிடம் அமரர்கள், "நமது குமாரக் கடவுளின் தேரில் கொடியில்லை. ஆதலால் நீ சென்று கொடியாயிருப்பாயாக" என்று ஏவினார்கள். தேவர்கள் பணித்தவாறு அக்கினி தேவன் கோழிக் கொடியாகி முருகப் பெருமான் திருத்தேரின் மீது ஏறி அண்டங்கள் வெடிபடக் கூவினான்.

ஏவ லோடும் எரிதழற் பண்ணவன்
வாவு குக்குட மாண்கொடி யாகியே
தேவ தேவன் திருநெடுந் தேர்மிசை
மேவி ஆர்த்தனன் அண்டம் வெடிபட.

இமையவர்களின் ஆரவார ஒலி கேட்டுச் சினந்த சூரபன்மன், தேவர்களை நோக்கி, "என் முன்னே வருவதற்குப் பயந்திருந்த தேவர்களே! உங்களுக்கு இத்துணை ஆணவமா? ஆரவாரமா? முதலில் உங்களைக் கொல்வேன்" என்று தேரை வானத்தில் செலுத்தினான். சூரபன்மன் தேரோடு விண்ணுலகத்தில் நின்று கோடானுகோடி பாணங்களைத் தேவர்கள் மீது செலுத்தினான். அதனால் தேவர்கள் புண்பட்டுச் சிந்தி ஓடினார்கள். அதனைக் கண்ட கந்தக்கடவுள் பூமியில் நின்ற

படியே எண்ணற்ற பாணங்களை விடுத்துச் சூரபன்மனின் கணைகளை அழித்தார். பின் வாயுவை நோக்கி, "நம்முடைய தேரை விரைந்து வானத்தில் செலுத்து" என்று பணித்தார். வாயு தேரைச் செலுத்திக் கொண்டு விண்ணுலகத்தில் சூரபன்மனுக்கு எதிரே கொண்டு போய் நிறுத்தினர். சூரபன்மனுக்குப் பயந்து சிதறி ஓடிய தேவர்களுக்குக் குமாரக் கடவுள் அபய ஹஸ்தம் தந்து அவுண மன்னனுடன் அற்புதப் போர் புரிந்தார். இருவருடைய தேர்களும் காற்றாடி போலவும் குயவனின் கைத் திகிரி போலவும் சரளமாகச் சுழன்றன. பாதாளத்திலும், கடல் நடுவிலும், அண்ட கடாகங்களிலும் சாரிகை வந்தன. அத்தேர்களின் ஒலியைக் கேட்டுத் தேவர்கள் வாடினர்கள். யட்சர்கள் மருண்டார்கள்; நாகர்கள் அலைந்தார்கள்; மலைகள் பிளந்தன; கடல்கள் வற்றின; பூதலம் நடுங்கிற்று; நட்சத்திரங்கள் உதிர்ந்தன; மேகங்கள் சிந்தின.

இறுதியில் தேரையும், குதிரைகளையும், பல ஆயுதங்களையும் இழந்த சூரபன்மன் கையிலேந்திய வில்லோடு பூமியை அடைந்தான். சுவாமியும் பூதலமுற்றார். மீண்டும் பயங்கரப் போர் நடந்தது.

வெற்றி தோல்வியில்லாமல் போர் நீடித்தது. சூரபன்மன் மாய யுத்தம் செய்ய எண்ணி விண்ணில் தோன்றினன். உடனே குமாரக் கடவுளும் அவனைப் பின்தொடர்ந்து வானத்தில் சென்று அவனை எதிர்த்தார். சூரபன்மன் மீண்டும் மண்ணில் தோன்றினன். முருகவேளும் பூமியில் வந்து போர் செய்தார். சூரபன்மன் அங்கிருந்து மறைந்து தன் வடிவை மறைத்து நன்னீர்க்கடல் நடுவில் தோன்றினன். எங்கும் எப்போதும் தங்கும் முருகவேள் அங்கும் தோன்றிப் போர் செய்தார். சூரபன்மன் அவ்விடத்திருந்தும் மறைந்து திக்கின் முடிவுக்குச் சென்றான். முருகக் கடவுள் தொடர்ந்து சென்று சமர் செய்தார். சூரன் பாதாளத்துக்குச் சென்றான். முருகவேளும் பாதாளத்தில் சென்று போர் செய்தார். சூரபன்மன் அங்கிருந்து மறைந்து மேரு மலையின் உச்சியில் தோன்றுவான்; மேக நடுவில் தோன்றுவான். முருக

வேலும் ஆங்காங்கு தொடர்ந்து சென்று போர் புரிந்தார். சூரபன்மன் தன்னுடைய இந்திரஞாலத் தேரை நினைத்து அழைத்து அதன் மீதேறி ஒரு கணப்பொழுதும் ஓரிடத்தில் நிற்காமல் சூறைக் காற்று போல் சுழன்று அண்ட கோளகையின் வாயிலை அடைந்தான். அங்கு சேனைகள் வராவண்ணம் முருகவேள் தம் கணைகளினால் வாயிலை அடைத்திருப்பதைக் கண்டு நகைத்தான். வில்லை வளைத்துப் பல கோடி கணைகளைச் செலுத்தி அண்ட கடாகத்தின் வாயிலை மூடியிருந்த தடைகளைத் துணித்தான். உடனே அப்பால் அண்டங்களில் நின்று கொண்டிருந்த நால்வகைச் சேனைகளும் ஆர்த்து வந்தன. அவை ஆயுதங்களை எறிந்து குமாரக் கடவுளைச் சூழ்ந்தன. குமரவேள் தீ எழும்படி சிறுநகை செய்தார். அந்தச் சேனைகள் யாவும் சாம்பலாயின. உடனே மற்றோர் அண்டத்துள்ள சேனைகள் வந்து கந்தவேளை எதிர்த்தன. அந்தச் சேனைகளை ஹுங்காரத்தாலும் பார்வையாலும் அழித்தார் எம்பெருமான். மீண்டும் மீண்டும் வேறு வேறு அண்டங்களிலுள்ள சேனைகள் வந்து கொண்டேயிருக்க, குமாரக் கடவுள் தமது திருக்கரத்திலுள்ள மழு, சூலம், சக்கரம், தண்டு, எழு, என்ற ஐந்து படைக்கலங்களை நோக்கி, "நீங்கள் விரைந்து சென்று நம்மைச் சூழ்ந்த அவுண சேனைகளைக் கொன்று வாருங்கள்" என்று கூறி விடுத்தார். அப் படைக்கலங்கள் பற்பல உருவங்களை எடுத்து ஆயிரத்தெழு அண்டங்களுக்கும் சென்று அங்குள்ள சேனைகள் யாவற்றையும் அழித்து மீண்டன.

பலகோடி அவுணர்களும் அழிந்ததைக்கண்ட சூரபன்மன் 'ஒரு கணப்பொழுதில் இவனைக் கொல்வேன்' என்று கூறி முன்னர்ச் சிவபெருமான் தந்த சக்கரப் படையை எடுத்து வழிபட்டு முருகவேள் மீது செலுத்தினான். முருகப் பெருமான் அதனை ஒரு திருக்கரம் நீட்டிப் பரிசுப்பொருளைப் பெறுவது போலப் பற்றினார்.

மனம் தளர்ந்தான் சூரபன்மன். உள்ளத்தை உறுதிப் படுத்திக் கொண்டு இந்திரஞாலத் தேரின்மீது ஏறினான். மாயையால் அளவற்ற உருவங்களை எடுத்துப் பாண மழை பொழிந்தான். குமாரக் கடவுள் ஞானாஸ்திரத்தை எடுத்து

விடுத்தார். அந்த அஸ்திரம் விரைந்து சென்று சூரமன்பனின் மாயைகளை யெல்லாம் அழித்தது. வலியிழந்த சூரபன்மன் தேரோடு மறைந்து போய்விட்டான். அவனுடன் எம்பெருமானும் மறைந்துபோனார். அண்டங்கள் எல்லாம் நிலை குலைந்தன. முருகக் கடவுளைக் காணாது அமரர்கள் தாய் தந்தையரை விட்டுப் பிரிந்த குழந்தைகள் போல் வாடி வருந்தினர். பிரமதேவர் முதலியோர் திருமாலிடம் சென்று, "சூரபன்மனைத் தொடர்ந்து சென்ற பெருமானின் நிலை யாதோ?" என்று முறையிட்டுக் கொண்டனர்.

ஓதி யாகியும் உணர்ந்தவர்க் குணரவும் ஒண்ணு
நீதி யாகியும் நிமலம தாகியே நிகழுஞ்
சோதி யாகியும் தொழுதிடும் எம்மனோர்க் கெல்லாம்
ஆதி யாகியும் நின்றவன் அறுமுகன் அன்றோ!

"தேவர்களே! அஞ்சாதீர்கள்! ஆதி பரம்பொருளாக இருக்கிற எம்பெருமானுக்கா ஆபத்து வரும்? சூரபன்மன் வலிமையை மதித்து அச்சப்படாதீர்கள். ஆறுமுகக் கடவுளாக விளங்குபவர் ஆதிமுதல்வர் என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள்" என்று கூறினார் திருமால்.

திருமால் கூறியதைக் கேட்டுத் தேவர்கள் மனத்தெளிவும் மகிழ்ச்சியும் பெற்றனர்.

எல்லா அண்டங்களுக்கும் ஓடிய சூரபன்மன் அங்கெல்லாம் முருகவேளுடன் போர் செய்து கடைசியில் மகேந்திர புரிக்கே திரும்பினான். குமாரக் கடவுளும் திரும்பி வந்து தேவர்கள் நெஞ்சில் பால் வார்த்தார். விடாது தொடர்ந்து சென்றார். அங்கிருந்த அவுண வீரர்கள் முருகவேளைச் சூழ்ந்து ஆரவாரம் செய்தனர். ஆறுமுகக் கடவுள் அந்தச் சேனைகளை நோக்கித் திருப் புன்முறுவல் செய்தார். அந்தப் புன்முறுவலால் சூரபன்மன் சேனை முழுவதும் அழிந்தது. அவுண சேனைகள் எல்லாம் அழிந்ததைக்கண்ட தேவர்கள் மகிழ்ந்து பூமாரி பொழிந்தார்கள்.

அவுண சேனைகள் எல்லாம் அழிந்து தனித்து நின்றான் சூரபன்மன்.

அவுண சேனையனைத்தையும் இழந்த சூரன் ஆற்றாமை தாங்கொணாது 'அம்மா' என்று தன் தாயான மாயையை அழைத்தான். அவன் தாய் மாயா தேவி உடனே அங்கு தோன்றினாள்.

"தாயே, நான் தனித்து நிற்கிறேன். நீதான் எனக்கு உதவி புரியவேண்டும்" என்று அவளை வேண்டிக் கொண்டான் சூரபன்மன்.

"மகனே! எல்லோரும் அழிந்தபின் கூட உன் மனம் தெளிவு பெறவில்லையே? தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்க விரும்பவில்லை. முழு முதற் கடவுளாகிய முருகவேளைப் பாலகன் என்று எண்ணிவிட்டாய், அவரை எதிர்க்கக் கூடாது" என்று மாயை புத்திமதி கூறினாள். மாயையே ஞானத்தைப் பேசினாள் என்பது விந்தையினும் விந்தையன்றோ? ஆனால் இதற்கும் மசியவில்லை அழிவை நாடிவிட்ட அவுணனின் அறிவு.

"அம்மா! நீ எனக்கு உபதேசம் செய்ய வேண்டியதில்லை. உதவிதான் செய்யவேண்டும். உதவப் போகிறாயா இல்லையா?" என்று கோபத்துடன் கேட்டான் சூரபன்மன்.

"என்ன உதவி செய்ய வேண்டும்?" என்று கேட்டாள் மாயை.

"இறந்தவர்கள் எல்லோரும் மீண்டும் உயிர் பெற்று எழுவதற்கு வழி சொல்" என்று கேட்டான் சூரபன்மன்.

மாயையும் அதற்கு வழி கூறலானாள். "மகனே, ஏழு கடல்களுக்கப்பால் அமுத சீத மந்தர கூடம் என்று ஒரு மலை இருக்கிறது. அதனை இங்கே கொண்டு வந்தால் இறந்தவர்கள் எல்லோரும் உயிர் பெற்று எழுவார்கள்," என்று கூறி மறைந்தாள் மாயை.

சூரபன்மன் இந்திரஞாலத் தேரினின்றும் இறங்கிச் சிங்க வாகனத்தில் ஏறிக்கொண்டான். இந்திர ஞாலத் தேரை நோக்கி, "நீ ஏழு கடல்களுக்கும் அப்பால் உள்ள அமுதசீத மந்தர மலையை இங்கே கொண்டு வா" என்று ஏவினான்.

இந்திரஞாலத் தேர் ஏழு கடல்களையும் கடந்து சென்று அமுதசீத மந்தர மலையைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்தது, அந்த மலையின் காற்றுப் பட்டவுடன் இறந்த அசுரர்கள் அனைவரும் உயிர் பெற்று எழுந்தனர். அசுரத் தரப்பில் இறந்து வீழ்ந்த குதிரைகளும், யானைகளும் எழுந்தன, சிங்கங்கள் எழுந்தன, சிங்கமுகாசுரன் எழுந்தான், பானுகோபன் எழுந்தான், அக்கினிமுகன் எழுந்தான், வச்சிரவாகு எழுந்தான். தருமகோபன் எழுந்தான், அதிசூரன், அசுரேந்திரன் ஆகியோரும், மூவாயிரவரும் மற்றையோரும் உயிர் பெற்று எழுந்தனர்.

சூரபன்மன் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தான், இவ்வளவு காலப்போரில் அவன் இழந்த தவ்வளவையும் அல்லவா மீண்டும் பெற்றுவிட்டான்? 'இனி உய்வு இல்லை' என்று தேவர்கள் ஏங்கினார்கள். பூத வீரர்கள் கலங்கினார்கள்,

முருகவேள் மட்டும் முறுவல் பூத்தார், ஏனைய பூதப் படையினரும் தேவரும் தாங்கள் மகத்தான போர் புரிந்து தமது திறத்தைக் கொண்டே இவ்வளவு நாள் போரில் அவுணர்களைக் கொன்றதாகச் செருக்குற்றிருக்கக் கூடும் அல்லவா? அத்தகைய செருக்கைக் களைய வேண்டுமென்றே இன்று இறந்த அசுரர் யாவரும் உயிர் பெற்றுத் தனி யொருவரான தம்மாலேயே வெல்லப் படுவதற்காக வந்துற்றனர் என்று கருதினார் கந்தசுவாமி. சர்வ சம்ஹார அஸ்திரத்தை எடுத்தார்,

திருச்சேய்ஞலூர் என்பது சண்டேசுவர நாயனார் அவதரித்த தலம். அங்கே முருகப் பெருமான் சிவபெருமானைப் பூஜை செய்தபோது சிவபெருமான் இந்த சர்வ சம்ஹார அஸ்திரத்தை அளித்தார். அதனை இப்போது எடுத்து விடுத்தார் சுவாமி. அந்த அஸ்திரம் விரிசடைக் கடவுள் திரிபுர மெரித்தது போல் யாவரையும் கண நேரத்தில் ஒருங்கே அழித்தது, மாண்டவர்கள் அனைவரும் எவ்வளவு வேகமாக உயிர் பெற்று எழுந்தார்களோ, அவ்வளவு வேகமாக அழிந்து போனார்கள். இந்திரஞாலத் தேரின் மீதிருந்த அமுதசீத மந்தர கூடமும் தூளாகியது, இனி அவர்களைப் பிழைப்பிக்க வழி ஏது?

கனவிலும் கருதவொண்ணாத நிதியம் கிடைத்த பின் கிடைத்த வேகத்திலேயே கைவிட்டுச் சென்றது போல் சூரபன்மன் சோர்ந்தான். உற்றம், சுற்றம் அனைத்தும் இழந்த சூரபன்மன் முருகவேளும் தன்னைப் போல் தனித்திருக்க வேண்டும் என்று கருதினன். தனித்திருக்கும் ஏகநாயகன் தான் ஐயன் என்பதை அவன் எப்படி அறிவான்?

இந்திரஞாலத் தேரை நோக்கிய சூரன், "நீ பூதரையும் வீரரையும் கவர்ந்து சென்று அண்ட கோளகையின் உச்சியில் அடைத்து வைத்துக் கொண்டிரு" என்று கட்டளை இட்டான். இந்திரஞாலத் தேர் வீரவாகு முதலிய வீரர்களையும், இலக்கத் தொன்பதின்மரையும், இரண்டாயிரம் பூத வெள்ளங் களையும் மயக்கி வாரிக்கொண்டு அண்ட கோளகைக்குச் சென்று சூரபன்மன் கட்டளைப்படி அங்கேயே அடைத்து வைத்துக் கொண்டிருந்தது. முருகவேள் தனித்து நின்றார்.

(முருகவேளுடன் தன்னந்தனியாக நிற்கும் மகா அநுபவத்தை அருணகிரிநாதர் இன்னம் ஒருவருக்கு இசைக்க இயலாது என்பார். சூரனுந்தான் சுவாமியுடன் தன்னந் தனியாக நின்றான். ஆனால் உணர்வில் என்ன மாறுபாடு?)

முருகனைத் தனித்து நிற்கச் செய்த இந்திரஞாலத் தேரின் வலிமையைக் கண்டு சூரன் வியந்தான்; மகிழ்ந்தான். அந்த வியப்பையும், மகிழ்ச்சியையும் வினாடியில் தவிடுபொடி செய்ய வேலாயுதப் பெருமான் அறிய மாட்டாரா? கணையை எடுத்தார் சுவாமி; வில்லிற் பூட்டி விடுத்தார். அப்படை வேற்படை போன்று ஒளிவீசி எல்லா உலகங்களையும் கடந்து சென்று இந்திரஞாலத் தேரை அடைந்து அதன் ஆற்றலை அழித்தது. பிறகு அத்தேரைப் பூமிக்குக் கொண்டுவந்து பெருமான் முன்னிலையில் நிறுத்தியது. அதனின்று வீரவாகு தேவரும் மற்ற வீரரும் பூதரும் மண்ணிற் குதித்து முருகப் பெருமானை வணங்கினார்கள். இந்திரஞாலத் தேரை நோக்கிய குமாரக் கடவுள், "இனி சூரபன்மனிடம் செல்லாதே; இங்கேயே நில்" என்று பணித்தார். அந்த ஆணையின் வண்ணமே தேர் பெருமான் அருகில் நின்றுவிட்டது.

தேர் போய் விட்டாலும் சூரனுக்கு ஒரு சிங்க வாகனம் உண்டு. அதன் மீது ஏறிச் சினத்துடன் கந்தவேள்மீது கணை களைப் பொழிந்தான். முருகப் பெருமானும் சினத்துடன் கணைகளை விடுத்துச் சூரபன்மன் விடுத்த கணைகளை யெல்லாம் அழித்தார். சூரபன்மன் எம்பெருமானின் தேர்ப் பாகனாகிய வாயுவின் மீது பாணங்களை விடுத்தான். வாயுவின் உடல் எல்லாம் புண்பட்டது. வாயு தேவன் வருந்திப் புலம்பித் தேர்க் குதிரைகளை ஓட்டாமலிருந்தான். எம்பெருமான் உடனே ஆயிரம் கணைகளைச் செலுத்திச் சூரபன்மனின் வில்லைத் துண்டித்தார். சூரன் முன்பு சிவபெருமான் அளித் திருந்த முத்தலைச்சூலத்தை எடுத்துக்கொண்டு முருகவேளை நெருங்கினான். அவனது வாகனமாகிய சிங்கம் சீறிப் பாய்ந்து முருகவேளின் தேர்க் குதிரைகளை அடித்துப் புண்படுத்தியது. சூரபன்மன் முத்தலைச் சூலத்தைச் சுழற்றிக் கந்தவேள் மீது வீசினான். மின்போன்று ஒளி வீசிய அச்சூலம் ஆகாய வழியாகச் சென்றது. செல்லும் பொழுது தீ சிந்தியது; இடிகள் முழக்கமிட்டன. அந்தச் சூலத்தின் மீது பெருமான் ஆயிரம் கணைகளை விடுத்தார். அக்கணைகளை யெல்லாம் அழித்த சூலம் முருகப் பெருமானை நெருங்கியது. ஆறுமுகக் கடவுள் தம்முடைய திருக் கரத்திலிருக்கும் குலிசத்தை நோக்கி, "சூரபன்மன் விடுத்த சூலத்தைப் பிடித்துக் கொண்டு வா" என்று கட்டளையிட்டார். குலிசம் அனல் மழை பொழிந்து சென்று சூலத்தின் மூன்று தலைகளையும் கவ்விக்கொண்டு அதனைக் கைதியாக்கி இழுத்து வந்தது. செவ்வேள் இரண்டாயிரம் கணைகளை விடுத்துச்சூரபன்மனின் வாகனமாகிய சிங்கத்தைச் சம்ஹாரம் செய்தருளினார்.

சூலமும் சிங்கமும் அழிந்ததைக் கண்ட சூரபன்மன் ஊழித்தீப்போல் வெகுண்டான். மாயத்தினால் ஒரு பெரிய சக்கரவாகப் பறவை வடிவத்தை எடுத்து உலகமெல்லாம் அஞ்சும்படி சிறகுகளை வீசி ஆகாயத்திலே பறந்தான்.

(சக்கரவாகப் பறவை ஆகாயத்திலேயே பிறப்பது; பூலோகத்தில் அது ஒருபோதும் தங்காது. சூரியனின்வெப்பம் தான் அதற்கு ஆகாரம். சக்கரவாகப் பறவை ஆகாயத்தில் பறக்கும்போது முட்டையிடும். அந்த முட்டை வெப்பத்

தினால் பூமியை நோக்கி வரும். அவ்வாறு வரும்போதே முட்டை வெடித்துக் குஞ்சு வெளியே வந்ததும் பூமிக்கு வராமல் தாய் தந்தையரிடமே ஆகாயத்துக்குப் பறந்து விடும்.)

அந்தப் பறவையின் உருவத்தைத்தான் எடுத்துக் கொண்டான் சூரபன்மன். வானத்தில் பறந்தான். தன் சிறகுகளில் கதிரவன் ஒளியையும் மறைத்துத் திரிந்தான். கடல்போல் திரண்டிருந்த பூத சேனைகளை உருந்து சிறகுகளால், அடித்தான். மூக்கினால் கொத்திச் சிதைய விழுங்கினான். முருகப் பெருமானின் தேரைச் சூழ்ந்து கொண்டு தேர்ப்பாகனை அடித்தான். தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளைக் கொத்தினான்; பூதப் படைத் தலைவர்களைப் பிடித்துக் கொண்டான். இவ்வாறாக, சூரபன்மன் ஆகாயத்தில் பறந்து திரிந்து அமர்க்களம் செய்துகொண்டிருந்தான்.

சக்கரவாகப் பறவை வடிவங் கொண்ட சூரபன்மன் மீது எம்பெருமான் பலகோடி கணைகளை விடுத்தார். அவற்றை யெல்லாம் சிறகுகளாலும், அலகாலும், காலாலும் அடித்து முறித்தான் சூரபன்மன்.

'பட்சி உருவங் கொண்டவனைத் தேரோடு தொடர்ந்து செல்வது முறையன்று, என்று திருவுளங் கொண்ட முருக வேள் இந்திரனை நோக்கினார். ஆண்டவனது அருட் குறிப்பை யுணர்ந்த இந்திரன், நீண்ட தோகையுடைய மயில் உருவங் கொண்டு வந்து வணங்கித் துதித்தான். "பறவை வடிவங் கொண்ட சூரபன்மன் செல்லும் இடங்களுக்கெல்லாம் சென்று போர் செய்து வெல்ல அடியேன் மீது எழுந்தருள வேண்டும்", என்று வேண்டிக் கொண்டான். ஆறுமுகப் பெருமான் தேரினின்றும் இறங்கி இந்திரனாகிய மயில் மீது ஏறிக்கொண்டு சூரபன்மனாகிய சக்கரவாகப் பறவையைத் தொடர்ந்து சென்றார்.

சுவாமியின் நியாய உணர்வைத்தான் பாருங்கள். சிறகினால் மலைகளையும் அசைக்கும் ஆற்றல் பெற்ற சூரபன்மன், "என்னைக் கண்டு பயந்த இந்திரன் மயில் வடிவங் கொண்டு இந்தக் குழந்தையை அழைத்து வந்திருக்கிறானே;

குழந்தையைக் கொல்வதற்கு முன் மயிலைக் கொல்ல வேண்டும்'' என்று எண்ணி இந்திரனைத் தாக்கினான். மயிலும் சக்கரவாகப் பறவையும் ஒன்றையொன்று எதிர்த்துப் போர் செயதன. சக்கரவாகப் பறவை மயிலின் தலையில் உள்ள கொண்டையைப் பறித்து முகத்தைக் கொத்தியது. "சுவாமி சுவாமி!'' என்று அலறினான் இந்திரன். அதனைக் கண்ட ஆறுமுகக் கடவுள் சினந்தார். கறங்குபோல் சுழன்று திரியும் சக்கரவாகப் பறவையைத் தொடர்ந்து சென்று, மார்பிலும், முகத்திலும், கால்களிலும் பாணங்களைப் பொழிந்து உடலைத் துளைத்தார். சக்கரவாகம் பதைத்துச் சிறகுகளை உதறியது; எண்டிசைகளிலும் கோபத்துடன் திரிந்தது. முருகப் பெருமான் அந்த இடங்களுக்கும் தொடர்ந்து சென்றார். முருகப் பெருமானுக்கு ஈடுகொடுக்கச் சக்கரவாகத்தினால் இயலவில்லை. வலிமை இழந்த அப்பறவை இறுதி முயற்சியாக முருகப் பெருமானின் கையில் உள்ள வில்லை முறிகக வேண்டும் என்ற எண்ணத்துடன் நெருங்கி வந்தது. வேலாயுதக் கடவுள் வாளை வீசிச் சக்கரவாகத்தை இரு துண்டுகளாக வெட்டி வீழ்த்தினார். வானவர்கள் வாழ்த்தினார்கள்; மகிழ்ந்து கூத்தாடினார்கள்.

சக்கரவாகப் பறவை வெட்டி விழ்த்தப்பட்டதும், சூரபன்மன் அண்ட முகட்டை உரசும் உயரத்துக்கு மண் வடிவாக உருமாறினான். ஏழு கடல்களையும் வற்றச் செய்து கதிரவன் செல்லும் வழியையும் மறைத்தான். திக்குகளையெல்லாம் மூடினான். முருகக் கடவுள் ஏழு பாணங்களை விடுத்தார். அவை ஏழு கடல்களாகச் சென்று சூரபன்மனின் அம்மாய உருவை அழித்துக் கடல் வடிவம் மாறி முருகக் கடவுளை வந்தடைந்தன. சூரபன்மன் தண்ணீர் வடிவாகி விண்ணுலகத்தைத் தொடும் வண்ணம் எழுந்து நின்றான். முருகப் பெருமான் நூறு பாணங்களை விடுத்தார். அவை ஊழித் தீயின் வடிவம் எடுத்து நீரை உண்டு திரும்பின. சூரபன்மன் அனல் வடிவமாக அண்டங்களெல்லாம் தீயுமாறு வந்தான். எம்பெருமான் ஆயிரம் கணைகளை விடுத்தார். அவை பெருங்காற்று வடிவங் கொண்டு சூரபன்மனின் மாய அக்னியை அழித்து எம்பெருமானிடம் திரும்பி வந்து

சேர்ந்தன. சூரபன்மன் சூறவளியாகி மலைகள் பஞ்சுபோல் பறக்கும்படி ஆர்த்து நின்றான். ஆறுமுகக் கடவுள் இலட்சம் பாணங்களை விடுத்தார். அவை பாம்பு வடிவாய்ச் சென்று சூரனின் புது வடிவை விழுங்கி மீண்டன. (பாம்புகள் காற்றைப் புசிக்கும் என்பது ஒரு நம்பிக்கை.)

சூரபன்மன் நான்கு நாட்கள் வரையும் தொலையாது நின்று பலப் பல உருவங்களில் முருகப் பெருமானுடன் போர் புரிந்தான். மும்மூர்த்திகள் போல் வந்தான்; இந்திரன் போன்று வந்தான். இயமனைப் போன்று வந்தான். பேயைப் போன்று வந்தான்; கடல் போன்று வந்தான்; முகில் போன்று வந்தான்; இடி போன்று வந்தான்; நாகங்களாக வந்தான்; நஞ்சுபோல் வந்தான்; மலைபோல் வந்தான்; சூரியனைப் போன்று வந்தான்; திக்கஜங்கள் போன்று வந்தான்; சிங்கம் போன்று வந்தான்; தாரகாசுரனைப் போன்று வந்தான்; பானுகோபனைப்போல் வந்தான்; அக்கினிமுகாசுரனைப் போன்று வந்தான்; தருமகோபனைப் போல வந்தான்; இவ்வாறாக மாயமாகப் பற்பல உருவங்களை யெடுத்த சூரபன்மன் யாண்டும் நிறைந்த முருகப் பெருமானைச் சூழ்ந்தான். இவ்வற்புதத்தைக் கண்ட தேவர்கள் மூலைக்கொருவராய் அஞ்சியோடினார்கள். "பாணங்களே! நீங்கள் சென்று சூரபன்மன் மாயங்கள் அனைத்தையும் அழித்து வாருங்கள்" என்று ஆறுமுகக் கடவுள் ஆயிரங் கோடி பாணங்களை விடுத்தார். அவை சூரபன்மன் எடுத்த ஒவ்வொரு வடிவத்துக்கும் தனித்தனியே ஏழு மடங்கு வடிவம் எடுத்து மாய வேஷங்களை யெல்லாம் அடியோடு அழித்து மீண்டன.

மாய வேஷங்கள் யாவும் தீர்ந்தபின் சூரபன்மன் போர்க் களத்தில் பெருங்கோபத்துடன் தனித்து நின்றான்.

முருகப் பெருமான் அவனை நோக்கி, விசுவரூபத்தைச் சூரபன்மனுக்குக் காட்டியருளினார். அதனைப் பார்ப்பதற் குரிய ஞானக்கண்ணையும் சூரனுக்குத் தந்தார்.

வெம்புயல் இடையில் தோன்றி
விளிந்திடும் மின்னு வென்ன
இம்பரில் எமது முன்னம்
எல்லையில் உருவங் கொண்டாய்
அம்பினில் அவற்றை யெல்லாம்
அட்டனம் அழிவிலாத
நம்பெரு வடிவம் கொள்வம்
நன்றுகண் டிடுதி யென்றான்.

மேகத்தின் நடுவில் தோன்றி மறைகின்ற வெம்மையான மின்னலைப்போல், இங்கு எமது முன் நீ பலப் பல வடிவங்களைக் கொண்டனை; நாம் அம்பினால் அவற்றையெல்லாம் அழித்துவிட்டோம். இனி நமது அழிவிலாத திருப்பெரு வடிவத்தைக் கொள்வோம்; நன்கு பார்ப்பாயாக! என்று கூறினார்.

முருகப் பெருமான் விசுவரூபம் எடுத்தபோது, கடல், உலகம், திசை, அண்டம், தேவர்கள், உயிர்கள் யாவும் அவரது திருமேனியில் அடங்கின. அந்தத் திருமேனியின் உள்ளடியில் மலைகளும், புறவடியில் கடல்களும், பாத விரல்களில் இடியும், நட்சத்திரங்களும், சிகரங்களும் அடங்கியிருந்தன. பரட்டில் வருணனும், குபேரனும், நிருதி அரக்கர்களும், கணைக்கால்களில் முனிவர்களும் சிந்தாமணி முதலிய மணிகளும் அடங்கியிருந்தன. முழந்தாளில் வித்தியாதரர் முதலியவர்களும், தொடையில் இந்திரனும், சயந்தனும், தொடை மூலத்தில் இயமனும், காலனும் அடங்கியிருந்தனர். அரையின் முற்பக்கத்தில் அசுரர்களும், விலாப்புறங்களில் தேவர்களும், மூலாதாரத்தில் நாகர்களும், குறியில் அமிர்தமும், நாபியில் உயிர் வர்க்கங்களும், மார்பில் சர்வ கலைகளும் உபவீதத்தில் ஞானமும் அடங்கியிருந்ததைக் கண்டான் சூரபன்மன். உரோமத்தில் அண்டங்களும், அங்கையில் சகல போகங்களும் அடங்கியிருந்தன. தோள்களில் திருமாலும். பிரமனும் அடங்கினர். கைவிரல்களில் தெய்வப் பெண்களும், கண்டத்தில் ஒலியின் கூட்டங்களும் அக்கினியும், வாயில் வேதங்களும்; பற்களில் அட்சரங்களும், நாவில் சிவாகமங்களும், உதட்டில் ஏழு கோடி மகா

மந்திரங்களும், நாசியில் வாயுவும், கண்களில் சூரிய சந்திரர்களும், காதுகளில் திக்குகளும் அடங்கியிருந்தன. நெற்றியில் பிரணவமும், தலையில் பரசிவமும் பொருந்தித் தோன்றியதும், அநந்த கோடி சூரியர்கள் ஒருங்கே கூடினாற் போல் பேரொளியுடன் கூடியதுமான ஒப்பற்ற விசுவ ரூபத்தைக் கண்டதும் சூரபன்மனின் அறிவு தெளிந்தது. அவன் பெரும் வியப்புற்றான்.

முருகப் பெருமானின் விசுவரூபத்தைக் கண்ட தேவர்கள், அத் திருவுருவத்தைக் கண்டு அஞ்சி நடுங்கினார்கள். ஆறுமுகக் கடவுள் தமது திருக்கரத்தை அசைத்து, "அஞ்ச வேண்டாம்; அஞ்ச வேண்டாம்" என்று திருவருள் புரிந்தார்.

செஞ்சுடர் அநந்த கோடி
செறிந்தொருங் குதித்த தென்ன
விஞ்சிய கதிர்கான் றுள்ள
வியன்பெரு வடிவை நோக்கி
நெஞ்சகந் துளங்கி விண்ணோர்
நின்றனர் நிமல மூர்த்தி
அஞ்சல்மின் அஞ்சல்மின் என்
றருளினன் அமைத்த கையான்.

அண்டர்கள் யாரும் எந்தை
அருள்முறை வினவி யுள்ளம்
உண்டிடும் விதிர்ப்பு நீங்கி
உவகையால் தொழுது நின்றார்
தண்டுளி வரைய தென்னத்
தணப்பறச் சிதறும் ஊழிக்
கொண்டலின் தோற்றம் நோக்கிக்
குலவுறு மஞ்ஞையே போல்.

தேவர்கள் யாவரும் எமது பரம பிதாவின் அருள் வாக்கைக் கேட்டு நடுக்கம் நீங்கி மலைபோன்ற பெரிய துளிகளை இடையறாது சொரியும் ஊழிக்காலத்து மேகத்தின் வரவை நோக்கி மகிழும் மயில்களைப்போல் மகிழ்ச்சியுற்று வணங்கி நின்றார்கள்.

விசுவருபத்தைக் கண்டு வியப்படைந்த சூரபன்மனுக்கு எம்பெருமான் சிறிது நல்லுணர்ச்சி தந்தருளினர். நல்லுணர்வு பெற்ற சூரபன்மன்.

எண்ணிலா அவுணர் தானை
யாவையும் இமைப்பில் சென்று
விண்ணுலா அண்டந் தோறும்
வியன்சமர் ஆற்றி என்பால்
நண்ணினர் தம்மை எல்லாம்
நாமறத் தடிந்து வீட்டி
வண்ணமான் தேரும் மீண்டும்
வராநெறி தடுத்தான் மன்னே.

கணக்கில்லாத அசுர சேனைகள் முழுவதையும் இவர் இமைப்பொழுதில் அழித்து ஆகாயத்தில் உலாவுகின்ற அண்டங்கள் தோறும் வந்து வந்து என்னுடன் பெரிய போரைச் செய்து என்னுடன் சேர்ந்த வீரர்களை யெல்லாம் முற்றும் அழித்து, இந்திர ஞாலத் தேரையும் என்பால் மீண்டும் வராமல் தடுத்துவிட்டனர்.

திண்டிற லுடையேன் தூண்டும்
திறற்படை யாவும் நீக்கிக்
கொண்டவென் மாய முற்றும்
கொடுஞ்சரம் அதனுல் மாற்றி
அண்டமும் புவனம் யாவும்
அமரரும் பிறவுந் தன்னுல்
கண்டிடும் வடிவம் ஒன்று
காட்டியென கண்முன் நின்ருன்.

மிகுந்த வலிமையுடைய யான் விடுத்த ஆற்றலுடைய படைக்கலங்கள் அனைத்தையும் அழித்து, நான் கொண்ட மாய வடிவங்களை யெல்லாம் கொடிய கணையால் மாற்றி, எல்லா அண்டங்களும் புவனங்களும் தேவர்களும் பிறவும் தம்மிடத்தேயே ஒடுங்கித் தோன்றுகின்ற ஒரு பெரு வடிவினைக் காட்டி இவர் என் கண்முன் நிற்கின்ருர் என்று நினைத்தான்.

'முருகனைப் பாலன் என்று இகழ்ந்தேனே' என நொந்து கொண்டான். முருகப் பெருமான், தேவர்க்கும் மூவர்க்கும் முதலாய் நின்ற முழு முதற் பொருள் என்ற உணர்ச்சி உண்டாகியது.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன்என் றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்தி
லேனால்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ?

தூதுவனாக அன்று வந்த வீரவாகு என்பவர் ஒப்பற்ற வேலாயுதமேந்திய இவரை வேண்டுதல் வேண்டாமையிலாத பராபர முதல்வன் என்று கூறினார். அவர் கூறியவைகளை நான் உறுதி என்று அப்பொழுது கொண்டிலேன்; இப்பொழுது இவரே யாவர்க்குந் தலைவர் என்பது உண்மை என்று தெளிந்தான்.

ஒற்றென முன்னம் வந்தோன்
ஒருதனி வேலோன் தன்னைப்
பற்றிகல் இன்றி நின்ற
பராபர முதல்வன் என்றே
சொற்றனன் சொற்ற எல்லாம்
துணிபெனக் கொண்டி லேனால்
இற்றைஇப் பொழுதில் ஈசன்
இவன்எனுந் தன்மை கண்டேன்.

மீயுயர் வடிவங் கொண்டு மேவிய தூதன் சொற்ற
வாய்மைகள் சரதம் அம்மா மற்றியான் பெற்ற அண்டம்
ஆயவை முழுதும் மற்றும் அறுமுகம் படைத்த செம்மல்
தூயபொற் பதரோமத்தில் தோன்றியே நிற்கும் அன்றே.

மிக உயர்ந்த வடிவத்தைக் கொண்டு நம்மிடத்து வந்த அத் தூதுவன் சொன்ன சொற்கள் உண்மையானவை; நான் பெற்றுக்கொண்ட அண்டங்கள் யாவும் ஆறுமுகப் பெருமானுடைய தூய அழகிய திருவடியிலுள்ள ஒரு உரோமத்திலே தோன்றி நிற்கின்றன.

அண்டர்கள் முனிவரேனோர் அகிலமும் காட்டியண்ணல்
கொண்டிடு படிவமுற்றுங் குறித்தியார் தெரிதற்பாலார்
எண்டரு விழிகள் யாக்கை எங்கணும் படைத்தோர்க்
கேனும்
கண்டிட அநந்தகோடி கற்பமும் கடக்கு மன்றே.

தேவர்களையும் முனிவர்களையும் பிறரையும் மற்றை எல்லாப் பொருள்களையும் காட்டி இப் பெருமான் கொண்ட வடிவம் முழுவதையும் குறித்து அறியவல்லார் யாவர்? உடம் பெல்லாம் சிறந்த கண்களை புடையவர்களுக்கும் இத் திருவடி வினைக் காண அநந்தகோடி கற்பகாலத்துக்கு மேலாகும்.

நேரில ஞகி ஈண்டே நின்றிடு முதல்வன் நீடும்
பேருரு வதனை நோக்கிப் பெரிதும்அச் சுறுவ தல்லால்
ஆரிது நின்று காண்பார் அமரரில் அழிவி லாத
சீரிய வரங்கொண் டுள்ளேன் ஆதலில் தெரிகின் றேனால்.

சமானமில்லாதவராகி இங்கு எழுந்தருளியுள்ள முதல் வருடைய நீண்ட பெரிய திருவுருவத்தை நோக்கி அஞ்சு வதை யன்றி தேவர்களிலும் காணவல்லவர் யாவர்? நான் அழியாத வரம் பெற்றுளேன்; ஆதலின் நின்று காண்கின் றேன்.

முருகப் பெருமானுடைய பெருமையை நினைந்து வியப் புற்று, முருகப் பெருமானின் அழகில் பரவசமடைந்தான் சூரபன்மன்.

முருகப் பெருமான் ஞானக் காட்சி தந்தருளியது தவப் பயன் என்று புகழ்ந்து கொண்டான். "விசுவ ரூபத்தில் உள்ள ஒளியும் சீரும் இளமையும் அழகும் ஆகிய இவை களெல்லாம் உலகில் வேறு யாரிடத்தில் உள்ளன! ஆகா! அற்புதத்தோடு பலகால் பார்க்கினும் இன்னும் என் பார்வை யும் தெவிட்டவில்லையே! சமானமில்லாத இத்தனிப் பெருங் கடவுளுடைய விசுவரூபத்தை நோக்கி மிகவும் அஞ்சுவதன்றி தேவர்களுக்குள்ளும் இதனைக் காண வல்லார் யார்? நான் அழியாத சிறந்த வரத்தைப் பெற்றுள்ளேன். ஆதலால்தான் காண்கின்றேன். நான் மன்மதனைப் பார்த்திருக்கிறேன்.

அவன் மிகுந்த அழகன் என்று எனக்குத் தெரியும். அவன் எரிந்துவிட்டான். இவரது விசுவரூபத்தில் நான் ஆயிரங் கோடி மன்மதர்களைப் பார்க்கின்றேன்.

ஆயிர கோடிகாமர் அழகெலாந் திரண்டொன் ருகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் எழிலுக்காற்ரு தென்றிடில் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்?

'மன்மதன் கருவேள்; இவரோ செவ்வேள். ஆயிரங்கோடி மன்மதர்களின் அழகைத் திரட்டி உருட்டியெடுத்தாலும் அது முருகப் பெருமானின் பாத நுனியில் தங்கும் அழகுக்கு ஈடாகாது' என எண்ணினன்.

இங்கென துயிர்போல் உற்ற இளவலும் இளைய சேயும்
செங்கையில் வேலோன் தன்னைச் சிறுவன்என்
றெண்ணல் கண்டாய்
பங்கயன் முதலோர் காணுப் பரமனே யாகும் என்ருர்
அங்கவர் மொழிந்த வாறும் சரதமே ஆன தன்றே.

இவ்வுலகில் எனது உயிர் போன்ற தம்பியாகிய சிங்கமுகனும், இளைய மகனுகிய இரணியனும் 'வேற்படையேந்திய முருகவேளைச் சிறுவன் என்று எண்ணுதே. பிரமாதி தேவர்களும் காணுத பரசிவமே'' என்று கூறினர்கள். அவர்கள் கூறியதும் உண்மையே ஆயிற்று.

சூரபன்மன் விம்மிதமடைந்தான். அந்தக் காட்சியைக் கோடிக்கணக்கான யுகங்கள் பார்த்தாலும் அவனது மனம் அடங்காது போன்றிருந்தது.

(சூரபன்மன் யுத்தத்தில் சரணுகதி செய்யவில்லை. வீர லட்சணத்துக்கேற்றபடி உறுதியாகப் போர் புரிந்து வேறு விதத்தில் சரணுகதி செய்து பேறு பெற்ருன்; போர் முடிவில் அவன் அழியவில்லை. சேவலும் மயிலுமாக ஆக வேண்டும் என்று பண்டைக் காலத்தில் தவம் செய்தவன் சூரபன்மன். அத்தவம் நிறைவு பெறுவதற்கே—சூர வடிவம் நீங்கி ஐயன் கை ஆயுதம் பட்டுச் சேவலும் மயிலுமாவதற்கே—அவன் இனி போர் புரியப் போகிருன்.)

முருகப் பெருமானின் விசுவரூபத்தைக் கண்ட சூரபன்மனின் சினம் தணிந்தது. உரோமங்கள் பொடிந்தன; கண்ணீர் பெருகியது; எலும்பு உருகியது; அன்பு பெருகியது. அகந்தை நீங்கி ஞானம் உண்டாகியது. க்ஷேமத்தைக் குறிக்கும் வகையில் அவனது வலப் புயமும் வலக் கண்ணும் துடித்தன. 'இது நான் செய்த தவப் பயனேயாகும்' என்று எண்ணிப் பெருமிதம் கொண்டான். "அருட்கடலாகிய எம்பெருமான் என் மீது போருக்கு வந்திருக்கிறாரே, அதற்கு என்ன நோக்கம் இருக்க முடியும்? இந்த மூடனுக்கு அருள் புரிய வேண்டும் என்ற கருணையினால் வந்திருக்கிறார்" என்று எண்ணினான். 'நான் மிகுந்த பாக்கியசாலி. பரம்பொருளை நேருக்கு நேர் பார்த்த நான் சாதாரணமானவனா?' என்று இறும்பூது எய்தினான்.

போயின அகந்தை போதம் புகுந்தன வலத்த தான
தூயதோர் தோளுங் கண்ணுந் துடித்தன புவனம் எங்கும்
மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படு கின்ற விண்ணோர்
நாயகன் வடிவில் கண்டேன் நற்றவப் பயன்ஈ தன்றோ?

"என்னுடைய கால்கள் இக் கடவுளை வலம் வர நாடுகின்றன; அழகிய கரங்கள் தொழுதிட நாடுகின்றன; தலை வணங்குதலை நாடுகின்றது. நா துதித்தலை நாடுகின்றது; தீமை முழுவதும் நீங்கி நான் ஆழுதலை நாடுகின்றது. உள்ளம் இவருக்கு அடிமையாய் வாழுதலை விரும்புகின்றது; ஆனால் மானம் என்ற ஒன்று வந்து என்னைத் தடுக்கின்றது," என்று எண்ணினான்.

கந்தப் பெருமானைத் தொழுதிட வேண்டும் என்று எண்ணினான் சூரபன்மன். அது ஒன்றே முருகவேளைத் தொழ விடாமல் அவனைத் தடுத்துவிட்டது.

சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலு
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவற்கா ளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே.

(தாலு—நாக்கு)

தான் தேவர்களை யெல்லாம் சிறை வைத்தது தவறு என்று அனைவரும் இடித்துரைத்தனரே! அவர்கள் பேச்சைத் தான் கேளாததும் நன்மைக்குத்தான். இல்லாவிடில் தன்னுடன் போரிடப் பரமன் வருவானே, அகிலாண்ட ரூப அமுத தரிசனம் தருவானே என்று எண்ணினன் சூரபன்மன்.

ஏதமில் அமரர் தம்மை யான்சிறை செய்த தெல்லாம்
தீதென உரைத்தார் பல்லோர் அன்னதன் செயற்கையாலே
வேதமும் அயனும் ஏனை விண்ணவர் பலரும் காணு
நாதன்இங் கணுகப் பெற்றேன் நன்றதே ஆன தன்றே.

அசுரர் தலைவனான சூரபன்மன் அமரர்களுக்குச் செய்த தீங்கு இப்பொழுது நன்மையாகிவிட்டது.

ஒன்றொரு முதல்வ னாகி உறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள் நெஞ்சினில் தளரேன் அம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனும் நானே யானேன்
என்றும்இப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்பதுண்டோ.

"தனிமுதல் தலைவராகிய முருகப் பெருமானுடன் இது காறும் போர் செய்தேன். இனி நெஞ்சம் தளரமாட்டேன். முருகப் பெருமானுடன் போர் செய்தேன் என்ற பொன்றாப் புகழ் எனக்கு என்றும் இருக்கும்" என்று எண்ணினன் சூரபன்மன். ஆதலால் அவன் எம்பெருமானை வணங்கவில்லை.

"வானுளோர் சிறையை நீக்கி வள்ளலை வணங்கி யிந்த
ஊனுலாம் உயிரைப் போற்றி அளியர்போல் உறுவன் என்னில்
ஆனதோ எனக்கி தம்மா ஆயிர கோடி யண்டம்
போனதோர் புகழும் வீரத் தன்மையும் பொன்றிடாவோ?"

"கூன், குருடு, செவிடு போன்ற ஊனங்கள் எல்லாம் இந்த உடம்போடு போய்விடும். ஆனால் தன்மானம் இழந்து தவிப்பதால் ஏற்படும் விளைவு ஏழு ஏழு பிறப்புக்கும் தொடர்ந்து வரும்" என்று சொல்லுகின்றான் சூரபன்மன். "நான் தன்மானம் இழந்து வாழமாட்டேன்" என்று முன்பு அறிவுரை கூறிய இரணியனிடம் சொல்லிவிட்டான்.

அந்தத் தன்மானம்தான் இப்போது சூரனை முருகனைத் தொழவொட்டாமல் தடுத்தது.

சுவாமியுடன் சமர் புரிவது என்றே சூரன் முடிவு செய்து சங்கற்பித்து விட்டான். எனினும் வேலாயுதனின் விசுவ ரூப தரிசனம் பெற்றது பற்றி அகமகிழ்ச்சியும் உற்றான்!

முன்பு சூரபன்மன் செய்த தவத்தின் நோக்கத்தை நிறை வேற்றக் கருதிய முருகப் பெருமான், அவனை நடுங்க வைத்த பாரமேசுவர வடிவத்தை நீக்கி, மயில் வாகனத்திலிருந்த பழைய திருவுருவங் கொண்டார். சூரபன்மனுக்குக் கொடுத் திருந்த ஞானக் கண்ணையும் நீக்கினார். அவன் பழையபடியே அகம்பாவம் கொண்டான்.

காரண னாகித் தானே கருணையால் எவையு நல்கி
ஆருயிர் முழுது மேவி அனைத்தையும் இயற்றி நிற்கும்
பூரண முதல்வன் மைந்தன் போதம தளித்து மாற்றிச்
சூரனை மயக்கஞ் செய்யும் சூழ்ச்சியோ அரிய தன்றே.

சூரபன்மனின் ஞானம் நீங்கியதும் பழைய பகையும் சினமும் பொங்கின. மயில் வாகனத்திலிருந்த முருகவேளைக் கண்டான். தணிக்க முடியாத கோபம் கொண்டான்; போர் செய்வதிலே ஊக்கம் கொண்டான். "என் வலிமை அழகிது" என்று கையொடு கைதட்டிச் சிரித்தான். "இப்பாலனாகிய கள்வன் என்னுடன் போர் செய்வதற்கு அஞ்சித் தான் கற்ற மாயத்தைக் காட்டி என்னை ஏமாற்றிவிட்டான். ஆயினும் அந்த மாயத்தை உணர்ந்து நான் அழிந்துவிட்டேன். அவனை வணங்கவில்லை. மற்ற அமரரை யெல்லாம் நான் வென்றது ஒருபுறமிருக்க இவனுடைய மாயத்தையும் அழித்ததால் எனக்கு நிகரானவர்கள் எவரும் இல்லை. நான் என்றும் அழியாத உடல் மட்டும் பெற்றவன் அல்ல போலும். என் அறிவும் கருத்தும்கூட அழியாமலே இருக்கும் எனக் கண்டு கொண்டேன். இனி இந்தப் பாலகனுடன் போர் செய்து வெல்வேன். அதற்கு முன்னதாக இச்சிறுவனை அழைத்து வந்து இந்தப் பெரும் போரை மூட்டிவிட்ட தேவர்களின் உயிரை யெல்லாம் உண்டு என் சினத்தைத் தணித்துக்

கொள்வேன்'' என்று எண்ணினன் சூரபன்மன். அரி அயனாதி தேவர்களுடன் போர் செய்ய முடிவு செய்தான்.

சூரபன்மன் ஒரு மாயமந்திரம் ஜபித்து விண்ணும் மண்ணுமாகப் பெரியதோர் இருள் வடிவத்தை எடுத்தான். அவ்வடிவத்தைக் கண்டு கதிரவனும் மயங்கினன். தேவர்கள், ''இது சூரபன்மன் செய்துள்ள மாயம்'' என்றுகலங்கினர்கள். மாய வடிவத்துள் மறைந்து நின்று ஆரவாரம் செய்த சூரபன்மன் பல தலைகளும், அளவற்ற கரங்களும் கூடிய உருவத்துடன் தேவர்களைக் கொல்லப் பாய்ந்து சென்றான். தேவர்கள், அந்தக் கனந்தகாரத்தில் திக்குத்திசைதெரியாமல் சிதறி ஓடினர்கள்; அரற்றினர்கள்; அலறினர்கள். இருளில் தேவர்களின் குரல் கேட்டது; முகம் தெரியவில்லை.

''நண்ணினர்க் கினியாய் ஓலம்! ஞானநா யகனே ஓலம்!
பண்ணவர்க் கிறையே ஓலம்! பரஞ்சுடர் முதலே ஓலம்!
எண்ணுதற் கரியாய் ஓலம்! யாவையும் படைத்தாய் ஓலம்!
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம்! ஓலம்!

தேவர்கள் தேவே ஓலம்! சிறந்தசிற் பரனே ஓலம்!
மேவலர்க் கிடியே ஓலம்! வேற்படை விமலா ஓலம்!
பாவலர்க் கெளியாய் ஓலம்! பன்னிரு புயத்தாய் ஓலம்!
மூவரும் ஆகி நின்ற மூர்த்தியே ஓலம்! ஓலம்!

சுவாமி! சூரபன்மன் இருள் உருவில் மறைந்து வந்து எங்களைக் கொல்ல முயலுகின்றான். அவனிடமிருந்து தப்பியோடவும் நாங்கள் வலிமையற்றவர்களாக இருக்கிறோம். சுவாமி இனி நாங்கள் எங்கே உய்வோம்? கணப் பொழுதும் தாமதம் செய்யாது அவனைக் கொன்று எங்களைக் காத்தருளும்'' என்று தேவர்கள் வேண்டிக்கொண்டனர். என் ஐயனே இனியும் தாமதிக்கலாகாது. சூரனை இப்போதே கொன்று எங்களை ஆண்டருள வேண்டும்'' என்று மயிலுருக் கொண்டு முருகவேளைத் தாங்கி நின்ற மகபதியும் முறையிட்டுக் கொண்டான்.

முருகக் கடவுள் தேவர்களின் முறையீட்டையும், சூரபன்மன் மாயையின் ஆற்றலையும் திருவுள்ளத்தில்

எண்ணினர். தருணம் வாய்த்துவிட்டது என்றுமனம்கொண்டு விட்டார் முருகப் பெருமானர். தம்முடைய திருக்கரத்தில் இருக்கும் வேற்படையை நோக்கி, "விரைவில் சூரபன்மனின் மார்பைப் பிளந்து வருவாய்" என்று மங்கல ஆக்ஞையிட்டு ஏவினர்.

ஆறுமுகப் பெருமான் ஏவிய வேற்படை ஆயிரங்கோடி சூரியர்களைப் போல் ஒளி விட்டுத் தீ ஜ்வாலைகளை உமிழ்ந்து சென்று சூரபன்மனின் இருள் வடிவத்தை அழித்தது. தன் மாயை அழிந்ததையும் வேற்படை எதிரே வருவதையும் நோக்கிய சூரபன்மன், "அழியாத மேன்மையுடைய என்னை இந்தப் பாலகன் ஏவிய வேற்படை என்ன செய்யும்?" என்று ஏளனமாகச் சிரித்தான். மிகுந்த கோபம் கொண்டு "நில வுலகையும், திக்குகளையும், மேல் கீழ் உலகங்களையும் அழிப் பேன்" என்று ஆரவாரித்தான். உடனே அவன் கடலின் நடு வில் சென்று அக்கினி போன்ற தளிர்களையும், புகை போன்ற இலைகளையும், மரகதம் போன்ற காய்களையும், மாணிக்க மணி போன்ற பழங்களையும், முகில்கள் போன்ற கிளைகளையும் ஈன்று அண்டகூடம் வரையிலும் பரவிய பெரியதொரு தரு வாக உயர்ந்து நின்றன். திகந்தம் வரை சிறு கிளைகளை நீட்டி யும், பூமியைத் தாங்கும் ஆதிகூர்மம் வரை தேவர்களை ஓட்டி யும், மண்ணிலும் விண்ணிலும் நிழலைப் பரப்பினன். சூரிய சந்திரர்களும், அட்ட திக்குப் பாலகர்களும், தேவர்களும் அஞ்சும்படியாக இலக்கம் யோசனை அகன்று நின்ற சூரன் என்ற மாபெரும் மாமரம் மேருமலை அசைந்தாற்போல் கிளை களை அசைத்தது. அந்த அசைவினல் நிலவுலகங்கள் இடிந் தன; தேவர்கள் அஞ்சி ஓடிக் கயிலை மலையிலும் மேருகிரியிலும் புகுந்தனர்.

ஆலகால நஞ்சையுண்ட சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணில் உள்ள நெருப்பினல் அமைத்து, அவருடைய இடக்கரத்திலுள்ள மழுவில் தோய்த்தது போன்ற அவ்வேற் படை ஆயிரகோடி சூரிய ஒளியுடன் அக்கினி மழை பொழிந்துகொண்டு சென்று ஆணவமல வடிவமாகிய சூரனு கிய மாமரத்தைத் துணித்தது.

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கனல் உறுத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயில் தோய்த்துமுன் இயற்றி யன்ன
உடம்பிடித் தெய்வம் இவ்வா றுருகெழு செலவின் ஏகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே.

சூரவிருட்சத்தை வேல் அழித்தாலும் சூரபன்மன் அழியவில்லை. மரவடிவம் ஒழிந்த பின்னரும் அமரரின் எதிரியான பழைய வடிவமும், வச்சிர சரீரமும் பெற்றான் சூரபன்மன். "இவ் வேலையும், வேலை எய்தவனையும் வெல்வேன்" என்று வெஞ்சினம் கூறி வாளை உருவி எதிர்த்துச் சீறினான்.

சூரபன்மன் ஆறுமுகப் பெருமானை நேருக்கு நேராக நெருங்கி எதிர்த்துத் தன் அழிவைத் தேடிக் கொண்டான். சரவணபவன் விடுத்த சக்தி ஆயுதம் சூரனுடைய மார்பைப் பிளந்தது! உடம்பை இரு துண்டாக்கிக் கடலில் வீழ்த்தியது. வேதங்கள் வாழ்த்தின! தேவர்கள் பூமழை சொரிந்தனர். வேற்படை அப் பூமழை நடுவிற் பாய்ந்து சென்று அனல் வடிவம் மாறி தேவகங்கையில் மூழ்கிப் புனிதம் பெற்று, அங் கிருந்து திரும்பிச் செவ்வேளின் செங்கரத்தில் வந்து அமர்ந்தது.

புங்கவர் வழுத்திச் சிந்தும் பூமழை இடையின் ஏகி
அங்கியின் வடிவம் நீங்கி அருளுருக் கொண்டு வான்தோய்
கங்கையில் படிந்து மீண்டு கடவுளர் இடுக்கண் தீர்த்த
எங்கள்தம் பெருமான் செங்கை எய்திவீற் றிருந்த தவ்வேல்.

மார்பு பிளந்து உடல் இரு துண்டான பின்னரும் கூட சூரபன்மன் சாகவில்லை.

கடற்ச லந்தனி லேயொளி சூரனை
உடற்ப குந்திரு கூறென வேயது
கதித்தெ ழுந்தொரு சேவலு மாமயில் விடும்வேலா.
—திருப்புகழ்

சூரபன்மனின் வச்சிர யாக்கை பிளந்தவுடனே ஒரு பாதி சேவலாகவும் மற்றொரு பாதி மயிலாகவும் ஆயின. அந்த நிலையிலும் சூரபன்மன் விடவில்லை. மாணிக்க மரகத மலை யொன்று கால்களையும் சிறகுகளையும் பெற்றுப் பறந்து

செல்வதுபோல ஆறுமுக வள்ளலை எதிர்த்துப் போர் செய்யும் செருக்குடன் வந்தான்.

தாவடி நெடுவேல் மீளத் தற்பரன் வரத்தால் வீடா
மேவலன் எழுந்து மீட்டும் மெய்பகிர் இரண்டு கூறும்
சேவலும் மயிலு மாகிச் சினங்கொடு தேவர் சேனை
காவலன் தன்னை நாடி அமர்த்தொழில் கருதி வந்தான்.

சூரபன்மனின் ஒரு பாதி 'நான்' என்கிற அகங்காரம். மற்றொரு பாதி 'எனது' என்கிற மமகாரம். இவ்விரு பாதிகளின் வடிவான மயிலும் சேவலுமாகிய சூரபன்மன் முருக வேளை எதிர்த்து வருவதைக் கண்ட தேவர்கள் அஞ்சினர். ஆறுமுகக் கடவுள் சூரபன்மன் மீது அருள் நோக்கம் செய்தார்.

மயக்கமுடைய பட்சிகள் வடிவுகொண்டு மரகத மலை போலவும், மாணிக்க மலை போலவும் வந்த சூரபன்மன், எம்பெருமான் திருவருள் பொழிகின்ற திருக்கண்ணோக்கஞ் செய்ய, அவன் பகைமை நீங்கி தெளிந்த மனத்தையடைந் தானாகி சிவஞானிகள் பார்வையால் இரும்பு பொன்னாகுந் தன்மைபோல் அமைதியுற்று நின்றான்.

மருள்கெழு புள்ளே போல வந்திடு சூரன் எந்தை
அருள்கெழு நாட்டஞ் சேர்ந்த ஆங்கவன் இகலை நீங்கித்
தெருள்கெழு மனத்த னாகி நின்றனன் சிறந்தார் நோக்கால்
இருள்கெழு கரும்பொன் செம்பொன் ஆகிய
இயற்கை யேபோல்.

தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றே வரம்பிலா அருள்பெற்
றுய்ந்தான்.

"சேறு படிந்த உடம்புடைய ஒருவன் நீரிற் படிவானாயின் அவன் உடம்பு தூய்மையுறும். அதுபோல் அகத்தில் ஆணவ மலச்சேறுடையவர்களும் ஞான தேசிகராகிய எந்தை கந்த வேள் திருமுன்னுற்றால் ஆணவச் சேறு நீங்கித் தூயவராகி

மேலைத் தொல்கதியடைவர். இதனை ஆராய வேண்டா; சூர பன்மனே போதிய சான்று" என்கின்றார் கச்சியப்ப சிவாச் சாரியர். கொடியவனாகிய சூரபன்மன் நெடிது போர் செய்து எல்லையில்லாத திருவருளுக்கு ஆளானான்.

அப்பொழுது கந்தவேள் தமது திருவருளால் ஞானம் பெற்ற கோழியை நோக்கி, "நீ நமது தேரில் கொடியாக இருந்து கூவுவாய்" என்று பணித்தருளினார். அவ்வாறே கோழி அவர் தேரில் ஏறிக் கொடியாக நின்று கம்பீரமாகக் கூவியது. பெருமான் இந்திரனாகிய மயிலினின்றும் இறங்கி சூரபன்மனாகிய மயிலின் மீது ஏறி உலகெங்கணும் பவனிவருவாராயினார்.

'இந்திரனை ரட்சிக்கவே தோன்றியவர் கந்தன்; சூரனைச் சிட்சிக்கவே தோன்றியவர் கந்தன். அவ்வாறிருந்தும் அவர் இந்திரன், சூரன் இருவர்க்கும் ஒரு போல் தம் வாகனமாயிருக்கும் அந்தஸ்து தந்த அருமையைப் பாருங்கள்! கல்லார்க்கும், கற்றவர்க்கும், பொல்லார்க்கும் நல்லவர்க்கும் ஒரே பொதுவான பாரபட்சமற்ற பரங்கருணை புரிபவரன்றோ பரமன்?

சூரனாயிருந்த மயில் சுவாமியைத் தாங்கிய பெருமையில் உலகெங்கும் சுற்றி மீண்டும் வீரமகேந்திரபுரியின் செருக்களத்தை அடைந்தது. எதிரியாக இருந்த சூரன் இன்று மயூரமாகி முருகனைத் தாங்கியதும், குக்குடமாகி அவனது ஜயக்கொடியாகத் திகழ்ந்ததையும் சுவாமியுடைய பேரருளின் எல்லை என்றே அல்லவா கூற வேண்டும்? அவனுக்கு இந்தப் பெரும் பதவி தந்ததால், யாருடைய துயர் தீரும் பொருட்டு ஐயன் அவதரித்தாரோ அந்த இந்திரனை வாகனப் பதவியிலிருந்து நீக்கினார்!

முன்பு மயில் உருவாயும், சேவல் உருவாயும் நின்ற இந்திரனையும் அக்கினியையும் நோக்கி, பழைய வடிவு கொள்ளும்படி அருளிச் செய்தார் ஆறுமுகசுவாமி. அவர்கள் பழைய உருப்பெற்று, இடைக்காலத்தில் உற்ற தொல்லை எல்லாம் நீங்கி எல்லையிலாதான் இணையடி தொழுது துதித்து நின்றார்கள்.

(சுப்பிரமணியர் அவதாரம் செய்தது சூரசம்ஹாரத்துக்காக அல்ல. இந்திராணியின் மாங்கல்யத்தை ரட்சிக்க வந்தார். ஆகவே, "கந்தவேள் கருணை" படித்த பெண்கள் தீர்க்க சுமங்கலிகளாக} இருப்பார்கள். திருமாங்கல்யத்தை ரட்சிக்க வந்த தெய்வம் முருகன். சூரபன்மனுக்கு வேறு வடிவம் தந்து, இந்திரனுக்கு உயிரும் தந்த தெய்வம் முருகன்.)

அகந்தை நீங்கியபின், சேவலும் மயிலுமான சூரபன்மன் மீது கருணைகாட்டிய கந்தவேள், மயிலை ஊர்தியாகக்கொண்டு ஆரோகணித்தருளினார்.

14. தேவர்கள் போற்று படலம்

அடியார்களுக்கு அருள் புரிவதற்காக மயில் மீது தோன்றியருளிய கந்தவேளின் திருக்கோலத்தைத் திருமால், பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள் தம் கண்களுக்கு ஓர் அரிய அமிருதத்தைப் பெற்றாற்போலத் தரிசித்து ஆரவாரம் செய்தனர்; மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளினர்; ஆடிப்பாடிப் புளகாங்கிதம் அடைந்தனர்; பூமழை பொழிந்து திருவேலிறைவன் திருவடிகளைத் தொழுது வலம் வந்து மகிழ்ந்து துதி செய்யலாயினர்.

தேவர்கள் எம்பெருமானை நோக்கி, "சுவாமி! தாங்கள் வேற்படையினால் சூரபன்மனைச் சங்கரிக்கவில்லை; தங்களை வணங்குகிற அடியேங்களது வினையின் வேரை அறுத்தீர்கள். இனி எங்கட்கு வேறோர் குறையுண்டோ? அவுணர்கள் நூற்றெட்டு யுகங்களாக எங்களை வருத்தினார்கள். உய்யும் வகையின்றி நாங்கள் உலைந்தோம். அவ்வாறு உலைந்த எங்களை உய்விக்கும்பொருட்டே தேவரீர் ஆறு திருமுகங்கள் கொண்டு திரு அவதாரம் செய்து காத்தருளினீர்கள். உலகில் இனி வேதாசாரங்கள் நிலைபெறும்; நாங்கள் ஆஹுதியும் பழைய செல்வங்களும் பெறுவோம். இவை யாவற்றுக்கும் மேலாக, கண்ணுக்கு நேராகத் தங்கள் லீலை கண்டு காண்பானும், காட்சியும், காட்டுவானும், காட்சிப் பொருளும் ஆகிய இவையெல்லாம் தேவரீரே 'என்பதை உணர்ந்தோம். இனி தேவரீரின் திருவடிகளுக்கே தொண்டு பூண்டோம்" என்று கூறித் துதித்தார்கள்.

தம்மைத் துதித்த இமையவர்கட் கெல்லாம் ஆறுமுகப் பெருமான் அருள்பாலித்தார்.

15. இரணியன் புலம்புறு படலம்

போர்க்களத்தில் இறவாது தப்பிய அவுணர்கள் சிலர் வீரமகேந்திரபுரி அரண்மனைக்கு ஓடோடிச் சென்று முருகப் பெருமானின் வேற்படையால் சூரபன்மன் இறந்தான் என்ற செய்தியைச் சூரபன்மனின் பட்டத்தரசி பதுமகோமளைக்கும் மற்றைய மனைவியர்க்கும் சொன்னார்கள். இச்செய்தி செவியில் முழுவதும் புகு முன்னரே பதுமகோமளை இடியால் தாக்குண்ட நாகம் போல் தரையில் சாய்ந்தாள். அவ்வளவில் அவள் ஆவி பிரிந்தது.

காவல் மன்னவன் இறந்தனன் எனும்உரை கன்னத்துள்
மேவும் எல்லையில்அசனிஏ றுண்டவெம் பணியேபோல்
தேவி யாகிய பதுமகோ மளைஎனும் திருமங்கை
ஆவி நீங்கினள் தலையளி யாகிய ததுவன்றோ?

பத்தினி, பதியின் மாட்டுக் கொள்ளும் தலையாயஅன்புக்கு எடுத்துக்காட்டு இதுவன்றோ? சூரபன்மனின் மற்றைய மனைவியர்கள் செய்தியறிந்து இதயம் துடித்துக்கொண்டு அலறினார்கள். தீக் குண்டம் ஒன்றை உண்டாக்கி இறந்த பதுமகோமளையின் உடலை அதிலிட்டுத் தாமும் அதில் வீழ்ந்து இறந்தார்கள். அப்பொழுது கதிரவன் மறைந்தான். மாலைக் காலம் ஆயிற்று. அந்நகரத்தில் அதுகாறும் அவுணர் புறமிருந்த இலட்சுமி நீங்கினாள்.

சூரபன்மன் இறந்த செய்தி, மீனாகக் கடலில் ஓடி ஒளிந்த இரணியனுக்கு எட்டியது. தன் பிதா இறந்ததையும், அவன் சேவலும், மயிலுமாய்ச் செவ்வேளுக்கு அடிமைப் பட்டதையும் கண்டு கலங்கி, வான வீதியில் நின்று அழுதான்.

ஆழியான் வேத னமரர்க் கிறைமுதலோர்
வாழியா யென்று வழுத்தியிட வைகியநீ
பூழியார் மேனிப் புராரிசிறு வன்தேரில்
கோழியாய் நின்று விலாவொடியக் கூவுதியோ.

ஓகையா லண்டத் துயிர்களெல்லாம் வந்திறைஞ்சச்
சேகையாய் மல்குந் திருத்தாள்கொண் டுற்றிடுநீ
வாகையார் கின்ற வடிவேற் கரத்தோனைத்
தோகையாய் நின்று சுமக்குதியோ தோன்ருலோ !

"முன்பு உன் பக்கமாய் நின்று போரில் உயிரை விடாமல் ஒளிந்து உட்ந்த நான், இன்று உன்மீது அன்பு கொண்டவன் போல் அழுகின்றேன்; அதனல் பெரும் பழிக்கு ஆளானேன். புத்திரர்கள் தந்தைக்குச் செய்யும் கடமையினின்றும் நீங்கினேன்."

"அப்பா! நீ இறவாது மயிலும் சேவலும் ஆகியிருப்பதால் நீர்க்கடன் செய்வதற்கும் நான் பாக்கியம் செய்யவில்லை. என்னைப்பற்றி நீ என்ன நினைக்கின்ருயோ?" என்று பல வாருகக் கூறி அழுதான். பின்னர் ராஜகுருவான சுக்கிராச்சாரியரை அணுகி, இறந்த மற்றவர்க்கெல்லாம் நீர்க்கடன் செய்தான். பின்னர், 'துன்பத்துக்கு வித்து செல்வம்' என்பதை உணர்ந்து சிவபெருமானைத் தியானித்து முக்தி பெறும்-பொருட்டு ஒருபுறம் போய்த் தவம் மேற்கொண்டான்.

16. மீட்சிப் படலம்

வேலாயுதக் கடவுள் வீரவாகுதேவரை அன்புடன் நோக்கி, "வீரனே! இந்திர குமாரனுகிய சயந்தனையும், தேவர்களையும் சிறையினின்றும் மீட்டுக் கொண்டு வருவாய்" என்று அருளினர். வீரவாகுதேவர் சிறைச்சாலையை அடைந்தார். சிறையிலிருந்த தேவர்கள் அரம்பையர் ஆகியோரின் கால்களிற் பட்ட விலங்குகள் தாமே தெறித்து ஒடிந்தன. எம்பெருமான் அசுரரை வென்ற சுபச் செய்தியை அமரர்கள் கேட்டு ஆனந்தித்தனர். அனைவரும் போர்க்களத்தை அடைந்து குமாரக் கடவுளை வலம் வந்து வணங்கினர்.

சயந்தன் தனது பிதாவாகிய இந்திரனை வணங்கினுன். இந்திரன் சயந்தனை எடுத்துத் தழுவி இன்புற்ருன்.

சூரபன்மனுடன் செய்த சமரில் அமரர்புறமிருந்து இறந்த பூதர்கள் அனைவரும் எழுந்து வருமாறு திருவுளங் கொண்டார். இறந்த பூதகணங்கள் யாவரும் உயிர்பெற்று

எழுந்து வந்து கூடி, குமாரக் கடவுள் சந்நிதியை அடைந்து அவரை வணங்கின. வடிவேலண்ணல் வருணபகவானை அழைத்து "நாம் தண்டு இறங்கி இருந்த இலங்கை தவிர வீரமகேந்திரபுரியையும் அவுணரின் ஏழு தீவுகளையும் அழித்து விடுக" என்று கூறியருளினார். வருணன் உடனே வீரமகேந்திர புரியையும் துவீபங்களையும் கடலினுட் கொண்டான்.

அரிஅயனாதி அமரர்களும் இலக்கத்தொன்பது வீரர்களும் துதி செய்து மருங்கில் வர, முருகப் பெருமான் போர்க்களம் நீங்கி, இலங்கையையும் கடலையும் கடந்து ஜயந்திமலை என் கின்ற சிறப்பு மிக்க செந்திற்பதியை யடைந்தார். மயில் வாகனத்தினின்றும் இறங்கிக் கோயிலினுள் புகுந்தார். தேவர்கள் துதிக்க, எல்லா உயிர்கட்கும் அருள்புரியும் பெருங் கருணையுடன் திவ்விய சிங்காதனத்தின் மீது இனிது வீற்றிருந்தருளினார். அப்போது சூரியன் மேற்குக் கடலில் மூழ்கினான்.

தேவர்கள் முருகப் பெருமானுடைய உத்தரவுப்படி, திரு மஞ்சனத்துக்காக, நறுமலர், சந்தனம், தூபம், தீபம், முதலிய வைகளைக் கொண்டுவந்தார்கள். முருகப் பெருமானுக்குத் தாங்கள் பூஜை செய்யப் போகிறோம் என்ற ஆனந்தம் அவர் களுக்கு. ஆனால் எளிமையிற் சிறந்த ஏந்தலோ தாம் பூஜை பெறும் தெய்வமாயிராமல் பூஜை புரியும் தெய்வமாயிருக்க விரும்பினார். எனவே, முருகப்பெருமான் செந்திற்பதியில் தேவதச்சனைக் கொண்டு ஒரு அழகிய திருக்கோயில் நிறுவச் செய்து அக்கோயிலில் சிவலிங்கம் வைத்து அன்புடன் வழிபட்டார். (ஒவ்வொரு மலராகப் போட்டுக் கொண்டே வந்தார், அந்த அர்ச்சனையில் அகம் கரைந்த மால், அயன், பிரமா முதலிய தேவர்கள் கடைசி அர்ச்சனையின் போது பரவசப்பட்டு, 'முருகா' என்று கூவினர். அப்போது கையிலெடுத்த பூவுடன் திரும்பிக் காட்சி கொடுத்தார் கந்தப் பெருமான். திருச்செந்தூரில் இன்னமும் இப்படித்தான் ஒரு கரத்தில் அர்ச்சனை மலர் கொண்டவராக சுவாமியின் கோலம் இருக்கிறது. பெரியவர் களைப் பூஜையில் காண்பது மற்ற சந்தர்ப்பங்களில் காண் பதைக் காட்டிலும் பெருமை. ஆகவே, மற்ற கோவில்களில்

உள்ள சுவாமியைவிடத் திருச்செந்தூரில் உள்ள முருகப் பெருமானுக்குப் பெருமை அதிகம்.

பூஜை புரிந்த பெருமான் பிறகு தேவர்களின் பூஜையைத் தாமும் பெற்றார், "உங்களுக்கு இன்னமும் ஏதேனும் குறைகள் இருந்தால் கூறி, வேண்டிய வரங்களைக் கேட்டு உய்வு பெறுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். "எம்பெருமானே! அடியேங்கட்கு இனி ஒரு குறைவும் இல்லை. தங்கள் திருவடியில் நீங்காத அன்பைத் தந்தருள வேண்டும்" என்று தேவர்கள் வேண்டிக் கொண்டார்கள். ஆறுமுகவள்ளல் அவ்வரத்தை நல்கினார். அன்றைய இரவு கழியக் கதிரவன் கீழ்வானில் உதயமானான்.

யுத்த காண்டம் முற்றுப் பெற்றது.

5. தேவ காண்டம்

1. திருப்பரங்குன்று சேர் படலம்

செவ்வேள் செந்திற்பதியை நீங்கிப் பரிவாரங்களுடன் மயில் வாகனத்தில் புறப்பட்டார். அப்போது நான்முகன், திருமால், இந்திரன், படை வீரர்கள் முதலிய யாவரையும் கௌரவிக்கக் கருதினார். பிறருக்கு மதிப்புத்தரும் மாண்புடன் அவர்களைப் பார்த்து. நீங்களும் உங்கள் வாகனங்களில் ஏறி நமக்குப் பக்கத்தில் புறப்பட்டு வாருங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன்படி அவர்களும் புறப்பட்டனர்.

தேவர்கள் தங்கள் வாகனங்களில் ஏறி ஆறுமுகப் பெருமானிடம் செல்ல, இரண்டாயிர வெள்ளம் பூதர்களும் வந்து நெருங்கினார்கள். பூதூளியினால் தேவலோகம் பூழியாகியது. குடை, கொடி, ஆலவட்டம் முதலியன நெருங்கின. வேத ஒலியும், தேவர்களுடைய வாழ்த்தொலியும், முருகக் கடவுளின் ஊர்தியாகிய மயிலும், கொடியாகிய கோழியும் கூவும் ஒலிகளும் எங்கும் மங்களமாகப் பரவின. திக்விஜய பிரதா

பரான ஆறுமுகக் கடவுள் மதுரைத் திருநகரின் மேற்றிசையில் விளங்கும் திருப்பரங்குன்ற மடைந்தார்.

திருப்பரங்குன்றத்தில் தவம் செய்து கொண்டிருந்த பராசர புதல்வர் அறுவரும், பிரமா முதலிய தேவர்களும் ஆறுமுகக் கடவுளை வணங்கி, "சுவாமி! தேவரீர் இக்குன்றத்தில் வீற்றிருந்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் விருப்பத்தின்படி திருப்பரங்குன்றத்தின் சாரலில் பூதசேனைகளுடன் ஏறிச் சென்றார் வேதநாயகன். தேவதச்சன் எம்பெருமானுக்காக அக்குன்றின்மீது அளவற்ற வீதிகளையும், கோயில்களையும், சோலைகளையும், வாவிகளையும் அமைத்தான். ஆறுமுகக் கடவுள் அமரர் அனைவரையும் மத்திய கலாமண்டபத்தில் அவரவர்கட்குரிய இடங்களில் அமரச் செய்து, மயில்வாகனத்தினின்றும் இறங்கிச் சிற்சபையில் அமைக்கப்பட்டிருந்த திவ்விய சிங்காதனத்தின் மீது அமர்ந்தார். காட்சி என்றால் அதுவல்லவோ காட்சி?

மனம் நிரம்பி வழிபப் பெற்ற தேவர்கள் அவரவர் இருப்பிடம் சென்றனர். தாங்கள் முன்பு இழந்திருந்து, இன்று இறையருளால் திரும்பப் பெற்ற பொன்னுலகுக்குச் சென்றனர். வீரவாகுதேவரும், இலக்கத்தெண்மரும், பூதசேனைத் தலைவர்களும் எம்பெருமானின் திருவடிகளை வணங்கி ஏவல் செய்துகொண்டிருந்தார்கள்.

பராசரர் புதல்வர்கள் அறுவரும், முருகப்பெருமானை வணங்கித் துதித்தனர். முன்னர் சிவபெருமான் அவர்களுக்குக் கூறியிருந்தவாறு ஆறுமுகக் கடவுள் அவ்வறுவருக்கும் ஞானோபதேசம் புரிந்தருளினார்.

2. தெய்வயானையம்மை திருமணப் படலம்

தன் பகைவனாகிய சூரபன்மனை அழித்துப் பொன்னுலக அரசாட்சியை தனக்குத் தந்தருளிய வேற்படை யண்ணலுக்குத் தன் மகளாகிய தெய்வயானையம்மையைத் திருமணம் செய்து கொடுக்க எண்ணினான் இந்திரன். தன் கருத்தைத் திருமால், நான்முகன் முதலியோரிடம் தெரிவித்தான். அவர்களும் அதனைக் கேட்டு மிக நல்லது. அவன் ஏற்கவே

முருகனைக் கணவனாக அடைய விரும்பித் தவம் புரிந்தவள். ஆகையால். திருமண ஏற்பாடுகளை விரைந்து செய்'' என்று கூறினர்.

இந்திரன் தூதர்களை யனுப்பி மேருமலையிலிருந்த தன் மனைவி இந்திராணியையும் மகள் தெய்வயானையையும் அழைத்துவரச் செய்தான். அவர்கள் திருப்பரங்குன்று வந்து சேர்ந்து இந்திரனையும் சயந்தனையும் கண்டு மிக மகிழ்ந் தார்கள்.

இந்திரன் தேவர்களோடு சென்று ஆறுமுகப் பெருமானை வணங்கித் துதித்துத் தன் மகளாகிய தெய்வயானையைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என விண்ணப்பித் தான். முருகப் பெருமானும் அதற்கு இசைந்து மறுநாளே திருமணம் புரிவதாகத் தெரிவித்தருளினர். இந்திரன் முசுகுந் தச் சக்கரவர்த்திக்கும் ஏனைய அரசர்கட்கும் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் தூதர்கள் மூலம் மறுநாள் திருமணம் என்று அழைப்பு விடுத்தனன். தேவதச்சன் மூலம் திருப்பரங் குன்றத்தில் திருமண மண்டபத்தையும் திருமணத்திற்கு வருவோர்கள் தங்குவதற்கு விடுதிகளையும் பிறவற்றையும் தேவதச்சனைக் கொண்டு ஒழுங்கு செய்தான்.

முசுகுந்தன்

திருக்கயிலாய மலையில் ஒரு சோலையில் வில்வமரத் தடியில் அமர்ந்து சிவபெருமான் சிவகாமசுந்தரிக்கு சிவாக மங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார். வில்வமரத்தி லிருந்த கருங்குரங்கு வில்வ இலைகளை உருவி இறைவன் மீதும் இறைவி மீதும் இட்டது. காற்றில் இலைகள் உதிர்கின்றன என்று எண்ணிய எம்பிராட்டி தலைமீது வீழ்ந்த இலைகளைத் தள்ளினர். விளையாட்டாக அம்முசு மென்மேலும் இலைகளைப் பறித்துப் பறித்து முடியிலும் அடியிலும் பெய்தது. சிவகாமசுந்தரி மேலே சிறிது சீற்றத்துடன் பார்த்தருளினர். பரமேச்சுரன், "பார்வதீ எல்லாவுயிர்களும் உன் குழந்தைகள். உன் குழந்தையாகிய குரங்கு நம் மீது இட்டது வில்வந் தானே? நீ சினம் செய்யற்க'' என்றார். அம்பிகையின் திருக்

கண்ணோக்கம் பெற்றதனால் குரங்கு அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் வரப்பெற்று, மரத்தைவிட்டு இறங்கி, அம்மையப்பனுடைய அடிமலர் மீது வீழ்ந்து அழுது, தொழுது, சிறியேன் அறியாது செய்த பிழையைப் பொறுத் தருள வேண்டும்'' என்று வேண்டி நின்றது.

குன்ற வில்லியாம் குழகன், ''குரங்கே! நீ இரங்கற்க. இட்டது வில்வந்தானே. ஒரு வில்வத்தால் நம்மை அருச்சித் தவர் எல்லா நலன்களையும் எய்துவர். தெரிந்தோ தெரியா மலோ மிதித்தவரை நெருப்பு சுடும். அதுபோல் தெரிந்தோ தெரியாமலோ செய்த சிவ புண்ணியம் நிச்சயமாகப் பயனைத் தரும். வேடிக்கையாக இட்டாலும், இட்டது வில்வம். அதனால் நீ மண்ணுலகில் அரசனாகப் பிறந்து சிறந்த செல்வ நலன்களை அனுபவிப்பாயாக'' என்று அருள் புரிந்தார்.

குரங்கு நடுங்கி ஒடுங்கி, ''எந்தையே! வேண்டாம். இக் கயிலையில் நான் புழுவாக வேண்டுமானாலும் பிறப்பேன். பொய்மலிந்த பூவுலகில் பிறக்க அஞ்சுகின்றேன்'' என்றது.

சிவபெருமான் ''வானரமே! செய்த கன்மங்களை நுகர் இன்ற இடம் பூதலமேயாகும். ஆதலால் உயர்ந்த குலமாகிய அரிச்சந்திர குலத்தில் பிறந்து சக்கரவர்த்தியாக வாழ்ந்து பின்னர் நமது கயிலைக்கு வருவாயாக'' என்று பணித் தருளினார்.

குரங்கு, ''ஐயனே! தாங்கள் கட்டளையிட்ட வண்ணம் பிறக்க இசைகின்றேன். ஆனால் குரங்கு முகத்துடன் பிறக்க வேண்டும். கண்ணாடியில் காணுந்தோறும் முற்பிறப்பின் நினைவு வரவேண்டும். சிவபக்தியில் சிறக்கவேண்டும்'' என்று யாசித்தது. அரனார் அவ்வண்ணமே யாகட்டும்'' என்றார்.

ஆதித்தன் குலத்திலே அரிச்சந்திரன் மரபில் அக்குரங்கு வந்து பிறந்தது.

முசுமுகத்துடன் பிறந்து கருரைத் தலைநகராகக் கொண்டு குந்தம் என்ற ஆயுதத்தைத் தாங்கி அரசாண்டு முசுகுந்தன் என்று பேர் பெற்றது.

தெய்வயானையம்மையின் திருமண ஓலை முசுகுந்தனுக்குக் கிடைத்தது. ஓலை தந்தானுக்குப் பொன்மழை பொழிந்தார். முசுகுந்தச் சக்கரவர்த்தி. தூதுவர்கள் சென்ற பிறகு தனது நகர மக்களும் பிறரும் ஆறுமுகக் கடவுளின் திருமணத்தைத் தரிசிக்கச் செல்லுமாறு யானையின்மீது சென்று முரசறையும்படி கட்டளையிட்டான். மறுநாள் திருமண மண்டபத்திற்கு எல்லோரும் சென்று சேர்ந்தார்கள். இந்திரன் திருமால், நான்முகன் முதலாயினோருடன் சென்று முருகக் கடவுளை வணங்கி திருமணச் சாலைக்கு எழுந்தருள வேண்டினர். முருகப் பெருமானும் முன் நின்ற மயில் வாகனத்தின் மீது ஏறி, சூரியனும் சந்திரனும் குடைபிடிக்க, வாயு சாமரம் வீச, வருணன் ஆலவட்டம் அசைக்க, இயமன் வாட்படை ஏந்திவர, சேவல் ஒலியெழுப்ப, பல்வகை வாத்தியங்கள் முழங்க, முனிவர்கள் பூதர்கள் முதலியோர் உடன் வரத் திருமணச் சாலையையடைந்து வாகனம் விட்டிறங்கி மண்டபத்தில் வீற்றிருந்தனர். சிவபெருமானும் உமாதேவியாரோடு கணங்கள் சூழ எழுந்தருளினர். முருகப் பெருமான் அவர்களை வணங்கினர். விண்ணிலிருந்து வந்திறங்கிய ஒரு சிங்காதனத்தில் சிவபெருமான் உமையோடு வீற்றிருந்தார். இந்திரனும் சிவபெருமானிடம் திருமணம் செய்து கொடுக்க அநுமதி பெற்று தெய்வயானையம்மையை அந்தப்புரத்திலிருந்து அழைத்து வந்தான்.

தெய்வயானை அந்தக் கல்லின்மீது நடந்தபோது, கிண்கிணி, 'அந்தோ! என் அன்னை இக்கல்லின் மீது மெல்லிய திருவடி வைத்து நடக்கின்றாளே! இத் திருவடி கல்லின் மீது நடந்தால் வருந்துமே!' என்று கூறி அரற்றுவது போல் இருந்தது. இடையில் உள்ள மேகலாபரணம் ஒலிப்பது மெல்லிய இடை வருந்துமே என்று கூறுவதுபோலிருந்தது.

கல்லுயர் பொருப்பினிடை காமரடி செல்ல
அல்லன கொல் என்றுமணி நூபுரம் அரற்ற
மெல்லிடை வருந்துமென மேகலை இரங்க
எல்லவரும் உள்மகிழ எம்மனை நடந்தாள்.

"இவ்வாறு அம்மை தேவகுஞ்சரி கல்லின் மீது பாத தாமரையை வைத்து நடந்தருளுவதில் என்ன ஆச்சரியம்

உளது? எம்பிரான் கந்தவேள் தமது திருவடிமலரை அடியேனுடைய நெஞ்சமாகிய கருங்கல்லில் வைத்து உலவுகின்ருரே!'' என்பர் கச்சியப்பர்.

பஞ்சிதனின் மெல்லடிப னிப்பஉரை யின்பால்
குஞ்சரிந டந்தசெயல் கூறுபுது மைத்தோ?
செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி தீயேன்
நெஞ்சகஅ டுக்கலினும் நின்றுலவும் என்ருல்.

முரசங்கள் முழங்கின. தெய்வயானை அம்மையாரைத் திருமணப் பந்தலில் கண்ட முனிவர்கள் அனைவரும் 'தாயே வாழ்க' என்று துதித்தார்கள். தெய்வயானையம்மையார் பார்வதி, பரமேசுவரனைத் தொழுது நடுவேயுள்ள ஞான பண்டிதரைக் கண்டு நாணி நின்ருர். உலக அன்னையாகிய உமாதேவியார் முருக வேளையும் தெய்வயானையம்மையாரையும் ஓர் உயர்ந்த ஆசனத்தில் இருத்தினர். திருவேலிறைவன் தெய்வயானையோடு திருமணக் கோலத்தில் வீற்றிருந்ததைக் கண்டு இந்திரனும் வானேரும் ஏனேரும் கைகூப்பி ஆனந்தக் கண்ணீர் பெய்து வந்தித்து வாழ்த்தினர்கள். இந்திராணி நாணம் மேலிட்டவளாய்த் திருமஞ்சன நீரை வார்க்க, இந்திரன் எந்தை கந்தவேள் திருவடிகளைப் பூசித்தான். மலர்களைச் சூட்டித் தூப நிபங்களைப் பணித்தான். எம்பெருமானுக்குப் பூசனைகள் முடிந்ததும் இந்திரன் தெய்வயானை அம்மையாரது திருக்கரத்தை எம்பிரான் திருக்கரத்தில் வைத்து, "எளியேனுடைய மகளை ஏற்றருள்வீர்" என்று வேத மந்திரம் கூறித் தாரை வார்த்தான்.

மருத்துவன் மாமறை மந்திர நீரால்
ஒருத்திபொ ருட்டினில் ஒண்புனல் உய்ப்பக்
கரத்திடை ஏற்றன னல்கழல் சேர்ந்தார்க்
கருத்திகொள் முத்தியும் ஆக்கமும் ஈவோன்.

தம் கரத்தில் இந்திரன் வார்த்த மந்திர நீரை முருகப் பெருமான் ஏற்றுக்கொண்டார். பிரமதேவர் மாங்கல்ய நாணை மனத்தினுல் படைத்துக் கொடுத்தார். அதனை முருகப் பெருமான் தம் திருக் கரத்தினுல் வாங்கிச் சுரகுஞ்சரியம்மை

யின் கழுத்தில் தரித்தார்; அம்மையாரின் கழுத்தில் ஒரு மலர் மாலையும் சூட்டினர். கரும்பு, தேன், முக்கனிகள் முதலிய வற்றையும் காமதேனுவின் பாலையும் இந்திரன் முருகக் கடவுளுக்கு நிவேதித்தான்.

திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற முருகப் பெருமானின் திருமணக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தீ வலம் வருதல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டுதல்முதலிய சடங்குகள் சிறப்புற நடந்தன. தேவாதி தேவன், தேவராஜ குமாரியை மணந்த திவ்விய வைபவங்களை யாரே விரித்துரைக்க முடியும் ?

திருமணச் சடங்குகள் யாவும் இனிதே முடிந்தன. முருகக் கடவுளும் தெய்வயானையும் பார்வதி—பரமேசுவரர்களை வலம் வந்து வணங்கினர். முருகனைச் சிவபெருமானும் மருமகள் தெய்வயானையைப் பார்வதி தேவியும் எடுத்து அணைத்து அருகில் அமரச் செய்து அருள்புரிந்தனர். ஆதி தம்பதியான சிவ-சக்தி இப் புது தம்பதிக்கு முதன்மை ஸ்தானமும் அளித்து மகிழ்ந்தனர்.

அடித்த லத்தில்வீழ் மக்களை இருவரும் ஆர்வத்
தெடுத்த ணைத்தருள் செய்துதம் பாங்கரில் இருத்தி
முடித்த லத்தினில் உயிர்த்துமக் கெம்முறு முதன்மை
கொடுத்தும்' என்றனர் உவகையால் மிக்ககொள் கையினர்.

முருகப் பெருமானையும் தெய்வயானையையும் வணங்கியவர்களுக்கெல்லாம் சிவபெருமானும் பார்வதி தேவியும் திருவருள் புரிந்து மறைந்தனர்.

பின்னர் முருகப் பெருமான் சிங்காதனத்தினில் வீற்றுத் தரிசனம் தந்தார். அதன்பின் குழுமியிருந்தவர்கள் அனைவரும் அஞ்சலி செய்யவும் மங்கல வாத்தியங்கள் ஒலிக்கவும் தேவர் குழாங்கட்கு அருள் செய்து தெய்வயானை அம்மையாருடன் திருக்கோயிலுட் புகுந்தருளினர்.

இந்திரன் யாவருக்கும் காமதேனு. கற்பகம், சிந்தாமணி இவைகளால் இன்னமுதூட்டி விடை கொடுத்தனுப்பினன். இந்திரன் நீண்ட காலம் விட்டுப் பிரிந்திருந்த இந்திராணி

யுடன் திருப்பரங்குன்றத்தில் இல்வாழ்க்கைச் சுகம் எய்தினன்.

கந்தமிகு முண்டகக் கண்ணனும் கருணைஎண்
கண்ணனும் உடற்கண்ணனும்
கதிநனை வழங்கும்உன் திருமுன்பு வந்துசெங்
கதிர்வேல் புகழ்ந்திரந்து
சுந்தரக் குங்குமக் கொங்கைஒரு மங்கைநம்
சுதையைவேட் டருளுகெனவே
சுடர்முடி துளக்கிவெகு மகிழ்வுடன் நகைத்தருள்
சுரந்துளம் இசைந்துமறுநாள்
அந்தரத் தமரர்முகு குந்தன்முதல் இம்பர்கள்
அருந்தவர் பெருந்திசையினேர்
அணிமணக் கோலத்தின் அதிசயம் கண்டுய்ய
அப்பரங் குன்றின் மிசையே
தந்தியை மணந்த குவளைத்திரு மலைக்குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிப்பட அயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி, கொட்டி யருளே.

—திருமலை முருகன் பிள்ளைத் தமிழ்.

3. விண்குடியேற்று படலம்

திருப்பரங்குன்றத்தில் தெய்வயானையம்மையாரைத் திருமணம் செய்து கொண்ட செவ்வேட் பரமன் அங்கே சில நாட்கள் அம்மையாருடன் வீற்றிருந்தார். தேவர்களை விண்ணுலகத்தில் குடியேற்றவும், பொன்னுலகத்தில் இந்திரனுக்கு முடி சூட்டவும் திருவுளங் கொண்டார். தெய்வயானையம்மையாருடன் தம் திருக்கோயிலினின்றும் வெளியே புறப்பட்டார். வீரவாகு தேவரும் பூதர்களும் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். திருமால், பிரமா, இந்திரன் முதலிய தேவர்களும். முனிவர்களும் அவ்வாரவார ஒலியைக் கேட்டு முருகவேளைப் பணிந்து சூழ்ந்தார்கள். வாயுதேவன் மனோவேகத் தேரைக் கொண்டுவந்து நிறுத்தினன். ஆறுமுகக் கடவுள் தெய்வயானையம்மையாருடன் அத்தேரில் ஏறி அமர்ந்தார். அப்போது அவர்கள் சிவபெருமானும் மலைவளர் காதலியும்

போல் விளங்கினுர்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். மயில் வாகனம் அமரர்கள் தொழ அருகில் வந்தது. ஆறுமுகப் பெருமான் அமரர்களைப் பார்த்து. "நீங்கள் யாவரும் உங்கள் வாகனங்களில் ஏறி எம்மோடு விண்ணுலகத்துக்கு வாருங்கள்" என்று ஆணையிட்டார்; பெருமான் ஆணையின் வண்ணம் அமரர்கள் தங்கள் தங்கள் வாகனங்களில் ஊர்ந்து எம்பெருமானின் இருமருங்கும் துதிசெய்துகொண்டு சென்ருர்கள். பராசர முனிவரின் புத்திரர்களும் உடன் சென்ருர்கள். இரண்டாயிரம் பூத வெள்ளங்களும் விரைந்து புறப்பட்டன. பூதங்களில் பலர் முரசுகளை முழங்கினர், சங்குகளை ஒலித்தனர்; மிருதங்கம் முழக்கினர். இவ்வாருக, கந்தவேள் விண் வழியே இந்திரனுடைய அமராவதியை அடைந்தார். பானுகோபனுல் எரிக்கப்பட்டுப் பாழ்பட்டிருந்த விண்ணுலகை வேலாயுதக் கடவுள் புதுப்பிக்கத் திருவுளம் கொண்டார். தேவதச்சனை நோக்கி, "விண்ணுலகை எல்லா வளங்களுடனும் மீண்டும் அமைப்பாயாக!" என்று கட்டளையிட்டார்.

தெய்வத் தச்சன் கந்தப் பெருமானின் ஆணையைச் சிரமேற் கொண்டு, விண்ணுலகத்தைச் சூழப் பொன் மதில்களையும், நான்கு வாயில்களையும், ஏழு நிலைமாடங்களையும், கோபுரங்களையும்; எண்ணில்லாத வீதிகளையும், நடுவே ஒரு பெருங் கோயிலையும், செய்குன்றுகளையும். அளவில்லாத நீர் நிலைகளையும் அமைத்தான். மாளிகைகளையும் மணி மயமான மண்டபங்களையும் உண்டாக்கினுன். தவப்பள்ளிகளை அழகுற அமைத்தான். இந்திரனுக்கும், பிரமாவுக்கும், திருமாலுக்கும் தனித்தனியாக கோயில்களை அமைத்தான். கந்தக் கடவுள் எழுந்தருளுவதற்கு ஏற்றதோர் திருக்கோயிலையும் தனியாக அமைத்தான். அழிந்த விண்ணுலகம் இப்பொழுது பிரமாவின் சத்திய உலகத்திலும் வனப்புடையதாகவும், வளமுடையதாகவும் விளங்கியது. தெய்வத் தச்சன் மனத்தால் இவ்வாறு வளங்களை யெல்லாம் சேர்த்து அமைத்த திறமையைக் கண்டு யாவரும் விம்மிதமுற்றனர். பிரமாவும் திருமாலும், தெய்வத் தச்சனிடம், "உனது தொழில் திறமைக்கு நிகரில்லை" என்று கூறிப் புகழ்ந்தார்கள். விண்ணுல

கம் பெற்ற அழகைக் கண்ட இந்திரன் மகிழ்ச்சிப் பெருக்கினால் தெய்வத் தச்சனைக் கட்டித் தழுவினான். அமராவதியை அழகுற அமைத்த தெய்வத் தச்சன் ஆறுமுகப் பெருமானின் திருவடிகளை வணங்கி நின்றான். ஆறுமுக வள்ளல் தெய்வத் தச்சனுக்கு அருள்புரிந்து தம் கணங்களுடன் நகரத்தினுள் சென்றார்.

அப்போது அயிராணி அரம்பையர்கள் சூழ ஒரு விமானத்தில் வந்து இந்திரன் கோயிலை அடைந்தாள். ஆறுமுகக் கடவுள் அந்நகருட் புகுந்து தெய்வயானையம்மையாருடன் சபா மண்டபத்தில் எழுந்தருளியிருந்தார். பின்னர் மயில் வாகனக் கடவுள் திருமாலையும், திசைமுகனையும் நோக்கி, "அமராவதியில் இந்திரனுக்கு விரைவில் முடிசூட்டுங்கள்" என்று கட்டளையிட்டார்.

கந்தப் பெருமானின் கட்டளையை ஏற்ற தேவர்கள், சாமரம், குடை, வாள், கிரீடம் முதலிய அரச அம்சங்களையும், மற்றவற்றையும் உடனே கொண்டுவரச் செய்தனர். இந்திரனைக் கங்கை நீரினால் அபிஷேகம் செய்வித்தனர். ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துச் சிங்காதனத்தில் அமரச் செய்தனர். விண்ணவர் போற்றவும், கற்பகமலர் தூவவும், அரம்பையர் பாடவும், முழவுகள் முழங்கவும், மிகவும் சிறப்பாக இந்திரனுக்கு முடி சூட்டினார்கள். தேவர்கள் யாவரும் இந்திரனை வணங்கினார்கள். இந்திரன் எம் பரம பிதாவாகிய கந்தக்கடவுளைத் தொழுது, "எந்தையே! சூரனையழித்து, அடியேன் இழந்த அரசுரிமையையும், பொன்னுலக ஆட்சியையும் மீட்டுத் தந்து என்றும் அழியா இன்பத்தையும் நலத்தையும் வழங்கியருளினீர்கள். அடியேன் உய்ந்தேன். இதனினும் ஒருவன் பெறும் பேறு உண்டா? தங்கள் திருவடித் தொழும்பனாகிய என்னுடைய தவமே தவம்" என்று துதிசெய்து நின்றான்.

"இந்திர! இனி நீ அஞ்சுந்தன்மையின்றி என்றென்றைக்கும் அமராவதியை அரசுபுரிந்து இன்புற்று இருப்பாயாக" என்று அருள்புரிந்து ஆசி கூறியருளினார் ஆறுமுக வள்ளல். பின் எல்லாத் தேவர்களையும் தத்தம் இடங்களுக்குச் செல்லும்படி பணித்தார்.

4. கந்த வெற்புறு படலம்

கந்தவேள் விண்ணுலகில் சில நாட்கள் தங்கியிருந்த பின் தெய்வயானை அம்மையாரோடு கந்தவெற்பில் வீற்றிருக்கத் திருவுளங் கொண்டு புறப்பட்டார். அதனை அறிந்த ஆகண்டலன், அரவணைச் செல்வன், அம்புயன் முதலியோர் வந்து கந்தவேளைத் தொழுதார்கள். பெருமான் அவர்கள் புடை சூழத் தெய்வயானை அம்மையாருடன் தேரில் அமர்ந்தார். வீரவாகுதேவர் அத் தேரைச் செலுத்தினர். இலக்கத் தெண்மரும் பூதர்களும் சூழ, ஆறுமுகக் கடவுள் திருக்கயிலாய மலையை அடைந்தார். அன்னை, தந்தையை வணங்கி அவர்களது திருவருளும் விடையும் பெற்றார். எல்லாத் தேவர்களுக்கும் தத்தம் இருக்கை செல்லுமாறு விடை கொடுத்து விட்டுக் கந்தகிரியை அடைந்தார். வீரவாகுதேவர் முதலிய வீரரும், படைத் தலைவர்களும், பூதர்களும் துதித்துக்கொண்டு நிற்க, தெய்வயானை அம்மையாரோடு இரத்தின சிங்காசனத்தில் வீற்றிருந்தருளினர்.

புக்கதோர் குமர மூர்த்தி பொருதிறல் வயவர் யாருந்
தொக்கனர் பணியில் நிற்பத் தொல்படைக் கணங்கள் போற்ற
மைக்கருங் குவளை ஒண்கண் மடவர லோடு மேவி
மிக்குயர் மணிப்பீ டத்தில் வீற்றிருந் தருளி னானே.

துய்யதோர் மறைகளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்ய சூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில்சீர் அடியார் வாழ்க வாழ்கஇப் புவனம் எல்லாம்.

5. இந்திரபுரிப் படலம்

விண்ணுலக ஆட்சியை முருகப் பெருமான் அருளால் மீளவும் அடைந்த இந்திரன் ஒருநாள் தான் முன்னர் சூரபன்மனுக்கு ஏவல் புரிந்ததையும், ஒளிந்து திரிந்ததையும் பிற துன்பங்களை அநுபவித்ததையும் எண்ணினான். விண்ணுலக போக வாழ்க்கையை வெறுத்துத் தவம் செய்ய நினைத்தான். தேவ குருவாகிய வியாழபகவான் உலக வாழ்க்கையே உயர்ந்

தது என்று கூறும் உலோகாயதக் கொள்கையை அவனுக்கு உபதேசித்து அவன் எண்ணத்தை மாற்றினர். அவனும் மனம் மாறி தன் புதல்வன் சயந்தனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு, இந்திராணியோடு எந்நாளும் இன்பம் நுகர்ந்து கொண்டிருந்தனன்.

அரசு புரிந்து கொண்டிருந்த சயந்தன் ஒரு நாள் சபையில் வீற்றிருந்த வியாழ பகவானை நோக்கி, 'தேவகுருவே! நான்முகன் முதலான தேவர்களும் பிறரும் முன்னர் சூரபன்மனால் துன்பமுற்ற காரணம் யாது? என்று வினவினன். வியாழபகவான், "முன்னர் தட்சன் சிவபெருமானை விலக்கிச் செய்த வேள்வியில் தேவர்களும் முனிவர்களும் கலந்துகொண்டதால் அவ்வாறு துன்பமுற்றனர்கள் என்று கூறி அந்த வரலாற்றைக் கூறலானர்.

தேவகாண்டம் முற்றிற்று.

6. தட்ச காண்டம்

துதி

மாயையின் வலியோனுகி மான்முத லோரைவென்ற
ஆயிரத் தோரெட் டண்டம் அரசுசெய் துகநூற் றெட்டும்
காயம தழிவின் ருகிக் கடவுளர்க் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்ருள் சென்னி வைப்பாம்.

1. உபதேசப் படலம்

உலகங்களுக்குள் உயர்ந்து ஒளி மயமாய் விளங்குவது சத்தியலோகம். இதன் தலைநகரம் மனுேவதியாகும். தேவர்களும் முனிவர்களும் புதல்வர்களும் புடைசூழ மணித்தவிசில் பிரமதேவர் வீற்றிருந்தார். அவர் ஜெபமாலை, கமண்டலம், வேதம் இவைகளைக் கரத்தில் ஏந்திப் படைப்புத் தொழில் புரிந்து கொண்டிருந்தார். படைப்புத் தொழில் மேலும் இனிது நடைபெறும் பொருட்டு முதலில் தட்சன்

என்ற புதல்வனை உண்டாக்கினர். பின்னும் மரீசி முதலிய ஒன்பது புதல்வர்களை யுண்டாக்கினர்.

ஒரு நாள் புதல்வர்களில் மூத்தவனும் கல்வி கேள்விகளிற் சிறந்தவனுமாகிய தட்சன் "தந்தையே! மூவருக்குந் தேவருக்குந் தலைவரும், ஞானமூர்த்தியும், உயிர்க்குயிராகி நிற்பவருமான இறைவர் யார்? அதனை எனக்கு உரைத் தருளும்" என்று கேட்டான்.

பிரமதேவர் "மகனே! நாராயணரும் நானும் யாமே பிரமம்" என்று கூறி மலைந்தபோது அருட்பெருஞ்சோதி யாகத் தோன்றியருளிய சிவமே பரம்பொருள். சிவமூர்த்திக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லை" என்றார்.

தட்சன் "பிதாவே! படைப்புத் தொழில் புரிகின்ற உம்மையும், காத்தல் தொழில் புரிகின்ற நாராயணரையும் பார்க்கினும், சங்காரத் தொழில் புரியும் சிவமூர்த்தி உயர்ந்தவர் என்பதற்குக் காரணம் யாது? என் மனம் தெளியக் கூறுவீர்" என்று மீண்டுங் கேட்டான்.

பிரமதேவர் கூறினர் "மகனே நீ என்பால் வேதங்களை யெல்லாம் ஓதியும் உனக்குச் சிந்தையில் தெளிவு ஏற்படவில்லை. சங்காரத் தொழிலில் சிருஷ்டி, ரக்ஷகம் என்ற இரு தொழில்களும் அடங்கும். சிவபெருமான் ஒருவரே சர்வ சங்கார காலத்திலே அகில உலகங்களையும் எங்களையும் ஒடுங்கச்செய்கின்றார். சூரியன் முன்னே ஆம்பல் குவிதலும் பயிர் தழைப்பதும் தாமரை மலர்தலும் போலே சிவசந்நிதியில் ஐம்பெருந் தொழில்களும் நடைபெறுகின்றன. பிரமன், திருமால், உருத்திரன் என்ற மூவர்க்கும் சிவமே தலைவர். அவரை வேதத்தில் 'சதுர்த்தம்' என்று கூறப்பட்டிருக்கின்றது.

மகனே! வேதத்தில் மற்றவரைப் பிரமம் என்று கூறுவது முகமனாகும். நதிகள் யாவும் கடலையே யடைவது போல் ஆன்மாக்கள் யாரை வணங்கினாலும் அவ் வணக்கங்கள் சிவபெருமானையே சேரும். சிவபெருமான் ஆதியும் நடுவும் அந்தமும் இல்லாதவர். எங்கும் நிறைந்தவர். உயிர்க்குயிரானவர். முழுதொருங்குணர்ந்தவர்.

சிவத்தையன்றி எங்களைப் பரம்பொருள் என்று கருதி எமக்கு சிவமூர்த்தியைப் பார்க்கிலும் அதிக சிறப்புச் செய்ப வர்கட்கு நன்மை விளையாது. நரகமே விளையும். சிவத்துடன் சமம் என்று கூறுவதும் பிழை. அப்பெருமான் தனக்குவமை யில்லாதவர். அவரே பசுபதி. நாங்கள் பசுக்கள். நாங்கள் சிவமூர்த்தியை வழிபட்ட ஆலயங்கள் பலப்பல. அவற்றைக் காண்பாயாக. சிவனருள் பெறாது முத்தியடைந்தவரில்லை. சிவனருள் பெறாது வாழுந் தேவரும் இல்லை. ஆதலால் நீ தவத்தைச் செய்து சிவத்தை அடைவாயாக'' என்று கூறினார்.

பதியரன் பாசந் தன்னில் பட்டுழல் பசுநாம் என்றே
விதியொடு வேதங் கூறும் மெய்மையைத் தெளிய
வேண்டின்
இதுவென உரைப்பன் யாங்கள் இவ்வர சியற்ற ஈசன்
அதிர்கழல் அருச்சித் தேத்தும் ஆலயம் பலவுங் காண்டி.

அவனருள் பெறாது முத்தி அடைந்தனர் இல்லை; அல்லால்
அவனரு ளின்றி வாழும் அமரரும் யாரும் இல்லை.
அவனருள் எய்தின் எய்தா அரும்பொருள் இல்லை; ஆணை
அவனல திறைவன் இல்லை அவனைநீ அடைதி யென்றான்.

2. தட்சன் தவம் செய் படலம்

பிரமதேவரால் சிவபெருமானுடைய பெருமைகளைக் கேட்டான் தட்சன். பண்டை வினைப்பயனால் அவனுடைய் உள்ளம் முத்தி நலத்தை விரும்பாது ஆட்சிப் பதவியை விரும்பியது தந்தையிடம் விடை பெற்று, பிரமதேவருடைய மனத்தினின்றுந் தோன்றிய மானச சரோவரத்தை யடைந் தான். பிராணவாயுவால் மூலத்தழலை யெழுப்பி, மனத்தை ஒருமுகப்படுத்தி ஆயிரம் ஆண்டுகள் அரிய பெரிய மாதவஞ் செய்தான்.

அவனுடைய தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் வெள்ளியங் குன்றில் பவளக் குன்று தோன்றியதுபோல், வெள்விடை மீது தோன்றி யருளினார். தட்சன் பட்சத்துடன் பரமனைப் பல முறை பணிந்து போற்றினான்.

தயாநிதியாகிய சிவபெருமான், "தவத்திற் சிறந்த தட்சனே! உனக்கு என்ன வரம் வேண்டும். கேள்" என்றார். தன்னேரில்லாத தலைவராகிய சம்புவிடம் தட்சன் பிறவி மாசற முத்தி நலம் கேட்டானில்லை. காமதேனுவிடம் காடி நீரை ஒருவன் கேட்டது போலவும், கற்பகத்தினிடம் ஒருவன் கண்ணுடித் துண்டைக் கேட்டது போலவும் தட்சன் வரங் கேட்டனன்.

"கண்ணுதற் கடவுளே! நிலவுலகம், கந்தர்வ வுலகம், சத்தியலோகம், வைகுந்தம் முதலிய எல்லா வுலகங்களிலும் நான் ஆணை செலுத்தி ஆட்சி புரியவேண்டும். 'உம்மை வணங்குவோர் யாரும் என்னை வந்து வணங்க வேண்டும். தானவரும் வானவரும் என் கட்டளைக்கு அடங்கி நடக்க வேண்டும். உமது பாகம் பிரியாத பராசக்தி எனக்கு மகளாகவும், அந்த அம்பிகையை தேவரீர் மணந்து எனக்கு மருமகனாக வரவும் வேண்டும்" என்று வரம் கேட்டான். எம்பெருமான் அவ்வரங்களை வழங்கிவிட்டு மறைந்தருளினார். தட்சன் மிக்க மகிழ்ச்சியடைந்தான்.

தட்சன் பிரமதேவரைத் தன்னிடம் வருமாறு எண்ணினான். பிரமதேவர் தட்சன் பெற்ற வரங்களை நினைத்து வருந்தினார். அமுதத்தைத் தடவினாலும் வேம்பு கசக்கவே செய்யும். "அந்தோ அரிய பெரிய தவஞ்செய்து ஆலமுண்ட நீலகண்ட மூர்த்தியிடம் வீடு பேறு வேண்டாது நாடு புரக்கும் நவையைப் பெற்றானே? என்னே இவன் அறிவு? விதியின் விளைவு" என்று எண்ணி, தட்சனிடம் வந்து ஆசி கூறினார்.

'தட்சன்' "தந்தையே! நான் இருந்து ஆட்சிபுரிய மாட்சிமை தங்கிய அழகிய நகரத்தை உண்டு பண்ணுக" என்றான். பொன்னகரும், மற்ற எந்நகரமும் நாணுமாறு ஓர் விசித்திரமான தட்சமாபுரியைப் பிரமதேவர் உண்டாக்கினார். அங்கு அமைத்திருந்த நவமணி மாளிகையில் அரியணைமீது அமர்ந்து தட்சன் ஆட்சி புரிந்தான்.

தேவ குருவாகிய வியாழ பகவானும் இந்திரன் முதலிய எண்திசை அதிபர்களும் ஏனைய தேவர்களும் தட்சனிடம் வந்து அவனை வணங்கி, அவனுடைய ஆட்சிக்கு அடங்கி அவன் இட்ட ஏவலின் வழி நின்றார்கள்.

தட்சனுடைய வரபலத்தால் இந்திரனுதி இமையவர்கள் அடங்கியதைக் கண்டு அசுரகுருவாகிய சுக்கிரன் மகிழ்ந்து அசுரேந்திரனை யனுகி தட்சனிடம் சென்று நட்பு கொள்ளு மாறு ஏவினன். அசுரேந்திரனும் ஏனைய அசுரர்களும் தட்ச னிடம் வந்து வணங்கிப் பணிபுரிந்தார்கள். ஆதித்தன் முதலிய ஒன்பது கோள்களும், யட்சர்களும் வந்து போற்றி செய்து அவனைப் புகழ்ந்து தட்சனுடைய அன்பைப் பெற்றார் கள். இவ்வாறு அரனர் வரபலத்தால் அயன் முதலிய அனை வரும் தன் ஏவலுக்குள்ளாகுமாறு செய்து தட்சன் வெண் கொற்றக்குடை நிழலிலிருந்து செங்கோலோச்சிப் பெருமிதத் துடன் ஆட்சி புரிந்தான்.

3. தட்சன் மகப்பெறு படலம்

அயனருடைய அடிமலரில் தோன்றிய, அருந்ததி பனைய கற்பின் மிக்க, வேதவல்லியை தட்சன் திருமணம் செய்து கொண்டான்.

நாகம் பல ரத்தினங்களை ஈன்றதுபோல் ஆயிரம் மைந் தர்களைப் பெற்றான். அப்புதல்வர்கள் முப்புரி நூல் தரித்து வேதங்கள் அனைத்தும் ஓதி யுணர்ந்தார்கள்.

தட்சன் அம் மைந்தர்களை நோக்கி, "நீங்கள் மானச வாவியை யடைந்து சிவத்தை வேண்டித் தவத்தைச் செய்து, எல்லா உயிர்களையும் படைக்கும் பரிசுபெற்று வாருங்கள்" என்று பணித்தான்.

தட்ச குமாரர்கள் மானச மடுக்கரையில் முழுகி அதன் கரையில் நின்று, பொறி புலன்களை வென்று தவம்புரிய லானர்கள்.

நாரத முனிவர் தட்ச குமாரர்களிடம் வந்து, அவர்கள் தவஞ் செய்கின்ற காரணத்தைக் கேட்டு கை கொட்டிச் சிரித்தார். "தட்ச குமாரர்களே! நீவிர் உய்யும் நெறியை உரைப்பேன். ஆன்மாக்கள் தவஞ்செய்து பெறத் தக்கது பிறவாமையே யாகும். படைப்புத் தொழிலைப் பெறும் பொருட்டுச் சிவத்தை நோக்கிச் செய்வது மதியுடைமை யன்று. படைப்புக் கர்த்தாவாகிய பிரமதேவர் தன் ஐந்து

களில் ஒரு தலையை சிவபெருமான் அரிந்தாரே, அற்ற தலையைப் படைத்துக்கொள்ள முடியாமல் இன்று வரை நான்கு தலையனாக இருப்பதை நீங்கள் அறியவில்லையோ? நீங்கள் வீடுபேற்றை விரும்பாது பதவியை விரும்பித் தவஞ் செய்வது நீராடச் சென்றவர் சேறுடி மீள்வதை யொக்கும். கற்றவர் போற்றும் கண்ணுதலாரிடம் பதவியை விரும்பிப் பெறுவது பொன் விலங்கு பூட்டிக்கொண்டது போலாகும். எத்துணை இன்பம் உயருமோ அத்துணைத் துன்பமும் உயரும். ஆதலால் மறந்தும் பதவியை விரும்பாது வீடுபேற்றை விரும்பித் தவஞ் செய்யுங்கள்'' என்று கூறி சிவ மந்திரம் உபதேசித்துச் சென்றார். நாரதருடைய நல்லுரைப்படி அம்மைந்தர்கள் பெருந் தவஞ்செய்து சிவனருளால் வீடுபேறு பெற்றார்கள்.

மக்கள் நாரதருடைய உபதேசத்தால் முத்திநலம் பெற்றதை யறிந்து தட்சன் வருந்தினான். மற்றும் ஆயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்களுக்கு வேதங்களை ஓதுவித்து, ''என் அன்புடைய மைந்தர்களே! நீவிர் சென்று தவம் செய்து சிவபெருமானிடம் படைப்புத் தொழிலைப் பெற்று வாருங்கள்'' என்றான்.

அம் மைந்தர்கள் மானச சரோவரம் போய் மன ஒருமைப் பாட்டுடன் பசுபதியை நாடித் தவம் செய்தார்கள். நாரத முனிவர் அங்கு சென்று அவர்களிடம் ''மாதவம் புரியும் மைந்தர்களே'' நீங்கள் வருந்தித் தவஞ் செய்கின்றீர்கள்; கரும்பிருக்க இரும்பை மெல்லலாமோ? பதவியை விரும்புவது பிறவிக்கு ஏதுவாகும். ஆதலால் உம் மீதுள்ள காதலால் கூறுகின்றேன். பற்றற்று தவஞ்செய்து பரமன் பால் முத்திநலம் பெறுவீர்கள் என்று கூறி உபதேசித்துச் சென்றார். அவர்களும் அவ்வாறு தவஞ்செய்து பற்றறுத்துப் பசுபதியருளால் முத்திநலம் பெற்றார்கள்.

தட்சன் தன் புதல்வர்கள் நாரதரால் மனம் மாறி சிவத்தினைச் சேர்ந்ததை யறிந்து பெருஞ் சீற்றம் அடைந்தான். என்னுடைய விருப்பத்துக்கு மாறாக ஈராயிரம் புதல்வர்களையும் எனக்கு உதவாமல் செய்த நாரதன் நிலைபேறு இல்லாமல் எங்கும் உழல்வானாக'' என்று சாபமிட்டான். ''இனி

நான் ஆண் மக்களைப் பெறாது பெண் மக்களைப் பெறுவேன்'' என்று முடிவு செய்தான்.

இருபத்து மூன்று பெண்களைப் பெற்றான். சுபுத்தி, புத்தி சுரசை, திருது, துமசை, சிரியை, சீர்த்தி, சிரத்தை, இலச்சை, மேதா, சத்தி, சாந்தை, வபு என்ற பதின் மூன்று பெண்களைத் தருமதேவதைக்குத் திருமணம் செய்து கொடுத்தான். கியாதி, சம்பூதி, சன்னதி, மிருதி, பிருதி, ஊற்சை, அநசூயை, சுவாகா, கமை, சுவதை என்ற பத்துப் பெண்களைப் பிருகு, மரீசி, புலத்தியர், அங்கிரஸ், புலகன், வசிட்டர், அத்திரி, அக்கினி, கிரது, பிதரா என்னும் முனிவர்களுக்கு முறையே திருமணம் செய்து கொடுத்தான். அவர்களனைவரும் பல ஆண் மக்களையும் பெண் மக்களையும் பெற்றெடுத்தனர்.

4. சந்திர சாபப் படலம்

இவ்வாறு பரந்த கிளைகளோடு கூடிய தட்சன் பின்னும் நட்சத்திரக் கூட்டத்து இருபத்தேழு பெண்களைப் பெற்றான். அவர்களை அழகு மிகுந்த சந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுத்து "நீ எல்லோரிடத்தும் சமமாக அன்பு பாராட்டு வாயாக" என்று கூறினான்; சந்திரனும் அவ்வாறே நடந்து வந்தான். சில காலம் பொறுத்து அவர்களில் அழகு மிக்க கார்த்திகை, ரோகிணி என்பவரிடம் மட்டும் அதிக அன்பு செலுத்தி மற்றவர்களைப் புறக்கணிப்பானாயினான். அவர்கள் சிலகாலம் பொறுத்தனர். பின்னர் தந்தையாகிய தட்ச னிடம் போய் அவன் பாதத்தில் விழுந்து அழுது தங்கள் குறையைத் தெரிவித்தனர்.

தட்சன் பெருங்கோபம் அடைந்தான். "சந்திரன் பேரழ கன் என்று கருதி உங்களை அவனுக்குத் தந்தேன். மனைவியர் களிடம் சமமாக நடவாமல் என்னையும் உங்களையும் உதா சீனஞ் செய்தான். அவனுடைய அகந்தை என்னே? அந்த மூடன் நாளுக்கு ஒரு கலையாகத் தேய்ந்து ஒய்ந்து மாய்ந்து போவானாக" என்று சாபமிட்டான்.

சந்திரனுக்கு நாளுக்கொரு கலையாகத் தேய்ந்தது. அற வழியில் வராத செல்வம்போல் ஆயிற்று. இன்னும் ஒரு

கலேதான் எஞ்சியிருந்தது. அவன் அஞ்சி இந்திரன்பால் சென்று தன் குறையைக் கூறி முறையிட்டான்.

இந்திரன் அவனைத் தழுவி, "சோமனே! உனக்கு இப்படி ஒரு துயரம் நேர்ந்ததா? நீ முன்பு ஒரு சமயம் திருக்கயிலாய மலேயில், விநாயகருடைய பெரு வயிற்றையும் அவர் கையிலிருந்த மோதகத்தையும் பார்த்துச் சிரித்தாய். விநாயகர் வெகுண்டு "சண்டாளனுகக் கடவது" என்று உன்னைச் சபித்தார்; அதனுல் அனைவரும் உன்னைக் காணவும் வெறுத்தார்கள். பிரமதேவர் வேண்ட விநாயகர் 'கருணை கூர்ந்து ஆண்டுக்கு ஒருநாள் ஆவணி மாத சதுர்த்தியன்று மட்டும் நீ சனுக இருக்கட்டும் என்று அருள்புரிந்தார். ஆவணி சதுர்த்தியில் மட்டும் உலக மக்கள் உன்னைப் பார்க்காமல் விநாயகரை வழிபட்டு வருகின்றூர்கள். இப்படி ஒரு துயரம் உனக்கு இருக்க, இப்போது மேலும் ஒரு துயரம் நேர்ந்தது. "பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழிபோல் உன் நிலே யமைந்தது. "மதியே, நீ மதியற்ருய். பிரமதேவரிடம் போய் தஞ்சம் அடைவாய். அவர் தன் மகனுகிய தட்சனிடம் கூறி சாபத்தை மாற்றுவார்" என்று இந்திரன் இயம்பினுன்.

சந்திரன், இந்திரன் உரைத்தபடி சத்தியலோகம் போய் நான்முகனுடைய பாதத்தில் வீழ்ந்து தனக்குற்ற சாபத்தைக் கூறி "ஐயனே' தங்கள் மைந்தனிடம் இனிது கூறி எனக்குத் தந்த சாபத்தையும், கோபத்தையும் மாற்றி என்னைக் காப்பாற்றுவீராக என்று கூறினுன். சந்திரனுடைய அவலநிலேயைக் கண்டு உள்ளம் நொந்த பிரமதேவர் கூறினுர்.

"திங்களே! தட்சன் என் மகனுக இருந்தும், வர பலத்தாலும் ஆட்சியின் அகந்தையாலும் என்னைச் சிறிதும் மதிக்கின்றுனில்லே. பழைய தட்சன் அல்லன். முன்னே என்னிடம் உபதேசம் பெற்றுத்தான் இந்த ஆட்சியைப் பெற்ருன். ஆனுல் அவன் இப்போது சிவமூர்த்தியையும் மதியாது மமதையுற்றிருக்கின்ருன். அதிகாரச் செருக்கால் தட்சன் தலேநிமிர்ந்து நடக்கின்ருன். அவனிடம் இன்சொல் இல்லே.

அவன் அகந்தையால் யாரையும் மதிக்கின்றானில்லை. அதனால் அவன் ஆட்சி நிலைபெறாது.

சந்திரனே! கருணைக் கடலாகிய சிவபெருமான் ஒருவரே உன்னை உய்விக்கவல்லவர். தஞ்சம் புகுந்த மார்க்கண்டேயருக்காக மறலியை மாய்த்த மகாதேவர், அடைக்கலம் புகுந்த அமரர் பொருட்டு ஆலமுண்ட நீலகண்டர், உமாதேவியாருடைய திருவிரல்களில் தோன்றி உலகங்களையழிக்க வந்த கங்கை வெள்ளத்தைக் கண்டு நாங்கள் அஞ்சிய போது கங்காநதியைத் தலையில் தாங்கிக் காத்தருளினவர். சிவபெருமானுடைய பெருமை அளவிடற்கரியது. நீ கயிலாயம் சென்று செஞ்சடைக் கடவுளைத் தஞ்சமடைக" என்றார்.

சந்திரன் உடனே விரைந்து சென்று கயிலை மலையையடைந்து, திருநந்தி தேவருடைய அனுமதி பெற்று, சிவபெருமானுடைய சேவடியில் வீழ்ந்தான். "கருணைக்கடலே! தட்சன் தந்த சாபத்தால் கலைகள் தேய்ந்து நிலைகுலைந்தேன். எஞ்சிய கலையும் இன்று அழியும். என் உயிர் ஒழியும், காத்தருள்புரியும்," என்றான். சிவபெருமான் எஞ்சிய ஒரு கலையை எடுத்துச் சென்னியில் சூடிக்கொண்டார். அடியில் வீழ்ந்தவனை முடிமேல் வைத்துக் கருணைபுரிந்தார். "இந்த ஒரு கலை என்றும் அழியாது. சோமனே! உன் மாமன் தந்த சாபத்தால் தினம் ஒரு கலை தேயும். நம் அருளால் தினம் ஒரு கலை வளரும்" என்று கூறி அருள்புரிந்தார். இறைவனுடைய கருணையால் ஒருவாறு நிம்மதியடைந்தான்.

சந்திரன் சிவமூர்த்தியால் உய்வு பெற்றதை தட்சன் அறிந்து சீற்றமடைந்தான். "நான் தந்த சாபத்தை என் தந்தையும், தந்தைக்குத் தந்தையும் நீக்க நினைகிலர். என்னிடமும் அதுபற்றிக் கூற அஞ்சினார்கள். தந்தையும் தாயும் இல்லாத ஒருவனோ சாபத்தைத் தடுப்பது? மிகவும் நன்று. ஐந்தொழிலும் நாம் புரிகின்றோம் என்ற அகந்தையுற்றான் போலும். தட்சனுக்கு நாம்தானே வரமளித்தோம் என்று எண்ணிய சிவன் என் ஆணையை இகழ்ந்தனன். சிவன் செயல் வெறுக்கத் தக்கது" என்று கூறி வெகுண்டான்.

புலகர் என்ற முனிவர் தட்சனை நோக்கி, "தட்சப்பிரசாபதியே! சிவபெருமான் கருணைக் கடல். அவர் அடைக்கலம் புகுந்தவரை ஆதரிப்பவர். அதனால் சந்திரனை ஆட்கொண்டார். ஆதலால் நீ சிவமூர்த்தியையிகழாதே. சிவமூர்த்தியைப் பகைத்தால் உனக்கு இறுதி நேர்வது உறுதி" என்றார்.

தட்சன் "புலகரே! உமது அறவுரை நன்றாகவுளது. மாலயனாதி வானவர்கள் என் ஏவலின் வழி நின்று பணி புரிகின்றார்கள். பெற்ற வரத்தை சிவனால் மாற்ற முடியுமோ? ஆதலால் சிவன் என்னை என் செய்ய இயலும்?" என்று கூறி நகைத்தான்.

புலகர், "செம்மலே! ஈசனை இகழ்ந்து உய்ந்தவர் இல்லை. சிவமூர்த்தி உன் சாபத்துக்கு ஒரு மதிப்புக் கொடுத்து நாளுக்கு ஒரு கலை தேயும் என்றுதானே கூறியுள்ளார். சிவபெருமான் உனக்கு மருமகனாக வரும் தன்மையுளது; சாந்தமடைவாய்" என்றார். தட்சன் சாந்தமடைந்தான்.

5. உமை கயிலை நீங்கு படலம்

திருக்கயிலாய மலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளினார். உமாதேவியார் இறைவனை யஞ்சலித்து "உமது தத்துவ நிலையைச் சாற்றி யருளும்" என்று கேட்டார்.

பரசிவம் "தேவி! பேரும் குணமும் உருவும் செயலும் இல்லாத நாம் சக்தியால் அருளுருவங் கொண்டு செயல் படுகின்றேன். பராசக்தி, ஆதிசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி என்ற ஐம்பெருஞ் சக்திகளால் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐம்பெருந் தொழில்களை ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுப் புரிகின்றேன்" என்றார்.

இதனைக்கேட்ட அம்பிகை "சுவாமி! என்னை உம்முடைய சக்தியென்று கூறுவதால் என்னால்தான் இத்தனையும் நடைபெறுகின்றன" என்று வியந்து விளம்பினாள். இறைவர் "தேவி! உன்னை நீ வியந்து உரை செய்தாய். ஆனால் நாம்

இன்றி எவையும் இயங்கமாட்டா.'' என்று கூறி சிவம் தனித்து நின்றது.

அகில உலகங்களும் அசைவற்றுச் சடங்கள் ஆயின. எங்கும் இருள் மூடியது. அப்போது சிவமூர்த்திக்கு ஒரு கணம். உலகங்கட்குப் பல யுகங்கள்.

அம்பிகை அரன் அடியில் வீழ்ந்து, "எம்பெருமானே! எல்லாம் நீரே என்பதை உணர்ந்தேன். கருணை புரிக'' என்று வேண்டினாள். சிவபெருமான் உருத்திரர்கட்கு முதலில் உணர்வு தந்தருளினார். அவர்கள் திருவிடைமருதூர் வந்து அந்த இருள் சூழ்ந்த இரவில் சோடசகலாப் பிரசாதத்துடன் ஐந்தெழுத்தை ஓதி வில்வம் தும்பை முதலியவைகளால் அர்ச்சித்து சிவபூஜை செய்தார்கள்.

அந்த இரவுதான் சிவராத்திரி என வழங்குகின்றது. பதினொரு உருத்திரர்கள் செய்த வழிபாட்டால் சிவமூர்த்தி அருள்புரிய மாலயனாதி வானவரும் சகல உயிர்களும் உணர்வு பெற்றன. உருத்திரர்கள் சிவனிரவில் வழிபட்டோர் எல்லா நலன்களும் எய்தி இன்புறுமாறு இறைவரிடம் வரம் பெற்றார்கள்.

சிவபெருமான் தட்சனுக்குத் தந்த வரத்தை நிறைவேற்றத் திருவுளங் கொண்டு, "தேவி! உன்னை நீ வியந்ததனால் நாம் விலக அகில உலகங்களும் சடமாகி நின்றன. அப் பாவம் உன்னைத்தான் சாரும். மக்கள் பாவம் மாதாவைத்தானே சேரும். நீ சென்று யமுனா நதியில் வலம்புரிச் சங்கு வடிவில் தவஞ் செய். பின்னர் தட்சனிடம் அவன் தவப் பயனால் வளர்ந்து தவஞ் செய்வாயாக. அப்போது நாம் அங்கு வந்து உன்னைத் திருமணஞ் செய்து அருள்புரிவோம்'' என்று கட்டளையிட்டருளினார்.

எம்பிரானுடைய ஆணையின்படி எம்பிராட்டி அமிழ்தம் போன்ற சுவையுடைய யமுனா நதியில் வேத மூலம் போன்ற ஒரு தாமரை மலரில் வலம்புரிச் சங்கு வடிவுடன் தவஞ் செய்து கொண்டிருந்தார்.

6. காளிந்திப் படலம்

ஏழு புண்ணிய நதிகளில் ஒன்று யமுனை. இது சூரிய குமாரி. களிந்த மலையில் தோன்றி வருவதனால் காளிந்தி என்று பேர் பெறும். நீல நிறத்துடன் புவிமகள் அணிந்த நீலமாமணி போல் ஓடும் பீடு பெற்றது.

ஒரு மாசி மகத்தன்று தட்சன் வேதவல்லியுடன், அயன் முதலிய அமரர் ஆசிகூற யமுனையில் வந்து நீராடினான். அங்கிருந்த வலம்புரியைக் கண்டு வியந்து எடுத்தான். உடனே அது ஒரு பெண்ணுருவாயிற்று. சிவனார் தந்த வரத்தின்படி பராசக்தியே பாவையாக வந்தாள் எனவுணர்ந்தான். வேதவல்லியிடம் தந்தான். அவள் தன் மாளிகைக்குக் கொண்டு போய்த் தாலாட்டி தாட்சாயணி என்று பெயர் சூட்டினாள். அம்பிகை இனிது வளர்ந்தாள்.

7. உமை தவம்புரி படலம்

வேதாகமங்கள் யாவும் ஓதாதுணர்ந்த தேவி ஆறு வயது வந்தவுடன், தாய் தந்தையரைப் பார்த்து "நான் சிவபெருமானுக்கே உரியவள். அவர் என்னைத் திருமணம் புரிவது வேண்டித் தவம் புரிவேன்" என்றாள்.

அகிலவுலகங்களுக்கும் அன்னையாகிய தேவியை தட்சனும் வேதவல்லியும் தம் புதல்வியென்று கருதி ஒரு தவக் கூடம் அமைத்து மகளைத் தழுவி உச்சி மோர்ந்து முத்தமிட்டு மகிழ்ந்தார்கள்.

கன்னியர்கள் புடைசூழ தாட்சாயணி தவநிலையில் நின்றார். பன்னிரு வயதையடைந்தாள்.

சிவபெருமான் தவமறை வேதியர் வடிவில் அங்கு எழுந்தருளினார். தேவி அவரைச் சிவனடியார் என்று கருதி வந்தனை வழிபாடு செய்தாள்.

வேதியராக வந்த விமலர் "தாட்சாயணி! நாம் உன்பால் ஒரு பொருளை நாடி வந்தோம்" என்றார்.

தாட்சாயணி, "ஐயனே! உமக்கு என்ன பொருள் வேண்டும்? கூறும். தரத்தக்கதாயின் தங்கு தடையின்றித் தருவேன்," என்றாள்.

வேதியர் "மாதர் மணியே! நாம் உன்னைத் திருமணஞ் செய்ய விரும்பி வந்தோம். நீ தடையின்றி விடை கொடு" என்றார்.

அம்பிகை "அரகர" என்று செங்கரத்தால் செவியை மூடி, வெகுண்டு "வேதியரே! நீ என்ன வார்த்தை புகன்றனை. நான் கயிலை மேவும் கண்ணுதற் கடவுளை வேண்டித் தவம் புரிகின்றேன்" என்றாள்.

அந்தணர் "ஆரணங்கே! வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத சிவமூர்த்தி உன் தவத்துக்குத் தோன்றி அருள் புரிய மாட்டார். வாழைநாரால் மலையைக் கட்டியிழுக்க முடியுமா?" என்றார்.

தேவி "ஐயரே! இறைவர் வரும் பொருட்டு எண்ணற்ற காலம் தவம் புரிவேன். இறைவர் தோன்றாவிடில் சத்தியமாக நான் உயிரை விடுவேன்" இது சரதம். நீர் இங்கிருத்தல் தகாது. எழுந்து போம்; நீர் பித்தர் போலும்" என்று கூறிச் சீறினாள். அரனார் அருகு நின்றவர் அறியா வண்ணம் தாட்சாயணிக்கு மட்டும் தம்காட்சியை யருளினார். அம்பிகை அரனார் அடிமலர்மீது வீழ்ந்து, "கருணாமூர்த்தியே! உம்மையறியாது இகழ்ந்தேன். என்னை மன்னித்தருளும் என்று தொழுது துதி செய்தாள்.

அருகில் நின்ற பாங்கியர் தட்சனிடம் சென்று தொழுது கன்னிமாடத்தில் ஓர் அந்தணன் வந்தான். தாட்சாயணி அவன்மீது காதல் கொண்டிருக்கின்றாள்" என்று கூறினார்கள். தட்சன் தனது அறிவின் திறத்தால், வந்த அந்தணர் அந்தி வண்ணராம் அரனார் எனவுணர்ந்தான்.

8. திருமணப் படலம்

தட்சன் தாட்சாயணியம்மையைத் திருமணஞ் செய்து கொடுப்பேன் என்று எண்ணினான். அன்றே நல்ல நாள் என அறிந்தான். தட்சமாபுரியை அலங்கரிக்கச் செய்தான். கன்னி மாடம் போய். இறைவனை இறைஞ்சினான். மாலயனாதி வானவர்கட்கெலாம் வருக என்று அழைப்பு அனுப்பினான். மலரில் வண்டு என வானவர்கள் வந்து சூழ்ந்தார்கள்.

வேதவல்லி தாட்சாயணியைத் திருமஞ்சனம் ஆட்டி, அணிகளைப் பூட்டி மணக் கோலம் புனைந்தாள். திருமணப் பீடத்தில் அந்தணராக வந்த அரனாரையும் தாட்சாயணியையும் இருத்தினான். வேதவல்லி பொற்கரத்தில் நீர்விட, வேத மந்திரம் கூறி அம்மை கரத்தை ஐயன் கரத்தில் வைத்துக் கன்னிகாதானம் செய்தான். அப்போது அவன் உளத்தில் இறைவன் தன் மருகன். நாம் மாமன் என்று ஒரு தருக்கு உண்டாயிற்று.

பிரமதேவர் திருமணச் சடங்குகளைத் தொடங்கலானார். உடனே இறைவன் திருவுருமறைந்தருளினார்.

அருள்வடிவமாகிய இறைவன் திடீர் என்று மறைதலும் திருமணப் பேரவையில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. தட்சனுக்கு அதிர்ச்சியுண்டாயிற்று. தேவரும் மூவரும் முனிவரும் முத்தரும் சித்தரும் கின்னரரும் கிம்புருடரும் உரகரும் நாகரும் சாரணரும் குழுமியிருந்தார்கள். அந்த அவையில மாப்பிள்ளை மறைந்து விட்டால் எப்படியிருக்கும் தட்சனுடைய தலையில் இடி விழுந்தாப் போன்ற கலக்கம் ஏற்பட்டது. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். திருவருளின் செயலை உணர வல்லார் யார்?

பெற்ற நிதியை யிழந்தது போல் உலகன்னையாகிய தாட்சாயணி பெருந்துயர் உழந்தாள். பொருக்கென எழுந்து பாங்கியர் கூட்டத்தில் சென்று விம்மி உருகி அழுதாள். இறைவனை நினைந்து தொழுதாள்.

உயிர்த்தனள் கலுழ்ந்தனள் உணர்வு மாழ்கியே
அயர்த்தனள் புலர்ந்தனள் அலமந் தங்கமும்
வியர்த்தனள் வெதும்பினள் விமலன் கோலமே
மயிர்த்தொகைப் பொடிப்புற மனங்கொண் டுன்னுவாள்.

"எம்பெருமான் என்னை விட்டு மறைந்தார் எனில் என் தவம் குறைவு என்றுதான் கருதுதல் வேண்டும்" என்று தேவி ஆவிசோர அலமந்தாள்.

வேதவல்லி தாட்சாயணியின் கண்ணீரைத் துடைத்துத் தழுவி, "அம்மா! மேலும் தவஞ் செய்; சிவம் அருளும்"

என்றாள். அம்மை தான் முன் செய்த தவச் சாலையில் சென்று சிவத்தை நோக்கித் தவத்தை மேற்கொண்டாள். மாலயனாதி வானவர்கள் மருண்டு நின்றார்கள்.

தட்சன் மிகவும் சினந்தான். நாசியில் விரல் வைத்துச் சிரத்தையசைத்தான். கரங்கொட்டி உக்கிரமாகச் சிரித்தான். "என்னே சிவனுடைய செய்கை? தாரை வார்த்துக் கொடுத்தேன். திருமணச் சடங்கு தொடங்கும் போது மறைந்தான். பித்தன் என்பதனைப் பேருலகறியச் செய்து விட்டான். எனக்குப் பெரிய அவமானத்தைச் செய்தான். இதைவிடப் பழி என்ன இருக்கின்றது?" என்றெல்லாம் கூறி உள்ளம் நொந்தான். மாலயனாதி வானவர்கட்கு விடை கொடுத்து அனுப்பினான்.

சால நாள் கழிந்த பின் சிவபெருமான் தவமுனிவராய் வந்து, தாட்சாயணிக்குக் காட்சி தந்தான். அம்பிகையை யெடுத்துத் தன் இடப்புறத்தில் வைத்து விடைமீது வந்த விமலன் கயிலை மலை சேர்ந்தான். இதைக்கண்ட பாங்கியர் அதிசயம் அடைந்தார்கள்.

பாங்கியர் தட்சனிடம் வந்து பணிந்து, "அண்ணலே! சிவமூர்த்தி தவ முனிவராக வந்து தாட்சாயணிக்குத் தன் திருவுருவக் காட்சி தந்து விடையின்மீது எடுத்து வைத்துச் சென்றார்' என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட தட்சனுக்கு நெருப்பில் நெய்விட்டது போல் மேலும் சினம் பொங்கி எழுந்தது. மனம் புழுங்கினான். தன்னை வணங்க வந்த தேவர்களைப் பார்த்து "அமரர்களே! அரன் செயலைக் கண்டீர்களா? தாய் தந்தையரின் அனுமதி யின்றி என் தவப் புதல்வியைக் கவர்ந்து சென்றான். இது யார் செய்கின்ற காரியம்? சிவன் என்றால் எதையும் செய்வதா? என்னை மதியாது இவ்வாறு செய்தான்" என்று கூறி நொந்து கொண்டான். செய் நன்றி மறந்த தட்சன் அது முதல் சிவமூர்த்தியை நினைத்தானில்லை. மேலும் நிந்தனையும் செய்து கொண்டிருந்தான்.

9. தக்கன் கயிலை செல் படலம்

பிரமதேவர் ஏனைய தேவர்களுடன் கூடிச் சிந்திப்பாராயினர். "சிவத்தை வேண்டித் தவத்தைச் செய்து தட்சன் உயர்வு பெற்றான். நன்றி மறந்து எம்பிரானை இகழ்கின்றான். விரைவில் அழிவான். நாம் தட்சனுக்கு அஞ்சி அவனிடம் ஏவல் புரிகின்றோம். அதனால் நமக்குந் தீங்கு விளையும். ஆதலால் தட்சனைச் சமாதானம் செய்து வைத்தால் அவனுக்கும் நமக்கும் உய்வு உண்டாகும்" என்று எண்ணினர்.

எல்லோரும் தட்சனிடம் வந்து "தட்சப்பிரசாபதியே! உன் வாழ்வுக்கு மூல காரணம் நீலகண்டன் திருவருளேயாகும். நீ அவரைப் பகைப்பது நல்லதல்ல. குற்றம் பார்த்தால் சுற்றம் இல்லை. எனவே நீ திருக்கயிலாய மலை சென்று சிவபெருமானைக் கண்டு சமாதானம் அடைந்து வாழ்வாயாக" என்று கூறினர்கள்.

தட்சன் அமரர்கள் இன்னுரைக்கு இணங்கினான். திருக் கயிலை மலையையடைந்து திருநந்தி தேவர் உறையும் கோபுர வாயிலைச் சேர்ந்தான். அவன் உள்ளத்தில் இறைவன் அகிலலோக நாயகன் என்றும் அம்பிகை அகிலாண்டங்களையும் ஈன்ற அன்னையென்றும் எண்ணம் உண்டாகவில்லை. அம்பிகையை மகள் என்றும் மகாதேவனைத் தன் மருகன் என்றும் எண்ணி தருக்குடன் தலை நிமிர்ந்து சென்றான். காவல் பூதர்கள் அவனைத் தடுத்து நிறுத்தினர்கள். "ஏய்! நில், எங்கள் அனுமதியின்றி உள்ளே செல்லக் கூடாது" என்றார்கள்.

தட்சன் "காவல் பூதர்களே! இது என் மகள் வாழும் இடம். சிவன் என் மருகன். நான் மாமனார். என்னைத் தடுக்க நீங்கள் யார்?" என்றான். இதைக் கேட்ட பூதர்கள் சிரித்தார்கள். "பேதையே! உன் அறிவிருந்தவாறு என்னே! அகிலாண்டங்களையும் ஈன்ற மாதா உன் தவத்திற்கு இரங்கி மகளாக வந்தாள். ஒரு தாய் தன் குழந்தையைப் பார்த்து 'என்னைப் பெற்ற செல்வமே' என்று அழைப்பாள். அக் குழந்தையா அவளைப் பெற்றது? மூடனே! நீ உய்யவேண்டும்

என்று கருணையால் கழறுகின்றோம். உன் செருக்கை விடுத்து இறைவனையடுத்து, வினை தணிந்து, பரமபதியின் பாதம் பணிந்து சுகப்படுவாய். இல்லையேல் இந்த இடத்தை விட்டு விரைந்து உன் இருப்பிடத்துக்குப் போ'' என்று வெகுண்டு விளம்பினார்கள்.

இதைக் கேட்ட தட்சன் நாணினான். அவர்களைக் கடந்து உள்ளே செல்ல மாட்டாதவனாய் நின்று கூறுகின்றான்.

"காவல் பூதர்களே! எனக்கு நாராயணனும் நான் முகனும் ஏவல் புரிகின்றார்கள். நான் ஒருபோதும் உங்கள் சிவனைப் பணியமாட்டேன். இனி சிவனை யாரும் பணியாமல் இருக்கும்படிச் செய்குவன்'' என்று ஊன்று கூறிவிட்டுத் தன்னகரம் சேர்ந்தான்.

தட்சன் பிரமாதி தேவர்களைப் பார்த்து, "தேவர்களே! உங்கள் சொல்லைக் கேட்டு நான் கயிலை சென்று காவல் பூதர்கள் தடுக்கப் பெரிய அவமானத்தையடைந்தேன். அதைச் சொல்ல என் உள்ளம் நாணுகின்றது. ஆதலால் இன்று முதல் நீங்கள் யாரும் சிவனை வணங்கக் கூடாது. சிவனை மதிக்கக்கூடாது. என்னை மதியாத பித்தனை நீவிர் யாரும் புகழக் கூடாது. என் கட்டளையை மீறுவீராயின் உங்கள் பதவிகளையும் உரிமைகளையும் அழித்துவிடுவேன்'' என்றான். தட்சனுடைய கட்டளைக்கு இணங்கிய அமரர்கள் அவனை அஞ்சலித்து அகன்றார்கள்.

தேவர்கள் யாவரும் தட்சனுடைய ஆணையை மறுக்க முடியாதவர்களாய் வேதனையடைந்தார்கள்.

10. பிரம யாகப் படலம்

பிரமதேவர் ஒரு வேள்வியைச் செய்யத் தொடங்கினார். "இதனால் எனக்கு மரணமே நேர்ந்தாலும் நான் சிவமூர்த்திக்கு முதலில் அவிர்ப்பாகந் தந்து சிவனருள் பெறுவேன்'' என்று எண்ணினார். தன் புதல்வர்களை அழைத்து "நீங்கள் போய் திருமால் முதலிய அனைவரையும் அழைத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டார். திருக்கயிலை மலைக்குச் சென்று, நந்தி தேவர் அருள் பெற்று உள்ளே போய் அம்மை

யப்பனை அன்புடன் அஞ்சலித்து, "அடியேன் செய்யும் வேள்விக்கு எழுந்தருள வேண்டும்' என்றார்.

அந்திவண்ணர் புன்முறுவல் புரிந்து நமது நந்திதேவன் வருவான். நீ போய் வேள்வி செய்" என்று கூறியருளினார்.

நான்முகக் கடவுள் அங்கிருந்து புறப்பட்டுத் தட்சனிடம் போய் "நான் செய்யும் வேள்விக்கு நீ உன் சுற்றத்துடன் வருக" என்று அழைத்தார்.

வேள்விச் சாலைக்குத் திருமால் முதலிய சகல தேவர்களும் வந்தார்கள். சிவமூர்த்திக்குத் தரும் அவிர்ப்பாகத்தைத் தடுத்துக் கெடுக்க வேண்டும் என்று எண்ணித் தட்சனும் தன் பரிவாரங்களுடன் வந்தான். பிரமதேவர் எழுந்து அவனை வரவேற்று அவனுக்கு ஓர் ஆசனந் தந்து அவனை அமரச் செய்தார்.

சிவபெருமான் நந்திதேவரை நோக்கி, "நந்தீ! நீ பிரமன் புரியும் வேள்விக்குச் சென்று நமக்குரிய அவியைப் பெற்று வருக" என்று கூறி அனுப்பினார். வேள்விச் சாலைக்குத் திரு நந்திதேவர் வந்தார். பிரமதேவர் துண்ணென எழுந்து நநதிதேவரைப் பணிந்து அவரை ஒரு மணித்தவிசில் இருத்தினார். நந்திதேவருடன் வந்த பூதகணங்கட்கும் ஆசனந் தந்தார். வேள்வியைத் தொடங்கினார்.

இதனைக் கண்ட தட்சன் பெரிதும் வெகுண்டான். "சுடலையில் நடம்புரியும் சிவனுடைய காவலனும் பூதர்களும் இச்சபையில் நடுநாயகமாக இருப்பது தகுமோ? நான் முகனே! நீ சென்று சிவனையழைக்கலாமா? இக்காவல் நந்தியை என் முன் பணிந்து பீடத்தில் இருக்கச் செய்ய லாமா! நீ தந்தையாதலால் மன்னிக்கின்றேன். இல்லையேல் உன் தலைகளைத் துணிப்பேன். அன்றி மயானத்திலாடும் சிவனுக்கு முதலாவதாக அவிர்ப்பாகந் தரக்கூடாது. தர வேண்டும் என்று கூறும் வேதத்தை விலக்குங்கள்" என்றான்.

இச் சிவ நிந்தையைக் கேட்ட திருநந்தி தேவர் இரு கரங்களால் செவியைப் பொத்திக் கொண்டார். திருவைந் தெழுத்தைச் சிந்தித்தார். திரிபுரம் எரித்த சிவபெருமா னுடைய கருணையால் தண்டு ஏந்திய சிலாத குமாரராம்

நந்திதேவர் பெரிதும் சீற்றம் அடைந்தார். அதுகண்டு அனைவரும் அஞ்சினர்கள். மாலயனாதி வானவர்கள் நடுங்கினார்கள்.

திருநந்திதேவர் தட்சனைப் பார்த்து; "பேதையே! சிவ நிந்தை செய்த வாயைக் கிழிப்பேன். சிவ மூர்த்தியின் கட்டளையில்லையென்று உன்னை விட்டு விட்டேன். இனியொரு முறை சிவநிந்தை செய்தாயேல் உன் சிரத்தைத் துணிப்பேன். சிவமூர்த்திக்கு அவியில்லை என்று விலக்கினாய். சிவ மூர்த்தியை விலக்கி வேள்வி புரிவோரது தலை அறுபடக் கடவது; தட்சனே! உன் செல்வம் முற்றும் விரைவில் அழியக் கடவன; சிவநிந்தை செய்த உன் தலை அற்று, வேறு ஒரு சிறு தலை உண்டாகக் கடவது; உன்னை ஆதரிக்கும் இத் தேவர்கள் ஒரு நாள் மாண்டு மீண்டும் உய்வு பெறுக. சூர பன்மனால் இத்தேவர்கள் பல யுகங்கள் துன்புற்று வருந்தக் கடவது" என்று சாபமிட்டுவிட்டுப் புறப்பட்டுக் கயிலைமலை சென்று, எல்லாவற்றையும் உமையொருபாகரிடம் உரைத்து விட்டுக் கோபுர வாயிலில் நின்றார்.

பிரமதேவர் அஞ்சி அத்துடன் அந்த வேள்வியை நிறுத்தி விட்டார். என்ன விளையுமோ என்று இமையவர் அஞ்சினார்கள். தட்சன் சிறிது அஞ்சித் தன்னகரம் போய்ச் சேர்ந்தான்.

11. சாலை செய்படலம்

பிரமதேவருடைய யாகம் பாதியில் தடைபட்ட பின், நந்தியம் பெருமானுடைய வெஞ்சாபத்துக்கு அஞ்சி, தேவர்களும் முனிவர்களும், அந்தணர்களும் யாகம் புரியாதிருந்தார்கள். தட்சன் பண்டைத் தீவினைப் பயனால் ஒரு நாள் தன் முன் இருந்த தேவர்களைப் பார்த்து "தேவர்களே! நீங்கள் பல காலமாக யாகம் செய்யாது இருப்பதன் காரணம் யாது?" என்று கேட்டான்.

தேவர்கள் "பிரம குமாரரே! முன்னால் பிரமதேவர் செய்த வேள்வியில் சிவமூர்த்திக்குத் தரும் அவிர்ப்பாகத்தைத் தடுத்தீர். அதனாலும், நந்தி தேவருடைய சாப மொழியாலும் அஞ்சி நாங்கள் வேள்வி செய்வதில்லை" என்றார்கள்.

இதனைக் கேட்ட தட்சன் நகைத்து "நான் ஒரு பெரிய யாகம் செய்வேன். அது நன்கு முடியுமானால் பின்னர் நீங்கள் அதைப் பின்பற்றிச் செய்யுங்கள்" என்று கூறினான். விச்சுவ கன்மனை யழைத்து ஒரு சிறந்த யாகசாலை யமைக்குமாறு கட்டளை யிட்டான்.

*கனகலம் என்ற இடத்தில் கங்கைக் கரையில் ஆயிரம் யோசனை பரப்புள்ளதாக ஒரு அழகிய யாக சாலை யமைத்தான். நாலு திசைகளில் நான்கு கோபுரங்களும், உணவுப் பொருள்கள் வைக்கப் பண்டக சாலைகளும், பெண்கள் இருக்கத் தனியிடங்களும், சமையற்கூடங்களும் உணவருந்தும் மண்டபங்களும், நடுவில் பெரிய அளவில் சதுரம், வட்டம், கோணம் என்ற மூன்று வடிவங்களில் ஓமகுண்டங்களும், ஓவியங்களும், மாலும் அயனும் திசை பாலகர்களும் இருக்கும் ஆசனங்களும், தட்சன் இருக்கும் ஆசனமும் ஏனையோர் இருக்கும் பீடங்களும் உண்டாக்கினான்.

தட்சன் யாக சாலையின் அழகைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தான். யாகத்துக்கு வேண்டிய சமித்து முதலிய சாதனங்களைக் கொணருமாறு முனிவர்களுக்குக் கட்டளை யிட்டான். காமதேனு, சங்க நிதி, பதுமநிதி, சிந்தாமணி, கற்பகம் இவைகளைப் பார்த்து எல்லாப் பொருள்களையும் படைத்துத் தருமாறு பணித்தான். உணவுபடைக்க முப்பதினாயிரம் வேதியரை ஏற்படுத்தினான். தேவர்கள், முனிவர்கள், வேதியர்களை அழைத்து வருமாறு தூதுவரை ஏவினான். தூதர்கள் திருமால், திசைமுகன், இந்திரன், திசை பாலகர்கள், முனிவர்கள், நவகோள்கள், அந்தணர்கள் முதலிய அனைவர்களையும் அழைக்க, எல்லோரும் தட்சனுடைய ஆணைக்கு அஞ்சி அலைகடல் போல் வந்து கூடினார்கள், இலட்சுமி, சரஸ்வதி, இந்திராணி, அரம்பையர்கள், ஆகிய பெண் மணிகளும், ஆதித்தர்கள், உருத்திரர்கள், வசுக்கள், மருத்தர் முதலியோர்களும் கனகலத்தில் வந்து குழுமினார்கள்.

தட்சன் எல்லோரையும் வரவேற்றனன். பிரமதேவரையும் நாராயணரையும் சிறந்த பீடங்களில் இருத்-

* கனகலம் என்ற இடம் ஹரித்துவாரத்துக்கு அருகில் இருக்கின்றது.

திஞன். இந்திரன் முதலிய இமையவர்கள் வரிசையாக அமர்ந்தார்கள். தட்சனுடைய வேள்விக்குச் சென்று நல்லுணவு உண்டு வருவோம் என்று பூவுலகில் உள்ள வேதியர்கள் அங்கு சென்று மொய்த்திருந்தார்கள்.

தட்சன் தன் தூதர்களைப் பார்த்து, "நீங்கள் அழைத்தவர்களில் மறுத்தவர் உளரோ?" என்று கேட்டான்.

"அகத்தியர், சனகர். அத்திரி, வசிட்டர், பிருகு, ததீசி, துருவாசர், பராசரர் என்பவர்கள் உமது யாகத்துக்கு வர மறுத்தார்கள்" என்று தூதுவர் கூறினர்கள். அவர்கள் சிவனுடைய பக்தர்கள் போலும். அவர்கள் வராமையால் நமக்கு என்ன குறைவு என்று ஏளனமாகச் சிரித்தான்.

12. ததீசிப் படலம்

ததீசி முனிவர் மிகவும் சிறந்தவர், திருமாலையும் வென்றவர். வச்சிரயாக்கையுடையவர்.

ததீசி முனிவரும், குபன் என்ற அரசனும் நண்பர்கள். ஒரு நாள் ததீசி 'அந்தணரே சிறந்தவர்' என்றார். குபன் 'அரசரே சிறந்தவர்' என்றான். இந்தவாக்குவாதத்தால் ததீசி சினங் கொண்டு அரசனை அடித்தார். குபனும் கோபித்து வச்சிரப் படையால் ததீசியின் உடலைப் பிளந்தான். சுக்கிரரைத் தியானித்து ததீசி முனிவர் நிலத்தில் வீழ்ந்தார். சுக்கிரர் அங்குவந்து பிளந்த உடலைப் பொருத்தி எழுப்பினர். சுக்கிராச்சாரியர் காஞ்சிபுரத்தில் இட்டசித்தி தீர்த்தத்தில் முழுகி இட்டசித்தீசரை வழிபடுமாறு ததீசியிடம் கூறினர். அதுபடி ததீசி முனிவர் வழிபட்டு வச்சிரயாக்கை பெற்று வந்தார். குபனைத் தன் இடக்காலால் உதைத்தார். குபனுக்காகத் திருமால் வந்து ததீசியுடன் போர் புரிந்தார். திருமால் தோல்வியுற்றார். ததீசி முனிவர் வெற்றிபெற்றார்.

இத்தகைய வித்தகராகிய ததீசி முனிவர் தமது சீடர்கள் புடை சூழ தட்சனுடைய யாகசாலைக்கு வந்தார். தட்சன் அவரை அன்புடன் வரவேற்று அமர்த்தினன். இவர் சிவனிடம் உள்ள அன்பை விடுத்து நமது வேள்வியைக்

காண வந்தார் போலும் என்று தட்சன் மனத்துக்குள் நினைத்தான்.

ததீசி முனிவர் "தட்சனே! என்னை அழைத்த காரணம் யாது?" என்று வினவினார்.

தட்சன் "முனிவரரே! சிவன் என் புதல்வியை மணந்து மறைந்து போயினான். பின்னர் எனக்குத் தெரியாமல் என் மகளை விடையின் மீது வைத்துக் கொண்டு சென்றான். மாயை செய்து என் மகளை மயக்கி வசஞ்செய்தான். நான் அவர்களைக் காணும் பொருட்டுக் கயிலை சென்றேன். அந்த நக்கன் தன் காவல் பூதர்களைக் கொண்டு என்னை உள்புகுதா வண்ணம் தடுத்தனன். அதனால் நான் சிவனை வெறுத்து, என் தந்தை செய்த வேள்வியில் சிவனுக்கு அவியைத் தரக்கூடாது என்று தடுத்தேன். மத்தளம் வாசிக்கும் நந்தி அங்கு வந்து சாபங் கொடுத்தான். அதனால் என் தந்தையின் யாகம் தடைபட்டது. நான் இப்போது சிவனை விலக்கி வேள்வி செய்கின்றேன். இந்த வேள்வியைக் காண உம்மை அழைத்தேன்" என்றான்.

தட்சனுடைய சொல்லைக்கேட்ட ததீசி முனிவர் வடவைத் தீயைப் போல் சீற்றமுற்றார். "தட்சனே! உன் மதியிருந்தவாறு என்னே? உன் போக்கு நன்றாக இல்லை. மாலயனாதி வானவர்களுக்கும் அகில உலகங்கட்கும் தாதையாகிய சிவபெருமானை விலக்கி நீ வேள்வி செய்கின்றனையோ? பேஷ்! உன் திறம் நன்று. வேள்வி யாவானும், வேள்வித் தீயும், வேள்வியின் அவியைப் பெறுவானும் சிவபெருமானே என்று வேதம் விளம்புவதை நீ யறியாயோ?

தேவதே வன்மா தேவன் சிறப்புடை ஈசன் எங்கோன்
மூவரின் முதல்வன் ஏகன் முடிவிற்கு முடிவாய் நின்றோன்;
ஆவியுள் ஆவி யானோன் அந்தணன் ஆதி என்றே
ஏவரை இசைத்த அம்மா எல்லையில் மறைகள் எல்லாம்.

பேதையே! நீ மதி மயக்க மடைந்துள்ளாய். சிவமே பரம் என்று விளம்பும் வேத விதியை மறுத்து நீ வேள்வி செய்யத் தொடங்கியுள்ளாய். இவ்வேள்வி நிறைவு பெறாது. இது சிவ

பிரான் ஆணை. இம் மகத்தில் சேர்ந்தோர் அனைவரும் மாய்ந்து ஒழிவார்கள்'' என்றார்.

தட்சன், ''நான் சிவனுக்குரிய அவிர்ப்பாகத்தை மாதவனுக்குத் தருவேன். ததீசியே! உன்னுடைய உருத்திரனை யொப்பார் பதினொரு உருத்திரர்களும், திசைப்பாலகருள் சிறந்த ஈசானரும் இங்கே யிருக்கின்றார்கள். அவர்கட்கு முதல் அவியைத் தருவேன்'' என்றான்.

ததீசி முனிவர், ''தட்சனே! உருத்திரன் என்று பேர் பெற்றதனால் இவர்களை நீ சிவத்துக்கு நிகராக நினைத்தனை போலும். இவர்கள் பலகாலம் தவஞ் செய்து சிவனருளால் சிவபெருமானுடைய உருவமும் அவருடைய திருப்பெயரும் பெற்றவர்கள்.

இன்னலங் கடலுள் பட்டோர் யாரையும் எடுக்கு நீரால்
உன்னரும் பரம மூர்த்தி உருத்திரன் எனும்பேர் பெற்றான்.
அன்னவன் தரவந் தோர்க்கும் அடியடைந் தோர்க்கும் அன்னான்
தன்னுரு வெய்தி னோர்க்கும் சார்ந்ததால் அவன்த னிப்பேர்.

அக்கினி தேவருக்கும் உருத்திரன் என்ற பேர் உண்டு. ஒரு சமயம் தேவர்கள் தங்கள் நிதியை அக்கினியிடம் வைத்துவிட்டு அசுரர்கள் மீது போருக்குச் சென்றார்கள். போர் முடிந்தபின் தேவர்களிடம் நிதியைத் தராது அக்கினி ஓடினான். தேவர்கள் தொடர்ந்து அவனைச் சூழ்ந்தார்கள். அக்கினி ரோதனம் (அழுகை) செய்தான். அதனால் அவன் அப்பேர் பெற்றான். இந்தப் பேர் ஒற்றுமையால் மயங்கக் கூடாது. தட்சனே! சிவபெருமான் ஒருவரே பதி. ஏனையோர் அனைவரும் பசுக்கள். உனக்கு பிரமதேவர் சிவனே பரம் என உபதேசித்து தவஞ்செய்து சிவனருளால் இச் செல்வமும் ஆட்சியும் பெற்றனை. அதை மறந்து அவச்செயல் புரிகின்றாய். இங்கு கூடியுள்ளார் அனைவரும் மாயை வசப்பட்டிருக்கின்றார்கள். இத்தனை பேரும் உய்ய வேண்டும் என்று நீ நினைப்பாயாகில் சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் வழங்கி வேள்வியைச் செய்க. இல்லையேல் உனக்கு முடிவு உண்டாகும். இது சரதம்'' என்று ததீசி முனிவர் கூறினர்.

13. ததீசி யுத்தரப் படலம்

தட்சன் ததீசி முனிவரைப் பார்த்து "நீர் கூறிய சிவன் பரம்பொருள் என்றால் சுடலையின் எலும்பை அணியுமோ?" வெந்த சாம்பலைப் பூசுமோ? என்று கேட்டான்.

ததீசி முனிவர் புன்னகை புரிந்து "மதியிலாதவனே! உன்னுடன் உரையாடுவதும் பிழை. எனினும் இங்குள்ள அனைவரும் கேட்டுத் தெளிந்து உய்யும் பொருட்டு உரைக்கின்றேன். சிவபெருமான் பிரமாவை யதிஷ்டித்துப் படைக்கின்றார். திருமாலை அதிஷ்டித்துக் காக்கின்றார். முடிவில் சர்வ சங்காரம் புரிகின்றார். முடிவில் அடியார்களாகிய மாலயனாதி வானவரின் எலும்பை அணிகின்றார். அவர்களின் சிரங்களைத் தொடுத்துத் தரிக்கின்றார். அவர்களுடைய சிகையைப் பூணூலாகப் புனைகின்றார், அவர்கள் உடல் வெந்த சாம்பரையும் அவர்களின் நலம் பொருட்டுப் பூசிக் கொள்ளுகின்றார். இது அப்பெருமானுடைய அளவிலா ஆற்றலையும் அருள் திறத்தையும் அறிவிக்கும்.

தட்சன் "நீர் கூறிய சிவன் பன்றிக் கொம்பையும் ஆமை ஓட்டையும் அணிவது சிறப்போ?" என்றான்.

ததீசி : 'இரணியாட்சன் மிக்க வலியுடன் இப்பூவுலகை நீரில் அழுத்தி உலகுக்கு இடர்புரிந்தான். தேவர்கள் வேண்ட திருமால் வராக வடிவெடுத்து அவனைக் கொன்று பூமியைப் பந்துபோல் நீரில் இருந்து எடுத்து உதவினார். தன் ஆற்றலை மதித்து அந்த வராகம் ஆரவாரித்து கடலைக் கலக்கி உலகத்தை நடுங்க வைத்தது.

அப்போது சிவமூர்த்தி அதனை அடக்கி அதன் கொம்பைப் பறித்துத் திருமார்பில் அணிந்து கொண்டார். வராகம் அடங்கியது.

பாற்கடல் கடைந்தபோது திருமால் ஆமை வடிவு கொண்டு மந்தரகிரியைத் தாங்கினார். பின்னர் தமது ஆற்றலை நினைத்து அகந்தை கொண்டு கடலைக் கலக்கித் துயரம் செய்தது. ஈசன் அங்கு வந்து ஆமையை அடக்கி அதன் ஓட்டைப் பறித்து அணிகலனாக அணிந்து கொண்டார்.

இதுவே சிவமூர்த்தியின் ஆற்றலையும் அருளையும் தெரிவிக்கும்'' என்றார்.

தட்சன்: "சிவன், புலித்தோல் உடுக்குமோ? மழுவையும் மானையும் ஏந்துமோ? பிச்சை யெடுத்து உழலுமோ? கூத்தாடுமோ? பாம்புகளைப் பூணுமோ? ஆடையின்றி நக்கன் ஆகுமோ?'' என்று கேட்டான்.

ததீசி: "தாருகாவனத்தில் வாழ்ந்த நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள் கன்மமே பயனைத்தரும். பயன்தரக் கர்த்தா வேண்டியதில்லை என்ற பூர்வ மீமாம்சக் கொள்கையுடையவர்களாகி சிவத்தைப் புறக்கணித்துத் தவத்தைச் செய்தார்கள்,

அவர்கட்கு அறிவு கொளுத்தும் பொருட்டு திருமாலை மோகினியாக வருமாறு செய்து சிவபெருமான் திசைகளே யாடையாக திகம்பரனாகி தாருகவனத்தில் பலியேற்கச் சென்றருளினார். தாருகவனத்து முனிவர்கள் மோகினியின் ஒப்பற்ற அழகைக்கண்டு நிடங்குலைந்து மோகினி பின் உழன்றார்கள். அவர்களுடைய மனைவியர்கள் பிக்ஷாடண மூர்த்தியின் எழிலால் உறுதி குலைந்து மையல் கொண்டு அலைந்தார்கள்.

தாருகவனத்து இருடிகள் அதைக்கண்டு மிகவும் நாணினார்கள். வெகுண்டார்கள்; அரனாரை அழிக்கவேண்டி அபிசார ஓமம் செய்து கொடும்புலி ஒன்றை உண்டாக்கிச் சிவபெருமான் மீது ஏவினார்கள். அடுந்தொழிலுடன் வந்த கொடும்புலியை உரித்து அரனார் ஆடையாக உடுத்துக் கொண்டார். சூலத்தை உண்டாக்கி அனுப்பினார்கள். அதனை ஐயன் ஆயுதமாக ஏந்திக்கொண்டார். மழுவையும், மானையும் ஏவினார்கள்; அவற்றை இறைவர் செங்கையில் ஏந்திக் கொண்டார். ஓமத்தீயில் பாம்புகளைத் தோற்றுவித்து ஏவினார்கள். பரமன் அப் பாம்புகளை ஆபரணமாக அணிந்து கொண்டார். பூதவெள்ளங்களை உண்டாக்கி அனுப்பினார்கள். ஈசன் அவைகளைத் தன் பரிவாரங்களாக ஆக்கிக் கொண்டார். வெண்டலையை உண்டாக்கி அனுப்பினார்கள். அது உலகங்கள் செவிடுபடச் சிரித்துச் சென்றது. சிவபெரு

மான் அழைத்துச் சென்னியில் சூடிக்கொண்டார். மந்திரங்களை யேவினார்கள். அவைகள் உடுக்கையாகி உருத்துச் சென்றது. அதனை அரனார் அங்கையில் பற்றிக்கொண்டார். முனிவர்கள் பின்னும் முனிந்து முயலகன் என்ற பூதத்தை உற்பத்தி செய்து உய்த்தார்கள். இறைவன் அவனைக் கீழே தள்ளி அவன் முதுகின்மீது திருநடனம் புரிந்தார். கோபங் கொண்டு பல சாபங்கள் புகன்றார்கள். அவையாவும் பயனற்றன. பின்னர் அவர்கள் சிவபெருமானுடைய பெருமையை யறிந்து. திருந்தி தாம் செய்த பிழைகளை நினைந்து வருந்தி இறைவனைப் பொருந்தி உய்வு பெற்றார்கள்.

தட்சன்: "யானைத்தோல் போர்க்குமோ? என்று கேட்டான்,

ததீசி: "கயாசுரன் என்ற கொடிய அரக்கன் பிரம தேவரிடம் வரம்பெற்று, தேவர்கட்கும், முனிவர்கட்கும் பெருந்துன்பத்தைச் செய்தான். அமரர்கள் அஞ்சி காசிக்குச் சென்று மணிகர்ணிகையில் உள்ள ஈசனிடம் அடைக்கலம் புகுந்தார்கள். கயாசுரன் அங்கும் சென்றான். விசுவநாதர் பேரொளி வடிவாகத் தோன்றி அக்கயாசுரனைக் கொன்று அந்த யானைத்தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார் என்றனர்.

தட்சன்: "சிவன் கபாலம் ஏந்துமோ? என்று வினவினான்.

ததீசி முனிவர்: திருமாலும், பிரமதேவரும் ஒரு சமயம் பொன்மேருகிரியின் சிகரத்தில் அமர்ந்திருந்தார்கள். அமரர்களும் முனிவர்களும் அங்கு சென்று பரம்பொருளாகி நின்ற தலைவர் யார் என்று கேட்டார்கள். நானே பரம்பொருள் என்று பிரமனும் திருமாலும் கூறித் தருக்கமிட்டு மலைந்தார்கள். வேதமும் பிரணவ மந்திரமும் உருவந்தாங்கி வந்து "சிவமே பரம்பொருள்" என்று கூறியும் அவர்கள் அமைதியடையாது போர்புரிந்தார்கள். இடையே ஒரு பெருஞ்சோதி தோன்றியது.

திருமால் உள்ளந் தெளிந்து அச்சோதியைச் சோதிக்காது சிவமென உணர்ந்து பணிந்து சென்றார்.

பிரமன் மாயையால் மருண்டு உச்சியில் உள்ள சென்னி யால் அச்சோதியை யிகழ்ந்தான். அப்போது சிவபெருமான் தமது திருவுள்ளத்திலிருந்து வயிரவக் கடவுளைத் தோற்று வித்தார்.

நீலுறு சுடரின் மெய்யும்; ஞெகிழிகள் அகற்றுந் தாளும்
ஆலம துயிர்க்கும் செங்கேழ் அரவவெற் றரையுஞ் சென்னி
மாலைகள் அநந்த கோடி வயின்வயின் பெயரும் மார்புஞ்
சூலமும் பரசும் நாணும் துடியும்ஏந் தியபொற் றோளும்

ஆகிய திருவுடன் வயிரவர் விளங்கினர். இகழ்ந்த பிரம தேவரின் உச்சிச் சிரத்தை நகத்தால் கிள்ளிக் கையில் ஏந் தினர். அக்காலத்தில் திருமால் இந்திரன் முதலிய எல்லா இமயவர்களின் உதிரத்தையும் பலியாக ஏற்றார்.

பிரமன் வயிரவரைத் தொழுது வாழ்வு பெற்றான் வேதங்கள் நாய் வடிவாக வந்து வயிரவரை யடைந்தன,'' என்றார்.

தட்சன் : "உங்கள் சிவன் வேற்றுருக் கொள்ளுமோ?'' என்றான்.

ததீசி : இந்திரன் ஒரு சமயம் நாம் தேவர் கோமான் என்று செருக்குடன் திருக்கயிலைமலை சென்றான். புரமெரித்த பரமன் பூதவடிவுடன் வாயிலில் இருந்தார். இந்திரன் பூதத் தைப் பார்த்து "சம்புவைச் சேவிக்க இது சமயந்தானோ?'' என்று கேட்டான். பூதம் பதில் புகலாது இருந்தது. இந் திரன் வெகுண்டு அதன்மீது வஜ்ராயுதத்தை யேவினான். பூதமாயிருந்த சிவமூர்த்தி மீது பட்டு வஜ்ராயுதம் பொடி யாகியது. அப்போது சிவமூர்த்தியின் கோபாக்கினி இந் திரனை வாட்டியது. அவன் பணிந்து தணிந்தான். சிவபெரு மான் அக்கோபக்கனலைக் கடலில் விடுத்தார். அது மகவாகத் தோன்றியது.

வருண தேவன் தனக்கு மகவாக வந்த அப்பாலகனைத் தழுவி உச்சிமோந்து வாழ்த்தினான்.

ஊழி பேரினும் உலகம் பேரினும்
வாழி வாழிஎன் மைந்தன் நீயென

கேழில் ஆசிகள் கிளர்த்திப் போற்றினன்
ஆழி மால்கடற் கரசன் என்பவே.

குன்ற வில்லியின் கோபாக்கினியால் உதித்த குழந்தை யாதலால் எல்லையில்லாத வல்லபத்துடன் அது விளங்கியது. அக் குழந்தை சிறிது அழுததனல் மண்ணும் விண்ணும் செவிடுபட்டன.

அப்பேரொலி கேட்டு அங்குப் பிரமதேவர் வந்தார். வருணன் தன் குழந்தையை அவருடைய கரத்தில் தந்து ஆசி கூறச் சொன்னன். அச்சிறுவன் பிரமதேவனுடைய நான்கு தாடிகளையும் பிடித்து ஈர்த்து இடர்புரிந்தான். பிரமதேவர் மெல்ல விடுவித்து, இச்சிறுவன் சிவ கோபத்தில் வந்தவன், இவனுக்கு வேறு வரபலம் தேவையில்லை. இவனைக் கண்டு,

"நானும் அஞ்சுவன், நளினை காவலன்
தானும் அஞ்சுவன்; தவறில் வேள்விசெய்
கோனும் அஞ்சுவன்; கூற்றும் அஞ்சும்; அவ்
வானும் அஞ்சும்; இம் மண்ணும் அஞ்சுமே"

என்று கூறி தண்ணீரில் பிறந்ததனல் "சலந்தரன்" என்று பேர் சூட்டிச் சென்றார்.

இவன் வளர்ந்து கிளர்ந்தெழுந்து போர்புரிந்து இந்திரனை வென்று அவனுடைய செல்வங்களைக் கவர்ந்தான். காலநேமி யென்ற அசுர வேந்தனுடைய புதல்வியாகிய பிருந்தையை மணந்து கொண்டான். அவள் அருந்ததியினும் மேம்பட்ட கற்புடையவள். தேவர்களின் முறையீட்டுக்கு இரங்கிய கரியமால் கருடன்மீது வந்து கடும்போர் புரிந்தார். இருபதாயிரம் யாண்டுகள் போர் புரிந்தும் வெல்லமாட்டாமல் அவனைப் புகழ்ந்து போயினர்.

சலந்தரன் தேடித் தேடி அமரரை வாட்டினன். புரந்தரன் முதலியோர் வேறு புகலிடம் காணது கயிலைக்குச் சென்று முக்கண்ணனிடம் முறையிட்டார்கள்.

சலந்தரன் கயிலையை நாடிப் புறப்பட்டான். அவனுடைய மனைவியாகிய பிருந்தை மதி நலம் படைத்தவள். "பிராணபதியே! நீர் கயிலை போகவேண்டாம்; அங்கே சிவ

மூர்த்தியைப் பகைத்தால் உம் வாழ்வு முடியும் என்று அறிவுரை கூறித் தடுத்தாள். சீற்றத்தால் ஊற்றம் பெற்ற சலந்தரன் மனைவியின் வார்த்தையைக் கேளாது திருக்கயிலை சென்றான்.

சிவபெருமான் முதிய மறையோனாய் கயிலையில் ஒருபுறம் இருந்தார். அங்கு பொங்கும் கோபத்துடன் வந்த சலந்தரனைப் பார்த்து "எங்கு வந்தனை?" என்று கேட்டார். "பெரியவரே! புராரியுடன் போர் புரிய வந்தேன்" என்றான்.

"அப்பா! இப் பாரில் என் கால் விரலால் கீறிய இதனை எடுப்பாயேல் உன்னை நான் மதிப்பேன்!" என்று கூறி காற் பெருவிரலால் நிலத்தில் வட்டமாகக் கீறினார் இறைவர். சலந்தரன் அதனைப் பேர்த்தான். பாரம் தாங்காது சிரத்தில் வைத்தான். அது சக்ராயுதமாகி அவனைப்பிளந்து மாய்த்தது. அமரர் அலக்கண் தீர்ந்தது. சக்கரப்படை கண்ணுதல் கரத்தில் அமர்ந்தது.

திருமால் பிருந்தையை விரும்பி அங்கு ஒரு அழகிய சோலையில் முனிவராய் அமர்ந்திருந்தார். கற்பு மிகுந்த பிருந்தை கயிலை சென்ற கணவன் வராமையால் வருந்தி அச் சோலைக்கு வந்தாள். அவள் அளவற்ற துன்பத்தால் வாடி வருந்தினாள். வைகுண்டத்தில் துவார பாலகர்களாகிய ஜய விஜயர்கள் இரு சிங்கங்களாகி அவளை அஞ்சுமாறு விரட்டினார்கள். அங்கு முனிவராயிருந்த திருமால் அவளை அஞ்சேல் என்று அபயமளித்தார். சிங்கமாக வந்தவர்கள் விலகிச் சென்றார்கள்.

பிருந்தை அம்முனிவரைத் தொழுது "எந்தையே! என் கணவனார் கயிலை சென்றார். இன்னும் வரக்காணேன். அவர் மாய்ந்தனரோ? அவர் நிலைமை யாதோ? நீர் அறிந்து கூறும்" என்று அழுத கண்ணுடன் கேட்டாள்.

அது சமயம் விஷ்ணுவின் சேனைத் தலைவர்கள் இருவர் குரங்கு வடிவுடன் சலந்தரனுடைய பிளந்த உடலைக் கொணர்ந்து அங்கு இட்டார்கள். பிருந்தை அது கண்டு "அந்தோ!" என்று அலறி அழுதாள். முனிவா "பெண் மணியே! நீ வருந்தாதே. உன் கணவனை எழுப்பித்தருவேன்"

என்று கூறி, சலந்தரன் உடம்பைப் பொருந்த வைத்தார். அவ்வுடலில் தான் நுழைந்து மறைந்துவிட்டார். சலந்தரனாக நடித்தார். கணவன் என்று அக்கற்புடையவள் களித்தாள். திருமால் அவளுடன் பலகாலம் கூடி மகிழ்ந்தார். ஒரு நாள் தூங்கும் போது மாயம் அழிந்தது. பிருந்தை அவரை மாயன் என்று அறிந்து வெகுண்டாள்.

"ஏ மாயனே! என்னை மயக்கி என் கற்பைப் பங்கப்படுத்தினாய். உனக்குத் துணை புரிந்த ஜயவிஜயர்கள் உனக்குப் பகைவர்களாகப் பிறக்கக்கடவது. உனக்குக் குரங்குகள் துணை செய்ததால், நீ மனிதனாகப் பிறந்து குரங்குகளைத் துணையாகக் கொள்வாயாக. உன் மனைவியை அரக்கர் கவர நீ பழியும் துயரும் எய்துவாயாக" என்று சாபந் தந்து எரியில் மூழ்கி இறந்தாள்.

திருமால் பிருந்தை எரிந்த சாம்பலில் எலும்பில் புரண்டு வருந்தினார். தேவர்கள் கயிலை சென்று மாயன் செயலைத் தூய சிவமூர்த்தியிடம் கூறினார்கள். அம்பிகை கருணை கூர்ந்து ஒரு விதையைத் தந்து அங்கு விதைக்குமாறு விளம்பினாள். பிரமன் அதனைக் கொணர்ந்து பிருந்தை எரிந்த சாம்பலில் நட்டு அமுதத்தை வார்த்தார். அது துளசிச் செடியாக முளைத்தது. பின்னர் அது ஒரு பெண்ணுருவாயிற்று. திருமால் அவளைக் கண்டு பிருந்தை மீதுள்ள காதலைத் துறந்து அவளை மணந்து கொண்டார். அத் துளசியையும் தரித்துக் கொண்டார்.

பின்னர் திருவீழிமிழலையில் தினம் ஓராயிரம் தாமரைப் பூவால் சிவபிரானை வழிபட்டு ஒரு குறைந்த பங்கயத்துக்குப் பதில் தமது செங்கண்ணை எடுத்துச் சிவன் திருவடியில் அர்ச்சித்து ஆழிப்படையைப் பெற்றார்.

இதுதான் சிவபெருமான் வேற்றுருக் கொண்ட விந்தை. இதனால் பெருமானுடைய பெருமை குன்றிலிட்ட தீபம்போல் தெளிவாக விளங்குகின்றதல்லவா?" என்றார்.

தட்சன்:—"சிவன் மாட்டின் மேல் ஏறுமோ?" என்றான்.

ததீசி, 'உலகமெல்லாம் ஒடுங்கியபோது தருமம் ஒடுங்காது எருதுவடிவுடன் ஈசனையடுத்தது. இறைவன் அத்தரும

விடைமீது ஆரோகணித்தார். உலகங்களை யெல்லாம் தாங்கும் ஈசனைத் தருமம் தாங்கியது. ஆதலால் அது தருமமாகும்.

திரிபுரம் எரித்தபோது, தேர் அச்சு முறிந்தது. திருமால் விடைவடிவாகி இறைவனைத் தாங்கினார். தட்சன் "விடையவன் விடமும் உண்ணுமோ?" என்றான்.

ததீசி, "அமரர்கள் அசுரர்களின் போரினால் மாள்வதால், சாவாமூவா அமுதம் உண்ண வேண்டி பாற்கடல் கடைந்தார்கள். மந்தரகிரி மத்தாக, சந்திரன் தூணாக வாசுகி தாம்பாகப் பிடித்து அசுரரும் அமரரும் நெடுங்காலம் பாற்கடலைக் கடைந்தார்கள். வாசுகி என்ற நாகம் துன்பம் பொறுது ஆலால விடத்தைக் கக்கினான். அவ்விடம் எல்லா உலகங்களையும் வெதுப்பியது. விண்ணவர்கள் வெருவி ஓடினார்கள். அருகில் சென்ற திருமாலின் உடம்பு கருகிக் கருமால் ஆயினார். எல்லோரும் கயிலாயஞ் சென்று கண்ணுதற் கடவுளைப் போற்றி, "ஐயனே! நாங்கள் பாற்கடல் கடைந்தோம். அதில் முதலில் விளைந்தது தேவரீருடையதாகும். காத்தருள வேண்டும்" என்று வேண்டி நின்றார்கள்.

சிவபெருமான் தம்மருகே திருநீற்றுக் கோயிலைத் தாங்கி நிற்குஞ் சுந்தரரைப் பார்த்து, "சுந்தரனே! அந்தரரை வாட்டும் அவ்விடத்தை இவ்விடத்துக் கொணர்க" என்று ஆணையிட்டார். அவர் போய் கொடிய கடிய நஞ்சை நாவல் பழம் போல் திரட்டிக் கொணர்ந்தார். அகில உலகங்களும் உய்ய எம்பெருமான் அந்த நஞ்சை உண்டு நீலகண்டராக ஆனார். இது ஒன்றே அவருடைய கருணையையும் வலிமையையும் பறைசாற்றும்; என்றார்.

தட்சன், உமது சிவன் மயானத்தில் நடிக்குமோ" என்றான்.

ததீசி, "சிவ பெருமான்சர்வசங்காரம் செய்த மகா மயானத்தில் ஆனந்த நடம்புரிகின்றார். இது அவருடைய தனிப் பெருந்தலைமையை உணர்த்துகின்றது" என்றார்.

தட்சன், "சிவன் கங்கையைச் சுமக்குமோ?" என்றான்.

ததீசி, "ஒரு சமயம் உமாதேவியார் பின்புறமாக வந்து விளையாட்டாக தேவதேவருடைய திருக்கண்களைப் பொத்தினுள்; அவர் திருக்கண்களே சோமசூரியாக்கினியாதலால் உலகம் யாவும் இருண்டுவிட்டது. அப்போது அரனுர் நெற்றிக் கண்ணைச் சிறிது விழித்து அவ்வொளியால் உலக இருளை மாற்றியருளினுர்.

அதனுல் அஞ்சிய அம்பிகையின் திருவிரல்களில் வெயர்வை யுண்டாயிற்று. அது வெள்ளமாகப் பெருகி உலகை அழிக்க வந்தது. இறைவர் அந்த வெள்ளத்தைத் தமது சடையில் ஒரு உரோமத்தில் அடக்கி யருளினுர். பின்னர் அமரர்கள் வேண்ட அதில் ஒரு சிறிது தந்தருளினுர். அது கங்கையாக மூவுலகிலும் பெருகி உய்வு தந்தது. பகிரதன் தவத்தாலும் பூவுலகில் வந்து சகரருடைய எலும்பில் பட்டு அவர்கட்குச் சுவர்க்கம் நல்கியது.

கங்கையைச் சங்கரன் முடித்தது பேராற்றலேயும் பெருங் கருணையையும் உணர்த்துகின்றது" என்றுர்.

தட்சன், "சிவனுக்கு மனைவியும் வேண்டுமோ?" என்றுன்.

ததீசி, "சிவபெருமானுடைய தனிப் பெருங்கருணையே உமையென்னும் பெண்ணுருக் கொண்டு விளங்குகின்றது. இல்லையேல் உலகம் யோகியாகி யழிந்துபோகும். உமாதேவி யென்பது சிவமூர்த்தியின் தண்ணருளாகும். சிவன் பிரமசாரி. உமை கன்னி, இவைகளைத் தத்துவ ஞானிகள் உணர்வார்கள். மூடனே! இது உனக்கு எவ்வாறு விளங்கும்" என்று கூறினுர்.

தட்சன், "சிவனுக்கு மகவும் உண்டோ?" என்று கேட்டான்.

14. கயமுகனுற்பத்திப் படலம்

"இந்திரன் போரில் அசுரர்களை யெல்லாம் மாய்த்துப் பொன்னுலகில் ஆட்சி புரிந்துகொண்டிருந்தான். அதனுல் அசுரர்கோன் அல்லல் பட்டு சுக்கிரரைப் பணிந்து

அசுரகுலம் அழிந்ததை உரைத்து நின்றான். வெள்ளி பகவான் "அசுரர் ஏறே! வருந்தாதே. தேய்ந்தவர் வளர்வர். திங்களே சான்று. பிரமதேவரின் அருளால் வந்த வசிட்டர் முனி குலத்துக்குத் தலைவர். பெருந்தவம் புரிந்து கொண்டிருக்கின்றார். ஒரு அசுர கன்னிகையை யனுப்பி அவள் மூலம் அசுரகுலம் தழைக்கச் செய்வாய்" என்று ஆலோசனை கூறினார்.

அசுரவேந்தன் அது கேட்டு மகிழ்ந்து விபுதை யென்ற அழகிய கன்னிகையை அழைத்து "அம்மா! உன்னால் இந்த அழிந்த அசுரகுலம் தழைக்க வேண்டும். நீ சென்று மாதவத்தில் சிறந்த மாகத முனிவரிடம் மகப் பேறு பெற்று உதவி செய்" என்றார்.

விபுதை, பொன்மேரு கிரியில்பேறு அரிய பெரிய தவம் புரியும் மாகதரைக் கண்டாள். அவருடைய தவத்தின் பெருநிலையைக் கண்டு திகைத்தாள்.

"அம்மா! இவரை ஆயிரம் மேனகை வந்தாலும் மயக்க வொண்ணாது. வடவைத் தீயைப் பஞ்சு அணுகுமோ? ஆனால் நான் வீணே திரும்பவுங் கூடாது. தவஞ்செய்து இவரைக் கணவனாகப் பெறுவேன். என்று கருதினாள். ஒரு புறத்தில் உள்ளத்தை ஒடுக்கித் தவஞ் செய்து கொண்டிருந்தாள்.

ஒரு சமயம் மாகத முனிவருக்கு முன்னே இருயானைகள் மருவின. இந்தக் காட்சியைக் கண்ட மாகதருக்கு ஆசை வெள்ளம் பிறந்தது. உள்ளம் நிலை குலைந்தது. இந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத் தவத்தில் இருந்த விபுதை அவர் முன் வந்து மின்னல் கொடி போல் நின்றாள். அவளைப் பெண் யானையாகுமாறு செய்து அருந்தவர் ஆண் யானையாகிச் சேர்ந்தார். அவர்களிடம் கயமுகாசுரன் பிறந்தான். பிறந்த அவன் வாளும் பலகையும் ஏந்திச் சுற்றினான். அதனால் உலகம் சுழன்றது. அவனுடைய உரோமங்களில் பல அரக்கர்கள் பிறந்தார்கள். இதனைக் கண்டு முனிவர் "நாம் பிழை செய்து விட்டோம்" என்று தன்னையே நொந்து கொண்டார். அசுர வேந்தன் அகமகிழ்ந்தான்.

கயமுகாசுரனும் அவனுடைய சேனைகளும் சேர்ந்து உலகத்தை நடுங்க வைத்தார்கள்.

மலையினைப் பொடிப்பர் ஏனை மண்ணினை மறிப்பர்; வாரி
அலையினைக் குடிப்பர் கையால் ஆருயிர்த் தொகையை அள்ளி
உலையினைப் பொருவு பேழ்வாய் ஓச்சுவர் பரிதி யோரும்
நிலையினைத் தடுப்பர் சேடன் நெளிதரப் பெயர்வர் மாதோ.

அசுரவேந்தனுடைய வேண்டுகோளுக்கு இசைந்து கயமுகனிடம் சுக்கிரபகவான் வந்து, பின் வருமாறு கூறினர்.

"கயமுகனே! நீ தவஞ் செய்து பேராற்றலைப் பெற வேண்டும். காலத்தை வீணாக்கித் திரியாதே. கூற்றுவன் வரும்போது வலிமை செல்வம் கல்வி முதலிய யாவும் துணை செய்யமாட்டா. ஆதலால் அரனுரை வேண்டி அருந்தவம் புரிந்து பெருந்திறல் பெறுவாயாக'' என்று உபதேசித்தார்.

கயமுகாசுரன் சுக்கிரரிடம் மந்திர உபதேசம் பெற்று, தவத்திற்குரிய வழி வகைகளை யறிந்து மேருகிரி சென்றான். ஐந்தெழுத்தை ஓதி ஐம்புலன்களை யடக்கி, ஐந்தழலுக்கு நடுவே ஐம்முகக் கடவுளைத் தியானித்து ஐந்து கண்டங்களும் வியக்குமாறு தவஞ் செய்தான்.

ஆயிரம் ஆண்டுபுல் லடகு மேயினன்
ஆயிரம் ஆண்டுசில் புனல்அ ருந்தினன்
ஆயிரம் ஆண்டள வனிலம் நுங்கினன்
மாயிரும் புவியுயிர் மடுக்கும் வாயினன்.

மூவாயிரம் ஆண்டுகட்குப் பின் மூலத்தழலால் வெதும்பி வெளிப்பட்ட சகச்சிரார அமுதையுண்டு உறுதியுடன் தவஞ் செய்தான். அவன் உடம்பு வச்சிரம் போல் உறுதியாயிற்று. இதைக்கண்டு பிரமாதி தேவர்கள் பெரிதும் கலங்கினர்கள்.

கயமுகனுடைய் தவத்துக்கு உளம் மகிழ்ந்த உமா நாயகன் விடைமீது வந்து காட்சியளித்தார். கயமுகாசுரன் கால காலனர் திருவடியில் வீழ்ந்து உருகிய சிந்தையுடன் நின்றான். "அன்ப! உனக்கு என்ன வரம் வேண்டும்; கேள்'' என்றார் இறைவர்.

கயமுகன், "கருணைக்கடலே! திருமால், பிரமன் இந்திரன் முதலிய எல்லாத் தேவர்களும் என்னிடம் தோல்வியடைய வேண்டும். எந்த ஆயுதத்தாலும் எனக்கு முடிவு வராதிருக்க வேண்டும், மனிதர், அவுணர் விலங்கு என்ற எதனாலும் எனக்கு மரணம் வரக்கூடாது. என்னைப் போன்ற ஒருவன் வந்து என்னுடன் போர் புரியினும் அவனுடைய ஆயுதம் எனக்குத் தீங்கு செய்யாதிருக்க வேண்டும். ஒருவேளை நான் அழியினும் பிறவாப் பெற்றியருளவேண்டும். எல்லாவுலகங்களிலும் என் ஆணை செல்லவேண்டும். என்று வரம் கேட்டான். இல்லையென்னாத எம்பிரான் அவன் விரும்பிய வரங்கள் அனைத்தையும் தந்து நீங்கினார்.

சுக்கிர பகவானும் அசுரர் கோமானும் அவனிடம் வந்து ஆசி கூறினார்கள். கயமுகன் தேவதச்சனைக் கொண்டு மதங்கபுரம் என்ற ஓர் அழகிய நகரை உண்டாக்கி அதில் இருந்து அசுரரும் அமரரும் வணங்க ஆட்சி புரிந்தான்.

அசுரவேந்தன் புதல்வி விசித்திர காந்தியைத் திருமணம் செய்து கொண்டு இன்புற்றான்.

கயமுகாசுரனிடம் காமதேனு, கற்பகம், சங்கநிதி பதுமநதி, சிந்தாமணியும் வந்து ஏவல் செய்தன. சுக்கிரர் அவனுக்கு அமைச்சராக இருந்தார். பிரமனும் தேவரும் தேவ மாதர்களும் அவனிடம் வந்து அவன் இட்ட பணியைச் செய்தார்கள்.

இந்திராதி இமையவரை அழைத்து "தேவர்களே! இன்று முதல் என் முன் நீங்கள் சிரசில் மூன்று முறை குட்டிக் கொண்டு, இரு செவிகளைக் கரங்களால் மாறிப் பற்றி, இருந்து எழுந்து தோப்புகரணம் போட வேண்டும்" என்றான். அதுபடியே அமரர்கள் குட்டிக் கொண்டு தோப்புக் கரணம் போட்டு, உடலும் உள்ளமும் வருந்தினார்கள். இவ்வாறு காலம் பல கடந்தன. ஞாலம் முழுவதும் கயமுகனுடைய கொடுமையிருந்தது. ஓலமிட்டு உம்பர்கள் உலைந்தார்கள்.

மாலயனாதி வானவர்கள் கால காலனும் கறை மிடற்றுக் கடவுளிடம் போய், தொழுது அழுது கயமுகா

சூரனால் தாம் படும் அல்லலைக் கூறி கருணை புரிய வேண்டும்'' என்று முறையிட்டார்கள். சிவபெருமான் வருந்தாதீர்கள். நாம் ஒரு புதல்வனைத் தந்து உங்கள் துயரினைக் களைவோம்'' என்று கூறி அருள் புரிந்தார். விடையவனிடம் விடைபெற்று விபுதர்கள் தத்தம் இருக்கை சேர்ந்தார்கள்.

கயிலாய மலையில் உள்ள ஓர் அழகிய நறு மலர்ச் சோலைக்கு பரமனும் பராசக்தியும் எழுந்தருளினார்கள். அதன் நடுவேயுள்ள மந்திரச் சித்திர மண்டபத்துக்குள் சென்றார்கள். அங்கே மந்திர ஓவியங்கட்கு இடையே சமஷ்டி பிரணவம் வியஷ்டி பிரணவம் என்ற இரு பிரணவ மந்திரங்கள் இருந்தன. அந்த இரு பிரணவ மந்திரங்களையும் அம்மையும் அப்பனும் திருக்கண் சாத்தினார்கள். அவை யானை வடிவுடன் கூடின. அப்பிரணவத்திலிருந்து பிரணவ வடிவுடன் விநாயகப் பெருமான் அவதரித்தார்.

ஒருமையால் உணருவோர் உணர்வினுக் குணர்வதாம்
பெருமையான் எங்கணும் பிரிவரும் பெற்றியான்
அருமையான் ஏவரும் அடிதொழும் தன்மையான்
இருமையாம் ஈசனே என்னநின் றருளுவான்.

ஒரு முடியும் இரு செவியும், மூன்று கண்களும், நான்கு தோள்களும், ஐந்து திருக்கரங்களும், பவளமேனியும் ஆனை முகமும் உடைய அவர்மீது மலர் மழை சிந்தியது.

விநாயகர் தாய் தந்தையரது தாள் மலரில் தாழ்ந்து வணங்கினார். பரசிவரும் பராபரியும் மைந்தனைத் தழுவி மகிழ்ந்து ''ஒருவர் ஒரு கருமம் தொடங்கும்போது உன்னை வணங்குவரேல் அவருடைய கருமத்தை முடித்து வைப்பா யாக. உன்னை வணங்கிலாதார்க்கு விக்கினம் விளைவதாக'' என்று கூறி அருள்புரிந்தார்கள். விநாயகர் கயிலையில் வீற் றிருந் தருளினார்.

என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனதுதாள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தம் சிந்தைபோல் ஆக்குதி; அலதுனை
உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதி நீ.

விநாயகப் பெருமானுடைய திருவவதாரத்தால் மகிழ்வெய்திய இந்திராதி தேவர்கள் கயமுகாசுரனால் மிகவும் நொந்து திருக்கயிலாய மலையையடைந்து விநாயகப் பெருமானுடைய திருவடிகளில் வணங்கி "எம்பெருமானே! சிவபெருமானிடம் எல்லையில்லாத வரம் பெற்ற கயாமுகாசுரன் பெருந்துன்பம் செய்கின்றான். புதுமையாக ஒரு செயலைச் சொல்லியிருக்கின்றான். நாங்கள் அவனிடம் போய் தலையில் குட்டிக்கொண்டு காதுகளைக் கைகளால் பற்றிக்கொண்டு தோப்புக்கரணம் போட்டு, அவனைக் கும்பிடவேண்டும். அண்ணலே! அவனை வதைத்து எம் அல்லலைச் சிதைத்து ஆண்டருள் புரிவீர்" என்று குறை கூறி முறையிட்டு, மோதகங்கள் வைத்துப் போற்றினார்கள்.

விநாயகப் பெருமான் எழுந்து அசலன் என்ற பூதத்தின் மீது ஏறிக்கொண்டு பூதகணங்கள் புடைசூழப் போருக்குப் புறப்பட்டார். தேவர்கள் குடை பிடித்தார்கள். சாமரை வீசினார்கள்.வாத்தியங்கள் முழங்கின. மதங்கபுரம் சென்றார்.

கயமுகாசுரன் இதனையறிந்து ஆயிரம் வெள்ளம் அரக்கர் சேனைகளுடன் போருக்கு வந்தான். கடும் போர் நடந்தது. பூதங்களால் அரக்கர் சேனை அழிந்தது.

கயமுகாசுரன் இதனைக் கண்டு காலாக்கினி போல் கனன்று வில்லை வளைத்துக் கணை மழை பொழிந்தான். பூத சேனைகள் சிதறியோடின. விநாயகப் பெருமான் அவன் முன் சென்றார். "இவன் யாரென்று கேட்டான்" கயாமுகாசுரன். அருகில் இருந்தோர் "அசுரர் தலைவ! இவன் சிவன் மகன்" என்றார்கள். கயமுகாசுரன் கணபதியைப் பார்த்து "சிவகுமாரா! உன் தந்தை எனக்கு எண்ணற்ற வரங்களை வழங்கியுள்ளார். என்னைக் கொல்ல உன்னால் ஆகாது. நீ திரும்பிப்போ" என்றான்.

விநாயகர் அசுரனை நோக்கி "தீயனே! நீ தேவர்களுக்குத் துன்பஞ் செய்தலால் உன்னை மாய்க்குமாறு சிவபெருமான் என்னை அனுப்பியுள்ளார். நீ இந்திரனை அவன் நகரில் ஆட்சி செய்யுமாறு செய்து இன்று முதல் இமயவருக்கு இடர் புரியாதிருந்தால் உனக்கு நாம் கருணை புரிவோம். இல்லையேல் இப்போது நீ அழிவது திண்ணம் என்று அருளிச் செய்தார்.

கயாமுகாசுரன் வில்லெடுத்துப் பாணங்களை யேவினான். விநாயகர் அவன் விட்ட கணைகளைத் துண்டித்து அவன் வில்லை முறித்தான். கயாமுகாசுரன் தண்டாயுதத்தை யேந்தி எதிர்த்தான். ஐங்கரக் கடவுள் தண்டை முறித்து அவனை ஓங்கி அடித்தார். அவன் சோர்ந்து நின்றான். விநாயகர் தமது திருக்கரத்தில் உள்ள பாசத்தை ஏவி சேனைகள் முழுவதையும் மாய்த்தார். இதனைக் கண்ட கயமுகன் அநேக தெய்வப்படைக்கலங்களை யேவினான். அவைகள் வந்து விநாயகரை வலஞ்செய்து வணங்கி நின்றன.

விநாயகமூர்த்தி இவன் எந்த ஆயுதத்தாலும் சாகா வரத்தை எந்தையாரிடம் பெற்றுள்ளான். என்று திருவுளத்தில் சிந்தித்து தமது திருமுகத்தில் உள்ள தந்தத்தை முறித்து சிவ மந்திரத்தைக் கூறியேவினார். அக்கோடாயுதம் அவனுடைய மார்பைப் பிளந்து நன்னீர்க் கடலில் மூழ்கி கணேசருடைய கரத்தில் வந்து அமர்ந்தது.

அவனுடைய உடம்பினின்று வந்த உதிர வெள்ளம் ஒரு கானகம் முழுவதும் பரவியது அந்த இடம் திருச்செங்காடு எனப் பேர் பெற்றது. அவன் இறவா வரம் பெற்றவன் ஆதலால் பெருச்சாளி வடிவுடன் எதிர்த்து வந்தான். விநாயகர் அசலனுடைய தோளில் இருந்து இறங்கி அந்த ஆகுவின் மீது ஆரோகணித்து அருள்புரிந்தார். அவன் மெய்ஞ்ஞானம் பெற்று உய்ந்தான். புத்தேளிர் கணேச மூர்த்தியைப் போற்றிப் புகழ்ந்து, பூமாரி பொழிந்தார்கள்.

மயிலுக்குத் தோகையழகு; சேவலுக்குக் கொண்டை யழகு; யானைக்குக் கொம்பு அழகு, தமது திருமுகத்தில் அழகாக விளங்கிய ஒரு கொம்பை அமரர்கள் பொருட்டு ஒடித்து அசுரனை மடித்து அருளிய விநாயகருடைய கருணைத் திறத்தைத் தேவர்கள் சிந்தித்து வந்தித்தார்கள்.

சுக்கிராசாரியரும், அசுரேந்திரனும் பறவையுருக் கொண்டு பறந்து கரந்து வாழ்ந்தார்கள்.

திருச்செங்காட்டில் விநாயகர் சிவலிங்கம் வைத்து வழிபட்டார். அது "கணபதீச்சுரம்" எனப் பேர் பெற்றது.

15. அனந்தன் சாப நீங்கு படலம்

விநாயகக் கடவுள் திருச்செங்காட்டுக் கணபதீச் சுரத்தை விட்டுத் தேவர்களுடன் புறப்பட்டு, ஆலங்காட்டை யடைந்தார். அம்மை சாபத்தினுல் அங்கு ஓர் ஆலமரப் பொந்தில் பாம்பு வடிவத்துடன் தவம்புரிந்துகொண்டிருந்த திருமால் அவரை வணங்கித் துதித்தார். உடனே பாம்பு வடிவம் நீங்கியது.

விநாயகருடைய கருணையால் திருமால் தம் பழைய வடிவைப் பெற்று விநாயகருக்கு அபிஷேக ஆராதனை செய்து வழிபாடு புரிந்தார். அப்படி வழிபட்ட நாள் மார்கழி மாதம் சுக்ல பட்சத்து சஷ்டி யாகும். அன்று விநாயகரை வழிபட்டோர் எல்லா நலன்களும் எய்துமாறு விஷ்ணு விநாயகரிடம் வரம் பெற்றுர்.

மாலயனுதி வானவர்கள் விநாயகரை வணங்கி "இத்தனை காலம் கயமுகனிடத்தில் இட்டதுபோல் உமது சந்நிதியில் நாங்கள் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் இடுவோம்" என்றுர்கள். விநாயகர் அவ்வாறு செய்து நலம் பெறுவீர்கள் என்று கூறிக் கருணைபுரிந்தார்.

இதுதான் சிவமூர்த்திக்கு மைந்தன் உண்டாகிய தன்மை" என்றுர் ததீசி.

தட்சன் "சிவனுக்குத் தாமத குணந்தானே உண்டு" என்றுன்.

ததீசி "ஏ பேதையே! சிவமூர்த்தி சத்துவம், இராஜசம், தாமதம் என்ற முக்குணங்கள் இல்லாதவர். அவர் நிர்க்குணர், ஆனுல் சிற்குணர், சங்காரத்தைத் தமோகுணத்தால் செய்வதால் ஈசனைத் தமோ குணமுடையவன் என்று கூறுதல் கூடாது.

சிவபெருமான் சாந்த குணக் குன்று, சத்துவகுணம் வெண்மை. அதனுல் சிவபெருமான் வெள்ளை நீறு அணிந்து வெள்ளி மாமலையில் வீற்றிருக்கின்றுர். சங்கர மகாதேவன் அகில லோக ஏகநாயகன். உயிர்க்குயிராகி எங்கும் இருக்கும் அப்பரமனுடைய தன்மை வேதங்களும் உணராது.

பேதையே! நீ சிவ மூர்த்தியைப் போற்றி உய்வாயாக" என்று இயம்பினர் ததீசி முனிவர்.

ததீசி முனிவருடைய அறவுரை ஓட்டை ஏனத்தில் விட்ட நீர்போல் ஆயிற்று. தட்சன் கேட்டு "உங்கள் சிவன் எல்லாஞ் செய்யவல்ல ஈசனே யாகட்டும். அவனுக்கு நான் அவிர்ப்பாகம் வழங்கமாட்டேன். உன் உபதேசம் போதும். எழுந்து போ" என்றான். ததீசி முனிவருக்குச் சிற்றம் பொங்கியது. எம்மலையும், எக்கடலும், எவ்வுலகும் யாவும் யாரும் அழியுமோ என்று எல்லோரும் அஞ்சினர்கள். ததீசி முனிவர் தமது சினத்தைத் தணித்து தட்சனைப் பார்த்துக் கூறினர்.

"தட்ச! சிவமூர்த்தியை விலக்கிச் செய்யும் இம் மகம் சிதைவதாக, இங்குறையும் தேவரெல்லாம் அழிக" இந்த வேதியர்கள் சிவபக்தியின்றி தீ நெறிப்பட்டுத் திரியக்கடவர்" என்று கூறினர்.

பேசரிய மறைகளெலாம் பராபரன் நீ
என வணங்கிப் பெரிது போற்றும்
ஈசனையும் அன்பரையும் நீற்றெடுகண்
டிகையினையும் இகழ்ந்து நீவிர்
காசினியின் மறையவராய் எந்நாளும்
பிறந்திறந்து கதியுறாது
பாசமத னிடைப்பட்டு மறையுரையா
நெறியதனில் படுதிர் என்றான்.

இவ்வாறு பல சாபங்களைக் கூறிவிட்டுத் தன் மாணவர்கள் சூழத் தன் ஆசிரமம் போனார். அவர் பின்னே தட்சனுடைய தவமும், தகவும், புகழும் தொடர்ந்து சென்றன.

16. தானப் படலம்

ததீசி முனிவர் புறப்பட்டுப் போனபின் யாக தம்பத்தில் கழுகுகளும் காகங்களும் சூழ்ந்தன. தட்சன் மனைவியாய வேதவல்லியின் கழுத்திலிருந்த தாலி கீழே விழுந்தது. இவ்வாறு பல துன்னிமித்தங்கள் தோன்றின; இதனைக் கண்டு தீயோனாகிய தட்சன் அஞ்சினானில்லை.

யாகந் தொடங்கப் பெற்றது. காமதேனு ஒரு பொன் மண்டபத்தில் வெள்ளிமலை போல் அன்னத்தை உண்டாக்

கியது. சர்க்கரைப் பொங்கல் கறியமுதுகள் குன்றுகளைப் போல் அமைத்தது. பட்சணங்கள் பழங்கள் குவிக்கப்பெற்ற பால், தயிர், நெய், பாயசம் மடுக்களைப்போல் உண்டாக்கிற்று. வெற்றிலை பாக்கு கஸ்தூரி, பனிநீர், சந்தனம், மலர்கள் முதலியவைகளை நிரம்பவும் உண்டாக்கி வைத்தது. அன்றி, சங்கமும், பதுமமும். சிந்தாமணியும் கற்பகமும் அங்கு வந்து வேண்டிய அனைத்தும் வழங்கின ஒருபுறம் பொன், நவரத்தினங்கள் பொன்னுடைகள் குவிக்கப் பெற்றன.

தட்சன் வேதியர்களை அழைத்து அன்னமும் ஆடையும் சொன்னமும் வழங்கினன். அந்த வேதியர்கள் தட்சனை வாழ்த்தினர்கள். சிலர் பசி தீர்ந்தும் ஆசை தீராது நின்று சொண்டேயிருந்தனர். பாவி பிரமா நமக்கு இந்த உணவுகளை யுண்ணும் பொருட்டு ஒரு முழம் நீளம் வயிற்றைத் தந்தானில்லையே என்று சிலர் வருந்தினர். ஆயிரம் வாய்களும் ஆயிரம் வயிறுகளும் இல்லையே என்று சிலர் கவலைப் பட்டார்கள். 'இத்தனையுந்தரும் காமதேனுவை ஒரு கயிற்ருல் கட்டிக்கொண்டு போகலாம்' என்ருர் சிலர். நிறைய உண்ட சிலர் எப்படி எழுந்திருப்பதென்று ஏங்கினர்கள். நமது மனைவி மக்களை அழைத்து வரவில்லையே என்று சிலர் வருந்தினர். உண்டவர்க்கு ஒருபுறம் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டன. ஆடைகள், குடைகள். பாதுகைகள், கமண்டலங்கள், தங்கக் காசுகள், நவமணி மாலைகள், பசுக்கள், கன்னியர்கள் முதலியன எண்ணில்லாத அளவில் வழங்கினர்கள். சில வேதியர் தலையில் சுமந்து சென்றனர். ஒருபுறம் வீணை புல்லாங்குழல் மத்தளம் முதலிய இசைக் கருவிகள் ஒலித்தன. ஒருபுறம் இன்னிசைப் பாடல்கள் பாடினர்; ஒருபுறம் அரம்பையர் ஆடினர்.

17. வேள்விப் படலம்

தட்சன் நாராயணரையும் நான்முகனையும் சிறந்த பீடங்களில் இருத்தி யாகம் புரியும் யக்ஞமூர்த்திகளைப் பார்த்து இனி யாகம் புரியுங்கள்" என்ருன். யாகத்தில் சில மந்திரங்களை ஒழித்து, ஏனைய தேவதைகளுக்குரிய மந்திரங்களைக் கூறி அத்தேவதைகளை அழைத்தார்கள். அத்தேவதைகட்கு யாகாக்கினி மூலம் அவியை அளித்தார்கள். தேவர்கள் அந்த இனிய அவியை நஞ்செனை உணராது உண்டார்கள்.

18. உமை வரு படலம்

இவ்வாறு வேள்வி நடைபெறும்போது நாரத முனிவர் வந்து பார்த்தார், சிவமூர்த்தியை விலக்கிச் செய்யும் வேள்வியைக் கண்டு உள்ளம் வெதும்பினர். திருக் கயிலைமலை சென்று நந்தி தேவருடைய அனுமதி பெற்று உள்ளே சென்று அம்பிகையையும் எம்பிரானையும் பலமுறை பணிந்து துதித்தார். சிவபெருமான் நாரதரை கருணைக் கண்களால் நோக்கினர். எங்கும் நிறைந்து எல்லாம் உணர்ந்த ஈசன் "நாரதா! என்ன புதுமை?" என்று கேட்டருளினர்.

நாரதர் "கருணாமூர்த்தீ! கனகலம் என்ற இடத்திலே மாலயனாதி வானவரை வைத்து மதியில்லாத தட்சன் ஒரு பெரிய வேள்வி செய்கின்றான்" என்றார்.

இதைக் கேட்ட தாட்சாயணி, இறைவனை இறைஞ்சி "பெருமானே! என் தந்தை செய்கின்ற யாகத்தை யான் போய்க் கண்டு மகிழ விரும்புகின்றேன். விடை தந்தருளும்" என்றாள். இறைவர் "தேவீ! தட்சன் உன்னை அழைத்தா னில்லை. அழையாத இடத்துக்குப் போவது பிழையாகும்" என்றார். அம்பிகை "அருட்கடலே! தட்சன் அறிவு குறைந்தவன் மறந்திருப்பான். என் தங்கையர்கள் யாவரும் அங்கு குழுமியிருப்பார்கள். ஆதலால் போக விரும்புகின்றேன். அனுமதி தாரும்" என்றாள். விடையூர்தி, விடை தந்தருளினர். எல்லா உலகங்களையும் ஈன்ற எம்பிராட்டி விமானத்தில் ஏறிப் புறப்பட்டாள். பல சேடியர் உடன் சென்றார்கள். நந்தி தேவரின் மனைவி சுயசை பாதுகையைத் தாங்கிச் சென்றாள். கமலினி, அநிந்திதை என்னுங் கன்னியர் பூமாலைகளை ஏந்திச் சென்றனர். தட்சனுடைய வேள்விச் சாலைக்குள் அம்பிகை சேர்ந்தாள்.

பட்சமில்லாத தட்சன் தாட்சாயணியை வெகுண்டு நோக்கிக் கூறுகின்றான். "தந்தையும் தாயும் இல்லாத சங்கரன் மனைவியான நீ இங்கு ஏன் வந்தாய்? நான் உன்னை அழைக்கவில்லையே! உன் கணவன் பித்தன்; பேயுடனாடும் பேயன்; தாமத குணத்தினன்; நீ அவனுடன் சேர்ந்து மயக்க முற்றனை. இதோ பார்; உன் தங்கையர்களும் அவர்களின் கணவர்களும் மாலும் அயனும் என்னை மதித்துச் சூழ்ந்திருக்

கின்றார்கள். என்னை மதியாத சிவனுக்கு அவியும் தரமாட்டேன். சிவனுக்கு முதன்மையாகத் தரவேண்டும் என்று சாற்றுகின்ற வேத மொழியையும் மாற்றுகின்றனன். சிவனை நீ சேர்ந்ததால் இங்கு நான் உனக்கு ஒரு சிறப்பையும் செய்யமாட்டேன். நீ இங்கு நில்லாது செல்'' என்றான்.

இந்த சாரமும் ஈரமும் இல்லாத கோர மொழிகளைக் கேட்ட வீரத் தாய் பெரிதும் வெகுண்டாள். அம்மையின் சீற்றத்தைக் கண்டு விண்ணும் மண்ணும் கடலும் மலையும் கதிரும் மதியும் நடுங்கின. விமலை என்ற பாங்கி அம்மையை அஞ்சலித்து, ''அகிலாண்டங்களையும் பெற்ற அன்னையே! தாய்சீறினால் சேய்கள் உய்யுமோ? சிறுமதியுடைய இந்த சிறு விதியைத் தேவரீர் சீறினால் உமது சீற்றம் உலகங்களை யழித்துவிடும்; பொறுத்தருள்புரியும்'' என்று வேண்டினாள்.

அம்பிகை தன் சீற்றத்தை மாற்றி, தட்சனைப் பார்த்துக் கூறினாள். ''ஏ மதியில்லாதவனே! நீ என்னை இகழ்ந்ததைப் பொறுத்துக் கொண்டேன். எனையுடைய முன்னை நாயகனை இகழ்ந்த புன்மொழியைப் பொறுக்ககில்லேன். என் செவியைச் சுட்டுவிட்டது. சிற்குணமுடைய சிவமூர்த்தி நிர்க்குணமுடையவர். தந்தை மைந்தரைத் தண்டிக்கும் போது அவருக்குள்ள சினம் அருளின் நீர்மையாம். அது போல் இறைவர் உலகங்களைச் சங்கரிக்கின்றபோது தாமத குணத்தை மேற்கொள்ளுகின்றார். அது அவருக்கு இயற்கையன்று. சர்வசங்காரம் அவர் ஒருவரே செய்யவல்லவர். சர்வ சங்காரம், ஒழியாது பிறந்து இறந்துவரும் உயிர்கட்கு ஓய்வு தருவதாகும். அது கருணையால் நிகழ்வதாகும். அழித்த அவரே அளிக்கவும் வல்லவராகும். அப்பரமபதியை—கருணா நிதியை தாமத குணத்தன் என்று நீ சாற்றலாகுமோ? சிவ என்ற ஈரெழுத்துக்களைச் செப்பினோர் எளிதில் நற்கதி நண்ணுவர். சிவமூர்த்தியை நிந்தித்த புந்தியற்றபுல்லிய உனக்கு இப்போது தண்டனை கிடைக்கும்'' என்று இயம்பி அக்கணமே விமான மூர்ந்து கயிலாயஞ் சென்றாள்.

கருணை நாயகரைத் தொழுது "அண்ணலே! உமை நிந்தித்த தட்சனுடைய யாகத்தை அழித்திடவேண்டும். உமக்கு விருப்பும் வெறுப்பும் இல்லை எனினும் எமக்காகச் செய்தருள வேண்டும்'' என்றனள்.

19. வீரபத்திரப் படலம்

அப்போது ஆலமுண்ட நீலகண்ட நிமலன் சிந்தித்தார். அச் சிந்தையிலிருந்து அகோரவீரபத்திரர் அவதரித்தார். அவருக்கு ஆயிரம் சிரங்களும், சிரங்கள் தோறும் மூன்று கண்களும், பிறைமதியுடைய முடிகளும், விளங்கியிருந்தன. ஈராயிரந் திருக்கரங்களும், பிரமசிர மாலைகளும், எலும்பு, ஆமையோடு, பன்றிக்கொம்பு இவைகள் புரளும் திருமார்பும் உடையவராய் நின்ருர். கரங்கள் தோறும் பலப் பல படைக் கலங்கள் ஒளி செய்திருந்தன. அவருடைய திருமேனியில் நாகாபரணங்களும் ரத்னபரணங்களும் விளங்கின. வீரக் கழலுடன் திருவடிகள் காட்சி யளித்தன. அந்திவான் வடிவாகிய எந்தையாருடைய நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய வீரபத்திரர் சிவனே எனக் காட்சி தந்தார்.

அப்போது அம்பிகை தன் கோபக்கனலில் இருந்து பத்ரகாளியைப் படைத்தாள். வீரபத்திரரும் பத்ரகாளியும் அம்மையப்பரை வணங்கினுர்கள். வேத மூர்த்தியைப் பார்த்து விளம்புகின்ருர்.

"தந்தையே! மாலையும் அயனையும் பற்றிக் கொண்டு வர வேண்டுமா? காலனைக் கொல்ல வேண்டுமா? தேவர்களை அழிக்கவோ? அசுரர்களை வதைக்கட்டுமா? கடல்களையும் உலகங்களையும் அப்படியே விழுங்கிவிட வேண்டுமா? எல்லா வுயிர்களையும் எரிக்கட்டுமா ? அண்டங்களைத் துண்டங்கள் செய்யட்டுமா? உமது அருளால் எதையும் செய்யவல்லேன். என்னை ஈன்றது என்ன பணிக்காக?' உத்தரவு தாரும்," என்ருர்.

சிவபெருமான் "மகனே! எம்மை விலக்கி தட்சன்வேள்வி செய்கின்ருன். நீ அங்கு சென்று நமது அவிர்ப்பாகத்தைக் கேள். அவன் நல்லுணர்வு பெற்று நல்கினுல் இங்கு வருக; இல்லையேல் அவன் தலையினை யறுப்பாயாக. அவனை அடுப் போரைக் கொல்வாயாக, யாகத்தை யழிப்பாயாக. நாம் அங்கு வருவோம்" என்று கட்டளையிட்டார்.

பத்ரகாளியுடன் வீரபத்திரர் புறப்பட்டார். அவருடைய மூச்சுக் காற்றிலிருந்தும், வேர்வையிலிருந்தும் பலப்பல வீரர்களை யுண்டாக்கினுர்.

மொழியி னில்பல பூதரை யளித்தனன் முளரி
விழியி னிற்பல பூதரை யளித்தனன் வேணி
உழியி னிற்பல பூதரை யளித்தனன் உந்திச்
சுழியி னிற்பல பூதரை யளித்தனன் தூயோன்.

தோளில் எண்ணிலா வீரரை யளித்தனன் சுவையின்
கோளில்* எண்ணிலா வீரரை யளித்தனன் குளிர்பொன்
தாளில் எண்ணிலா வீரரை யளித்தனன் தடக்கை
வாளில் எண்ணிலா வீரரை யளித்தனன் வலியோன்.

கையி னிற்சில பூதரை யளித்தனன் களத்தில்
வெய்ய மார்பினில் கன்னத்தில் சிலவரை விதித்தான்
ஐய தோர்முழந் தாள்தனில் சிலவரை யளித்தான்
குய்ய மீதினில் ஊருவில் சிலவரைக் கொடுத்தான்.

இவ்வாறு வீரபத்திரர் தன்னை யொத்த பல வீரர்களைப் படைத்தார். அதே போல் பத்ரகாளியும் பல்லாயிரங் காளிகளைப் படைத்தாள்.

விடைமுகம், சிங்கமுகம், புலிமுகம், யாளிமுகம், யானைமுகம், குதிரைமுகம் எனப் பல முகங்களுடன் அவ்வீரர்கள் விளங்கினார்கள்.

மடித்த வாயினர்; வானவர் என்பினால்
தொடுத்த கண்ணி துயல்வரு மார்பினர்
தடித்த தோளர்; தனித்தழல் என்னினும்
பிடித்து நுங்கும் பெரும்பசி மிக்குளார்.

பத்ரகாளியிடந் தோன்றிய காளிகள் ஆயுதந் தாங்கி, அண்டங்கள் வெடிபடக் கர்ச்சித்துப் புறப்பட்டார்கள். பானுகம்பன் முதலிய பூதர்கள் சங்கு முதலிய வாத்தியங்களை முழக்கினார்கள். தண்டன் பிங்கி சிங்கன் என்பவர்கள் குடை பிடித்தார்கள். கவரி வீசினார்கள்; ஆலவட்டம் அசைத்தார்கள்.

அவ்வண்ணமே காளிகள் பத்ரகாளிக்குக் குடைபிடித்து, மலர்தூவி வாழ்த்திச் சென்றார்கள். புழுதிகள் எழுந்தன. மண்ணும் விண்ணுந் துளங்கின.

வீரபத்திரர் தன் பரிவாரங்களுடன் வேள்விச் சாலையை யடைந்தார். தன் சேனைத் தலைவனைப் பார்த்து "எம்பிரானை

---

*சுவையின் கோள்-நாக்கு.

விலக்கித் தட்சன் புரியும் வேள்விச் சாலையில் நின்று ஒருவரும் வெளியேறா வண்ணம் காவல் புரிக என்றார்". வேள்விச் சாலையைச் சுற்றி கடல் சூழ்ந்ததுபோல் சேனைகள் சூழ்ந்து நின்றன. எதிர்த்து வந்த தட்சனுடைய சேனையைக் கொன்று தின்றன.

20. யாக சங்காரப் படலம்

வீரபத்திரமூர்த்தி பத்ரகாளியுடன் யாக சாலையுள் நுழைந்ததைக் கண்ட பிரமாதி தேவர்கள், சிங்கத்தைக் கண்ட மான் கூட்டம் போலவும், இடியைக்கேட்ட நாகங்கள் போலவும் நடு நடுங்கினார்கள். அச்சங் கொண்டு பதை பதைத்தார்கள். நமக்கு நாசம் வந்துவிட்டதென்று எண்ணினார்கள். "தட்சனுக்கும் முடிவு வந்துவிட்டது" என்றார்கள். "விதியை யாரே விலக்கவல்லார்?" என்றார்கள். "சிவத்தை நிந்தித்து இவன் ஏன் இந்த மகத்தைச் செய்கின்றான்" என்றார்கள்.

வீரபத்திரர் வேள்வியைக் கண்டார். அவருடைய கண்களில் கனல் பொறிகள் சிந்தின. ஒரு சங்கத்தை எடுத்து ஊதினார். அவ்வோசையால் மேருகிரி பிளந்தது. பூமி வெடித்தது. அண்டங்கள் இடிந்தன. சீலமற்ற தட்சனும் நடுக்கமுற்றுத் தளர்ந்தான்.

தட்சன் வீரபத்திரரை நோக்கி, "நீ இங்கு வந்த காரணம் யாது? நீ யார்?" என்று கேட்டான். வீரபத்திரர் "தட்ச! நான் சிவகுமாரன். உன் வேள்வியில் பரமனுக்கு உரிய பாகத்தைப்பெற வந்தேன். தருக" என்றார், தட்சன் "சிவனுக்கு அவிர்ப்பாகம் தருகிலேன்" என்றான்,

அப்போது நான்கு வேதங்களும் குடிலை யாகிய ஓங்காரமும் உருவந்தாங்கி வந்து ஈசன் ஒருவனே வேதமூர்த்தி; யாகாதிபன்; வேறு ஒருவன் இல்லை. ஆதலால் நீ பரமசிவத்துக்குரிய பாகததைத் தருவாயாக" என்று முழங்கின. அது கேட்டுந் தட்சன் சும்மாவிருந்தனன். வேதங்களும் குடிலையும் அந்த இடத்தைவிட்டுச் சென்றன.

மீண்டும் வீரபத்திரர் "தட்ச! வேதமும் குடிலையும் கூறியதைக் கேட்டனையா? எனவே ஈசன் பாகத்தைத் தருதி"

என்றார். தட்சன் "மயானத்தில் பேயோடாடும் பித்தனுக்கு ஈயேன்" என்றான்.

வீரபத்திரர் விரிஞ்சன் முதலிய விண்ணவரைப் பார்த்து "நீங்களும் இவன் உடன் ஒத்து உறைகின்றீர்கள். இவன் உரை உமக்கு உடன்பாடோ?" என்று வினவினர். உம்பர்கள் ஒன்றும் உரையாது ஊமின் பயனால் ஊமர் போல் உறைந்தார்கள்.

வீரபத்திரர் கோபத்தால் திரிபுரதகனன் போல் சிரித்து மேருவரை போன்ற கதையால் தட்சன் மார்பில் அடித்தார். அவன் அஞ்சி விஷ்ணுவின் முன் வீழ்ந்தான். பிரமனுடைய சென்னியில் ஓங்கிக் குட்டினர். பிரமன் அவர் பாதத்தில் பணிவான் போல் பதைத்து வீழ்ந்தான். சரஸ்வதி முதலிய தேவ மாதர்களின் நாசியையும் தனத்தையும் கொய்தார். தேவர்கள் வாடினார்கள்; ஓடினார்கள்; ஒளியும் இடத்தை நாடினார்கள். நடுங்கினார்கள்; ஒரு புறம் ஓடும் சந்திரனைத் தள்ளித் திருவடியால் நிலத்தில் தேய்த்தார். சூரியனுடைய பற்களை உடைத்தார். பகனுடைய கண்களைப் பறித்தார். இயமனுடைய தலையை வெட்டினர். அக்கினியின் ஏழு நாக்குகளை யறுத்தார். அக்கினியின் மனைவி சுவாகா தேவியின் நாசியை விரலால் கிள்ளினர். நிருதியைத் தண்டினால் புடைத்து மாய்த்தார். உருத்திரர்கள் அவருடைய திருவடியில் வீழ்ந்து வணங்கியதால் அவர்களை அந்த இடத்தைவிட்டு ஓட்டினர். வருணனையும் வாயுவையும் குபேரனையும் கொன்றார். ஈசானன் வணங்கி உருத்திரர் ஓடிய வழியில் ஓடினான்; அசுரேந்திரனைத் தடியால் அடித்து மாய்த்தார். ஓடுகின்ற எச்சனுடைய சிரத்தைத் துணித்தார்.

தட்சன் இவற்றை யெல்லாங் கண்டு தன் மனத்துக்குள் என் தந்தையாகிய பிரமதேவர் கூறிய வாய்மையால் தவஞ் செய்து சிவனிடம் எல்லா நலன்களும் எய்தினேன். வரங் கொடுத்த வள்ளலை மறந்தேன். நன்றியுணர்வைத் துறந்தேன். உலக மாதாவைப் பெற்று அப்பெருமாட்டியை மகள் என்றும் மாதேவரை மருமகன் என்றும் எண்ணிக் கேட்டேன். வேத விதிப்படி இறைவனுக்குத் தரும் அவியைத் தரக்கூடாது என்று தந்தையைத் தடுத்தேன். வேத நெறியை மறுத்து

இவ்வேள்வியைச் செய்தேன். தந்தையே யன்ன ததீசிமா முனிவருடைய அறவுரையை நிந்தித்தேன். வேள்விக்கு வந்த எம்பிராட்டியையும் இறைவரையும் இகழ்ந்தேன். இந்த வீரமூர்த்தி கேட்டும் அவியைத் தர மறுத்தேன். வேதங்களை வெறுத்தேன். பிரமாதி தேவர்க்கும் வேதியர்க்கும் முடிவைச் செய்தேன். இப்போது இறக்கும் நிலையில் தளர்கின்றேன். விதிவழி மதி சென்றது போலும்'' என்று தன் மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்.

இனி ஓடினாலும் உய்யமாட்டேன் என்று தட்சன் வீரபத்திரர் முன் நின்றான். வீரபத்திரர் அவன் தலையை வாளினால் வெட்டி, அத்தலையை வேள்வித் தீயில் உள்ள நெருப்பிடைத் தந்து "உண்ணுக'' என்றார். அக்கினி ஒரு நொடியில் உண்டான். இதனைக் கண்ட வேதவல்லியும் அவளுடைய புதல்வியர்களும் புலம்பிக்கொண்டு அங்கு வந்தார்கள். வீரபத்திரர் வேதவல்லியின் செவிகளைக் கொய்தார். மற்ற மாதர்களின் தலைகளைத் தடிந்து பந்துகளைப்போல் வீசினார். காளி தேவியும் வீரபத்திரரும், தேவர்களையும், முனிவர்களையும் தலையை வெட்டி வீழ்த்தினார்கள். சில தேவர்களும் வேதியர்களும் ஓடி ஓடி ஒளியலானார்கள்.

வீரர்கள் தோரணங்களை அறுத்தார்கள். யாகவேதிகைகளையிடித்தார்கள். அனைவரையும் மடித்தார்சள்.

திருமால் அயர்ச்சி நீங்கியெழுந்தார். வேள்விச் சாலை அழிந்ததையும் அமரர்கள் மாண்டு ஒழிந்ததையுங் கண்டார். "நமது காப்புத் தொழில் அழகிது'' என்று நாணினார். பரமனை யிகழ்ந்தவர்க்கு இது தகுந்த தண்டனைதான் என்று உணர்ந்தாரில்லை. வீரபத்திரருடன் போர்புரியக் கருதினார். கருடனைக் கருதினார். கருடன் மாண்டிருக்கக் கண்டார். தமது கோபத் தழலையே கருடனாக்கினார். அதன் மீது ஏறினார். பாஞ்சசன்யத்தைத் தம் பவள வாயில் வைத்து ஊதினார். சார்ங்கம் என்ற வில்லை வளைத்து எல்லையில்லாத கணைகளை சேனைகளின் மேல் வீசினார்.

அப்பொழுது வீரபத்திரருக்கு ஒரு பெரிய தேரை அரனார் அனுப்பினார். ஆயிரம் வேதங்களும் அத்தேருக்கு ஆயிரம் குதிரைகளாக வந்தன. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்

திக்கொள்ளவேண்டும் என்று கருதிய பிரமதேவர் மெல்ல எழுந்து தேர்ப்பாகனுக வந்தார். வீரபத்திரரும் பத்ரகாளியும் அத்தேர் மீது ஆரோகணித்தார்கள். தேர் திருமாலின் முன் சென்றது. விஷ்ணுமூர்த்தி வீரபத்திரரைப் பார்த்துப் பகர்கின்ருர்.

"சிவபெருமானை விலக்கிய தக்கனைத் தண்டித்தது நியாயம், வேள்வியை யழித்ததும் விண்ணவர்களை யழித்ததும் என்ன காரணம்?" என்று வினவினர். "எல்லாமாகி எங்கும் நிறைந்த எம்பிரானை விலக்கியதால் வேள்வியையும், இவ்வேள்வியில் அவிநுகர்ந்த அமரரையும் அழித்தோம். உன்னையும் இப்போது அழிக்கப் போகின்றேன்" என்ருர் வீரமூர்த்தி.

திருமால் வெகுண்டு அம்பு மாரி பொழிந்தார். வீரபத்திரர் அக்கணைகளை விலக்கினர். இருவரும் உலகம் வெருவுறு மாறு போர் புரிந்தார்கள். வீரபத்திரர் வடவாமுகாக்கினிக் கணையை ஏவினர். அப்படை அச்சுதனுடைய மார்பைத் தொளைத்தது. திருமால் உணர்வுகுன்றி சிறிது நேரம் நின்ருர். அப்போது வீரபத்திரர் பொறுமையாகப் போர் புரியாதிருந்தார்.

உணர்வு வந்த பின் திருமால் தெய்வப் படைகளை ஏவினர். வீரபத்திரர் அவ்வப் படைகளை அதற்கு நேரான தெய்வப்படைகளால் அழித்தார். திருமாலின் சார்ங்க வில்லைத் துண்டித்தார். திருமால் ஏறிய பறவையின் இரு சிறகுகளை இருகணையால் சேதித்தார். திருமால் தமது மாயையால் பலப்பல வீரரை ஏவினர். வீரபத்திரர் தமது நெற்றிக் கண்ணைத் திறந்து எரித்துவிட்டார். திருமால் சக்கராயுதத்தை விடுத்தார். அரனர் திருமைந்தர் அந்த சக்கரத்தைப் பற்றி பணியாரம் விழுங்குவது போல் விழுங்கிவிட்டார். தண்டுழாய் மார்பன் தண்டாயுதத்தை விடுத்தார். வீரபத்திரர் தமது தண்டினல் அதைத் துகள் செய்தார். திருமால் வாளையேந்தி எதிர்த்து வந்தார். வீரபத்திரர் ஒரு ஹுங்காரம் செய்தார். திருமால் ஓவியம் போல் நின்றுவிட்டார். அப்போது வீரபத்திரர் வெகுளி மிகுந்தார். "கோபங்கொள்ளாதே" என்று ஒரு ஒலி வானிடையெழுந்

தது. வீரபத்திரர் சீற்றத்தை மாற்றினார். அப்போது தேரோட்டும் பிரமதேவர் அவரைத் தொழுது, ''அறநெறி வழுவிய தட்சனுடைய வேள்வியில் அவியுண்ட அடியேனை மன்னித்தருளும்'' என்று அவருடைய அடிமலர்மீது வீழ்ந்தான்.

நாராயணர் நல்லறிவு பெற்று வீரபத்திரரைப் பார்த்துக்கூறினார். ''ஐயனே! அடியேனுடைய வில்லைத் துணித்து, பல படைக்கலங்களையும் பொடிபடுத்தி, சக்ராயுதத்தை விழுங்கி என்னை வென்று புகழ்பெற்ற உம்மைத் துதிசெய்ய வல்லவர் யாவர்? மதியிலாத தட்சனுடைய வழிபாட்டை விரும்பி வேள்வியில் கலந்துகொண்டேன். தேவரீரால் இழந்த அறிவைப் பெற்றேன். ஈசனை இகழ்வோரிடம் நேசம் வைப்பது பிழை. தேவரீர் பார்வையாலும், வார்த்தையாலும், புன்சிரிப்பாலும் அகில உலகங்களையும் அழிக்கவல்லவர். இன்று இங்கு இவ்வாறு போர்புரிந்து அழித்தது உமது திருவிளையாடலே யாகும்.

சிவபெருமானுக்கு நான்கு சக்திகள். போர் சக்தி, கோப சக்தி, அருட்சக்தி, ஆண்சக்தி என்பன. துர்க்கை போர்சக்தி, காளி கோப சக்தி, கௌரி அருட்சக்தி, அடியேன் புருஷ சக்தி. இந்த உண்மைகளை வேதம் பேசுகின்றது.

இறுதிசெய் திடலே சீற்றம் இன்பமே யாண்மை என்னு
அறைதரு சக்தி நான்காம் அரன்தனக் கையை காளி
முறைதரு கவுரி இன்னோர் மும்மையும் பெற்றோர் ஏனைப்
பெறலருஞ் சத்தியான்இப் பெற்றியும் மறைகள் பேசும்.

ஆதலால் அடியேன் இறைவரிடம் பேரன்பு பூண்டவன். சிவபெருமானிடம் பின்னர் நான் வழிபட்டு, இழந்த சக்கரத்தைப் பெறுவேன். நீர் எங்களைத் தண்டித்து முறை செய்தது பற்றி நான் சிறிதும் வருந்தவில்லை. நாங்கள் புனிதமடைந்தோம் பொறுத்தருள்'' என்று அவர் பொன்னடி தொழுதார்.

வீரபத்திரர் திருமாலின் இன்னுரை கேட்டுக் கருணைபுரிந்தார். அப்போது சிவபெருமான் உமாதேவியாருடன் விடைமீது வந்து காட்சியளித்தார். வீரபத்திரர் உள்ளம் உருகி அம்மையப்பரைப் பணிந்தார்.

தனிப்பெருந்தாயான உமாதேவியார் அவ்வேள்விக் களத்திலே கால்வேறு கைவேறு உடல் வேருகத் துண்டிக்கப் பட்டுப் பிணமாகக் கிடந்த தட்சனைக் கண்டாள். சினம் அகன்று அருள் மிகுந்து, பொன்னுர் சடைப் புண்ணியனைப் பார்த்து, "மூவர்க்கும் முதல்வரே! வேள்வியும் தட்சனும் தேவர்களும் உமையால் அழிந்தது என்று உலகம் உரைக்கும். அறிவின்மையால் இவர்கள் குற்றம் செய்து தண்டிக்கப் பெற்ருர்கள். முன்னே யான் வேண்ட இவ்வீரகுமாரனுல் இவர்களுக்கு இறுதி செய்தீர். இவர்கள் பிழைத்து உய்யக் கருணைபுரிவீர்" என்று வரம் வேண்டினுர்.

நம் பெருமான் நன்றென நகைத்து "வீரகுமாரா! இவர் கள் உய்ய அருள் செய்" என்ருர். வீரபத்திரர் "எல்லோரும் எழுக" என்ருர். அத்தனை பேரும் தூங்கி விழித்தவரைப் போல் எழுந்தார்கள். இந்திராதி தேவர்கள் தம் பிழையை நினைந்து நாணமடைந்தார்கள்.

தேவர்கள் விண்ணிலே விடையின்மீது உமையம்மை யுடன் கண்ணுதற் கடவுளைக் கண்டார்கள். அஞ்சினுர்கள். செஞ்சடைச் செம்மல் அஞ்ச வேண்டாம் என்று தஞ்ச மளித்தார்.

தேவர்கள் தேவதேவனைத் தொழுதார்கள். அழுதார்கள். நன்றியுணர்வில்லாத தட்சன் தேவரீரை விலக்கிச் செய்த யாகத்தில் கலந்து கொண்ட எமக்கும் அருள்புரிந்தீரே. தந்தை யன்றி மைந்தர்க்கு ஆதரவு ஏது? வேதவிதியை விலக்கிச் செய்த வேள்வியில் கலந்துகொண்ட நாங்கள் பன்னெடுங்காலம் இத் தீவினையை அனுபவிக்கவிடாது ஓரிமைப்போதில் எம்மைத் தண்டித்து அருள்புரிந்த ஐயனே! அடியேங்கள் செய்யும் கைம்மாறு யாதுளது? தங்கத்தைக் காய்ச்சி அடித்து ஆபரணமாகச் செய்வதுபோல், பிழைபட்ட எங்களை வீரமூர்த்தியால் தண்டித்துப் புனிதப் படுத்தினீர்.

கங்கை முடித்ததுவும் காய்கனலை ஏந்தியதும்
வெங்கண் மிகுவிடத்தை மேலுள் அருந்தியதும்
நங்கை உமைகாண நடித்ததுவும் முற்பகலும்
எங்கள் மிசைவைத்த அருளன்ரே? எம்பெருமான்.

எந்தையே! எம் பிழைகளைப் பொறுத்து அருள்புரியும்'' என்று போற்றிப் புகழ்ந்தார்கள். சிவபெருமான் ''உம்பர்களே! உங்கள் அரசை உங்கட்கே உவந்து அளித்தோம். சென்று நன்று வாழ்வீர்களாக'' என்று கூறி கருணை புரிந்தார்.

பிரமதேவர் அக்குழுவில் தன் மகனாகிய தட்சன் மட்டும் பிழைக்கவில்லை யென்றறிந்து சந்திரசேகரரை வந்தனை செய்து ''அந்தி வண்ணத்து அண்ணலே! நிந்தனை செய்த தட்சனை நரகம் புகா வண்ணம் தண்டித்து]நல்லருள் புரிந்தீர்: அவனையும் பிழைத்தெழுமாறு கருணை புரியும்'' என்று வேண்டினார். பானுகம்பன் தட்சனுடைய உடம்பைக் கொணர்ந்தான். தட்சனுடைய தலை நெருப்பில் இட்டுச் சாம்பரானபடியால் யாகத்தில் மாண்டிருந்த ஒரு ஆட்டுத் தலையைப் பொருத்தி தட்சனை உய்வித்தார். சிவன் பரம் பொருளா? என்று ஆட்டுந் தலையுடைய தட்சன் ஆட்டுத் தலைபெற்று எழுந்தான். வீரபத்திரரையும் விடை மீது விமலரையுங்கண்டு தன் பிழையுணர்ந்து துயரக்கடலில் ஆழ்ந்தான்; அஞ்சினான். அருட் கடலாகிய இறைவன் ''தட்சனே! அஞ்சற்க'' என்று பட்சமொடு பகர்ந்தார். தட்சன் எம்பெருமானுடைய இணையடிமீது வீழ்ந்து ''ஐயனே! வெய்யனேன் செய்த தீமை அளவிட முடியாது. அதை நினைதொறும் நினைதொறும் நெஞ்சைச் சுடுகின்றது. என் பிழைகளைப் பொறுத்து அருள்புரியும்'' என்று வேண்டினான்.

உமாதேவியார் வீரபத்திரரையும் பத்ரகாளியையும் அருகில் அழைத்து, முதுகைத் தடவி ''நீங்கள் கணவனும் மனைவியுமாக வாழ்க'' என்று ஆசி கூறினாள். சிவபெருமான் மாலயனாதி வானவரை நோக்கி, உம்மைத் தண்டித்தது உமது வினை நீக்கம் பெறும் பொருட்டேயாகும். அதனை நினைந்து நாண வேண்டாம்'' என்று கூறி சிவபெருமான் கயிலை சேர்ந்தார். வீரபத்திரருக்கு ஒரு தனிப்பதந் ததார். அதில் பத்ரகாளியுடன் வீரபத்திரர் வீற்றிருந்தார்.

தேவர்கள் தத்தம் உலகம் போனார்கள்.

21. அடிமுடி தேடு படலம்

"மகனே! முன்னே என்பால் என்ன உணர்ந்தாய்? இப்போது என்ன செய்தாய்? என்ன நினைந்தாய்? இத்தனை நலங்களும் யாரிடம் பெற்றாய்? என்ன துன்பம் அடைந்தாய்? இப்போது உன் எண்ணம் என்ன? பிரமதேவர் தட்சனைப் பார்த்துக் கூறினர்.

யாதுமுன் உணர்ந்தனை; யாது செய்தனை;
யாதவண் கருதினை யாரில் பெற்றனை;
யாதுபின் செய்தனை; யாது பட்டனை
யாதிவண் பெற்றனை யாதுன் எண்ணமே.

அறிவில்லாத அமரர்களுக்கும், தவவலிமை மிகுந்த முனிவர்களுக்கும், பூதலத்தில் வாழும் அந்தணர்களுக்கும் நீ எமனாக ஆனாய்.

சீரையுந் தொலைத்தனை; சிறந்த தக்கனும்
பேரையுந் தொலைத்தனை; பேதை யாகிநின்
நேரையுந் தொலைத்தனை ஏவல் போற்றுநர்
ஆரையுந் தொலைத்தனை அலக்கண் எய்தினாய்.

தன்னாலுந் தெரியாது; சொன்னாலுந் தெரியாது என்ற பழமொழிக்கு நீ இலக்கியமானாய். வரங்கொடுத்த வள்ளலை யிகழ்ந்தாய். ஆன்றோர்கள் கூறிய அறவுரையைக் கேட்டா யில்லை. வேதங்களை ஓதிய நீ பேதையாகி விட்டாய். விதிவழி மதி சென்றது. ஆதலால் இனி காதலால் அரனாரை அருச்சனை செய். பிறவித்துபரம் நீங்க அயர்ச்சி யில்லாது முயற்சி செய். உயர்ச்சி யடைவாய்."

ஆட்டு முகமுடைய தட்சன், திருந்திய உள்ளத்துடன், தான் செய்த பிழைக்கு வருந்தி "தந்தையே! தாங்கள் உரைத்த வண்ணம் சிவபூசை செய்து பவ நோய் களைவேன். முன் ஒரு சமயம் நீரும் திருமாலும் மதி மயக்க முற்று நின்றதையும், சிவனருள் செய்ததையும் கூறும். என் அறிவு மேலும் தெளிவு பெறும்" என்றான். பிரமதேவர் கூறினர்.

மனித யாண்டு முந்நூற்றறுபது சேர்ந்தால் தேவ யாண்டு ஒன்று, இந்த தேவயாண்டு பனிரண்டாயிரம் சேர்ந்தால் ஒரு சதுர்யுகம் எனக்கு ஓர் பகலாகும். அப்போது

உலகம் யாவும் நீருள் முழுகிவிடும். எங்கும் வெள்ளமாகி விடும். நான் ஓய்வு எடுத்து உறங்கச் செல்லுவேன். அப் போது அந்த வெள்ளத்தில் திருமால் ஓராலிலை மீது சிவசிந்தையுடன் படுத்திருப்பார்.

வாளும் ஒடுங்கும், பரிதி மாமதியொடுங்கும்
நாளும் ஒடுங்கும்; தமது நாளும்ஒடுங்குற்றே
கோளும் ஒடுங்கும், குலிசபாணி முதல்வானோர்
கேளும் ஒடுங்கும்; புவனிகேடு படுமஅன்றே.

ஜனலோகத்தில் வாழும் முனிவர்கள் புகழ, ஆலிலைச் சயனனும் கண்ணன் கண்விழித்து, பன்றி வடிவாகி நீரில் முழுகிய நிலத்தைப் பந்துபோல் எடுத்து நிலை நிறுத்தினார்.

அப்போது ஆயிரம் சதுர்யுகம் கழிந்து எனக்குப் பகல் வந்தது. நாம் உலகை எடுத்து நிலைநிறுத்தினோம் என்ற செருக்குடன் நாராயணர் பாற்கடலில் படுத்துறங்கினார்.

நான் தேவரையும் மனிதரையும் விலங்குகளையும் செடி கொடிகளையும் மண்ணையும் விண்ணையும் படைத்தேன். அவ்வாறு படைத்த எனக்கு "யானே பரம்" என்னைவிட வேறு கடவுள் இல்லை" என்று எண்ணிச் செருக்குற்றேன். நாம் உறங்கினால் உலகம் ஒடுங்குகின்றது நாம் விழித்ததால் உலகம் உண்டாகின்றது. என்று எண்ணி, நான் படைத்த மலைகள் கடல்கள் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து வந் தேன். பாற்கடலில் கார்க்கடல் போல் கண் துயிலும் மாதவன் மார்பில் ஓங்கி ஒரு அடி அடித்து "எழுந்திரு" என்றேன்.

"நீ யார்?" என்றேன். "நான் உன் தந்தை, இன்னும் உனக்குத் தூக்க மயக்கம் போகவில்லையா? என்று கூறி" சீதரனார் சிரித்தார்.

நான் அவரைப் பார்த்து "உனக்குத்தான் தூக்க மயக்கம்; நான்தான் உலகங்களைப் படைக்கின்றவன் உனக்குந் தந்தை; யானே பிரமம்" என்றேன்.

நாராயணர், "நான்முகனே! என் நாபியில் பிறந்தவன் ஆதலால் நான் உன் தந்தை என்றார்.

நான் அவரைப் பார்த்து "நீ தெளிவில்லாமல் பேசுகின்றாய். உன் உந்தியில் வந்ததால் நீயென் பிதாவோ?

பேஷ். அப்படியாயின் கட்டையில் பிறந்த கனலுக்கு கட்டை பிதாவாகுமோ? நீ தூணில் பிறந்தாயே. அதனுல் தூண் உனக்குத் தந்தையா? பிருகு முனிவருடைய சாபத்தால் நீ எடுத்த பத்துப் பிறவிகளிலும் நான் உன் தலையில் எழுதியுள்ளேன். அவ்வாறு எழுதி என் கை சிவந்துளது,'' என்றேன்.

இதனைக்கேட்ட விஷ்ணு வெகுண்டு கரங்களைக் கொட்டிக் கூறுவார். ''உன் உச்சித் தலையை சிவமூர்த்தி நகத்தால் கிள்ளி எடுத்தாரே. அத்தலையை இன்று வரை படைத்துக் கொண்டாயில்லை. நீ படைப்புத் தொழில் பண்ணுகின்ற லட்சணம் விளங்குகின்றதல்லவா? மூடனே! உன்னைப் பெற்ற தாயும் நானே, தந்தையும் நானே. கடவுளும் நானே. குருவும் நானே. மாயையால் மதிமயங்கினுய். பொன்னின்றிப் பூண் இல்லை. இதுபோல் நானின்று நீயில்லை.''

''நான் பரம்'' ''நான் பரம்'' என்று இருவரும் இகலினேம். திருமால் வில் வளைத்து என்மேல் எண்ணில்லாத கணைகளைத் தூவினுர். நான் தருப்பைகளையே பாணமாக்கிச் சொரிந்தேன். அவர் நாராயணப் படையை ஏவினுர். நான் என்னுடைய பிரமாஸ்திரத்தை ஏவித் தடுத்தேன்.

திருமால் சிவாஸ்திரத்தை யெடுத்து மனதால் பூசனை செய்து என்மேல் விடுத்தார். நானும் எனக்கு முன் சிவபிரான் தந்த சிவாஸ்திரத்தை விடுத்தேன். அப்படைகள் சிந்திய நெருப்பு மழையால் உலகங்கள் எரிந்தன. கடல்கள் வற்றின. மலைகள் கரிந்தன. அந்த இரு படைகளும் உலகெங்கும் உலாவின.

அப்போது என் முகத்தில் தோன்றிய நாரத முனிவன் வந்து எங்களை நோக்கிக் கூறுவானுயினுன். நீங்கள் இருவரும் யானே பரம்பொருள் என்று போர்புரிகின்றீர்கள். இருவரும் சிவ கணையை ஏவி அவமாக உலகங்களை யழிக்கின்றீர்கள். அக்கணைகளைத் தந்தவர் யார்? என்று உணர்ந்தீர்களில்லை. போரை விட்டுச் சமாதானம் அடையுங்கள். இல்லையேல் ஆதியாய் அருவுருவான ஓர் பெருஞ்சோதியார் உமது நடுவில் தோன்றும்'' என்று புகன்று போனுன்.

அந்த அறவுரையை நாங்கள் கேட்டும் அமைதி பெருது ஆயிரம் ஆண்டுகள் அமர்புரிந்தோம். எங்களை அடக்கியாள வேண்டும் என்று எங்கள் இடையே ஒரு பேரொளி தூண் போல் தோன்றியது, நாங்கள் அதைக்கண்டு அதிசயமும் அச்சமும் அடைந்தோம்.

"சிறுவர்களே! உங்கள் போரை விடுத்து இதன் அடிமுடி தேடித் தெளிவீர்" என்று ஒரு பேரொலி வானில் தோன்றியது. அதைக்கேட்ட நாங்கள் சினந் தணிந்தோம். அகந்தை கொண்ட மனந் தணியவில்லை. அடிமுடி கண்டவரே பெரியர் என்று முடிவு செய்தோம். நான் முடி காண்பேன் என்று கூறினேன். அச்சுதர் அடி காண்பேன் என்ருர். நடை பயிலாத இளஞ்சிறுவர்கள் வானில் உள்ள கதிரவனைக் கையால் பிடிக்க முயன்றதுபோல் இருந்தது எங்கள் செயல்.

நூறு யோசனை உயரமும் அகலமும் உடைய பன்றி வடிவங்கொண்டு திருமால் தமது கொம்பால் நிலத்தைக் கிளைத்துக் கொண்டு சென்ருர். நான் அன்னமாகி விண்ணில் பறந்து தேடினேன். கீழும் மேலும் செல்லச் செல்ல அடியும் முடியும் நீண்டுகொண்டே யிருந்தன.

திருமால் ஆயிரம் ஆண்டுகள் தேடினுர். ஏழுலகங்களையும் அகழ்ந்தார். அடி தெரியவில்லை அயர்ந்தார், வியர்த்து மேனி மெலிவுற்ருர். சிவனடியைச் சிந்தித்து வந்தித்தார்.

அன்னமாகிப் பறந்து நான் பட்டதை என்ன என்று கூறுவேன்? சிறகுகள் அயர்ந்தன. சோதியின் முடி தெரியவில்லை. உள்ளம் வெந்து நொந்து மீண்டேன்.

நானும் நாராயணரும் அச்சோதியை சோதிக்காமல் வழிபாடு செய்தோம். முக்கண் மூர்த்தி எங்கள்முன் தோன்றியருள் புரிந்தார்.

எம்பெருமான் எங்களுக்கு அருள்புரிந்து "உங்களுக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டார். "அன்பு ஒன்று தான் வேண்டும்" என்று நாங்கள் வரம் கேட்டோம். அச்சோதி மெல்லக் குறுகி ஒரு மலை வடிவாயிற்று.

அச்சோதி எங்கள் முன் தோன்றிய நாள் சிவராத்திரியாகும். நாங்கள் அண்ணுமலையை மும்முறை வலம் வந்து

செம்மை பெற்றோம். ஆதலால் மகனே! நீ சிவத்தை வழிபட்டு உய்க" என்று பிரம தேவர் தட்சனுக்குக் கூறிச் சென்றார்,

22. தட்சன் சிவபூசை செய் படலம்

பிரமதேவன் புகன்றதைக் கேட்ட தட்சன் காசியம்பதிக்குச் சென்று கங்கையில் முழுகினான். பின்னர் திருநீற்றில் முழுகினான். கங்கைக் கரையில் மணிகர்ணிகையில் ஓராலயம் அமைத்து அதில் ஒரு சிவலிங்கத்தை எழுந்தருளப்பண்ணி, ஆயிரம் ஆண்டுகள் அன்புடன் வழிபாடு செய்தான்.

கறைமிடற்றண்ணல் கருணையுடன் காட்சி தந்தருளினார். தட்சன் எம்பெருமானுடைய இணையடிகள் மீது வீழ்ந்தான். "எந்தையே! அகந்தையால் உம்மை யிகழ்ந்தேன். என் பிழைகளைப் பொறுத்து அருள்புரியும்" என்றான். சிவபெருமான் தட்சனுக்கு அருள்புரிந்து கணங்கட்கு நாயகனும் பதம் நல்கினார்.

திருமால் நான்முகன் இந்திரன் ஆகியோரும் பிற தேவர்களும் வீரபத்திரரை வணங்கித் தத்தம் இடமெய்தி சிவபூசை ஆங்காங்கே செய்து தத்தம் உடலிலுற்ற ஊனங்களைப் போக்கிக் கொண்டனர்.

23. கந்தவிரதப் படலம்

கருவூரில் அரசுபுரிந்து வந்த முசுகுந்தச் சக்ரவர்த்தி ஒரு நாள் வசிஷ்ட முனிவரை வணங்கித் துதித்து கந்தவேளுக்குரிய விரதங்களைக் கூறும்படி கேட்டார். வசிஷ்ட முனிவரும் அவ்வாறே பின்வருமாறு கூறலானார்.

வார விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதம் சிறந்தது. பகீரதன் என்னும் சக்கரவர்த்தி கோரன் என்னும் அரக்கனால் தன் ஆட்சி கவரப்பட்டு அல்லலுற்றான். அவன் சுக்கிராச்சாரியர் சொற்படி வியாழன் பகலுணவும், சனிக்கிழமை பகலுணவும் கொண்டு வெள்ளிக்கிழமையன்று ஊண், உறக்கம் இன்றி மூன்று ஆண்டுகள் விரதமிருந்தான். கந்தவேளின் வேற்படை வந்து அரக்கனின் உயிரைக் கவர்ந்து

சென்றது. பகிரதன் மீண்டும் தன் அரசைப் பெற்று மகிழ்ந்தான்.

சப்த ரிஷிகளில் சிறந்தவராகத் திகழ விரும்பிய நாரதர் விநாயகப் பெருமான் சொற்படி கார்த்திகை விரதமிருந்து முருகவேளை வழிபட்டார். முதல் நாள் பகல் மட்டும் உணவு கொண்டு கார்த்திகை யன்று விடியற்காலையில் நீராடி தூய ஆடைகளையுடுத்தி வழிபாடுகளை முடித்து முதல்வன் புராணத்தைப் படித்துவிட்டு நீர்மட்டும் அருந்தி இரவு முழுவதும் தியானம் புரிந்து கொண்டிருந்து மறுநாள் காலை வழிபாடுகளை முடித்துவிட்டுப் பகலில் முனிவர்களுடன் சேர்ந்து பாரணை செய்தார். இப்படிப் பன்னிரண்டு ஆண்டுகள் விரதமிருந்து ஏழு முனிவர்களில் மேலான பதவியை யடைந்தார். இன்னும் பலர் கார்த்திகை விரதத்தைக் கடைப்பிடித்து மேன்மை பெற்றனர்.

ஐப்பசி மாதம் வளர்பிறையில் பிரதமை முதல் ஆறு நாட்களும் காலையில் நீராடி விதிப்படி பூசை செய்து, புராணத்தையும் படித்து வரவேண்டும். நிதமும் சிறிது நீர் மட்டும் அருந்தி வந்து ஏழாம் நாள் சிறப்பாக வழிபாடியற்றிப் பாரணம் செய்யவேண்டும். இவ்வாறு தேவர்களும் முனிவர்களும் விரதமிருந்து மேன்மை பெற்றனர். இதுவே ஒப்பில்லாத விரதம்.

வசிஷ்ட முனிவர் கூறியதைக் கேட்ட முசுகுந்தன் நெடுங்காலம் அந்த விரதங்களைக் கடைப்பிடித்து வந்தான். கந்தவேள் மயில்வாகன மூர்த்தியாகத் தன்பரிவாரங்களோடு அவன்முன் காட்சியளித்தார். முசுகுந்தன் உலகம் முழுவதும் அரசாளும் வண்ணம் வீரவாகு முதலிய ஒன்பது வீரர்களையும் தனக்குத் துணைவர்களாகத் தந்தருளுமாறு வரம் வேண்டினான். முருகவேளும் அவ்வாறே அருளினார்.

நவவீரர்கள் சற்றுத் தயங்கினர். பெருமான் முசுகுந்தனின் அன்பின் சிறப்பை அவர்களுக்குக் கூறி சிலகாலம் பூமியில் இருந்துவரப் பணித்துவிட்டு மறைந்தனர். அவர்களும் அவ்வாறே பூமியில் பிறந்து துணைவர்களானார்கள். முசுகுந்தன் கருவூரிலிருந்து ஆட்சிபுரிந்து வந்தான்.

ஒரு சமயம் விண்ணுலகம் சென்று இந்திரனுக்குச் சேனாதிபதியாக இருந்து வலன் என்னும் அசுரனை யழிக்கத் துணைபுரிந்தான். பின்பு இந்திரன் பூசைசெய்துவந்தசோமாஸ்கந்தராகிய தியாகராஜப் பெருமானைக் கண்டு பரவசமாகித் துதித்தான்:

ஏகனே போற்றி யார்க்கும் ஈசனே போற்றி அம்மை
பாகனே போற்றி மேலாம் பரஞ்சுடர் உருவே போற்றி
மேகமார் களனே போற்றி விடைமிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன் வேள்வி முடித்திடு முதல்வா போற்றி.

அம்புயா சனன்மால் இன்னும் அளப்பருந் திறத்தாய் போற்றி
நம்பனே போற்றி எங்கள் நாதனே போற்றி கோதில்
செம்பொனே மணியே போற்றி சிவபெரு மானே போற்றி
எம்பிரான் போற்றி முக்கண் இறைவனே போற்றி போற்றி.

பொங்கரா அணிகளாகப் புனைதரு புனிதா போற்றி
அங்கரா கத்தில் பூதி அணிந்திடு ஆதி போற்றி
வெங்கரா சலத்தின் வன்றோல் வியன்புயம் போர்த்தாய் போற்றி
சங்கரா பரமா போற்றி தாணுவே போற்றி போற்றி.

முன்னெனும் பொருளுக் கெல்லாம் முன்னவா போற்றி முப்பால்
மன்னுயிருக் குயிரே போற்றி மறைகளின் முடிவே போற்றி
என்னைமுன் வலிந்தாட் கொண்டே இருநிலம் விடுத்தாய் போற்றி
நின்னுருக் காட்டி என்னை நினைப்பித்த நித்தா போற்றி.

எவ்வெவர் தம்மை யேனும் யாவரே எனினும் போற்றின்
அவ்வவ ரிடமாக் கொண்டே அவர்க்கருள் தருவாய் போற்றி
மெய்வரு தெளிவில் உன்னை வெளிப்பட உணர்ந்து ளோர்க்குத்
தெய்வத போக முத்தி சிறப்பொடு தருவாய் போற்றி.

அம்புய மலர்மேல் அண்ணல் அச்சுத னாதி வானோர்
தம்பதம் எமக்கு நல்கும் தற்பரா என்றே யாரும்
நம்புறு பொருட்டால் வேதம் நவின்றிட அடைந்தோர்க் கெல்லா
உம்பர்தம் பதமும் ஈயும் உலகுடை முதல்வா போற்றி.

பாற்கடலில் துயில் புரியும் பரந்தாமன் பூசித்து வந்த மூர்த்தியை இந்திரன் பெற்று வந்து வழிபட்டுக் கொண்டிருந்தான். அதைப் பூவுலகிற்குக் கொண்டுவந்து பூசிக்க விரும்பினான் முசுகுந்தன். இந்திரனுக்கு விருப்பமில்லை. எனினும்

அதனை முதலில் பூசித்து வந்த திருமால் இணங்கினால் அதைத் தருவதாகக் கூறினான். முசுகுந்தச் சக்ரவர்த்தியும் திருமாலை வேண்டி அநுமதி பெற்றார். பின்னும் இந்திரன் தான் பூசித்துவந்த மூர்த்தியைப் பிரியமனமில்லாமல் அதே மாதிரி ஆறு மூர்த்திகளைச் செய்வித்தான். அவைகளை ஒவ்வொன்றாக முசுகுந்தனுக்குக் கொடுத்தான். முசுகுந்தன் ஒவ்வொன்றையும் பெற்றுக்கொண்டு முதலில் கண்ட மூர்த்தி அவைகளல்ல வென்று தெரிவித்தான். பின்னர் இந்திரனிடம் ஏழு மூர்த்திகளையும் பெற்றுக்கொண்டு பூவுலகுக்குக் கொண்டு வந்தான்; திருமால் பூசித்த மூர்த்தியைத் திருவாரூரிலும், மற்ற மூர்த்திகளைத் திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயில், திருக்கோளரியூர், திருவான்மியூர், திருமறைக்காடு என்ற ஆறு இடங்களிலும் ஒரே நாளில் நிறுவி விதிப்படி வழிபாடுகளியற்றினான். பின்னர்த் திருவாரூரில் சிறப்பாக விழா நிகழ ஏற்பாடு செய்தான். நெடுங்காலம் அரசுபுரிந்து தன் புதல்வனுக்கு முடி சூட்டிவிட்டுத் தவம்புரிந்து விண்ணுலகையடைந்து கந்தவேள் திருவடிகளை வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்தான்.

24. வள்ளியம்மை திருமணப் படலம்

வளம் பல நிறைந்து அண்டர் பரவுந் தொண்டை நன்னாட்டில், மேற்பாடி என்னும் ஊரின் அருகில் வள்ளிமலை என்று ஒரு மலை உள்ளது. அது காண்பார் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் கவினுடையது. அம்மலைச்சாரலில் அருந்தவமிக்க சிறூர் என்ற ஓர் ஊர் பெருமை பெற்றிருந்தது. சிறிய ஊராகப் பணிந்திருக்கும் வினய அழகே அழகு, எளிமையின் உருவான வள்ளியம்மை பிறக்க இச்சிற்றூரைக் காட்டிலும் உற்ற இடம் எதுவுண்டு? இன்றைச் சித்தூரே அன்றைச் சிறூர். அச் சிறூரில் வேடர் அரசனும், பண்டைத் தவமுடையோனுமாகிய நம்பி என்பான் வாழ்ந்தான். அவன், தாய் வழி பத்தும், தந்தை வழி பத்தும், தான் ஒன்றுமாக இருபத்தொரு தலைமுறைகளாக முருகப் பெருமானை ஆராதனை செய்து வந்தவன். அவனுக்குச் சில ஆண் மக்கள் இருந்தனர். பெண் மகவு இன்மையால் அவன் உளம் வருந்தினான். அடியவர் வேண்டும் வரங்களை வழங்கும் ஆறுமுகக்

கடவுளை வழிபட்டும், குறிகேட்டும், வெறியாட்டயர்ந்தும் மகட்பேற்றை எதிர்பார்த்திருந்தான்.

கண்வ முனிவருடைய சாபத்தினால் திருமால் சிவ முனிவராகவும், திருமகள் மானாகவும், உபேந்திரன் நம்பியாகவும் பிறந்திருந்தனர். அந்தச் சிவ முனிவர் சிவபெருமானிடம் சித்தத்தைப் பதியவைத்து, அம்மலையிடத்தே மாதவம்புரிந்து கொண்டிருந்தார். அப்போது முருகப் பெருமானின் திருவருளினால் இலக்குமியவதாரமாகிய அழகிய, பொன்மயமான பெண்மான், முனிவர் முன்னே வந்து உலாவியது. மானைக் கண்ட சிவ முனிவர் காம உணர்ச்சி பெற்றுக் கலங்கினார். தெய்வப் புணர்ச்சி போலக் கண் மலரால் அம்மானிடத்து இன்பம் அநுபவித்துப் பின் மெய்யுணர்வால் தெளிவுற்று உறுதியான தவத்தில் நிலைபெற்று நின்றார்.

கந்தவேளைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு ஆங்கொருசார் தவம் புரிந்து கொண்டிருந்த சுந்தரவல்லி, முன்பு தனக்கு முருகவேள் கட்டளையிட்டவாறு, அம் மான் வயிற்றில் கருவாகப் புகுந்தாள். முருகனின் அம்மான் திருமால். அம்மான் மகள் இம்மானின் மகளாக வந்தாள். மான் சூல் கொண்டது. அங்கும் இங்கும் உலாவித் திரிந்து உடல் நொந்தது. வேட்டுவப் பெண்கள் வள்ளிக் கிழங்கு அகழ்ந்தெடுத்த குழி ஒன்றில் பல்கோடிச் சந்திரப் பிரகாசமும் மரகத வண்ணமும் உடைய சர்வலோக மாதாவைக் குழந்தையாக ஈன்றது. மனித உருவில் தான் ஈன்ற அந்தக் குழந்தையைக் கண்ட மான் மருண்டு ஓடிவிட்டது. வைகுண்டம் போய் இலக்குமியாயிற்று.

மானி டத்தின் வருமைந்தன் முந்துநீ
மானி டத்தின் வருகென்ற வாய்மையான்
மானி டத்தின் வயினடைந் தாள்மரு
மானி டத்தின் மானுகுமம் மான்மகள்.

மான் வயிற்றில் பிறந்த குழந்தை அழுது கொண்டிருந்தது. அந்த அழுகையொலி, 'கின்னரர்கள் யாழ் ஒலியோ? கலைவாணியின் இன்னிசையோ?' என்று ஐயுறும் வண்ணம் மதுரமாக இருந்தது. அதனைக் கேட்டு அவ்விடத்தில் வேட்டைக்கு வந்த வேட்டுவர் மனமகிழ்ந்தனர். பிறந்த குழந்தை அழாவிடில் மற்றவர் அழ வேண்டிவரும் தானே?

ஆறுமுகக் கடவுளுடைய திருவருள் தூண்டுதலால், வேட்டுவ மன்னனாகிய நம்பி, தன் மனைவியோடு பரிசனங்கள் சூழத் தினைப்புனத்துக்கு வந்திருந்தான். குழந்தையின் அழுகையொலி கேட்டு உள்ளமும் ஊனும் உருகினான். அழு குரல் கேட்ட வழியே போனான். அங்கே பாற்கடலில் பிறந்த திருமடந்தையும் நாணுமாறு விளங்கும் திருக் குழந்தையைக் கண்டான். "என் மாதவம் பலித்தது" என்று உள்ளம் உவந்தான்; ஆனந்தக் கூத்தாடினான். தோள்களைத் தட்டினான்; துள்ளிக் குதித்தான். குழந்தையை எடுத்துத் தன் மனைவியாகிய கொடிச்சியின் கரத்தே கொடுத்தான். பெண் குழந்தை யின்றிப் பல்லாண்டுகளாக வருந்திக்கொண்டிருந்த கொடிச்சி மிக்க மகிழ்ச்சியுடன் குழந்தையைக் கையிலேந்தி உச்சி மோந்து முத்தம் தந்தாள். மார்போடு அணைத்துக் கொண்டாள். அன்பின் மிகுதியினால் அவளுக்குப் பால் பெருகிற்று; பாலூட்டினாள். பின்னர் அனைவரும் சிற்றூர் போய்ச் சிறு குடிலில் புகுந்து குழந்தையைத் தொட்டிலில் இட்டனர். குறிஞ்சிப் பறையை ஒலித்துக் குரவைக கூத்தாடினர். வெறியாட்டயர்ந்து முருக வேளுக்கு நல்விழா எடுத்தனர். வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியிற் கண்டெடுத்ததால் அக் குழந்தைக்கு வள்ளி என்று பெயரிட்டார்கள்.

மூவா முகுந்தன் முதல்நாள் பெறும் அமுதை
தேவாதி தேவன் திருமைந்தன் தேவிதனை
மாவாழ் சுரத்தில்தம் மாமகளாப் போற்றுகையால்
ஆவா குறவர்தவம் ஆர்அளக்க வல்லாரே.

உலகங்களுக் கெல்லாம் தாயாகிய வள்ளி நாயகியை வேட்டுவ மன்னனாகிய நம்பியும் அவன் மனைவி கொடிச்சியும் தங்கள் குழந்தையாக அன்பு செய்து இனிது வளர்த்தார்கள்.

வேட்டுவர்கள் செய்த அளவற்ற அருந்தவத்தால் அகில ஜக அண்ட நாயகியார் அவ் வேட்டுவர் குடிலில் தவழ்ந்தும், தளர்நடை பயின்றும், முற்றத்தில் உள்ள வேங்கைமர நிழலில் உலாவியும், சிற்றிலிழைத்துச் சிறு சோறு அட்டும், வண்டலாட்ட மயர்ந்தும், முச்சிலில் மணற்கொழித்தும், அம்மானையாடியும், தாய் தந்தையரை மகிழ்வித்தார். எளிய மக்களுக்குத்தான் இறைவியின் அருள் கூடுமென்பதற்கு இஃதோர் உதாரணம்.

வள்ளியம்மைக்கு வயது பன்னிரண்டு ஆகியது. தாயும் தந்தையும் அப் பருவத்தைக் கண்டு தம் குல வழக்கப்படி அவளைத் தினைப்புனத்தில் உயர்ந்த பரண்மீது காவல் வைத்தார்கள்.

பரண்மேல் ஏறி நின்று இறைவன் திருநாமங்களாகிய கவண் கற்களை எறிந்து மும்மலங்களாகிய பறவைகள் கொத்தாதபடி சிவகதி ஆகிய கதிருடன் கூடிய ஞானப் பயிரைக் காத்து வந்தாள் வள்ளி. 'முத்தொழிலையும், மூவரையும் காக்கும் முருகப்பெருமானுடைய தேவியாகிய வள்ளிப் பிராட்டியாரை வேட்டுவர்கள் தினைப்புனத்தைக் காக்க வைத்தது, எளிதாகக் கிடைத்த உயர்ந்த ரத்தின மணியைத் தூக்கணங் குருவி இருளோட்டத் தன் கூட்டில் வைத்தது போலிருந்தது'' என்பார் கச்சியப்பர்.

காட்டில் எளிதுற்ற கடவுள்மணி யைக்கொணர்ந்து
கூட்டில் இருளோட்டக் குருகுய்த்த வாறன்றே
தீட்டுசுடர் வேற்குமரன் தேவியாம் தெள்ளமுதைப்
பூட்டுசிலைக் கையார் புனம்காப்ப வைத்ததுவே.

தினைப்புனத்தில் எத்திசையும் பார்க்கத்தக்க பரண்மீது நின்ற வள்ளியம்மையார், தட்டை, குளிர், தழல் ஆகிய கருவிகளை ஏந்தி, கிளி, காடை, கவுதாரி முதலிய பறவை இனங்களை ஓட்டியும், மான், முட்பன்றி, யானை முதலிய மிருகங்களை ஓட்டினார். "பூவைகாள்! புறவங்காள்! மயில்காள்! மணிக்கிளிகாள்! குயில்காள்! ஆலோலம் ஆலோலம்'' என்று இனிமை நிரம்பத் தனித்தனி கூவியும் தினைப்புனத்தைக் காவல் செய்து வந்தார்.

பூவைகாள், செங்கட் புறவங்காள் ஆலோலம்
தூவிமா மஞ்ஞைகாள், சொற்கிளிகாள் ஆலோலம்
கூவல் சேர்வுற்ற மயிலினங்காள் ஆலோலம்
சேவல்காள் ஆலோலம் என்றுள் திருந்திழையாள்.

மைனுக்கள், புருக்கள், மயில்கள், கிளிகள், குயில்கள். சேவல்கள் முதலாயின கவண் கல் வீச்சினுல் சிதறி ஓடின, ஓடியவை அவள் அழகாலும் குரல் இனிமையாலும் மீட்டும் மீட்டும் திரும்பி வந்தன.

வள்ளி நாயகியாருக்கு அருள்புரியும் பொருட்டு, முருகக் கடவுள் கந்தமலையை விட்டு இறங்கி, புவிக்குயிராகிய திருத் தணிகை மலையில் தனியே வந்து எழுந்தருளினுர். குல மர பின்படியும், முன்வினைப் பயன்படியும் வள்ளிக்கு இளமை முதலே முருகப் பெருமான் மீது மனம் நிறைந்த அன்பு உண் டாயிற்று. வயதும் பருவமும் முதிர முதிர அந்த அன்பு வளர்ந்து உலகப் பற்றுக்கள் தேயத் தொடங்கிவிட்டன, முருகப் பெருமானே யன்றி வேறென்றையும் மனம் நாட வில்லை,

நாரத முனிவர் இதனை அறிந்தார். தினைப்புனத்தில் காவல் காத்துநின்ற வள்ளியம்மையாரிடம் நாரதர் சென்று கைதொழுதார். "ஆகா, என்னே இவ்வம்மையார் பேரழகு! இப்பெருமாட்டியார் முற்பிறப்பில் திருமாலுடைய திருமக ளாவார்; சரவணப் பொய்கையில் பெருந் தவம் புரிந்து குமா ரக் கடவுள் கட்டளையிட்டபடி இங்கு தோன்றித் தினைப் புனத்தைக் காவல் செய்துகொண்டிருக்கின்றுர். இவர் ஆறு முகக் கடவுளுக்குத் தேவியாராகும் நற்றவமுடையவர். இவ ருடைய அருந்தவத்தின் பெருமையையும், பேரழகின் பெரு மையையும் அளவிட வல்லார் யாவர்? முருகனுக்கும் வள் ளிக்கும் மணவினை உலகுய்ய விரைவில் நிகழ்வது சிறந்த பயனும்" என்று எண்ணினுர். வள்ளியம்மையை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, திருத்தணிகையை அடைந்தார்.

திருவேலிறைவன் திருவடியில் வீழ்ந்து பன்முறை பணிந்து, "ஞான சக்திதர ஸ்வாமியே! ஞான பண்டிதரே! ஞானகரரே! ஞானசொரூபியே! ஞானோபதேச குருபரரே! ஞான விநோதரே!" என்று யாழ் மீட்டிப் பாடிப் பரவி நின்றுர் நாரதர். அவ்வாறு துதித்த நாரதருக்குத் தணி கேசர் தண்ணருள் புரிந்தார். இளம் பூரணரது இன்னரு ளைப் பெற்ற இசை முனிவர், "எம்பெருமானே! முன்னைப் பிறவியில் திருமாலுடைய திருமகளாகிய சுந்தரவல்லியம்மை யார், சரவண தடாகத்தில் இருந்து தேவரீரை மணந்து கொள்ளும் பொருட்டுப் பெருந்தவம் புரிந்தார். அப்போது தேவரீர் தோன்றி அருள் புரிந்து பணித்தவாறு வள்ளி மலையில் மானிடம் சிவமுனிவருக்குப் பிறந்து நம்பி என்ற

வேட்டுவ மன்னனிடம் வள்ளி என்ற திருநாமத்துடன் வளர்ந்து தினைப்புனத்தைக் காவல் புரிந்துகொண்டிருக்கிறார். எங்கும் நீக்கமற நிறைந்து முழுதொருங் குணர்ந்த முழு முதல்வராகிய தேவரீருடைய திருவுள்ளம் அறியாத துண்டோ? அம்மாதரசியின் அழகில் ஆயிரத்தில் ஒரு கூறும் இலக்குமி தேவிக்கு இல்லை. தவக்கொழுந்தாகிய அத் தையல் நாயகியாரை உலகம் உய்யுமாறு தேவரீர் திருமணம் செய்து கொண்டு அடியேங்களுக்கு அருள் புரிவீர்!'' என்று விண்ணப்பம் செய்துகொண்டார்.

தூது வந்த நாரதர் கூறியதைக் கேட்ட ஆறுமுகப் பெருமான் மகிழ்ந்தார். ''நாரத! நன்று, நன்று. நமக்கும் அது திருவுளந்தான்'' என்று திருவாய் மலர்ந்தருளி நாரதரை அனுப்பி வைத்தார்.

வள்ளிப் பிராட்டியாருக்குத் திருவருள் புரிய வேண்டும் என்று திருவுளங் கொண்ட முருகக் கடவுள், மானிட வடிவம் பூண்டார். காலில் வீரக் கழல் அணிந்து, வில்லும் அம்பும் ஏந்தி வேட்டுவக் கோலத்துடன் தணிகை மலையினின்று நீங்கி வள்ளி மலையை அடுத்த தினைப்புனத்தை அடைந்தார். பரண் மீது இருந்த வள்ளி நாயகியாரை அணுகி இன்ப மயக்கம் கொண்டவர் போல் நடிக்கலானார்.

முருகப் பெருமான் வள்ளி நாயகியாரை நோக்கிப் பேசினார். ''வாள் போன்ற கண்களையுடைய பெண்ணே! உலகிலுள்ள மாதர்கட்கெல்லாம் இறைவியாகிய உன்னை உன்னதமான இடத்தில் வைக்காமல் வேட்டுவர்கள் தனியே இந்தக் கானகத்தில் தினைப்புனத்தைக் காக்க வைத்தனரே! அவர்களுக்குப் பிரமன் அறிவைப் படைக்க மறந்து போய் விட்டான் போலும்!''

நாந்தகம் அனைய உண்கண் நங்கைகேள் ஞாலந் தன்னில்
ஏந்திழை யார்கட்கெல்லாம் இறைவியாய் இருக்கும் நின்னைப்
பூந்தினை காக்க வைத்துப் போயினர் புளினரா னோர்க்கு
ஆய்ந்திடும் உணர்ச்சி ஒன்றும் அயன்படைத்திலன் கொல்?
என்றான்.

வள்ளி பதில் பேசவில்லை. வேட்டுவக் குமரனுடைய நடவடிக்கைகளைக் கவனித்து வந்தாள். முருகப் பெருமான்

மேலும் பேச்சைத் தொடர்ந்தார். "பெண்ணமுதே! உன் பெயர் என்ன? உன் ஊர் யாது? நின் ஊருக்குப் போகும் வழி எது?" என்றார்.

வள்ளி மீண்டும் பதில் ஏதும் பேசவில்லை; முருகப் பெருமானிடம் இன்முகம் காட்டவில்லை. முருகப் பெருமான் பேசப் பேச வள்ளியின் முகம் வேறு திசையில் திரும்ப ஆரம்பித்தது. அவள் மனம் கல்லாகிவிட்டதோ? முருகப் பெருமான் மனம் உருகிவிட்டது. தன்னிடம் பேசாவிட்டால் பின்னர் வள்ளிக்குப்பெரிய பழி ஒன்று ஏற்படும் என்று கூறிப் பயமுறுத்தினார்.

மொழியொன்று புகலா யாயின் முறுவலும் புரியா யாயின்
விழியொன்று நோக்காயாயின் விரகமிக் குழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டா யாயின் மனமுஞ்சற் றுருகா யாயின்
பழியொன்று நின்பாற் சூழும் பராமுகம் தவிர்தி என்றான்.

உலைப்படு மெழுக தென்ன உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான் போல வருந்தியே யிரங்கா நின்றான்
கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலிற் றோன்றி
அலைப்படு தன்மைத் தன்றோ அறுமுகன் ஆட லெல்லாம்.

முருகப் பெருமான் அனலிற்பட்ட மெழுகு போல் உருகிப் பலவாறு வள்ளி நாயகியாரிடம் அன்பு மொழி பகர்ந்து கொண்டிருந்தபோது வேட்டுவர் தலைவனாகிய நம்பிராஜன் தன் பரிசனங்கள் சூழ அங்கு வந்தான். உடனே, முருகப் பெருமான் அடி வேதங்களாகவும், நடு சிவாகமங்களாகவும், கிளைகள் யாவும் பல கலைகளாகவும் கொண்டு ஒரு வேங்கை மரமாகி நின்றார்.

ஆங்கது காலை தன்னில் அடிமுதன் மறைக ளாக
ஓங்கிய நடுவ ணெல்லா முயர்சிவ நூல தாகப்
பாங்கமர் கவடு முற்றும் பல்கலை யாகத் தானோர்
வேங்கையி னுருவ மாகி வேற்படை வீரன் நின்றான்.

நம்பிராசன் தம மகளுக்குத தேனும் தினைமாவும் கிழங்குகளும் தந்தான். ஆங்குள்ள வேங்கை மரத்தைக் கண்டான். அவனோடு வந்த வேட்டுவர்கள், "இது முன்பு இருந்த மரமன்று; புதிதாக இப்படி ஒரு மரம இங்கு ஏற்பட்டிருக்-

கிறது. திடீரென்று தோன்றிய இந்த மரத்தினால் நிச்சயம் தீங்கு வரும். ஆதலால் இதனை வெட்டி எறிய வேண்டும்'' என்றனர். மரத்தை வெட்டவும் அவர்கள் முயன்றனர்.

மரத்தை வெட்ட முயன்ற அவர்களை விலக்கிய நம்பி ராசன், தன் மகளை நோக்கி, ''குழந்தாய் வள்ளி! இம்மரம் இங்கு எவ்வாறு உண்டாயிற்று?' என்று வினவினான்.

''அப்பா! இதன் வரலாறு நான் அறியேன். இது இப் போதுதான் இங்கு தோன்றியது'' என்று வள்ளி கூறினாள்.

''அம்மா; அஞ்சாதே! இம்மரம் உனக்கு நிழல் தந்து உதவும்'' எனச் சொல்லிவிட்டுத் தன் குழாத்துடன் சிற்றூர் சென்றான் நம்பிராசன்.

நம்பிராசன் தன் பரிசனங்களுடன் திரும்பிச் சென்றதும் குமாரக் கடவுள் வேங்கை மர வடிவம் நீங்கி முன்போல் மானிட வடிவம் கொண்டார். பருவ மடந்தையை மயக்கு வது கட்டிளங் காளையாகிய பரம புருஷனுடைய எழிலன்றோ? கண்ணைக் கவரும் கட்டிளங்காளையாக வந்து முருகன் வள்ளி யிடம் பேச்சுக் கொடுத்தார். ''மாதரசே! உன்னையே புகலாக வந்தடைந்தேன்! இனி உன்னைப் பிரிந்து வாழேன். உன் கண்ணாகிய வலையில் அகப்பட்ட எனக்கு அருள் புரிவாயாக! என்னை மணந்து இன்பத்தைத் தருவாயாக! உன்மீது மையல் கொண்ட என்னை மறுக்காமல் ஏற்றுக்கொள்! உலக மெல்லாம் வணங்கும் உயர் பதவியை உனக்குத் தந்தருள் வேன்!'' என்று கூறியருளினார்.

முருகப்பெருமானின் மனக் கருத்தை அறிந்த வள்ளி நாயகி நாணங் கொண்டாள். ''ஐயா! நீங்கள் உலகம் புரக்கும் உயர்குலச் செம்மல். நான் தினைப்புனம் காக்கும் இழி குலமாகிய வேட்டுவச் சாதிப் பெண். தாங்கள் கேவலம் குறத்தியை விரும்புவது தகாது. புலி பசித்தால் புல்லைத் தின்னுமோ?'' என்று கூறினாள். சுவாமியை அறிந்த போதே அவரை அறியாதவள் போலவும் பேசினாளோ? அவள் பேசிக் கொண்டிருக்கும்போதே வேடர் பரிவாரம் சூழ உடுக்கை முதலிய ஒலியுடன் அங்கு மீண்டும் வந்தான் நம்பிராசன். படை ஒன்று பேரொலியுடன் வருவது போன்றிருந்தது அக் காட்சி.

நம்பிராசன் தன் பரிவாரங்களுடன் வருவதைக் கண்ட வள்ளிநாயகியார் அஞ்சி நடுங்கிக் குமாரக் கடவுளை நோக்கி "ஐயா! என் பிதா வருகிறார். வேடர்கள் மிகவும் வலிமை உடையவர்கள்; தீயவர்கள். நீங்கள் பிழைக்க நினைத்தால் இங்கிருந்து ஓடிப்போய்விடுங்கள்" என்றாள். வள்ளி நாயகியார் தம்மீது கொண்ட அன்பை எண்ணி வேற் பரமன் வேடர் எதிரில் விருத்த தவ வேடங் கொண்டார்.

தன் பரிசனங்களுடன் ஆங்கு வந்த நம்பிராசன் அத்தவக் கிழவரைக் கண்டு வியந்து நின்றான்.

பெருமான் அவனை நோக்கி, "உனக்கு வெற்றி உண்டாகுக; நின் குலம் தழைத்து ஓங்குக; சிறந்த வளம் பெற்று வாழ்க" என்று வாழ்த்தித் திருநீறு தந்தருளினார்.

நம்பிராசன் அவர் திருவடிகளை வணங்கி, "சுவாமி! இந்த மலைக்குத் தாங்கள் வந்த காரணம் யாது? தங்களுக்கு வேண்டியது யாது? கூறும்" என்று கேட்டான். "நம்பி! இந்தக் கிழப் பருவம் நீங்கி இளமை வரவும் உள்ளத்தில் உள்ள மயக்கம் நீங்கவும் இங்குள்ள குமரியில் ஆடவந்தேன்" என்று அருளிச் செய்தார் எம்பிரான். குமரி என்பது தீர்த்தத்தைக் குறிப்பிடுமாறு இப்படிப் பேசினார்.

"சுவாமி! தாங்கள் கூறிய தீர்த்தத்தில் முழுகிச் சுகமே இருப்பீராக! எனது புதல்வியும் இங்கு தனித்திருக்கிறாள். தாங்களும் அவளுக்குத் துணையாயிருப்பீராக" என்றான் நம்பிராசன்.

ஆறுமுகங் கரந்த அண்ணலும், "அழகிதாம்" என்றார் குறும்பாக.

வள்ளிநாயகியிடம் அப்பெரியவரை அழைத்துச் சென்ற நம்பி, "அம்மா! இக் கிழ முனிவர் உனக்குத் துணையாக இருப்பார்" என்றான். காயும் கனியும் தேனும் தினைமாவும் தந்துவிட்டு வேடுவர்களுடன் ஊர் திரும்பிச் சென்றான்.

நம்பிராசன் ஊர் திரும்பிச் சென்றதும் பெரியவர் வள்ளியின் முருக பக்தியைச் சோதித்தார்.

அவ்வருந் தபசி, வள்ளி நாயகியாரிடம். 'அருந்த பசி' என்றார்.

வள்ளியம்மையார் தேனும் தினைமாவும் நற்கனிகளும் கொடுத்தாள். அதனை வாங்கி உண்ட பெரியவருக்கு நீர் வேட்கை மிகுந்தது. "தண்ணீர், தண்ணீர்" என்று கேட்டார்.

வள்ளியம்மையார் அதனைக் கேட்டு, "சுவாமி! இங்குள்ள ஆறு மலை தாண்டிச் சென்றால் ஏழாவது மலையில் சுனை இருக்கிறது. அங்கே போய்த் தண்ணீர் பருகி வாருங்கள்" என்றாள்.

பூட்டுவார் சிலைக்கை வேடர் பூவையே! புலர்ந்த தெண்ணீர்
வேட்டனன் விருத்தன் வெற்பில் வியனெறி சிறிதுந்தேரேன்
தாட்டுணை வருந்து மென்று தாழ்த்திடா தொல்லையேகிக்
காட்டுதி சுனைநீ ரென்றான் அறுமுகங் கரந்த கள்வன்.

"பெண்ணே! நான் புதியவன். மலைவழி அறியேன். நீ வந்து வழி காட்டு" என்றார் முதியவர். பெருமாட்டியார் விருத்தரை வித்தியாசமின்றிக் கைப் பிடித்து அழைத்துச் சென்று சுனையில் நீர் பருகச் செய்தாள்.

பசித் துன்பம் நீங்கிய முனிவருக்கு அருட் பசி எடுத்தது; அதனைக் காதலாக வெளிப்படுத்தினார். "பெண்ணமுதே! எனக்குப் பசியும் நீங்கிற்று; தாகமும் நீங்கிற்று. உன் மீது வைத்த மோகம் நீங்கியதில்லை. பசியையும், தாகத்தையும் தணியச் செய்தது போலவே மோகத்தையும் தணியச் செய்வாய்" என்று கூறினார்.

சினமறியாத மதுரக் குற வள்ளியாரும் அப்போது சினம் கொண்டு சீறினாள். கற்புச் செல்வம் அல்லவா?

மோகமுற்ற முதியவரிடம் வள்ளியம்மை சீற்றத்துடன் கூறினாள்:

நத்துப் புரைமுடியீர்! நல்லுணர்வு சற்றுமிலீர்
எத்துக்கு மூத்தீர் இழிகுலத்தேன் தன்னைவெஃகிப்
பித்துக்கொண் டார் போல் பிதற்றுவீர் இவ்வேடர்
கொத்துக் கெலாம்ஓர் கொடும்பழியைச் செய்தீரே.

"பெரியவரே! தவவேடம் கொண்ட உமக்கு இவ்வெண்ணம் தகுதியோ? புனங் காக்கும் சிறுமியாகிய என்னை இரந்து நிற்றல் உமது பெருமைக்கு அழகோ? உம்

செய்கையை எனது குலத்தார் அறிந்தால் உமக்குப் பெருங் கேடு விளையும். உமக்கு நரை வந்தும் நல்லுணர்வு வரவில்லையே! பித்தரைப்போல் பிதற்றி உமது குலத்துக்கும் இவ்வேட்டுவர் குலத்துக்கும் பெரும் பழியைச் செய்து விட்டீர்'' என்று வெறுத்துப் பேசினுள் பிராட்டி. இதன் பின்னும் கிழவருக்குத் துணை யிருத்தலாகாதெனக் கருதி புனங் காக்கப் புறப்பட்டுச் சென்ருள்.

வள்ளிப் பிராட்டியார் செல்லுவதைக் கண்ட தனக்கு வமை இல்லாத் தலைவர் விக்கினங்களை யெல்லாம் நீக்கும் தந்திமுகத்து எந்தையை, ''முன்னே வருவாய் முதல்வா!'' என்று துதித்தார்.

விநாயகப் பெருமான் தம்பிக்கு உதவி புரிவதற்காக அக்கணமே மத யானை வடிவுகொண்டு மலையும் மண்ணும் நடுங்க அங்கு குலுங்க ஓடி வந்தருளினுர்.

வள்ளியம்மையார் மதயானை நெருங்குவது கண்டு அஞ்சினுர். திசை புரியாமல் ஓடித் தாம் வெறுத்தொதுக்கிய விருத்த முனிவரையே தழுவிக்கொண்டார். ''யானையிட மிருந்து என்னைக் காப்பாற்றும்'' என்று அலறினுர்.

முருகப்பெருமான் யானையாக வந்தவிநாயகப்பெருமானை வழிபட்டுத் துதித்து, ''எம்பெருமானே! நீர் தோன்றியதால் நான் கருதியது நிறைவு பெற்றது. ஆதலால், தாங்கள் மீண்டெழுந்தருள்க'' என்று விண்ணப்பம் செய்தார். விநாய கரும் மறைந்தருளினுர்.

மாறுவேடத்திலிருந்த ஆறுமுகப்பெருமான் தமது இயல் பான ஆறுமுகத் திருவுருவை அக்கணமே வள்ளியம்மைக்குக் காட்டியருளினுர்.

முந்நான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டும்
கொன்னுர்வை வேலும் குலிசமும்ஏ னைப்படையும்
பொன்னுர் மணிமயிலு மாகப் புனக்குறவர்
மின்னுள் கண்காண வெளிநின் றனன்விறலோன்.

பன்னிரண்டு திருப்புயங்களும், வேற்படையும், குலிசமும், மற்றைய ஆயுதங்களும் தாங்கி மயில் வாகனத்தில் காட்சியளித்த ஐயனைக் கண்ட வள்ளிப்

பிராட்டியார் எத்தகைய உணர்ச்சிகள் எய்தி இருப்பார் என்பதை நாம் எப்படி வருணிக்க முடியும்? இவரையா வெறுத்து ஒதுக்கினேம் என்ற அச்சம் தோன்றிற்று. வள்ளியம்மை பெருமானைப் பணிந்தும் துதித்தும் ஆராத ஆன்மக் காதலில் கசிந்தார். முருகவேளின் அருட்கண் பார்வை வள்ளிப் பிராட்டியாருக்கு ஞான தீட்சை யாகியது.

மெல்ல மெல்ல வள்ளியும் தெளிந்து பேசலானாள்: "எம் பெருமானே! இத்திருவுருவத்தை முன்னரே காட்டாமை யினால் அடியேன் செய்த பிழைகளைப் பொறுத்தருள வேண் டும்" என்று அன்புடன் வேண்டிக் கொண்டார். கந்தவேள் பிராட்டியாரை நோக்கி அருள் மழை பொழிந்தார்; "பெண்ணே! நீ முற்பிறப்பில் திருமாலின் புதல்வி. நம்மை நோக்கி மணக்குமாறு நற்றவம் செய்தாய்; ஆதலால் இப் பிறப்பில் நாம் உம்மிடம் வலிதில் வந்து அருள் புரிந்தோம்; எம்மையன்றி உன் மனத்தில் வேறெவர்க்கும் இடமில்லை என்று உலகுக்கு உணர்த்தவே வேறு வடிவங்களில் வந்தோம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். பின்னர் கந்தப் பெருமான், 'வள்ளி! நீ தினைப்புனம் செல்; யாமும் அங்கே வருவோம்" என்று கூறி அனுப்பினர்.

தினைப்புனம் திரும்பிய வள்ளியம்மையார் மீண்டும் பரண்மீது நின்று, "ஆலோலம்" என்று ஆயலோட்டினர். அப்போது புனங் காக்கும் பாங்கி வந்து அம்மையாரை வணங்கினாள். வள்ளியம்மையார் சூடிய பூக்களின் மணம், அவயவங்களின் தோற்றம் முதலியவற்றின் மாற்றத்தைக் கண்டு ஐயங்கொண்டாள். "அம்மா! தினைப்புனத்தைப் பற வைகள் பாழ்படுத்த இவ்வளவு காலம் எங்கு சென்றாய்?" என்று வினவினாள். அதனைக் கேட்டு வெட்கிய நாயகியார், "நான் மலை மீதுள்ள சுனையில் நீராடச் சென்றேன்" என்று நாணத்துடன் கூறினர்.

மைவிழி சிவப்பவும் வாய்வெ ளுப்பவும்
மெய்வியர் வடையவும் நகிலம் விம்மவும்
கைவளை நெகிழவும் காட்டுந் தண்சுனை
எவ்விடை யிருந்துள தியம்பு வாயென்றாள்.

வள்ளியம்மையார் மீண்டும் பாங்கியைப் பார்த்து, "நான் உன்னையே உற்ற தோழியாக எண்ணியிருந்தேன். நீ என் மீது குறையாக எண்ணுதே!" என்றார். அச்சமயத்தில் ஆறு முகக் கடவுள் முன்போல் வேட வடிவுதாங்கி வேட்டையாடி இளைத்தவர்போல் அங்கு வந்தார். வள்ளிநாயகியாரையும் பாங்கியையும் நோக்கி, "பெண்மணிகளே! என் கணையால் தாக்குண்டு பிளந்த வாயும், புண்பட்ட மேனியும் கொண்ட பெண் யானை ஒன்று இங்கு வந்ததோ? அதனை நீங்கள் கண்ட துண்டோ?" என்று வினவியருளினர். வந்தவர் கண்களும் இருந்தவள் கண்களும் உரையாடுவதிலிருந்தே இருவரின் கருத்துக்களைக் கண்டு கொண்ட பாங்கி, "அம்மையாடிய சுனை இதுதான் போலும்" என்று எண்ணி தனது புனத்துக் குச் சென்று பரண்மேல் இருந்தாள்.

வேழம் வினவி வந்த வேலவர் பாங்கியிடம் சென்றார். இன்னும் அவர் லீலைகள் மீதம் வைத்திருந்தார். எல்லாம் முடிந்த பின்பே சீவனும் சிவமும் ஐக்கியமாக வேண்டும்! "பெண்ணே! எனக்கு உற்ற உறவினர் நீயே; விரும்பிய பொருள் எல்லாவற்றையும் நான் தருவேன்; நின் தலைவியை எனக்குத் தருவாய்" என்று பாங்கியிடம் வேலவர் அருளினர். பாங்கி, "ஐயா! மறவரின் பேதைப் பெண்ணைப் பெரியோர் விரும்புவரோ?" என்றாள்.

"பெண்ணே! திருமால் தந்த அமுதமும், வேட்டுவர் செய்த மாதவப் பயனும் பெண்களுக்கு அரசியும், எனக்கு ஆசையைத் தந்து பேரருள் செய்த பேரழகியுமாகிய தலை வியைப் பார்த்துப் பேதை என்று கூறியதே பேதைமை" என்று கூறினர் ஐயன்.

"ஐயா! இங்கே வேடர் வருவர். மிகக் கொடியவர் களான அவர்கள் இதனைக் கண்டால் பேராபத்தாக முடியும். விரைவில் இங்கிருந்துபோம்" என்றாள் பாங்கி. பெருமான்,

"தோட்டின மீதுசெல் விழியினுய் தோகையோ டென்னைக்
கூட்டிடா யெனிற் கிழிதனி லாங்கவள் கோலந்
தீட்டி மாமட லேறிநும் மூர்த்தெரு வதனி
லோட்டு வேனிது நாளையான் செய்வதென்"றுரைத்தான்,

தலைவியை அடையவொண்ணாத தலைவன் பனைமடலா லான குதிரையை ஏறி ஊர்தல் பண்டைய பழக்கம். இதனைச் செய்வதாக முருகன் கூறியதும், "ஐயா! நீங்கள் மடலேற வேண்டாம். அதோ தெரிகின்ற மாதவிப் பொதும்பரில் மறைந்திரும். நான் என் தலைவியை அங்கே அழைத்து வருவேன்" என்றாள் பாங்கி. அதன்படி, மயிலேறும் ஐயன் மாதவிப் பொதும்பரில் மறைந்திருந்தார்.

பாங்கி, வள்ளிநாயகியைப் பொதும்பரிடம் அழைத்தேகினாள். பிராட்டியாரை அங்கேயே விட்டுவிட்டு, "நான் உனக்கு மலர் பறித்துக்கொண்டு வருவேன்!' என்று கூறி மெல்ல அங்கிருந்து நீங்கினாள். பாங்கி நீங்கியதும் பரமன் வெளிப்பட்டுப் பாவை வேந்துக்குப் பேரின்பம் நல்கினார். பிறகு, "நாளை வருவேன்; நீ உன் இருக்கை செல்" என நீங்கினார். பாங்கி மலர் பறித்து வந்து சூட்டி மனம் நொய்ந்த தலைவியுடன் புனம் போந்தாள்.

முருகவேளைப் பிரிந்து வந்த வள்ளி நாயகியார் தினைப் புனத்தைக் காவல் காக்கும்போது மனம் மிக வாடி இருந்தார். இவ்வாறாகச் சில பகல்கள் கழிந்தன. தினைப்புனத் நல் கதிர்கள் முற்றி விளைந்தன. குன்றவாணர்கள் அதனைக் கண்டு மகிழ்ந்தனர். அவர்கள் வள்ளிப் பிராட்டியாரை நோக்கி, "அம்மா! தினைகள் விளைந்துவிட்டன. மிகவும் வருந்தி இதனைக் காத்தனை! இனி உன் சிறு குடிலுக்குச் செல்வாயாக!" என்றார்கள். அம்மை அதனைக் கேட்டு மிகவும் மனம் வருந்தினாள். 'ஆகா! பிராணேசர் சிற்றூருக்கு வழி அறிவாரோ; அவர் இங்கு வந்து தேடுவாரே!' என்றெல்லாம் கலங்கினாள். இறைவன் எளியவனாக வந்து அருள் புரிந்ததால் அவனை எளிய மானுடனாக எண்ணித்தான் அன்பு செலுத்தத் தோன்றும் போலும்.

'மான் இனங்காள்! குயில் இனங்காள்! என் பெருமானுக்கு நான் புனம் விட்டுச் சென்ற செய்தியைச் சொல்லுங்கள்' என்று தூது விடுத்துக் கொண்டே பாங்கியோடு புனத்தை விட்டுச் சென்றாள் வள்ளி.

வீடு திரும்பிய வள்ளிப் பிராட்டியாருக்குப் பிரிவுத் துன்பம் மிகுந்தது. அத்துன்பத்தைப் பொறுக்காது அவசமுற்று

வீழ்ந்தனர். பாவையர் வந்து எடுத்து அணைத்து, மேனி மெலிந்தும் வளை கழன்றும் உள்ள தன்மைகளை நோக்கி, "ஏதோ தெய்வம் பிடித்துள்ளது" என்று கூறினார்கள். முருகப் பெருமானை வழிபட்டுத் தெய்வக் குறிகேட்டு வெறியாட்டயர்ந்தனர். வெறியாட்டாளன் மேல் முருகவேள் ஆவேசமாகி, "எமது மனம் மகிழும்படி சிறப்புச் செய்தால் இக்குறை நீங்கும்" என்று குறிப்பில் கூறியருளினார். ஆயினும் தமது மகளைத் தேவநாயகனுக்கு மணமுடிக்க இயலும் எனக் குறவர் எண்ணிப் பார்க்கவும் முடியுமோ?

ஊர் எல்லாம் உறங்கியும், பிரிவுத் துன்பத்தால் வாடிய வள்ளிக்கு உறக்கம் பிடிக்கவில்லை. பொறி புலன்கள் எல்லாம் உறங்கினாலும் ஆன்மா விழித்திருக்கும் என்பது இதன்கருத்து. பக்திக்கும் காதலுக்கும் உணர்வு நிலை ஒன்றுதான்.

வள்ளிப் பிராட்டியார் தினைப்புனத்தை விட்டுத் தம் சிற்றூர்க்குச் சென்றபின் வேடர்கள் தினையை அறுத்துக் கொண்டு திரும்பினார்கள். முருகவேள் தினைப்புனம் சென்று திருவிளையாடல் செய்வார் போல் வள்ளியம்மையாரைத் தேடினார். அங்கு அவரைக் காணாது நள்ளிரவில் சிற்றூர் வந்து குடிலுக்குப் புறம்பே நின்றார். அதனை உணர்ந்த பாங்கி முருகவேளிடம் வந்து, "ஐயா! நீர் இப்படி இரவில் இங்கு வருவது தகாது. இது நீவிர் அவளை அடைந்திருக்க ஏற்ற இடமில்லை. ஆதலால் அவளை அழைத்துக் கொண்டு தங்கள் தலைநகருக்குச் செல்லுங்கள்" என்று கூறினாள். அவரை அவ்விடத்திலேயே நிற்கச் செய்துவிட்டு, யாரும் அறியாவண்ணம் வள்ளிப் பிராட்டியாரை அழைத்துவந்து கந்தவேளிடம் ஒப்புவித்தாள். வள்ளிநாயகியார் முருகவேளின் பாதங்களைப் பணிந்து, "வேதங்கள் காணாத உமது மலர்த்தாள் நோவ என் பொருட்டு இவ்வேடச் சேரிக்கு நள்ளிரவில், எழுந்தருளினீரே" என்று தொழுது நின்றார். பாங்கி, முருகப் பெருமானின் திருக்கரத்தில் வள்ளிப்பிராட்டியாரை அளித்து, "ஐயா! இங்கு நீண்டநேரம் நின்றால் வேடர்கள் கண்டுவிடுவார்கள். அவர்கள் கண்டுவிட்டால் பெரும் தீமையாய் முடியும். இம் மாதரசியை அழைத்துக் கொண்டு உங்கள் பதிக்குச் சென்று காத்தருளவேண்டும்" என்று கூறி வணங்கி நின்

ருள். எம்பிரான் பாங்கிக்குத் தண்ணருள் புரிந்தார். பாங்கி வள்ளி நாயகியாரைத் தொழுது அணைத்தாள். குமாரக் கடவுள் வள்ளிநாயகியாருடன் சிற்றூரைத் தாண்டிச் சென்று ஓர் இளம் பூங்காவில் தங்கினர்.

விடியற்காலம் நம்பிராசனின் மனைவி கொடிச்சி துயில் நீங்கி எழுந்தாள். வள்ளி நாயகியாரைக் காணாது திடுக்கிட்டு வருந்தினாள். நம்பிராசனும் இதனைக் கேள்வியுற்றான். வெகுண்டு, "எமது காவலைக் கடந்து எம் குலவிளக்கைக் கொண்டு போனவன் யார்?" என்று போர்க்கோலம் கொண்டு புறப்பட்டான். அவனுடன் வேடர்கள் கொம்பு முதலியவற்றை ஊதிக் கொண்டு சென்றார்கள்.

புலிகள் மான் குட்டிகளைத் தேடுவது போல வேடர்பலர் தம்மைத் தொடருவதை யறிந்த வள்ளிபிராட்டி குமாரக் கடவுளைப் பணிந்து, "எம்பெருமானே! ஈட்டி, பிண்டி, பாலம், வில், வாள் முதலிய ஆயுதங்களுடன் வேடர் பலர் சோலைக்கு அருகில் வருகிறார்கள். இனி என் செய்வது? என் உள்ளம் சுழல்கிறது" என்று கூறினார். "பெண்ணரசே! வருந்தாதே. சூராதியவுணரை மாய்த்த வேற்படை நம்மிடம் இருக்கிறது; வேடர் வெகுண்டு போர் புரிந்தால் அவர்களைக் கணப்பொழுதில் மாய்ப்போம். நீ பின்புறத்தில் இருப்பாயாக" என்று கந்தவேள் அருளிச் செய்தார்.

வேடர்கள் வந்து பெருமானைச் சூழ்ந்தனர். "நம் குலக் கொடியைக் கவர்ந்தவன் நம்மைக் கண்டு ஓடவுமில்லை; அஞ்சவுமில்லை. அடியுங்கள், பிடியுங்கள்" என்று கூறி வேடருடன் பாண மழை பொழிந்தான் நம்பிராசன். அந்தக் கணைகள் யாவும் கருணையங் கடலாகிய கந்தவேள் மீது மலர்களைப்போல் வந்து வீழ்ந்தன. முருகப் பெருமான் திருவுளஞ் செய்ய, சேவல் எழுந்து நின்று கொக்கரித்துக் கூவியது. அந்த ஒலியிலேயே நம்பிராசனும், அவன் குமாரர்களும், சுற்றத்தாரும் மாய்ந்தனர்.

தந்தையும் உடன் பிறந்தாரும் தமரும் மாண்டதைக் கண்ட வள்ளிப்பிராட்டியார் மனம் பதைத்து வருந்தினார். அம்மையாரின் அன்பைக்காணும் பொருட்டு ஐயன் சோலையை விட்டு நீங்கிச் சென்றார். அம்மையாரும் அவரைத் தொடர்ந்து

சென்றார். அப்போது வழியில் நம்பிராசன் செய்த தவப் பயனைப் போல் நாரதர் எதிர்ப்பட்டார். "சுவாமி! பெற்ற பிதாவையும் பிற சுற்றத்தாரையும் வதைத்து எம்பிராட்டியைக் கொண்டேகுதல் தகுதியாமோ? அது அம்மைக்கு வருத்தத்தைத் தருமே" என்றார் நாரதர். எம்பெருமான் மீண்டும் சோலைக்குச் சென்று, "நம்மோடு போரிட்டு இறந்த உன் சுற்றத்தாரை எழுப்புவாயாக" என்று பணித்தருளினர். வள்ளி அருள்பாலித்தாள். துயில் நீங்கி எழுவது போன்று நம்பிராசன் தன் சுற்றத்தோடு எழுந்தான். வள்ளிக்கு யாவரையும் வாழவைக்கும் வல்லமை உண்டு; எனினும், கணவரின் கட்டளைக்காகவே காத்திருந்தார் என்பது இதனால் தெரிகிறது.

லீலைகளெல்லாம் நிறைவு செய்து விட்ட எம்பெருமான் உயிர்த்தெழுந்த நம்பிராசனுக்கு ஆறுதிருமுகமும் பன்னிரு திருக்கரமும் கொண்டு காட்சியளித்தார். நம்பிராசன் வேட்டுவர்களுடன் ஆறுமுகப் பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து பணிந்து எழுந்தான், உச்சிக் கூப்பிய கையனாய் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். "தேவ தேவ! எங்கள் சேரியைக் காக்கும் நீரே இவ்வாறு எமது குலக்கொடியைக் களவு செய்து எங்கள் குலத்துக்குத் தீராத பெரும் பழியை நல்கின் யாம் என் செய்வோம்? அன்னையே மகவுக்கு விடமூட்டின் கதி யாது? தேவரீர் இனியேனும் எம் சிற்றூர்க்கு வந்து அக்கினி சாட்சியாக முறைப்படி எம் புதல்வியை மணந்து கொண்டு தங்களுடைய பதிக்கு அழைத்துச் செல்வீராக" என்று வேண்டி நின்றான்.

அவனது வேண்டுகோளுக்கு இரங்கிய கந்தக் கடவுள் வள்ளிநாயகியுடனும் நாரதருடனும் சிற்றூருக்கு வந்தருளினர். நம்பி தனது சிறு குடிலில் புலித்தோல் மீது எம்பிரானைப் பிராட்டியாருடன் எழுந்தருளச் செய்தான். வேடர், குறவர், மறவர் முதலியோர் "எமது குலத்தெய்வமே எம் புதல்வியை மணக்க வந்துவிட்டது" என்று உள்ளம் உவந்து பேரானந்தப் பரவசமுற்றுப் போற்றி நின்றார்கள்.

கந்தவேள் தமது மருங்கில் வீற்றிருந்த வள்ளிநாயகியாரைத் திருவருள் நோக்கம் புரிந்தருள, அம்மையார்

மானுட வடிவம் நீங்கிப் பண்டைய தேவி வடிவு பெற்று விளங்கினார்.

அன்னதோர் வேலை தன்னில் அறுமுகம் உடைய வள்ளல்
தன்னுழை இருந்த நங்கை தனைஅரு ளோடு நோக்கக்
கொன்னவில் குறவர் மாதர் குயிற்றிய கோலம் நீங்கி
முன்னுறு தெய்வக் கோல முழுதொருங் குற்ற தன்றே.

அதனைக் கண்ட நம்பி முதலியோர், "இப் பிராட்டியார் எம்மிடம் தோன்றி வளர்ந்தது எமது மாதவமே" என்று இறும்பூதெய்தினர். சுப முகூர்த்தத்தில் வேட்டுவ மன்னன் நம்பி வள்ளிப் பிராட்டியாரின் திருக் கரத்தை மயிலேறும் வள்ளல் திருக்கரத்தில் வைத்து "எமது தவப்புதல்வியை உங்களுக்குத் திருமணம் செய்து தந்தேன். ஏற்றுக் கொண்டு அருள் புரிவீர்" என்று தண்ணீர்த் தாரை வார்த்தான்.

அத்த நல்வேலை தன்னில் அன்புடைக் குறவர் கோமான்
கந்தவேள் பாணி தன்னில் கன்னிகை கரத்தை நல்கி
நந்தவ மாகி வந்த நங்கையை நயப்பாய் இன்று
தந்தனன் கொள்க என்று தண்புனல் தாரை உய்த்தான்.

நம் பெருமானின் திருவருட் குறிப்பால் நாரதர் வேள்வித் தீ வளர்த்து ஏனைய விதிமுறைகளைச் செய்தார்.

ஆலமுண்ட நீலகண்டப் பெருமான், பிரமன், திருமால் தேவர்கோமான் முதலிய கணங்கள் சூழ, உமா தேவியாருடன் வந்தருளி விண்ணில் நின்று வள்ளிப் பிராட்டியாரைக் கந்தவேள் மணந்து கொண்ட வைபவத்தைக் கண்டருளினா. திருமாலாதி தேவர்கள் பூ மழை பொழிந்து முருகவேளைப் போற்றித் துதி செய்தனர். ஆறுமுகக் கடவுள் அம்மையப்பரை வணங்கி ஏனைய தேவர்களுக்குத் திருவருள் புரிந்தார். சிவபெருமான் தேவர் குழாத்துடன் மறைந்தருளினார்.

ஆவதோர் காலைதன்னில் அரியும்நான் முகனும்வானோர்
கோவொடு பிறருஞ்சூழக் குலவரை மடந்தையோடும்
தேவர்கள் தேவன்வந்து சேண்மிசை நின்றுசெவ்வேள்
பாவையை வதுவை செய்யும் பரிசினை முழுதுங் கண்டான்.

தனிப் பெருந் தலைவராகிய கந்தப் பெருமான் தனக்கு மருகராகும் பேறு பெற்ற நம்பிராசன் பெரிதும் மகிழ்ந்தான். தேனும் தினைமாவும் பழங்களும் படைத்து, "தாங்களும் தேவியும் உண்டருள வேண்டும்" என்று கந்தப்பெருமானை வேண்டிக் கொண்டான். பெருமான் அவற்றை உட்கொண்டு அருள்புரிந்தார். பின்னர், நம்பிராசனை நோக்கி, "நாம் வள்ளியுடன் திருத்தணியில் சென்று இருப்போம்" என்று கூறினர். மகளை என்றேனும் ஒரு நாள் பிரிந்துதானாக வேண்டும் என்பதால் நம்பி உடன்பட்டான். தாயும் பாங்கியும் செவிலியும் வள்ளிப்பிராட்டியாரைத் தழுவி நல்லாசிகள் கூறிப் பிரியாவிடை பெற்றனர். முருகவேள் நம்பிராசனை நோக்கி, "நீ தேவருந் தொழச் சிற்றூரை அரசு புரிந்து பின் நம் பக்கல் வரக்கடவாய்" என்று அருள் புரிந்தார்.

ஐயன் அம்மையுடன் தணிகை மாமலைக்கு விண் வழியாக வந்து சேர்ந்தார். தேவதச்சனால் முன்னரே அங்கு அமைக்கப் பட்ட திருக்கோயிலில் உலகமெல்லாம் உய்யுமாறு வள்ளி யம்மையாருடன் எழுந்தருளியிருந்தார்.

வடிவேலண்ணல் வள்ளியம்மையாருடன் திருத்தணிகை மலைமீது உலகெலாம் உய்ய வீற்றிருக்கும் போது, வள்ளிப் பிராட்டியார் முருகக் கடவுள் திருவடிகளை வணங்கி, "அருட் பெருங்குன்றே! இம்மலையின் சிறப்புக்களை எனக்குக் கூறியருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். ஆறுமுக வள்ளல் அம்மையாரைப் பார்த்துத் திருவருள் சுரந்து திருவாய் மலர்ந்தருளினர்.

"வள்ளி நாயகியே! சூராதியசுரர்களுடனும் வேட்டுவ ரோடும் செய்த போரின் கோபம் தணிந்து நாம் இங்கு வந்தமையால் இம்மலைக்கு 'செருத்தணி' என்னும் பெயர் உண்டாயிற்று. (செரு-கோபம், தணி-தணிதல்). இது காஞ்சி நகருக்கு அருகில் இருப்பதால் மிகவும் சிறப்புடையது. உமையம்மையார் மாமரத்தின் கீழ் முக்கட் பெருமானை வழி பட்ட தலம் அன்றோ காஞ்சியம்பதி ?

- செங்கண் வெய்யசூர்ச் செருத்தொழி லினுஞ்சில வேடர்
  தங்க ளிற்செயுஞ் செருத்தொழி லினுந்தணிந் திட்டே

இங்கு வந்தியாம் இருத்தலால் செருத்தணி என்றோர்
மங்க லந்தரு பெயரினைப் பெற்றதிவ் வரையே.

"மலர்களில் சிறந்தது தாமரை; ஆறுகளில் சிறந்தது கங்கை; பதிகளில் சிறந்தது காஞ்சி; அது போன்று மலைகளில் சிறந்தது செருத்தணி.

விரையிடங் கொளும் போதினுள் மிக்க பங்கயம்போல்
திரையிடங் கொளும் நதிகளிற் சிறந்தகங் கையைப்போல்
தரையிடங் கொளும் பதிகளிற் காஞ்சியந் தலம்போல்
வரையிடங் களிற் சிறந்ததித் தணிகை மால்வரையே.

"புல்லாங்குழல் ஊதி, யாழ் மீட்டி, ஏழிசை பாடி இம் மலையின் கண் நாம் திருவிளையாடல் புரிவோம். எம் தந்தையராகிய அந்திவண்ணர் திருக்கயிலாய மலையை விரும்பியிருப்பது போல, உலகில் பல மலைகள் இருந்தும் எமக்கு இம் மலையில் மிகுந்த அன்பு உண்டு. இந்திரன் எம்மைப் பூசிக்கும் பொருட்டு இம்மலையிலுள்ள சுனையில் மூன்று நீலோற்பலச் செடிகளை வைத்து வளர்த்தார். அம் மூன்று செடிகளிலிருந்து முறையே காலையில் ஒன்றும், உச்சி வேளையில் ஒன்றும் மாலையில் ஒன்றுமாக மூன்று வேளைகளிலும் மூன்று மலர்கள் மலரும். அதனால் இம்மலைக்கு நீலகிரி என்று மற்றொரு பேரும் உண்டு. அந்த நீலோற்பலச் சுனையில் அன்புடன் நீராடி எம்மை வழி பட்டோர்க்கு இம்மை, மறுமை நலன்கள் எளிதிற் கிடைக்கும். இம்மலையில் ஐந்து நாட்கள் தங்கியிருந்து எம்மைத் தரிசித்து நோன்பிருந்தவர்கள் எல்லா போகங்களையும் அநுபவித்து முடிவில் முத்திவீடு பெறுவர். பாவங்கள் பல செய்தோரும் நம்பால் அன்பு கொண்டு இம்மலையை அடைந்து வழிபட்டால் நற்கதி அடைவார்கள்.

அஞ்சு வைகல்இவ் வகன்கிரி நண்ணிஎம் மடிக்கள்
சஞ்சம் என்றுளத் துன்னியே வழிபடும் தவத்தோர்
நெஞ்ச கந்தனில் வெஃகிய போகங்கள் நிரப்பி
எஞ்சல் இல்லதோர் வீடுபே றடைந்தினி திருப்பார்.

பாத கம்பல செய்தவ ராயினும் பவங்கள்
ஏதும் வைகலும் புரிபவ ராயினும் எம்பால்
ஆத ரங்கொடு தணிகைவெற் படைவரேல் அவரே
வேதன் மாலினும் விழுமியர் எவற்றினும் மிக்கார்.

"கல்யாணி! இத்திருமலையில் வந்து ஒரு சிறு தர்மம் செய்தால் ஒன்றுக்கு ஆயிரம் மடங்கு அதிகமான புண்ணியம் உண்டாகும்: இம்மலையை வலம் செய்தோர் கோடி அசுவ மேதஞ்செய்த பலனை யடைவார்கள். இம்மலையில் ஏற எண்ணி ஒரு படியின்மீது கால் வைத்தவுடனே அவர்கள் வினைகள் தணிவதாலும் திருத்தணிமலை என இது பெயர் பெறும். இம்மலையின் பெருமை அளவிடற்கரியது" என்று எம்பிரான் கூறியருளினர்.

உற்பல வரையில் வாழ்வோர் ஒரொரு தருமஞ் செய்யில்
பற்பல வாகியோங்கும் பவங்களில் பலசெய் தாலும்
சிற்பம தாகி ஒன்ருய்த் தேய்ந்திடும் இதுவே யன்றி
அற்புத மாக இங்ஙன் அனந்தகோ டிகள்உண் டன்றே.

வள்ளியம்மையார் அதனைக் கேட்டு உள்ளம் உவந்தார். வள்ளிநாயகியாரும் மயிலேறும் வள்ளலும் செருத்தணி மலையின் ஒரு பக்கத்தில் சிவாகம விதிப்படி சிவபெருமானை ஸ்தாபித்து வழிபட்டுச் சிலநாட்கள் அங்கே வீற்றிருந் தார்கள்.

பின்னர் எம்பிரான் எம்பிராட்டியாருடன் அங்கிருந்து புறப்பட்டுக் கைலயங்கிரியின் பாங்கருள்ள கந்தகிரி அடைந்து, ஆங்குள்ள, பொற்கோயிலிற் புகுந்தார். தெய்வ யானையம்மையார் எதிர்கொண்டு வந்து அவரது திருவடி களிலே வீழ்ந்து வணங்கினர். ஆறுமுகக் கடவுள் அவரை எடுத்துத் தழுவித் தமது பிரிவினல் வந்த துன்பத்தை மாற்றி அருளினர். வள்ளிப் பிராட்டியார் தெய்வயானையம்மையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். "எனக்குத் துணைவி வந்தாள்" என்று தெய்வயானையம்மை வள்ளிப்பிராட்டியை உள்ளம் உவந்து எடுத்துத் தழுவினர். பாற்கடலில் சேஷ சயனத்தில் பரந்தாமன், சிதேவியும் பூதேவியும் உடனிருக்க வீற்றிருத்தல் போல, எந்தை கந்தவேள் இருமருங்கும் இருதேவியருடன் அரியணை மேல் இனிது வீற்றிருந்தருளினர்.

சூர்க்கடல் பருகும் வேலோன் துணைவியர் இருவ ரோடும்
போர்க்கடல் கொண்ட சீயப் பொலன்மணி அணைமேற்
சேர்ந்தான்

பாற்கடல் அமளி தன்னில் பாவையர் புறத்து வைகக்
கார்க்கடல் பவள வண்ணன் கருணைபோ டமரு மாபோல்.

அப்போது, தெய்வகுஞ்சரி யம்மையார் முருகக் கடவுளை நோக்கி, "என் இளையாளாகிய வள்ளியம்மையின் வரலாற்றினைக் கூறியருள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். "நீவிர் இருவரும் முற்பிறப்பில் திருமாலின் புதல்வியர், நம்மை மணம் செய்து கொள்ள விரும்பி பன்னிரண்டு ஆண்டுகள் தவம் புரிந்தீர்கள். அப்போது யாம் வந்து ஒருத்தி விண்ணிலும் மற்றவள் மண்ணிலும் பிறக்குமாறு அருள் புரிந்தோம். அதன்படி மூத்தவளாகிய நீ இந்திரன் மகளாகி எம்மை மணந்து கொண்டாய். நின் இளையாளாகிய இவள் சிவ முனிவருக்கு மான் வயிற்றில் தோன்றி வள்ளிமலையில் நம்பிராசனால் எடுத்து வளர்க்கப்பட்டு, வள்ளி என்ற பெயருடன் புனங் காத்திருந்தாள். வேடர் குலத்தில் வளர்ந்த இவளிடம் நாம் சென்று பல மாயங்கள் புரிந்து மணந்தனம்" என்று அருளிச் செய்தார்.

தெய்வயானையம்மையார் மனம் மிக மகிழ்ந்து, "வெகு நாட்களாகப் பிரிந்திருந்த என் இளையாளை என்னுடன் ஒன்று சேர்த்து வைத்த தேவரீர்க்கு என்ன கைம்மாறு செய்வேன்?" என்று பணிந்தார். வள்ளியம்மை தெய்வயானையை நோக்கி, "தேவி! முற்பிறப்பிலும் தங்கட்கு யான் தங்கையானேன்; இப் பிறப்பிலும் தங்கையானேன்; இனி யான் உய்வு பெற்றேன்; என்னைக் காத்தருளும்" என்று பாத பங்கயத்தில் பணிந்தாள். தெய்வயானை அவரை அன்புடன் எடுத்துத் தழுவி இன்னுரை கூறினர்.

தேவியர் இருவருடன் தேவதேவன் வீற்றிருந்தருளினர். சேவலும் மயிலும் ஆடும் வேலும் வேறுள படைக்கலங்களும் பெருமானுக்குரிய பணிகளைச் செய்து கொண்டு திருக்கோயில் முன்னும் அருகும் இருந்தன. வீரவாகு தேவர் முதலியோர் தத்தமக்குரிய ஏவல்களைச் செய்திருந்தனர். உலகமெல்லாம் எம்பிரானின் அருள் பரவியது.

தட்ச காண்டம் முற்றுப் பெற்றது.

கிரவுஞ்சமலையைப் பிளந்த சிவந்த வேலையுடைய முருகப் பெருமான் ஒரு கற்பக மரமாகி, கிரியாசக்தி, ஞான சக்தி என்ற இரு மனைவியர்களை கிளைகளாகிச் சூழ எல்லா உயிர்களுக்கும் திரு அருளைப் பூத்து, பிறவியைக் காய்த்து (கெடுத்து) அடியார்களுக்கு முத்திக் கனியை எந்நாளும் வழங்கும்.

கல்லகங் குடைந்த செவ்வேல் கந்தனேர் தருவதாகி
வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருணை பூத்துப் பவநெறி காய்த்திட் டன்பர்
எல்லவர் தமக்கு முத்தி இருங்கனி உதவும் என்றும்.

வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய்த னிவேல் வாழ்கருக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்.

புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியன் ஆக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.

வற்று அருள்சேர் குமரேசன் வண்காதை தன்னைச்
சொற்றூரும் ஆராய்ந் திடுவாரும் துகளுருமே
கற்றூரும் கற்பான் முயல்வாரும் கசிந்து கேட்கில்
உற்றூரும் வீடு நெறிப்பாலின் உறுவர் அன்றே.

(கருணைத் திறத்தையே சிறப்பாகக் கொண்டது கந்த புராணம். தேவர்கள் துயர் தீர்க்கவேண்டும் என்ற கருணையின் மீதே தோன்றியவர் கந்தப்பெருமான். தேவர்கள் துயர் தீர்த்ததோடு, தேவசத்துருவான சூரனிடமும் கருணை பொழிந்து அவனைத் தமது வாகனமும் துவசமுமாக்கி அருள் புரிந்தார். அதன் பின்னர் தமக்காகவே தவமிருந்த இரு நங்கையரைக் கருணை கூர்ந்து திருமணம் புரிந்து கொண்டருளினர். உலகெங்கும் அன்பும், பக்தியும் பெருகப் பல பதிகளிற் குடிகொண்டு இன்றும் தனிப்பெருங் கருணை நாயகனுக விளங்குகிருர்.)

கந்தவேள் கருணை முற்றிற்று.

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

